Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டும்,

பெரியாழ்வார் திருமொழியும்,

சூடிக் கொடுத்த நாச்சியாரருளிச் செய்த திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும்

ஸ்ரீகாஞ்சீ பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
பொழிப்புரையுடன்.

காஞ்சிபுரம் ஸ்ரீ வெங்கடேச்வரா பிரெஸ்ஸில்
அசிடப்பட்டது.

கிடைக்குமிடம்:—

P. B. ANNANGARACHARYA

GRANTHAMALA OFFICE, : : L. KANCHEEPURAM

இதன் விலை ரு. 1-75] 1958 [போஸ்டேஜ் தனி

N. Bakiavatsalu Chetty,
MERCHANT
11, AUDIAPPA NAICK STREET,
MADRAS-1.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.



பெரியாழ்வார் அருளிச்செய்த திருப்பல்லாண்டும்,

பெரியாழ்வார் திருமொழியும்,

சூடிக் கொடுத்த நாச்சியாரருளிச் செய்த திருப்பாவையும் நாச்சியார் திருமொழியும்

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியர் இயற்றிய
பொழிப்புரையுடன்.

காஞ்சிபுரம் ஸ்ரீ வெங்கடேச்வர பிரெஸ்ஸில்
அசிடப்பட்டது.

கிடைக்குமிடம்:—

P. B. ANNANGARACHARYA
GRANTHAMALA OFFICE, : : L. KANCHEEPURAM

இதன் விலை ரூ. 1-75] 1958 [போஸ்டேஜ் தனி

N. Baktavatsalu Chetty,
MERCHANT
11, AUDIAPPA NAICK STREET,
MADRAS-1.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:
பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.
ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சி ஜகதாசார்ய ஸிம்ஹாஸநாதிபதி. மஹாவித்வான்.
பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிய பொழிப்புரையோடு கூடின
நாலாயிர திவ்வியப் பிரபந்தத்தில்

முதலாயிரம்.

பொதுத்தனியன்கள்.

N. Baktavatsalu Chetty,
MERCHANT
11, AUDIAPPA NAICK STREET,
MADRAS-1.

(நம்பெருமாள் அருளிச்செய்தது)

ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்,
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம். (க)

* * * திருமலையாழ்வார் என்னும் திருவாய்மொழிப்பிள்ளையின் திருவருளுக்குப் பாத்ர பூதரும், ஞானம் பக்தி முதலிய நற்குணங்களுக்குக் கடல்போன்றவரும், எம்பெருமானார் பக்கலிலே பக்தியையுடையவருமான அழகிய மணவாள மாமுனிகளை வணங்கா நின்றேன். (1)

(கூரத்தாழ்வான் அருளிச்செய்தது)

லக்ஷ்மீநாதஸமாரம்பாம் நாதயாமுநமத்யமாம்,
அஸ்மதாசார்ய பர்யந்தாம் வந்தே குருபரம்பராம். (உ)

* * * எம்பெருமானைத் தொடக்கத்திலே உடைத்தாய், ஸ்ரீமந்நாதமுனிகளையும் ஆளவந்தாரையும் இடையிலே உடைத்தாய், எமக்கு ஆசார்யரான எம்பெருமானாரை முடிவிலே உடைத்தான ஆசார்ய பரம்பரையை வணங்கா நின்றேன். (2)

(இதுவும் ஆழ்வானருளிச் செய்தது)

யோ நித்யமச்யுதபதாம்புஜயுக்மருக்ம வ்யாமோஹதஸ் ததிதராணி த்ருணாய மேநே,
அஸ்மத்குரோர் பகவதோஸ்ய தயைகஸிந்தோ: ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே. (ங)

* * * யாவனொரு எம்பெருமானார் எக்காலும் எம்பெருமானது திருவடித்தாமரை யிணைகளாகிற பொன்னட்டியிலுள்ள மிகுந்த விருப்பத்தினாலே அத்திருவடிகளுக்குப் புறம்பாயுள்ள விஷயங்களைத் துரும்பாக நினைத்துத் தள்ளிவிட்டாரோ, எமக்கு ஆசார்யராய் ஸமஸ்த கல்யாணகுண பரிபூர்ணராய்த் திருவருட்கடலான இந்த எம்பெருமானாருடைய திருவடிகளை உபாயமாகப் பற்றுகிறேன். (3)

(ஆளவந்தார் அருளிச்செய்தது)

மாதா பிதா யுவதயஸ் தநயா விபூதி: ஸர்வம் யதேவ நியமேந மதந்வயாநாம்,
ஆத்யஸ்ய ந: குலபதேர் வகுளாபிராமம் ஸ்ரீமத் ததங்க்ரி யுகளம் ப்ரணமாமி மூர்த்நா. (ச)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

* * * என்னைச் சேர்ந்தவர்களுக்கு எப்பொழுதும் தாய், தந்தை, மாதர், மக்கள், செல்வம் (மற்றுமுள்ள) எல்லாமும் யாதொரு ஆழ்வார் திருவடியேயோ, நமக்குக் குலகூடஸ்தராகிய ஆழ்வாருடைய, மகிழ மலர்களினால் அழகுபெற்று விளங்குகிற அந்தத் திருவடியிணையைத் தலையால் வணங்குகின்றேன். (4)

(ஸ்ரீபராசரபட்டரருளிச்செய்தது.)

பூதம் ஸரச்ச மஹதாஹ்வய பட்டநாத ஸ்ரீபக்திஸார குலசேகர யோகிவாஹாந்,
பக்தாங்க்ரிரேணு பரகால யதீந்த்ரமிச்ராந் ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம். (௫)

* * * பூதத்தாழ்வாரையும் பொய்கை யாழ்வாரையும் பேயாழ்வார் பெரியாழ்வார் திருமழிசை யாழ்வார் குலசேகராழ்வார் திருப்பாணாழ்வார் இவர்களையும் தொண்டரடிப்பொடி யாழ்வார் திருமங்கையாழ்வார் எம்பெருமானார் இவர்களையும் நம்மாழ்வாரையும் நாள்தோறும் ஸேவிக்கிறேன். (5)

பொதுத்தனியன்களின் உரை முற்றிற்று.

திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழிகளின்

தனியன்கள்.

(ஸ்ரீமந்நாதமுனிகள் அருளிச்செய்தது)

குருமுகமநதீத்ய ப்ராஹ வேதாநசேஷாந் நரபதிபரிக்லுப்தம் சுல்கமாதாதுகாம:,
ச்வசுரமமரவந்த்யம் ரங்கநாதஸ்ய ஸாக்ஷாத் த்விஜகுலதிலகம் தம் விஷ்ணுசித்தம் நமாமி. (௧)

* * * யாவரொரு பெரியாழ்வார் வல்லபதேவ னென்கிற அரசனால் ஏற்படுத்தப்பட்ட பந்தயப் பொருளாகிய பொற்கிழியை க்ரஹிக்க எண்ண முடையவராய், ஆசார்ய முகமாக ஒரு கல்வியையும் கற்காமலே (பரதத்வ நிர்ணயத்திற்கு வேண்டிய) வேதங்களெல்லாவற்றையும் (பகவத் கிருபையினால்) எடுத்துரைத்தாரோ, தேவர்களினால் ஸேவிக்கத்தகுந்தவரும் ஸ்ரீ ரங்கநாதனுக்கு நேராக மாமனாரும் பிராமண குலத்திற்குத் திலகம் போன்றவருமான அப்பெரியாழ்வாரை வணங்குகிறேன். (1)

பாண்டிய பட்டர் அருளிச்செய்தவை.

மின்னார் தடமதில்சூழ் வில்லிபுத்தூ ரென்றொருகால், சொன்னார் கழற்கமலஞ் சூடினோம்—முன்னாள்
கிழியறுத்தா னென்றுரைத்தோங் கீழ்மையினிற் சேரும், வழியறுத்தோம் நெஞ்சமே வந்து. (௨)

* * * "ஒளி நிறைந்த பெரிய திருமதிலாலே சூழப்பட்ட ஸ்ரீ வில்லிபுத்தூர்" என்று ஒருதரம் உச்சரித்தவருடைய திருவடித் தாமரைகளைச் சிரமேற் கொண்டோம்; "புருஷார்த்தம் வெளியாகாத காலத்தில் (பரதத்வ நிர்ணயம் பண்ணிப்) பொருள் முடிப்பை அறுத்தருளினர்" என்று சொல்லப் பெற்றோம்; ஓ! நெஞ்சே! நீ அநுகூலமாய் வரப்பெற்றதனால் அதோகதியாகிற நரகத்தில் சேருகைக் குடலான வழியை அறப்பண்ணினோம். (2)

பாண்டியன் கொண்டாடப் பட்டர்பிரான் வந்தானென்று, ஈண்டிய சங்க மெடுத்தூதந்—வேண்டிய
வேதங்க ளோதி விரைந்து கிழியறுத்தான் பாதங்கள் யாமுடைய பற்று. (௩)

* * * வல்லபதேவ னென்கிற பாண்டியராஜன் ப்ரசம்ஸிக்கவும், "ப்ராஹ்மணர்களுக்கு உபகாரகரான பெரியாழ்வார் எழுந்தருளினார்" என்று திரள்திரளான சங்குகளைக் கையில்கொண்டு (பலர்) ஊதவும், விஷ்ணு பரத்வஸ்தாபநத்துக்கு ஆவச்யகங்களான வேதவாக்கியங்களை உபந்யஸித்து விளம்பியாமல், (வித்யாசுல்கமாக வைத்திருந்த) பொருள்முடிப்பை அறுத்தருளின பெரியாழ்வாருடைய திருவடிகளானவை நமக்குப் புகலிடம். [பாடபேதம் :—எடுத்தோத] (4)

தனியன் உரை முற்றிற்று.

---

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆழ்வார்களும் திவ்வியப் பிரபந்தங்களும்

இருள்தருமா ஞாலத்தின் அகவிருள் அகன்றொழிய எம்பெருமான் சாஸ்திர தீபத்தைக் காட்டிக்கொடுக்கவும், கண்ணிலாத குருடர்கட்கு விளக்குப் பயன்படாதவாறுபோல, பகவத் பக்தியாகிற ஸித்தாஞ்ஜனத்தினால் நெஞ்சென்னும் உட்கண்ணின் குருடு தீராத உலகத்தார் பலர்க்கு அந்த ப்ரமாண ப்ரதீபம் சிறிதும் பயன்படாதாயிற்று. அதுகண்ட கருணைக்கடலான ஸர்வேச்வரன், தன் ஆணை செல்லாத இடங்களில் அரசன் தானே நேரில் சென்று தண்டம் நடத்துவது போலவும், கிணற்றினுள் வீழ்ந்த குழந்தையை யெடுக்கத் தாய் தானும் அதனுட் குதிப்பது போலவும் தானே ராமக்ருஷ்ணாதி ரூபத்தால் அவதரித்து, பரத்வத்தை மறைத்து ஸௌலப்யத்தையே தலைமைக்குணமாகக் கொண்டு உலகத்தோடொத்து வாழ்ந்து துஷ்டநிக்ரஹ சிஷ்ட பரிபாலனஞ் செய்து அறத்தை நிலைநிறுத்தித் தன் வடிவழகாலும் உபதேச முகத்தாலும் அனுட்டான மூலமாகவும் ப்ரஜைகளைத் தன் வசப்படுத்தத் தொடங்கிய வளவிலும், பலர் அநாதி கருமவாஸனையாலே சீர்திருந்தாமல் அத்திருவவதார மூர்த்திகள் திறத்து மநுஷ்ய புத்தியையே பண்ணித் தம்மைப்போலவே அவர்களைப் பாவித்து எதிரம்பு கோத்துப் போருக்கு நின்றும் *கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளையே வைதும், விச்வரூபத்தையு முட்பட இந்திர ஜாலமென்று இகழ்ந்தும் அதமகதிகளை அடையலாயினர். அதுகண்டு திருமால் திருவுள்ள மிரங்கி, ஸஜாதீயர்களைக் கொண்டே இந்த ஸம்ஸாரிகளைத் திருத்தி வசப்படுத்திக்கொள்ள வேணுமென்று துணிந்து இந்நிலவுலகில் சில வ்யக்தி விசேஷங்களிடத்திலே விசேஷ கடாக்ஷம் செய்தருளினான். அவர்களே ஆழ்வார்கள் எனப்படுகிறார்கள்.

எம்பெருமானுடைய ஸகல மங்கள குணங்களாகிய அமுத வெள்ளத்திலே முழுகி மிகவும் ஈடுபட்டு நன்றாக ஆழ்ந்திடுபவர் என்னுங் காரணத்தினால் ஆழ்வார் என்கிற திருநாமம் உண்டாயது. ஸ்ரீ வைஷ்ணவ ஸம்பிரதாயத்தில் சிறந்த மெய்யடியார்களென்று கொண்டாடப்படுகின்ற இவ்வாழ்வார்கள் பதின்மர். அவர்களாவார்-பொய்கையார், பூதத்தார், பேயார், திருமழிசைப்பிரான், நம்மாழ்வார், குலசேகரப்பெருமாள், பட்டர்பிரான் (பெரியாழ்வார்), தொண்டரடிப்பொடிகள், திருப்பாண்பெருமாள், கலியன், (திருமங்கையாழ்வார்) என்பார். நம்மாழ்வார் திருவடிகளான ஸ்ரீமதுரகவிகளையும், பெரியாழ்வாரது திருமகளாரான சூடிக்கொடுத்த நாச்சியாரையுஞ் சேர்த்து 'ஆழ்வார்கள் பன்னிருவர்' என்றுஞ் சொல்லுவதுண்டு.

இவர்கள், ரிஷிகள் போலத் தாமாக மிக முயன்று தத்துவ ஞானத்தைப் பெறுதலின்றி எம்பெருமான் தானே வந்து தன்னைக் காட்டிக் கொடுக்கக்கண்டு ஜ்ஞானபக்தி விரக்திகளை எளிதிற்பெற்று, சிலர்க்கு விலக்காக மறுக்கப்படுகிற வேதம்போலன்றி யாவர்க்கும் ஒருங்கே உதவும்படி ஸகல வேத வேதாங்க ரஹஸ்யார்த்தங்களைத் தமிழ்த்திவ்யப் பிரபந்தங்களாக அருளிச்செய்து தம்முடைய அநுபவத்தைப் பிறர்க்கு உணர்த்தி உலகத்தை வாழ்வித்தருளினவர்கள். திருமாலின் வேறு தசாவதார மென்னலாம்படியான வீறுபாடுடைய இவ்வாழ்வார்களுள் நம்மாழ்வார் பல காரணங்களினால் தலைவராகக் கூறப்பட்டு அவரை அவயவியாகவும், மற்றை யாழ்வார்களை அவர்க்கு அவயவங்களாகவும் பூருவர்கள் நிரூபித்தார்கள்.

இப்படி ஒப்புயர்வற்ற இவ்வாழ்வார்கள் *உயர்வற வுயர்நலமுடையவனான அயர்வறுமமரர்களதிபதியால் மயர்வற மதிநல மருளப்பெற்று அருளிச்செய்தருளின திவ்யப் பிரபந்தங்களே தமிழ்வேதமென்னும் நாலாயிர திவ்வியப் பிரபந்தமாக உலகில் சீர்மை பெற்று விளங்கி வருகின்றன.

இத்திவ்வியப் பிரபந்தங்களை ஸ்ரீமந்நாதமுனிகள் முதலாயிரமென்றும் பெரிய திருமொழியாயிரமென்றும், இயற்பா ஆயிரமென்றும், திருவாய்மொழியாயிரமென்றும் நான்கு ஆயிரங்களாக வகுத்தருளினர். அவற்றுள் இது முதலாயிரம். இதில் முதலிரண்டு பிரபந்தங்கள் பெரியாழ்வா ரருளிச்செய்தவை.

பெரியாழ்வார் வைபவம்

ஆழ்வாருடைய திருத்தொண்டு

இவ்வாழ்வார் பாண்டிய நாட்டில் ஸ்ரீ வில்லிபுத்தூரில் ஆனிமாதத்து ஸ்வாதீ நக்ஷத்திரத்தில் வேயர் குலத்திலவதரித்து விஷ்ணுசித்தரென்று திருநாமமுடையவராய் வடபெருங் கோயிலுடையானுடைய நிர்ஹேதுக் கடாக்ஷத்தாலே எம்பெருமானுக்குத் தொண்டு பூண்டு அமுதமுண்ணையையே இயல்பாகவுடையராய், 'எம்பெருமான் திருவுள்ளத்துக்கு எந்த கைங்கரியம் உகப்போ, அதுவே நாம் செய்யத்தக்கது' என்று உறுதி கொண்டு ஆராய்ந்து பார்த்தவளவில், ஸ்ரீ கிருஷ்ணபரமாத்மா கம்ஸனுக்குப்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பணிசெய்து கொண்டிருந்த மாலாகாரருடைய மனையிலே யெழுந்தருளிப் பூமாலையை இரந்து பெற்று அணிந்து கொண்டாரென்கிற கதையை அநுஸந்தித்துப் புஷ்பம் ஸமர்ப்பிக்கையே எம்பெருமான்றனக்கு உவப்பு' என்று நிச்சயித்துத் திருநந்தவனஞ் செய்து வடபெருங் கோயிலுடையானுக்குத் திருமாலை கட்டிச் சாத்திக்கொண்டிருந்தார்.

மதுரையரசனது செய்தி.

இவ்வனிருக்கையில் பாண்டிய குலத்திற் பிறந்த ஸ்ரீ வல்லப தேவனென்னுமரசன் மதுரையில் தர்மிஷ்டனாய் அரசாட்சி புரிந்து கொண்டிருக்குங் காலத்தில் ஒரு நாளிரவில் நகர சோதனை செய்து திரியும்போது ஒரு தெருத் திண்ணையின்மேல் ஒருவன் படுத்திருக்கக் கண்டு அவனை யெழுப்பி 'நீ யார்' என்று கேட்க, "நான் ஒரு பிராமணன்; கங்கை நீராடி மீண்டு வருகிறேன்" என்று அவன் சொல்ல, 'உனக்கு ஏதாவது நீதி தெரிந்திருந்தால் சொல்லு பார்ப்போம்' என்று அரசன் சொல்ல; அந்த அந்தணன்

வர்ஷார்த்தமஷ்டௌ ப்ரயதேத மாஸாந் நிசார்த்தமர்த்தம் திவஸம் யதேத.
வார்த்தக்ய ஹேதோர் வயஸா நவேந பரத்ரஹேதோரிஹ ஜந்மநாச.

என்ற ச்லோகத்தைச் சொன்னான். [இதன் பொருள் -மழை காலத்தில் வேண்டியவற்றுக்காக மற்ற எட்டு மாதங்களில் முயற்சிசெய்ய வேண்டியது; இராக் காலத்துக்கு வேண்டியதற்காகப் பகலில் முயற்சி செய்ய வேண்டியது. கிழத்தனத்தில் வேண்டியவற்றுக்காக யௌவனத்தில் முயற்சி செய்ய வேண்டியது; பரலோக போகத்திற்காக இப்பிறவியில் முயற்சி செய்ய வேண்டியது என்பதாம்]

மதுரையில் பண்டித ஸமாஜம் திரளுதல்.

அரசன் விவேகியாகையால் இந்த ச்லோகத்தைக் கேட்டதும் "நமக்கோ இஹலோகத்தில் போகங்களுக்கு ஒரு குறையில்லை. இனிப் பரலோக நற்கதிக்கு முயலவேண்டும். இதற்கு என்ன வழி?" என்று அன்றிரவு முழுதும் இதுவே சிந்தையாயிருந்து, பொழுது விடிந்தவுடனே தன்னுடைய புரோஹிதரான செல்வநம்பியை வரவழைத்து "நால்வகைப் புருஷார்த்தங்களையும் அளிக்கவல்ல பரதத்துவம் இன்னதென்று நிச்சயிப்பதற்கு என்ன உபாயம்?" என்று கேட்க; 'வித்துவான்களைத் திரட்டி அவர்களைக் கொண்டு இதனை நிர்ணயிக்கவேணும்.' என்று அவர் சொல்ல; ராஜாவும் அப்படியே நல்லதென்று இசைந்து அளவற்ற பொருள்களை ஒரு சிறையில் முடிந்து அர்தப் பொற்கிழியை வித்யாசுல்கமாக ஸபாமண்டபத்தின் முன்னிலையில் உயரக் கட்டுவித்துப் "பரப்ரஹ்மத்தின் ஸ்வரூபத்தை வைதிக ப்ரமாணங்களால் நிர்ணயித்துச் சொல்லுகிறவர் இந்தப் பொற்கிழியைப் பெறுதற்கு உரியர்" என்று பலவிடங்களிலும் பிரசுரப் படுத்தினவளவில், அத்தேசத்திலும் மற்றும் பல தேசங்களிலுமிருந்து பலவகை மதத்துப் பண்டிதர்கள் பலர் வந்து திரண்டனர்.

எம்பெருமான் விஷ்ணு சித்தர்க்குக் கனவிலே அருள் செய்தல்.

அப்போது ஸ்ரீ வில்லிபுத்தூரெம்பெருமான் ஸ்ரீ விஷ்ணு சித்தரைக்கொண்டு வேதாந்த வித்தமான பரதத்துவத்தைப் பிரகாசப்படுத்தி உலகத்தை வாழ்விக்க வேணுமென்று திருவுள்ளங் கொண்டு அந்த அடியவருடைய கனவிலே எழுந்தருளி 'நீர் மதுரைக்கு விரைந்து சென்று பாண்டிய ராஜனுடைய பண்டித ஸபையிற் சேர்ந்து ஸ்ரீமந் நாராயணனே பரம் பொருளென்று ஸ்தாபித்துப் பொற்கிழியை அறுத்துக் கொண்டுவாரும்' என்று நியமனம் தந்தருள, அதற்கு அவர் 'சிறிதும் சாஸ்த்ர ஞானமில்லாத அடியேன் எங்ஙனம் இதனைச் செய்ய வல்லேன்?' என்ன. எம்பெருமான், 'அதைப் பற்றி உமக்கென்ன கவலை? அந்த பாரம் நம்முடையதன்றோ?' என்றருளிச்செய்து மறைந்தான்.

விஷ்ணுசித்தர் வித்வத்ஸபையில் விரைந்து கிழியறுத்தல்.

அனந்தரம் விஷ்ணுசித்தர் எழுந்து ஆச்சரியப்பட்டு எம்பெருமானது நியமனப்படியே நடக்க நிச்சயித்து உடனே புறப்பட்டுப் பாண்டியராஜனது பண்டித ஸபையிலெழுந்தருளினவளவிலே, அவரைக் கண்ட அரசனுக்கும் புரோஹிதர்க்கும் 'இவரிடத்தில் ஏதோ விசேஷமிருக்கிறது' என்று தம்மில் தோன்றினபடியால் பரமகௌரவத்துடனே எதிர்கொண்டழைத்தல் திருவடி தொழுதல் முதலியவற்றால் உபசரித்து ஸபைநடுவே சிரியஸிங்காசனத்தில் வீற்றிருக்கச் செய்தனர். இவர்கள் இப்படி பஹுமானித்ததைக் கண்டு மற்றுள்ள வித்வான்களெல்லோரும் பொறாமைகொண்டு அளவற்ற வேதசாஸ்த்ரங்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

களைப் பயின்றுள்ள எங்கட்கெல்லாம் அகௌரவமுண்டாகுமாறு ஒன்றுந்தெரியாத ஒருவரை இப்படி கௌரவிப்பது அயுக்தம்' என்று சொல்லி ஆக்ஷேபிக்க, செல்வநம்பி அவர்களை அடக்கி விஷ்ணுசித்தரை நோக்கி "தேவரீர் பரம க்ருபையுடன் பரதத்வநிர்ணயம் செய்தருளவேணும்' என்று ப்ரார்த்திக்க; அந்த விஷ்ணுசித்தர் கனவில் காட்சிதந்த கமலகேள்வனுடைய கருணையைக் கனக்க நம்பியிருந்தபடியால் எம்பெருமானைச் சிந்தைசெய்ய; அவ்வளவிலே பகவத் க்ருபையாலே அவர்க்கு ஸகலசாஸ்த்ரார்த்தங்களும் கைகொள் நெல்லிக் கனியாக இலங்கின. இங்ஙனம் எம்பெருமானின்னருளால் ஸர்வஜ்ஞரான விஷ்ணுசித்தர் அப்போது ச்ருதி ஸ்ம்ருதி இதிஹாஸ புராணங்களிலிருந்து பலவாக்யங்களைப் பிரமாணமாக எடுத்துக் காட்டி அவற்றின் அர்த்தங்களையும் தாமே ஆக்ஷேப ஸமாதானங்களோடு யுக்தி யுக்தமாக வெளியிட்டு இதர மதக்கொள்கைகளை யெல்லாம் கண்டித்து ஸ்ரீவைஷ்ணவ மதமே ப்ராமாணிகமென்றும், ஸ்ரீமந் நாராயணனே பரம புருஷனென்றும், அவனைச் சரணமடைவதே சிறந்த மார்க்கமென்றும் பரக்க உபந்யஸித்துப் பரதத்துவ ஸ்தாபநம் பண்ணினவளவிலே, முன்பு பொறாமையாலே தூஷித்த வித்வான்களெல்லாரும் ஒன்றும் வாய்திறக்க வழியில்லாமல் வெட்கித் தலை கவிழ, வல்லபதேவனும் செல்வநம்பியும் அவருடைய ஞானவைபவத்தைக் கண்டு கொண்டாடி ஸாஷ்டாங்கமாக விழுந்து ஸேவித்தனர். முன்பு அரசனால் ஒரு கம்பத்தி னுச்சியிற் கட்டி நிறுத்தப்பட்ட பொற்கிழி தானாகவே ஆழ்வார் முன்னே தாழ இழிய, இதுவும் ஒரு பகவத் க்ருபையென்று உவந்து ஆழ்வார் அதனை அறுத்துக் கொண்டருளினார்.

ஆழ்வார்க்குப் பட்டர்பிரானென்று திருநாமமாதலும், பரமபதநாதன் ஸேவை ஸாதித்தலும்.

அதைக்கண்ட அரசனும் புரோஹிதரும் மற்றும் பல பண்டிதர்களும் ஆழ்வாரை யடிபணிந்து மிகப்புகழ்ந்து அவரைப் பட்டத்து யானையின் மேலேற்றிக் குடைசாமரம் மகர தோரணம் முதலியவற்றைத் தாங்களே பணிமாறிக்கொண்டு கூடவேயிருந்து திருவீதிகளிலே மஹோத்ஸவம் செய்வித்தார்கள். அக்காலத்தில் அவர் பண்டிதர்களனைவருக்கும் தலைவராய் விளங்கினமையால் ராஜா அவர்க்குப் பட்டர்பிரான் என்று திருநாமம் சாத்திப் பல விருதாவளிகளைக் கோஷிக்க, திருச்சின்னம் ஒலிசெய்ய, வெற்றிச் சங்கமெடுத்தூத இப்படிப்பட்ட வைபவத்துடனே ஆழ்வார் மஹோத்ஸவம் கண்டருள்வதைப் பார்த்து ஆநந்திக்க விரும்பிய பரமபத நாதன் பிராட்டியுடனே பெரிய திருவடியின் மீதேறி எதிரில் வந்து தோன்றினான்.

ஆழ்வார் திருப்பல்லாண்டு பாடுதல்

மகனுடைய மஹோத்ஸவத்தைக் காணவரும் மாதாபிதாக்களைப்போலே தம்முடைய உத்ஸவத்தைக் காணவந்த திருமாலைக் கண்ட ஆழ்வார் சிறிதும் செருக்குக் கொள்ளாமல் அந்த தேவாதிதேவனுடைய ஸர்வஜ்ஞத்வம் முதலிய திருக்குணங்களை அநுஸந்திப்பதற்கு முன்னே ஸௌந்தர்ய ஸௌகுமார்யங்களிற் கண் செலுத்தி அவற்றையே ஸேவித்து ஈடுபட்டு ஆழ்ந்து பக்தி பரவசராய் அதனால் தம்முடைய நிலைமையையும் எம்பெருமானுடைய நிலைமையையும் மறந்து "காலம் நடையாடாத பரம பதத்திலே இருக்குமிப் பரமபுருஷன் காலம் நடையாடுகிற இந்த லோகத்தில் வந்து நிற்கிறானே, இவனுக்கு என்ன தீங்குவருமோ!" என்று மிகவும் அஞ்சி, இந்த திவ்யமங்கள விக்ரஹத்துக்கு எவ்விதமான அவத்யமும் நேரிடா திருக்கவேணும் என்று மங்களாசாஸநம் பண்ணுகிறவராய் யானை மணிகளையே தாளமாகக்கொண்டு திருப்பல்லாண்டு என்னும் திவ்ய ப்ரபந்தத்தைப் பாடினார்.

பெரியாழ்வார்திருமொழி அவதரித்தல்.

அநந்தரம் ஆழ்வார் தம்மைச் சரணமடைந்த பாண்டிய குலபதியைக் குளிரக் கடாக்ஷித்துப் பாகவத கோஷ்டியில் ஒருவனாக்கிவிட்டு ஸ்ரீ வில்லிபுத்தூர்க்கெழுந்தருளி, கிழியிற் கிடைத்த பொருள்களையெல்லாம் வடபெருங்கோயிலுடைய பெருமாள் திருமுன்பே வைத்துத் தெண்டன் ஸமர்ப்பித்து அந்தப்பொருளால் அங்கே கோபுரம் கட்டுவித்துப் பழையபடி நந்தவன கைங்கர்யமே நடத்தி வருகையில் க்ருஷ்ணாவதாரத்திலே மிகவும் ஈடுபட்டு ஆழ்ந்தவராகையால் அவ்வவதார சரிதங்களையே பிரதானமாகப் பாராட்டி அநுபவித்து அவ்வநுபவத்தாலுண்டான ஆநந்தம் உள்ளடங்காமற் பெருகவே அதைப் பிரபந்த முகமாக வெளியிடத்தொடங்கிப் பெரியாழ்வார் திருமொழியென்னும் திவ்ய ப்ரபந்தத்தையும் அருளிச்செய்தார். ... ...

பெரியாழ்வார் வைபவம் முற்றிற்று

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

திருப்பல்லாண்டு முன்னுரை

இப்பிரபந்தத்திற்குத் திருப்பல்லாண்டென்று திருநாமம் வழங்குதற்குக் காரணம் யாதெனில்; ஒவ்வொரு பாசுரத்திலும் பல்லாண்டு பல்லாண்டு என்றுசொல்லி மங்களாசாஸநம் செய்திருப்பதனால் அதனையே நிரூபகமாக்கிப் பல்லாண்டு என்று திருநாமம் சாத்தினர். திரு என்பது வடமொழியில் ஸ்ரீசப்தம்போல் மேன்மையையுணர்த்தும்; மேன்மைதங்கிய மங்களாசாஸந ப்ரபந்தம் என்றபடி. இப்பிரபந்தம் பல்லாண்டென்று தொடங்கப்படுதலால் முதற்குறிப்பு என்னு மிலக்கணத்தால் திருப்பல்லாண்டெனத் திருநாமம் பெற்றதென்னவுமாம்.

அவாப்த ஸமஸ்தகாமனென்றும் ஸர்வரக்ஷகனென்றும் ப்ரஸித்தனான ஈச்வரனைக்கண்டால் தமக்கு வேண்டிய மங்களங்களை அவனிடத்தில் பிரார்த்தித்துப் பெறவேண்டியிருக்க தாம் அவனுக்கு மங்களமுண்டாகுமாறு ஆசாஸிப்பது தகுதியோவென்னில்; பகவத்க்ருபையினால் கிடைத்த பக்தியினால் அந்த பகவானுடைய ஸர்வரக்ஷகத்வம் முதலான குணங்களை அடியோடு மறந்து 'பகவானுக்குக் குறையொன்றுமில்லாமலிருப்பதே நமக்கு மங்களம்' என்று இவ்வாழ்வார் நினைத்து மங்களாசாஸநம் பண்ணுகிறார் என்றுணர்க.

மற்றுள்ள ஆழ்வார்களுக்கும் மங்களாசாஸநத்தில் ஊற்றமிருந்தாலும் அவர்களுக்கு அது எப்போதோ ஒருகாலுள்ளதேயன்றி இப்பெரியாழ்வார்க்குப் போலே நித்யமாயும் முக்கியமாயுமிராது. அவர்கள் எம்பெருமானை ரக்ஷகனாகப் பற்றி அவனிடத்தில் தங்களுடைய வாழ்ச்சியைப் பெறுவதற்கு விரும்புபவர்கள். இவ்வாழ்வார் அப்படியல்லாமல் எம்பெருமானுடைய வாழ்வையே தமக்கு வாழ்வாக நினைத்துப் பெருமாளுக்கு என்ன தீங்குவருகிறதோவென்று பயப்பட்டுக் காப்பிடத்தேடுகிற பரமபக்தராவர். ஆனதுபற்றியே மற்றுள்ள ஆழ்வார்களை விட மிக்க பெருமையையுடையவரானது காரணமாகவே இவர்க்குப் பெரியாழ்வாரென்று ப்ரஸித்தியுண்டாயிற்று; உபதேசரத்தினமாலையிலே

"மங்களாசாசனத்தில் மற்றுள்ளவாழ்வார்கள் தங்க ளார்வத்தளவு தானன்றிப்—பொங்கும்
பரிவாலே வில்லிபுத்தூர்ப் பட்டர்பிரான் பெற்றான் பெரியாழ்வா ரென்னும் பெயர்"

என்று இவ்வர்த்தத்தை மணவாளமா முனிகள் அருளிச்செய்தார்.

ஸ்ரீமத் வேதாந்த தேசிகன் ஆண்டாள் விஷயமாக அருளிச்செய்த கோதாஸ்துதியில் "தாதஸ்து தே மதுபித:..............லேபே மஹத்தர பதாநுகுணம் ப்ரஸாதம்" என்றருளிச் செய்துள்ள ச்லோகத்தை நோக்குமிடத்து, பெரியாழ்வாரென்கிற பட்டப்பெயர் ஆண்டாள் சூடிக்களைந்த பூமாலையைப் பெருமாளுக்குத் தாம் ஸமர்ப்பித்து அதனால் பெற்றதாக தேசிகன் கருதினதாய் விளங்குகின்றது.

திருப்பல்லாண்டு முதலான ஸகல திவ்யப் பிரபந்தங்களுக்கும் வடமொழியும் தென்மொழியும் விரவிய மணிப்ரவாள நடையில் வியாக்கியானமருளிச் செய்தவர் பெரியவாச்சான் பிள்ளை. பெரியாழ்வார் திருமொழிக்கு மாத்திரம் அவருடைய வியாக்கியானம் நானூறு பாசுரங்களுக்கு லுப்தமாக, மணவாளமாமுனிகளால் அது பூர்த்தி செய்யப்பட்டது. நம்மாழ்வாரருளிச் செய்த திருவாய்மொழி யாயிரத்திற்கு மற்றும் பல ஆசாரியர்களும் வியாக்கியானங்களருளிச் செய்துள்ளார்கள். ஆக எல்லா வியாக்கியானங்களையும் தழுவி அடியேனால் எழுதப்பட்டுள்ள திவ்யார்த்த தீபிகையென்னுமுரை முப்பது வருஷ காலமாக உலகமெங்கும் பரவியுள்ளது. பொழிப்புரையுமொன்று இருக்கவேணுமென்று கருதிச் சுருக்கமும் ஸாரமுமான உரையொன்றை எழுதி அத்துடன் சேர்த்து நாலாயிரமும் வெளியிடப்படுகிறது. குற்றங்களைந்து குணங்கொள்வர் பெரியோர். ....

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பெரியாழ்வார் அருளிச்செய்த

திருப்பல்லாண்டு.

(ஸ்ரீ காஞ்சி. மஹாவித்வான் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் உரை.)

1. பல்லாண்டுபல்லாண்டு பல்லாயிரத்தாண்டு *
பலகோடிநூறாயிரம்
மல்லாண்ட திண்டோள்மணிவண்ணா *
உன்சேவடிசெவ்விதிருக்காப்பு. (௧)

2. அடியோமோடும்நின்னோடும் பிரிவின்றியாயிரம்பல்லாண்டு *
வடிவாய்நின்வலமார்பினில் வாழ்கின்றமங்கையும்பல்லாண்டு *
வடிவார்சோதிவலத்துறையும் சுடராழியும்பல்லாண்டு *
படை போர்புக்குமுழங்கும் அப்பாஞ்சசன்னியமும்பல்லாண்டே. (௨)

மல்லர்களை முடித்த வலிய தோள்களையுடைய நீலமணிவண்ணனே! உனது திருவடிகளின் அழகு எக்காலும் குறையற்றிருக்கவேணும். அடியோங்களும் நீயும் எக்காலும் கூடியே வாழவேணும். உனக்கு நிரூபகபூதையாய் வலமார்பில் வாழ்கின்ற பிராட்டியும் எக்காலும் வாழ்க; வலத்திருக்கையில் சோதியே வடிவெடுத்தாற்போல் விளங்குகின்ற சக்கரமும் வாழ்க; சேனைகள் மலிந்த போர்க்களத்திற் புகுந்து ஒலிக்கின்ற அப்படிப்பட்ட சங்கும் வாழ்க. (1-2)

(தம்மோடு பல்லாண்டுபாட ஞானிகளை யழைக்கும் பாசுரம்.)

3. வாழாட்பட்டுநின்றீருள்ளீரேல் வந்துமண்ணும்மணமுங்கொண்மின் *
கூழாட்பட்டுநின்றீர்களை எங்கள்குழுவினில்புகுதலொட்டோம் *
ஏழாட்காலும்பழிப்பிலோம்நாங்கள் இராக்கதர்வாழ் *இலங்கை
பாழாளாகப்படைபொருதானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (௩)

வாழ்வதற்கான கைங்கரியத்தில் ஊற்றமுடையீராகில் எங்களோடுவந்து சேர்ந்து அபிமானிகளாகித் தொண்டு செய்யுங்கள்.; சோற்றுக்காகப் பிறரிடத்தில் தொண்டாயிருப்பவர்களை எங்கள் கோஷ்டியில் யாம் சேர்த்துக்கொள்ளமாட்டோம். நாங்கள் ஏழு தலைமுறையாகப் புனிதர்கள்; அரக்கர் வாழ்ந்த லங்காபுரியில் ஆண்பலிகள் பாழாகும்படி படைகொண்டு போர்செய்த பெருமானுக்குக் காப்பிடுவோம்.

(கைவல்யார்த்திகளை யழைக்கும் பாசுரம்.)

4. ஏடுநிலத்திலிடுவதன்முன்னம்வந்து எங்கள்குழாம்புகுந்து *
கூடுமனமுடையீர்கள் வரம்பொழிவந்தொல்லைக்கூடுமினோ *
நாடுநகரமும்நன்கறிய நமோநாராயணாயவென்று *
பாடுமனமுடைப்பத்தருள்ளீர் வந்துபல்லாண்டுகூறுமினே. (௪)

பொல்லாத நிலமாகிய கைவல்யத்தில் உங்களைக்கொண்டு தள்ளுவதற்கு முன்னே, 'ஆத்மாநுபவம் மாத்திரமே செய்வோம்' என்று நீங்கள் இட்டுக்கொண்ட வரம்பை யொழித்துவந்து எங்கள் கோஷ்டியில் உடனே சேர்ந்துவிடுங்கள்; நாட்டாரும் நகரத்தாரும் நன்கு அறியும்படி திருமந்திரத்தைப் பாட விருப்பமுடையீராயின் பாடி, மங்களாசாஸனமும் செய்யுங்கள். (4)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

(ஐச்வர்யார்த்திகளை யழைக்கும் பாசுரம்.)

5. அண்டக்குலத்துக்கதிபதியாகி அசுரரிராக்கதரை *
இண்டைக்குலத்தையெடுத்துக்களைந்த இருடீகேசன்றனக்கு *
தொண்டக்குலத்திலுள்ளீர்வந்தடிதொழுது ஆயிரநாமஞ்சொல்லி *
பண்டைக்குலத்தைத்தவிர்ந்து பல்லாண்டுபல்லாயிரத்தாண்டென்மினே. (௫)

அண்ட ஸமூஹங்களுக்குத் தலைவனாய், அஸுர ராக்ஷஸர்களுடைய நெருக்கமான கூட்டத்தை நிர்மூலமாக்கின ஹ்ருஷீகேசனான பகவானுக்கு அடியவராயிருப்பவர்களுடைய கோஷ்டியில் சேர்ந்த ஐச்வர்யார்த்திகாள்! நீங்கள் பழைய தன்மையை நீக்கிக்கொண்டு எங்களோடு சேர்ந்து பகவானது திருவடிகளைச் சேவித்து எல்லாத் திருநாமங்களையும் சொல்லி மங்களாசாஸநம் பண்ணுங்கள். (5)

(அநந்யப்ரயோஜனர்களான ஞானிகளின் பாசுரமாக அமைந்த பாசுரம்)

6. எந்தைதந்தைதந்தைதந்தைதம்மூத்தப்பன் ஏழ்படிகால்தொடங்கி *
வந்துவழிவழியாட்செய்கின்றோம் * திருவோணத்திருவிழவில்
அந்தியம்போதிலரியுருவாகி அரியையழித்தவனை *
பந்தனைதீரப்பல்லாண்டு பல்லாயிரத்தாண்டென்றுபாடுதுமே. (௬)

ஏழு தலைமுறையாக நாங்கள் வந்து முறைதப்பாமல் கைங்கரியம் பண்ணுகிறோம்; ச்ரவண நக்ஷத்ரத் திருநாளிலே மாலைப்பொழுதில் நரஸிம்ஹமூர்த்தியாய்த் தோன்றிப் பகைவனான இரணியனைக் கொன்றொழித்த பெருமானுக்கு அன்றைய அனுக்கம் தீரும்படி மங்களாசாஸநம் செய்வோம்யாம். (6)

(கைவல்யார்த்திகளின் பாசுரமாக அமைந்த பாசுரம்)

7. தீயிற்பொலிகின்றசெஞ்சுடராழி திகழ்திருச்சக்கரத்தின் *
கோயிற்பொறியாலேயொற்றுண்டுநின்று குடிகுடியாட்செய்கின்றோம் *
மாயப்பொருபடைவாணனை ஆயிரந்தோளும்பொழிகுருதி
பாய *சுழற்றியவாழிவல்லானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (௭)

சுடர்ப்பொருள்களெல்லாவற்றையும்விட மிகவும் பிரகாசிப்பதும் சிவந்த ஒளியோடுகூடி விளங்குவதுமான திருவாழியாழ்வானெழுந்தருளியிருக்கிற ஸ்தானமாகிய வட்டவடிவமான அடையாளத்தினால் அடையாளம் செய்யப்பட்டவர்களாயிருந்து அநாதிஸந்தாநமாகக் கைங்கரியம் செய்து வருகின்றோம்; க்ருத்ரிம யுத்தம் செய்பவனான பாணாஸுரனுடைய ஆயிரந்தோள்களினின்றும் ரக்தம் வெள்ளமிடும்படி சக்ராயுதத்தைச் சுழற்றிய எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் செய்வோம்யாம். (7)

(ஐச்வர்யார்த்திகளின் பாசுரமாக அமைந்த பாசுரம்)

8. நெய்யிடைநல்லதோர்சோறும் நியதமுமத்தாணிச்சேவகமும் *
கையடைக்காயும்கழுத்துக்குப்பூணொடு காதுக்குக்குண்டலமும் *
மெய்யிடநல்லதோர்சாந்தமுந்தந்து என்னைவெள்ளுயிராக்கவல்ல *
பையுடைநாகப்பகைக்கொடியானுக்குப் பல்லாண்டுகூறுவனே. (௮)

நெய் நிறைந்த நல்ல ப்ரஸாதத்தையும், எப்போதும் பிரியாமல் கூடவேயிருந்து செய்கிற சேவக வ்ருத்தியையும், தாம்பூலத்தையும், பல ஆபரணங்களையும், உடம்பில் பூசிக்கொள்ளும்படி சிறந்த சந்தனத்தையும் கொடுத்து என்னை சுத்த ஸாத்விகனாகச் செய்தருளின கருடத்வஜனான எம்பெருமானுக்கு மங்களாசாஸநம் பண்ணுவேன். (8)

(ஞானிகளோடு கூடி மங்களாசாஸனம் செய்யும் பாசுரம்)

9. உடுத்துக்களைந்தநின்பீதகவாடையுடுத்துக் கலத்ததுண்டு *
தொடுத்ததுழாய்மலர்சூடிக்களைந்தன சூடுமித்தொண்டர்களோம் *
விடுத்ததிசைக்கருமந்திருத்தித் திருவோணத்திருவிழவில் *
படுத்தபைந்நாகணைப்பள்ளிகொண்டானுக்குப் பல்லாண்டுகூறுதுமே. (௯)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

எம்பெருமானே! தேவரீர் அரையில் சாத்திக்கொண்டு கழித்த பீதாம்பரத்தை உடுத்துக்கொண்டும் தேவரீர் அமுதுசெய்த பாத்திரத்தில் மிகுந்திருப்பதைப் புஜித்தும், தேவரீர் சாத்திக்கொண்டு களைந்த திருத்துழாய் மலர்மாலைகளைச் சூடிக்கொண்டும் தாஸர்களான நாங்கள்,—தேவரீர் ஏவியனுப்பிய திக்கிலே ஆகவேண்டிய காரியங்களை ஒழுங்காகச்செய்து, சேஷசாயியான தேவரீருக்குத் திருவோணத் திருநாளிலே மங்களாசாஸனம் செய்வோம்.

(கைவல்யார்த்திகளோடு கூடி மங்களாசாஸனம் செய்யும் பாசுரம்)

10 எந்நாளெம்பெருமான் உன்றனக்கடியோமென்றெழுத்துப்பட்ட
வந்நாளே * அடியோங்களடிக்குடில் விடுபெற்றுய்ந்ததுகாண் *
செந்நாள்தோற்றித் திருமதுரையுட்சிலைகுனித்து * ஐந்தலைய
பைந்நாகத்தலைப்பாய்ந்தவனே உன்னைப்பல்லாண்டுகூறுதுமே. (௧0)

ஸ்வாமிந்! தேவரீர்க்கு நாங்கள் அடிமைப்பட்டவர்களென்று ஏற்பட்ட நாள் முதலாகவே அடியோங்களுடைய ஸந்தானமெல்லாம் நல்ல கதியையடைந்து உஜ்ஜீவித்துவிட்டது; நன்னாளில் திருவவதரித்து அழகிய வடமதுரையிலே கம்ஸனுடைய ஆயுதசாலையில் புகுந்து அவனது வில்லைபொடிந்து முறித்தவனும் காளியனென்னும் நாகத்தின் ஐந்தலைமேலே குதித்தவனுமான பெருமானே! தேவரீர்க்கு மங்களாசாஸநம் செய்வோம். (10)

(ஐச்வர்யார்த்திகளோடு கூடி மங்களாசாஸனம் செய்யும் பாசுரம்)

11. அல்வழக்கொன்றுமில்லா அணிகோட்டியர்கோன் * அபிமானதுங்கன்
செல்வனைப்போலத் திருமாலே நானுமுனக்குப்பழவடியேன் *
நல்வகையால் நமோநாராயணவென்று நாமம்பலபரவி *
பல்வகையாலும்பவித்திரனே உன்னைப்பல்லாண்டுகூறுவனே. (௧௧)

திருமாலே! அநீதிகள் ஒன்றுமில்லாத திருக்கோட்டியூரிலுள்ளவர்களுக்குத் தலைவராய், ஸ்ரீவைஷ்ணவாபிமாநத்தாற் சிறந்தவரான செல்வநம்பியைப்போலவே நானும் தேவரீருக்குப் பழமையான தாஸனுப் விட்டேன்; எல்லாவிதங்களாலும் பரிசுத்தனான பெருமானே! அடியேனுக்கு நன்மையுண்டாகும்படி திருமந்திரத்தை அநுஸந்தித்து அனேக திருநாமங்களைச் சொல்லியேத்தி தேவரீருக்கு மங்களாசாஸநம் பண்ணுவேன். (11)

(பலனுரைக்கும் பாசுரம்)

12 பல்லாண்டென்றுபவித்திரனைப் பரமேட்டியை * சார்ங்கமென்னும்
வில்லாண்டான்றன்னை வில்லிபுத்தூர்விட்டுசித்தன்விரும்பியசொல் *
நல்லாண்டென்றுநவின்றுரைப்பார் நமோநாராயணாயவென்று *
பல்லாண்டும்பரமாத்மனைச் சூழ்ந்திருந்தேத்துவர்பல்லாண்டே. (௧௨)

பரிசுத்தனும் பரமபத நிலயனும் சார்ங்கவில்லை அடக்கி ஆள்பவனுமான எம்பெருமானைக் குறித்து ஸ்ரீவில்லிபுத்தூரிற் பிறந்தபெரியாழ்வார் ஆதரத்தோடு சொன்ன இப்பிரபந்தத்தை, நமக்கு நல்லகாலம் வாய்த்ததென்று (மகிழ்ந்து) அநுஸந்திப்பவர்கள் ஸ்ரீமந்நாராயணனைச் சுற்றும் சூழ்ந்துகொண்டு திருமந்திரத்தையநுஸந்தித்துக்கொண்டு எப்போதும் திருநாட்டில் மங்களாசாஸநம் பண்ணப்பெறுவர்கள். (12)

திருப்பல்லாண்டு முற்றிற்று.

அடிவரவு:—பல் அடி வாழ் ஏடு அண்டம் எந்தை தீ செய் உடுத்து எந்நாள் அல்வழக்கு பல்லாண்டு வண்ணம்.

[ஆதி கூறுதும், அனந்தாம் கூறுமின், அண்டம் ஏன்மின், எந்தை பாடுதும்,
தீ உடுத்து எந்நாள் கூறுதும், செய்யும் அல்லும் கூறுவனே.] (12)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பெரியாழ்வார் அருளிச்செய்த

பெரியாழ்வார் திருமொழி

(ஸ்ரீகாஞ்சி. மஹாவித்வான் அண்ணங்கராசாரியர் ஸ்வாமியின் உரை.)

முதற்பத்து—முதல் திருமொழி—வண்ணமாடங்கள்.

(ஸ்ரீ கிருஷ்ணாவதாரக் கொண்டாட்டங்கூறும்பதிகமிது.)

13 வண்ணமாடங்கள்சூழ் திருக்கோட்டியூர் * கண்ணன்கேசவன் நம்பிபிறந்தினில் *
எண்ணெய்சுண்ணம் எதிரெதிர்தூவிட * கண்ணன்முற்றம் கலந்தளறாயிற்றே. (௧)

அழகிய மாடங்கள் சூழ்ந்த திருக்கோட்டியூரிலுள்ள எம்பெருமான் நந்தகோபர் திருமாளிகையிலே பிறந்தருளினபோது அங்குள்ளார் எண்ணெயையும் மஞ்சள்பொடியையும் ஒருவர்க்கொருவர் எதிர்த்துத் தூவியதனால் அத்திருமுற்ற மடங்கலும் சேறாய்விட்டது.
[கண், நல், முற்றம்.] (1)

14 ஓடுவார்விழுவார் உகந்தாலிப்பார் * நாடுவார்நம்பிரான் எங்குத்தானென்பார் *
பாடுவார்களும் பல்பறைகொட்டநின்று * ஆடுவார்களும் ஆயிற்றாய்ப்பாடியே. (௨)

திருவாய்ப்பாடியானது, ஓடுவாரும் வழுக்கி விழுவாரும் உத்கோஷிப்பாரும் பிள்ளையைத் தேடுவாரும் 'நமது கண்ணன் எங்கே?' என்பாரும், பாடுவாரும், பலவகை வாத்யங்கள் முழங்க நின்று கூத்தாடுவாருமாக ஆய்விட்டது. (2)

15 பேணிச்சீருடைப் பிள்ளைபிறந்தினில் * காணத்தாம்புகுவார் புக்குப்போதுவார் *
ஆணொப்பார் இவன்நேரில்லைகாண் * திரு-வோணத்தான் உலகாளுமென்பார்களே. (௩)

ஸ்ரீகிருஷ்ணன் கம்ஸாதிகள் கண்படாதபடி தன்னைக் காத்து வந்து பிறந்தவளவில் ஆயர்கள் அவனைக்காண்கைக்காக உள்ளே நுழைவாரும், உள்ளே போய்க் கண்டு வெளிப்புறப்படுவாரும் "இவனோடு ஒத்திருக்கும் ஆண்கள் யாரும் இல்லை; இவன் ஸர்வேச்வரனுடைய விபூதிகளையெல்லாம் ஆளக்கடவன்" என்பாருமாக ஆனார்கள். [ஆணொப்பான்-என்றும் பாடம்.] (3)

16 உறியைமுற்றத்து உருட்டிநின்றாடுவார்* நறுநெய்பால்தயிர் நன்றாகத்தூவுவார் *
செறிமென்கூந்தல் அவிழத்திளைத்து * எங்கும், அறிவழிந்தனர் ஆய்ப்பாடியாயரே. (௪)

இடையர்கள் உறிகளை முற்றத்திலே உருட்டிவிட்டுக் கூத்தாடுவார் சிலரும், நெய்யையும் பாலையும் தயிரையும் தானம்பண்ணுவார் சிலரும், மயிர் முடி அவிழ்ந்துகலையும்படி நர்த்தனம் பண்ணுவார் சிலருமாக, சேரியடங்கலும் அறிவு கேடராயினர். (4)

17 கொண்டதாளுறி கோலக்கொடுமழு * தண்டினர் பறியோலைச்சயனத்தர் *
விண்டமுல்லை அரும்பன்னபல்லினர் * அண்டர்மிண்டிப் புகுந்துநெய்யாடினர். (௫)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உறிகளையும் கூர்மையான மழுக்களையும் தடிகளையுமுடையராய் ஓலைகளினுற் செய்த படுக்கையையுடையராய் முல்லையரும்புபோன்றபற்களையுடையரான இடையர்கள் நெருக்கிப்புகுந்து மகிழ்ச்சியால் நெய்யாடலாடினுர்கள். [நெய்யாடல்—மங்களஸ்நாந விசேஷம்.] (5)

18 கையுங்காலும் நிமிர்த்துக்கடாரநீர் * பையவாட்டிப் பசுஞ்சிறுமஞ்சளால் *
ஐயநாவழித்தாளுக்கு அங்காந்திட * வையமேழுங்கண்டாள் பிள்ளைவாயுளே. (௬)

கைகளையும் அடிகளையும் நீட்டி நிமிர்த்து, கடாரத்தில் காய்ச்சின தீர்த்தத்திலே நீராட்டிப் பசுமஞ்சளால் மெல்லிதான நாக்கை வழித்த யசோதைக்காகக் கண்ணன் வாயைத்திறக்க, அவள் அவனுடைய வாயினுள்ளே உலகங்களை யெல்லாம் கண்டாள். [கடாரம் - பெரிய பாத்திரம்.] (6)

19 வாயுள்வையகங் கண்ட மடநல்லார் * ஆயர்புத்திரனல்லன் அருந்தெய்வம் *
பாயசீருடைப் பண்புடைப்பாலகன் * மாயனென்று மகிழ்ந்தனர்மாதரே. (௭)

பிள்ளையின் வாயினுள்ளே உலகங்களைக்கண்ட மாதர்கள் "மிக்க குணசாலியான இப்பிள்ளை இடைப்பிள்ளையல்லன், பெறுதற்கரிய தெய்வம், ஆச்சர்ய சக்தியுக்தன்" என்று கூறிக் களித்தனர். (7)

20 பத்துநாளுங்கடந்த இரண்டாநாள் * எத்திசையும் சயமரங்கோடித்து *
மத்தமாமலை தாங்கியமைந்தனை * உத்தானஞ்செய்து உகந்தனராயரே. (௮)

பன்னிரண்டாம்நாளான நாமகரண தினத்திலே எங்கும் ஜயதோரண ஸ்தம்பங்களை நாட்டி அலங்கரித்து, யானைகள் தங்கியிருக்கிற கோவர்த்தன பர்வதத்தைக் குடையாக ஏந்திநின்ற குழந்தையாகிய கண்ணனை இடையர்கள் கைத்தலத்திலே வைத்துக்கொண்டு உபலாலனஞ்செய்து களித்தனர். (8)

21 கிடக்கில்தொட்டில் கிழியவுதைத்திடும் * எடுத்துக்கொள்ளில் மருங்கையிறுத்திடும் *
ஒடுக்கிப்புல்கில் உதரத்தேபாய்ந்திடும் * மிடுக்கிலாமையால் நான்மெலிந்தேன்நங்காய். (௯)

இப்பிள்ளை தொட்டிலில் கிடந்தால் தொட்டில் சிதிலமாம்படி கால்களினுல் உதைக்கின்றுன்; இவனை இடுப்பில் எடுத்துக்கொண்டால் இடுப்பை முறிக்கின்றுன்; ஒடுக்கி மார்வில் அணைத்துக் கொண்டால் வயிற்றிலே பாய்கின்றுன்; இச்சேஷ்டைகளைப் பொறுக்கும் சக்தி மகனுக்கு இல்லாமையால் தாயாகிய நான் மிகவும் இளைத்தேன் (என்று யசோதை ஒரு நங்கையை நோக்கிக் கூறினதாகப்பேசப்பட்டது.)(9)

22 செந்நெலார்வயல்சூழ் திருக்கோட்டியூர் * மன்னுநாரணன் நம்பிபிறந்தமை *
மின்னுநூல் விட்டுசித்தன்விரித்த * இப்-பன்னுபாடல்வல்லார்க்கு இல்லைபாவமே. (௧௦)

செந்நெற் பயிர்மலிந்த கழனிகளினுற் சூழப்பட்ட திருக்கோட்டியூரிலுள்ள எம்பெருமான் பண்டு திருவாய்ப்பாடியிலே திருவவதரித்ததைக் குறித்து அந்தணர் தலைவரான பெரியாழ்வார் அருளிய இப்பதிகத்தை ஓதவல்லவர்களுக்குப் பாவமொன்றுமில்லையாம். (10)

அடிவரவு :—வண்ணமோடு பேணியுறி, கொண்டகை வாய்ப்பத்து, கிடக்கில் செந்நெல் சீதம்.

முதற்பத்து—இரண்டாந் திருமொழி-சீதக்கடல்

(யசோதைப்பிராட்டி ஆய்ச்சிகளையழைத்துக் கண்ணனுடைய அவயவசோபைகளைக் காட்டுகின்றமை கூறுதல்.)

23 சீதக்கடலுள் அமுதன்னதேவகி * கோதைக்குழலாள் அசோதைக்குப்போத்தந்த *
பேதைக்குழவி பிடித்துச்சுவைத்துண்ணும் * பாதக்கமலங்கள்காணீரே பவளவாயீர்வந்துகாணீரே.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

குளிர்ந்த கடலிலே உள்ளமுதாகப்பிறந்த பிராட்டியோடொத்த தேவகியால், பூவணிந்த யசோதைப் பிராட்டிக்கு அனுப்பப்பட்ட சிசுவான கண்ணன் தன் கைகளால் பிடித்து குசிபார்த்துத் திருப்பவளத்தில் வைத்து உண்கிற திருவடித் தாமரைகளைப் பவளவாய்ப் பெண்காள்! வந்து காணுங்கோள். (1)

24 முத்தும்மணியும் வயிரமும்நன்பொன்னும் * தத்திப்பதித்துத் தலைப்பெய்தாற்போல் * எங்கும்
பத்துவிரலும் மணிவண்ணன்பாதங்கள் * ஒத்திட்டிருந்தவாகாணீரே ஒண்ணுதலீர்வந்துகாணீரே.

மணிவண்ணனான கண்ணனுடைய திருவடிகளில், முத்துக்களையும் ரத்னங்களையும் வஜ்ரங்களையும் நல்லபொன்னையும் மாறிமாறிப்பதித்துச் சேர்த்தாற்போலே விரல்கள் பத்தும் ஒன்றோடொன்றொத்து அமைந்திருக்கும்படியை அழகிய நெற்றியையுடைய மாதர்காள்! வந்து காணீர்: (2)

25 பணைத்தோளிளவாய்ச்சி பால்பாய்ந்தகொங்கை * அணைத்தாரவுண்டு கிடந்தவிப்பிள்ளை *
இணைக்காலில்வெள்ளித் தளைநின்றிலங்கும்* கணைக்காலிருந்தவாகாணீரே காரிகையீர்வந்துகாணீரே.

மூங்கில்போன்ற தோள்களையுடைய யசோதையின் பால்சொரிகிற முலையைத் திருக்கையால் அணைத்துக் கொண்டு வயிறு நிரம்பப் பால் அமுது செய்து களித்துக்கிடக்கின்ற இந்தக் கண்ணனுடைய திருவடிகளில் வெள்ளித் தண்டை விளக்கும் கணைக்காலிருந்தபடியை அழகிய பெண்காள்! வந்து காணீர்!! (3)

26 உழந்தாள்நறுநெய் ஒரோதடாவுண்ண * இழந்தாளெரிவினால் ஈர்த்தெழில்மத்தின் *
பழந்தாம்பாலோச்சப் பயத்தால்தவழ்ந்தான் * முழந்தாளிருந்தவா காணீரே முகிழ்முலையீர்வந்துகாணீரே.

பிரயாஸப்பட்டுச்சேர்த்த நறுநெய்யை ஒவ்வொரு பானையாகக் கண்ணன் அமுதுசெய்தவளவில் பிள்ளையைத் தான் இழந்தவளாக நினைத்த யசோதை வயிற்றெரிச்சலாலே கையைப்பிடித்திழுத்து மத்தினுடைய தாம்பைக்கொண்டு அடிப்பதாகக் கையிலெடுக்க, அச்சத்தாலே தவழ்ந்த அக்கண்ணனுடைய முழங்கால்களிருந்தபடியை மாதர்காள்! வந்து பாருங்கள். (4)

27 பிறங்கியபேய்ச்சி முலைசுவைத்துண்டிட்டு * உறங்குவான்போலே கிடந்தவிப்பிள்ளை *
மறங்கொளிரணியன் மார்வைமுன்கீண்டான் * குறங்குகளைவந்துகாணீரே குவிமுலையீர்வந்துகாணீரே.

பகைவனான ஹிரண்யனுடைய மார்பை முன்பு பிளந்தவனும், நிலைமாறி வந்த பூதனையினுடைய முலையைச்சுவைத்துண்டு ஒன்றுமறியாமே உறங்குமவனைப்போலே படுத்திருப்பவனுமான இந்தக் கண்ணனுடைய திருத்துடைகளை மாதர்காள்! வந்து காணுங்கள். (5)

28 மத்தக்களிற்று வசுதேவர்தம்முடை * சித்தம்பிரியாத தேவகிதன்வயிற்றில் *
அத்தத்தின்பத்தாநாள் தோன்றியஅச்சுதன் * முத்தமிருந்தவாகாணீரே முகிழ்நகையீர்வந்துகாணீரே.

மதயானைகளை நிர்வஹிக்குமவரான ஸ்ரீவஸுதேவருடைய மனத்தை விட்டுப் பிரியாத தேவகியினுடைய வயிற்றிலே ஹஸ்த நக்ஷத்திரத்துக்குப் பத்தாவதான திருவோணத்திருநாளிலே திருவவதரித்த கண்ணனுடைய ஆண்குறியைப் புன்முறுவல் கொண்ட மாதர்காள்! வந்து காணுங்கள். (6)

29 இருங்கைம்மதகளிறு ஈர்க்கின்றவனை * பருங்கிப்பறித்துக் கொண்டோடுபரமன்றன் *
நெருங்குபவளமும் நேர்நாணும்முத்தும் * மருங்குமிருந்தவாகாணீரே வாணுதலீர்வந்துகாணீரே. (எ)

குவலயாபீடமென்னும் மதயானையைத் தன்வசமாக நடத்தாநின்றுள்ள பாகனைக்கொன்று யானையின் கொம்புகளை முறித்துக்கொண்டு கம்ஸனிருக்குமிடத்தைத் தேடிக்கொண்டு ஓடின கண்ணனுடைய ஆபரணாலங்க்ருதமான திருவரையை அழகிய நெற்றியையுடைய மாதர்காள்! வந்துபாருங்கள். (7)

30 வந்தமதலைக் குழாத்தைவலிசெய்து * தந்தக்களிறுபோல் தானேவிளையாடும் *
நந்தன்மதலைக்கு நன்றுமழகிய * உந்தியிருந்தவாகாணீரே ஒளியிழையீர்வந்துகாணீரே. (அ)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தன்னோடு விளையாட வந்த சிறுபிள்ளைகளின் கூட்டத்தில் தன் வல்லமையைக் காட்டிக்கொண்டு கொம்பு முளைத்த யானைக்குட்டிபோல் தானே முக்கியனாய் நின்று விளையாடும் நந்தகோப குமாரனுடைய மிகவழகிய நாபியை, அழகிய பூஷணமணிந்த மாதர்காள்! வந்து பாருங்கள். (8)

31 அதிருங்கடல்நிறவண்ணனை * ஆய்ச்சி மதுரமுலையூட்டி வஞ்சித்துவைத்து *
பதறப்படாமே பழந்தாம்பாலார்த்த * உதரமிருந்தவாகாணீரே ஒளிவளையீர்வந்துகாணீரே.

கடல்வண்ணனான கண்ணனுக்கு யசோதையானவள் இனிய முலைப்பாலை ஊட்டி, மேல், தான் இவனைக் கட்டப்போகிறதை இவனறியவொண்ணாதபடி ஏமாத்தித் தன் எண்ணம் தப்பாதபடி, பழகின கயிற்றாலேகட்டிவைத்த வயிறு இருந்தபடியை ஒளிவளையீர்! வந்து பாருங்கள்.(9)

32 பெருமாவுரலில் பிணிப்புண்டிருந்து *அங் கிருமாமருதம் இறுத்தவிப்பிள்ளை *
குருமாமணிப்பூண் குலாவித்திகழும் * திருமார்விருந்தவாகாணீரே சேயிழையீர்வந்துகாணீரே. (௧௦)

மிகப்பெரிய உரலோடு கட்டுண்டிருந்து அந்த நிலைமையிலே இரண்டு பெரிய மருத மரங்களை முறித்த இக்கண்ணபிரானுடைய சிறந்த கௌஸ்துபாபரணம் அசைந்து விளங்கும் திருமார்பைப் பாருங்கள் (10)

33 நாள்களோர்நாலைந்து திங்களளவிலே * தாளைநிமிர்த்துச் சகடத்தைச்சாடிப்போய் *
வாள்கொள்வளையெயிற் றுருயிர்வவ்வினன் * தோள்களிருந்தவாகாணீரே சுரிகுழலீர்வந்துகாணீரே.

ஒரு நாலைந்து மாதத்தளவிலே காலைத்தூக்கிச் சகடாஸுரனை உதைத்துவிட்டு, வளைந்த கோரப்பற்களையுடைய பூதனையினுயிரையும் முடித்த கண்ணனது தோள்களிருக்கும்படியை மாதர்காள்! பாருங்கள். (11)

34 மைத்தடங்கண்ணி அசோதைவளர்க்கின்ற * செய்த்தலைநீலநிறத்துச் சிறுப்பிள்ளை *
நெய்த்தலைநேமியுஞ் சங்கும்நிலாவிய * கைத்தலங்கள்வந்துகாணீரே கனங்குழையீர்வந்துகாணீரே. (௧௨)

மையணிந்த கண்களையுடைய யசோதைப்பிராட்டியாலே வளர்க்கப்படுகின்ற நீலோத்பல ச்யாமளனான இந்த பாலக்ருஷ்ணனுடைய, திருவாழியும் திருச்சங்கும் அமைந்த உள்ளங் கைகளை வந்து காணீர் !!; பொன்னால்செய்த காதணிகளையுடைய பெண்காள் வந்து காணீர் !! (12)

35 வண்டமர்பூங்குழல் ஆய்ச்சிமகனாக * கொண்டுவளர்க்கின்ற கோவலக்குட்டற்கு *
அண்டமும்நாடும் அடங்கவிழுங்கிய * கண்டமிருந்தவாகாணீரே காரிகையீர்வந்துகாணீரே. (௧௩)

வண்டுபடிந்த பூமாலையையணிந்த யசோதைப்பிராட்டி தன் மகனாகக் கொண்டு வளர்க்கப்பெற்ற ஸ்ரீநந்தகோப குமாரனுடைய, ப்ரளயகாலத்தில் அனைத்தையும் கபளீகரித்ததான கழுத்திருந்தபடியை அழகிய மாதர்காள்! வந்து காணீர். (13)

36 எந்தொண்டைவாய்ச்சிங்கம் வாவென்றெடுத்துக்கொண்டு * அந்தொண்டைவாயமுதாதரித்து*ஆய்ச்சியர்
தந்தொண்டைவாயால்தருக்கிப்பருகும்* இச்செந்தொண்டைவாய்வந்துகாணீரே சேயிழையீர்வந்துகாணீரே.

இடைப்பெண்கள் "கொவ்வைக்கனிபோன்ற அதரத்தையுடைய எமது சிங்கக்குருகே! எம் பக்கல் வா" என்று புகழ்ந்து இடுப்பில் எடுத்துக்கொண்டு கொவ்வைக்கனிபோன்ற கண்ணனுடைய அதரத்தில் ஊறுகிற அம்ருதத்தை விரும்பித் தங்களுடைய கோவைவாயைக் கண்ணன் வாயோடே நெருக்கிப் பானம்பண்ணப்பெற்ற இந்தச் சிவந்த கோவைவாயை வந்து காணீர்!! (14)

37 நோக்கியசோதை நுணுக்கியமஞ்சளால் *நாக்குவழித்து நீராட்டுமிந்நம்பிக்கு *
வாக்கும்நயனமும் வாயும்முறுவலும் * மூக்குமிருந்தவாகாணீரே மொய்குழலீர்வந்துகாணீரே. (௧௫)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யசோதைப்பிராட்டி ஆராய்ந்து அரைத்த மஞ்சட் காப்பாலே நாக்கு வழித்து ஸ்னானம் செய்விக்கப் பெறுகின்ற இக்கண்ணபிரானுடைய திருவாக்கும் திருக்கண்களும் அதரஸ்புரணமும் புன்சிரிப்பும் மூக்கு மிருந்தபடியைக் கூந்தலழகிய மாதர்காள்! வந்து காண்மின். (15)

38 விண்கொளமரர்கள் வேதனைதீர * முன் மண்கொள்வசுதேவர்தம் மகனாய்வந்து *
திண்கொளசுரரைத் தேயவளர்கின்றான் * கண்களிருந்தவாகாணீரே கனவளையீர்வந்து காணீரே. (௧௬)

தேவதைகளுடைய துன்பங்கள் தீரும்படி பூமியில் வஸுதேவர்க்குப் பிள்ளையாய் வந்து பிறந்து, வலிய அஸுரர்கள் க்ஷயிக்கும்படி வளராநின்ற கண்ணனுடைய கண்கள் இருந்த படியைக் கனவளையீர்! வந்துகாண்மின். (16)

39 பருவம்நிரம்பாமே பாரெல்லாமுய்ய * திருவின்வடிவொக்கும் தேவகிபெற்ற *
உருவுகரிய ஒளிமணிவண்ணன் * புருவமிருந்தவாகாணீரே பூண்முலையீர்வந்துகாணீரே. (௧௭)

வயது முதிருவதற்கு முன்னமே பூமியிலுள்ளாரெல்லாரும் உஜ்ஜீவிக்கும்படியாக, ஸ்ரீ மஹாலக்ஷ்மிபோன்ற தேவகிப்பிராட்டியாலே பெறப்பட்ட நீலமணி வண்ணனான கண்ணபிரானுடைய புருவம் இருந்தபடியைப் பாருங்கள். (17)

40 மண்ணும்மலையும் கடலுமுலகேழும் * உண்ணுந்திறத்து மகிழ்ந்துண்ணும்பிள்ளைக்கு *
வண்ணமெழில்கொள் மகரக்குழையிவை * திண்ணமிருந்தவாகாணீரே சேயிழையீர்வந்துகாணீரே. (௧௮)

பூமியையும் மலைகளையும் கடல்களையும் ஸப்தலோகங்களையும் உண்டு திருவயிற்றிலே வைத்த இக்கண்ணபிரானுடைய அழகிய இம்மகரகுண்டலங்களின் அமைப்பு இருந்தபடியை மாதர்காள்! வந்துபாருங்கள்.

41 முற்றிலுந்தூதையும் முன்கைம்மேல்பூவையும் * சிற்றிலிழைத்துத் திரிதருவோர்களை *
பற்றிப்பறித்துக் கொண்டோடும்பரமன்றன் * நெற்றியிருந்தவாகாணீரே நேரிழையீர்வந்துகாணீரே. (௧௯)

சிறுவீடுகளை மணலினால் செய்துகொண்டு விளையாடித்திரியும் சிறுபெண்களை வலியக் கையைப் பிடித்துக்கொண்டு, அவர்களுடைய மணல் கொழிக்கிற சிறு சுளகுகளையும் மணற்சோறாக்குகிற சிறுபானைகளையும், முன்கைமேல்வைத்துக்கொண்டு பேசுகிற நாகணவாய்ப்புள்ளையும் அபஹரித்துக்கொண்டு ஓடுகின்ற கண்ணனுடைய நெற்றியை நேரிழையீர்! வந்து பாருங்கள். (19)

42 அழகியபைம்பொன்னின் கோல்அங்கைக்கொண்டு * கழல்கள்சதங்கை கலந்தெங்குமார்ப்ப *
மழகன்றினங்கள் மறித்துத்திரிவான் * குழல்களிருந்தவாகாணீரே குவிமுலையீர்வந்துகாணீரே. (௨௦)

அழகிய பசும்பொன்னால் செய்த மாடுமேய்க்கும் கோலைக் கையிலேபிடித்துக்கொண்டு வீரக்கழல்களும் சதங்கைகளும் தன்னிலே சேர்ந்து ஒலியிட மெல்லா மொலிக்க நடந்து இளங்கன்றுகளின் திரள்களைக் கைகழியப்போகாமல் மடக்கித்திரியும் கண்ணனுடைய திருக்குழல்களை மாதர்காள்! பாருங்கள். (20)

43 சுருப்பார்குழலி அசோதைமுன்சொன்ன * திருப்பாதகேசத்தைத் தென்புதுவைப்பட்டன் *
விருப்பாலுரைத்த இருபதோடொன்று முரைப்பார்போய் * வைகுந்தத்தொன்றுவர்தாமே. (௨௧)

வண்டுகள் படிந்த கூந்தலையுடைய யசோதைப்பிராட்டியால் க்ருஷ்ணாவதாரஸமயத்திலே சொல்லப்பட்ட பாதாதிகேசாந்த வர்ணனைப் பாசுரங்களைப் பெரியாழ்வார் ஆதரத்தோடு அருளிச் செய்ததான இவ்விருபத்தொரு பாட்டுகளையும் ஓதுபவர், காலக்கிரமத்தில் ஸ்ரீவைகுண்டத்திலே பொருந்துவர். (21)

அடிவரவு :—சீத முத்தப் பணை புழ பிற மத்தம் இருங்கை வந்து அதிரும்பெருமா காள் மை வண்டெல் கோக்கி விண் பருவம் மண் முற்றில் அழகிய சுருப்பார் மாணிக்கம்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

(யசோதை கண்ணனைத் தொட்டிலிலிட்டுத் தாலாட்டுகின்றமை கூறுவது.)

44 மாணிக்கங்கட்டி வயிரமிடைகட்டி * ஆணிப்பொன்னாற்செய்த வண்ணச்சிறுத்தொட்டில் *
பேணியுனக்குப் பிரமன்விடுதந்தான் *மாணிக்குறளனேதாலேலோ வையமளந்தானேதாலேலோ. (௧)

மாணிக்கத்தை இரண்டருகும் பதித்தும் நடுவில் வயிரத்தை யிழைத்தும் மாற்றுயர்ந்த பொன்னால் செய்யப்பட்ட அழகிய சிறியதொட்டிலை நான்முகன் ஆசையோடு உனக்கு அனுப்பினான்; பிரமசாரி வாமநாவதாரம் பண்ணின கண்ணனே! தாலேலோ! உலகங்களை அளந்தவனே! தாலேலோ. (1)

45 உடையார்கனமணியோடு ஒண்மாதுளம்பூ * இடைவிரவிக்கோத்த எழில்தெழ்கினோடு *
விடையேறுகாபாலி யீசன்விடுதந்தான் *உடையாயழேலழேல்தாலேலோ உலகமளந்தானேதாலேலோ. (௨)

கண்ணா! திருவரைக்குச் சேரும்படியான பொன்மணியையும் நடுநடுவே கலந்து கோக்கப்பட்ட அழகிய இடைச் சரிகையையும், அழகிய மாதளம் பூக்கோவையான அரை வடத்தையும் ரிஷபவாஹநனாய்க் கபாலதாரியான ருத்ரன் அனுப்பினான்; ஸ்வாமி! உலகமளந்தானே! அழாதே தாலேலோ. (2)

46 எந்தம்பிரானார் எழில்திருமார்வர்க்கு * சந்தமழகிய தாமரைத்தாளர்க்கு *
இந்திரன்றானும் எழிலுடைக்கிண்கிணி * தந்துவனாய்நின்றான்தாலேலோ தாமரைக்கண்ணனேதாலேலோ. (௩)

தாமரைக்கண்ணனே! எமக்கு ஸ்வாமியாய், அழகிய திருமார்பையுடையாய் சிறந்தாலழகிய தாமரைபோன்ற திருவடிகளையுடையரான தேவரீர்க்கு தேவேந்திரன் அழகியகிண்கிணியைக் கொணர்ந்து ஸமர்ப்பித்து அதோ இராநின்றான்; தாலேலோ! தாமரைக்கண்ணா! தாலேலோ. (3)

47 சங்கின்வலம்புரியுஞ் சேவடிக்கிண்கிணியும் * அங்கைச்சரிவளையும் நாணுமரைத்தொடரும் *
அங்கண்விசும்பில் அமரர்கள்போத்தந்தார் * செங்கட்கருமுகிலேதாலேலோ தேவகிசிங்கமேதாலேலோ. (௪)

சங்குகளில் சிறந்த வலம்புரிச்சங்கையும் திருவடிகளில் சாத்தத்தகுந்த சதங்கையையும் முன்கை வளைகளையும் தோள்வளைகளையும் பொன்னரை நாணையும் அரைவடத்தையும் ஸ்வர்க்கத்திலுள்ள தேவர்கள் அனுப்பினார்கள்; சிவந்த கண்களையுடைய காளமேக வண்ணனே! தாலேலோ. (4)

48 எழிலார்திருமார்பிற்கு ஏற்குமிவையென்று * அழகியவைம்படையும் ஆரமுங்கொண்டு *
வழுவில்கொடையான் வயிச்சிரவணன் *தொழுதுவனாய்நின்றான் தாலேலோ தூமணிவண்ணனே தாலேலோ. (௫)

"அழகிய திருமார்புக்கு இவைபொருந்தும்" என்று பஞ்சாயுதங்களையும் முத்துவடத்தையும் எடுத்துக்கொண்டு, உதாரனான குபேரன் அஞ்ஜலி பண்ணிக்கொண்டு அதோ நிற்கிறான்; தாலேலோ. (5)

49 ஓதக்கடலில் ஒளிமுத்தினாரமும் * சாதிப்பவளமுஞ் சந்தச்சரிவளையும் *
மாதக்கவென்று வருணன்விடுதந்தான் * சோதிச்சுடர்முடியாய்தாலேலோ சுந்தரத்தோளனேதாலேலோ. (௬)

கடலிலுண்டான முத்துக்களால் கோக்கப்பட்ட ஹாரத்தையும் நல்லஜாதியிலுண்டான பவழவடத்தையும் அழகிய முன்கைவளைகளையும் தோள்வளைகளையும் மிகவும் தகுதியாயிருந்துள்ளவை என்று வருணதேவன் அனுப்பியுள்ளான்; சுடர்மிக்க கிரீடமணிந்த ஸுந்தரபாஹுவே! தாலேலோ! (6)

50 கானார்நறுந்துழாய் கைசெய்தகண்ணியும் * வானார்செழுஞ்சோலைக் கற்பகத்தின்வாசிகையும் *
தேனார்மலர்மேல் திருமங்கைபோத்தந்தாள் * கோனேயழேலழேல்தாலேலோ குடந்தைக்கிடந்தானேதாலேலோ. (௭)

தேன் நிறைந்த செந்தாமரை மலரிலுறைகின்ற பெரிய பிராட்டியார், காட்டிலுண்டான பரிமளம் மிக்க துளவியாலே தொடுத்த மாலையையும் ஸ்வர்க்கலோகத்தில் நிறையவளர்ந்துள்ள கற்பகப்பூக்களால் தொடுத்த திருநெற்றி மாலையையும் அனுப்பினார்; குடந்தைநாதனே! அழாதே; தாலேலோ! (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

51 கச்சொடுபொற்சுரிகை காம்புகன(க)வளை * உச்சிமணிச்சுட்டி ஒண்டாள்நிரைப்பொற்பூ *
அச்சுதனுக்கென்று அவனியாள்போத்தந்தாள் * நச்சுமுலையுண்டாய்தாலேலோ நாராயணாவழேல்தாலேலோ. (௮)

கச்சப்பட்டையையும் பொன்னுடைவாளையும் கரைகட்டியசேலையையும் கநகமயமான தோள்வளைகளையும் உச்சியிலே சாத்தத்தக்க சுட்டியையும் அழகிய காம்புகளையுடையதாய் ஒழுங்கான பொற்பூவையும் கண்ணபிரானுக்குக் கொடுங்கோள் என்று பூமிப்பிராட்டி அனுப்பினாள்; விஷமேற்றின பூதனையின் முலைப்பாலை உண்ட கண்ணனே! அழாதே தாலேலோ! (8)

52 மெய்திமிருநானப் பொடியோடுமஞ்சளும் * செய்யதடங்கண்ணுக்கு அஞ்சனமும்சிந்துரமும் *
வெய்யகலைப்பாகி கொண்டுவளாய்நின்றாள் * ஐயாவழேலழேல்தாலேலோ அரங்கத்தணையானேதாலேலோ. (௯)

திருமேனியிலே பூசுகைக்குரிய கஸ்தூரி, கருப்பூரம், சந்தனம் முதலிய ஸுகந்தப் பொடிகளையும் மஞ்சள் பொடியையும், கண்களில் சாத்த மையையும் திருநெற்றியில் சாத்துகைக்கு ஸிந்தூரத்தையும், ஆண்மானை வாஹனமாகவுடைய துர்க்கையானவள் எடுத்துக்கொண்டு வந்து அதோ இராநின்றாள், ஸ்வாமியான கண்ணனே! ஸ்ரீரங்கசாயியே! அழாதே; தாலேலோ. (9)

53 வஞ்சனையால்வந்த பேய்ச்சிமுலையுண்ட * அஞ்சனவண்ணனை ஆய்ச்சிதாலாட்டிய *
செஞ்சொல்மறையவர் சேர்புதுவைப்பட்டன்சொல் * எஞ்சாமைவல்லவர்க்கு இல்லையிடர்தானே. (௰)

வஞ்சகப் பூதனையை முலையுண்டு முடித்தவனும் மைபோன்ற நிறத்தை யுடையனுமான கண்ணனை யசோதை தாலாட்டினதைப்பற்றி, வைதிகர்கள் வாழும் ஸ்ரீவில்லிபுத்தூரிற் பெரியாழ்வார் அருளிய இப்பாசுரங்களைக் குறைவுபடாமல் ஓதவல்லவர்களுக்குத் துன்பமொன்று மில்லையாம். (10)

அடிவரவு:—மாணியுடையென் சங்கின் எழிலோதக் கானார் கச்ச மெய் வஞ்சனை தன்.

முதற்பத்து—நான்காந் திருமொழி—தன் முகத்துச் சுட்டி.

(யசோதை கண்ணனை இடுப்பிற்கொண்டு சந்திரனை விளிக்கின்றமை கூறுதல்.)

54 தன்முகத்துச்சுட்டி தூங்கத்தூங்கத்தவழ்ந்துபோய்* பொன்முகக்கிண்கிணியார்ப்பப் புழுதியளைகின்றான்*
என்மகன்கோவிந்தன் கூத்தினையிளமாமதீ* நின்முகங்கண்ணுளவாகில் நீயிங்கேநோக்கிப்போ. (௧)

இளஞ்சந்திரனே!, என்மகனான கண்ணன் தன்முகத்தில் சுட்டி பலகாலும் தாழ்ந்து அசையவும் அழகிய சதங்கைகள் கிண்கிண் என்றொலிக்கவும் முற்றத்தில் தவழ்ந்துபோய்ப் புழுதிமண்ணையளைகின்றான் : இவனது சேஷ்டைகளை, உன்முகத்தில் கண் உண்டேயானால் நீ இங்கே வந்து பார்த்துப்போ.

55 என்சிறுக்குட்டன் எனக்கோரின்னமுதெம்பிரான் * தன்சிறுக்கைகளால் காட்டிக்காட்டியழைக்கின்றான் *
அஞ்சனவண்ணனோடு ஆடலாடவுறுதியேல் * மஞ்சில்மறையாதே மாமதீமகிழ்ந்தோடிவா. (௨)

சந்திரனே! எனக்கு விலக்ஷணமான அம்ருதம் போன்ற என் மகனான கண்ணன் தன் சிறிய கைகளால் பலகாலும் உன்னையே காட்டி அழைக்கின்றான்; இவனோடு விளையாட நீ கருதினாயாகில் மேகத்திலேசொருகி மறையாமல் ஆசையோடு ஓடிவா. (2)

56 சுற்றுமொளிவட்டம் சூழ்ந்துசோதிபரந்தெங்கும் * எத்தனைசெய்யிலும் என்மகன்முகம்நேரொவ்வாய் *
வித்தகன்வேங்கடவாணன் உன்னைவிளிக்கின்ற * கைத்தலம்நோவாமே அம்புலீகடிதோடிவா. (௩)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சந்திரனே! நீ எப்போதும் க்ஷயமே யில்லாமல் பூர்ண மண்டலமாகவே யிருந்து இன்னமும் செயற்கையழகு எவ்வளவு கொண்டு விளங்கினாலும் எனது மகனான கண்ணனது முகத்திற்குச் சிறிதும் ஒப்பாகமாட்டாய்; ஆச்சர்ய சக்தியுக்தனும் திருவேங்கடமலையில் வாழ்பவனுமான இக்கண்ணன் உன்னையழைக்கிறதை இன்னமும் நோவாதபடி விரைந்து ஓடிவா. (3)

57 சக்கரக்கையன் தடங்கண்ணால்மலரவிழித்து * ஒக்கலைமேலிருந்து உன்னையேசுட்டிக்காட்டுங்காண் *
தக்கதறிதியேல் சந்திரா!சலஞ்செய்யாதே * மக்கட்பெறாத மலடனல்லையேல்வாகண்டாய். (௪)

சந்திரனே! திருவாழியைக் கையிலேந்திய கண்ணன் என் இடுப்பில் இருந்துகொண்டு தடங்கண்களாலே மலரப் பார்த்து உன்னையே குறித்துக் காட்டுகின்றான்; உனக்குத் தகுதியானதை நீ அறிவாயாகில் (அன்றியும்) பிள்ளை பெறாதமலடன் அல்லையாகில் கபடம் பண்ணாமல் இங்கே வந்தாகில். (4)

58 அழகியவாயில் அமுதவூறல்தெளிவுற * மழலைமுற்றாத இளஞ்சொல்லாலுன்னைக்கூவுகின்றான் *
குழகன்சிரீதரன் கூவக்கூவநீபோதியேல் * புழையிலவாகாதே நின்செவிபுகர்மாமதீ! (௫)

அழகிய சந்திரனே!, ரஸிகனான கண்ணன் அழகிய திருப்பவளத்திலே ஊறுகின்ற அமுதம் சொட்டுவதும், எழுத்துப் புலப்படாதபடி மழலைத்தனம் பொருந்தியதுமான இளம் பேச்சாலே உன்னைக் கூவுகின்றான்; இவன் இப்படி பலகாலுமழைக்கவும் நீ ஓடிப்போவாயேயானால் உன் காதுகள் துளையில்லாதவையாக எண்ணப்படாவோ? (அப்படியெண்ண இடந்தாமல் ஓடிவா.)(5)

59 தண்டொடுசக்கரம் சார்ங்கமேந்துந்தடக்கையன்* கண்துயில்கொள்ளக்கருதிக் கொட்டாவிகொள்கின்றான்*
உண்டமுலைப்பாலறாகண்டாய் உறங்காவிடில் * விண்டனில்மன்னிய மாமதீவிரைந்தோடிவா. (௬)

ஆகாசத்திலுள்ள சந்திரனே! கதையையும் திருவாழியையும் வில்லையும் கொண்ட கைகளையுடைய இக்கண்ணபிரான் தூங்க நினைத்துக் கொட்டாவி விடா நின்றான், இப்போது இவன் உறங்கா தொழிந்தால் உண்ட முலைப்பால் ஜரிக்கமாட்டாது; ஆகையால், விரைந்து ஓடிவா. (6)

60 பாலகனென்று பரிபவஞ்செய்யேல் * பண்டொருநாள், ஆலினிலைவளர்ந்த சிறுக்கனவனிவன் *
மேலெழப்பாய்ந்து பிடித்துக்கொள்ளும்வெகுளுமேல் * மாலைமதியாதே மாமதீமகிழ்ந்தோடிவா. (௭)

சந்திரா! 'இவனொரு சிறுபயலன்றோ' என்று அவமதியாதே; முன்பொரு காலத்திலே ஆலந்தளிரிலே துயின்ற அந்தச் சிறுப்பிள்ளை இவன் காண்; இவன் சீறினானாகில் உன்மேல் ஒரு பாயலாகப் பாய்ந்து உன்னைப் பிடித்துக்கொள்வான்; ஆகையால் இம்மஹாபுருஷனை அவமதியாமல் மகிழ்ந்து ஓடிவா. (7)

61 சிறியனென்றென்னிளஞ்சிங்கத்தையிகழேல்கண்டாய்*சிறுமையின்வார்த்தையை மாவலியிடைச்சென்றுகேள்*
சிறுமைப்பிழைகொள்ளில் நீயுமுன்தேவைக்குரியைகாண் *நிறைமதி! நெடுமால் விரைந்துன்னைக்கூவுகின்றான்(௮)

பூர்ணசந்திரனே! எனக்குச் சிங்கக்குட்டி போன்ற கண்ணபிரானைச் சிறுவனென்று அவமதியாதே; இவனுடைய பால்யத்தில் நடந்த செய்கையை மஹாபலியிடம் போய்க் கேட்டுக்கொள்; 'இப்படியுள்ளவன் விஷயத்தில் சிறுமை நினைத்தவிது மஹா அபராதம்' என்று நினைத்தாயாகில் அப்போது, நீயும் இவன் விஷயத்தில் அடிமை செய்யத் தகுந்தவனாவாய்; அதெல்லாமப்படி நிற்க; ஸர்வஸ்மாத்பரனானஇவன் விரைந்து உன்னைக்கூவுகின்றானாதலால் மகிழ்ந்து ஓடிவா.(8)

62 தாழியில்வெண்ணெய் தடங்கையாரவிழுங்கிய * பேழைவயிற்றெம்பிரான் கண்டாயுன்னைக்கூவுகின்றான் *
ஆழிகொண்டுன்னையெறியும் ஐயுறவில்லைகாண் * வாழவுறுதியேல் மாமதீமகிழ்ந்தோடிவா. (௯)

சந்திரா! தாழியிலே சேமித்திருக்கிற வெண்ணெயைக் கைநிறைய அள்ளி யமுது செய்த பெருவயிற்றையுடையனான என் கண்ணபிரான் உன்னைக்கூவுகின்றான்;இப்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

படி அழைக்கச் செய்தேயும் நீ வாராதிருந்தால், திருவாழியாலே உன்னை வெட்டி விடுவான்; ஸம்சயமேயில்லை; இதில்நின்றுந் தப்பி வாழக் கருதினையாகில் மகிழ்ந்து ஓடிவா. (9)

63. மைத்தடங்கண்ணி அசோதைதன்மகனுக்கு* இவை, ஒத்தனசொல்லி உரைத்தமாற்றம் * ஒளிபுத்தூர்
வித்தகன்விட்டுசித்தன் விரித்ததமிழிவை * எத்தனையுஞ்சொல்லவல்லவர்க்கு இடரில்லையே. (௰)

மையணிந்த கண்களையுடைய யசோதை தன்மகனான கண்ணனுக்கு உகப்பானவற்றைச் சொல்லிச் சந்திரனை நோக்கிச் சொன்னதையுட்கொண்டு, பெரியாழ்வாராலே விரித்தருளிச்செய்யப்பட்ட இப் பாசுரங்கள்பத்தையும் ஏதேனுமொருபடியாக ஓதவல்லவர்களுக்குத் துன்பமொன்றுமில்லையாம்.(10)

அடிவரவு:—தன் என் சுற்றும் சக்கரம் அழகிய தண்டு பாலகன் சிறியன் தாழி மை உய்ய.

முதற்பத்து—ஐந்தாந்திருமொழி—உய்யவுலகு

[கண்ணன் தனது இரண்டு கைகளையும் முழந்தாளையு மூன்றித் தலையை நிமிர்த்துக்கொண்டு ஆடும்படி யசோதை வேண்டுகின்றமை சொல்லுகிறது]

---

64 உய்யவுலகுபடைத்துண்டமணிவயிறு ஊழிதோறூழிபலவாலினிலையதன்மேல் *
பையவுயோகுதுயில்கொண்டபரம்பரனே பங்கயநீணயனத்தஞ்சனமேனியனே *
செய்யவள்நின்னகலஞ்சேமமெனக்கருதிச் செல்வுபொலிமகரக்காதுதிகழ்ந்திலக *
ஐயவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (௧)

ஆத்மாக்கள் உஜ்ஜீவிக்க லோகங்களைப் படைத்துப் பின்பு ப்ரளயம் வந்தபோது, அவற்றை உள்ளே வைத்து ரக்ஷித்தவனே! பல கல்பங்கள்தோறும் ஆலிலையின்மேல் மெல்ல யோக நித்திரை செய்தருளினபரமனே! செந்தாமரைக் கண்ணனே! அஞ்சன வண்ணனே! கோபால புங்கவனே! பிராட்டிக் கிருப்பிடமான உன் திருமார்வு இந்த நர்த்தனத்தால் அசையாமல் பாங்காயிருக்க வேணுமென்று நினைத்துக்கொண்டு; அழகிய மகரக்குழைகளோடு கூடின காதுகள் மிகவும் விளக்கும்படி எனக்காக ஒரு விசை செங்கீரை யாடவேணும். [இரண்டு முழந்தாள்களையும் கைகளையும் ஊன்றித் தலையை நிமிர்த்தாடுதல் செங்கிரையாடுதலாம்.] (1)

65 கோளரியின்னுருவங்கொண்டவுணனுடலம் குருதிகுழம்பியெழக்கூருகிராற்குடைவாய் *
மீள்அவன்மகனைமெய்ம்மைகொளக்கருதி மேலையமரர்பதிமிக்குவெகுண்டுவர *
காளநன்மேகமவைகல்லொடுகார்பொழியக் கருதிவரைக்குடையாக்காலிகள்காப்பவனே *
ஆளவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (௨)

வலிமைகொண்ட நரஸிம்ஹமூர்த்தியாகி இரணியனுடலில் ரத்த வெள்ள மெழும்படியாகவும், அவன் தன்மகனான ப்ரஹ்லாதனை ஸத்யவாதியென்று நினைக்கும்படியாகவும் திருவுள்ளம்பற்றி; கூர்மையான நகங்களாலே அவ்வசுரனுடலைக் கிழித்தவனே! தேவேந்திரனுடைய பெருங் கோபத்தின் பலனாகக் காளமேகங்கள் மழை பொழிய, அன்புடன் கோவர்த்தனகிரியைக் குடையாகக்கொண்டு பசுக்களைக் காத்தவனே! எனக்காக ஒருகால் செங்கீரையாடவேணும். (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

66 நம்முடைநாயகனேநான்மறையின்பொருளே நாபியுள்நற்கமலநான்முகனுக்கொருகால் *
தம்மனையானவனேதரணிதலமுழுதும் தாரகையின்னுலகுந்தடவிஅதன்புறமும் *
விம்மவளர்ந்தவனேவேழமுமேழ்விடையும் விரவியவேலைதனுள்வென்றுவருமவனே *
அம்மவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேஆடுகவாடுகவே. (௩)

எங்களுக்கு நாதனே! நாலுவேதங்களுக்கும் பொருளாயிருப்பவனே! நாபிக் கமலத்திற் பிறந்த பிரமனுக்குத் தாய்போலே பரிந்து வேதங்களை மீட்டுக்கொடுத்து அருளினவனே! பூமியடங்கலும் நக்ஷத்ரலோக மடங்கலும் திருவடிகளால் ஸ்பர்சித்து அதற்கு அப்பாலும் த்ரிவிக்ரமனுய் வளர்ந்தவனே! குவலயாபீடமென்ற யானையும் ஏழுரிஷபங்களும் வந்து மேல் விழுந்த ஸமயத்திலே அவற்றை ஜயித்து வந்தவனே! எனக்காக ஒருகால் செங்கீரை ஆடுக. (3)

67 வானவர்தாம்மகிழவன்சகடமுருள வஞ்சமுலைப்பேயின்நஞ்சமுதுண்டவனே *
கானகவல்விளவின்காயுதிரக்கருதிக் கன்றதுகொண்டெறியுங்கருநிறவென்கன்றே *
தேனுகனும்முரனுந்திண்டிறல்வெந்நரகன் என்பவர்தாம்மடியச்செருவதிரச்செல்லும் *
ஆனையெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (௪)

தேவர்கள் மகிழும்படியாகவும் வலியுள்ள சகடாஸுரன் உருண்டு உருமாய்ந்து போம்படியும் செய்து வஞ்சகப்பூதனையினுடைய முலையில் விஷத்தை அமிருதம்போல் உண்டவனே! காட்டு விளாமரத்தினுடைய காய்கள் உதிரும்படி திருவுள்ளத்திற்கொண்டு கன்றான வத்ஸாஸுரனைக்கொண்டு விளவின்மேல் எறிந்த சிறுவனே! தேநுகாஸுரனும் முராஸுரனும் கொடிய நரகாசுரனும் முதலிய தீப்பப் பூண்டுகளடங்கலும் மாளும்படி கம்பீரமாகச் செல்கின்ற ஆனைபோன்ற கண்ணனே! செங்கீரை ஆடுக. (4)

68 மத்தளவுந்தயிரும்வார்குழனன்மடவார் வைத்தனநெய்களவால்வாரிவிழுங்கி * ஒருங்
கோத்தவிணைமருத முன்னியவந்தவரை ஊருகரத்தினெடுமுந்தியவெந்திறலோய் *
முத்திவிளமுறுவல்முற்றவருவதன்முன் முன்னமுகத்தணியார்மொய்குழல்களலைய *
அத்தவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (௫)

மாதர்களாலே சேமித்து வைக்கப்பட்ட தயிரையும் நெய்யையும் களவு வழியாலே கைகளால் அள்ளி வயிறார உண்டவனாய், உன்னை நலியவேணுமென்னும் நினைவுடன் இரட்டைமருதமாத்தில் வந்து நின்ற அஸுரர்களைத் துடைகளாலும் கைகளாலும் இரண்டு பக்கத்திலும் சரிந்துவிழும்படி தள்ளின பலிஷ்டனான அப்பனே! திருமுத்துக்கள் தோன்றும்படி மந்தஹாஸம் பூர்ணமாக வெளிவருவதற்கு முன்னே முன்னெற்றி மயிர்கள் தாழ்ந்து அசையும்படி எனக்காகவொருகால் செங்கீரை ஆடுக. (5)

69 காயமலர்நிறவாகருமுகில்போலுருவா கானகமாமடுவிற்காளியனுச்சியிலே *
தூயநடம்பயிலுஞ் சுந்தரவென்சிறுவா துங்கமதக்கரியின்கொம்புபறித்தவனே *
ஆயமறிந்துபொருவா னெதிர்வந்தமல்லை அந்தரமின்றியழித்தாடியதாளிணையாய் *
ஆய்வெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (௬)

காயாம்பூ நிறத்தனே! கார்மேக வண்ணனே! காட்டிலே பெரிய மடுவினுள்ளே கிடந்த காளிய நாகத்தின் தலையில் அழகிய நடனம் செய்த அழகிய சிறுவனே! குவலயாபீடமென்னும் யானையினது தந்தங்களை முறித்தவனே! மல்லயுத்தம் செய்யும் வகையறிந்து யுத்தம் செய்வதற்காக எதிர்த்துவந்த மல்லர்களை உனக்கு ஒரு அபாயமுமில்லாதபடி முடித்து கம்பீரமாய் ஸஞ்சரித்த திருவடிகளையுடையவனே! ஆயனே! எனக்காக வொருகால் செங்கீரை ஆடுக. (6)

70 துப்புடையாயர்கள்தம்சொல்வழுவாதொருகால் தூயகருங்குழனற்றேகைமயிலனைய *
நப்பினைதன்திறமாநல்விடையேழவிய நல்லதிறலுடையநாதனுமானவனே *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தப்பினபிள்ளைகளைத்தனமிகுசோதிபுகத் தனியொருதேர்கடவித்தாயொடுகூட்டிய * என்
அப்பவெனக்கொருகாலாடுகசெங்கீரை ஆயர்கள்போரேறேயாடுகவாடுகவே. (எ)

கடுநெஞ்சினரான இடையர்களின் சொல்லைத்தவறாமல், கூந்தலழகிய நப் பின்னையை மணம்புரிவதற்காக இடைபூருயிருந்த எழு எருதுகளையும் வலியடக்கின தனிவீரனே! பரமபதத்திலே செல்லும்படி தேரை நடத்தி, கைதப்பிப்போன வைதிகன் பிள்ளைகளைத் தாயோடு கூட்டின என் அப்பனே! எனக்காக வொருகால் செங்கீரை ஆடுக. (7)

71 உன்னையுமொக்கலையிற்கொண்டுதமில்மருவி உன்னொடுதங்கள்கருத்தாயினசெய்துவரும் *
கன்னியரும்மகிழக்கண்டவர்கண்குளிரக் கற்றவர்தெற்றிவரப்பெற்றவெனக்கருளி *
மன்னுகுறுங்குடியாய்வெள்ளறையாய்மதிள்சூழ் சோலைமலைக்கரசேகண்ணபுரத்தமுதே *
என்னவலங்களைவாயாடுகசெங்கீரை ஏழுலகுமுடையாயாடுகவாடுகவே. (அ)

திருக்குறுங்குடியிலும் திருவெள்ளறையிலும் வர்த்திக்குமவனே! மதிள்சூழ்ந்த திருமாலிருஞ் சோலை மலைக்கு அரசனே! திருக்கண்ணபுரத்திலே நிற்கிற அம்ருதம் போன்றவனே! என் துன் பங்களை நீக்குமவனே! ஸப்த லோகபதியே! உன்னை இடுப்பிலே எடுத்துக்கொண்டு தங்கள் அகங்களிலே சேர்ந்து உன்னோடு தங்களுடைய நினைவுக்குத் தக்கபடி பரிமாறி மறுபடியுங் கொண்டுவாரா நிற்கிற இளம்பெண்களும் ஸந்தோஷிக்கும்படியாகவும் மற்றும் பார்த்தவர்களு டைய கண்கள் குளிரும்படியாகவும் கவிசொல்லக் கற்றவர்கள் பின்னேக்கவிகள் தொடுத்து வரும்படியாகவும், உன்னை மகனாகப் பெற்ற என்மீது க்ருபை செய்து செங்கீரை ஆடுக. (8)

72 பாலொடுநெய்தயிரொண்சாந்தொடுசெண்பகமும் பங்கயநல்லகருப்பூரமுநாறிவர *
கோலநறும்பவளச்செந்துவர்வாயினிடைக் கோமளவெள்ளிமுளைப்போல்சிலபல்லிலக *
நீலநிறத்தழகாரைம்படையின்நடுவே நின்கனிவாயமுதமிற்றுமுறிந்துவிழ *
ஏலுமறைப்பொருளேயாடுகசெங்கீரை ஏழுலகுமுடையாயாடுகவாடுகவே. (கூ)

வேதத்திற்கு ஏற்ற அர்த்தமானவனே! பாலும் நெய்யும் தயிரும் அழகிய சந்தநமும் செண்பகமும் தாமரைப்பூவும் பச்சைக் கர்ப்பூரமாகிய இவை கலந்து பரிமளிக்கவும், நற்பவளம்போல் அழகிய சிவந்த அதரத்தினுள்ளே வெள்ளி முளைபோலே சில திரு முத்துக்கள் விளங்கவும் பஞ்சாயுதத்தின் நடுவே உன்னுடைய கொவ்வைக்கனி போன்ற அதரத்தில் ஊறுகின்ற அம்ருதஜலம் இற்றிற்று விழவும் செங்கீரை யாடவேணும். (9)

73 செங்கமலக்கழலிற்சிற்றிதழ்போல்விரலில் சேர்திகழாழிகளுங்கிண்கிணியும் * அரையில்
தங்கியபொன்வடமுந்தாளநன்மாதுளையின் பூவொடுபொன்மணியும்மோதிரமுங்கிறியும் *
மங்கலவைம்படையுந்தோள்வளையுங்குழையும் மகரமும்வாளிகளுஞ்சுட்டியுமொத்திலக *
எங்கள்குடிக்கரசேயாடுகசெங்கீரை ஏழுலகுமுடையாயாடுகவாடுகவே. (௧0)

எங்கள் வம்சத்துக்குத் தலைவனே! செந்தாமரைப் பூப்போன்ற திருவடிகளில் அந்தப் பூவி னுடைய உள்ளிதழ்போலே சிறுத்திருக்கிற திருவிரல்களில்சேர்ந்து விளங்காநின்ற திருவாழி மோதிரங்களும் சதங்கைகளும் அரையில் சாத்தியிருக்கிற பொன்னரைநாணும் நல்லதான மாதுளம்பூக்கோவையும் நடுநடுவே கலந்து கோத்த பொன்மணிக் கோவையும் திருக்கை மோதிரங்களும் மணிக்கட்டில் சாத்தின சிறுப்பவள வடமும் மங்களாவஹமான பஞ்சாயுதமும் திருத்தோள் வளைகளும் காதணிகளும் மகர குண்டலங்களும் திருச்செவி மடல்மேல் சாத்தின வாளிகளும் திருநெற்றிச் சுட்டியும் அமைந்து விளங்கும்படி ஏழுலகுக்கரசே! செங்கீரையாடுக. (10)

74 அன்னமுமீனுருவுமாளரியுங்குறளும் ஆமையுமானவனேயாயர்கள்நாயகனே *
என்னவலங்களைவாயாடுகசெங்கீரை யேழுலகுமுடையாயாடுகவாடுகவென்று *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அன்னநடைமடவாளசோதையுகந்தபரிசு ஆனபுகழ்ப்புதுவைப்பட்டனுரைத்ததமிழ் *
இன்னிசைமாலைகளிப்பத்தும்வல்லார் உலகிலெண்டிசையும்புகழ்மிக்கின்பமதெய்துவரே. (௧௧)

"ஹம்ஸ மத்ஸ்ய நாரஸிம்ஹ வாமந கூர்மரூபியாய் அவதரித்தவனே! இடையர் தலைவனே என் துன்பத்தை நீக்கினவனே! செங்கீரை ஆடவேணும்; ஸப்த லோகநாதனே! பலகாலுமாடவேணும்" என்று யசோதைப் பிராட்டி உகந்து சொன்ன ப்ரகாரத்தை, பெரியாழ்வார் அருளிச்செய்த இனிய இசையையுடைய தமிழ்த்தொடைகளான இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கள் இந்தலோகத்தில் எட்டுத் திசைகளிலும் பரந்த கீர்த்தியையும் மிக்க இன்பத்தையும் பெறுவர்கள்.(11)

அடிவரவு:—உய்யக் கோளரி நம்முடைவான் மத்துக்காய் துப்புன்னைப்பால் செங்கமலமன்ன மாணிக்கம்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதற்பத்து—ஆறாந்திருமொழி.

(ஒருகையோடு மற்றொருகையையுஞ் சேர்த்துக் கொட்டுதலாகிய விளையாட்டைச் செய்யும்படி கண்ணனை வேண்டுதல்.)

75 மாணிக்கக்கிண்கிணியார்ப்ப மருங்கின்மேல் * ஆணிப்பொன்னாற்செய்த ஆய்பொன்னுடைமணி *
பேணிப்பவளவாய்முத்திலங்க* பண்டு காணிகொண்டகைகளாற்சப்பாணி கருங்குழற்குட்டனேசப்பாணி.(௧)

மாற்றுயர்ந்த பொன்னால் ஆராய்ந்து செய்த பொன்மணிக் கோவையையுடைய இடுப்பின்மேலே அரைச்சதங்கை ஒலிசெய்யவும் பவழம்போன்ற வாயிலே முத்துப்போன்ற பற்கள் விளங்கவும், முன்பு பூமியை நீரேற்றுப்பெற்ற திருக்கைகளாலே விரும்பிச் சப்பாணிகொட்டியருளவேணும். (1)

76 பொன்னரைநாணொடு மாணிக்கக்கிண்கிணி * தன்னரையாடத் தனிச்சுட்டிதாழ்ந்தாட *
என்னரைமேல்நின்றிழிந்து உங்களாயர்தம் *மன்னரைமேற்கொட்டாய்சப்பாணி மாயவனேகொட்டாய்சப்பாணி.

பொன்னரைநாணோடுகூட அரைச்சதங்கையும் அரையிலே அசைந்து ஒலிக்கவும், ஒப்பற்ற சுட்டியானது திருநெற்றியில் தொங்கி அசையவும் என்னுடைய மடியிலிருந்து இறங்கிப்போய் உன்னுடைய பிதாவான நந்தகோபருடைய மடியிலிருந்துகொண்டு மாயவனே! சப்பாணி கொட்டாய். (2)

77 பன்மணிமுத்தின் பவளம்பதித்தன்ன * என்மணிவண்ணன் இலங்குபொற்றோட்டின்மேல் *
நின்மணிவாய்முத்திலங்க நின்னம்மைதன் *அம்மணிமேற்கொட்டாய்சப்பாணி ஆழியங்கையனேசப்பாணி.

என் மணிவண்ணனே! பலவகைப்பட்ட ரத்நங்களையும் முத்துக்களையும் இனிய பவழத்தையும் அழுத்திச் செய்யப்பட்ட ஸ்வர்ண குண்டலத்தின் அழகுக்கு மேலே உன்னுடைய அழகிய வாயிலே முத்துப்போன்ற பற்கள் விளங்கும்படி சிரித்துக்கொண்டு உன் தாயாகிய என்னுடைய இடையிலிருந்துகொண்டு ஆழியங்கையனான கண்ணனே! சப்பாணி கொட்டாய். (3)

78 தூநிலாமுற்றத்தே போந்துவிளையாட * வானிலாவம்புலீ சந்திராவாவென்று *
நீநிலாநின்புகழாநின்ற ஆயர்தம் * கோநிலாவக்கொட்டாய்சப்பாணி குடந்தைக்கிடந்தானேசப்பாணி. (௪)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

'ஆகாசத்திலே விளங்குகின்ற சந்திரனே! அழகிய முற்றத்திலே நான் விளையாடும்படி நீ வருவாயாக' என்று சந்திரனை அழைத்து நின்றுகொண்டு, (இருக்கின்ற நீ) உன்னைப் புகழ்கின்ற நந்தகோபர் மனம் மகிழும்படி சப்பாணிகொட்டாய்; குடக்கூத்தாடி கிடந்தவனே! சப்பாணி கொட்டாய். (4)

79 புட்டியிற்சேறும் புழுதியுங்கொண்டுவந்து * அட்டியமுக்கி அகம்புக்கறியாமே * [பாவி. (௫)
சட்டித்தயிரும் தடாவினில்வெண்ணெயுமுண் * பட்டிக்கன்றேகொட்டாய்சப்பாணி பற்பநாபாகொட்டாய்சப்

அரையிற் படிந்த சேற்றையும் புழுதி மண்ணையும் கொண்டுவந்து என்மேல் இட்டு உறைக்கப் பூசிவிட்டு வீட்டினில் புகுந்து எனக்குத் தெரியாதபடி சட்டியில் வைத்திருக்கும் தயிரையும் மிடாக்களிலிருக்கிற வெண்ணெயையும் உண்ணுகின்ற பட்டி மேய்ந்து திரியுங் கன்று போன்றவனே! சப்பாணி கொட்டாய்; பத்மநாபனே! சப்பாணி கொட்டாய். (புட்டி—அரை.) (5)

80 தாரித்துநூற்றுவர் தந்தைசொற்கொள்ளாது * போருய்த்துவந்து புகுந்தவர்மண்ணாள *
பாரித்தமன்னர்படப் பஞ்சவர்க்கு * அன்று தேருய்த்தகைகளாற்சப்பாணி தேவகிசிங்கமேசப்பாணி. (௬)

கண்ணா! ஸர்வலோக பிதாவாகிய உன் பேச்சைத் தரித்துக் கொள்ளாமல் போர் செய்ய வந்து சேர்ந்து ராஜ்யத்தைத் தாமே ஆள முயன்ற துர்யோதநாதி மன்னர்கள் மாண்டுபோகும்படி பார்த்தஸாரதியாய் நின்று தேரை ஓட்டின திருக்கைகளாலே தேவகி சிங்கமே! சப்பாணி கொட்டு.

81 பரந்திட்டுநின்றபடுகடல்தன்னை * இரந்திட்டகைம்மேல் எறிதிரைமோத *
கரந்திட்டுநின்றகடலைக்கலங்க * சரந்தொட்டகைகளாற்சப்பாணி சார்ங்கவிற்கையனேசப்பாணி. (௭)

பரவியுள்ள ஆழமான ஸமுத்ரமானது, வழிவிடுவதற்காகத் தன்னை யாசித்த கையின்மேலே அலை மோத, முகங்காட்டாமல் மறைந்து கிடந்த அக்கடலரசன் நடுங்குமாறு அம்புகளைத் தொடுத்துவிட்ட கைகளால் சார்ங்கபாணியான கோபால கிருஷ்ணனே! சப்பாணி கொட்டு. (7)

82 குரக்கினத்தாலே குரைகடல்தன்னை * நெருக்கியணைகட்டி நீணீரிலங்கை *
அரக்கரவிய அடுகணையாலே * நெருக்கியகைகளாற்சப்பாணி நேமியங்கையனேசப்பாணி. (௮)

கோஷிக்கும் கடலை இரண்டு பக்கத்திலும் தேங்கும்படி செய்து குரங்குகளின் கூட்டங்களைக்கொண்டு ஸேதுவைக்கட்டி முடித்து, கடல்சூழ்ந்த லங்கையிலுள்ள ராக்ஷஸர்களெல்லாம் அழிந்துபோம்படி கொடிய அம்புகளைக்கொண்டு நெருக்கப் போர் செய்த கைகளால் சக்கரபாணியே சப்பாணி கொட்டு.

83 அளந்திட்டதூணை அவன்தட்ட * ஆங்கே வளர்ந்திட்டு வாளுகிர்ச்சிங்கவுருவாய் *
உளந்தொட்டிரணியன் ஒண்மார்பகலம் * பிளந்திட்டகைகளாற் சப்பாணி பேய்முலையுண்டானேசப்பாணி!

இரணியன் தானே அளந்துகட்டின கம்பத்தைத் தானேபுடைக்க, புடைத்த அந்த இடத்திலேயே கூர்மையான நகங்களையுடைய நரஸிம்ஹ மூர்த்தியாய் வளர்ந்த வடிவத்துடன் தோன்றி, ஒருகால் இவ்விரணியனும் அநுகூலனாகக் கூடுமோ! என்று அவனது மனஸ்ஸைப் பரிசோதித்துப் பார்த்துப் பின்பு அவனது மார்பைப் பிளந்த கைகளால் சப்பாணி கொட்டு. பூதனையின் முலையுண்டவனே சப்பாணி கொட்டு. .... (9)

84. அடைந்திட்டமரர்கள் ஆழ்கடல்தன்னை * மிடைந்திட்டுமந்தரம் மத்தாகநாட்டி *
வடஞ்சுற்றிவாசுகிவன்கயிறாக * கடைந்திட்டகைகளாற்சப்பாணி கார்முகில்வண்ணனேசப்பாணி. (௧௦)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

துர்வாசமுனியின் சாபத்தினால் தாம் இழந்த ஐசுவரியத்தைப் பெறுதற்காகத் தேவர்கள் உன்னைச் சரணமடைய, நீ ஆழமான க்ஷீராப்தியை நெருக்கி மந்தர மலையை மத்தாக நிறுத்தி வாசுகியைக் கடைகயிறாகச் சுற்றிக் கடைந்த கைகளால் காளமேகவண்ணனே! சப்பாணி கொட்டவேணும். (10)

85 ஆட்கொள்ளத்தோன்றிய ஆயர்தங்கோவினை * நாட்கமழ்பூம்பொழில் வில்லிபுத்தூர்ப்பட்டன் *
வேட்கையாற்சொன்ன சப்பாணியீரைந்தும் * வேட்கையினாற்சொல்லுவார் வினைபோமே. (௧௧)

அனைவரையும் அடிமை கொள்ளத் திருவவதரித்த கண்ணனிடத்தில் ஆசையினால், எந்நாளும் மணம் வீசுகின்ற பூஞ்சோலைகளையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரிலவதரித்த பெரியாழ்வார் அருளிச்செய்த சப்பாணி கொட்டுதலைக் கூறிய பத்துப் பாசுரங்களையும் அன்போடு ஓதுகிறவர்களுடைய பாபங்கள் அழிந்துபோம்.

அடிவரவு:—மாணி பொன் பன் தூநிலா. புட்டி தாரித்து பரந்து குரக்கினம் அளந்து அடைந்து ஆட்கொள்ளத் தொடர். ... ... *

முதற்பத்து—ஏழாந்திருமொழி—தொடர்சங்கிலிகை

(தட்டுத்தடுமாறி நடக்குமாறு கண்ணனை வேண்டுதல்.)

86. தொடர்சங்கிலிகைசலார்பிலாரென்னத் தூங்குபொன்மணியொலிப்ப *
படுமும்மதப்புனல்சோர வாரணம்பைய நின்றூர்வதுபோல் *
உடன்கூடிக்கிண்கிணியாரவாரிப்ப உடைமணிபறைகறங்க *
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானோ. (௧)

இரும்புச்சங்கிலியின் தொடர் 'சலார் பிலார்' என்று சப்திக்கவும், தொங்குகின்ற பொன் மணிகள் ஒலிக்கவும், மூன்று வகையான மதநீர் பெருகவும் இருந்துகொண்டு யானை மெல்ல நடந்துபோவது போல, காற்சதங்கைகள் தம்மிலே தாம்கூடி சப்திக்கவும் திருவரையில் கட்டிய சிறு மணிகள் பறை போல் சப்திக்கவும் (சிறுநீர் பெருகவும்) இக்கண்ணபிரான் தன்பாதங்களினால் தளர்நடை நடக்கவேணும்.

87 செக்கரிடைநுனிக்கொம்பில்தோன்றுஞ் சிறுபிறைமுளைப்போல *
நக்கசெந்துவர்வாய்த்திண்ணைமீதே நளிர்வெண்பல்முளையிலக *
அக்குவடமுடுத்தாமைத்தாலிபூண்ட அனந்தசயனன் *
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவானோ. (௨)

செவ்வானத்திலே ஒரு கொம்பின் நுனியிலே காணப்படுகிற சிறிய பிறைச் சந்திரன்போல, சிரித்த மிகவுஞ் சிவந்த வாயாகிய மேட்டிடத்தில் குளிர்ந்த வெண்பல்லின் முளைகள் விளங்க, சங்குமணி வடத்தைத் திருவரையில் தரித்து ஆமையின் வடிவமாகச்செய்யப்பட்ட பூஷணத்தைக் கழுத்திலணிந்து கொண்ட அனந்தசயனனான நீலமணிவண்ணன் தளர்நடை நடக்கவேணும் ... ... (௨)

88 மின்னுக்கொடியுமோர்வெண்டிங்களுஞ் சூழ்பரிவேட முமாய் *
பின்னல்துலங்குமரசிலையும் பீதகச்சிற்றாடையொடும் *
மின்னிற்பொலிந்ததோர்கார்முகில்போலக் கழுத்தினிற்காறையொடும் *
தன்னிற்பொலிந்தவிருடிகேசன் தளர்நடைநடவானோ. [௩]

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொடிமின்னலும், அதனோடு சேர்ந்திருக்கும் ஒரு சந்திரனும் அவ்விரண்டையுஞ் சுற்றிக்கொண்டிருக்கும் ஊர்கோளும் போலத் திருவரையில் சாத்தின பொற்பின்னலும் விளங்குகின்ற அரசிலைபோல வேலை செய்த ஒரு திருவாபரணமும் இவ்விரண்டையுஞ் சூழ்ந்த பொன்னூலாகிய சிறிய வஸ்த்ரமும் ஆகிய இவற்றோடும், மின்னலினால் விளங்குவதாகிய ஒப்பற்ற காளமேகம்போல் கழுத்திலணிந்த காறையென்னும் ஆபரணத்தோடும் கூடி நெஞ்சைக் கவர்கின்ற கண்ணபிரான் தளர்நடை நடக்கவேண்டும். ... (3)

89 கன்னற்குடந்திறந்தாலொத்தூறிக் கணகணசிரித்துவந்து *
முன்வந்துநின்றுமுத்தந்தரும் என்முகில்வண்ணன் திருமார்வன் *
தன்னைப்பெற்றேற்குத்தன்வாயமுதந்தந்து என்னைத்தளிர்ப்பிக்கின்றான் *
தன்னெற்றுமாற்றலர்தலைகள்மீதே தளர்நடைநடவானோ. (௪)

கருப்பஞ்சாறு நிறைந்த குடம் பொள்ளல்விட்டால் அப்பொள்ளல் வழியாகச் சாறு பொசிவதைப் போன்று வாயில் நின்றும் நீர் சுரந்துவடிய, கணகணவென்று சப்தமுண்டாகும்படி சிரித்து உவப்புடன் என்முன்னே வந்து நின்று எனக்கு முத்தங்கொடுக்கும் கண்ணபிரான், தன்னைப்பெற்ற எனக்குத் தன்னுடைய அதராம்ருதத்தைக் கொடுத்து என்னை உகப்பிக்கின்றான்; இவன் தன்னோடு எதிர்க்கிற சத்ருக்களுடைய தலைகளின்மேலே அடியிட்டுத் தளர்நடை நடக்கவேணும். [தன் எற்று-தன்னையெதிர்க்கிற.(4)

90 முன்னலோர்வெள்ளிப்பெருமலைக்குட்டன் மொடுமொடுவிரைந்தோட *
பின்னைத்தொடர்ந்ததோர் கருமலைக்குட்டன் பெயர்ந்தடியிடுவதுபோல் *
பன்னியுலகம்பரவியோவாப் புகழ்ப்பலதேவனென்னும் *
தன்னம்பியோடப்பின்கூடச்செல்வான் தளர்நடைநடவானோ. (௫)

முன்னே அழகிய ஒப்பற்ற பெரிய வெள்ளிமலை பெற்ற குட்டி திடுதிடென்று வேகங்கொண்டு ஓடிக்கொண்டிருக்க, அந்தப் பிள்ளையின் பின்னே கருநிறமான மலைபெற்றதொரு குட்டி தானிருக்குமிடத்தை விட்டுப் புறப்பட்டு அடியிட்டுப்போவதுபோல, லோகமெல்லாங்கூடி ஸ்தோத்ரஞ்செய்தும் முடிவு காண முடியாத கீர்த்தியையுடைய பலராமன் என்கிற தன்னுடைய தமையன் முன்னே ஓடிக்கொண்டிருக்க, பின்னே உடன் செல்பவனான இக் கண்ணபிரான் தளர்நடை நடக்கவேணும். ... (5)

91 ஒருகாலிற்சங்கொருகாலிற்சக்கரம் உள்ளடிபொறித்தமைந்த *
இருகாலுங்கொண்டங்கங்கெழுதினாற்போல் இலச்சினைபடநடந்து *
பெருகாநின்றவின்பவெள்ளத்தின்மேல் பின்னையும்பெய்துபெய்து *
கருகார்க்கடல்வண்ணன்காமர் தாதைதளர்நடைநடவானோ. (௬)

கரியகடல்வண்ணனும் காமதேவனுக்குப் பிதாவுமான இப்பிள்ளை, ஒரு பாதத்திலே சங்கமும் மற்றொரு பாதத்தில் சக்ரமும் பாதங்களின் உட்புறத்திலே ரேகையின் வடிவத்தோடு கூடிப்பொருந்தியிருக்கப் பெற்ற இரண்டு திருவடிகளினாலும் அடிவைத்த அவ்வவ்விடங்களிலே சித்திரித்ததுபோல அடையாளமுண்டாம்படி அடிவைத்து, தனது வடிவழகைக்கண்டு பொங்குகிற ஆநந்தமாகிற ஸமுத்ரத்துக்கு மேலே பின்னும் ஆநந்தத்தை மிகுதியாக உண்டாக்கிக்கொண்டு தளர்நடை நடக்கவேணும். (6)

92 படர்பங்கயமலர்வாய்நெகிழப் பனிபடுசிறுதுளிபோல் *
இடங்கொண்டசெவ்வாயூறியூறி யிற்றிற்றுவிழநின்று *
கடுஞ்சேக்கழுத்தின்மணிக்குரல்போல் உடைமணிகணகணென *
தடந்தாளிணைகொண்டுசார்ங்கபாணி தளர்நடைநடவானோ. (௭)

பெருத்த தாமரைப்பூ மொட்டாயிராமல் வாய் திறந்து மலர, அதில் நின்றும் பெருகுகின்ற குளிர்ந்த தேன்துளியைப்போலே, பெருமை கொண்டுள்ள தனது சிவந்த வாயினின்றும் ஜலமானது இடை

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விடாமற் சுரந்து நடுவே முறிந்து முறிந்து கீழே விழும்படி நின்று, ரிஷபத்தின் கழுத்திற்கட்டின மணியினொலிபோலே தனது திருவரையிற் கட்டியமணி கணகணவென்றொலிக்கச் சார்ங்கபாணியான கண்ணன் தளர்நடை நடக்கவேணும். (7)

93 பக்கங்கருஞ்சிறுப்பாறைமீதே அருவிகள்பகர்ந்தனைய *
அக்குவடமிழிந்தேறித்தாழ அணியல்குல்புடைபெயர *
மக்களுலகிற்பெய்தறியா மணிக்குழவியுருவின் *
தக்கமாமணிவண்ணன்வாசுதேவன் தளர்நடைநடவானோ.

கறுத்த சிறுமலையின் பக்கத்திலே நீரருவிகள் பாய்வதுபோல் திருவரையிற் சாத்திய சன்னுமணி வடம் உயர்ந்தும் தாழ்ந்தும் தொங்கி ப்ரகாசிக்கவும், அழகியநிதம்பம் பக்கங்களிலே அசையவும், உலகத்திலுள்ள மனிதர் பெற்றறியாத அழகிய குழந்தை வடிவத்தையுடைய நீலமணிவண்ணனான கண்ணன் தளர்நடை நடக்கவேணும். (8)

94. வெண்புழுதிமேற்பெய்துகொண்டளைந்ததோர் வேழத்தின்கருங்கன்றுபோல் *
தெண்புழுதியாடித்திரிவிக்கிரமன் சிறுபுகர்படவியர்த்து *
ஒண்போதலர்கமலச் சிறுகாலுறைத்தொன்றும்நோவாமே *
தண்போதுகொண்டதவிசின்மீதே தளர்நடைநடவானோ. (௯)

முன்பு உலகமளந்தவனான இக்கண்ணபிரான், வெளுத்த புழுதியை மேலே போர்கட்டுக்கொண்டு அளைந்த ஒரு கரிய குட்டியானைபோல, புழுதியிலே விளையாடிச் சிறிது காந்தி உண்டாக வேர்த்துப்போய், அழகிய தாமரைப் பூப்போன்ற சிறிய பாதங்கள் ஏதேனுமொன்று தரையில் உறுத்த அதனால் சிறிதும் நோவாதபடி குளிர்ந்த புஷ்பங்களையுடைய மெத்தையின்மேலே தளர்நடை நடக்கவேணும். (9)

95. திரைநீர்ச்சந்திரமண்டலம்போல் செங்கண்மாற்கேசவன்றன் *
திருநீர்முகத்துத்துலங்குசுட்டி திகழ்ந்தெங்கும்புடைபெயர *
பெருநீர்த்திரையெழுகங்கையிலும் பெரியதோர்தீர்த்தபலந்
தருநீர்* சிறுச்சண்ணந்துள்ளஞ்சோரத் தளர்நடைநடவானோ. (௰)

இக்கண்ணபிரான் ஸமுத்ரத்தின் நடுவில் அசைந்து தோன்றுகிற ப்ரதிபிம்ப சந்த்ரமண்டலத்தைப்போல் தன்னுடைய அழகிய திருமுகத்திலே விளங்குகின்ற சுட்டி எல்லாவிடத்திலும் ப்ரகாசித்துக்கொண்டு இடமாகவும் வலமாகவும் அசையவும், சிறந்த தீர்த்தமாகிய கங்கையிற் காட்டிலும் அதிகமான தீர்த்த பலத்தைக் கொடுக்கின்ற ஜலத்தை [மூத்திரத்தை] உடைத்தான சிறிய சண்ணமானது (குண்குறி) துளி துளியாகச் சொட்டவும் தளர்நடை நடக்க வேணும்.

96. ஆயர்குலத்தினில்வந்துதோன்றிய அஞ்சனவண்ணன்றன்னை *
தாயர்மகிழவொன்னார்தளரத் தளர்நடைநடந்ததனை *
வேயர்புகழ்விட்டுசித்தன் சீரால்விரித்தனவுரைக்கவல்லார் *
மாயன்மணிவண்ணன்தாள்பணியும் மக்களைப்பெறுவர்களே. (௧௧)

இடையர் குலத்திலே வந்து அவதரித்த கண்ணன், தன்னைக் கண்டு தாய்மார்கள் மனமுகக்கவும் சத்ருக்கள் வருத்தமடையவும் தளர்நடை நடந்ததைப் பெரியாழ்வார் சிறப்பாக விவரித்துச் சொன்ன இப்பாசுரங்களைச் சொல்ல வல்லவர்கள் எம்பெருமானுடைய திருவடிகளை வணங்கவல்ல நல்ல பிள்ளைகளைப் பெறுவார்கள் (11)

அடிவரவு:—தொடர் செக்கர் மின்னுக் கன்னல் முன்னல் ஒருகால் படர் பக்கம் வெண் திரை ஆயர் பொன்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

(ஓடிவந்து அணைத்துக்கொள்ளுமாறு கண்ணனை யசோதை வேண்டுதல்)

97 பொன்னியற்கிண்கிணி சுட்டிபுறங்கட்டி *
தன்னியலோசை சலன்சலனென்றிட *
மின்னியல்மேகம் விரைந்தெதிர்வந்தாற்போல் *
என்னிடைக்கோட்டராவச்சோவச்சோ எம்பெருமான்வாராவச்சோவச்சோ.

பொன்னாற்செய்த அரைச்சதங்கை பாதச்சதங்கைகளையும் சுட்டியையும் அவ்வவற்றிற்கு உரிய இடங்களிலே அணிந்து, சதங்கைக்குப் பொருந்திய சப்தமானது சலன்சலனென்று ஒலிக்க, மின்னலோடு பொருந்திய மேகம் வேகமாக ஓடிவந்து எதிரே வந்தாற்போலே என் இடையிலிருக்க விரும்பி ஓடி வந்து என்னை யணைத்துக் கொள்ளவேணும். எங்களுடைய தலைவனே! வந்து அணைத்துக்கொள் (என்று யசோதை கூறுகிறபடி.) (1)

98 செங்கமலப்பூவில் தேனுண்ணும்வண்டேபோல் *
பங்கிகள்வந்து உன்பவளவாய்மொய்ப்ப *
சங்குவில்வாள்தண்டு சக்கரமேந்திய *
அங்கைகளாலேவந்தச்சோவச்சோ ஆரத்தழுவாவந்தச்சோவச்சோ. (௨)

செந்தாமரைப் பூவில் தேனைக் குடிப்பதற்காக மொய்க்கின்ற வண்டுகளைப்போல உனது கூந்தல் மயிர்கள் வந்து பவளம்போற் செக்கிறமான உனது வாயில் மொய்த்துக் கொள்ளும்படி ஓடிவந்து பஞ்சாயுதங்களையும் (பூவேந்துகிறாற்போல்) தரித்துக்கொண்டுள்ள அழகிய கைகளாலே அணைத்துக்கொள்; ஓடிவந்து த்ருப்தி உண்டாகும்படி நன்றாகத் தழுவி அணைத்துக்கொள்.

99 பஞ்சவர்தூதனாய்ப் பாரதங்கைசெய்து *
நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு *
அஞ்சப்பணத்தின்மேல் பாய்ந்திட்டருள்செய்த *
அஞ்சனவண்ணனேயச்சோவச்சோ ஆயர்பெருமானேயச்சோவச்சோ. (௩)

பாண்டவதூதனாய்ச்சென்று பாரதயுத்தத்தை அணிவகுத்துச் செய்தவனே! விஷத்தைக்கக்குகின்ற காளியஸர்ப்பமிருந்த கொடியமடுவிலே புகுந்து அனைவரும் பயப்படும்படி அப்பாம்பின் படத்திலே குதித்துப் பிறகு அவனுக்கு அருள் செய்த அஞ்சனவண்ணனே! கோபாலக்ருஷ்ணனே! அணைத்துக்கொள். (3)

100 நாறியசாந்தம் நமக்கிறைநல்கென்ன *
தேறியவளுந் திருவுடம்பில்பூச *
ஊறியகூனினை உள்ளேயொடுங்க * அன்
றேறவுருவினாயச்சோவச்சோ எம்பெருமான்வாராவச்சோவச்சோ. (௪)

'நல்லவாஸனையுள்ள சந்தனத்தை எங்களுக்குக்கொஞ்சம் கொடு' என்று நீ கூனியைக்கேட்க, அந்தக்கூனியும் மனம் தெளிந்து உனது திருமேனியிலே அதைச்சாத்த, வெகுகாலமாயிருக்கிற அவளுடைய கூனை அவள் சரீரத்திற்குள்ளே அடக்கும்படி நிமிர்த்த உருவினவனே! வந்து அணைத்துக்கொள். (4)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

101 கழல்மன்னர்சூழக் கதிர்போல்விளங்கி *
எழலுற்றுமீண்டே யிருந்துன்னை நோக்கும் *
சுழலைப்பெரிதுடைத் துச்சோதனனை *
அழலவிழித்தானேயச்சோவச்சோ ஆழியங்கையனேயச்சோவச்சோ. (௫)

வீரக்கழலை யணிந்த ராஜாக்கள் தன்னைச்சுற்றியிருக்க அவர்கள் நடுவில் ஸூரியன்போல ப்ரகாசமாயிருந்து 'கண்ணனுக்கு எழுந்திருத்தல் குசலப்ரச்நம் பண்ணுதல் முதலிய மரியாதை ஒன்றும் செய்யக்கூடாது' என்று கட்டளையிட்டிருந்த தானே தனக்குத் தெரியாமல் முதலில் எழுந்திருந்து மறுபடியும் தானெழுந்தது தெரியாதபடி உட்கார்ந்துகொண்டு உன்னை உற்றுப்பார்த்த மஹாவஞ்சகனான துரியோதனனை உஷ்ணமாகப்பார்த்த கண்ணனே! சக்கரபாணீ! வந்தணைத்துக்கொள். (5)

102 போரொக்கப்பண்ணி யிப்பூமிப்பொறைதீர்ப்பான் *
தேரொக்கவூர்ந்தாய் செழுந்தார்விசயற்காய் *
காரொக்குமேனிக் கரும்பெருங்கண்ணனே *
ஆரத்தழுவாவந்தச்சோவச்சோ ஆயர்கள்போரேறேயச்சோவச்சோ. (௬)

இந்தபூமிபாரத்தைத் தீர்ப்பதற்காகத் துர்யோதனாதிகளோடு ஸமமாகப் போர்செய்து, வெற்றிமாலையையுடைய அர்ஜுனனுக்காகத் தேரை நடத்தின காளமேகவண்ணா! ஆரத்தழுவி வந்தணைத்துக்கொள் (6)

103 மிக்கபெரும்புகழ் மாவலிவேள்வியில் *
தக்கதிதன்றென்று தானம்விலக்கிய *
சுக்கிரன்கண்ணைத் துரும்பால்கிளறிய *
சக்கரக்கையனேயச்சோவச்சோ சங்கமிடத்தானேயச்சோவச்சோ. (௭)

மிகுந்த கீர்த்தியையுடைய மஹாபலியின் யாகத்திலே அவன் தத்தம் பண்ணும்போது நீர்விழவொட்டாமல் தடுத்த சுக்ராசாரியனுடைய ஒருகண்ணை, கையிலணிந்திருந்த தர்ப்ப பவித்திரத்தின் நுனியால் கலக்கின சக்ரபாணீ! சங்கை இடக்கையிலேந்தியுள்ளவனே! அணைத்துக்கொள். (7)

104 என்னிதுமாயம் என்னப்பனறிந்திலன் *
முன்னையவண்ணமேகொண்டு அளவாயென்ன *
மன்னுநமுசியை வானிற்சுழற்றிய *
மின்னுமுடியனேயச்சோவச்சோ வேங்கடவாணனேயச்சோவச்சோ. (௮)

'யாசிக்கும்போதிருந்த வடிவம் மாறியளக்கிறது என்னமாயச்செய்கை!; என் தகப்பன் நீ செய்யும் இந்தமாயத்தை அறியான்; நீ யாசிக்கவந்தபோதிருந்த வடிவத்தையேகொண்டு அளப்பாயாக' என்று சொல்லிப் பிடிவாதமாய் நின்ற (மஹாபலி புத்ரனான) நமுசியை ஆகாசத்திலே சுழற்றி யெறிந்த கண்ணா! கிரீடமணிந்தவனே! திருமலையப்பனே! வந்து அணைத்துக்கொள். (8)

105 கண்டகடலும் மலையுமுலகேழும் *
முண்டத்துக்காற்றா முகில்வண்ணாவோவென்று *
இண்டைச்சடைமுடி யீசனிரக்கொள்ள *
மண்டைநிறைத்தானேயச்சோவச்சோ மார்வில்மறுவனேயச்சோவச்சோ. (௯)

'கண்ணுற்கண்ட கடல்களும் மலைகளும் லோகங்களும் (ஆகிய எல்லாவற்றையுமிட்டு நிறைக்கப் பார்த்தாலும்) என் கையிலிருக்கிற ப்ரஹ்ம கபாலத்துக்குப் போதாவாம்; மேகவண்ணனே! ஹாஹா!' என்று கூப்பிட்டுச் சிவபிரான் பிச்சையெடுக்க, அவன் கையி

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

விருந்த பரஹ்ம கபாலத்தை மார்பிலிருந்து உண்டான ரத்தத்தால் நிறையச்செய்தவனே! திருமார்பிலே ஸ்ரீவத்ஸமென்னும் மச்சத்தை யுடையவனே! அணைத்துக்கொள். ... (9)

106 துன்னியபேரிருள் சூழ்ந்துலகைமூட *
மன்னியநான்மறை முற்றுமறைந்திட *
பின்னிவ்வுலகினில் பேரிருள்நீங்க * அன்
றன்னமதானானேயச்சோவச்சோ அருமறைதந்தானேயச்சோவச்சோ. (௧௦)

நித்யஸித்தமான நால்வேதங்களும் முழுவதும் மறைந்துவிட (அதனால்) நெருங்கிய அஜ்ஞானாந்தகாரம் பரவி லோகங்களை மறைத்துக்கொள்ள; பின்பு அவ்விருள் நீங்கும்படி ஹம்ஸமாய் அவதரித்தவனே! அந்த ரூபத்தோடு அருமையான வேதங்களை உபகரித்தவனே! அணைத்துக்கொள். (10)

107 நச்சுவார்முன்னிற்கும் நாராயணன்றன்னை *
அச்சோவருகவென்று ஆய்ச்சியுரைத்தன *
மச்சணிமாடப் புதுவைக்கோன்பட்டன்சொல் *
நிச்சலும்பாடுவார் நீள்விசும்பாள்வரே. (௧௧)

பக்தர்களின் கண்முன்னே வந்து நிற்குந்தன்மையுள்ள ஸ்ரீக்ருஷ்ணனை யசோதை (அணைத்துக்கொள்ளுகையிலுண்டான விருப்பந் தோன்றும்படி) 'அச்சோ அச்சோ' என்று சொன்னவற்றைப் பெரியாழ்வார் சொன்ன இப்பத்துப்பாசுரங்களையும் பாடுமவர்கள் எட்டோதும்பரமபதத்திற்கு நிர்வாஹகராகப்பெறுவர்.

அடிவரவு:—பொன் செங்கமலம் பஞ்சவர் நாறிய சுழல் போர் மிக்க என்னிது கண்ட துன்னிய நச்சு வட்டு.

முதற்பத்து—ஒன்பதாந்திருமொழி—வட்டுநடுவே.

(கண்ணன் ஓடிவந்து முதுகில் கட்டிக்கொள்வதாக யசோதை கூறுதல்)

108 வட்டுநடுவேவளர்கின்ற * மாணிக்க
மொட்டுநுனையில் முளைக்கின்றமுத்தேபோல் *
சொட்டுச்சொட்டென்னத் துளிக்கத்துளிக்க * என்
குட்டன்வந்தென்னைப்புறம்புல்குவான் கோவிந்தனென்னைப்புறம்புல்குவான். (௧)

என்பிள்ளையான கோவிந்தன், இரண்டு நீலரத்ந வட்டுகளின் நடுவே வளரும் இந்திர நீலமயமான அரும்பினுடைய [தன் குறியினுடைய] நுனியிலே, முத்துப்போல, சொட்டுச்சொட்டென்ற ஓசை யுண்டாகும்படி பலதரம் துளிக்க [மூத்திரம் பெய்துகொண்டே] ஓடிவந்து என்னுடைய முதுகைக்கட்டிக்கொள்வான்.

109 கிண்கிணிகட்டிக் கிறிகட்டி * கையினிற்
கங்கணமிட்டுக் கழுத்தில்தொடர்கட்டி *
தங்கணத்தாலே சதிராநடந்துவந்து *
என்கண்ணனென்னைப்புறம்புல்குவான் எம்பிரானென்னைப்புறம்புல்குவான். (௨)

என்கண்ணபிரான், அரைச்சதங்கையைக் கட்டிக்கொண்டும் சிறப்புள்ள வடத்தைக் கையிலே கட்டிக்கொண்டும் தோள்வளையைச் சாத்திக்கொண்டும் திருக்கழுத்திலே

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.
acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சங்கிலியை அணிந்து கொண்டும் (இன்னு மணிந்து கொண்டுள்ள) திருவாபரணங் களின் நிரையோடுக்கூட அழகாக நடந்து வந்து என்னை முதுகிற் கட்டிக்கொள்வான். (2)

110 கத்தக்கதித்துக் கிடந்தபெருஞ்செல்வம் *
ஒத்துப்பொருந்திக்கொண்டு உண்ணாதுமண்ணாள்வான் *
கொத்துத்தலைவன் குடிகெடத்தோன்றிய *
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான் ஆயர்களேறென்புறம்புல்குவான். (௩)

மிகவும்கொழுத்து உனக்கு எனக்கென்று பிணங்கும்படி இருந்த மிகுந்த ஐச்வர்யத் தைத் தன் பந்துக்களான பாண்டவர்களோடு ஒத்து மனப்பொருந்தியிருந்து அநுபவி யாமல் பூமியைத்தானே ஆளவேணுமென்று நினைத்த துர்யோதநன் தன் குடும்பத்தோடு பாழாம்படி திருவவதரித்த ஆயர் பெருமான் வந்து என்னைப் புறம்புல்குவான். (3)

111 நாந்தகமேந்திய நம்பிசரணென்று *
தாழ்ந்ததனஞ்சயற்காகித் தரணியில் *
வேந்தர்களுட்க விசயன்மணித்திண்டேர் *
ஊர்ந்தவனென்னைப்புறம்புல்குவான் உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான். (௪)

'நந்தகம் என்னும் வாளைக் கையிலணிந்துள்ள பெரியோனே! நீ எனக்கு ரக்ஷகன்' என்று சொல்லித் தன்னை வணங்கிய அர்ஜுநனுக்குப் பக்ஷபாதியாயிருந்து இப்பூமியிலே எதிரி களான ராஜாக்கள் அஞ்சிக்கலங்கும்படி அந்த அர்ஜுநனது அழகிய வலியதேரை (ஸாரதியாயிருந்து) செலுத்திய தேவாதிதேவனான கண்ணபிரான் என்னைப்புறம்புல்குவான். (4)

112 வெண்கலப்பத்திரங் கட்டிவிளையாடி *
கண்பலசெய்த கருந்தழைக்காவின்கீழ் *
பண்பலபாடிப் பல்லாண்டிசைப்ப * பண்டு
மண்பலகொண்டான்புறம்புல்குவான் வாமனனென்னைப்புறம்புல்குவான். (௫)

முன்னொரு காலத்திலே வெண்கலத்தாற்செய்த பத்திரத்தை (அரையிற்) கட்டிக்கொண்டு விளையாடிப் பல பீலிக்கண்களைக் கொண்டு செய்யப்பட்ட பெரியகுடையாகிற சோலையின் கீழேயிருந்து (மாவலியிடத்தில் மூவடிமண்ணை இரந்துபெற்று) (அநுகூலரானவர்கள்) பலவித ராகங்களைப் பாடிக்கொண்டு மங்களாசாஸநம் செய்ய ஸகலலோகங்களையுமளந்து தன்னதாக்கிக்கொண்ட வாமனன் புறம்புல்குவான். (வெண்கலப்பத்திரம்—ஆபரணவிசேஷம்). (5)

113 சத்திரமேந்தித் தனியொருமாணியாய் *
உத்தரவேதியில் நின்றவொருவனை *
கத்திரியர்காணக் காணிமுற்றுங்கொண்ட *
பத்திராகாரன்புறம்புல்குவான் பாரளந்தானென்புறம்புல்குவான். (௬)

யாகவேதியிலிருந்த மஹாபலியினிடத்திலே குடைபிடித்துக்கொண்டு வாமநனாய்ப்போய் அவ னுக்குக் கீழ்ப்பட்ட க்ஷத்ரியர்கள் பார்த்துக்கொண்டிருக்கையில் உலகம் முழுவதையும் நீரேற்ற ளந்து தன்னதாக்கிக்கொண்ட விலக்ஷணமான வடிவுடையனான கண்ணன் புறம்புல்குவான். (6)

114 பொத்தவுரலைக்கவிழ்த்து அதன்மேலேறி *
தித்தித்தபாலும் தடாவினில்வெண்ணெயும் *
மெத்தத்திருவயிறார விழுங்கிய *
அத்தன்வந்தென்னைப்புறம்புல்குவான் ஆழியானென்னைப்புறம்புல்குவான். (௭)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அடியில் ஓட்டையானதொரு உரலைக்கொண்டுவந்து நிலைகவிழ்த்துப்போட்டு அவ்வுர
லின் மேலேறி மிடாக்களிலேயுள்ள மதுரமான பாலையும் வெண்ணெயையும் வயிறு
நிரம்ப மிகுதியாக விழுங்கின சக்கரபாணிப்பெருமான் வந்தென்னைப் புறம்புல்குவான். (7)

115 மூத்தவைகாண முதுமணற்குன்றேறி *
கூத்துவந்தாடிக் குழலாலிசைபாடி *
வாய்த்தமறையோர் வணங்க * இமையவர்
ஏத்தவந்தென்னைப்புறம்புல்குவான் எம்பிரானென்னைப்புறம்புல்குவான். (௮)

வயதுசென்ற இடைச்சனங்கள் காணும்படியாக, நெடுநாளாய்க்குவிந்து மேடாயிருந்த மணற்
குன்றின் மேலேறியிருந்து, தன்னுடைய சேஷ்டிதத்தைக் காணும்படி கிட்டின ப்ராஹ்மணர்
கள் தன்னைக்கண்டு வணங்கவும் தேவர்கள் ஸ்தோத்ரஞ்செய்யவும் வேய்ங்குழலினால் ராகம்
பாடிக்கொண்டும் உவந்து கூத்தாடியும் நின்ற எம்பிரான் வந்து என்னைப் புறம்புல்குவான். (8)

116 கற்பகக்காவு கருதியகாதலிக்கு *
இப்பொழுதீவனென்று இந்திரன்காவினில் *
நிற்பனசெய்து நிலாத்திகழ்முற்றத்துள் *
உய்த்தவனென்னைப்புறம்புல்குவான் உம்பர்கோனென்னைப்புறம்புல்குவான். (௯)

இந்திரனுடைய உத்யானவனத்திலிருந்த கற்பகச் சோலையைத் தன்வீட்டிற் கொண்டு வைக்கவேணு
மென்று விரும்பிய ஸத்யபாமைப் பிராட்டிக்கு 'இப்பொழுதே கொணர்ந்து தருவேன்' என்றுசொல்லி
அவன் வீட்டு நிலாமுற்றத்தில் கொண்டுசேர்த்த தேவாதி தேவன் என்னைப் புறம்புல்குவான். (9)

117 ஆய்ச்சியன்றாழிப்பிரான் புறம்புல்கிய *
வேய்த்தடந்தோளிசொல் விட்டுசித்தன்மகிழ்ந்து *
ஈத்ததமிழிவை யீரைந்தும்வல்லவர் *
வாய்த்தநன்மக்களைப்பெற்று மகிழ்வரே.

யசோதையானவள், கண்ணன் அக்காலத்திலே புறம்புல்குவதைக் கூறிய சொல்லை, பெரி
யாழ்வார் தாம் அநுபவித்து ஸந்தோஷித்து உலகத்தார்க்கு உபகரித்த தமிழ்ப்பாசுர
மாகிய இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கள் நல்ல புத்திரர்களைப்பெற்றுக்களிப்பர். (10)

அடிவரவு:—வட்டு கிண்கிணி கத்த நாந்தகம் வெண்கலம் சத்திரம் பொத்த மூத்தவை கற்பகம் ஆய்ச்சி மெச்சூது.

பெரியாழ்வார் திருமொழியில் முதற்பத்து முற்றிற்று

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து—முதல் திருமொழி—மெச்சூது.

(கண்ணன் பூச்சிகாட்டி விளையாடுவதை ஆய்ச்சிகள் கூறுதல்.)

118 மெச்சூதுசங்கமிடத்தான் நல்வேயூதி*
பொய்ச்சூதில்தோற்ற பொறையுடைமன்னர்க்காய் *
பத்தூர்பெறுதன்று பாரதங்கைசெய்த *
அத்தூதனப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (க)

அனைவரும் கொண்டாடும்படி ஊதுகின்ற பாஞ்சஜன்யத்தை இடக்கையில் ஏந்தியுள்ளவனும் நல்ல வேய்ங்குழலை ஊதுபவனும், க்ருத்ரிமமான சூதிலே தம்முடைய சொத்துக்களை யெல்லாம் இழந்த பொறுமை சாலிகளான பாண்டவர்கட்குத் தான் எல்லா வகைத் துணையுமாயிருந்து துர்யோதநாதிகளிடத்துத் தூது போய்க் கேட்டுப் பார்த்தும் அவர்களிடத்தினின்றும் பத்து ஊரையும் அடைய முடியாமல் பாரதயுத்தத்தை அணி வகுத்துச் செய்த கண்ணன் அம்மா! அப்பூச்சி காட்டுகின்றான். (திருவாழி திருச்சங்குகளைகாட்டினபடி.)

119 மலைபுரைதோள்மன்னவரும் மாரதரும்மற்றும் *
பலர்குலைய நூற்றுவரும்பட்டழிய * பார்த்தன்
சிலைவளையத் திண்டேர்மேல்முன்னின்ற * செங்கண்
அலவலைவந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (உ)

மலைபோன்ற தோள்களையுடைய அரசர்களான மஹாரதரும் மற்றும் பலவகை அரசர்களும் அழியவும், துர்யோதநாதிகள் நூறுபேரும் மாண்டுபோகவும், அர்ஜுனனது வில் வளையவும் அந்த அர்ஜுநன் தேரின்மேல் ஸாரதியாய் சிவந்த கண்களையுடையனும் அர்ஜுநனுடைய வெற்றியைப் புகழ்பவனுன கண்ணன் அந்தோ! அப்பூச்சி காட்டுகின்றான். (2)

120 காயுநீர்புக்குக் கடம்பேறி *காளியன்
தீயபணத்தில் சிலம்பார்க்கப்பாய்ந்தாடி. *
வேயின்குழலூதி வித்தகனாய்நின்ற *
ஆயன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (ந)

காளியனுடைய விஷாக்நியால் கொதிக்கின்ற மடுவின் ஜலத்திலே புகுந்து கலக்கி அம்மடுவின் கரையிலிருந்த கடம்ப மரத்தின்மேலேறி, அந்தக் காளியனுடைய கொடிய படத்திலே, தன் திருவடியிலணிந்து கொண்டிருந்த சிலம்பு சப்திக்கும்படி குதித்துக் கூத்தாடிக் குழலை ஊதி இப்படி விஸ்மயநீயனுயிருந்த கண்ணபிரான் அந்தோ! அப்பூச்சி காட்டுகின்றான். (3)

121 இருட்டிற்பிறந்துபோய் ஏழைவல்லாயர் *
மருட்டைத்தவிர்ப்பித்து வன்கஞ்சன்மாள *
புரட்டியந்நாளெங்கள் பூம்பட்டுக்கொண்ட *
அரட்டன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (ச)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நடுநிசியிலே மதுரையிற்பிறந்து கோகுலத்திற்கு வந்துசேர்ந்து அங்குள்ள இடையர்களின் அச்சத்தைத்தீர்த்து, வலிய கம்ஸன் முடியும்படி அவனை நிலத்திலே தள்ளிப்புரட்டினவனும், (ஆய்ச்சிகளான) எங்களுடைய சேலைகளைக் கொள்ளை கொண்ட நிம்பனுமான கண்ணன் அப்பூச்சி காட்டுகிறான்

122 சேப்பூண்ட சாடுசிதறி* திருடிநெய்க்
காப்பூண்டு நந்தன்மனைவிகடைதாம்பால் *
சோப்பூண்டுதுள்ளித் துடிக்கத்துடிக்க * அன்று
ஆப்பூண்டானப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (ரு)

எருதுகள் கட்டுதற்குரிய சகடத்தை உருக்குலையும்படி உதைத்தவனும், நெய்க்கு ஆசைப்பட்டுக் களவு செய்து அகப்பட்டுக்கொண்டு யசோதை தயிர் கடையும் தாம்பாலே அடிக்க, துள்ளி மிகவும் துடிக்கும்படி அடியுண்டு கட்டுண்டவனுமாகிய கண்ணன் அந்தோ! அப்பூச்சி காட்டுகின்றான். (5)

123 செப்பிளமென்முலைத் தேவகிநங்கைக்கு *
சொப்படத்தோன்றித் தொறுப்பாடியோம்வைத்த *
துப்பமும்பாலும் தயிரும்விழுங்கிய *
அப்பன்வந்தப்பூச்சிகாட்டுகின்றான் அம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (சு)

தேவகிப்பிராட்டிக்கு மகனாகப்பிறந்து வந்து ஆயர்பாடியிலுள்ளவர்களாகிய நாங்கள் சேமித்துவைத்த நெய்யையும் பாலையும் தயிரையும் உட்கொண்டபெருமான் அப்பூச்சி காட்டுகின்றான். (செப்பு—பொற்கலசம்.) (6)

124 தத்துக்கொண்டாள்கொலோ தானேபெற்றாள்கொலோ *
சித்தமனையாள் அசோதையிளஞ்சிங்கம் *
கொத்தார்கருங்குழல் கோபாலகோளரி *
அத்தன்வந்தப்பூச்சிகாட்டுகின்றா னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (எ)

'இந்த பிள்ளையை யசோதை தத்த புத்ரனாக வளர்த்துக் கொண்டாளோ!, அல்லது ஸ்வயமாகவே மெய் நொந்து பெற்றெடுத்தாளோ! என்னும்படி இருப்பவனும், அந்த யசோதைக்குச் சிங்கக்குட்டி போன்றவனும், பூங்கொத்துக்களை யணிந்த கூந்தலை யுடையவனுமான கோபாலன் அந்தோ! அப்பூச்சி காட்டுகின்றான்.

125 கொங்கைவன்கூனிசொற்கொண்டு * குவலயத்
துங்கக்கரியும் பரியுமிராச்சியமும் *
எங்கும்பரதற்கருளி வன்கானடை *
அங்கண்ணனப்பூச்சிகாட்டுகின்றா னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான்.

முதுகில் முலை பெரும்பினாற்போன்ற வலிய கூனை யுடையளான மந்தரையினுடைய சொற்படி, சிறந்த யானைகளையும் குதிரைகளையும் ராஜ்யத்தையும் பரதாழ்வானுக்குக் கொடுத்து விட்டுக் கொடிய காட்டை அடைந்த இராமனாகிய கண்ணன் அந்தோ! அப்பூச்சி காட்டுகிறான், (8)

126 பதகமுதலைவாய்ப் பட்டகளிறு *
கதறிக்கைகூப்பி யென்கண்ணா கண்ணாவென்ன *
உதவப்புள்ளூர்ந்து அங்குறுதுயர்தீர்த்த *
அதகன்வந்தப்பூச்சிகாட்டுகின்றா னம்மனேயப்பூச்சிகாட்டுகின்றான். (கூ)

பாதிக்குந் தன்மையையுடைய முதலையின் வாயிலே அகப்பட்ட ஸ்ரீ கஜேந்திராழ்வான் கதறிக் கைகூப்பி 'என்னுடைய கண்ணனே!' என்று பலகாலழைக்க அப்போதே அந்த யானைக்கு

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உதவும்படி பெரிய திருவடியை வாஹநமாகக் கொண்டு சென்று அந்த யானையின் மிக்க வருத்தத்தைப் போக்கின மிடுக்கன் அப்பூச்சி காட்டுகின்றான். (அதகன்—ஊதஞ்செய்தவன்.) (9)

127 வல்லாளிலங்கைமலங்கச் சரந்துரந்த *
வில்லாளனை விட்டுசித்தன் விரித்த *
சொல்லார்ந்தவப்பூச்சிப் பாடலிவைபத்தும்
வல்லார்போய் * வைகுந்தம்மன்னியிருப்பரே. (௧௦)

[illegible] இலங்கையானது பாழாம்படி அம்பைச் செலுத்திய வில்லை யேந்தி ஸ்ரீராமனாக முன்பு திருவவதரித்த கண்ணனைப்பற்றிப் பெரியாழ்வார் கூறிய சொல் நிரம்பிய அப்பூச்சி காட்டு [illegible] இப்பத்துப் பாசுரங்களையும் கற்க வல்லவர் ஸ்ரீவைகுண்டத்திலே வாழப்பெறுவர். (10)

அடிவரவு:—மெச்சு மலை காயும் இருட்டு சேப்பூண்ட செப்பு தத்துக் கொங்கை பதகம் வல்லாள் அரவணை.

இரண்டாம்பத்து—இரண்டாந் திருமொழி—அரவணையாய்

(யசோதை, கண்ணனை முலையுண்ண வழைத்தல்.)

128 அரவணையாயாயரேறே அம்மமுண்ணத்துயிலெழாயே *
இரவுமுண்ணாதுறங்கிநீபோய் இன்றுமுச்சிகொண்டதாலோ *
வரவுங்காணேன்வயிறசைந்தாய் வனமுலைகள்சோர்ந்துபாய *
திருவுடையவாய்மடுத்துத் திளைத்துதைத்துப்பருகிடாயே. (௧)

சேஷசாயியான கோபாலனே! நீ நேற்றிரவும் முலை யுண்ணாமல் உறங்கிப் போனாய்; இப்போதும் பொழுது விடிந்து உச்சிப்போதாய் விட்டது; ஆதலால் முலையுண்பதற்குத் தூக்கம் தெளிந்து படுக்கையிலிருந்து எழுந்திருக்கவேணும்; நீயே எழுந்து வருவதையும் கண்டிலேன்; வயிறும் தளர்ந்து நின்றாய்; எனது அழகிய முலைகள் பால் வடிந்து பெருகிக்கொண்டிருப்பதனால் அழகிய உன் வாயை வைத்துக் கால்களாலே உதைத்துக்கொண்டு செருக்குடன் முலை யுண்பாய். (1)
(அம்மம் — முலைப்பால்.)

129 வைத்தநெய்யுங்காய்ந்தபாலும் வடிதயிரும்நறுவெண்ணெய்யும் *
இத்தனையும்பெற்றறியேன் எம்பிரான்நீபிறந்தபின்னை *
எத்தனையுஞ்செய்யப்பெற்றாய் ஏதுஞ்செய்யேன்கதம்படாதே *
முத்தனையமுறுவல்செய்து மூக்குறிஞ்சிமுலையுணாயே. (௨)

எம்பிரானே! உருக்கிவைத்த நெய்யும் காய்ச்சிய பாலும் கட்டித்தயிரும் நறுவெண்ணெயும் ஆகிய இவற்றை நீ பிறந்த பிறகு நான் கண்டதில்லை; நீ வேண்டினபடி யெல்லாம் செய்யலாம்; அதற்காக நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்; நீ கோபியாதே, மந்த ஸ்மிதம்பண்ணி மூக்கை உறிஞ்சிக்கொண்டு முலையுண்பாயாக. (கதம்—கோபம்.) (2)

130 தந்தம்மக்களழுதுசென்றால் தாய்மாராவார்தரிக்ககில்லார் *
வந்துநின்மேற்பூசல்செய்ய வாழவல்லவாசுதேவா *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உந்தையாருன்திறத்தரல்லர் உன்னைநானொன்றுரப்பமாட்டேன் *
நந்தகோபனணிசிறுவா நான்சுரந்தமுலையுணாயே. (௩)

தங்கள் தங்களுடைய பிள்ளைகள் அழுதுகொண்டு தம்தம் வீட்டுக்குப் போனால் அக் குழந்தைகளின் தாய்மார்கள் பொறுக்கமாட்டாதவர்களாய் தம் குழந்தைகளை அழைத்துக் கொண்டு வந்து உன்மேல் பிணங்க அதைக்கண்டு மகிழவல்ல கண்ணபிரானே! உன் தகப்பனார் உன் விஷயத்தைக் கவனிப்பவரல்லர்; நானோ உன்னைச் சிறிதும் அதட்ட முடி யாதவள்; இவையெல்லாம் கிடக்க; கண்ணா! எனது பால் சுரந்திருக்கிற முலையை உண்பாயாக. (3)

131 கஞ்சன்றன்னாற்புணர்க்கப்பட்ட கள்ளச்சகடுகலக்கழிய *
பஞ்சியன்னமெல்லடியால் பாய்ந்தபோதுநொந்திடுமென்று *
அஞ்சினேன்காணமரர்கோவே ஆயர்கூட்டத்தளவன்றாலோ *
கஞ்சனையுன்வஞ்சனையால் வலைப்படுத்தாய்முலையுணாயே. (௪)

தேவர்தலைவனே! கம்ஸனாலே தூண்டப்பட்ட க்ருத்ரிம சகடம் கட்டழிந்து போம்படி பஞ்சு போல் மெல்லிய திருவடிகளினால் நீ உதைத்தபோது அத்திருவடிகளுக்கு நோவுண்டாகுமே யென்று நான் அஞ்சின அச்சம், இடையர் திரளினுடைய அச்சத்தின் அளவல்ல காண்; அந்தக் கம்ஸனை வஞ்சனையினாலே உன்கையிற் சிக்கும்படி செய்து கொன்றவனே! முலையுணாய். (4)

132 தீயபுந்திக்கஞ்சனுன்மேல் சினமுடையன்சோர்வுபார்த்து *
மாயந்தன்னால்வலைப்படுக்கில் வாழகில்லேன்வாசுதேவா *
தாயர்வாய்ச்சொல்கருமங்கண்டாய் சாற்றிச்சொன்னேன்போகவேண்டா *
ஆயர்பாடிக்கணிவிளக்கே அமர்ந்துவந்தென்முலையுணாயே. (௫)

கண்ணனே! துஷ்ட புத்தியையுடைய கம்ஸன் உன்மீது கோபங்கொண்டவனாயிரா நின்றான்; நீ தனியாயிருக்கும் ஸமயம்பார்த்து வஞ்சனையால் உன்னை அகப்படுத்திக்கொண்டால் நான் பிழைத்திருக்க மாட்டேன்; தாய்மார்களுடைய சொல் மீறத்தக்கதன்று; வற்புறுத்திச்சொல்லு கிறேன்; நீ எங்கும் போகவேண்டா; கோகுல விளக்கே! பொருந்தி மகிழ்ந்து என் முலையுண்ணாய். (5)

133 மின்னனையநுண்ணிடையார் விரிகுழல்மேல்நுழைந்தவண்டு *
இன்னிசைக்கும்வில்லிபுத்தூர் இனிதமர்ந்தாயுன்னைக்கண்டார் *
என்னநோன்புநோற்றாள்கொலோ இவனைப்பெற்றவயிறுடையாள் *
என்னும்வார்த்தையெய்துவித்த இருடிகேசாமுலையுணாயே. (௬)

மின்னல்போன்ற நுண்ணிடையையுடைய பெண்களின் கூந்தலின்மேல் தேனை உண்ணப்புகுந்த வண்டு கள் தேனையுண்டுகளித்து இனிதாகப்பாடுமிடமான ஸ்ரீவில்லிபுத்தூரிலே எழுந்தருளியிருப்பவனே!, உன்னைப்பார்த்தவர், 'இவனைப் பிள்ளையாகப் பெற்ற வயிற்றை யுடையவள் என்ன தபஸ்ஸு பண்ணி னளோ!' என்று கொண்டாடும்படியான புகழை எனக்குண்டாக்கின ஹ்ருஷீகேசனே! முலையுண்ணாய். (6)

134 பெண்டிர்வாழ்வார்நின்னொப்பாரைப் பெறுதுமென்னுமாசையாலே *
கண்டவர்கள்போக்கொழிந்தார் கண்ணிணையாற்கலக்கநோக்கி *
வண்டுலாம்பூங்குழலினார் உன்வாயமுதமுண்ணவேண்டி *
கொண்டுபோவான்வந்துநின்றார் கோவிந்தாநீமுலையுணாயே. (௭)

கண்ணா! உன்னைப் பார்த்த பெண்கள் உன்போன்ற குழந்தைகளைப் பெறவேணுமென் கிற ஆசையினாலே திகைத்து நின்றார்கள்; மற்றுஞ்சில கூந்தலழகிய மாதர்கள் உன் திரு

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மேனியைக் கண்ணாரக்கண்டு உன்னுடைய அதராம்ருதத்தைப் பானம்பண்ண ஆசை கொண்டவர்களாய் உன்னை எடுத்துக்கொண்டுபோவதற்கு வந்து நிற்கிறார்கள்; நீ முலையுணாய். (7)

135 இருமலைபோலெதிர்ந்தமல்லர் இருவரங்கமெரிசெய்தாய் * உன்
திருமலிந்துதிகழுமார்வு தேக்கவந்தென்னல்குலேறி *
ஒருமுலையைவாய்மடுத்து ஒருமுலையைநெருடிக்கொண்டு *
இருமுலையும்முறைமுறையாய் ஏங்கியேங்கியிருந்துணாயே. (அ)

இரண்டு மலைபோலே வந்து எதிர்த்துநின்ற இரண்டு மல்லர்களுடைய உடம்பை யொழித்தவனே! நீ வந்து என் மடிமீது ஏறிக்கொண்டு உன் அழகிய மார்பானது முலைப்பாலால் நிறையும்படி ஒரு முலையை வாயிலே வைத்துக்கொண்டு மற்றொரு முலையைக் கையினாலே நெருடிக்கொண்டிருந்து இப்படி இரண்டு முலையையும் மாறிமாறி எக்கியேக்கியுண்பாயாக. (8)

136 அங்கமலப்போதகத்தில் அணிகொள்முத்தஞ்சிந்தினாற்போல் *
செங்கமலமுகம்வியர்ப்பத் தீமைசெய்திம்முற்றத்தூடே *
அங்கமெல்லாம்புழுதியாக அளையவேண்டாவம்மவிம்ம *
அங்கமரர்க்கமுதளித்த அமரர்கோவேமுலையுணாயே. (௯)

தலைவனே! முற்காலத்திலே தேவர்களுக்கு அம்ருதத்தை நிரம்ப எடுத்துக்கொடுத்த தேவாதிராஜனே! அழகிய தாமரைப் பூவினுள்ளே அழகிய முத்துக்கள் சிந்தியதை ஒத்திருக்கும்படி செந்தாமரை மலர்போன்ற உனது முகமானது வியர்த்துப்போக இந்த முற்றத்திலேயே தீம்பைச் செய்துகொண்டு உடம்பெல்லாம் புழுதி படியும்படி புழுதியளையாதே; முலையுணாய். (9)

137 ஓடவோடக்கிண்கிணிகள் ஒலிக்குமோசைப்பாணியாலே *
பாடிப்பாடிவருகின்றாயைப் பற்பநாபனென்றிருந்தேன் *
ஆடியாடியசைந்தசைந்திட்டு அதனுக்கேற்றகூத்தையாடி *
ஓடியோடிப்போய்விடாதே உத்தமாநீமுலையுணாயே. (௧௦)

பதறியோடுவதனால் ஒலிக்கின்ற பாதச்சதங்கைகளினுடைய ஓசையுடன் இடைவிடாது பாடிக்கொண்டு அப்பாட்டிற்குத் தகுந்த ஆட்டத்தை வலப்புறமாகவும் இடப்புறமாகவும் அசைந்து ஆடிக்கொண்டு வருகின்ற உன்னை ஸாக்ஷாத் பகவானென்றே எண்ணியிருக்கின்றேன்; நீ ஆடிக்கொண்டே ஓடிப்போய்விடாதே முலையுணாய். (10)

138 வாரணிந்தகொங்கையாய்ச்சி மாதவாவுண்ணென்றமாற்றம் *
நீரணிந்தகுவளைவாசம் நிகழநாறும் வில்லிபுத்தூர் *
பாரணிந்ததொல்புகழான் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
சீரணிந்தசெங்கண்மால்மேல் சென்றசிந்தைபெறுவர்தாமே. (௧௧)

'மாதவனே முலை யுண்பாயாக' என்று வேண்டி யசோதை சொன்ன வார்த்தையைக் குறித்தனவான, செங்கழுநீரின் நல்லவாசனை ஒரே மாதிரியாக எப்போதும் வீசுகின்ற ஸ்ரீவில்லிபுத்தூரி லவதரித்தவரும் பெரும்புகழ் பெற்றவருமான பெரியாழ்வா ரருளிச்செய்த பாசுரங்களை ஓதவல்லவர், திருமாலிடத்தில் அன்பராவர்.
(நிகழ் நாறும்—பாடப்பிழை) (11)

அடிவரவு:—அரவணை வைத்த தந்தம் கஞ்சன் தீய மின் பெண்டிர் இருமலை அங்கமலம் ஓட வாரணி போய்;

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இரண்டாம்பத்து—மூன்றாந் திருமொழி—போய்ப்பாடு.

(அந்தாதித் தொடையாலமைந்த பன்னிருநாமப் பதிகம்)

(யசோதை கண்ணனைக் காதுகுத்த அழைத்தல்)

139 போய்ப்பாடுடையநின்தந்தையுந்தாழ்த்தான் பொருதிறற்கஞ்சன்கடியன் *
காப்பாருமில்லைகடல்வண்ணாவுன்னைத் தனியேபோயெங்குந்திரிதி *
பேய்ப்பால்முலையுண்டபித்தனே கேசவநம்பீயுன்னைக்காதுகுத்த *
ஆய்ப்பாலர்பெண்டுகளெல்லாரும்வந்தார் அடைக்காய்திருத்திநான்வைத்தேன். (க)

கடல்வண்ணனே! பேய்முலையுண்ட பித்தனே! கேசவ நம்பியே! பெருமை தங்கிய உன் தகப்பனும் வெளியே போய்த் திரும்பி வருவதற்குத் தாமதித்தான்; போர்செய்யும் திறமையுள்ள கம்ஸனோ மிகவும் க்ரூரனாயிரா நின்றான்; உன்னைப் பாதுகாப்பவரான வேறொருவரும் இங்கு இப்போது இல்லை; நீயோவென்றால் கண்டவிடங்களிலும் தனியே திரியா நின்றாய்; உனக்குக் காதுகுத்துவதற்காக இடைச்சியர்களெல்லாரும் வந்திரா நின்றார்கள்; நானும் அவர்களுக்கு அளிக்க வெற்றிலைபாக்குகளை ஆய்ந்து வைத்திருக்கின்றேன். (1)

140 வண்ணப்பவளமருங்கினிற்சாத்தி மலர்ப்பாதக்கிண்கிணியார்ப்ப *
நண்ணித்தொழுமவர்சிந்தைபிரியாத நாராயணாவிங்கேவாராய் *
எண்ணற்கரியபிரானே திரியையெரியாமேகாதுக்கிடுவன் *
கண்ணுக்குநன்றுமழகுமுடைய கனகக்கடிப்புமிவையா. (உ)

அன்பர்களுடைய மனத்தை விட்டு நீங்காத நாராயணனே! நீ அழகிய பவழ வடத்தை அரையிலே சாத்திக்கொண்டு பாதச்சதங்கை ஒலிக்கும்படி இங்கே வாராய்; உன்மேல் அன்பில்லாதவர்களுக்கு நினைப்பதற்கு அருமையான ஸ்வாமியே! நூல் திரியை எரிச்சலுண்டாகாதபடி உன் காதுகளுக்கு இடுவேன்; பின்பு நீ அணிய வேண்டியவையான மிகவும் அழகிய பொற்கடிப்பும் இவையாகும். (2)

141 வையமெல்லாம்பெறும்வார்கடல்வாழும் மகரக்குழைகொண்டுவைத்தேன் *
வெய்யவேகாதில்திரியையிடுவன் நீவேண்டியதெல்லாந்தருவன் *
உய்யவிவ்வாயர்குலத்தினில்தோன்றிய ஒண்சுடராயர்கொழுந்தே *
மையன்மைசெய்திளவாய்ச்சியருள்ளத்து மாதவனேயிங்கேவாராய். (ங)

லோகங்களெல்லாம் உஜ்ஜீவிக்கும்படி இந்த இடையர்களின் குலத்திலே வந்து பிறந்த குழந்தாய்! ஒளிமிக்க மிகவும் விலையுயர்ந்த மகரக்குழையைக் கொண்டு வந்திருக்கிறேன்; உன் காதுக்குத் தினவு உண்டாகாமலிருக்கும் பொருட்டு வெம்மையுடனிருக்கும்படி காதிலே திரியை இடுவேன்; நீ விரும்பிய பொருள்களையெல்லாம் கொடுப்பேன்; மாதவ! இடைப்பெண்கள் மனஸ்ஸிலே வ்யாமோஹத்தைச் செய்துகொண்டு இங்கே வாராய். (3)

142 வணநன்றுடையவயிரக்கடிப்பிட்டு வார்காதுதாழப்பெருக்கி *
குணநன்றுடையர்இக்கோபாலபிள்ளைகள் கோவிந்தாநீசொல்லுக்கொள்ளாய் *
இணைநன்றழகியவிக்கடிப்பிட்டால் இனியபலாப்பழந்தந்து *
சுணநன்றணிமுலையுண்ணத்தருவன்நான் சோத்தம்பிரானிங்கேவாராய். (ச)

இந்த இடைப் பிள்ளைகள் தமது நீண்ட காதைத் தோளளவுந் தொங்கும்படி பெருக்கி மிக நல்ல வயிரக்கற்கள் அழுத்திச்செய்த கடிப்பை அணிந்து கொண்டு இப்படி தமது தாய்மார்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சொல்லியபடி செய்து நல்ல குணசாலிகளாயிரா நின்றார்கள்; கோவிந்தனே! நீயோவென்றால் தாயாகிய என் சொல்லைக் கேட்கிறாயில்லை; ஒன்றோடொன்றொத்து மிகவுமழகிய இக்கடிப்பை அணிந்து கொண்டால், நான் தித்திப்பான பலாப்பழங்கள் கொடுத்து முலையையும் நீ பருகும்படி கொடுப்பேன்; ஸ்வாமியே! உனக்கு ஓர் அஞ்சலி! இங்கே வாராய். (சோத்தம்-ஸ்தோத்ரம்.) (4)

143 சோத்தம்பிரானென்றிரந்தாலுங்கொள்ளாய் சுரிகுழலாரொடுநீபோய் *
கோத்துக்குரவைபிணைந்திங்குவந்தால் குணங்கொண்டிடுவனோநம்பி *
பேர்த்தும்பெரியனவப்பந்தருவன் பிரானேதிரியிடவொட்டில் *
வேய்த்தடந்தோளார்விரும்புகருங்குழல் விட்டுவேநீயிங்கேவாராய். (ரு)

'ஸ்வாமியே! உனக்கு ஓரஞ்சலி' என்று சொல்லிக் கெஞ்சி அழைத்தாலும் நீ என் சொல் கேட்டு வருகிறதில்லை; நீ பெண்களோடு போய்க் கைகோர்த்துக் குரவைக் கூத்தாடி இங்கே வந்தால் நீ அப்படி செய்ததை உனக்குத் தகுதியானதாக நான் கொள்வனோ? திரியை உன் காதிலே இடலாம்படி நீ இசைந்தால் அடிக்கடி மிகப் பெரிய அப்பங்களைக் கொடுப்பேன்; மாதர் விரும்புகைக்கு உரிய கூந்தலையுடைய விஷ்ணுவே; நீ இங்கே வாராய். (5)

144 விண்ணெல்லாங்கேட்கவழுதிட்டாய் உன்வாயில்விரும்பியதனைநான்நோக்கி *
மண்ணெல்லாங்கண்டென்மனத்துள்ளேயஞ்சி மதுசூதனேயென்றறிந்தேன் *
புண்ணேதுமில்லையுன்காதுமறியும் பொறுத்திறைப்போதிருநம்பி *
கண்ணாவென்கார்முகிலேகடல்வண்ணா காவலனேமுலையுணாயே. (சா)

கண்ணா! மண்ணைத் தின்றதற்காக நான் உன்னை அடிக்கையில், நீ மேலுலகங்கள் முழுவதும் கேட்கும்படி அழுதாய்; நீ அப்படி அழுகையில் நான் உன் வாயிலே நீ மண் உண்டதை விரும்பிப் பார்த்தபோது அவ்வாயில் லோகங்களையெல்லாம் பார்த்து என் மனஸ்ஸினுள்ளே பயப்பட்டு 'இவன் மதுஸூதனனே யாவ'னென்று தெரிந்து கொண்டேன்; உன்னுடைய காதிலே புண் ஒன்றுமில்லை; கடிப்பிடும்போது காது சிறிது மடங்கும்; அதை மாத்திரம் க்ஷணகாலம் பொறுத்துக்கொண்டிருந்து முலையுண்பாயாக.(6)

145 முலையேதும்வேண்டேனென்றோடி நின்காதிற்கடிப்பைப்பறித்தெறிந்திட்டு *
மலையையெடுத்துமகிழ்ந்துகன்மாரிகாத்துப் பசுநிரைமேய்த்தாய் *
சிலையொன்றிறுத்தாய்திரிவிக்கிரமா திருவாயர்பாடிப்பிரானே *
தலைநிலாப்போதேயுன்காதைப்பெருக்காதே விட்டிட்டேன்குற்றமேயன்றே. (எ)

'முலையும் வேறு எதுவும் வேண்டா' என்று சொல்லி ஓடிப்போய், உன் காதிலிட்டிருந்த காதணியைப் பிடுங்கி யெறிந்துவிட்டுக் கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துத் தூக்கிக் கல் மழையில் நின்றும் ரக்ஷித்துப் பசுக்கூட்டங்களை மேய்த்தவனே! ஸீதையை மணம்புரிவதற்காக ஒருவில்லைமுறித்தவனே! த்ரிவிக்ரமனே! திருவாய்ப்பாடிக்கு உபகாரகனே! தலைநிற்காமலிருக்கிற இளங்குழந்தைப்பருவத்திலேயே உன் காதைத்திரியிட்டுப்பெருக்காமல் விட்டுவைத்தேன்; அப்படி விட்டுவைத்தது என்னுடைய அபராதமன்றோ? (உன்மேல்வருந்திப் பயனென்?) (7)

146 என்குற்றமேயென்றுசொல்லவும் வேண்டாகாண் என்னைநான் மண்ணுண்டேனாக *
அன்புற்றுநோக்கியடித்தும்பிடித்தும் அனைவர்க்கும் காட்டிற்றிலையே *
வன்புற்றரவின்பகைக்கொடி வாமனநம்பியுன்காதுகள்தூரும் *
துன்புற்றனவெல்லாந்தீர்ப்பாய்பிரானே திரியிட்டுச்சொல்லுகேன் மெய்யே. (அ)

தாயே! நான் இப்போது உன் சொல்லைக் கேளாமலிருப்பதை என்னுடைய குற்றமேயாக நீ சொல்லிவருந்த வேண்டா; ஏனெனில்; நான் மண்ணுண்டதாகச் சொல்லி மண் தின்னுத என்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

லைப் பிடித்துக்கொண்டு அன்புடையவள்போல என் வாயைப்பார்த்து என்னை அடித்து எல்லார்க்கும் நீ காட்டினதில்லையோ? என்று கண்ணன் சொல்ல, அதற்கு யசோதை-கருடத்வஜனான வாமநமூர்த்தியே! ஸ்ரீதரனே! இப்படி நீ ஒன்று சொல்ல நானொன்று சொல்லுவதாகப் போது போக்கிக் கொண்டிருந்தால் உன்னுடைய குத்தின காதுகள் தூர்ந்துவிடும்; உன் காதில் திரியை யிட்டு, உன்னை யடிக்கமாட்டேனென்று நீ நம்பும்படியான சபதத்தைச் சொல்லுவேன் என்கிறாள்.

147 மெய்யென்றுசொல்லுவார்சொல்லைக்கருதித் தொடுப்புண்டாய்வெண்ணெயையென்று *
கையைப்பிடித்துக்கரையுரலோடென்னைக் காணவேகட்டிற்றிலையே *
செய்தனசொல்லிச்சிரித்தங்கிருக்கில் சிரீதராவுன்காதுதூரும் *
கையில்திரியையிடுகிடாய் இந்நின்றகாரிகையார்சிரியாமே. (௯)

சொன்னார் சொன்ன பேச்சுக்களையெல்லாம் நீ மெய்யென்றெண்ணி 'வெண்ணெயைத் திருடி புண்டாய்' என்று என்மீது பழிசுமத்தி என் கையைப் பிடித்து உரலில் என்னை நீ பலருங் காணக் கட்டவில்லையா? என்று கண்ணன் யசோதைமேல் குற்றஞ்சாட்டிச் சிரித்திருக்க; அதற்கு யசோதை சொல்லுகிறாள், ஸ்ரீதரனே! நான் முன்பு செய்தவற்றைச் சொல்லிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் பொழுது போக்கிக்கொண்டிருந்தால் உன் காதுகள் தூர்ந்துவிடும்; உன் முன்னே நிற்கிற இந்தப் பெண்கள் சிரியாதபடி என் கையிலுள்ள திரியை இட்டுக்கொள்வாயாக.

148 காரிகையார்க்குமுனக்குமிழுக்குற்றென் ? காதுகள்வீங்கியெறியில் *
தாரியாதாகில்தலைநொந்திடுமென்று விட்டிட்டேன்குற்றமேயன்றே *
சேரியிற்பிள்ளைகளெல்லாருங்காதுபெருக்கித் திரியவுங்காண்டி *
ஏர்விடைசெற்றிளங்கன்றெறிந்திட்ட இருடீகேசாவென்றன்கண்ணே. (௰)

என் காதுகள் வீங்கி எரிச்சலெடுத்தால்; பெண்களுக்கும் உனக்கும் சேதம் ஏதேனுமுண்டோ? என்று கண்ணன் சொல்ல, யசோதை சொல்லுகிறாள்; நீ இன்னும் இளம்பருவத்திலிருந்தபோது 'திரியை இடுவது பொறாமற் போய்க் குழந்தைக்குத் தலைநோய் உண்டாய் விடுமே' யென்று நினைத்து முன்னமே காது தத்தாமல் இருந்துவிட்டேன்; அன்பினால் அப்படி விட்டிருந்தது என்னுடைய குற்றமேயாமல்லவா? ரிஷபத்தின் வடிவுகொண்டு வந்த அரிஷ்டாஸுரனை யழித்து, சிறிய கன்றின் வடிவாய்வந்த வத்ஸாஸுரனைக் குணிலாகக்கொண்டு விளாமரத்தின்மேல் வீசிய ஹ்ருஷீகேசனே! எனக்குக் கண்போன்றவனே! இவ்விடைச்சேரியில் எல்லாப் பிள்ளைகளும் காதைப் பெருக்கிக்கொண்டு திரியாநிற்பதையும் நீ காணுகின்றாயன்றோ! என்று. (10)

149 கண்ணைக்குளிரக்கலந்தெங்குநோக்கிக் கடிகமழ்பூங்குழலார்கள் *
எண்ணத்துளென்றுமிருந்துதித்திக்கும் பெருமானேயெங்களமுதே *
உண்ணக்கனிகள்தருவன் கடிப்பொன்றும்நோவாமேகாதுக்கிடுவன் *
பண்ணைக்கிழியச்சகடமுதைத்திட்ட பற்பநாபாவிங்கேவாராய். (௧௧)

மனங்குளிரும்படி உன் கண்ணை இடைப் பெண்களுடைய கண்களோடு சேர்த்து, அவர்களுடைய வடிவம் முழுவதும் பார்த்து, அப்பெண்களினுடைய மனஸினுள்ளே எப்போதுமிருந்துகொண்டு ரஸிக்கின்ற பெருமானே! எங்கள் அமுதமே! நீ தின்பதற்குரிய பழங்களைக் கொடுப்பேன்; காதணியைச் சிறிதும் நோவாதபடி உன் காதிலே இடுவேன்; சகடத்தைக் கட்டுக்குலையும்படி உதைத்தருளின பத்மநாபனே! இங்கே வாராய். ... (11)

150 வாவென்றுசொல்லியென்கையைப்பிடித்து வலியவேகாதிற்கடிப்பை *
நோவத்திரிக்கிலுனக்கிங்கிழுக்குற்றென் காதுகள்நொந்திடுங்கில்லேன் *
நாவற்பழங்கொண்டுவைத்தேன் இவைகாணாய்நம்பீ * முன்வஞ்சமகளைச்
சாவப்பாலுண்டுசகடிறப்பாய்ந்திட்ட தாமோதராவிங்கேவாராய். (௧௨)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

'வாவென்றழைத்த என்னைப் பிடித்துக்கொண்டு என் காது கோம்பி பலாத்காரமாகக் கடிப்பு இடுவதனால் உனக்கு என்ன சேதம்? என் காதுகளல்லவோ நோவெடுக்கும்; அதைப் பொறுக்கவல்லேனல்லேன்' என்று கண்ணன் மறுத்துச்சொல்ல; யசோதை சொல்லுகிறாள் - கண்ணா! நாவற் பழங்கள் கொண்டு வைத்திருக்கிறேன்; இவற்றைப்பார்: முன்பு பூதனையை முடித்துச் சகடத்தை முறித்த தாமோதரனே! இங்குவா, (பா-இவையாணாய்). (12)

151 வார்காதுதாழப்பெருக்கியமைத்து மகரக்குழையிடவேண்டி *
சீராலசோதைதிருமாலைச்சொன்னசொல் சிந்தையுள்நின்றுதிகழ *
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன் பன்னிருநாமத்தாற்சொன்ன *
ஆராதவந்தாதிபன்னிரண்டும்வல்லார் அச்சுதனுக்கடியாரே. (௧௩)

காதுகளைத் தாழப் பெருக்கி மகரகுண்டலங்களை இடவிரும்பிய யசோதை கண்ணனைச் சிறப்புற அழைத்த சொற்கள் தம்முடைய உள்ளத்தில் நிலை நின்று விளங்க, அச்சொற்களைப் பெரியாழ்வார் த்வாதச நாமங்களோடுஞ் சேர்த்துச் சொல்லி யழைத்த பரம போக்யமான அந்தாதித் தொடையினாலாகிய பன்னிரண்டு பாட்டுக்களையும் ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு அடிமை செய்யப்பெறுவர்.

(வார்காது – நீண்டகாது.) (13)

அடிவரவு :—போய் வண்ணம் வையம் வணம் சோத்தம் விண் முலை என் மெய் காரிகை கண்ணை, வாவென்று வார்காது வெண்ணெய்

இரண்டாம்பத்து—நான்காந்திருமொழி—வெண்ணெயளைந்த

(கண்ணனை நீராடவருமாறு யசோதை அழைத்தல்)

152 வெண்ணெயளைந்தகுணுங்கும் விளையாடுபுழுதியுங்கொண்டு *
திண்ணெனவிவ்விராவுன்னைத் தேய்த்துக்கிடக்கநானொட்டேன் *
எண்ணெய்புளிப்பழங்கொண்டு இங்கெத்தனைபோதுமிருந்தேன் *
நண்ணலரியபிரானே நாரணநீராடவாராய். (௧)

கிட்டுதற்கரிய நாராயணனான கண்ணனே! வெண்ணெயளைந்ததனாலான மொச்சை நாற்றத்தையும், விளையாடுவதினாற்படிந்த புழுதியையும் உடம்பிற் கொண்டிருந்த அதனால், இன்றை யிரவில் உடம்பைப் படுக்கையிலே தேய்த்துக்கொண்டு படுத்திருக்கும்படி விட உன்னை நிச்சயமாக நான் ஸம்மதிக்க மாட்டேன்; தேய்த்துக்கொள்வதற்கு வேண்டிய எண்ணெயையும் புளிப்பழத்தையும் வித்தமாக வைத்துக்கொண்டு இங்கே வெகுகாலமாக உன்வரவை யெதிர் பார்த்திருக்கின்றேன்; நீராட வருவாயாக.

153 கன்றுகளோடச்செவியில் கட்டெறும்புபிடித்திட்டால் *
தென்றிக்கெடுமாகில் வெண்ணெய்திரட்டிவிழுங்குமாகாண்பன் *
நின்றமராமரஞ்சாய்த்தாய்! நீபிறந்ததிருவோணம் *
இன்றுநீநீராடவேண்டும் எம்பிரானோடாதேவாராய். (௨)

ஸ்ரீராமாவதாரத்தில் ஸப்தஸால வ்ருக்ஷங்களை ஊடுருவ அம்பெய்து சாய்த்தவனே! பசுவின் கன்றுகள் வெருண்டோடும்படி அக்கன்றுகளின் காதில் கட்டெறும்பைப் பிடித்துவிட்டால் அதனால் அக்கன்றுகள் வெருண்டு சிதறிப்போய்விடில் பின்பு நீ,

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வெண்ணெய் திரட்டி விழுங்க முடியுமோ ? (முடியாதாதலால் அத்தகைய தீம்பு
செய்யாதே.) இன்று நீ அவதரித்த ச்ரவண நக்ஷத்ரமாதலால் நீராடுவதற்கு ஓடாமல் வா. (2)

154 பேய்ச்சிமுலையுண்ணக்கண்டு பின்னையும்நில்லாதென்னெஞ்சம் *
ஆய்ச்சியரெல்லாருங்கூடி அழைக்கவும்நான்முலைதந்தேன் *
காய்ச்சினநீரொடுநெல்லி கடாரத்திற்பூரித்துவைத்தேன் *
வாய்த்தபுகழ்மணிவண்ணா மஞ்சனமாடநீவாராய். (௩)

புகழ்படைத்த கண்ணா! பூதனையின் முலையை நீ உண்டதைப் பார்த்தும் என் அறிவி
ஓடாமல் என்மனம் கேளாமல், இடைச்சிகளெல்லாரும் ஒன்று கூடிக் கூப்பாடு போட்டுத்
தடுத்தபோதிலும் உனக்கு நான் முலை கொடுத்தேன் ; (இந்த அன்பை நீ மறக்கலாகாது.)
நெல்லியையிட்டுக் காய்ச்சின வெந்நீரைச்சருவத்தில் நிறைத்து வைத்திருக்கிறேன்; நீராடவா. (3)

155 கஞ்சன்புணர்ப்பினில்வந்த கடியசகடமுதைத்து *
வஞ்சகப்பேய்மகள்துஞ்ச வாய்முலைவைத்தபிரானே *
மஞ்சளுஞ்செங்கழுநீரின் வாசிகையும்நாறுசாந்தும் *
அஞ்சனமுங்கொண்டுவைத்தேன் அழகனேநீராடவாராய். (௪)

கம்ஸனுடைய ஏவலால்வந்த கொடிய சகடாசுரனையுதைத்து முறித்தவனே! பூதனையை
முலையுண்டு முடித்தவனே! உன்மேனி நிறம்பெறும்படி சாத்துவதற்கு உரிய மஞ்சளையும்,
நீராடிய பிறகு சாத்திக்கொள்ள வேண்டிய செங்கழுநீர் மாலையையும் பரிமளமான சந்த
னத்தையும் கண்களிலிடும் மையையும் கொண்டு வைத்திருக்கிறேன்; அழகனே! நீராட வாராய். (4)

156 அப்பங்கலந்தசிற்றுண்டி அக்காரம்பாலிற்கலந்து *
சொப்படநான்சுட்டுவைத்தேன் தின்னலுறுதியேல்நம்பி *
செப்பிளமென்முலையார்கள் சிறுபுறம்பேசிச்சிரிப்பர் *
சொப்படநீராடவேண்டும் சோத்தம்பிரானிங்கேவாராய். (௫)

கண்ணா! நீ நீராடாதிருந்தால் இளம் பெண்கள் உன்மேல் பழிப்புகள் கூறிப் பரிஹஸிப்பர்
கள்; பாலிலே வெல்லக்கட்டியைச் சேர்த்துப்பிசைந்து அப்பத்தையும் சிற்றுண்டியையும் நன்
றாக நான் சுட்டு வைத்திருக்கிறேன்; நீ அவற்றைத் தின்ன விரும்பினாயாகில் நன்றாக நீராட
வேண்டும்; ஸ்வாமியே! உனக்கு அஞ்ஜலி; இங்கே வாராய். (சொப்பட - நன்றாக.) (5)

157 எண்ணெய்க்குடத்தையுருட்டி இளம்பிள்ளைகிள்ளியெழுப்பி *
கண்ணைப்புரட்டிவிழித்துக் கழைகண்டுசெய்யும்பிரானே *
உண்ணக்கனிகள்தருவன் ஒலிகடலோதநீர்போலே *
வண்ணமழகியநம்பி மஞ்சனமாடநீவாராய். (௬)

எண்ணெய்க் குடத்தை புருட்டியும், உறங்குகிற சிறு குழந்தைகளை வெடுக்கெனக்கிள்ளி
எழுந்திருக்கச் செய்து கண்ணிமையைத் தலைகீழாக மாற்றி அப்பூச்சி காட்டி விழித்தும் இப்
படி பொறுக்க முடியாத தீம்புகளைச் செய்து வருகிற கண்ணா! நல்ல பழங்களை உனக்கு உண்
ணக்கொடுப்பேன்; கடல் வண்ணா! மஞ்சனமாட நீ வாராய். (கழைகன்று—தீம்பு.) (6)

158 கறந்தநற்பாலுந்தயிரும் கடைந்துறிமேல்வைத்தவெண்ணெய் *
பிறந்ததுவேமுதலாகப் பெற்றறியேனெம்பிரானே *
சிறந்தநற்றாயலர்தூற்றும் என்பதனால்பிறர்முன்னே *
மறந்துமுரையாடமாட்டேன் மஞ்சனமாடநீவாராய். (௭)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

எம்பிரானே!; கறந்த நல்ல பாலையும் தயிரையும் வெண்ணெயையும், நீ பிறந்த நாள் முதல் கண்டறியேன்! 'பெற்றதாயே பழி சொல்லுகின்றளே!' என்று பிறர் சொல்லுவார்களே என்ற அச்சத்தினுல் அயலா ரெதிரில் ப்ராமாணிகமாகவும் உனக்குக் குறைவைத் தருஞ் சொல்லை நான் சொல்லமாட்டேன்; மஞ்சனமாட நீ வாராய். (7)

159 கன்றினைவாலோலைகட்டிக் கனிகளுதிரவெறிந்து *
பின்தொடர்ந்தோடியோர்பாம்பைப் பிடித்துக்கொண்டாட்டினுய்போலும் *
நின்திறத்தேனல்லேன்நம்பி நீபிறந்ததிருநன்னுள் *
நன்றுநீநீராடவேண்டும் நாரணுவோடாதேவாராய். (௮)

கன்றின் வாலிலே ஓலையைக்கட்டி விளாம்பழங்கள் உதிரும்படி வீசிவிட்டுப் பின்பு ஓடிப் போய்க் காளியனென்ற ஸர்ப்பத்தைப் பிடித்துக்கொண்டு ஆட்டினுயாமே; கண்ணு! நான் உன் விஷயமொன்றையு மறியாதவளா யிராநின்றேன்; அதுகிடக்கட்டும்; இன்று நீ அவதரித்த திருநக்ஷத்திரமாதலால் நீ நன்று நீராடவேண்டும்; நாரணு! ஓடாதே வா. (8)

160 பூணித்தொழுவினிற்புக்குப் புழுதியளைந்தபொன்மேனி *
காணப்பெரிதுமுகப்பன் ஆகிலுங்கண்டார்பழிப்பர் *
நாணெத்தனையுமிலாதாய் நப்பின்னைகாணிற்சிரிக்கும் *
மாணிக்கமேயென்மணியே மஞ்சனமாடநீவாராய். (௯)

பசுக்கள் கட்டிய கொட்டகையிலே நுழைந்து புழுதி மண்ணிலளைந்து மாசுபடிந்த உன்னுடம்பைக் காண நான் மிகவும் விரும்புவேன்; ஆனுலும் உன்னைப் பார்ப்பவர்கள் 'இவள் பிள்ளை வளர்ப்பது அழகாயிருக்கின்றது!' என்று என்னை ஏசுவார்கள்; அன்றியும், சிறிதும் லஜ்ஜை யில்லாதவனே! நீ இப்படியிருப்பதை நப்பின்னை கண்டால் சிரிப்பாள் ; என் மாணிக்கமே! என் மணியே! மஞ்சனமாட நீ வாராய். (பூணி — பசு.) (9)

161 கார்மலிமேனிநிறத்துக் கண்ணபிரானையுகந்து *
வார்மலிகொங்கையசோதை மஞ்சனமாட்டியவாற்றை *
பார்மலிதொல்புதுவைக்கோன் பட்டர்பிரான்சொன்னபாடல் *
சீர்மலிசெந்தமிழ்வல்லார் தீவினையாதுமிலரே. (௧௦)

காளமேகத்திற்காட்டிலும் சிறந்த மேனி நிறமுடைய கண்ணபிரானை விரும்பி யசோதை நீராட்டின ப்ரகாரத்தை யுட்கொண்டு பெரியாழ்வார் அருளிச்செய்த சிறந்த இப்பாசுரங்களை ஓதவல்லவர்கள் சிறிதும் பாவமில்லாதவராவர். (வார்மலி - கச்சுக்கு அடங்காத.) (10)

அடிவரவு :—வெண்ணெய் கன்று பேய்ச்சி கஞ்சன் அப்பம் எண்ணெய் கறந்த கன்றினை பூணி கார் பின்னை.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இரண்டாம்பத்து—ஐந்தாந்திருமொழி—பின்னைமணாளனை

(கண்ணனுக்குக் குழல்வாருதல்)

162 பின்னைமணாளனைப் பேரிற்கிடந்தானை *
முன்னையமரர் முதல்தனிவித்தினை *
என்னையுமெங்கள் குடிமுழுதாட்கொண்ட *
மன்னனைவந்துகுழல்வாராயக்காக்காய் மாதவன்றன்குழல்வாராயக்காக்காய். (க)

காக்கையே! நப்பின்னைப் பிராட்டிக்கு நாயகனும் திருப்பேர் நகரிலே பள்ளிகொண்டிருப்பவனும் நித்யஸூரிகளுக்குத் தலைவனும் ஸகலகாரண பூதனும் என்னையும் எங்களுடைய குடியிலுள்ள எல்லாரையும் அடிமை கொண்ட தலைவனுமாகிய கண்ணனுக்கு நீ வந்து கூந்தல் வாரவேணும். (காக்கையை விளித்துக்கொண்டே குழந்தைகளுக்குக் குழல்வாரிமுடித்தல் உலகவியல்பு.)

163 பேயின்முலையுண்ட பிள்ளையிவன்முன்னம் *
மாயச்சகடும் மருதுமிறுத்தவன் *
காயாமலர்வண்ணன் கண்ணன்கருங்குழல் *
தூய்தாகவந்துகுழல்வாராயக்காக்காய் தூமணிவண்ணன்குழல்வாராயக்காக்காய். (உ)

அக்காக்காய்!; இப்பிள்ளை முன்பு பூதனையின் முலையையுண்ட பிள்ளைகாண்; அன்றியும், வஞ்சனையுள்ள சகடத்தையும் யமளார்ஜுநங்களையும் முறித்தவன்; காயாம்பூப்போன்ற நிறமுடைய இக்கண்ணனுடைய கரியகூந்தலை நீ வந்து நன்றாக வாருவாயாக; பழிப்பற்ற நீலமணிபோன்ற நிறத்தையுடைய இக்கண்ணபிரானுக்குக் குழல் வாராய். (2)

164 திண்ணக்கலத்துத் திரையுறிமேல்வைத்த *
வெண்ணெய்விழுங்கி விரையவுறங்கிடும் *
அண்ணலமரர் பெருமானையாயர்தம் *
கண்ணனைவந்துகுழல்வாராயக்காக்காய் கார்முகில்வண்ணன்குழல்வாராயக்காக்காய். (ங)

அக்காக்காய்!; பின்னின உறிமேல்வைத்த பாத்திரத்திலுள்ள வெண்ணெயை யுட்கொண்டு விரைவாக ஓடிவந்து பொய்யுறக்க முறங்குகின்ற பெரியோனுக்குக் குழல் வாராய். (பா-விரையனுறங்கிடும்.) (3)

165 பள்ளத்தில்மேயும் பறவையுருக்கொண்டு *
கள்ளவசுரன் வருவானைத்தான்கண்டு *
புள்ளிதுவென்று பொதுக்கோவாய்கீண்டிட்ட *
பிள்ளையைவந்துகுழல்வாராயக்காக்காய் பேய்முலையுண்டான்குழல்வாராயக்காக்காய். (ச)

அக்காக்காய்! நீர்த்தாழ்வுகளிலே இரை யெடுத்துத் திரிகின்ற கொக்கு ரூபத்தை யேறிட்டுக் கொண்டு வந்த பகாஸுரனைத் தான்பார்த்து அவனை இதுவொரு பக்ஷியேயென்று ஸாமாந்ய மாக நினைத்து விரைவாக வாயைக் கிழித்துப்போட்ட பிள்ளையை வந்து குழல்வாரவேணும்.
(போதுக்கோ - சீக்கிரம்.)

166 கற்றினம்மேய்த்துக் கனிக்கொருகன்றினை *
பற்றியெறிந்த பரமன்திருமுடி *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உற்றனபேசி நீயோடித்திரியாதே *
அற்றைக்கும்வந்துகுழல்வாராயக்காக்காய் ஆழியான்றன்குழல்வாராயக்காக்காய். (௬)

அக்காக்காய்!; நீ உன் ஜாதிக்குத் தகுந்தவற்றைச் சொல்லிக்கொண்டு அங்குமிங்கும் பறந்து திரியாமல், கன்றுகளின் கூட்டத்தை மேய்த்துவந்து அஸுராவிஷ்டமான கன்றொன்றைப் பிடித்து விளாம்பழத்தை உதிர்ப்பதற்காக வீசின கண்ணனுடைய அழகிய தலைமுடியை நாடோறும்வந்து வாரவேணும்.

(அற்றைக்கும் - அன்றன்றைக்கும்.) (5)

167 கிறக்கிற்குடிமன்னர் கேடிலாதாரை *
அழிப்பான்நினைந்திட்டு அவ்வாழியதனால் *
விழிக்குமளவிலே வேரறுத்தானை *
குழற்கனியாகக்குழல்வாராயக்காக்காய் கோவிந்தன்றன்குழல்வாராயக்காக்காய். (௬)

அக்காக்காய்! வரபலமும் புஜபலமுமிருப்பதால் நமக்கு அழிவில்லை யென்று நினைத்திருந்தவரான கிழக்குத்திக்கிலுள்ள பட்டணத்திற் குடியிருந்த நாகாஸுரன் முதலிய மன்னரை அழிக்க நினைத்துச் சக்ராயுதத்தால், கண்மூடித் திறக்கின்ற காலத்திற்குள் ஸமூலமாக அழித்தவனுடைய கூந்தலுக்கு அழகு உண்டாம்படி வாரவேணும். (கிழக்கிற்குடி - ப்ராக்ஜோதிஷபுரம்.)

168. பிண்டத்திரளையும் பேய்க்கிட்டநீர்ச்சோறும் *
உண்டற்குவேண்டி நீயோடித்திரியாதே *
அண்டத்தமரர் பெருமானழகமர் *
வண்டொத்திருண்டகுழல்வாராயக்காக்காய் மாயவன்றன்குழல்வாராயக்காக்காய். (௭)

அக்காக்காய்!; பித்ருக்களை யுத்தேசித்து இடும் பிண்ட வுருண்டையையும் பிசாசங்களுக்குப் போட்ட நீர்ச்சோற்றையும் உண்ணுதற்கு விரும்பி நீ பறந்தோடித் திரிய வேண்டா; தேவாதிதேவனாகிய இக்கண்ணனுடைய அழகிய கருங்குழலை வாரவேணும். (7)

169. உந்தியெழுந்த உருவமலர்தன்னில் *
சந்தச்சதுமுகன்றன்னைப் படைத்தவன் *
கொந்தக்குழலைக் குறந்துபுளியட்டி *
தந்தத்தின்சீப்பால்குழல்வாராயக்காக்காய் தாமோதரன்றன்குழல்வாராயக்காக்காய். (௮)

அக்காக்காய்!; தனது திருநாபியிலே உண்டான அழகிய தாமரைப்பூவிலே நான்முகனைப் படைத்த இவனுடைய நெறித்த கூந்தலைத் தந்தச்சீப்பாலே சிக்குவிடுத்து வாருவாயாக.

[புளிஅட்டி-புளிரஸமிட்டு] (பா. புழுகட்டி; புனுகு எண்ணெயிட்டு.) (8)

170 மன்னன்றன்தேவிமார் கண்டுமகிழ்வெய்த *
முன்னிவ்வுலகினை முற்றுமளந்தவன் *
பொன்னின்முடியினைப் பூவணைமேல்வைத்து *
பின்னேயிருந்துகுழல்வாராயக்காக்காய் பேராயிரத்தான்குழல்வாராயக்காக்காய். (௯)

அக்காக்காய்!; வாமநாவதார காலத்தில் மஹாபலியினுடைய மனைவியர்கள் தன் வடிவைக் கண்டு களிக்குமாறு சென்று இந்த வுலகங்கள் முழுவதையும் அளந்து கொண்ட இவனுடைய அழகிய தலையைப் புஷ்ப சயனத்தில் வைத்து இவனது பின்புறத்திலே இருந்துகொண்டு குழல்வாராய்; ஸஹஸ்ர நாமங்களையுடைய இவனுக்குக் குழல் வாராய்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

171 கண்டார்பழியாமே அக்காக்காய் * கார்வண்ணன்
வண்டார்குழல்வார வாவென்றவாய்ச்சிசொல் *
வண்டோய்மதிள் வில்லிபுத்தூர்க்கோன்பட்டன்சொல் *
தொண்டாடிப்பாடக் குறுகாவினைதாமே. (௧0)

'காக்கையே!, பார்த்தவர்கள் பரிஹஸியாதபடி கண்ணனுடைய கரிய கூந்தலை வாரும்படி வருவாயாக' என்று சொன்ன யசோதைப்பிராட்டியின் சொல்லையுட்கொண்ட பெரியாழ்வாருடைய அருளிச் செயல்களை விரும்பிப் பாடப்பெற்றால் முக்தி பெறலாம். (10)

அடிவரவு:—பின்னை பேய் தின்னம் பள்ளத்தில் கற்று கிழக்கில் பிண்டம் உந்தி மன்னன் கண்டார் வேலி.

இரண்டாம்பத்து—ஆறாந்திருமொழி—வேலிக்கோல் வெட்டி.

(கண்ணன் கன்றுமேய்க்கப்போக விரும்பி யசோதையைக் கோல் கேட்க, அவள் காக்கையை நோக்கிக் கோல்கொண்டுவாவென்றல்.)

172 வேலிக்கோல்வெட்டி விளையாடுவில்லேற்றி *
தாலிக்கொழுந்தைத் தடங்கழுத்திற்பூண்டு *
பீலித்தழையைப் பிணைத்துப்பிறகிட்டு *
காலிப்பின்போவாற்கோர்கோல்கொண்டுவா கடல்நிறவண்ணற்கோர்கோல்கொண்டுவா. (௧)

(காக்கையே!) வேலிக்கால்களிலுள்ள கோலை வாளால் வெட்டி அதை லீலோபகரணமான வில்லாகச் செய்து அதிலே நாணேற்றியும், சிறந்த ஆமைத் தாலியைத் தன்கழுத்திலே அணிந்துகொண்டும் மயில்தோகைகளை ஒன்று சேர்த்துப் பின்புறத்திலே கட்டிக்கொண்டும் பசுக்கூட்டங்களின் பின்னே போகவிருக்கிற இவனுக்கு ஒருகோலைக் கொண்டுவா. (1)

173 கொங்குங்குடந்தையும் கோட்டியூரும்பேரும் *
எங்குந்திரிந்து விளையாடுமென்மகன் *
சங்கம்பிடிக்கும் தடக்கைக்குத்தக்க * நல்
அங்கமுடையதோர்கோல்கொண்டுவா அரக்குவழித்ததோர்கோல்கொண்டுவா. (௨)

வாஸனைபொருந்திய திருக்குடந்தையிலும் திருக்கோட்டியூரிலும் திருப்பேர் நகரிலும் மற்றுமுள்ள திருப்பதிகளிலுமெல்லாம் ஸஞ்சரித்து விளையாடுகின்ற என் பிள்ளையினுடைய சங்கமேந்துகிற திருக்கைக்குத் தகுந்த அழகிய ஓர் கோல் கொண்டுவா; அரக்குப் பூசியதாகிய ஓர் கோல் கொண்டுவா. (2)

174 கறுத்திட்டெதிர்நின்ற கஞ்சனைக்கொன்றான் *
பொறுத்திட்டெதிர்வந்த புள்ளின்வாய்கீண்டான் *
நெறித்தகுழல்களை நீங்கமுன்னோடி *
சிறுக்கன்றுமேய்ப்பாற்கோர்கோல்கொண்டுவா தேவபிரானுக்கோர்கோல்கொண்டுவா. (௩)

கோபித்துத் தன்னை எதிரிட்டுநின்ற கம்ஸனைக் கொன்றவனும், தன்னைக் கொல்வதாக எதிர்த்துவந்த பகாஸுரனுடைய வாயை, முதலிற் பொறுத்துக்கொண்டிருந்து பின்பு

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஒழித்தவனும், செறித்த கூந்தல்கள் (ஓடுகிற வேகத்தாலே) இரண்டு பக்கமும் அலையும்படியாகக் கன்றுகளுக்கு முன்னே போய் மேய்ப்பவனுமாகிய இவனுக்கு ஓர் கோல் கொண்டுவா. (3)

175 ஒன்றேயுரைப்பான் ஒருசொல்லேசொல்லுவான் *
துன்றுமுடியான் துரியோதனன்பக்கல் *
சென்றங்குப்பாரதங் கையெறிந்தானுக்கு *
கன்றுகள்மேய்ப்பதோர்கோல்கொண்டுவா கடல்நிறவண்ணற்கோர்கோல்கொண்டுவா. (௪)

('பாண்டவர்களுடன் சேர்ந்து வாழோம் என்ற) ஒரே விஷயத்தையே சொல்லுபவனும் மந்த்ரிகள் எவ்வளவு சொன்னாலும் 'ஊசிகுத்தும் நிலமும் பாண்டவர்களுக்குக் கொடேன்' என்ற ஒரு சொல்லையே சொல்பவனும் கிரீடத்தை யணிந்தவனுமான துரியோதனனிடத்தில் தூதுபோய்ப் பாரதயுத்தத்தை உறுதிப்படுத்திக்கொண்டு வந்த இவனுக்குக் கன்றுகள் மேய்ப்பதற்குரிய ஓர் கோல் கொண்டுவா. (முதலடி கண்ணனுக்கும் அர்வயிக்கலாம்.) (4)

176 சீரொன்றுதூதாய்த் துரியோதனன்பக்கல் *
ஊரொன்றுவேண்டிப் பெறுதவுரோடத்தால் *
பாரொன்றிப்பாரதங் கைசெய்துபார்த்தற்கு *
தேரொன்றையூர்ந்தாற்கோர்கோல்கொண்டுவா தேவபிரானுக்கோர்கோல்கொண்டுவா. (௫)

துரியோதனனிடத்தில் பாண்டவர்களுக்காகச் சிறந்த தூதனாகப் போய், பாண்டவர்களுக்கு ஒரு ஊராவது கொடு என்று யாசித்துக் கேட்டும் அந்த ஒரு ஊரையும் பொறுமையின்றி உண்டான சீற்றத்தாலே பூமியில் பொருந்தியிருந்து பாரதயுத்தத்தில் அணிவகுத்து அர்ஜுனனுக்குத் தேரை நடத்தின தேவபிரானான கண்ணனுக்கு ஓர் கோல் கொண்டுவா. (5)

177 ஆலத்திலையான் அரவினணைமேலான் *
நீலக்கடலுள் நெடுங்காலங்கண்வளர்ந்தான் *
பாலப்பிராயத்தே பார்த்தற்கருள்செய்த *
கோலப்பிரானுக்கோர்கோல்கொண்டுவா குடந்தைக்கிடந்தாற்கோர்கோல்கொண்டுவா. (௬)

பிரளயகாலத்தில் உலகமெல்லாமுண்டு ஆலிலையில் பள்ளிகொண்டிருப்பவனும், சேஷசாயியும், வெகுகாலமாகக் கடலில் யோகநித்திரை செய்பவனும் குழந்தைப்பருவமே தொடங்கி அர்ஜுனனுக்கு அருள் செய்பவனும் குடந்தையில் கிடந்தவனுமான இவ்வழகனுக்கு ஓர் கோல் கொண்டுவா.(6)

178 பொற்றிகழ் சித்திரகூடப்பொருப்பினில் *
உற்றவடிவில் ஒருகண்ணுங்கொண்ட * அக்
கற்றைக்குழலன் கடியன்விரைந்துன்னை *
மற்றைக்கண்கொள்ளாமேகோல்கொண்டுவா மணிவண்ணநம்பிக்கோர்கோல்கொண்டுவா. (௭)

அக்காக்காய்! அழகிய சித்ரகூட [மலைச்சாரலில் பிராட்டியின் திருமேனியில் பதிந்த உனது இரண்டு கண்களில் ஒரு கண்ணை மாத்திரம் பறித்துக்கொண்டவனான குழலழகன் உன்திறத்தில் கொடியவன் உனது மற்றொரு கண்ணையும் பறித்துக்கொள்ளாதபடி ஓடிப்போய்க் கோல் கொண்டுவா. (7)

179 மின்னிடைச்சீதைபொருட்டா இலங்கையர் *
மன்னன்மணிமுடி பத்துமுடன்வீழ *
தன்னிகரொன்றில்லாச் சிலைகால்வளைத்திட்ட *
மின்னுமுடியற்கோர்கோல்கொண்டுவா வேலையடைத்தாற்கோர்கோல்கொண்டுவா. (௮)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸீதையை மீட்டுக்கொணர்வதற்காக ராவணனுடைய மணிமுடிகள் பத்தும் அற்று விழும்படி நிகாற்ற வில்லை வளைத்த மகுடதாரியான பெருமானுக்கு ஓர் கோல் கொண்டுவா; ஸமுத்திரத்தில் ஸேது கட்டினவனுக்கு ஓர் கோல் கொண்டுவா. [வேலை - கடல்.] (8)

180 தென்னிலங்கைமன்னன் சிரந்தோள்துணிசெய்து *
மின்னிலங்குபூண் விபீடணநம்பிக்கு *
என்னிலங்குநாமத்தளவும் அரசென்ற *
மின்னிலங்காரற்கோர்கோல்கொண்டுவா வேங்கடவாணற்கோர்கோல்கொண்டுவா. (௯)

இராவணனுடைய தலைகளையும் தோள்களையும் துணித்தப்போட்டு, ஆபரணாலங்க்ருதனான விபீஷணாழ்வானுக்கு 'என் பெயர் ப்ரகாசிக்குமளவும் ராஜ்யம் நடக்கக்கடவது' என்று அருள்செய்தவனும் மின்னல்போல் விளங்குகின்ற ஹாரத்தை யுடையவனுமான கண்ணனுக்கு ஓர் கோல் கொண்டுவா.

181 அக்காக்காய்நம்பிக்குக் கோல்கொண்டுவாவென்று *
மிக்காளுரைத்தசொல் வில்லிபுத்தூர்ப்பட்டன் *
ஒக்கவுரைத்த தமிழ்பத்தும்வல்லவர் *
மக்களைப்பெற்று மகிழ்வரிவ்வையத்தே. (௧0)

'காக்கையே! இவனுக்குக்கோல்கொண்டுவா' என்று சிறந்தவளான யசோதை சொன்ன சொற்களையுட்கொண்டு பெரியாழ்வார் அவ் யசோதையைப் போலவே சொன்ன இப்பத்துப்பாசுரங்களையும் ஓதவல்லவர்கள் ஜ்ஞாநபுத்திரர்களை அடைந்து இப்பூமியிலே மகிழ்ந்திருக்கப் பெறுவர்.

அடி வரவு:—வேலி கொங்கு கறத்து ஒன்றே சீர் ஆல் பொற்றிகழ் மின் தென்னிலங்கை அக்காக்காய் ஆநிரை.

இரண்டாம்பத்து—ஏழாந்திருமொழி—ஆநிரை மேய்க்க.

(கண்ணனைப் பூச்சூட அழைத்தல்.)

182 ஆநிரைமேய்க்கநீபோதி அருமருந்தாவதறியாய் *
கானகமெல்லாந்திரிந்து உன்கரியதிருமேனிவாட *
பானையிற்பாலைப்பருகிப் பற்றாதாரெல்லாஞ்சிரிப்ப *
தேனிலினியபிரானே செண்பகப்பூச்சூட்டவாராய். (௧)

தேனைக்காட்டிலும் போக்யனான கண்ணா! பகைவரெல்லாரும் பரிஹஸிக்கும்படி பச்சைப் பாலைக் குடித்து விட்டு, உன் கரியதிருமேனி வாடும்படி காட்டிடம் முழுதும் திரிந்து கொண்டு பசுக்களின் திரளை மேய்ப்பதற்கு நீ போகிறாய்; உன் பெருமேன்மையை நீ அறிகிறாயில்லை; இனி நீ கன்று மேய்ப்பதை விட்டிட்டுச் செண்பகப்பூவை நான் சூட்டும்படி வாராய். (1)

183 கருவுடைமேகங்கள்கண்டால் உன்னைக்கண்டாலொக்குங்கண்கள் *
உருவுடையாயுலகேழும் உண்டாகவந்துபிறந்தாய் *
திருவுடையாள்மணவாளா திருவரங்கத்தேகிடந்தாய் *
மருவிமணங்கமழ்கின்ற மல்லிகைப்பூச்சூட்டவாராய். (௨)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கண்களானவை உன்னைப்பார்த்தால் நீர்கொண்ட மேகங்களைப் பார்த்தாற்போல் குளிர்கின்ற வடிவையுடையவனே! ஏழுலகங்களும் ஸத்தை பெறும்படி திருவவதரித்தவனே! லக்ஷ்மீ நாதனே! ஸ்ரீரங்கசாயியே! வாஸனை நிலைநின்று பரிமளிக்கிற மல்லிகைப்பூவைச் சூட்டவாராய்.(2)

184 மச்சொடுமாளிகையேறி மாதர்கள்தம்மிடம்புக்கு *
கச்சொடுபட்டைக்கிழித்துக் காம்புதுகிலவைகீறி *
நிச்சலுந்தீமைகள்செய்வாய் நீள்திருவேங்கடத்தெந்தாய் *
பச்சைத்தமனகத்தோடு பாதிரிப்பூச்சூட்டவாராய். (௩)

மச்சுகளிலும் மாளிகைகளிலும் ஏறிப்போய்ப் பெண்களிருக்கிற இடத்திலே புகுந்து அவர்களுடைய கச்சுக்களையும் பட்டாடைகளையும் கிழித்துவிட்டு மற்றும் சேலையையும் கிழித்துப்போட்டு இப்படியே எப்போதும் துஷ்ட சேஷ்டைகளைச் செய்பவனே! திருவேங்கட நாதனே! பசுநிறமுள்ள மருக்கொழுந்தையும் பாதிரிப்பூவையும் சூட்டவாராய். (3)

185 தெருவின்கணின்றிளவாய்ச்சிமார்களைத் தீமைசெய்யாதே *
மருவுந்தமனகமுஞ்சீர் மாலைமணங்கமழ்கின்ற *
புருவங்கருங்குழல்நெற்றி பொலிந்தமுகிற்கன்றுபோலே *
உருவமழகியநம்பி உகந்திவைசூட்டநீவாராய். (௪)

புருவமும் கூந்தலும் நெற்றியும் அழகாயிருக்கப்பெற்றவனே! மேகக்கன்றுபோல வடிவழகிய நம்பியே! தெருவிலே நின்றுகொண்டு இடைச்சிறுமிகளைத் தீம்புசெய்யாதிரு; மருவையும் தமனகத்தையும் சேர்த்துக்கட்டின அழகியமாலைகள் வாஸனை வீசுகின்றன; இவற்றை உகந்து சூட்ட நீவாராய்.(4)

186 புள்ளினைவாய்பிளந்திட்டாய் பொருகரியின்கொம்பொசித்தாய் *
கள்ளவரக்கியைமூக்கொடு காவலனைத்தலைகொண்டாய் *
அள்ளிநீவெண்ணெய்விழுங்க அஞ்சாதடியேனடித்தேன் *
தெள்ளியநீரிலெழுந்த செங்கழுநீர்சூட்டவாராய். (௫)

பகாஸுரனை வாய்கிழித்துப்போகட்டவனே! குவலயாபீட யானையின் கொம்பைப்பறித்தவனே! சூர்ப்பணகையின் மூக்கையும் அவளுக்கு ரக்ஷகனாயிருந்த ராவணனுடைய தலையையும் அறுத்தவனே! இப்படிப்பட்ட நீ வெண்ணெயை வாரி விழுங்கினபோது நான் சிறிதும் பயப்படாமல் அடித்தேன்; அப்பிழையைப் பொறுத்து, செங்கழுநீர்ப் பூச்சூட்ட நீவாராய். (5)

187 எருதுகளோடுபொருதி ஏதுமுலோபாய்காண்நம்பி *
கருதியதீமைகள்செய்து கஞ்சனைக்கால்கொடுபாய்ந்தாய் *
தெருவின்கண்தீமைகள்செய்து சிக்கெனமல்லர்களோடு *
பொருதுவருகின்றபொன்னே புன்னைப்பூச்சூட்டவாராய். (௬)

கண்ணா! மணம் புணர்வதற்காக எழுரிஷபங்களுடன் போர்செய்யா நின்றாய்; ஒன்றிலும் விருப்பமில்லாதவனுமாயா நின்றாய்; கம்ஸன் உன்மேல் செய்ய நினைத்த தீம்புகளை நீ அவன்மேற் செய்து அந்தக் கம்ஸனைக் காலினால் பாய்ந்தவனே! (அக்ரூரர் மூலமாயழைக்கப்பட்டுக் கம்ஸன் அரண்மனைக்குப் போம்போது) தெருவிலே தீமைகளைச் செய்து கொண்டுபோய் மல்லர்களுடனே வலிதாகப் போர்செய்து வந்த, பொன்போலருமையானவனே! புன்னைப்பூச் சூட்டநீவாராய். (6)

188 குடங்களெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே *
மடங்கொள்மதிமுகத்தாரை மால்செய்யவல்லவென்மைந்தா *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இடந்திட்டிரணியனெஞ்சை யிருபிளவாகமுன்கீண்டாய் *
குடந்தைக்கிடந்தவென்கோவே குருக்கத்திப்பூச்சூட்டவாராய். (எ)

பலகுடங்களைத் தூக்கி உயரவெறிந்து (இப்படி) குடக்கூத்தாடவல்ல தலைவனே! அழகிய பெண்களை மயக்கவல்ல எனது புத்திரனே! முன்பு ஹிரண்யாஸுரனுடைய மார்பைப் பிளந்தவனே! திருக்குடந்தையில் பள்ளிகொண்டிருக்கின்ற பிரபுவே! குருக்கத்திப்பூ சூட்டவீவாராய். (7)

189 சீமாலிகனவனோடு தோழமைக்கொள்ளவும்வல்லாய் *
சாமாறவனைநீயெண்ணிச் சக்கரத்தால்தலைகொண்டாய் *
ஆமாறறியும்பிரானே அணியரங்கத்தேகிடந்தாய் *
ஏமாற்றமென்னைத்தவிர்த்தாய் இருவாட்சிப்பூச்சூட்டவாராய். (அ)

மாலிகன் என்ற பெயரை யுடையவனோடு ஸ்நேஹம் செய்து கொள்ளுதற்கும் வல்லவனாய், அந்த மாலிகனை முடிக்கும் வழிபார்த்துச் சக்ராயுதத்தினால் தலையையுமறுத்தாய்; நடத்த வேண்டியவைகளை அறியவல்ல ப்ரபுவே! ஸ்ரீ ரங்கநாதனே! எனக்குத் துன்பத்தைப் போக்கினவனே! இருவாட்சிப்பூச்சூட்டவீவாராய். (முன்னடிகளிலுள்ள மாலிகன் விருத்தாந்தம்அபூர்வம்.)

190 அண்டத்தமரர்கள்சூழ அத்தாணியுள்ளங்கிருந்தாய் *
தொண்டர்கள்நெஞ்சிலுறைவாய் தூமலராள்மணவாளா *
உண்டிட்டுலகினையேழும் ஓராலிலையிற்றுயில்கொண்டாய் *
கண்டுநானுன்னையுகக்கக் கருமுகைப்பூச்சூட்டவாராய். (௯)

அருகான இடத்திலே சேவிக்கும்படி தேவர்கள் சூழ்ந்திருக்க அவர்கள் நடுவில் பரமபதத்தில் வீற்றிருப்பவனே! அடியார்களுடைய ஹ்ருதயத்தில் வஸிப்பவனே! லக்ஷ்மிபதியே! பிரளய காலத்தில் ஏழு உலகங்களையும் உண்டுவிட்டு ஓராலிலையில் யோகநித்திரையைக் கொண்டவனே! நான் உன்னைப் பார்த்து மகிழும்படி இருவாட்சிப்பூவைச் சூட்டவீவாராய். ... (9)

191 செண்பகமல்லிகையோடு செங்கழுநீரிருவாட்சி *
எண்பகர்பூவுங்கொணர்ந்தேன் இன்றிவைசூட்டவாவென்று *
மண்பகர்கொண்டானை ஆய்ச்சிமகிழ்ந்துரைசெய்தவிம்மாலை *
பண்பகர்வில்லிபுத்தூர்க்கோன் பட்டர்பிரான்சொன்னபத்தே. (௧௦)

செண்பகம் மல்லிகை செங்கழுநீர் இருவாட்சி ஆகிய மலர்களையெல்லாம் கொண்டுவந்தேன்; இப்போது இப்பூக்களைச் சூட்டும்படி வருவாயாக' என்று, முன்பு உலகளந்தவனான கண்ணனை நோக்கி யசோதை உகந்து சொல்லியவற்றை யுட்கொண்டு பெரியாழ்வார் அருளிச்செய்த இந்தச்சொல்மாலையும் ஒருபத்தே! (அன்று ஆழ்வார்தாமே யீடுபெட்டுத்தலைக்கட்டினபடி (10)

அடி வரவு:—ஆனிரை கரு மச்சு தெரு புள் எருது குடம் சீமாலிகன் அண்டம் செண்பகம் இந்திரன்.

இரண்டாம்பத்து—எட்டாந்திருமொழி—இந்திரனோடு.

(திருவந்திக்காப்பிடக் கண்ணனையழைத்தல்.)

192 இந்திரனோடுபிரமன் ஈசனிமையவரெல்லாம் *
மந்திரமாமலர்கொண்டு மறைந்துவராய்வந்துநின்றார் *
சந்திரன்மாளிகைசேரும் சதுரர்கள்வெள்ளறைநின்றாய் *
அந்தியம்போதிதுவாகும் அழகனேகாப்பிடவாராய். (௧)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சந்திர மண்டலத்தளவு மோங்கின மாளிகைகளையுடையதும் வித்வான்கள் வாழுமிடமுமான திருவெள்ளறையில் நிற்குமழகனான கண்ணனே! இந்திரனும் பிரமனும் சிவனும் மற்றுமுள்ள தேவர்களும் சிறந்த மந்த்ர புஷ்பங்களைக்கொண்டு வந்து மறைந்து நிற்கிறார்கள். இக்காலம் அழகிய ஸாயம் ஸந்த்யா காலமாகும்; ஆகையால் நான் உனக்கு ரக்ஷையாகத் திருவந்திக்காப் பிடுவதற்கு வாராய். (இவ்வநுபவம் திருவெள்ளறைப்பெருமானிடத்து நிகழ்கிறபடி.) (1)

193 கன்றுகளில்லம்புகுந்து கதறுகின்றபசுவெல்லாம்*
நின்றொழிந்தேனுன்னைக்கூவி நேசமேலொன்றுமிலாதாய்*
மன்றில்நில்லேலந்திப்போது மதிட்டிருவெள்ளறைநின்றாய்*
நன்றுகண்டாயென்றன்சொல்லு நானுன்னைக்காப்பிடவாராய். (௨)

திருவெள்ளறையில் நின்ற கண்ணனே! என்மேல் சிறிதும் அன்பில்லாதவனே! உன்னைக் கூவிக்கொண்டு நின்று விட்டேன்; அதனால் பசுக்களெல்லாம் கன்றுகளிருக்குமிடத்திலே சேர்ந்து கத்துகின்றன; நீ அந்திவேளையில் நாற்சந்தியில் நில்லாதே; என்னுடைய வார்த்தை உனக்கு நல்லதாகும்; நான் உன்னைக் காப்பிடுமாறு நீ என்னருகில் வாராய். (2)

194 செப்போதுமென்முலையார்கள் சிறுசோறுமில்லுஞ்சிதைத்திட்டு*
அப்போதுநானுரப்பப்போய் அடிசிலுமுண்டிலையாள்வாய்*
முப்போதும் வானவரேத்தும் முனிவர்கள்வெள்ளறைநின்றாய்*
இப்போதுநானொன்றுஞ்செய்யேன் எம்பிரான்காப்பிடவாராய்* (௩)

என்னை ஆளப்பிறந்தவனே! எப்போதும் தேவர்கள் ஸ்தோத்திரஞ்செய்கின்ற திருவெள்ளறையிலே நிற்பவனே? நீ! இளம்பெண்கள் விளையாட்டாகச் செய்த மணற்சோற்றையும் மணல் வீட்டையும் அழித்துவிட்டு நிற்க, அக்காலத்தில் நான் கோபிக்க, பிடித்தடிப்பனோ? என்றஞ்சி என்முன் நில்லாமல் அப்பாற்போய், உண்ணாமலிருந்திட்டாய்; இப்போது நான் உன்னை ஒன்றும் செய்யமாட்டேன்; எம்பிரானே காப்பிட வாராய். (உரப்ப-சீற)

195 கண்ணில்மணற்கொடுதூவிக் காலினாற்பாய்ந்தனையென்றென்று*
எண்ணரும்பிள்ளைகள்வந்திட்டு இவரால்முறைப்படுகின்றார்*
கண்ணனேவெள்ளறைநின்றாய் கண்டாரோடேதீமைசெய்வாய்*
வண்ணமேவேலையதொப்பாய் வள்ளலேகாப்பிடவாராய். (௪)

திருவெள்ளறை நின்ற கண்ணா! கண்டவரோடெல்லாம் தீம்பு செய்பவனே! கடல் வண்ணனே! உதாரனே! "மணலைக் கொண்டுவந்து கண்ணில் தூவி விட்டுக் காலினாலும் உதைத்தாய்" என்று பலகால் சொல்லி நீ செய்யும் தீம்பைக்குறித்துப் பல பிள்ளைகள் வந்து முறையிடுகின்றார்கள்; ஆதலால் அங்கே போகாமல் காப்பிட வாராய். (வேலையது ஒப்பாய்-கடல் போன்றவனே.)

196 பல்லாயிரவரிவ்வூரிற்பிள்ளைகள் தீமைகள்செய்வார்*
எல்லாமுன்மேலன்றிப்போகாது எம்பிரான்நீயிங்கேவாராய்*
நல்லார்கள்வெள்ளறைநின்றாய் ஞானச்சுடரேயுன்மேனி*
சொல்லாரவாழ்த்திநின்றேத்திச் சொப்படக்காப்பிடவாராய். (௫)

பஞ்சலக்ஷம் குடியுள்ள இவ்வூரிலே தீம்புகளைச் செய்பவர்களாகிய சிறுவர்கள் அநேகர் ஆயிரக்கணக்கானவராவர்; அவர்கள் செய்யும் தீம்புகளெல்லாம் உன்மேலல்லாமல் வேறொருவர் மேலும் ஏறாது; இப்படியிருப்பதால் அங்கே போகாமல் எம்பிரான்! நீ இங்கே வாராய்;

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நல்லவர்கள் வாழ்கிற வெள்ளறையில் நிற்பவனே! ஞானவொளியை யுடையவனே! உன் திருமேனியை நன்கு தோத்திரஞ்செய்து மங்களாசாஸநஞ் செய்து காப்பிடும்படி வாராய். (5)

197 கஞ்சன்கறுக்கொண்டுநின்மேல் கருநிறச்செம்மயிர்ப்பேயை*
வஞ்சிப்பதற்குவிடுத்தான் என்பதோர்வார்த்தையுமுண்டு*
மஞ்சுதவழ்மணிமாட மதிள்திருவெள்ளறைநின்றாய்*
அஞ்சுவன்நீயங்குநிற்க அழகனேகாப்பிடவாரராய். (௬)

மேகங்கள் ஊர்ந்து செல்கின்ற ரத்நமயமான வீடுகளையும் மதிளையுமுடைய திருவெள்ளறையில் நிற்பவனே! 'கம்ஸனென்பவன் உன்மேலே கோபங்கொண்டு செம்பட்டை மயிரை யுடைய கறுத்த பூதனையை உன்னை வஞ்சனையாகக் கொல்வதற்காக அனுப்பினான்' என்பதான ஒரு சொல்லும் கேட்டிருப்பதுண்டு, (அங்ஙனே இன்னமும் பலரை அனுப்பியிருப்பன்) ஆதலால் நீ வெளியில் நிற்பதற்கு நான் அஞ்சா நின்றேன்; அழகனே! காப்பிட வாராய். (6)

198 கள்ளச்சகடுமருதுங் கலக்கழியவுதைசெய்த*
பிள்ளையரசேநீபேயைப்பிடித்து முலையுண்டபின்னை*
உள்ளவாறொன்றுமறியேன் ஒளியுடைவெள்ளறைநின்றாய்*
பள்ளிகொள்போதிதுவாகும் பரமனேகாப்பிடவாராய். (எ)

கள்ளச்சகடத்தையும் யமளார்ச்சுனங்களையும் கட்டுக்குலைந்தழியும்படி உதைத்துத் தள்ளிய பிள்ளைத் தன்மையைக் கொண்ட பெருமையனே! நீ பூதனையினுடைய முலையைப் பிடித்து உண்ட பின்பு உன் தத்துவம் ஒன்றுமறிகிறேனில்லை! அழகிய வெள்ளறையில் நிற்பவனே; இப்போது படுத்து உறங்குகிற வேளையாகும்; ஆதலால் காப்பிட வாராய். (கலக்கு-சந்திபந்தம்) (7)

199 இன்பமதனையுயர்த்தாய் இமையவர்க்கென்றுமரியாய் *
கும்பக்களிறட்டகோவே கொடுங்கஞ்சன்நெஞ்சினிற்கூற்றே *
செம்பொன்மதிள்வெள்ளறையாய் செல்வத்தினால்வளர்பிள்ளாய் *
கம்பக்கபாலிகாணங்குக் கடிதோடிக்காப்பிடவாராய். (அ)

உன் குண சேஷ்டிதங்களால் பரமாநந்தத்தை எனக்கு மேன்மேலுண்டாக்கினவனே! தேவர்களுக்கு எக்காலும் அருமையானவனே! குவலயாபீடத்தைக் கொன்ற பிரானே! கொடுமை தங்கிய கம்ஸனுடைய மனஸ்ஸிலே யமன்போல் பயங்கரனாய்த் தோன்றுமவனே! செல்வச்செருக்கோடு வளர்கின்ற குழந்தாய்! நீ இருக்கிறவிடத்தில் கண்டார்க்கு நடுக்கத்தை விளைக்கவல்ல துர்க்கையிருக்கிறாள்; அங்கு நில்லாமல், நான் உனக்குக் காப்பிடுமாறு நீ விரைந்தோடி வாராய். (8)

200 இருக்கொடுநீர்சங்கிற்கொண்டிட்டு எழில்மறையோர்வந்துநின்றார் *
தருக்கேல்நம்பிசந்திநின்று தாய்சொல்லுக்கொள்ளாய்சிலநாள் *
திருக்காப்புநானுன்னைச்சாத்தத் தேசுடைவெள்ளறைநின்றாய் *
உருக்காட்டுமந்திவிளக்கு இன்னொளிகொள்ளவேற்றுகேன்வாராய். (௯)

கண்ணா! புருஷஸூக்தம் முதலிய ருக்குக்களைச் சொல்லிக்கொண்டு தீர்த்தத்தைச் சங்கத்திலே கொணர்ந்து விலக்ஷணரான ப்ராஹ்மணர் உனக்கு ரக்ஷையிடுவதற்கு வந்து நிற்கிறார்கள்; ஸந்த்யையிலே நின்று செருக்கித் திரியாதே; சிலகாலம் தாய் வார்த்தையைக் கேட்பாயாக; இப்போது நான் அழகிய ரக்ஷையை உனக்கு இடுவதற்காக உன் திருமேனி வடிவத்தைக்காட்டுகின்ற அந்திவிளக்கை ஒளியையுடையதாக ஏற்றுவேன்; கடுகவருவாயாக.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

201 போதமர்செல்வக்கொழுந்து புணர்திருவெள்ளறையானை *
மாதர்க்குயர்ந்தவசோதை மகன்றன்னைக்காப்பிட்டமாற்றம் *
வேதப்பயன்கொள்ளவல்ல விட்டுசித்தன்சொன்னமாலை *
பாதப்பயன்கொள்ளவல்ல பத்தருள்ளார்வினைபோமே. (௧௦)

[illegible] அமர்ந்த செல்வியான பிராட்டியோடு புணர்ந்த திருவெள்ளறை யெம்பெருமானுக [illegible] கண்ணனை மாதர்களுள் சிறந்த யசோதை காப்பிட்ட படியை யுட்கொண்டு, [illegible] யறிந்த பெரியாழ்வாரருளிய பாமாலையின் ஓடிகற்றதனாலாகிய பயனை [illegible] பக்தர்களின் வினைகளெல்லாம் கழிந்து விடும். (ஓடி கற்றாலும் போதும்.) (10)

[illegible]:—இந்திரன் கன்று செப்பு கண்ணில் பல்லாயிரவர் கஞ்சன் கள்ளம் இன்பம் இருக்கு போதமர் வெண்ணெய்.

இரண்டாம்பத்து—ஒன்பதாந்திருமொழி—வெண்ணெய் விழுங்கி.

(கண்ணனது தீம்புகளை ஆய்ச்சிகள் முறையிடுதலும்
கண்ணனை யசோதை சிக்ஷித்தலும்)

202 வெண்ணெய்விழுங்கிவெறுங்கலத்தை வெற்பிடையிட்டு அதனோசைகேட்கும் *
கண்ணபிரான்கற்றகல்விதன்னைக் காக்ககில்லோமுன்மகனைக்காவாய் *
புண்ணிற்புளிப்பெய்தாலொக்குந்தீமை புரைபுரையாலிவைசெய்யவல்ல *
அன்னநற்கண்ணனோர்மகனைப்பெற்ற அசோதைநங்காயுன்மகனைக்கூவாய். (௧)

புண்ணின்மேல் புளியைச்சொரிந்ததைப்போன்ற [தீவ்ரமான] தீம்புகளை வீடுதோறும் செய்ய வல்ல புத்திரனைப் பெற்ற யசோதைப்பிராட்டி! வெண்ணெயை விழுங்கிவிட்டு வெறும் பாத்திரத்தைக் கல்லிலே போட்டு அதன் ஓசையைக்கேட்டுக் களிக்கின்ற உன் பிள்ளை கற்ற கல்வியை எங்களால் காக்கமுடியாது; உன் பிள்ளையைத் தீம்பு செய்யாதபடி தடுப்பாயாக; (அண்ணற்கு அண்ணன்-பலராமனைப்போல் லாதுவாக இல்லாதவன்.) (1)

203 வருகவருகவருகவிங்கே வாமனநம்பிவருகவிங்கே *
கரியகுழற்செய்யவாய்முகத்துக் காகுத்தநம்பிவருகவிங்கே *
அரியனிவனெனக்கின்றுநங்காய் அஞ்சனவண்ணனுவசலகத்தார் *
பரிபவம்பேசத்தரிக்ககில்லேன் பாவியேனுக்கிங்கேபோதராயே. (௨)

வாமன நம்பீ! இங்கே வருவாயாக; கருநிறமான கூந்தலையும் செந்நிறமான வாயையும் முகத்தையு முடைய இராமமூர்த்தி! இங்கே வருவாயாக; (என்று கண்ணனையழைத்து, தன் பிள்ளைமேல் குற்றம்சொன்னவளை நோக்கி யசோதை) "இந்தப்பிள்ளை எனக்கு இப்போது அருமையானவனுமிற்றே" என்றுசொல்லி, மீண்டும் கண்ணனை நோக்கி, கண்ணா! அசல் வீட்டுக்காரர்கள் உன்மேல் அவமானகரமான சொற்களைச்சொன்னால் பொறுக்கவல்லேனல்லேன்; இப்படி பரிபவங்களைக் கேட்கும்படியான பாபத்தைப்பண்ணின எனக்கு இவ்வருத்தந்தீர இங்கே வாராய் என்று அழைக்கிறாள்.(2)

204 திருவுடைப்பிள்ளைதான்தீயவாறு தேக்கமொன்றுமிலன்தேசுடையன் *
உருகவைத்தகுடத்தொடுவெண்ணெய் உறிஞ்சியுடைத்திட்டுப்போந்துநின்றான் *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அருகிருந்தார்தம்மையநியாயஞ்செய்வதுதான் வழக்கோவசோதாய் *
வருகவென்றுன்மகன்றன்னைக்கூவாய் வாழவொட்டான்மதுசூதனனே. (௩)

யசோதையே! உன் செல்வப்பிள்ளையாகிய கண்ணன் தீம்பு செய்யும் வழியில் சிறிதும் தயங்குவதில்லை. அதைத் தனக்குப் புகழாகக்கொண்டிரா நின்றான்; (இவன் செய்த தீம்பை யென்னவென்றால்:—உருகுவதற்காக (அடுப்பில் நான்) வைத்திருந்த வெண்ணெயைத் தாழியிலிட்டு உறிஞ்சிவிட்டுத் தாழியையு முடைத்துப்போட்டு அப்பால் வந்து நிற்கின்றான்; உன் வீட்டருகே இருந்தவர்களை இவ்விடப்படி அக்ரமஞ்செய்வது நியாயமாகுமோ? நீ உன் பிள்ளையை அழைத்துக்கொள்; இக்கண்ணபிரான் எங்களைக் குடிவாழ்ந்திருக்க வொட்டுகிறதில்லை. (3)

205 கொண்டல்வண்ணாவிங்கேபோதராயே கோயிற்பிள்ளாயிங்கேபோதராயே *
தெண்டிரைசூழ்திருப்பேர்க்கிடந்த திருநாரணாவிங்கேபோதராயே *
உண்டுவந்தேனம்மமென்றுசொல்லி ஓடியகம்புகவாய்ச்சிதானும் *
கண்டெதிரேசென்றெடுத்துக்கொள்ளக் கண்ணபிரான்கற்றகல்விதானே. (௪)

மேகவண்ணனே! இங்கே வாராய்; ஸ்ரீரங்கநாதனே! இங்கே வாராய்; காவிரிசூழ்ந்த திருப்பேர் நகரிலே பள்ளிகொண்டிரா நின்ற ஸ்ரீமந்நாராயணனே! இங்கே வாராய்; என்று அம்மமுண்கைக்காகப் புகழ்ந்தழைத்த யசோதையினருகிற் கண்ணபிரான் வந்து 'உணவை நான் உண்டுவந்தேன்' என்று சொல்லி ஓடிவந்து அகத்தினுள்ளே புகுத, தாயான யசோதையும் கண்ணன் வந்த வரவையும் இவன் முகமலர்த்தியையும் கண்டு மகிழ்ந்து எதிர்கொண்டு போய் அவனைத் தன் இடுப்பில் எடுத்துக்கொள்ளும்படி அந்த ஸ்ரீக்ருஷ்ணன் கற்ற கல்வியின் பெருமை என்னே! என்று ஆழ்வார் இனியராகிறார். (4)

206 பாலைக்கறந்தடுப்பேறவைத்துப் பல்வளையாளென்மகளிருப்ப *
மேலையகத்தேநெருப்புவேண்டிச்சென்று இறைப்பொழுதங்கேபேசிநின்றேன் *
சாளக்கிராமமுடையநம்பி சாய்த்துப்பருகிட்டுப்போந்துநின்றான் *
ஆலைக்கரும்பின்மொழியனைய அசோதைநங்காயுன்மகனைக்கூவாய். (௫)

மதுரமான மொழியையுடைய யசோதைப்பிராட்டி! பலவகை வளைகளை அணிந்துள்ள என் மகள் பாலைக் கறந்தெடுத்து அடுப்பின்மேலேற்றி வைத்து இருக்க, அதைக் காய்ச்ச நெருப்பெடுத்துவர விரும்பி நான் மேலண்டை வீட்டிற்குப்போய் அங்கு க்ஷணகாலம் பேசிக்கொண்டிருந்துவிட்டேன்; அவ்வளவிலே ஸ்ரீஸாளக்ராமக்ஷேத்ரபதியான உன்மகன் என் மகளிருந்த விடத்திற் சென்று அந்தப் பாலை முழுதும் குடித்துவிட்டு வந்து ஒன்றுமறியாதவன் போல நிற்கின்றான்; இவனை நீ அழைத்துக்கொள். (5)

207 போதர்கண்டாயிங்கேபோதர்கண்டாய் போதரேனென்னாதேபோதர்கண்டாய் *
ஏதேனுஞ்சொல்லியசலகத்தார் ஏதேனும்பேசநான்கேட்கமாட்டேன் *
கோதுகலமுடைக்குட்டனேயோ குன்றெடுத்தாய்குடமாடுகூத்தா *
வேதப்பொருளேயென்வேங்கடவா வித்தகனேயிங்கேபோதராயே. (௬)

எல்லாருடைய குதூஹலத்தையும் தன்மேல் உடைய பிள்ளாய்! கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்தவனே! குடக் கூத்தாடினவனே! வேதங்களுக்குப் பொருளாயிருப்பவனே! திருமலையில் நிற்பவனே! வியக்கத் தக்கவனே! நீ அசலகங்களிற்போக நினையாமல் என்னருகில் விரைந்து ஓடிவா; 'வரமாட்டேன்' என்னாமல் வருவாயாக; அசல் வீட்டுக்காரர்கள் சில கடுஞ்சொற்களைச் சொல்லிக் கொண்டுவர, அவற்றை நான் கேட்டுப்பொறுக்கமாட்டேன்; ஆதலால், வா என்றழைக்கிறாள் யசோதை.

208 செந்நெலரிசிசிறுபருப்புச் செய்தவக்காரம்நறுநெய்பாலால் *
பன்னிரண்டுதிருவோணமட்டேன் பண்டுமிப்பிள்ளைபரிசறிவன் *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பிள்ளைமுகப்பனென்றுசொல்லி யெல்லாம்விழுங்கிட்டுப்போந்துநின்றான் *
உன்மகன்றன்னையசோதைநங்காய் கூவிக்கொள்ளாயிவையுஞ்சிலவே. (எ)

அசோதைநங்காய்! செந்நெலரிசியும் சிறு பயற்றம்பருப்பும் கருப்புக்கட்டியும் நெய்யும் பாலும் ஆகிய இவற்றாலே பன்னிரண்டு திருவோணத் திருநாளளவும் நோன்புக்கு உறுப்பாகப் பாயஸ பக்ஷணங்களைச் சமைத்தேன்; முன்பும் இப்பிள்ளையினுடைய ஸ்வபாவத்தை நான் அறிவேன்; இப் போதைக்கு இப்படியே திருவோண விரதத்திற்காகச் சமைத்தவற்றை யெல்லாம் ஒன்றும் மிகாதபடி விழுங்கிவிட்டு அவ்வளவிலும் திருப்தி பெறாமல் 'நான் இன்னமும் உண்ணவேண்டி யிராநின்றேன்' என்று சொல்லிக்கொண்டு வந்து நிற்கின்றான்; இது நன்றோ? இவனை நீ அழைத்துக்கொள். (7)

209 கேசவனேயிங்கேபோதராயே கில்லேனென்னாதிங்கேபோதராயே *
நேசமிலாதாரகத்திருந்து நீவிளையாடாதேபோதராயே *
தூசனஞ்சொல்லுந்தொழுத்தைமாருந் தொண்டரும்நின்றவிடத்திநின்று *
தாய்சொல்லுக்கொள்வதுதன்மங்கண்டாய் தாமோதராவிங்கேபோதராயே. (அ)

கேசவா! இங்கே வா; 'மாட்டேன்' என்று மறுத்துச் சொல்லாமல் இங்கே வா; நீ அன்பில்லாதவர்களுடைய அகங்களிலேயிருந்து விளையாடவேண்டா; உன்மேல் பழிப்புக்களைச் சொல்லுகிற நீசர்களான பெண்களும் ஆண்களும் நிற்கிற இடங்களைவிட்டு இங்கே வா; தாய்வாய்ச் சொல்லை மேற்கொண்டு நடப்பது பிள்ளைகளுக்கு நன்றுகாண்; ஆதலால் தாமோதரா! இங்கே வா. (8)

210 கன்னலிலட்டுவத்தோடுசீடை காரெள்ளினுண்டைகலத்திலிட்டு *
என்னகமென்றுநான்வைத்துப்போந்தேன் இவன்புக்கவற்றைப்பெறுத்திப்போந்தான் *
பின்னுமகம்புக்குறியைநோக்கிப் பிறங்கொளிவெண்ணெயுஞ்சோதிக்கின்றான் *
உன்மகன்றன்னையசோதைநங்காய் கூவிக்கொள்ளாயிவையுஞ்சிலவே. (கூ)

அசோதைநங்காய்! கன்னல் லட்டு சீடை எள்ளுண்டை ஆகிய இவற்றை அவ்வவற்றுக்கு உரிய பாத்திரங்களிலே நிறைத்து, என் வீடுதானே என்று நினைத்து விசேஷமாகக் காவலிடாமல் உறிகளிலே வைத்துவிட்டு நான் வெளியே வந்தேன்; அவ்வளவில் இப்பிள்ளை அவ் வீட்டிலே வந்து புகுந்து அப்பணியாரங்களைக் கொள்ளைகொண்டு ஒன்றுமறியாதவன்போல வந்துவிட்டான்; இன்னமும் என் வீட்டினுள்புகுந்து உறியைப் பார்த்து அதில் நறு வெண்ணெய் உண்டோ என்று ஆராய்கின்றான்; இதுவோ செயல்? இவனை நீ அழைத்துக்கொள். (9)

211 சொல்லிலரசிப்படுதிநங்காய் சுழலுடையனுன்பிள்ளைதானே *
இல்லம்புகுந்தென்மகளைக்கூவிக் கையில்வளையைக்கழற்றிக்கொண்டு *
கொல்லையிநின்றுங்கொணர்ந்துவிற்ற அங்கொருத்திக்கவ்வளைகொடுத்து *
நல்லனநாவற்பழங்கள்கொண்டு நானல்லேனென்றுசிரிக்கின்றானே. (க0)

எசோதைப்பிராட்டி! உன்மகன் செய்த தீமைகளை நாங்கள் சொன்னால் சீறுகின்றாய்; உன்பிள்ளையோவென்றால், பற்பல வஞ்சனைச் செய்கைகளை உடையனாயிருக்கின்றானே; என் வீட்டினுள் புகுந்து என் பெண்ணைப் பேர்சொல்லி யழைத்து அவளுடைய கைவளையைக் கழற்றிக்கொண்டுபோய், காடுகளில் நின்றும் கனிகொண்டுவந்து விற்பனை செய்த ஒரு பெண்பிள்ளைக்கு அந்தக் கைவளையைக் கொடுத்து அதற்குப்பதிலாக நல்ல நாவற்பழங்களை வாங்கிக்கொண்டு, உன்மகனின் கைவளையை நான் திருடவில்லை யென்றுதானே சொல்லிச்சிரிக்கின்றான்! (அரசிப்படுதி—கோபிக்கின்றாய்.) (10)

212 வண்டுகளித்திரைக்கும்பொழில்சூழ் வருபுனற்காவிரித்தென்னரங்கன் *
பண்டவன்செய்தகிரீடையெல்லாம் பட்டர்பிரான்விட்டுசித்தன்பாடல் *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொண்டிவைபாடிக்குனிக்கவல்லார் கோவிந்தன்றன்னடியார்களாகி *
எண்டிசைக்கும்விளக்காகிநிற்பார் இணையடியென்றலைமேலனவே. (கக)

வண்டுகள் களித்து ஒலிக்கப்பெற்ற சோலைகளாலும் காவேரிநதியாலும் சூழ்ப்பெற்ற அழகிய திருவரங்கத்தில் வாழும் பெருமான் கண்ணனான காலத்தில் செய்த லீலாசேஷ்டிதங்களெல்லா வற்றையும் விஷயமாகக்கொண்டு பெரியாழ்வார் பாடின பாடலாகிய இப்பாட்டுகளைப் பாடிக் கூத் தாடவல்லவர்களாய்க் கண்ணபிரானுக்கு அடியவர்களாய் எட்டுத் திக்குக்களிலும் உள்ள இருள் நீங் கும்படி விளக்காக நிற்குமவர்களுடைய திருவடியிணைகள் என் முடியின் மேல் இருக்கத்தக்கவை.

அடிவரவு :—வெண்ணெய் வருக திரு கொண்டல் பாலை போதர் செந்நெல் கேசவ கன்னல் சொல்லில் வண்டு ஆற்றில்.

இரண்டாம்பத்து—பத்தாந்திருமொழி—ஆற்றிலிருந்து.

(கண்ணன் செய்த தீம்புகளை ஆய்ச்சிகள் யசோதையிடம் முறையிடுதல்.)

213 ஆற்றிலிருந்து விளையாடுவோங்களை *
சேற்றாலெறிந்து வளைதுகிற்கைக்கொண்டு *
காற்றிற்கடியனாய் ஓடியகம்புக்கு *
மாற்றமுந்தாரானாலின்றுமுற்றும் வளைத்திறம்பேசானாலின்றுமுற்றும். (க)

யமுனை யாற்றங்கரை மணலிலிருந்துகொண்டு விளையாடாநின்ற எங்கள்மேல் சேற்றை வீட் டெறிந்து எங்கள் கைவளைகளையும் புடவைகளையும் வாரி யெடுத்துக்கொண்டு காற்றிலும் காட்டில் மிக்க வேகமுடையவனாக ஓடிவந்து வீட்டினுள்ளே புகுந்துகொண்டு ஒரு வாய்ச் சொல்லும் அருளாமல் உபேக்ஷியாநின்ற பெருமானால் இப்போது முடிகின்றோம்; தான் முன்பு வாரிக்கொண்டுபோன வளையின் விஷயமாக (தருகிறேன், தருகிறிலேன் என்பவற் றில் ஒன்றையும்) வாய்விட்டுச்சொல்லாத அப்பெருமானால் வருந்துகின்றோம். (1)

214 குண்டலந்தாழக் குழல்தாழநாண்தாழ *
எண்டிசையோரும் இறைஞ்சித்தொழுதேத்த *
வண்டமர்பூங்குழலார் துகில்கைக்கொண்டு *
விண்டோய்மரத்தானாலின்றுமுற்றும் வேண்டவுந்தாரானாலின்றுமுற்றும். (உ)

காதணிகளும் கூந்தலும் கண்டபூஷணமும் தாழ்ந்தசையவும் எட்டு திக்கிலுமுள்ள தேவர் முனிவர் முதலியோர் எல்லாரும் வணங்கி ஸ்தோத்ரம் பண்ணவும் இப்படிப்பட்ட நிலைமையையுடையனாய் இடைச் சேரியில் எங்களுடைய புடவைகளை வாரிக்கொண்டு ஆகாசத்தையளாவிய மரத்தின்மேல் ஏறியிரா நின்றவனும், கெஞ்சிக் கேட்டாலும் தாராதவனுமான கண்ணனால் இன்று வருந்துகின்றோம். (2)

215 தடம்படுதாமரைப் பொய்கைகலக்கி *
விடம்படுநாகத்தை வால்பற்றியீர்த்து *
படம்படுபைந்தலை மேலெழப்பாய்ந்திட்டு *
உடம்பையசைத்தானாலின்றுமுற்றும் உச்சியில்நின்றானாலின்றுமுற்றும். (ஈ)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விசாலமான தாமரைப் பொய்கையினுள்ளே குதித்துக் கலக்கி விஷமயமான காளிய ஸர்ப்பத்தை வாலைப் பிடித்திழுத்து, அதன் தலையின்மீது பாய்ந்து திருமேனியசையக் கூத்தாடின கண்ணபிரானால் இன்று முற்றும். ... (3)

216 தேனுகனுவிசெருத்துப் பனங்கனி *
தானெறிந்திட்ட தடம்பெருந்தோளினால் *
வானவர்கோன்விட வந்தமழைதடுத்து *
ஆனிரைகாத்தானாலின்றுமுற்றும் அவையுய்யக்கொண்டானாலின்றுமுற்றும். (௪)

தேனுகாஸுரனுடைய உயிரை முடிக்க நினைத்து அத்தேனுகனைப் பனங்கனிமீது வீசியெறிந்த மிகப்பெரிய தோளாலே, கோவர்த்தன பர்வதத்தை யெடுத்து, தேவேந்திரனது ஏவுதலாலே வந்த மழையைத் தவிர்த்துப் பசுக்களின் திரளை ரக்ஷித்தருளின கண்ணபிரானால் இன்று முற்றும்; அப்பசுக்கூட்டத்தை உஜ்ஜீவிப்பித்தருளின கண்ணபிரானால் இன்று முற்றும். (4)

217 ஆய்ச்சியர்சேரி அளைதயிர்பாலுண்டு *
பேர்த்தவர்கண்டுபிடிக்கப் பிடியுண்டு *
வேய்த்தடந்தோளினார் வெண்ணெய்கொள்மாட்டாது * அங்
காப்புண்டிருந்தானாலின்றுமுற்றும் அடியுண்டழுதானாலின்று முற்றும். (௫)

இடைச்சேரியிலே தயிரையும் பாலையும் உண்டு அவ்வளவோடு திருப்தியடையாமல் பின்னையும் ஒருகால் வெண்ணெய் திருடப்புகுந்த வளவிலே அவ்விடைச்சிகள் ஒளித்திருந்து கண்டுபிடிக்க அவர்கள் கையிலே பிடிபட்டு, அவ் விடைச்சிகளுடைய வெண்ணெயைத் தான் நினைத்தபடி கைகொள்ள மாட்டாமல் அவர்கள்வீட்டில் கட்டுண்டிருந்த கண்ணபிரானால் இன்று முற்றும்; அடிபட்டு அழுத கண்ணபிரானால் இன்று முற்றும். ... (5)

218 தள்ளித்தளர்நடையிட்டு இளம்பிள்ளையாய் *
உள்ளத்தினுள்ளே அவளையுறநோக்கி *
கள்ளத்தினால்வந்த பேய்ச்சிமுலையுயிர் *
துள்ளச்சுவைத்தானாலின்றுமுற்றும் துவக்கறவுண்டானாலின்றுமுற்றும். (௬)

தட்டித்தடுமாறித்தளர்நடையிட்டு நடக்க வேண்டும்படியான இளங்குழந்தையாயிருக்கச் செய்தே தன் வடிவைமறைத்துத் தாய்வடிவைக்கொண்ட பூதனையைத் தெரிந்துகொண்டு உறைக்கப்பார்த்து அவளது முலையை உறிஞ்சியுண்டு அவளை முடித்த கண்ணபிரானால் இன்று முடிவோம்; அம்முலையில் தடவிக்கிடந்த விஷத்தில் தனக்கு ஸ்பர்சமில்லாதபடி அம்முலையிற் பாலையுண்ட கண்ணபிரானால் இன்று முடிவோம். (6)

219 மாவலிவேள்வியில் மாணுருவாய்ச்சென்று *
மூவடிதாவென்று இரந்தவிம்மண்ணினை *
ஓரடியிட்டு இரண்டாமடிதன்னிலே *
தாவடியிட்டானாலின்றுமுற்றும் தரணியளந்தானாலின்றுமுற்றும். (௭)

மஹாபலியின் யாகபூமியிலே பிரமசாரி ரூபியாய்ச்சென்று மூன்றடி நிலம்கொடு என்று யாசித்துப் பெற்ற இந்தப் பூமியை, ஓரடியைப் பரப்பவைத்து அளந்து, இரண்டாவது அடியைக் கொண்டு அளக்கத் தொடங்கின வளவிலே மேலுலகங்களடங்கலும் தனக்குள்ளே யாம்படி தாவி அடியிட்ட கண்ணபிரானால் இன்று முற்றும்; பூமியையளந்தவனால் இன்று முற்றும். (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

220 தாழைதண்ணாம்பல் தடம்பெரும்பொய்கைவாய் *
வாழுமுதலை வலைப்பட்டுவாதிப்புண் *
வேழந்துயர்கெட விண்ணோர்பெருமானாய் *
ஆழிபணிகொண்டானாலின்றுமுற்றும் அதற்கருள்செய்தானாலின்றுமுற்றும். (அ)

கரையிலே தாழைகளையும் உள்ளே குளிர்ந்த ஆம்பல் மலர்களையுமுடைய பெரிய தடாகத்தி
னுள்ளேயிருந்த முதலையின் வாயாகிற வலையிலே அகப்பட்டுக்கொண்டு துன்பமடைந்த கஜேந்
திராழ்வானுடைய வருத்தம் தீரும்படி சக்ராயுதத்தாலே முதலையைத் துணித்து ஸ்ரீகஜேந்திராழ்
வானுடைய கைங்கரியத்தை ஸ்வீகரித்தருளின கண்ணபிரானால் இன்று முற்றும். ... (8)

221 வானத்தெழுந்த மழைமுகில்போல் * எங்குங்
கானத்துமேய்ந்து களித்துவிளையாடி *
ஏனத்துருவாய் இடந்தவிம்மண்ணினை *
தானத்தேவைத்தானாலின்றுமுற்றும் தரணியிடந்தானாலின்று முற்றும். (க)

கடலில் நீரைமுகந்துகொண்டு ஆகாசத்திலே கிளம்பின மேகம்போல் கறுத்த நிறத்தை
யுடைய வராஹ ரூபமாய் அவதரித்துக் காடு நிலங்களில் திரிந்து கோரைக்கிழங்கு முதலியவற்
றை யமுதுசெய்து செருக்கி விளையாடி, ஹிரண்யாக்ஷனைக் கொன்று இந்தப் பூமியை இடந்
தெடுத்து வந்து யதாஸ்தானத்தில் வைத்து நிலைநிறுத்தின கண்ணபிரானால் இன்று முற்றும். (9)

222 அங்கமலக்கண்ணன்றன்னை அசோதைக்கு *
மங்கைநல்லார்கள்தாம் வந்துமுறைப்பட்ட *
அங்கவர்சொல்லைப் புதுவைக்கோன்பட்டன்சொல் *
இங்கிவைவல்லவர்க்கு ஏதமொன்றில்லையே. (க0)

இடைப் பெண்கள் கமலக் கண்ணனான கண்ணபிரான் செய்த தீம்பு விஷயமாக
யசோதை யிடத்திலே கதறிச் சொன்ன சொல்லை யுட்கொண்டு பெரியாழ்வார் அரு
ளிச்செய்த இப்பாசுரங்களை ஓதவல்லவர்களுக்கு ஒருவகைக் குற்றமும் இல்லையாம். (10)

அடிவரவு:—ஆற்றில் குண்டலம் தடம் தேனுகன் ஆய்ச்சி தள்ளி மாவலி தாழை வானத்தி
அங்கமலம் தன்னேர்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

இரண்டாம்பத்து முற்றிற்று.

ஸ்ரீ

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து—முதல் திருமொழி—தன்னேராயிரம்.

(யசோதை கண்ணன் மேன்மைகளை யநுஸந்தித்து அவனுக்கு
முலைப்பால் தர அஞ்சினபடியைக் கூறுதல்.)

223 தன்னேராயிரம்பிள்ளைகளோடு தளர்நடையிட்டுவருவான் *
பொன்னேய்நெய்யொடுபாலமுதுண்டு ஒருபுள்ளுவன்பொய்யேதவழும் *
மின்னேர்நுண்ணிடைவஞ்சமகள்கொங்கைதுஞ்ச வாய்வைத்தபிரானே *
அன்னேயுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (க)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தன்னோடு ஒத்த பருவமுள்ள ஆயிரம் பிள்ளைகளோடு கூடத் தளர்நடை நடந்து வருகின்ற கண்ணபிரானே; பொன் போன்ற மெய்யையும் பாலையும் களவு கண்டு புசித்து ஒன்றுமறியாத பிள்ளைபோல் கபடமாகத் தவழ்ந்து வருகின்ற கள்ளனே! பூதனையென்னும் வஞ்சமகளை முடித்த நாயனே! உன்னை அருந்தெய்வமென்று இன்று தெரிந்துகொண்டேன்; ஆதலால், உனக்கு முலைகொடுக்க அஞ்சுகின்றேன்.

[அம்மம்—முலைப்பால்.]

224 பொன்போல்மஞ்சனமாட்டியமுதூட்டிப்போனேன் வருமளவிப்பால் *
கன்பாரச்சகடமிறச்சாடி வடக்கிலகம்புக்கிருந்து*
மின்போல்நுண்ணிடையாளோருகன்னியை வேற்றுருவஞ்செய்துவைத்த*
அன்பாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௨)

பொன்போல் உன்வடிவழகு விளங்கும்படி உன்னை நீராட்டி உண்பித்து யமுனை நீராடப்போன நான் மீண்டு வருவதற்குள்ளே, வலியுள்ள கனத்த சகடம் முறியும்படி உதைத்துத்தள்ளி அவ்வளவோடும் நில்லாமல் இவ்வீட்டுக்கு வடவருகிலுள்ள வீட்டிலே போய் நுழைந்து அவ்வீட்டிலுள்ள அழகிய ஒரு கன்னிகையைக் கலவிக்குறிகளால் வேறுபட்ட வடிவையுடையளாகச் செய்துவைத்த அன்பனே உன்னையறிந்து கொண்டேன்; உனக்கு முலைதர அஞ்சுகின்றேன். (2)

225 கும்மாயத்தொடுவெண்ணெய்விழுங்கிக் குடத்தயிர்சாய்த்துப்பருகி *
பொய்ம்மாயமருதானவசுரரைப் பொன்றுவித்தின்றுநீவந்தாய்*
இம்மாயம்வல்லபிள்ளைநம்பீ உன்னையென்மகனேயென்பர்நின்றார்*
அம்மாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௩)

கண்ணபிரானே! குழையச்சமைத்த பருப்பையும் வெண்ணெயையும் விழுங்கி விட்டுக் குடத்தில் நிறைந்த தயிரை அந்தக்குடத்தோடு சாய்த்துக்குடித்தும், அஸுரர்களால் ஆவேசிக்கப்பெற்ற இரட்டை மருதமரங்களை விழுந்து முறியும்படி பண்ணியும் இவ்வளவு சேஷ்டைகளைச் செய்த நீ இப்போது ஒன்றுஞ்செய்யாதவன் போல வந்து நின்றாய்; இப்படிப்பட்ட மாயச் செய்கைகளைச் செய்யவல்ல பிள்ளாய்! உன்னை உன்வாசியறியாத நடுநின்றவர்கள் என் வயிற்றிற்பிறந்த பிள்ளையாகவே சொல்லாநின்றார்கள்; நானோவென்றால் அப்படி நினையாமல் இவன் ஸர்வேச்வரன் என்று உன்னைத் தெரிந்துகொண்டேன்; ஆதலால் உனக்கு முலைதர அஞ்சுவன்.

226 மையார்கண்மடவாய்ச்சியர்மக்களை மையன்மைசெய்தவர்பின்போய் *
கொய்யார்பூந்துகில்பற்றித்தனிநின்று குற்றம்பலபலசெய்தாய் *
பொய்யாவுன்னைப்புறம்பலபேசுவ புத்தகத்துக்குளகேட்டேன்*
ஐயாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௪)

மையணிந்த கண்ணிகளான இடைப்பெண்களை மோஹிக்கப்பண்ணி அப்பெண்களுடைய புடவைகளைப் பிடித்துக்கொண்டு அப்பெண்களின் பின்னே போய்த் தனியிடத்திலே நின்று எண்ணிறந்த தீமைகளைப் பண்ணினாய் என்று யசோதை சொல்ல; 'நீ கண்டாயோ?' என்று கண்ணன் கேட்க, அதற்கு யசோதை சொல்லுகிறாள்; பொய்யனே! உன்னைக்குறித்து ஒரு புஸ்தகமெழுதுகைக்குத் தகுந்துள்ளனவாம்படி சொல்லப்படுகின்ற பற்பல புன் சொற்களை என் காதால் கேட்டிருக்கின்றேன்; அப்பனே! உன்னை அறிந்து கொண்டேன்; உனக்கு முலை தர அஞ்சுவன். (4)

227 முப்போதுங்கடைந்தீண்டியவெண்ணெயினோடு தயிரும்விழுங்கி *
கப்பாலாயர்கள்காவிற்கொணர்ந்த கலத்தொடுசாய்த்துப்பருகி *
மெய்ப்பாலுண்டழுபிள்ளைகள்போல நீவிம்மிவிம்மியழுகின்ற *
அப்பாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௫)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

முப்போதும் கடைந்து திரண்ட வெண்ணெயையும் தயிரையும் திருடி விழுங்கி, அவ்வளவோடும் நில்லாமல் இடையர்கள் தம் தோளாலே வருந்திச்சுமந்து காவடியில் கொண்டுவந்த பால் முதலியவற்றை அந்தப் பாத்திரத்தோடே சாய்த்துக்குடித்தும் அதனால் பசியடங்கினபடியை மறைக்க நினைத்து, முலைப்பாலை உண்டு (அது பெறாதபோது) அழுகிற பிள்ளைகளைப்போலே விக்கி அழுகின்ற கண்ணா! உன்னை அறிந்துகொண்டேன்; உனக்கு முலைதர அஞ்சுவன் [கொணர்ந்த—கொணர்ந்தவற்றை.] (5)

228 கரும்பார்நீள்வயற்காய்கதிர்ச்செந்நெலைக் கற்றாநிரைமண்டித்தின்ன *
விரும்பாக்கன்றொன்றுகொண்டு விளங்கனிவீழவெறிந்தபிரானே *
சுரும்பார்மென்குழற்கன்னியொருத்திக்குச் சூழ்வலைவைத்துத்திரியும் *
அரம்பாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௬)

பரந்த வயலிலே கரும்புபோலக் கிளர்ந்துள்ள பசுங்காயான கதிரையுடைய செந்நெல் தானியத்தைக் கன்றுகளும் பசுக்களும் விரும்பித் தின்னு நிற்கச்செய்தே அத்திரளிலே சேர்ந்து மேய்கிறப்போல் பாவனை செய்த அஸுரா விஷ்டமான ஒரு கன்றை அதன் செய்கைகளினாலே 'இது ஆஸுரம்' என்று அறிந்து அதனைக் குணிலாகக்கொண்டு, விளாம்பழங்கள் உதிரும்படி வீசி எறிந்த கண்ணா! கூந்தலழகியான ஒரு கன்னிகையை அகப்படுத்திக் கொள்வதற்காகத் திருக்கண்களாகிற வலையை அவள் திறத்திலே விரித்து வைத்துத் திரியாநின்ற நிம்பனே! உன்னை அறிந்துகொண்டேன்; உனக்கு முலைதர அஞ்சுவன்.

229 மருட்டார்மென்குழல்கொண்டுபொழில்புக்கு வாய்வைத்தவ்வாயர்தம்பாடி *
சுருட்டார்மென்குழற்கன்னியர்வந்துன்னைச் சுற்றுந்தொழநின்றசோதி *
பொருட்டாயமிலேனெம்பெருமான் உன்னைப்பெற்றகுற்றமல்லால் * மற்றிங்
கரட்டாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௭)

கேட்டவர்களை மயக்கப் பண்ணுந்திறமையுள்ள வேய்ங்குழலைக் கையிற்கொண்டு சோலைகளிலே போய்ச்சேர்ந்து அந்த வேய்ங்குழலை வாயில் வைத்து ஊத அவ்வளவிலே இடைச்சேரியிலுள்ள பெண்கள் அங்குவந்து உன்னைச் சுற்றிலும் சூழ்ந்துகொண்டு ஸேவிக்க நின்றவனே! இப்படி நிம்பனான உன்னைப் பிள்ளையாகப்பெற்ற குற்றமொன்றை நான் ஸம்பாதித்துக்கொண்டேனத்தனையல்லது, இவ்வூரில் உள்ளாரோடொக்க மற்றொரு பொருட்பங்கையும் பெற்றிலேன்: இப்படிப்பட்ட நிம்பனே! உன்னை அறிந்துகொண்டேன்; உனக்கு முலை தர அஞ்சுவன். (மூன்றாமடியில், பொருள்தாயம் என்க.)

230 வாளாவாகிலுங்காணகில்லார் பிறர்மக்களைமையன்மைசெய்து *
தோளாலிட்டவரோடுதிளைத்து நீசொல்லப்படாதனசெய்தாய் *
கேளாராயர்குலத்தவரிப்பழி கேட்டேன்வாழ்வில்லை * நந்தற்
காளாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௮)

நந்தகுமாரா! நீ நிம்பு செய்யாமல் வெறுமனே யிருந்தாலும் உன் மினுக்குப் பொறாதவர்கள் உன்னைக் காணவேண்டார்கள்; இப்படியிருக்கச் செய்தேயும் அயற்பெண்டுகளை மயக்கி அவர்களைத் தோளாலும் அணைத்திட்டு அப்பெண்களோடு விளையாடி வாயாற் சொல்லக் கூடாத காரியங்களைச் செய்தாய்; இடைக்குலத்துத் தலைவர்கள் இப்படிப்பட்ட பழிகளைக் கேட்கப் பொறார்கள்; ஐயோ! இனி எனக்கு இவ்வூரில் வாழ்ந்திருக்க முடியாதுகாண்; உன்னை யறிந்துகொண்டேன்; உனக்கு முலை தர அஞ்சுவன். (பா—நந்தன் காளாய்.) (8)

231 தாய்மார்மோர்விற்கப்போவர் தகப்பன்மார்கற்றாநிரைப்பின்புபோவர் *
நீயாய்ப்பாடியிளங்கன்னிமார்களை நேர்படவேகொண்டுபோதி *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

காய்வார்க்கென்றுமுகப்பனவேசெய்து கண்டார்கழறத்திரியும் *
ஆயாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௯)

கண்ணா! பெண்களை அகம்பார்க்க வைத்துவிட்டுத் தாய்மாரானவர் மோர் விற்கப் போவர்கள்; அப் பெண்களின் தகப்பன்மாரானவர் பசுக்களின் பின்னே போய்விடுவர்கள்; அப்படிப்பட்ட ஸமயத்திலே நீ இடைச்சேரியில் தத்தம் வீடுகளில் தனியிருக்கின்ற பெண்களை நினைத்தபடி கொண்டுபோகா நின்றாய்; உன்மேல் பகை பாராட்டுகின்ற கம்ஸாதிகளுக்கு எக்காலும் வாயாரப் பழித்து ஸந்தோஷப்படக் கூடிய செய்கைகளையே நீ செய்துகொண்டு உனக்கு அநுகூலராயுள்ளவர்களும் உன்னை வெறுத்துச் சொல்லும்படி திரியா நின்றாய்; ஆயனே! உன்னை அறிந்து கொண்டேன், உனக்கு முலைதர அஞ்சுவன்.

232 தொத்தார்பூங்குழற்கன்னியொருத்தியைச் சோலைத்தடங்கொண்டுபுக்கு *
முத்தார்கொங்கைபுணர்ந்திராநாழிகை மூவேழுசென்றபின்வந்தாய் *
ஒத்தார்க்கொத்தனபேசுவர் உன்னையுரப்பவேநானொன்றும்மாட்டேன் *
அத்தாவுன்னையறிந்துகொண்டேன் உனக்கஞ்சுவனம்மந்தரவே. (௰)

ஒருகன்னிகையைச் சோலையிலே நேற்றிரவு அழைத்துக்கொண்டு போய் அவளுடைய முத்து வடமணிந்த முலையோடு புணர்ந்து மூன்றுயாமங்கள் கடந்தபிறகு வீட்டுக்கு வந்துசேர்ந்தாய்; நீ இவ்வாறு தீமை செய்கையாலே உன்னைக்குறித்து வேண்டுவார் வேண்டினபடி சொல்லுவார்கள்; இப்படி அவர்கள் சொல்லாதிருக்கும்படி உன்னை சிக்ஷிக்க நான் கொஞ்சமும் சக்தையல்லேன்; நாயனே! உன்னை அறிந்துகொண்டேன்; அம்மம் தர அஞ்சுவன். (10)

233 காரார்மேனிநிறத்தெம்பிரானைக் கடிகமழ்பூங்குழலாய்ச்சி *
ஆராவின்னமுதுண்ணத்தருவன்நான் அம்மந்தாரேனென்றமாற்றம் *
பாரார்தொல்புகழான்புதுவைமன்னன் பட்டர்பிரான்சொன்னபாடல் *
ஏராரின்னிசைமாலைவல்லார் இருடிகேசனடியாரே. (௧௧)

மேகவண்ணனான கண்ணனைக் குறித்து யசோதை "ஸ்தந்யத்தை இதுவரை உனக்கு உண்ணத் தந்துகொண்டிருந்த நான் இன்று உன் ஸ்வரூபத்தை உள்ளபடி அறிந்தேனாகையால் இனித் தர அஞ்சுவன்" என்று சொன்ன பாசுரத்தை யுட்கொண்டு பெரியாழ்வாருளிய பாடலாகிய இவ்வழகிய சொல் மாலையை ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு அடிமைசெய்யப் பெறுவர்கள். (11)

அடிவரவு :—தன்னேர் பொன் கும்மாயம் மையார் முப்போது கரும்பு மருட்டார் வாளா தாய்மார் தொத்தார் காரார் அஞ்சனம். ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து—இரண்டாந்திருமொழி—அஞ்சனவண்ணனை.

(கண்ணனைப் பசுமேய்க்கக் காட்டுக்கனுப்பின யசோதை பிற்கு வருந்திக் கதறுதல்.)

234 அஞ்சனவண்ணனை ஆயர்கோலக்கொழுந்தினை *
மஞ்சனமாட்டி மனைகடோறுந்திரியாமே *
கஞ்சனைக்காய்ந்த கழலடிநோவக்கன்றின்பின் *
என்செயப்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (௧)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அஞ்சனவண்ணனான என் கண்ணனை வீடுகள் தோறும் இஷ்டப்படி திரியவொட்டாமல் சாலையில் குளிர்க்குளிர ஓட்டி, கம்ஸனைச் சிறி புதைத்த வீரக்கழலணிந்த திருவடிகள் நோம்படியாகக் கன்றுகளின் பின்னே மேய்க்கப்போவென்று எதுக்காகப் போகவிட்டேன்! மஹாபாபம் மஹாபாபம்!

235 பற்றுமஞ்சள்பூசிப் பாவைமாரோடுபாடியில் *
சிற்றில்சிதைத்தெங்கும் தீமைசெய்துதிரியாமே *
கற்றுத்தூளியுடை வேடர்கானிடைக்கன்றின்பின் *
எற்றுக்கென்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (உ)

என் கண்ணன், திருவாய்ப்பாடியில் பற்றுப்பார்க்கும் மஞ்சளைத் திருமேனியெங்கும் பெண்கள் கையால் தனித்தனியே பூசப்பெற்று, அப்பெண்கள் இழைக்கும் சிற்றில்களை உதைத்தழித்து இப்படி எல்லாவிடங்களிலும் தீம்புகளைச் செய்து கொண்டு அவ்விடைப் பெண்களோடே திரியவொட்டாமல், கன்றுகளின் தூள்களை புடைத்தாய் வேடர்களுக்கிருப்பிடமான காட்டிலே கன்றுகளின் பின்னே திரியும்படி அவனை எதுக்காக அனுப்பினேன், ஐயோ!. (2)

236 நன்மணிமேகலை நங்கைமாரொடுநாடோறும் *
பொன்மணிமேனி புழுதியாடித்திரியாமே *
கன்மணிநின்றதிர் கானதரிடைக்கன்றின்பின் *
என்மணிவண்ணனைப்போக்கினேன் எல்லேபாவமே. (௩)

என் கண்ணன், லோகோத்தரமான நவமணிகள் பதித்த மேகலையையணிந்துள்ள யுவதிகளோடுகூட நாடோறும் புழுதி விளையாடித் திரியவொண்ணாதபடி, மலையிலே மணியினோசைபோலப் பிரதித்வநி யெழும்பப் பெற்றுள்ள பயங்கரமான காட்டுவழியிலே வருந்தும்படியாகக் கன்றுகளின் பின்னே அவனைப் போகவிட்டேனே! ஐயோ பாவமே! (8)

237 வண்ணக்கருங்குழல் மாதர்வந்தலர்தூற்றிட *
பண்ணிப்பலசெய்து இப்பாடியெங்குந்திரியாமே *
கண்ணுக்கினியானைக் கானதரிடைக்கன்றின்பின் *
என்னற்கரியானைப்போக்கினேன் எல்லேபாவமே. (௪)

கண்ணுக்கினிய என் கண்ணன், இத்திருவாய்ப்பாடி முழுவதும் பல தீமைகளைச் செய்து, பெண்பிள்ளைகள் என்னிடம் ஓடிவந்து பழிதூற்றும்படியாகப் பண்ணிக்கொண்டு திரியவொட்டாமல் அவனைக் காட்டுவழியிலே கன்றுகளின் பின்னே திரியும்படி அனுப்பினேனே! ஐயோ பாவமே. (4)

238 அவ்வவ்விடம்புக்கு அவ்வாயர்பெண்டிர்க்கணுக்கனாய் *
கோவ்வைக்கனிவாய்கொடுத்துக் கூழைமைசெய்யாமே *
எவ்வுஞ்சிலையுடை வேடர்கானிடைக்கன்றின்பின் *
தெய்வத்தலைவனைப்போக்கினேன் எல்லேபாவமே. (௫)

தேவாதிதேவனான கண்ணன், மச்சுமாளிகை முதலான அவ்வவ்விடங்களில் ஏகாந்தமாகப்புகுந்து இடைப்பெண்களுக்கு அந்தரங்கனாய் அவர்களுக்குக் கோவைப்பழம்போன்ற தன் அதரத்தை போக்யமாகக் கொடுத்துக்கொண்டு கூழ்மைத்தனமடித்துத் திரியவொட்டாமல், துன்பத்தை விளைக்குமதான வில்லைக் கையிலேயுடைய வேடர்களுக்கு இருப்பிடமான காட்டிலே கன்றின் பின் அவனைப் போக்கினேனே!. ஐயோ பாவமே!. (5)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

239 மிடறுமெழுமெழுத்தோட வெண்ணெய்விழுங்கிப்போய் *
படிறுபலசெய்து இப்பாடியெங்குந்திரியாமே *
கடிறுபலதிரி கானதரிடைக்கன்றின்பின் *
இடறவென்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (௬)

என் கண்ணன், வெண்ணெய் கழுத்திலே உறுத்தாமல் மெழு மெழுத்து ஓடும்படி விழுங்கி விட்டுப் பிறரகங்களுக்குப்போய்ப் பல கள்ளவேலைகளைச் செய்துகொண்டு இவ்விடைச்சேரி முழுதும் திரியவொட்டாமல் பல காட்டானைகள் திரியப்பெற்ற காட்டு வழியிலே தட்டித் திரியும்படியாகக் கன்றின் பின் அவனைப் போக்கினேனே!. ஐயோ பாவமே! ... (6)

240 வள்ளிநுடங்கிடை மாதர்வந்தலர்தூற்றிட *
துள்ளிவிளையாடித் தோழரோடுதிரியாமே *
கள்ளியுணங்கு வெங்கானதரிடைக்கன்றின்பின் *
புள்ளின்தலைவனைப்போக்கினேன் எல்லேபாவமே. (௭)

கருடத்வஜனான என் கண்ணன், இடைப்பெண்கள் என்னிடத்தில் வந்து தீமைகளைச் சொல்லிப் பழிதூற்றிக்கொண்டிருக்கச் செய்தே அதை ஒரு பொருளாக மதியாமல் நிலத்தில் நில்லாமல் துள்ளித் தன் தோழர்களோடுகூட விளையாடிக்கொண்டு திரியவொட்டாமல் கள்ளிச்செடியுங்கூடப் பால் வற்றி புலரும்படியாய் மிக்க வெப்பத்தையுடைய காட்டுவழியிலே அவனைக் கன்றின் பின் போக்கினேனே! ஐயோ பாவமே! (7)

241 பன்னிருதிங்கள் வயிற்றிற்கொண்டவப்பாங்கினால் *
என்னிளங்கொங்கை அமுதமூட்டியெடுத்தியான் *
பொன்னடிநோவப் புலரியேகானிற்கன்றின்பின் *
என்னிளஞ்சிங்கத்தைப்போக்கினேன் எல்லேபாவமே. (௮)

எனது சிங்கக்குட்டிபோன்ற கண்ணபிரானை, பன்னிரண்டு மாஸகாலம் என் வயிற்றிலே வைத்து நோக்கின அப்படிப்பட்ட அன்புக்கேற்ப நான் என்னுடைய முலைப்பாலை (அவனுக்கு) உண்ணக் கொடுத்து வளர்த்து இப்படியாக அருமைப்பட நோக்கின பிள்ளையை இன்று விடியற் காலத்திலேயே எழுப்பித் திருவடிகள் நோவக் காட்டிலே கன்றின்பின் போக்கினேனே! ஐயோபாவமே!’(8)

242 குடையுஞ்செருப்புங்கொடாதே தாமோதரனைநான் *
உடையுங்கடியன ஊன்றுவெம்பரற்களுடை *
கடியவெங்கானிடைக் காலடிநோவக்கன்றின்பின் *
கொடியேனென்பிள்ளையைப்போக்கினேன் எல்லேபாவமே. (௯)

கொடியவளான நான் என்மகனான கண்ணபிரானுக்குக் குடையும் செருப்பும் கொடாமல், ஸூர்யனுடைய வெப்பத்தாலே உடைந்து கிடப்பனவாய்க் கூரியனவாய்க்கொண்டு காலிலே உறுத்துவனவாய் இப்படி அதிதீக்ஷ்ணமான பருக்காங்கல்லையுடைய அதியுஷ்ணமான காட்டிலே காலடிநோவக் கன்றின்பின் அவனைப் போக்கினேனே! ஐயோ பாவமே! (9)

243 என்றுமெனக்கினியானை என்மணிவண்ணனை *
கன்றின்பின்போக்கினேனென்று அசோதைகழறிய *
பொன்திகழ்மாடப் புதுவையர்கோன்பட்டன்சொல் *
இன்தமிழ்மாலைகள்வல்லவர்க்கு இடரில்லையே. (௰)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

'எப்போதும் எனக்குப் பரமபோக்யனான கண்ணனைக் கன்றுகளின் பின்னே காட்டில் போகவிட்டேனே! என்று யசோதை மனம்நொந்து சொன்னவற்றையுட்கொண்டு அருளிச்செய்த, பெரியாழ்வாருடைய போக்யமான தமிழ்ச்சொல் மாலைகளை ஓதவல்லவர்களுக்கு ஒருகாலும் துன்பமில்லையாம். (10)

அடிவரவு:—அஞ்சனம் பற்று கன்மணி வண்ணம் அவ்வவ்விடம் மிடறு வள்ளி பன்னிரு குடை என்றும் சீலை. ஆழ்வாரெம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து—மூன்றாந்திருமொழி—சீலைக்குதம்பை.

(காடுசென்று மீண்டுவந்த கண்ணனைக்கண்டு யசோதை உகந்து கூறுதல்.)

244 சீலைக்குதம்பையொருகாதொருகாது செந்நிறமேற்றோன்றிப்பூ *
கோலப்பணைக்கச்சுங்கூறையுடையுங் குளிர்முத்தின்கோடாலமும் *
காலிப்பின்னேவருகின்ற கடல்வண்ணன்வேடத்தைவந்துகாணீர் *
ஞாலத்துப்புத்திரனைப்பெற்றார் நங்கைமீர்நானேமற்றாருமில்லை. (௧)

பெண்காள்! ஒருகாதிலே சீலைத்தக்கையும் மற்றொரு காதிலே செங்காந்தள் பூவும் அழகிய கூறையுடுப்பும் கச்சுப்பட்டையும் முத்துவடமுமாய்க் கன்றுகளின் பின்னே மீண்டு வாராநின்ற கண்ணனுடைய வேஷத்தை வந்துபாருங்கள்! பூமண்டலத்திலே பிள்ளை பெற்றவளென்று சொல்லத் தக்கவள் நான் ஒருத்தியேயாவேன் வேறொருத்தியுமில்லை; (என்கிறாள் யசோதை.) (1)

245 கன்னிநன்மாமதிள்சூழ்தரு பூம்பொழிற்காவிரித்தென்னரங்கம் *
மன்னியசீர்மதுசூதனாகேசவா பாவியேன்வாழ்வுகந்து *
உன்னையிளங்கன்றுமேய்க்கச் சிறுகாலேயூட்டியொருப்படுத்தேன் *
என்னில்மனம்வலியாளொருபெண்ணில்லை யென்குட்டனேமுத்தந்தா. (௨)

அழிவற்ற திருமதிள்களும் பூஞ்சோலைகளும் திருக்காவேரியும் சூழ்ந்த தென் திருவரங்கத்தில் வாழுங் கண்ணபிரானே! பாவியாகிய நான் நமது ஜாதிக்கேற்ற கன்றுமேய்க்கையாகிற ஜீவநத்தை விரும்பி இவ்வலைச்சலுக்கு ஆளல்லாத உன்னை விடியற்காலத்திலேயே உண்ணச்செய்து இளங்கன்றுகளின் பின்னே போக ஸம்மதித்தேன்; இப்படிப்பட்ட என்னிற்காட்டில் கல்நெஞ்சையுடையளான ஒரு ஸ்திரீயும் இவ்வுலகில் இல்லை! எனது குழந்தாய்! எனக்கு ஒரு முத்தங்கொடு. (என்று கண்ணனை யணைகின்றாள்யசோதை.)

246 காடுகளூடுபோய்க் கன்றுகள்மேய்த்துமறியோடி * கார்க்கோடற்பூச்
சூடிவருகின்றதாமோதரா கற்றுத்தூளிகாணுன்னுடம்பு *
பேடைமயிற்சாயற்பின்னைமணாளா நீராட்டமைத்துவைத்தேன் *
ஆடியமுதுசெய்யப்பனுமுண்டிலன் உன்னோடுடனேயுண்பான். (௩)

காடுகளினுள்ளே புகுந்து கன்றுகள் கைகழியப் போகாதபடி அவற்றைத் திருப்புகைக்காக முன்னே ஓடி அக்கன்றுகளை மேய்த்துப் பெரிய கோடல் பூக்களை முடியிலணிந்துகொண்டு மீண்டுவருகின்ற கண்ணபிரானே! உன் உடம்பானது கன்றுகளால் துவைத்துக் கிளப்பப்பட்ட தூளிகள் படியப்பெற்றுள்ளதுகாண்; பெண்மயில்போன்ற சாயலையுடைய நப்பின்னைப்பிராட்டிக்கு மணாளனே! உனது நீராட்டத்துக்கு வேண்டியவற்றை ஸித்தப்படுத்தி வைத்திருக்கின்றேன்; நீராடி அமுது செய்வாயாக; உன்னோடு கூடவே உண்ணவேணுமென்று உன் தகப்பனாரும் உண்ணவில்லை. (3)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

247 கடியார்பொழிலணிவேங்கடவா கரும்போரேறே * நீயுகக்குங்
குடையுஞ்செருப்புங்குழலுந்தருவிக்கக் கொள்ளாதேபோனாய்மாலே *
கடியவெங்கானிடைக்கன்றின்பின்போன சிறுக்குட்டச்செங்கமல
அடியும்வெதும்பி * உன்கண்கள்சிவந்தாயசைந்திட்டாய் நீயெம்பிரான். (௪)

நறுமணச்சோலை சூழ்ந்த திருமலையில் வாழும் கரியவிடைபோன்ற கண்ணனே! நீ விரும்பும் குடையையும் செருப்பையும் வேய்ங்குழலையும் நான் உனக்குக் கொடுக்கச் செய்தேயும் அவற்றை நீ வாங்கிக்கொள்ளாமல் கன்றுகளின் பின்னே கடுகச்சென்றாய்; இப்படி வெவ்விய காட்டிலே கன்றுகளின் பின்னே தொடர்ந்து சென்ற சிறுப்பிள்ளையாகிய உன்னுடைய செந்தாமரைப் பூப்போன்ற திருவடிகளும் கொதிக்கப்பெற்று உன் கண்களும் சிவக்கப்பெற்றாய்; நீ உடம்பு இளைக்கவும் பெற்றாய்.

248 பற்றார்நடுங்கமுன்பாஞ்சசன்னியத்தை வாய்வைத்தபோரேறே * என்
சிற்றாயர்சிங்கமேசீதைமணாளா சிறுக்குட்டச்செங்கண்மாலே *
சிற்றாடையுஞ்சிறுப்பத்திரமும் இவைகட்டிலின்மேல்வைத்துப்போய் *
கற்றாயரோடுநீகன்றுகள்மேய்த்துக் கலந்துடன்வந்தாய்போலும். (௫)

பாரதப்போர்செய்த முற்காலத்தில் பாண்டவர்களுக்குப்பகைவரான துரியோதனாதியர் நடுங்கும்படி சங்கத்தை வாய் வைத்தூதின கண்ணபிரானே! என் சிங்கக்குட்டியே! சீதைமணாளனே! சிறுபிள்ளையாயிருந்தும் புண்டரீகாக்ஷனாய் விளங்குமவனே! நீ உத்தரீயத்தையும் குற்றுடைவாளையும் கட்டிலின் மேலே வைத்து மறந்துபோய்க் கன்று மேய்க்கிற இடைப்பிள்ளைகளுடனே கன்றுகளை மேய்த்துவிட்டுமீண்டு மாலைப்பொழுதிலே அந்த * தன்னேராயிரம் பிள்ளைகளோடே கூடிக்கலந்து வீட்டுக்கு வந்தாயன்றோ?

249 அஞ்சுடராழியுன்கையகத்தேந்தும் அழகாநீபொய்கைபுக்கு *
நஞ்சுமிழ்நாகத்தினோடுபிணங்கவும் நானுயிர்வாழ்ந்திருந்தேன் *
என்செய்யவென்னைவயிறுமறுக்கினாய் ஏதுமோரச்சமில்லை *
கஞ்சன்மனத்துக்குகப்பனவேசெய்தாய் காயாம்பூவண்ணங்கொண்டாய். (௬)

அழகிய திருவாழியைக் கையிலேந்திய அழகப்பிரானே! நீ பொய்கையிலே போய்ப்புகுந்து அவ்விடத்தில் விஷத்தை உமிழாநின்ற காளியனோடு சண்டைசெய்தபோதும் நான் ஜீவித்திருந்தேன்; எதுக்காக என்னை இப்படி வயிறு குழம்பச்செய்கின்றாய்; உனக்குக் கொஞ்சமும் பயமில்லையே; காயாம்பூப்போன்ற வடிவு படைத்தவனே! கம்ஸனுடைய மனஸ்ஸுக்கு உகப்பாயுள்ளவற்றையே செய்யாநின்றாயே! (6)

250 பன்றியுமாமையுமீனமுமாகிய பாற்கடல்வண்ணாவுன்மேல் *
கன்றினுருவாகிமேய்புலத்தேவந்த கள்ளவசுரர்தம்மை *
சென்றுபிடித்துச்சிறுக்கைகளாலே விளங்காயெறிந்தாய்போலும் *
என்றுமென்பிள்ளைக்குத்தீமைசெய்வார்கள் அங்ஙனமாவர்களே. (௭)

வராஹ கூர்ம மத்ஸ்ய ரூபியாய் அவதரித்த கண்ணா! உன்னை நலியவேணுமென்ற எண்ணத்தினால் கன்றாகி, மேயும் நிலத்தில் வந்துகலந்த அஸுரனைச் சிறிய கைகளாலே பிடித்து விளங்காய்களை நோக்கி விட்டெறிந்தாயாமே (என்று கண்ணனை நோக்கிச் சொல்லிவிட்டு) என் பிள்ளையான கண்ணனுக்குத் தீமை செய்பவர்கள் என்றைக்கும் அவ்விளங்காயும் கன்றும் போலே நசித்துப் போகக்கடவர்கள் (என்று கை சுடுக்குகின்றாள் யசோதை.) (7)

251 கேட்டறியாதனகேட்கின்றேன் கேசவா கோவலரிந்திரற்கு *
காட்டியசோறுங்கறியுந்தயிருங் கலந்துடனுண்டாய்போலும் *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

ஊட்டமுதலிலேனுன்றன்னைக்கொண்டு ஒருபோதுமெனக்கரிது *
வாட்டமிலாப்புகழ்வாசுதேவா உன்னையஞ்சுவனின்றுதொட்டும். (அ)

கண்ணா! இதுவரை நான் கேட்டறியாதவற்றை இன்று கேட்கப்பெற்றேன்; (அவற்றில் ஒன்று சொல்லுகிறேன் கேள்:) கோபாலர்கள் இந்திரனைப் பூஜிப்பதற்காகச் சேகரித்த சோற்றையும் கறியையும் தயிரையும் ஒன்றுசேரக் கலந்து உண்டாயாமே; இப்படி உண்ண வல்ல பெருவயிற்றாளனான உன்னை நாடோறும் ஊட்டிவளர்க்கத்தக்க ஊட்டமுதல் எனக்கில்லை; உன்னை வைத்துக்கொண்டு ஒருவேளையும் என்னால் ஆற்றமுடியாது; நித்யமான புகழையுடைய கண்ணா! இன்று முதலாக உன்னைக்குறித்து அஞ்சாநின்றேன். (8)

252 திண்ணார்வெண்சங்குடையாய் திருநாள்திருவோணமின்றேழுநாள் * முன்
பண்ணேர்மொழியாரைக்கூவிமுளையட்டிப் பல்லாண்டுகூறுவித்தேன் *
கண்ணாலஞ்செய்யக் கறியுங்கலத்ததரிசியுமாக்கிவைத்தேன் *
கண்ணாநீநாளைத்தொட்டுக்கன்றின்பின்போகேல் கோலஞ்செய்திங்கேயிரு. (௯)

திடமான வெண்சங்கத்தை ஏந்தியுள்ள கண்ணபிரானே! நீ பிறந்த திருநக்ஷத்திரமாகிய திருவோண நக்ஷத்திரம் இன்றைக்கு ஏழாவது நாளாகும். ஆதலால், முந்துற இன்று மாதர்களை யழைத்து அங்குராரோபணம் பண்ணி மங்களாசாஸனமும் பண்ணுவித்தேன்; (திருவோணத்தினன்று) திருநாட்கொண்டாட்டம் செய்வதற்குக் கறியமுதுகளையும் அமுதுபடியையும் பாத்திரங்களில் சேமித்து வைத்திருக்கின்றேன்; நீ நாளை முதற்கொண்டு கன்றுகளின் பின்னே போகவேண்டா; அலங்காரங்களைச் செய்துகொண்டு இந்த அகத்திலேயே இருக்கக்கடவாயாக. (என்று யசோதைவேண்டுகிறாள்.) (9)

253 புற்றரவல்குலசோதைநல்லாய்ச்சி தன்புத்திரன்கோவிந்தனை *
கற்றினம்மேய்த்துவரக்கண்டுகந்தவள் கற்பித்தமாற்றமெல்லாம் *
செற்றமிலாதவர்வாழ்தருதென்புதுவைவிட்டுசித்தன்சொல் *
கற்றிவைபாடவல்லார் கடல்வண்ணன்கழலிணைகாண்பர்களே. (௧0)

அழகிய யசோதையானவள் தன் மகனான கண்ணபிரான் கன்று மேய்த்துவிட்டு மீண்டுவரக் கண்டு மகிழ்ந்து அம்மகனைக்குறித்து இன்னபடி செய் என்று நியமித்துக்கூறிய வார்த்தைகளையெல்லாம் உட்கொண்டு பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பாசுரங்களை ஓதிப் பாட வல்லவர்கள் எம்பெருமானடியிணையை ஸேவிக்கப் பெறுவர்கள். (10)

அடிவரவு—சீலை கன்னி காடு கடி பற்றார் அஞ்சுடர் பன்றி கேட்டு திண்ணார் புற்று தழை.

ஆழ்வார் எம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து—நான்காந்திருமொழி—தழைகளுந் தொங்கலும்.

(கண்ணன் காட்டில் பசுமேய்த்துத் திரும்பிவரும்போதை மஹோத்ஸவாநுபவம்.)

254 தழைகளுந்தொங்கலுந்ததும்பியெங்குந் தண்ணுமையெக்கமத்தளிதாழ்பீலி *
குழல்களுங்கீதமுமாகியெங்குங் கோவிந்தன்வருகின்றகூட்டங்கண்டு *
மழைகொலோவருகின்றதென்றுசொல்லி மங்கைமார்சாலகவாசல்பற்றி *
நுழைவனர்நிற்பனராகியெங்கும் உள்ளம்விட்டுண்மறந்தொழிந்தனரே, (௧)

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.
acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பல்வகைப்பட்ட மயிற்பீலிக்குடைகள் எங்கும் நிறைந்து, ம்ருதங்கங்களும் ஒருதந்த்ரியையுடைய மத்தளி வாத்யங்களும் பெரிய விசிறிகளும் இலைக்குழல் வேய்க்குழல் என்ற குழல்களும் இவற்றின் பாட்டுக்களும் எங்கும் நிறைய இந்த ஸந்நிவேசத்துடனே கண்ணபிரான் கன்று மேய்த்து மீண்டு வருகின்ற பெரிய திருவோலக்கத்தைப் பார்த்து இடைப்பெண்கள் 'மேக ஸமூஹமோ தான் தரைமேல் நடந்து வருகின்றது!' என்று உல்லேகித்து ஜாலகரந்த்ரங்களைச் சென்று கிட்டி. வ்யாமோஹத்தாலே சிலர் மேல் விழுவதாகச் சாலக வாசல் வழியே நுழையப்புகுவாரும், சிலர் லஜ்ஜாபயத்தாலே திகைத்து நிற்பாருமாகி, கண்ணபிரான் நடந்த வழி முழுவதும் தங்கள் நெஞ்சைப் பரக்கவிட்டு உணவையும் மறந்து விட்டார்கள். (1)

255 வல்லிநுண்ணிதழன்னவாடைகொண்டு வசையறத்திருவரைவிரித்துடுத்து *
பல்லிநுண்பற்றாகவுடைவாள்சாத்திப் பணைக்கச்சுந்திப்பலதழைநடுவே *
முல்லைநன்னறுமலர்வேங்கைமலரணிந்து பல்லாயர்குழாநடுவே *
எல்லியம்போதாகப்பிள்ளைவரும் எதிர்நின்றங்கினவளையிழவேல்மினே. (௨)

கண்ணன், கற்பகக்கொடியின் இதழ்போன்ற ஸுகுமாரமான வஸ்த்ரத்தை அரையிலே ஒழுங்காக விரித்துச் சாத்திக்கொண்டு அதன்மேல் பெரிய கச்சுப்பட்டை கட்டிக்கொண்டு அதன்மேல் கத்தியை பல்லியானது சுவரிலே இடைவெளிபறப் பற்றிக் கிடக்குமாபோலே நெருங்கச் சாத்திக்கொண்டு நல்ல முல்லைப்பூவையும் வேங்கைப் பூவையும் தொடுத்து மாலையாகச் சாத்திக்கொண்டு பல இடைப்பிள்ளைகளின் கூட்டத்தின் நடுவில் பல மயில்தோகைக் குடை நிழலிலே ஸாயம்சந்த்யா காலத்திலே வருவன்; அவன் வரும் வழியில் எதிராக நின்று கைவளைகளை யாரும் இழக்கவேண்டாம்,
(என்கிறுளொருத்தி)

256 சுரிகையுந்தெறிவில்லுஞ்செண்டுகோலும் மேலாடையுந்தோழன்மார்கொண்டோட *
ஒருகையாலொருவன்றன்தோளையூன்றி ஆநிரையினம்மீளக்குறித்தசங்கம் *
வருகையில்வாடியபிள்ளைகண்ணன் மஞ்சளும்மேனியும்வடிவுங்கண்டாள் *
அருகேநின்றாளென்பெண்ணோக்கிக்கண்டாள் அதுகண்டிவ்வூரொன்றுபுணர்க்கின்றதே. (௩)

தன்னோராயிரம் பிள்ளைகள், உடைவாளையும் சுண்டு வில்லையும் பூஞ்செண்டு கோலையும் உத்தரீயத்தையும் கண்ணபிரானுக்கு வேண்டினபோது கொடுக்கைக்காகக் கையிற்கொண்டு பின்னே ஸேவித்துவர, ஒரு உயிர்த்தோழனுடைய தோளை ஒரு கையினால் ஊன்றிக்கொண்டு மற்றொரு கையினால் பசுக்களின் திரள் திரும்பி வருவதற்காக ஊதவேண்டிய சங்கை ஏந்திக்கொண்டு மீண்டுவருமளவில் வாட்டமடைந்துள்ள கண்ணனுடைய பற்று மஞ்சள் மயமான திருமேனியையும் அவயவ ஸமுதாய சோபையையும் என்மகள் அவனருகே நின்று பார்த்தாள்; கொஞ்சம் குறிப்பாகவும் பார்த்தாள்; அவ்வளவையே கொண்டு இச்சேரியிலுள்ளவர்கள் அவனுக்கும் இவளுக்கும் அடியோடில்லாத ஒரு ஸம்பந்தத்தை யேறிட்டுரைக்கின்றனர்களே! (என்கிறுளொருத்தி.) (8)

257 குன்றெடுத்தாநிரைகாத்தபிரான் கோவலனாய்க்குழலூதியூதி *
கன்றுகள்மேய்த்துத்தன்தோழரோடு கலந்துடன்வருவானைத்தெருவிற்கண்டு *
என்றுமிவனையொப்பாரைநங்காய் கண்டறியேனேடிவந்துகாணாய் *
ஒன்றுநில்லாவளைகழன்று துகிலேந்திளமுலையுமென்வசமல்லவே. (௪)

தோழி! இவனைப்போன்றுள்ள வ்யக்தியை எந்த நாளிலும் நான் பார்த்ததில்லை; இங்கே ஓடிவந்து பார்; இடைப்பிள்ளையாகப் பிறந்து கோவர்த்தன மலையைக் குடையாக எடுத்துப் பசுக்களின் திரளைக் காத்தருளினவனும் குழலைப்பலகால் ஊதிக்கொண்டு கன்றுகளை மேய்த்துவிட்டுத் தன் தோழர்களுடன் கூடிக்கொண்டு இவ்வீதி வழியே வருபவனுமான கண்ணபிரானை நான் கண்ட

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வளவிலே எனது புடவை அரையில் தங்காதபடி அவிழ்ந்தொழிய, கைவளைகளும் சற்றும் நிற்கின்றன வில்லை; எனது மெல்லிய முலைகளும் என்வசத்தில் நிற்கின்றன வில்லை. (என்கிறாளொருத்தி.) (4)

258 சுற்றிநின்றுயர்தழைகளிடச் சுருள்பங்கிநேத்திரத்தாலணிந்து *
பற்றிநின்றுயர்கடைத்தலையே பாடவுமாடக்கண்டேன் * அன்றிப்பின்
மற்றொருவற்கென்னைப்பேசலொட்டேன் மாலிருஞ்சோலையெம்மாயற்கல்லால் *
கொற்றவனுக்கிவளாமென்றெண்ணிக் கொடுமின்கள்கொடியாகிற்கோழம்பமே. (6)

இடைப்பிள்ளைகள் தன்னைச் சூழ்ந்துகொண்டு மயில்தோகைக் குடைகளைப் பிடித்துக் கொண்டுவர, தனது சுருண்ட திருக்குழல்களை எடுத்துக் கட்டிப் பீலிக்கண்களாலே அலங்கரித்துக்கொண்டு இடைப் பிள்ளைகளின் கோஷ்டியில் முன்புறத்தில் நின்றுகொண்டு பாட்டுங்கூத்துமாக வரக்கண்டேன்; இனி மேல் அவனுக்கொழிய [அதாவது] திருமாலிருஞ்சோலையில் நித்யவாஸம் பண்ணுகிற எனது தலைவனுக் கொழிய மற்றொருவற்கு என்னை மணமகளாகப் பேசலொட்டேன்; ஆகையினால், தாய்மார்களே! 'நம் மகளான இவள் அத்தலைவனுக்கே உரியள்' என்று நிச்சயித்துவிட்டு அவனுக்கே நாளை வார்த்துத் தத்தம் பண்ணிவிடுங்கள்; அப்படி கொடாவிட்டீர்களேயானால் உங்களுக்கு என்னுறைக்கும் மனக்குழப் பமேயாம். (என்னை நான் முடித்துக் கொள்வேனென்றபடி.) என்கிறாள் ஒரு ஆய்ப்பெண். (5)

259 சிந்துரமிலங்கத்தன்திருநெற்றிமேல் திருத்தியகோறம்புந்திருக்குழலும் *
அந்தரமுழவத்தண்தழைக்காவின்கீழ் வருமாயரொடுடன்வளைகோல்வீச *
அந்தமொன்றில்லாதவாயப்பிள்ளை அறிந்தறிந்திவ்வீதிபோதுமாகில் *
பந்துகொண்டானென்றுவளைத்துவைத்துப் பவளவாய்முறுவலுங்காண்போந்தோழீ!

வாராய் தோழீ! தன்னுடைய திருநெற்றியில் சிந்தூரமும் அதன்மேல் ப்ரகாசமாகச் சாத்தின திலகப்பொட்டும் திருக்குழற்கற்றையும் விளங்கவும், ஆகாசமடங்கலும் மத்தளங்களின் ஓசை யினால் நிறையவும் பீலிக்குடைகளாகிற குளிர்ந்த சோலையின் கீழே தன்னோடு வருகின்ற இடைப் பிள்ளைகளோடுகூட வளைத்த தடிகளை வீசிக்கொண்டு அலங்கார விசேஷங்களில் ஒவ் வொன்றே எல்லைகாணவொண்ணாத இடைப்பிள்ளையான கண்ணபிரான் தன் தன்மையையும் என் தன்மையையும் அறிந்துவைத்தும் இத்தெரு வழியே வருவானாகில் அவனை 'எங்கள் பந்தை வலியப் பிடுங்கிக்கொண்டு போனவனன்றோ இவன்' என்று முறையிட்டு வழிமடக்கி அவனுடைய பவளம் போன்ற அதரத்தையும் புன்சிரிப்பையும் நாம் கண்டு அநுபவிப்போம். (6)

260 சாலப்பன்னிரைப்பின்னேதழைக்காவின்கீழ்த் தன்திருமேனிநின்றொளிதிகழ *
நீலநன்னறுங்குஞ்சிநேத்திரத்தாலணிந்து பல்லாயர்குழாநடுவே *
கோலச்செந்தாமரைக்கண்மிளிரக் குழலூதியிசைபாடிக்குனித்து * ஆயரோ
டாலித்துவருகின்றவாயப்பிள்ளை அழகுகண்டென்மகளயர்க்கின்றதே. (7)

பற்பல பசுத்திரளின் பின்னே பீலிகுடைகளாகிற சோலையின்கீழே தன்னுடைய திருமேனி பளபளவென்று விளங்கும்படி நின்று அழகிய திருக்குழற்கற்றையைப் பீலிக்கண்களினால் அலங் கரித்துக்கொண்டு பல இடையர்களின் கூட்டத்தின் நடுவில் தனது தாமரைக்கண்கள் ஸ்புரிக்கப் பெற்று வேய்க்குழலை ஊதிக்கொண்டும் அதுக்குத்தக்க பாட்டுகளைப் பாடிக்கொண்டும் கூத்தாடிக் கொண்டும் இடைப் பிள்ளைகளுடனே மகிழ்ந்து வருகின்ற இடைப்பிள்ளையான கண்ணபிரா னுடைய வடிவழகை என் மகள் பார்த்து அறிவு அழியா நின்றாள். (என்கிறாள் மற்றொருத்தி.) (7)

261 சிந்துரப்பொடிக்கொண்டுசென்னியப்பித் திருநாமமிட்டங்கோரிலையந்தன்னால் *
அந்தரமின்றித்தன்னெறிபங்கியை அழகியநேத்திரத்தாலணிந்து *

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இந்திரன்போல்வருமாயப்பிள்ளை யெதிர்நின்றங்கினவளையிழவேலென்ன *
சந்தியில்நின்று கண்டீர் நங்கைதன் துகிலொடுசரிவளைகழல்கின்றதே. (௮)

"விபூதி சூர்ணத்தைக் கொணர்ந்து தன்னுடைய திருமுடியிலே அப்பிக்கொண்டும், திருநெற்றியில் ஒரு இலையினாலே ஊர்த்துவபுண்ட்ரம் சாத்திக்கொண்டும், செறிந்திரா நின்றுள்ள திருக்குழலை அழகிய பீலிக்கண்களினால் இடைவெளியில்லாதபடி நெருங்க அலங்கரித்துக் கொண்டும், ஸாக்ஷாத் தேவேந்திரன்போல ஊர்வலம் வருகின்ற இடைப் பிள்ளையான கண்ணபிரானுக்கு எதிர்முகமான இடத்தில் நின்றுகொண்டு கைவளைகளை நீ இழக்க வேண்டா" என்று என்மகளை நோக்கி நான் உறுதிச்சொல்லைச் செய்தேயும் அவள் அவன்வரும் வழியில் நின்றிருந்து தனது துகிலும் கைவளைகளும் கழன்றொழியப் பெற்றாள். இதென்ன அதிசயம்! (என்கிறாளொருத்தி.) ... ... (8)

262 வலங்காதில்மேல்தோன்றிப்பூவணிந்து மல்லிகைவனமாலைமௌவல்மாலை *
சிலிங்காரத்தால்குழல்தாழவிட்டுத் தீங்குழல்வாய்மடுத்தூதியூதி *
அலங்காரத்தால்வருமாயப்பிள்ளை அழகுகண்டென்மகளாசைப்பட்டு *
விலங்கிநில்லாதெதிர்நின்றுகண்டீர் வெள்வளைகழன்றுமெய்ம்மெலிகின்றதே. (௯)

வலது காதில் செங்காந்தள் பூவையும் திருமார்பில் காட்டுமல்லிகை மாலையையும் மாலதீபுஷ்ப மாலையையும் அணிந்துகொண்டு; அலங்காரமாகத் திருக்குழல்களைத் திருமுதுகில் தொங்கவிட்டுக்கொண்டு இனிமையான வேய்ங்குழலைத் திருப்பவளத்தில் வைத்து வகைவகையாக ஊதிக்கொண்டு மேற்சொன்ன அலங்காரங்களோடே வாராநின்ற இடைப்பிள்ளையான கண்ணனுடைய வடிவழகை என் மகள் பார்த்து அவனிடத்தில் காமங்கொண்டு, வழிவிலகி நில்லாமல் அவனுக்கு எதிர்முகமாக நின்று தனது சங்குவளைகள் கழலப்பெற்று உடலும் இளைக்கப் பெற்றாள். (என்கிறாளொருத்தி.) (9)

263 விண்ணின்மீதமரர்கள்விரும்பித்தொழ மிறைத்தாயர்பாடியில்வீதியூடே *
கண்ணன்காலிப்பின்னேயெழுந்தருளக்கண்டு இளவாய்க்கன்னிமார்காமுற்றவண்ணம் *
வண்டமர்பொழிற்புதுவையர்கோன் விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும் *
பண்ணின்பம்வரப்பாடும்பத்தருள்ளார் பரமானவைகுந்தம்நண்ணுவரே. (௧௦)

ஸ்ரீவைகுண்டத்திலே நித்யஸூரிகள் ஆதரித்துத் தொழவும் அவர்களை மதியாமல் மேனணித்து ஸ்ரீக்ருஷ்ணனாய்த் திருவாய்ப்பாடியில் வந்து அவதரித்துத் தெருவேறப் பசுக்களின் பின்னே எழுந்தருள அவ்வழகை இடைப் பெண்கள் பார்த்துக் காமவிகாரமடைந்த படியைப்பற்றிப் பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்து பாசுரங்களையும் இனிமையாகப் பண்ணிலே பாடவல்ல பக்தர்கள் ஸ்ரீவைகுண்டத்தை அடையப் பெறுவார்கள். (10)

அடிவரவு:—தழை வல்லி சரிகை குன்று சுற்றி சித்திரம் சால சித்திரப் பொடி வலம் விண் அட்டு.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து நான்காந்திருமொழி முற்றிற்று.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஶ்ரீ:

மூன்றாம்பத்து—ஐந்தாந்திருமொழி—அட்டுக்குவி.

—————

(கோவர்த்தன மலையின் வருணனை.)

264 அட்டுக்குவிசோற்றுப்பருப்பதமும் தயிர்வாவியும்நெய்யளறுமடங்கப்
பொட்டத்துற்றி * மாரிப்பகைபுணர்த்த பொருமாகடல்வண்ணன்பொறுத்தமலை *
வட்டத்தடங்கண்மடமான்கன்றினை வலைவாய்ப்பற்றிக்கொண்டுகுறமகளிர் *
கோட்டிடைத்தலைப்பால்கொடுத்துவளர்க்கும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௧)

குறப்பெண்கள், கண்ணழகிய மான்குட்டியை வலையிலே பிடித்து அதற்குப் பஞ்சுச்சுருளின் நுனியாலே பாலை எடுத்து ஊட்டி வளர்க்குமிடமான 'கோவர்த்தநம்' என்ற வெற்றிக்குடையான மலை (யாதெனில்?) ஸமைத்துக் குவித்த சோறாகிற பர்வதமும் தயிர்த்திரளாகிற ஓடையும் நெய்யாகிற சேறுமாகிய இவற்றை முழுதும் ஏகபளமாக அமுது செய்துவிட்டு, இதனால் மழையாகிற பகையை உண்டாக்கின கண்ணபிரான் தனது திருக்கைவிரலால் தூக்கின மலையாம்.(1)

265 வழுவொன்றுமில்லாச்செய்கைவானவர்கோன் வலிப்பட்டுமுனிந்துவிடுக்கப்பட்ட *
மழைவந்தெழுநாள்பெய்துமாத்தடுப்ப மதுசூதனெடுத்துமறித்தமலை *
இழவுதரியாததோரீற்றுப்பிடி இளஞ்சீயந்தொடர்ந்துமுடுகுதலும் *
குழவியிடைக்காலிட்டெதிர்ந்துபொருங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௨)

இந்திரபட்டம் பெறுதற்காகச் செய்த ஸாதநாம்சத்தில் ஒரு குறையுமற்ற செய்கைகளையுடையனான தேவேந்திரனது பலாத்காரத்துக்கு உள்பட்டும் அவ்விந்திரனால் கோபத்துடன் ஏவப்பட்டுமுள்ள மேகங்கள் எழுநாளளவும் வர்ஷித்து, பசுக்களை வெளியே போகக்கூடாதபடி தகைய, கண்ணன் எடுத்துத் தலைகீழாகப்பிடித்த மலை எது என்னில்; சிங்கக்குட்டியானது யானைக்குட்டியை வலிவதாகப் பின் தொடர்ந்துவந்து எதிர்த்தவளவிலே, தன் குட்டியின் வருத்தத்தைப் பொறுக்கமாட்டாத அக்குட்டியைப் பெற்ற பெண்யானையானது அந்தக் குட்டியைத் தனது நான்கு கால்களின் நடுவில் அடக்கிக் கொண்டு அந்தச் சிங்கக்குட்டியோடு எதிர்த்துப் போராடப் பெற்ற கோவர்த்தன மலையாம். (2)

266 அம்மைத்தடங்கண்மடவாய்ச்சியரும் ஆனாயருமாநிரையுமலறி *
எம்மைச்சரணேன்றுகொள்ளென்றிரப்ப இலங்காழிக்கையெந்தையெடுத்தமலை *
தம்மைச்சரணென்றதம்பாவையரைப் புனமேய்கின்றமானினங்காண்மினென்று *
கொம்மைப்புயக்குன்றர்சிலைகுனிக்கும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௩)

அழகிய மையணிந்த பெரிய கண்களையுடைய இடைச்சிகளும் கோபாலர்களும் பசுக்கூட்டமும் மழையின் கனத்தால் கதறிக்கூப்பிட்டு 'எம்பிரானே! நீ எமக்கு ரக்ஷகனாயிருக்குந் தன்மையை ஏற்றுக்கொள்ளவேணும்' என்று பிரார்த்திக்க, அவ்வேண்டுகோளின்படியே அவற்றை ரக்ஷிப்பதற்காக ஒளிமிக்க சக்கரபாணிப் பெருமான் எடுத்த மலையாவது எது என்னில்?;—பருத்த புஜங்களையுடைய குறவர்கள், தங்களைச் சரணமென்று பற்றியிருக்கிற தங்கள் பெண்கள் கொல்லைகளிலே வியாபரிக்க, அப்பெண்களின் கண்களைக்கண்டு இவை மான்பேடைகள் என்று பிரமித்து 'நம்முடைய கொல்லையை மேய்ந்து அழிக்கின்ற மான் கூட்டங்களைப் பாருங்கோள்' என்று ஒருவர்க்கொருவர் காட்டி அவற்றின்மேல் அம்புகளை விடுவதாகத் தமது வில்லை வளையாநிற்குமிடமான கோவர்த்தன மலையாம்.(3)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

267 கடுவாய்ச்சினவெங்கட்களிற்றினுக்குக் கவளமெடுத்துக்கொடுப்பானவன்போல் *
அடிவாயுறக்கையிட்டெழப்பறித்திட்டு அமரர்பெருமான்கொண்டுநின்றமலை *
கடல்வாய்ச்சென்றுமேகங்கவிழ்ந்திறங்கிக் கதுவாய்ப்படநீர்முகந்தேறி * எங்குங்
குடவாய்ப்படநின்றுமழைபொழியும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௪)

பயங்கரமான வாயையும் சீற்றத்தையும் செவ்விய கண்களையுமுடைய ஒரு யானைக்குச் சோற்றுக் கபளத்தைத் திரட்டி யெடுத்துக்கொடுக்கின்ற யானைப்பாகனைப்போல, தேவர்களுக்குத் தலைவனான கண்ணபிரான் தனது திருக்கைகளை மலையின்கீழ் வேர்ப்பற்றிலே உறும்படியாகச் செலுத்தி மற்றொரு திருக்கையினாலே மேலே பிடித்துக் கிளப்பிடுங்கித் தாங்கிக்கொண்டு நின்ற மலையாவது ஏது? என்னில்:—மேகங்கள் கடலிடத்துச் சென்று அங்கு இறங்கிக்கவிழ்ந்து கிடந்து கடல் வெறுந்தரையாம்படி அங்குள்ள நீர் முழுவதையும் மொண்டுகொண்டு ஏறி எல்லாவிடத்தும் குடங்களில் நின்றும் நீரைச் சொரியுமாபோலே பொழியாநிற்கப்பெற்ற கோவர்த்தன மலையாம். (4)

268 வானத்திலுள்ளீர்வலியிருள்ளீரேல் அறையோவந்துவாங்குமினென்பவன்போல் *
ஏனத்துருவாகியவீசனெந்தை யிடவனெழவாங்கியெடுத்தமலை *
கானக்களியானைதன்கொம்பிழந்து கதுவாய்மதஞ்சோரத்தன்கையெடுத்து *
கூனற்பிறைவேண்டியண்ணாந்துநிற்குங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (5)

முன்பு வராஹரூபம் கொண்டருளின கண்ணபிரான், "மேலுலகத்திலிருப்பவர்களே! நீங்கள் என்னோடொக்க வல்லமை புள்ளவர்களாயிருப்பீர்களாகில் அறையோ அறை!! இங்கே வந்து இம்மலையைக் கையால் தாங்கிக் கொண்டு நில்லுங்கள்" என்று சொல்லுகிறவன் போன்று, ஒரு மண்கட்டி போலே அநாயாஸமாகக் கிளப்பிடுங்கி எடுத்துக்கொண்டு நிற்கப்பெற்ற மலையாவது:—காட்டு நிலங்களில் செருக்கித் திரியக்கடவதான ஒரு யானையானது கரைபொருது திரியும்போது ஓரிடத்தில் குத்துண்டு முறிந்த தன் தந்தத்தை இழந்ததனால் அக்கொம்பு முறிந்து புண்பட்ட வாயிலே மதநீரானது ஒழுகாநிற்க, தனது துதிக்கையை உயரத்தூக்கி ஆகாசத்தில் தோற்றுகின்ற வளைந்த அழகிய பிறையைத் தானிழந்த கொம்பாக ப்ரமித்து அதைப் பறித்துக்கொள்ள விரும்பி மேல் நோக்கிப் பார்த்துக்கொண்டிருக்கப் பெற்ற கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையாம். (5)

269 செப்பாடுடையதிருமாலவன்றன் செந்தாமரைக்கைவிரலைந்தினையும் *
கப்பாகமடுத்துமணிநெடுந்தோள் காம்பாகக்கொடுத்துக்கவித்தமலை *
எப்பாடும்பரந்திழிதெள்ளருவி யிலங்குமணிமுத்துவடம்பிறழ *
குப்பாயமெனநின்றுகாட்சிதருங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௬)

செவ்வைக்குணத்தை யுடைய கண்ணபிரான் தன்னுடைய செந்தாமரை மலர்போன்ற திருக்கையில் உள்ள ஐந்து விரல்களையும் மலையாகிற குடைக்குக் காம்படியிலுண்டான கிளைக்கொம்புகளாக அமைத்து அழகிய நீண்ட திருத்தோள்களை அந்த மலைக்குடைக்குத் தாங்கு காம்பாகக்கொடுத்துத் தலைகீழாகக் கவித்த மலையாவது:—எல்லாப் பக்கங்களிலும் பரவிப் பெருகாநின்ற தெளிந்த சுனைநீரருவிகளானவை அழகிய முக்தாஹாரம் போலத் தனித்தனியே ப்ரகாசிக்க, 'கண்ணபிரானுக்கு இது ஒரு முத்துச்சட்டை' யென்று சொல்லும்படியாகக் காணப்பெற்ற கோவர்த்தனமென்னும் குடையாம்.

270 படங்கள்பலவுமுடைப்பாம்பரையன் படர்பூமியைத்தாங்கிக்கிடப்பவன்போல் *
தடங்கைவிரலைந்தும்மலரவைத்துத் தாமோதரன்தாங்குதடவரைதான் *
அடங்கச்சென்றிலங்கையையீடழித்த அனுமன்புகழ்பாடித்தங்குட்டன்களை *
குடங்கைக்கொண்டுமந்திகள்கண்வளர்த்துங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௭)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பல படங்களையுடைய ஆதிசேஷன் பரம்பின பூமியைத் தன் தலைகளினால் தாங்கிக்கொண்டிருப்பது போல, கண்ணபிரான் தனது பெரிய திருக்கைகளிலுள்ள ஐந்து விரல்களையும் மலர்த்தி (விரித்து) அவற்றாலே தாங்கப்பெற்ற பெரிய மலையாவது:— பெண் குரங்குகளானவை, லங்காநகரத்தேறப்போய் அவ்வூர் முழுவதையும் சீர்கெடும்படி பங்கப்படுத்தின சிறிய திருவடியினுடைய கீர்த்தியைப் பாடிக்கொண்டு தமது குட்டிகளைக் கைத்தலத்தில் படுக்கவைத்துக்கொண்டு சீராட்டியுறக்கப்பெற்ற கோவர்த்தனமாம். (7)

271 சலமாமுகிற்பல்கணப்போர்க்களத்துச் சரமாரிபொழிந்தெங்கும்பூசலிட்டு *
நலிவானுறக்கேடகங்கோப்பவன்போல் நாராயணன்முன்முகங்காத்தமலை *
இலைவேய்குரம்பைத்தவமாமுனிவர் இருந்தார்நடுவேசென்றணுர்சொரிய *
கொலைவாய்ச்சினவேங்கைகள்நின்றுறங்குங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (அ)

நீர் கொண்டெழுந்த காளமேகங்களினுடைய பல திரளானது இடைச்சேரியடங்கலும் கர்ஜனை பண்ணிக்கொண்டு யுத்தரங்கத்தில் சரமழை பொழியுமாபோலே நீர் மழையைப் பொழிந்து ஸர்வ ஜந்துக்களையும் வருத்தப்புகுந்த வளவிலே கண்ணபிரான் கடகு கோத்துப் பிடிக்குமவன்போல் குடையாக எடுத்துப் பிடித்து முன்னுறவருகிற மழையினாரம்பத்தைத் தகைந்த மலையாவது:— கொல்லுகின்ற வாயையும் கோபத்தையுமுடைய புலிகளானவை பர்ணசாலைகளில் இருக்கின்ற தபஸ்விகளான மஹர்ஷிகளின் திரளிலே புகுர, அங்குள்ள ரிஷிகள் தமது கழுத்தைச் சொறிய அந்த ஸுக பாரவச்யத்தினால், அப்புலிகள் நின்றபடியே உறங்கப்பெற்ற கோவர்த்தனமாம். (8)

272 வன்பேய்முலையுண்ட தோர்வாயுடையன் வன்தூணெனநின்றதோர்வன்பரத்தை *
தன்பேரிட்டுக்கொண்டுதரணிதன்னில் தாமோதரன்தாங்குதடவரைதான் *
முன்பேவழிகாட்டமுசுக்கணங்கள் முதுகிற்பெய்துதம்முடைக்குட்டன்களை *
கொம்பேற்றியிருந்துகுதிபயிற்றும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௯)

கல்நெஞ்சளான பூதனையினுடையவிஷந்தடவின முலையை யுறிஞ்சியுண்ட வாயையுடையனான கண்ணபிரான் கோவர்த்தனன் என்ற தனது திருநாமத்தை மலைக்கு இட்டு, பலிஷ்டமானதொரு பாரத்தைத் தாங்கிக்கொண்டு நின்ற ஒரு வலிய தூண்போல நின்று இந்நிலவுலகத்தில்தான் தாங்கிக்கொண்டு நின்ற பெரிய மலையாவது:—முசு என்ற சாதிக்குரங்குகளின் திரள்கள் தம் குட்டிகளுக்கு முற்கவே ஒரு கிளையில் நின்றும் மற்றொரு கிளையில் பாயும் வழியைக் காட்டுகைக்காகத் தம் தம் குட்டிகளைத் தம் தம் முதுகிலே கட்டிக்கொண்டு போய் மாக்கொம்பிலே ஏற்றிவைத்து அக்கொம்பில்நின்றும் மற்றொரு கொம்பில் குதித்தலைப் பழக்குவிக்கப்பெற்ற கோவர்த்தனமென்னும் கொற்றக் குடையாம். (9)

273 கொடியேறுசெந்தாமரைக்கைவிரல்கள் கோலமுமழிந்திலவாடிற்றில *
வடிவேறுதிருவுகிர்நொந்துமில மணிவண்ணன்மலையுமோர்சம்பிரதம் *
முடியேறியமாமுகிற்பல்கணங்கள் முன்னெற்றிநரைத்தனபோல * எங்கும்
குடியேறியிருந்துமழைபொழியுங் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடையே. (௧௦)

ரேகாரூபமான த்வஜத்தையுடைய செந்தாமரை மலர்போன்ற கண்ணனது திருக்கையும் அதிலுள்ள திருவிரல்களும் ஏழுநாள் ஒரு படிப்பட மலையைத் தாங்கிக்கொண்டு நின்றதனால் இயற்கையான அழகும் அழியப் பெறவில்லை; வாட்டமும் பெறவில்லை; அழகமைந்த திருநகங்களும் நோவெடுக்கவில்லை. ஆகையால் நீலமணி போன்ற நிறத்தனான கண்ணபிரான் எடுத்தருளின மலையும் அம்மலையை இவன் எடுத்து நின்ற நிலைமையும் ஒரு இந்திர ஜாலவித்தையாயிருக்கின்றது; அந்த மலை எது? என்னில்; கொடுமுடியின்மேலேறிய காளமேகங்களினுடைய பல ஸமூஹங்களானவை மலைச்சாரல்களிலெல்லாம் மழை பெய்து வெளுத்ததனால் அம்மலையினுடைய முன்புறம் நரைத்தாற்போல் தோற்றும்படி கொடுமுடியின்மேல் குடிபுகுந்திருக்கப் பெற்ற கோவர்த்தனமென்னும் கொற்றக்குடையாம். (10)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

274 அரவிற்பள்ளிகொண்டரவந்துரந்திட்டு அரவப்பகையூர்திபவனுடைய *
குரவிற்கொடிமுல்லைகள்நின்றுறங்கும் கோவர்த்தனமென்னுங்கொற்றக்குடைமேல் *
திருவிற்பொலிமறைவாணர்புத்தூர்த்திகழ் பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும் *
பரவுமனநன்குடைப்பத்தருள்ளார் பரமானவைகுந்தம்நண்ணுவரே. (கக)

திருவனந்தாழ்வான் மீது பள்ளி கொள்பவனும் காளியநாகத்தை ஒழித்தருளினவனும் கருடனை வாஹனமாக வுடையவனுமான கண்ணனுடைய:—குரவமரத்தில் முல்லைக்கொடிகள் படர்ந்து அமைந்திருக்கப் பெற்ற கோவர்த்தனமென்ற கொற்றக்குடை விஷயமாகப் பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களையும் ஓதுதற்குரிய வளம் படைத்த பக்தர்களாயிருப்பார் பரமபதத்தை அடையப் பெறுவர்.

அடிவரவு:— அட்டு வழுவம்மை கடுவான் செப்பாடுபடம் சலம்வன்பேய் கொடி அரவில் நாவல்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து—ஐந்தாம் திருமொழி முற்றிற்று.

மூன்றாம்பத்து—ஆறாந்திருமொழி—நாவலம்பெரிய.

(கண்ணனுடைய வேணுகானத்தின் சிறப்பு)

275 நாவலம்பெரியதீவினில்வாழும் நங்கைமீர்களிதோரற்புதங்கேளீர் *
தூவலம்புரியுடையதிருமால் தூயவாயிற்குழலோசைவழியே *
கோவலர்சிறுமியரிளங்கொங்கைகுதுகலிப்ப உடலுளவிழ்ந்து * எங்குங்
காவலுங்கடந்துகயிறுமாலையாகி வந்துகவிழ்ந்துநின்றனரே. (க)

அழகிய விசாலமான ஜம்பூத்வீபத்தில் வாழ்கின்ற பெண்காள்! ஒரு ஆச்சரியமான இச்செய்தியைக் கேளுங்கள்; (யாது அற்புத மென்னில்;) சுத்தமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடையனான கண்ணபிரானுடைய அழகிய திருப்பவளத்தில் வைத்து ஊதப்பெற்ற புல்லாங்குழலினுடைய இசையின் வழியாக, இடைப்பெண்ணினுடைய இள முலைகளானவை (நாங்கள் முன்னே போகிறோமென்று நெரித்து) ஆசைப்பட்ட உடலும் மனமும் சிதிலமாகப்பெற்று, காவல்களையும் கடந்து கயிற்றில் தொடுத்த பூமாலைகள் போலத் திரள் திரளாக வந்து கண்ணனைக்கண்டு வெள்கிக் கவிழ்தலையிட்டு நின்றார்கள். (1)

276 இடவணரையிடத்தோளொடுசாய்த்து இருகைகூடப்புருவம்நெரிந்தேற *
குடவயிறுபடவாய்கடைகூடக் கோவிந்தன்குழல்கொடூதினபோது *
மடமயில்களொடுமான்பிணைபோலே மங்கைமார்கள்மலர்க்கூந்தலவிழ *
உடைநெகிழவோர்கையால்துகில்பற்றி ஒல்கியோடரிக்கணோட நின்றனரே. (உ)

கண்ணபிரான் தனது இடப்பக்கத்து மோவாய்க்கட்டையை இடத்தோள் பக்கமாகச்சாய்த்து இரண்டு திருக்கைகளும் குழலொடு கூடவும், புருவங்கள் நெரித்து மேலே கிளரவும் வயிறானது குடம்போலக் குமிழ்த்துத் தோற்றவும் வாயானது இரண்டருகுங் குவியவும் இவ்வாறான நிலைமையாக வேய்ங் குழலைக் கொண்டு ஊதின காலத்திலே, அழகிய மயில்களையும் மான் பேடைகளையும் போன்றுள்ள யுவதிகள் தங்களுடைய மலரணிந்த கூந்தல் முடி அவிழ்ந்து அலையவும் அரைப்புடவை நெகிழவும், நெகிழ்ந்த அத்துகிலை ஒரு கையாலே பிடித்துக்கொண்டு துவண்டு செவ்வரி கருவரிகள் ஓடாநின்ற கண்கள் கண்ணபிரான் பக்கலிலே ஓடப்பெற்றனர். (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

277 வானிளவரசுவைகுந்தக்குட்டன் வாசுதேவன்மதுரைமன்னன் * நந்தர்
கோனிளவரசுகோவலர்குட்டன் கோவிந்தன்குழல்கொடூதினபோது *
வானிளம்படியர்வந்துவந்தீண்டி மனமுருகிமலர்க்கண்கள்பனிப்ப *
தேனளவுசெறிகூந்தலவிழச் சென்னிவேர்ப்பச்செவிசேர்த்துநின்றனரே. (௩)

பரமபதத்துக்கு யுவராஜனும் அப் பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளும் பரிந்து நோக்கவேண்டும்படியான பருவத்தையுடையவனும் வஸுதேவர்க்கு மகனாகப் பிறந்தவனும் வட மதுரைக்கு அரசனும் நந்தகோபர்க்குப் பிள்ளையாய் வளர்ந்து இளவரசனும் இடையர்களுக்கும் பரிந்து நோக்க வேண்டும்படியான பிள்ளையாயுமுள்ள கண்ணபிரான் குழல்கொண்டு ஊதினபோது சுவர்க்கலோகத்திலுள்ள மாதர் ஸ்ரீப்ருந்தாவனத்திலே திரள் திரளாக வந்து குவிந்து தங்கள் நெஞ்சு உருகப்பெற்று, குவளைமலர்போலழகிய கண்களினின்று ஆநந்தநீர் ததும்பி விழ, தேனோடு கூடின செறிந்த மயிர்முடியானது அவிழ, நெற்றியானது வேர்வையுடைய இவ்வகை விகாரங்களை யடைந்து தம் காதுகளை அக்குழலோசையிலே மடுத்துத் திகைத்தவர்களாகி நின்றார்கள்.(3)

278 தேனுகன்பிலம்பன்காளியனென்னுந் தீப்பப்பூடுகளடங்கவுழக்கி *
கானகம்படியுலாவியுலாவிக் கருஞ்சிறுக்கன்குழலூதினபோது *
மேனகையொடுதிலோத்தமையரம்பை உருப்பசியரவர்வெள்கிமயங்கி *
வானகம்படியில்வாய்திறப்பின்றி ஆடல்பாடலவைமாறினர்தாமே. (௪)

தேநுகாஸுரன் ப்ரலம்பாஸுரன் காளியநாகம் என்று சொல்லப்படுகிற கொடிய பூண்டுகளையெல்லாம் தொலைத்து, காட்டுக்குள்ளே இயற்கையாக எப்போதும் உலாவிக்கொண்டு கரிய திருமேனியையுடைய சிறுபிள்ளையான கண்ணன் குழல் ஊதினபோது, மேனகையும் திலோத்தமையும் ரம்பையும் ஊர்வசியும் ஆகிற அப்ஸரஸ் ஸ்திரீகள் அக்குழலோசையைக் கேட்டு மோஹமடைந்து வெட்கப்பட்டுத் தேவலோகத்திலும் பூலோகத்திலும் வாயைத் திறவாமல் ஆடுகையையும் பாடுகையையும் தாமாகவே விட்டொழிந்தனர். (4)

279 முன்னரசிங்கமதாகியவுணன்முக்கியத்தைமுடிப்பான் மூவுலகில் *
மன்னரஞ்சும்மதுசூதனன்வாயிற்குழலினோசை செவியைப்பற்றிவாங்க *
நன்னரம்புடையதும்புருவோடு நாரதனுந்தந்தம்வீணைமறந்து *
கின்னரமிதுனங்களுந்தந்தங்கின்னரம் தொடுகிலோமென்றனரே. (௫)

முற்காலத்திலே நரஸிம்ஹ ரூபங்கொண்டு ஹிரண்யாஸுரனுடைய மேன்மையை முடித்தவனும் மூன்று லோகத்திலுமுள்ள அரசர்கள் தனக்கு அஞ்சும்படியாயிருப்பவனுமான கண்ணபிரானுடைய வாயில்வைத்து ஊதப்பெற்ற வேய்ங்குழலினுடைய ஸ்வரமானது காதுகளைப் பிடித்திழுக்க, நல்ல வீணையைக் கையிலுடைய தும்புரு முனிவனும் நாரத மஹர்ஷியும் தங்கள் தங்களுடைய வீணையை மறந்துவிட, கிந்நரமிதுனம் என்று பேர் பெற்றுள்ளவர்களும் தங்கள் தங்கள் கின்னர வாத்தியங்களை 'இனித் தொடக்கடவோமல்லோம்' என்று விட்டனர். (5)

280 செம்பெருந்தடங்கண்ணன்திரடோளன் தேவகிசிறுவன்தேவர்கள்சிங்கம் *
நம்பரமனிந்நாள்குழலூதக்கேட்டவர்கள் இடருற்றனகேளீர் *
அம்பரந்திரியுங்காந்தப்பரெல்லாம் அமுதகீதவலையால்சுருக்குண்டு *
நம்பரமன்றென்றுநாணிமயங்கி நைந்துசோர்ந்துகைம்மறித்துநின்றனரே. (௬)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சிவந்து மிகவும் பெரிய திருக்கண்களையும் பருத்த தோள்களையுமுடையனும் தேவகியின் பிள்ளையாய் தேவகிசிறுவனுமாய் நமக்கு ஸ்வாமியான பரம புருஷனுமிராநின்ற கண்ணபிரான் இன்றைய தினம் வேய்ங்குழலை ஊத, அதன் இசையைக் கேட்டவர்கள் அவஸ்தைப்பட்ட வகைகளைச் சொல்லுகிறேன் கேளுங்கள்: அந்த அவஸ்தை யாதெனில், ஆகாசத்திலே திரியாநின்ற கந்தருவர் அனைவரும் அமுதம்போல் இனிதான குழலிசையாகிற வலையிலே அகப்பட்டு, பாடுகையாகிற சுமை இனி நம்முடையதன்றென்று அறுதியிட்டு முன்பெல்லாம் பாடித்திரிந்ததற்கும் வெட்கப்பட்டு அறிவழிந்து மனம் சிதிலமாகப்பெற்று சரீரமும் கட்டுக்குலையப் பெற்று இனி நாம் ஒருவனைக் கைத்தொழிலுக்கும் படவோமல்லோம் என்று கையை மடக்கிக்கொண்டு நின்றார்கள். (6)

281 புவியுள்நான்கண்டதோரற்புதங்கேளீர் பூணிமேய்க்குமிளங்கோவலர்கூட்டத்
தவையுள் * நாகத்தணையான்குழலூத அமரலோகத்தளவுஞ்சென்றிசைப்ப *
அவியுணாமறந்துவானவரெல்லாம் ஆயர்பாடிநிறையப்புகுந்தீண்டி *
செவியுணாவின்சுவைகொண்டுமகிழ்ந்து கோவிந்தனைத்தொடர்ந்தென்றும்விடாரே. (௭)

பூமியிலே நான் கண்ட ஒரு ஆச்சரியத்தைச் சொல்லுகிறேன், கேளுங்கள்; அது யாதெனில்: பசுக்களை மேய்க்கின்ற இடைப்பிள்ளைகள் திரண்டிருக்கிற ஸபையிலே கண்ணபிரான் குழலூதினவளவிலே அதன் ஓசை தேவலோகம் வரைக்கும் பரவி அங்கே த்வனிக்க; அதைக்கேட்ட தேவர்களனைவரும் ஹவிஸ்ஸை உண்பதை மறந்தொழிந்து இடைச்சேரி நிறையும்படி அங்கே வந்து சேர்ந்து நெருங்கி; செவியின் உள் நாக்காலே குழலோசையின் இனிய ரஸத்தை புட்கொண்டு மனம் களித்துக் கண்ணபிரானைப் பின் தொடர்ந்தோடி ஒரு க்ஷண காலமும் அவனை விடமாட்டாதிருந்தனர். (7)

282 சிறுவிரல்கள்தடவிப்பரிமாறச் செங்கண்கோடச்செய்யவாய்கொப்பளிப்ப *
குறுவெயர்ப்புருவங்கூடலிப்பக் கோவிந்தன்குழல்கொடூதினபோது *
பறவையின்கணங்கள்கூடுதுறந்து வந்துசூழ்ந்துபடுகாடுகிடப்ப *
கறவையின்கணங்கள்கால்பரப்பிட்டுக் கவிழ்ந்திறங்கிச்செவியாட்டகில்லாவே. (௮)

தனது சிறிய கைவிரல்கள் குழலின் துளைகளைத் தடவிக்கொண்டு அக்குழலின்மேல் வியாபரிக்கவும் செந்தாமரை போன்ற கண்கள் வக்ரமாகவும், சிவந்த திருப்பவளம் வாயுவின் பூரிப்பாலே குமிழ்க்கவும், குறு வெயர்ப்பு அரும்பின புருவம் மேற்கிளர்ந்து வளையவும் கோவிந்தன் குழல் கொண்டு ஊதினபோது, அக்குழலோசையைக் கேட்ட பக்ஷிகளின் கூட்டங்கள் தம் தம் கூடுகளை விட்டொழிந்து கண்ணனருகில் வந்து சூழ்ந்துகொண்டு வெட்டி விழுந்த காடுபோலே மெய்மறந்து கிடக்க, பசுக்களின் திரள் கால்களைப் பரப்பித் தலைகளை நன்றாகத் தொங்கவிட்டுக்கொண்டு காதுகளை அசைக்கவும் மாட்டாதே நின்றன. (8)

283 திரண்டெழுதழைமழைமுகில்வண்ணன் செங்கமலமலர்சூழ்வண்டினம்போலே *
சுருண்டிருண்டகுழல்தாழ்ந்தமுகத்தான் ஊதுகின்றகுழலோசைவழியே *
மருண்டுமான்கணங்கள்மேய்கைமறந்து மேய்ந்தபுல்லுங்கடைவாய்வழிசோர *
இரண்டுபாடுந்துலுங்காப் புடைபெயரா எழுதுசித்திரங்கள்போலநின்றனவே. (௯)

திரண்டு மேலெழுந்து தழைத்த காளமேகம்போன்ற வடிவையுடைய கண்ணபிரான், செந்தாமரைப் பூவைச் சூழ்ந்து படிந்துள்ள வண்டுத்திரளைப் போன்று சுருண்டிருண்ட திருக்குழல்களானவை தாழ்ந்து அலையப்பெற்ற முகத்தை யுடையனுய்க்கொண்டு ஊதுகிற குழலின் ஓசையாகிற வழியிலே அகப்பட்டு மான் கூட்டங்கள் அறிவழிந்து மேய்ச்சலையும் மறந்து வாயில் கவ்வின புல்லும் கடைவாய் வழியாக நழுவி விழ, முன்பின்னுகிற இரண்டருகிலும் காலை அசைக்காமலும் பக்கங்களில் அடியைப் பெயர்த்து இடமாட்டாமலும் சுவரில் எழுதப்பட்ட சித்திரப்பதுமை போலத் திகைத்து நின்றன. (9)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

284 கருங்கண்தோகைமயிற்பீலியணிந்து கட்டிநன்குடுத்தபீதகவாடை *
அருங்கலவுருவினாயர்பெருமான் அவனொருவன்குழலூதினபோது *
மரங்கள்நின்றுமதுதாரைகள்பாயும் மலர்கள்வீழும்வளர்கொம்புகள்தாழும் *
இரங்கும்கூம்புந்திருமால்நின்றநின்றபக்கம்நோக்கி அவைசெய்யுங்குணமே. (௰)

கறுத்த கண்களையுடைய தோகைகளையுடைய மயில்களின் இறகுகளைத் திருமுடிமேல் அணிந்துகொண்டு நன்றாக அழுந்தச்சாத்தின பீதாம்பரத்தையும் அருமையான ஆபரணங்களையும் அணிந்துள்ள திருமேனியை யுடையனான கண்ணன் குழலூதினபோது, அசேதனமான மரங்களுங்கூட ஒருபடிப்பட நின்று உள்ளுருகினமை தோற்ற மகரந்த தாரைகளைப் பெருக்கா நின்றன; புஷ்பங்களும் நிலைகுலைந்து விழாநின்றன; மேல்நோக்கி வளர்கின்ற கொம்புகளும் தாழாநின்றன; அம்மரங்கள் தாம் உருகாநின்றன; கைகூப்புவாரைப் போலே, தாழ்ந்த கொம்புகளைக் குவியாநின்றன; இவ்வாறாக அந்த மரங்கள் கண்ணன் எந்த எந்தப்பக்கங்களில் நிற்பனோ, அவ்வப்பக்கங்களை நோக்கிச் செய்கின்ற வழிபாடுகள் இருந்தபடி யென்! [என்று வியக்கிறபடி.] (10)

285 குழலிருண்டுசுருண்டேறியகுஞ்சிக் கோவிந்தனுடையகோமளவாயில் *
குழல்முழஞ்சுகளினூடுகுமிழ்த்துக் கொழித்திழிந்தவமுதப்புனல்தன்னை *
குழல்முழவம்விளம்பும்புதுவைக்கோன் விட்டுசித்தன்விரித்ததமிழ்வல்லார் *
குழலைவென்றகுளிர்வாயினராகிச் சாதுகோட்டியுள்கொள்ளப்படுவாரே. (௧௧)

கறுத்துச் சுருண்டு நெடுகவளர்ந்த அகலமான மயிர்களை யுடையனான கண்ணனுடைய அழகிய வாயில் வைத்து ஊதப்பெற்ற வேய்ங்குழலினுடைய துளைகளிலே நீர்க்குமிழிவடிவாகக்கிளர்ந்து பிறகு அது உடையப்பெற்றுக் கொழித்துக்கொண்டு மேற்கிளம்பின அம்ருத ஜலத்தைக் குழலோசையோ டொக்க [பரம போக்யமாக] அருளிச்செய்த பெரியாழ்வார் கூறிய இத்தமிழ்ப் பாசுரங்களை ஓதவல்லவர்கள் திருக்குழலோசையின் குளிர்த்தியையுங் கீழ்ப்படுத்தித் தான் மேலாம்படி குளிர்ந்த வாய்மொழியை யுடையராய் ஸ்ரீவைஷ்ணவர்கள் கோஷ்டியில் பரிக்ரஹிக்கப்படுவார்கள்.(11)

அடிவரவு:—காவல் இட வான் தேனுகன் முன் செம்பெரும் புவி சிறு திரண்டு கருங் குழல் ஐய.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து—ஆறாந்திருமொழி முற்றிற்று.

மூன்றாம்பத்து—ஏழாந்திருமொழி—ஐயபுழுதி.

(ஆழ்வார் தமது பக்தியைத் தாய்ப்பாசுரத்தினால் வெளியிடுவது.)

286 ஐயபுழுதியுடம்பளைந்து இவள்பேச்சுமலந்தலையாய் *
செய்யநூலின்சிற்றாடை செப்பனுடுக்கவும்வல்லளல்லள் *
கையினிற்சிறுதூதையோடு இவள்முற்றில்பிரிந்துமிலள் *
பையரவணைப்பள்ளியானோடு கைவைத்திவள்வருமே. (௧)

இச் சிறு பெண்ணானவள் [ஸ்ரீவிஷ்ணுசித்தநாயகி] அழகிய புழுதியை உடம்பிலே பூசிக்கொண்டு ஒன்றோடொன்று அந்வயியாத பேச்சை யுடையளாய், சிவந்த நூலாலே செய்த சிற்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

றுடையைச் செம்மையாக உடுக்கவும் மாட்டாதவளாயிராநின்றாள்; இவள் மணற்சோறுக்கும் சிறிய பானையையும் சிறு முறத்தையும் விட்டொழிக்க மாட்டாத இளம் பருவத்தினள்; இப்படிக்கொத்த விளையாட்டையுடைய இவள் சேஷசாயியான எம்பெருமானுடனே கைகலந்து வாராநின்றாள்! இது என் கொல். (என்று தாய் வியந்து கூறுவதுபோல் ஆழ்வார் பேசுகிறார்.) (க)

287 வாயிற்பல்லுமெழுந்தில மயிரும்முடிகூடிற்றில *
சாய்விலாதகுறுந்தலைச் சிலபிள்ளைகளோடிணங்கி *
தீயிணக்கிணங்காடிவந்து இவள்தன்னன்னசெம்மைசொல்லி *
மாயன்மாமணிவண்ணன்மேல் இவள்மாலுறுகின்றாளே. (உ)

இம்மகளுடைய வாயிலே பற்களும் முளைக்கவில்லை; மயிரும் சேர்த்து முடிக்கும்படி கூடவில்லை. இப்படிப்பட்ட இவள் இந்தப்பருவத்தில், தலை வணக்கமில்லாத தன்மையில் தலைநின்ற சிலபெண் பிள்ளைகளோடு ஸஹவாஸம் பண்ணி அதற்குப் பலனாகப் பொல்லாத இணக்கத்தை [களவுப் புணர்ச்சியை]ச் செய்துவந்து, இத்தனை போது எங்குப்போனாய்? யாரோடு இணங்கி வந்தாய்? என்று நான் கேட்டால் தனக்கு ஒத்த வார்த்தைகளைக் கபடமற்ற வார்த்தைபோல் தோற்றும் படி சொல்லிக் கண்ணபிரான் விஷயத்தில் மோஹப்படுகிறாள். (இவள்-இந்தப்பருவத்தில்-) (2)

288 பொங்குவெண்மணற்கொண்டு சிற்றிலும்முற்றத்திழைக்கலுறில் *
சங்குசக்கரந்தண்டுவாள் வில்லுமல்லதிழைக்கலுறாள் *
கொங்கையின்னங்குவிந்தெழுந்தில கோவிந்தனோடிவளை *
சங்கையாகியென்னுள்ளம் நாடோறுந்தட்டுளுப்பாகின்றதே. (ங)

இவள், வெண்மணலாலே முற்றத்தில் சிற்றிலிழைக்கத் தொடங்கினாலும் சங்குமுதலிய எம்பெருமான் சின்னங்களை யொழிய மற்றொன்றையும் இழைக்க நினைப்பதில்லை; இவளுக்கோவென்றால் இன்றளவும் முலைகள் முகம் திரண்டு கிளர்ந்தனவில்லை; இப்படி இளம்பருவத்தளான இவளைக் கண்ணபிரானோடு சம்பந்தமுடையவளாகச் சங்கித்து என் நெஞ்சம் எப்போதும் தடுமாறிச் செல்லா நின்றது. (3)

289 ஏழைபேதையோர்பாலகன்வந்து என்பெண்மகளையெள்கி *
தோழிமார்பலர்கொண்டுபோய்ச் செய்தசூழ்ச்சியையார்க்குரைக்கேன் *
ஆழியானென்னுமாழமோழையில் பாய்ச்சியகப்படுத்தி *
மூழையுப்பறியாததென்னும் மூதுரையுமிலளே. (ச)

சாபல்யத்தையும் அறியாமையையும் இளம் பருவத்தையு முடையளான எனது பெண் பிள்ளையைப் பல தோழிகள் அணுகிவந்து விளையாடவரவேணுமென்று வஞ்சித்து அழைத்துக் கொண்டு போய் ஸர்வேச்வரன் என்று ப்ரஸித்தமாய் ஒருவராலும் நிலைகொள்ளவொண்ணாத தான கீழாற்றில் உள்ளுறத் தள்ளி அதிலே அகப்படுத்தி இவ்வாறு செய்த கபடத்தொழிலை யாரிடம் முறையிடுவேன்?; இம்மகளோவென்றால் "அகப்பையானது பதார்த்தத்தின் ரஸத்தை அறியாது" என்கிற பழமொழியின் அறிவையும் தன்னிடத்து உடையவளல்லள். (4)

290 நாடுமூருமறியவேபோய் நல்லதுழாயலங்கல்
சூடி * நாரணன்போமிடமெல்லாஞ் சோதித்துழிதருகின்றாள் *
கேடுவேண்டுகின்றார்பலருளர் கேசவனோடிவளை *
பாடுகாவலிடுமினென்றென்று பார்தடுமாறினதே. (ரு)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விசேஷ ஜ்ஞாநிகளும் ஸாமாந்ய ஜ்ஞாநிகளும் அறியும்படியாக [பஹிரங்கமாக] வீட்டைவிட்டுப் புறம்பேபோய், திருத்துழாய்மாலையைத் தரித்துக்கொண்டு எம்பெருமான் போகிற இடம் முழுவதும் தேடித்திரியாநின்றாள்; "இக்குடிக்குக் கேடு விளையவேணுமென்று கோருமவர்கள் பலபேருண்டு; ஆகையால் எம்பெருமானைத் தேடித்திரிகிற இவளை அந்த எம்பெருமானோடு சேர்ப்பதற்காக அந்தப்புரத்திற்கொண்டுபோய் அருகு காவலிடுங்கள்" என்று இதையே பலகாலும் சொல்லிக்கொண்டு பூமியிலுள்ள அநுகூல ஜநமானது மனக்குழம்பிச் செல்லாநின்றது. (5)

291 பட்டங்கட்டிப்பொற்றோடுபெய்து இவள்பாடகமுஞ்சிலம்பும் *
இட்டமாகவளர்த்தெடுத்தேனுக்கு என்னோடிருக்கலுறாள் *
பொட்டப்போய்ப்புறப்பட்டுநின்று இவள்பூவைப்பூவண்ணாவென்னும் *
வட்டவார்குழல்மங்கைமீர் இவள்மாலுறுகின்றாளே. (௬)

சுருண்டு நீண்ட கூந்தலையுடைய மாதர்காள்!, இம்மகளுக்கு நெற்றிப்பட்டத்தைக் கட்டியும், பொன் தோட்டையும் பாடகத்தையும் சிலம்பையும் இட்டும் இவளுடைய இஷ்டாநுஸாரமாக இவளை வளர்த்தெடுத்த என்னோடு இவள் இருக்கமாட்டேனென்கிறாள்; பின்னை என் செய்கின்றாளெனில்; திடீரென்று என்னைக் கைவிட்டுப்போய் எல்லாருங்காணத் தெருவிலே புறப்பட்டு நின்று "காயாம்பூப் போன்ற மேனி நிறமுடைய கண்ணபிரானே!!" என்று வாய்விட்டுக் கூப்பிடாநின்று மோஹிக்கின்றாள்.

292 பேசவுந்தரியாதபெண்மையின் பேதையேன்பேதையிவள் *
கூசமின்றிநின்றார்கள்தம்மெதிர் கோல்கழிந்தான்மூழையாய் *
கேசவாவென்றுங்கேடிலீயென்றுங் கிஞ்சுகவாய்மொழியாள் *
வாசவார்குழல்மங்கைமீர் இவள்மாலுறுகின்றாளே. (௭)

கூந்தலழகிய பெண்காள்! தன்னுடைய ஆசாரத்துக்கு ஒரு கெடுதி விளைந்ததாகப் பிறர் ஒரு வார்த்தை சொன்னாலும் அதைப் பொறுக்கமாட்டாத ஸ்த்ரீத்வத்தை யுடையவளும் கிளியினுடைய வாய்மொழி போன்ற இனிய வாய்மொழியை யுடையவளுமாய் என் மகளான இவள், மரியாதை தவறாமல் இருக்குமவர்கள் முன்னே, கூச்சமில்லாமல் கோலைவிட்டு நீங்கின அகப்பைபோல, என்னோடு உறவற்றவளாய்க் கொண்டு கேசவனே! என்றும் அச்சுதனே! என்றும் வாய்விட்டுச் சொல்லி மோஹிக்கின்றாள். (7)

293 காறைபூணுங்கண்ணாடிகாணும் தன்கையில்வளைகுலுக்கும் *
கூறையுடுக்குமயர்க்கும் தன்கொவ்வைச்செவ்வாய்திருத்தும் *
தேறித்தேறிநின்றாயிரம்பேர்த் தேவன்திறம்பிதற்றும் *
மாறில்மாமணிவண்ணன்மேல் இவள்மாலுறுகின்றாளே. (அ)

இப்பெண்பிள்ளையானவள் பொற்காறையைத் தன் கழுத்தில் பூணாநின்றாள்; அக்காறையுங் கழுத்துமான அழகைக் கண்ணாடிப்புறத்தில் காணாநின்றாள்; தன் கையிலிருக்கிற வளையல்களைக் குலுக்காநின்றாள்; புடவையை ஒழுங்குபட உடுத்துக் கொள்ளாநின்றாள்; அவன் வரவுக்கு உடலாக இவ்வளவு அலங்கரித்துக்கொண்ட வளவிலும் அவன் வரக்காணாமையாலே, தளர்ச்சியை யடையாநின்றாள்; மறுபடியுந் தெளிந்து இதற்குமேலாக அலங்கரித்துக்கொள்ளத் தொடங்கித் தன் அதரத்தை ஒழுங்குபடுத்தாநின்றாள்; மிகவுந் தெளிந்து நின்று எம்பெருமானுடைய குணங்களை வாய் பிதற்றாநின்றாள்; அதன்பிறகு 'ஒப்பற்ற நீலமணிவண்ணனான அக் கண்ணபிரான் மேல் மோஹியாநின்றாள். (8)

294 கைத்தலத்துள்ளமாடழியக் கண்ணாலங்கள்செய்து * இவளை
வைத்துவைத்துக்கொண்டென்னவாணிபம் நம்மைவடுப்படுத்தும் *
செய்த்தலையெழுநாற்றுப்போல் அவன்செய்வனசெய்துகொள்ள *
மைத்தடமுகில்வண்ணன்பக்கல் வளரவிடுமின்களே. (௯)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கையிலுள்ள பணத்தைச் செலவழித்து இவளுக்குச் செய்ய வேண்டிய நன்மைகளைப் பண்ணியும் நமக்கடங்காத இவளை நியமித்தும் காவலிட்டும் வைத்துக்கொண்டிருப்பதனால் என்ன பயனுண்டாம்; பயனுண்டாகா தொழிவதுமன்றி நமக்கு அவத்யத்தையும் உண்டாக்கும்; என்று தாயாகிய நான் சொல்ல, இதைக்கேட்ட பந்துக்கள் 'வயலிலே வளர்ந்த நாற்றை அவ்வயலுக்குடையவன் தன் இஷ்டப்படி விநியோகங்கொள்வது போல, இவளையும் ஸ்வாமியாகிய அவன் தான் செய்ய நினைத்தவற்றைத் தடையறச் செய்துகொள்ளும்படி அக்கண்ணபிரானிடத்தில் இவள் வாழும்படி இவளைக்கொண்டு போய் விட்டுவிடுங்கள் " என்கிறார்கள் என்று, தாய் தானே சொல்லுகிறபடி. (9)

295 பெருப்பெருத்தகண்ணாலங்கள்செய்து பேணிநம்மில்லத்துள்ளே *
இருத்துவானெண்ணிநாமிருக்க இவளுமொன்றெண்ணுகின்றாள் *
மருத்துவப்பதம்நீங்கினாளென்னும் வார்த்தைபடுவதன்முன் *
ஒருப்படுத்திடுமினிவளை உலகளந்தானிடைக்கே. (௧௦)

இவளுக்கு மிகவும் விசேஷமான கல்யாண காரியங்களைச் செய்து அன்பு பூண்டு நம் வீட்டுக்குள்ளேயே இவளை இருக்கச் செய்வதாக நாம் நினைத்திருக்க, இவளோவென்றால் நம் எண்ணத்துக்கு விபரீதமாக மற்றொன்றை எண்ணுகின்றாள். என்று தாயாகிய நான்சொல்ல, இதைக்கேட்ட பந்துக்கள் வயித்தியன் தான் செய்யும் மருந்தில் பதம் பார்த்துச் செய்யாவிடில் அது கைதவறுவதுபோல, இவள் பதம்பார்த்து நாம் செய்யாமையாலே இவள் கைகழிந்தாளென்கிற அபவாதம் பிறப்பதற்கு முன் இவளைக் கண்ணபிரானிடத்திலேயே கொண்டுபோய்ச் சேர்த்துவிடுங்கள் என்று கூறியதைத் தாய்தானே கூறுகின்றாள்.

296 ஞாலமுற்றுமுண்டாலிலைத்துயில் நாராயணனுக்கு * இவள்
மாலதாகிமகிழ்ந்தனளென்று தாயுரைசெய்ததனை *
கோலமார்பொழில்சூழ்புதுவையர்கோன் விட்டுசித்தன்சொன்ன
மாலைபத்தும் * வல்லவர்கட் கில்லைவருதுயரே. (௧௧)

" இப்பெண்பிள்ளையானவள், உலகமெல்லாமுண்டு ஆலிலையில் துயின்ற எம்பெருமான் விஷயத்தில் மோஹத்தையுடையளாய் அவனை அணைக்கவேண்டுமென்ற மனோரதத்தினால் மனமுகந்தாள் " என்று தாய் சொல்லியதை புட்கொண்டு பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாட்டையும் ஓதவல்லவர்களுக்கு வரக்கூடிய துன்பம் ஒன்றுமில்லை. (௧௧)

அடிவரவு :—ஐய வாயில் பொங்கு ஏழை நாடு பட்டம் பேச காறை கைத்தலம் பெரு ஞாலம் நல்ல.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து—ஏழாந்திருமொழி முற்றிற்று.

மூன்றாம்பத்து—எட்டாந்திருமொழி—நல்லதோர்

(இதுவும் ஆழ்வார் தாய்ப்பாசுரமாகக் கூறுவது.)

297 நல்லதோர்தாமரைப்பொய்கை நாண்மலர்மேற்பனிசோர *
அல்லியுந்தாதுமுதிர்ந்திட்டு அழகழிந்தாலொத்ததாலோ *
இல்லம்வெறியோடிற்றாலோ என்மகளையெங்குங்காணேன் *
மல்லரையட்டவன்பின்போய் மதுரைப்புறம்புக்காள்கொலோ. (௧)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அழகிய ஒரு தாமரைக்குளமானது அப்போதலர்ந்த பூவின்மேல் பனி பெய்ததனால் அம்மலரின் உள் விதமும் புறவிதமும் உதிரப்பெற்று அழகு அழியப் பெறுவதுபோல, இவ்வீடானது வெறிச் சென்றிருக்கிறது ; என் பெண்பிள்ளையை ஓரிடத்திலும் காண்கின்றிலேன் ; மல்லர்களை அழித்த கண்ணபிரான்பின்னே போய் மதுரைக்கு அருகிலுள்ள திருவாய்ப்பாடியில் புகுந்தாளாவள் கொல்?

298 ஒன்றுமறிவொன்றில்லாத உருவறைக்கோபாலர்தங்கள் *
கன்றுகால்மாறுமாபோலே கன்னியிருந்தாளைக்கொண்டு *
நன்றுங்கிறிசெய்துபோனான் நாராயணன்செய்ததீமை *
என்றுமெமர்கள்குடிக்கு ஒரேச்சுக்கோலாயிடுங்கொலோ. (உ)

பொருந்திய ஞானம் சிறிதுமில்லாதவர்களும் ரூபஹீனர்களுமான இடையரானவர்கள் கன்றுக்கழகிய கன்றுகளை உடையவர்களறியாமல் களவிலே கொண்டு போவது போல, கன்னிகைப் பருவத்தளாய் எனக்கடங்கியிருந்த பெண்ணை நல்ல உபாயங்களைப்பண்ணி அபஹரித்துக் கொண்டுபோன கண்ணபிரான் செய்த தீம்பானது எங்கள் குலத்துக்குச் சாச்வதமான ஒரு பழிப்பாகத் தலைக்கட்டுமோ? (2)

299 குமரிமணஞ்செய்துகொண்டு கோலஞ்செய்தில்லத்திருத்தி *
தமரும்பிறருமறியத் தாமோதரற்கென்றுசாற்றி *
அமரர்பதியுடைத்தேவி அரசாணியைவழிபட்டு *
துமிலமெழப்பறைகொட்டித் தோரணம்நாட்டிடுங்கொலோ. (௩)

கன்னிகை யவஸ்தையிற் செய்யவேண்டிய மங்கள விசேஷத்தைச் செய்து, அலங்கரித்து விவாஹ ஸ்தானத்தில் உட்காரவைத்து பந்துவர்க்கங்களும் மற்றுமுள்ளவர்களும் அறியும்படி “இவள் கண்ணபிரானுக்குக் கொடுக்கப்பட்டாள்” என்று சொல்லி, பிறகு தேவாதி தேவனான கண்ணபிரானுக்கு மனைவியாகப்பெற்ற என்மகள் ஜாதிக்குத் தக்க ஒழுக்கமாக அரசங்கிளையை ப்ரதக்ஷிணம்பண்ண, பேரொலி கிளம்பும்படி பறைகளை முழக்கி மகரதோரணங்களை எங்கும் நாட்டி அலங்கரித்துக் கொண்டாடுவர்களோ ? (3)

300 ஒருமகள்தன்னையுடையேன் உலகம்நிறைந்தபுகழால் *
திருமகள்போலவளர்த்தேன் செங்கண்மால்தான்கொண்டுபோனான் *
பெருமகளாய்க்குடிவாழ்ந்து பெரும்பிள்ளைபெற்றவசோதை *
மருமகளைக்கண்டுகந்து மணாட்டுப்புறஞ்செய்யுங்கொலோ. (௪)

ஒரே மகளை உடையளாகிய நான் அவளை உலகமெங்கும் பரவின சீர்த்தியோடு பெரியபிராட்டியாரைப் போல் சீராட்டி வளர்த்தேன்; [இப்படி வளர்த்த இவளைச் செந்தாமரைக்கண்ணனான ஸர்வேச்வரன் தானே ஸாக்ஷாத்தாக வந்து நானறியாமல் கொண்டு போனான்; போனால் போகட்டும் ; இடைச்சேரியில் ப்ரதான ஸ்த்ரீயாய்க் குடிவாழ்க்கை வாழ்ந்து பெருமை தங்கிய பிள்ளையைப் பெற்றவளான யசோதைப் பிராட்டியானவள் தன் மருமகளான என் மகளைக்கண்டு மகிழ்ந்து மணவாட்டிக்குச் செய்யக் கடவதான சீர்மைகளைச் செய்வளோ? (4)

301 தம்மாமன்நந்தகோபாலன் தழீஇக்கொண்டென்மகள்தன்னை *
செம்மாந்திரேயென்றுசொல்லிச் செழுங்கயற்கண்ணுஞ்செவ்வாயும் *
கொம்மைமுலையுமிடையுங் கொழும்பணைத்தோள்களுங்கண்டிட்டு *
இம்மகளைப்பெற்றதாயர் இனித்தரியாரென்னுங்கொலோ. (௫)

என்மகள் தனக்கு மாமனான நந்தகோபரானவர் என் பெண்ணை அன்புடன் தழுவிக்கொண்டு “வெட்கத்தாலே தலையைக்கீழ் முகங்கவிழ்ந்து நிற்காமல் செவ்வனே நில்” என்று சொல்லி

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பிறகு ஸர்வாங்க ஸௌந்தர்யத்தையுங் காணலாம்படி அவள் ருஜுவாக மிக்க அழகிய மீன்போன்ற அவளது கண்களையும் சிவந்த அதரத்தையும் பெருத்திருக்கின்ற முலையையும் இடுப்பினழகையும் பெருத்த மூங்கில் போன்ற தோள்களையும் நன்றாகப்பார்த்து "இப்பெண்பிள்ளையைப் பெற்ற தாயானவள் இவளைப்பிரிந்த பின்பு உயிர் தரித்திருக்கமாட்டாள்" என்று சொல்லுவரோ? (5)

302 வேடர்மறக்குலம்போலே வேண்டிற்றுச்செய்தென்மகளை *
கூடியகூட்டமேயாகக் கொண்டுகுடிவாழுங்கொலோ *
நாடுநகருமறிய நல்லதோர்கண்ணாலஞ்செய்து *
சாடிறப்பாய்ந்தபெருமான் தக்கவாகைப்பற்றுங்கொலோ. (சு)

சகடாஸுரனை முறித்துத் தள்ளின திருவடிகளையுடைய கண்ணபிரான், வேடர்களையும் மறவர் என்கிற நீச ஜாதியரையும் போலே ஸத்குலத்திற்பிறந்த என் பெண்பிள்ளையைத் தன் இஷ்டப்படி செய்து தம்பதிகளாகிய இருவரும் நெஞ்சு பொருந்திக்கூடிய கூடுதலையே விவாஹமாகக் கொண்டு குடி வாழ்க்கை வாழ்வனோ? அன்றி ஸாமாந்ய ஜனங்களும் அறியும்படி பஹிரங்கமாக விலக்ஷணமானதொரு விவாஹோத்ஸவத்தை விதிப்படி செய்து தகுதியாகப் பாணிக்ரஹணம் பண்ணுவனோ? (6)

303 அண்டத்தமரர்பெருமான் ஆழியானின்றென்மகளை *
பண்டப்பழிப்புக்கள்சொல்லிப் பரிசறவாண்டிடுங்கொலோ *
கொண்டுகுடிவாழ்க்கைவாழ்ந்து கோவலப்பட்டங்கவித்து *
பண்டைமணாட்டிமார்முன்னே பாதுகாவல்வைக்குங்கொலோ. (எ)

பரமபதத்திலுள்ள நித்யஸூரிகளுக்குத்தலைவனும் திருவாழியாழ்வானை யுடையனுமான கண்ணபிரான் என் பெண்பிள்ளையை, பதார்த்தங்களுக்குக் குறை சொல்வது போல் இவளது ரூபகுணங்களிற்சில குறைகளைச்சொல்லி, வரிசை கெடும்படி ஆளுவனோ? அன்றி, முன்பே பட்டங்கட்டித் தனக்குத்தேவியா யிருப்பவர்களின் முன்னே இவளைக் கொண்டு தனது க்ருஹக்ருத்ய மெல்லாம் நடத்தி "இவள் இடைக் குலத்துக்குத் தலைவி" என்று தன் மனைவியானமை தோற்றப் பட்டங்கட்டி அந்தப்புரக் காவலிலே வைப்பனோ? (7)

304 குடியிற்பிறந்தவர்செய்யுங் குணமொன்றுஞ்செய்திலனந்தோ *
நடையொன்றுஞ்செய்திலன்நங்காய் நந்தகோபன்மகன்கண்ணன் *
இடையிருபாலும்வணங்க இளைத்திளைத்தென்மகளேங்கி *
கடைகயிறேபற்றிவாங்கிக் கைதழும்பேறிடுங்கொலோ. (அ)

தோழீ !, கண்ணபிரான், உயர்ந்த குலத்திற் பிறந்தவர்கள் தம் குலமரியாதைக்குத் தக்கபடி செய்யுங் குணங்களில் ஒருவகைக் குணத்தையும் செய்தானில்லை; உலகத்துக்குப் பொதுவான நடத்தைகளிலும் ஒன்றும் செய்திலன்; ஹாஹா! என் மகளானவள் தயிர் கடையும் போது இடுப்பானது இரு பக்கத்திலும் துவண்டுபோவதனால் மூச்சுப்பிடித்துக் கடைய மாட்டாமல் நடுநடுவே ஏக்கமுற்று மிகவும் இளைத்து, கடைகிற கயிற்றையே பிடித்து வலித்திழுப்பதனால் தனது ஸுகுமாரமான கைகள் தழும்பேறப் பெறுமோ? (8)

305 வெண்ணிறத்தோய்தயிர்தன்னை வெள்வரைப்பின்முன்னெழுந்து *
கண்ணுறங்காதேயிருந்து கடையவுந்தான்வல்லள்கொலோ *
ஒண்ணிறத்தாமரைச்செங்கண் உலகளந்தானென்மகளை *
பண்ணறையாப்பணிகொண்டு பரிசறவாண்டிடுங்கொலோ. (கூ)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

என் மகளானவள் கிழக்கு வெளுப்பதற்கு முன்பாக எழுந்திருந்து கண் விழித்துக் கொண்டிருந்து தயிரைக் கடையும்படியான சக்தியைத்தான் உடையளோ? செந்தாமரைக் கண்ணனும் உலகளந்தவனுமான கண்ணபிரான் என் பெண்ணை தர்மஹாநியாக இழிதொழில்களைச் செய்வித்துக்கொண்டு அவளுடைய பெருமை குலையும்படி ஆளுவனோ?. (9)

306 மாயவன்பின்வழிசென்று வழியிடைமாற்றங்கள்கேட்டு *
ஆயர்கள்சேரியிலும்புக்கு அங்குத்தைமாற்றமுமெல்லாம் *
தாயவள்சொல்லியசொல்லைத் தண்புதுவைப்பட்டன்சொன்ன *
தூயதமிழ்பத்தும்வல்லார் தூமணிவண்ணனுக்காளரே. (௧௦)

மகளானவள், போகிற வழியிலே அபூர்வ வஸ்துக்களைக் கண்டால் 'இவை என்?' என்று அவ்விஷயமாக வார்த்தைகளைக் கேட்டுக்கொண்டு கண்ணபிரான் பின்னே போய்த் திருவாய்ப்பாடியிலும் சென்று புகுந்தபின்பு அங்குண்டாகும் செயல்கள் செலவுகள் முதலிய எல்லாவற்றையும் குறித்துத் தாயானவள் சங்கித்துச்சொன்ன வார்த்தைகளை யுட்கொண்டு பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பதிகத்தை ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு ஆட்செய்யப் பெறுவர். (10)

அடிவரவு:—கல்லது ஒன்று குமரி ஒரு தம்மாமன் வேடர் அண்ட குடி வெண்ணிறம் மாயவன் என்னுதன். ஆழ்வார் எம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.

முன்றாம்பத்தில் எட்டாம் திருமொழி முற்றிற்று.

மூன்றாம்பத்து—ஒன்பதாந்திருமொழி—என்னாதன்

(ஆழ்வார் இரண்டு கன்னிகைகளான நிலைமையெய்தி ஸ்ரீக்ருஷ்ண குணங்களையும் ஸ்ரீராம குணங்களையும் பாடுகிறார்.)

307 என்னாதன்தேவிக்கு அன்றின்பப்பூவீயாதாள் *
தன்னாதன்காணவே தண்பூமரத்தினை *
வன்னாதப்புள்ளால் வலியப்பறித்திட்ட *
என்னாதன்வன்மையைப்பாடிப்பற எம்பிரான்வன்மையைப்பாடிப்பற. (௧)

எம்பிரானுடைய தேவியான ஸத்யபாமைப் பிராட்டிக்குக் கற்பகப்பூவை அவள் விரும்பின அக்காலத்தில் கொடாத இந்திராணியினுடைய கணவனான இந்திரன் கண்டுகொண்டு நிற்கும்போதே அக்கல்பக விருக்ஷத்தை, வேதஸ்வரூபியான பெரியதிருவடியாலே பலாத்காரமாகப் பிடுங்கிக்கொண்டுவந்து ஸத்யபாமையின் வீட்டுமுற்றத்தில் நட்டருளின என் ஸ்வாமியான கண்ணபிரானுடைய வலிவைப்பாடிக்கொண்டு உந்திபற. [உந்திபறத்தல்-ஒருவகை ஆட்டம்.] (1)

308 என்வில்வலிகண்டு போவென்றெதிர்வந்தான் *
தன்வில்லினோடுந் தவத்தையெதிர்வாங்கி *
முன்வில்வலித்து முதுபெண்ணுயிருண்டான் *
தன்வில்லின்வன்மையைப்பாடிப்பற தாசரதிதன்மையைப்பாடிப்பற. (௨)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

'என்னுடைய வில்லின் வலியைக் கண்டுபோ' என்று சொல்லிக்கொண்டு எதிர்த்து வந்த பரசுராமனுடைய வில்லையும் தபஸ்ஸையும் அவன் கண்ணெதிரில் அழித்தருளினவனும் இதற்கு முன்னே வில்லை வளைத்துத் தாடகையினுடைய உயிரை முடித்தருளினவனுமான இராமபிரானுடைய வில்லின் வலிவைப் பாடிப்பற. (2)

309 உருப்பிணிநங்கையைத் தேரேற்றிக்கொண்டு * விருப்புற்றங்கேக விரைந்தெதிர்வந்து * [பாடிப்பற.
செருக்குற்றான் வீரஞ்சிதைய * தலையைச் சிரைத்திட்டான்வன்மையைப்பாடிப்பற தேவகிசிங்கத்தைப்

ருக்மிணிப் பிராட்டியைத் தனது தேரின்மேல் ஏற்றிக்கொண்டு ஆசையுடனே எழுந்தருளப்புக, அவ்வளவில், மிக்க வேகங்கொண்டு போர்செய்வதாக எதிர்த்துக் கிளர்ந்த ருக்மனுடைய வீரத்தனம் கெடும்படியாக அவனது தலையை அம்பாலே சிரைத்து விட்ட தேவகி சிங்கமான கண்ணனுடைய வலிவைப் பாடிப்பற. (3)

310 மாற்றுந்தாய்சென்று வனம்போகேயென்றிட * ஈற்றுந்தாய்பின்தொடர்ந்து எம்பிரானென்றழ *
கூற்றுத்தாய்சொல்லக் கொடியவனம்போன * சீற்றமிலாதானைப்பாடிப்பற சீதைமணாளனைப்பாடிப்பற.

பெற்றதாயோடு ஒத்த ஸுமித்திரை என்கிற தாயானவள் சென்று 'நீ காட்டுக்கே போ' என்று நியமிக்க, பெற்ற தாயானவள் பின்தொடர்ந்து வந்து "என் நாயனே! உன்னைப்பிரிந்து எப்படி தரித்திருப்பேன்" என்று கதறி அழ, யமனைப்போல் கொடியளான கைகேயியின் சொல்லைக் கொண்டு கொடிய காட்டுக்கு எழுந்தருளின சீற்றமற்ற ஸீதாபதியான இராமபிரானைப் பாடிப்பற. (4)

311 பஞ்சவர்தூதனாய்ப் பாரதங்கைசெய்து * நஞ்சுமிழ்நாகங்கிடந்த நற்பொய்கைபுக்கு * [சோதைப்பாடிப்பற.
அஞ்சப்பணத்தின்மேல் பாய்ந்திட்டருள்செய்த * அஞ்சனவண்ணனைப்பாடிப்பற அசோதைதன்சிங்கத்

பஞ்சபாண்டவர்களுக்காகத் தூதனுப்போய், பாரதயுத்தத்தை அணிவகுத்துச் செய்தவனும், விஷத்தைக் கக்குகின்ற காளியன் கிடந்த கொடிய மடுவிலே புகுந்து அக்காளியன் அஞ்சும்படி அவனது படத்திலே குதித்து அவனுக்கு அருள் செய்தவனுமான அஞ்சன வண்ணனைப் பாடிப்பற(5)

312 முடியொன்றி மூவுலகங்களுமாண்டு * உன் னடியேற்கருளென்று அவன்பின்தொடர்ந்த *
படியில்குணத்துப் பரதநம்பிக்கு* அன் றடிநிலையீந்தானைப்பாடிப்பற அயோத்தியர்கோமானைப்பாடிப்பற.

"திருமுடிசூடி மூவுலகங்களையு மாண்டுகொண்டிருந்து அடியேனுக்கு அருள் புரியவேணும்" என்று வேண்டிக்கொண்டு பின்னே தொடர்ந்து வந்த ஒப்பற்ற குணங்களையுடையனான பரதாழ்வானுக்குப் பாதுகைகளை அளித்தருளின அயோத்யாதிபதியான இராமபிரானைப் பாடிப்பற. (6)

313 காளியன்பொய்கை கலங்கப்பாய்ந்திட்டு * அவன் நீள்முடியைந்திலும் நின்றுநடஞ்செய்து *
மீளவவனுக்கு அருள்செய்தவித்தகன் * தோள்வலிவீரமேபாடிப்பற தூமணிவண்ணனைப்பாடிப்பற. (எ)

காளியன் கிடந்த பொய்கை கலங்கும்படி அதில் குதித்து அக்காளியனுடைய நீண்ட ஐந்து படங்களின் மேலும் நின்று கூத்தாடி, பிறகு அக்காளியனுக்கு உயிரையருளின கண்ணனுடைய புஜபலபராக்ரமங்களைப் பாடிப்பற. (7)

314 தார்க்கிளந்தம்பிக்கு அரசீந்து * தண்டகம் நூற்றவள்சொற்கொண்டுபோகி நுடங்கிடை * [பற.
சூர்ப்பணகாவைச் செவியொடுமூக்கு * அவள் ஆர்க்கவரிந்தானைப்பாடிப்பற அயோத்திக்கரசனைப்பாடிப்

மாலையிட்டு ராஜ்யம் நிர்வஹிக்கைக்குத் தகுந்திராத இளம் பருவத்தை யுடையனான பரதாழ்வானுக்கு அடிசூடுகையாகிற அரசைக்கொடுத்து, கைகேயியினுடைய சொற்படி தண்ட

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சாரணியத்துக்கு எழுந்தருளி அவ்விடத்தில் நுண்ணிடையை உடையளான சூர்ப்பணகையி னுடைய காதையும் மூக்கையும் அவள் கதறும்படி அறுத்த இராமபிரானைப் பாடிப்பற. (8)

315 பாயச்சகடமுதைத்து மருதிறுத்து * ஆயர்களோடுபோய் ஆநிரைகாத்து * அணி
வேயின்குழலூதி வித்தகனாய்நின்ற * ஆயர்களேற்றினைப்பாடிப்பற ஆநிரைமேய்த்தானைப்பாடிப்பற. (௯)

கள்ளச் சகடத்தைத் திருவடிகளால் உதைத்துத் தள்ளியும், இரட்டை மருத மரங்களை இற்று விழும்படி பண்ணியும், பின்பு இடையர்களோடு கூடப்போய்ப் பசுக்களின் திரளை ரக்ஷித்தும் அழகிய வேய்ங் குழலை ஊதியும் இப்படிப்பட்ட செயல்களாலே விஸ்மயநீயனாய் நின்ற கண்ணபிரானைப் பாடிப்பற. (9)

316 காரார்கடலை அடைத்திட்டிலங்கைபுக்கு * ஓராதான்பொன்முடி ஒன்பதோடொன்றையும் *
நேராவவன்தம்பிக்கே நீளரசீந்த * ஆராவமுதனைப்பாடிப்பற அயோத்தியர்வேந்தனைப்பாடிப்பற. (௧௦)

கரிய கடலை மலைகளினால் அடைத்து ஸேதுகட்டி அந்த ஸேதுவழியாக லங்கையிற் புகுந்து அவ்விடத்தில் தன் வீரப்பாட்டை மதியாத ராவணனுடைய தலைகள் பத்தையும் அறுத் துப்போகட்டு அவனது தம்பியான ஸ்ரீ விபீஷணாழ்வானுக்கே நெடுங்காலம் நடக்கும்படி யான ஆதிராஜ்யத்தை அளித்தருளின ஆராவமுதான இராமபிரானைப் பாடிப்பற. (10)

317 நந்தன்மதலையைக் காகுத்தனைநவின்று * உந்திபறந்த ஒளியிழையார்கள்சொல் *
செந்தமிழ்த்தென்புதுவை விட்டுசித்தன்சொல் * ஐந்தினோடைந்தும்வல்லார்க்கு அல்லலில்லையே. (௧௧)

கண்ணபிரானையும் இராமபிரானையும் பற்றி ஒருவர்க்கொருவர் எதிரியாய் நின்றுசொல்லி உந்தி பறக்கையாகிற லீலாரஸங் கொண்டாடின அழகிய ஆபரணமணிந்த ஆய்ப்பெண்க ளிருவருடைய சொல்லை யுட்கொண்டு அழகிய தமிழ்மொழியாலே பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களை ஓதவல்லவர்களுக்குத் துன்பமொன்றுமில்லையாம். (11)

அடிவரவு:— என்னாதன் என்வில் உருப்பிணி மாற்று பஞ்சவர் முடி காளியன் தார் மாய காரார் நந்தன் நெறிந்த. ஆழ்வார் எம்பெருமானார்ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாம்பத்து ஒன்பதாந்திருமொழி முற்றிற்று.

மூன்றாம்பத்து—பத்தாந்திருமொழி—நெறிந்த கருங்குழல்

(பிராட்டியிடத்தில் திருவடி அடையாளம் விண்ணப்பஞ் செய்தது கூறல்.)

318 நெறிந்தகருங்குழல்மடவாய் நின்னடியேன்விண்ணப்பம் *
செறிந்தமணிமுடிச்சனகன் சிலையிறுத்துநினைக்கொணர்ந்த
தறிந்து * அரசுகளைகட்ட அருந்தவத்தோனிடைவிலங்க *
செறிந்தசிலைகொடுதவத்தைச் சிதைத்ததுமோரடையாளம். (௧)

கூந்தலழகிய பிராட்டி! உமது அடியவனான என்னுடைய விஜ்ஞாபன மொன்றைக் கேட்டருளவேணும்; ரத்னமயமான கிரீடத்தை யணிந்த ஜனகமஹாராஜன் கன்யாசுல்கமாக ஏற்படுத்தின ருத்ரதநுஸ்ஸை முறித்து உம்மை மணம்புரிந்து கொண்டதைத் தெரிந்துகொண்டு, துஷ்ட அரசர்களை யழித்தவனும்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அரிய தவத்தையுடையனுமான பரசுராமன் நடுவழியில் தடுக்க, அப்பரசுராமன் கையிலிருந்த விஷ்ணு தநுஸ்ஸை வாங்கிக்கொண்டு அவனது தபஸ்ஸையழித்ததும்[எனது உண்மைக்கு]ஓரடையாளமாகும்(1)

319 அல்லியம்பூமலர்க்கோதாய் அடிபணிந்தேன்விண்ணப்பம் *
சொல்லுகேன்கேட்டருளாய் துணைமலர்க்கண்மடமானே *
எல்லியம்போதினிதிருத்தல் இருந்ததோரிடவகையில் *
மல்லிகைமாமாலைகொண்டு அங்கார்த்ததுமோரடையாளம். (௨)

அகவிதழ்களையுடைய அழகிய பூக்களால் தொடுக்கப்பட்ட பூமாலை போன்றவளே! உமது திருவடிகளில் வணங்கிய நான் விஜ்ஞாபனமொன்றைச்சொல்லுவேன்; ஒன்றோடொன்று ஒத்துத் தாமரைமலர்போன்ற கண்களையுடைய அழகிய மான்போன்றவளே! இதைத் திருச்செவி சாத்தவேணும்; அழகிய இராத்திரி வேளையில் இனிமையான இருப்பாக இருந்த ஓரிடத்திலே மல்லிகைப்பூவினால் தொடுக்கப்பட்ட சிறந்த மாலையினால் சீர் இராமபிரானைக் கட்டியதும் ஓர் அடையாளம். [இது ஒரு பரமரஹஸ்யம்.] (2)

320 கலக்கியமாமனத்தனளாய்க் கைகேசிவரம்வேண்ட *
மலக்கியமாமனத்தனனாய் மன்னவனும்மறுதொழிய *
குலக்குமராகாடுறையப் போவென்றுவிடைகொடுப்ப *
இலக்குமணன்றன்னொடும் அங்கேகியதோரடையாளம். (௩)

கைகேயியானவள் மந்தரையினால் கலக்கப்பட்ட சிறந்த மனத்தையுடையவளாய் வரம் கேட்க, அக் கைகேயியின் வார்த்தையால் கலக்கமடைந்த சிறந்த மனத்தையுடைய தசரத சக்ரவர்த்தியும் மறுத்துச் சொல்ல முடியாமல் வெறுமனே கிடக்க, அந்த ஸந்தர்ப்பத்தில் கைகேயியானவள், "உயர்குலத்திற் பிறந்த குமாரனே! காட்டிலே (பதினான்கு வருஷம்) வஸிக்கும்படி போவாய்" என்று சொல்லி விடை கொடுத்தனுப்ப, அக்காட்டிலே லக்ஷ்மணனோடு கூட இராமபிரான் சென்றடைந்ததும் ஓர் அடையாளம்.

321 வாரணிந்தமுலைமடவாய் வைதேவிவிண்ணப்பம் *
தேரணிந்தவயோத்தியர்கோன் பெருந்தேவிகேட்டருளாய் *
கூரணிந்தவேல்வலவன் குகனோடுங்கங்கைதன்னில் *
சீரணிந்ததோழமை கொண்டதுமோரடையாளம். (௪)

கச்சையணிந்த முலையையுடைய பிராட்டி! ஒரு விஜ்ஞாபனம்; தேர்களாலே அலங்காரமான அயோத்தியிலுள்ளார்க்கு அரசனாவதற்கு உரிய இராமபிரானது பெருமைக்குத் தகுந்த தேவியே! கேட்டருளவேணும்; கூர்மை பொருந்திய வேலாயுதத்தில் வல்லவனாகிய குஹப்பெருமாளோடு கூட கங்கைக் கரையிலே சிறப்புப் பொருந்திய ஸ்நேஹத்தைப் பெற்றதும் ஓர் அடையாளம். (4)

322 மானமருமென்னோக்கி வைதேவிவிண்ணப்பம் * கானமருங்கல்லதர்போய்க் காடுறைந்தகாலத்து *
தேனமரும்பொழிற்சாரல் சித்திரகூடத்திருப்ப * பான்மொழியாய்ப்பரதநம்பி பணிந்ததுமோரடையாளம்.

மானையொத்த மென்மையான கண்களையுடைய பிராட்டியே! பால்போல் இனிய பேச்சை யுடையவளே! விண்ணப்பம்; காட்டில் பொருந்திய கல் நிறைந்த வழியிலே போய்க் காட்டில் வஸித்த போது வண்டுகள் பொருந்திய சோலைகளையுடைய தாழ்வரையோடு கூடிய சித்திர கூட பர்வதத்தில் நீங்கள் இருக்கையில் பரதாழ்வான் வந்து வணங்கியதும் ஓர் அடையாளம். (5)

323 சித்திரகூடத்திருப்பச் சிறுகாக்கைமுலைதீண்ட * அத்திரமேகொண்டெறிய அனைத்துலகுந்திரிந்தோடி *
வித்தகனேயிராமாஓ நின்னபயமென்றழைப்ப * அத்திரமேயதன்கண்ணை அறுத்ததுமோரடையாளம்.(௬)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சித்திரகூட பர்வதத்தில் நீங்களிருவரும் ரஸாநுபவம் பண்ணிக்கொண்டிருக்கையில் சிறிய காக்கையின் வடிவு கொண்டு வந்த ஜயந்தன் உமது திருமுலைத் தடத்தைத் தீண்ட அதனால் சீற்றமுற்ற ஸ்ரீராமன் ப்ரஹ்மாஸ்திரத்தைத் தொடுத்துப் பிரயோகிக்க, அக்காகம் அதற்குத் தப்புவதற்காக உலகங்களி லெல்லாம் திரிந்து ஓடிப்போய்த் தப்ப முடியாமையால் மீண்டு இராமபிரானையே அடைந்து "ஆச்சரியமான குணங்களையுடையவனே! ஸ்ரீராமனே! ஓ!! யான் உன்னுடைய அடைக்கலம்" என்று கூப்பிட, உயிரைக் கவா வேணுமென்று விட்ட அந்த அஸ்த்ரமே அந்தக்காகத்தின் ஒரு கண்ணை மாத்திரம் அறுத்து விட்டதும் ஓர் அடையாளம். (6)

324 மின்னொத்தநுண்ணிடையாய் மெய்யடியேன்விண்ணப்பம்*
பொன்னொத்தமானொன்று புகுந்தினிதுவிளையாட *
நின்னன்பின்வழிநின்று சிலைபிடித்தெம்பிரானேக *
பின்னேயங்கிலக்குமணன் பிரிந்ததுமோரடையாளம். (எ)

மின்னலைப்போன்ற மெல்லிய இடையையுடைய பிராட்டி! உண்மையான பக்தனாகிய எனது விண்ணப்பத்தைக் கேட்டருளவேணும்; பொன் வடிவுகொண்ட மாரீசனாகிய ஒருமான் பஞ்சவடியில் நீரிருக்கும் ஆச்ரமத்தருகில் வந்து அழகாக விளையாடா நிற்க, உம்முடைய ஆசைக்குக் கட்டுப்பட்டு நின்று வில்லையெடுத்துக்கொண்டு இராமபிரான் அம்மானைப் பிடித்துக்கொணர்வதாக அதன் பின்னே தொடர்ந்து எழுந்தருள, பிறகு அவ்விடத்தில் இளையபெருமாளும் பிரிந்ததுவும் ஓர் அடையாளம். (7)

325 மைத்தகுமாமலர்க்குழலாய் வைதேவிவிண்ணப்பம் *
ஒத்தபுகழ்வானரக்கோன் உடனிருந்துநினைத்தேட *
அத்தகுசீரயோத்தியர்கோன் அடையாளமிவைமொழிந்தான் *
இத்தகையாலடையாளம் ஈதவன்கைமோதிரமே. (அ)

மைபோல் விளங்குவதும் சிறந்த புஷ்பங்களை அணிவதற்கு உரியதுமான கூந்தலையுடைய வைதேஹியே! விண்ணப்பம்; கீர்த்தி பொருந்திய ஸுக்ரீவ மஹாராஜர் இராமபிரானோடுகூட இருந்து உம்மைத் தேடும்படி நியமித்தபோது, மஹா குணசாலியான பெருமான் இவ்வடையாளங்களை என்னிடத்தில் சொல்லியருளினார்; ஆதலால் யான் சொன்ன அடையாளங்கள் இவ்வழியால் வந்தன; அன்றியும் அவ்விராமபிரானுடைய திருக்கையி லணிந்துகொள்ளும் மோதிரம் இதுவேயாம். [என்று மோதிரத்தைத் தந்தான்.] (8)

326 திக்குநிறைபுகழாளன் தீவேள்விச்சென்றநாள் *
மிக்கபெருஞ்சவைநடுவே வில்லிறுத்தான்மோதிரங்கண்டு *
ஒக்குமாலடையாளம் அனுமானென்றுச்சிமேல் *
வைத்துக்கொண்டுகந்தனளால் மலர்க்குழலாள்சீதையுமே. (கூ)

திக்குகளிலே நிறைந்த கீர்த்தியை யுடையவனான ஜனகராஜனுடைய அக்நியாகத்தில் விச்வாமித்திரருடன் போன காலத்திலே மிகவும் பெரிய ஸபையின் நடுவில் ருத்ர தநுஸ்ஸை முறித்த இராமபிரானுடைய மோதிரத்தைப் பார்த்து ஸீதாபிராட்டியும், 'வாராய் ஹனுமானே! நீ சொன்ன அடையாளங்களெல்லாம் ஒத்திரா நின்றுள்ளவையே' என்று திருவடியை நோக்கிச் சொல்லி அந்தத் திருவாழியைத் தன் தலையின்மீது வைத்துக் கொண்டு மகிழ்ந்தாள். (9)

327 வாராரும்முலைமடவாள் வைதேவிதனைக்கண்டு *
சீராருந்திறலனுமன் தெரிந்துரைத்தவடையாளம் *
பாராரும்புகழ்ப்புதுவைப் பட்டர்பிரான்பாடல்வல்லார் *
ஏராரும்வைகுந்தத்து இமையவரோடிருப்பாரே. (கo)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கச்சு அணிந்திருக்கைக்கு உரிய முலையையுடையளான ஸீதாபிராட்டியைப் பார்த்துச் சீர்மை பொருந்திய சக்தியையுடையனான சிறிய திருவடி பெருமானிடத்தில்தான் அறிந்துகொண்டு பின்பு பிராட்டியிடத்திற் சொன்ன அடையாளங்களைக் கூறுவதாக மஹா யசஸ்வியான பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பாடல்களை ஓதவல்லவர்கள் எல்லா நன்மைகளும் நிறைந்த ஸ்ரீ வைகுண்டத்தில் நித்யஸூரிகளோடு ஒரு கோவையாயிருக்கப் பெறுவர்கள். (கo)

அடிவரவு:—நெறி அல்லி கல்கிய வாரணி மான் சித்திர மின் மைத்தகு திக்கு வாராகும் கதிர்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றும்பத்து முற்றிற்று.

நான்காம்பத்து—முதல் திருமொழி—கதிராயிரம்

(எம்பெருமானைத் தேடுவார் சிலரும் அவனைக் கண்டோமென்பார் சிலருமாக ஆழ்வார் தம்மை வகுத்துக்கொண்டு பேசும் பதிகம்)

328 கதிராயிரமிரவி கலந்தெரித்தாலொத்தநீள்முடியன் *
எதிரில்பெருமையிராமனை யிருக்குமிடம்நாடுதிரேல் *
அதிருங்கழற்பொருதோள் இரணியனாகம்பிளந்தரியாய் *
உதிரமளைந்தகையோடிருந்தானை உள்ளவாகண்டாருளர். (க)

எண்ணிறந்த கிரணங்களையுடைய ஆயிரம் ஆதித்யர்கள் ஏககாலத்திற் கூடி ஜ்வலித்தாற்போல் மிகவும் பளபளவா நின்றுள்ள நீண்ட திருவபிஷேகத்தை யுடையவனும் ஒப்பற்ற பெருமையை யுடையவனுமான இராமபிரான் எழுந்தருளி யிருக்குமிடத்தைத் தேடுகிறீர்களாகில் அவ்விடத்தைச் சொல்லுகிறேன்; கல் கல் என்று ஒலி செய்யா நின்றுள்ள வீரக்கழலையும் போர் செய்யப் பதைக்கிற தோள்களையுமுடைய ஹிரண்யாஸுரனுடைய மார்பை நரஸிம்ஹ ரூபியாய்க்கொண்டு கீண்டு அதனாலுண்டான ரக்தத்தை அளைந்த கைகளோடு கூடி எழுந்தருளி யிருந்த நிலைமையில் அவனை உள்ளபடி ஸேவித்தவர்கள் இருக்கின்றனர். (நாங்கள் கண்டோ மென்றபடி.) (1)

329 நாந்தகஞ்சங்குதண்டு நாணொலிச்சார்ங்கந்திருச்சக்கரம் *
ஏந்துபெருமையிராமனை யிருக்குமிடம்நாடுதிரேல் *
காந்தள்முகிழ்விரற்சீதைக்காகிக் கடுஞ்சிலைசென்றிறுக்க *
வேந்தர்தலைவன்சனகராசன்றன் வேள்வியிற்கண்டாருளர். (உ)

பஞ்சாயுதங்களையும் திருக்கைகளில் ஏந்தும்படியான பெருமையையுடைய இராமபிரான் எங்கிருக்கிறானென்று தேடுகிறீர்களாகில்; செங்காந்தளரும்பு போன்ற விரல்களையு டைய பிராட்டிக்காக ராஜாதி ராஜனான ஜனகசக்ரவர்த்தியினுடைய யஜ்ஞவாடத்திலே எழுந்தருளி வலிய வில்லை முறிக்கும்போது அப்பெருமானைக் கண்டவர்கள் இருக்கின்றனர். (2)

330 கொலையானைகொம்புபறித்துக் கூடலர்சேனைபொருதழிய *
சிலையால்மராமரமெய்ததேவனைச் சிக்கெனநாடுதிரேல் *
தலையால்குரக்கினந்தாங்கிச்சென்று தடவரைகொண்டடைப்ப *
அலையார்கடற்கரைவீற்றிருந்தானை அங்குத்தைக்கண்டாருளர். (௩)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொலை செய்யவல்ல குவலயா பீட யானையினுடைய தந்தங்களைப் பறித்துக்கொண்டவனும், ஜனஸ்தானத்திலுள்ள ராக்ஷஸர்களாகிய சத்துருக்களுடைய ஸேனை யழியும்படி போர் செய்தவனும், வில்லாலே ஸப்தஸால விருக்ஷங்களை எய்தவனுமான எம்பிரானை த்ருடாந்தபலமாயத் தேடுகிறீர்களாகில், அவனிருக்குமிடஞ் சொல்லுகிறேன்; வானர சேனையானது பெரிய மலைகளைத் தமது தலைகளினால் சுமந்துகொண்டு போய்க் கடலின் நடுவே அணையாக அடைக்க, அலையெறிகிற கடற்கரையிலே எழுந்தருளியிருந்த இராமபிரானை அந்த ஸந்நிவேசத்தில் கண்டார் உளர். (3)

331 தோயம்பரந்தநடுவுசூழலின் தொல்லைவடிவுகொண்ட *
மாயக்குழவியதனைநாடுறில் வம்மின்சுவடுரைக்கேன் *
ஆயர்மடமகள்பின்னைக்காகி அடல்விடையேழினையும் *
வீயப்பொருதுவியர்த்துநின்றானை மெய்ம்மையேகண்டாருளர். (௪)

எங்கும் பரவின ஜலத்தின் நடுவே உபாயத்தினால் பழமையான பெரிய வடிவைச் சுருக்கிக் கொண்ட அந்த ஆச்சர்ய குட்டியைத் தேட முயன்றீர்களாகில் இங்கே வாருங்கள்; உங்களுக்கு ஓரடையாளம் சொல்லுகின்றேன்; ஸ்ரீகும்பர் என்னும் ஆயருடைய புதல்வியான நப்பின்னைப் பிராட்டிக்காக வலிய ரிஷபங்களேழும் முடியும்படியாக அவற்றோடு போர் செய்து அந்த ஆயாஸத்தாலே குறுவெயர்ப்பரும்பின வடிவுந்தானுமாய் நின்றவனை உண்மையாகவே கண்டார் உளர். (4)

332 நீரேறுசெஞ்சடைநீலகண்டனும் நான்முகனும்முறைபால் *
சீரேறுவாசகஞ்செய்யநின்ற திருமாலைநாடுதிரேல் *
வாரேறுகொங்கையுருப்பிணியை வலியப்பிடித்துக்கொண்டு
தேரேற்றி * சேனைநடுவுபோர்செய்யச் சிக்கெனக்கண்டாருளர். (௫)

எம்பெருமானது ஸ்ரீபாததீர்த்தம் ஏறப்பெற்ற சிவந்த சடையையுடைய சிவபெருமானும் சதுர்முகப்ரஹ்மாவும் முறைதப்பாமல் சிறந்த சொற்களைக் கொண்டு துதிக்கும்படி அமைந்து நின்ற திருமாலைத் தேடுகிறீர்களாகில், இதைக் கேளுங்கள்; கச்சை யணிந்த முலைகளையுடைய ருக்மிணிப் பிராட்டியை பலாத்காரமாகப் பிடித்துக்கொண்டு தனது திருத்தேரின்மேல் ஏறவிட்டு அவ்வளவிலே சிசுபாலாதிகளான பல அரசர் எதிர்த்துவர அவ்வரசர்களுடைய ஸேநாமத்யத்திலே யுத்தம் பண்ணும்போது நன்கு கண்டார் உளர். (5)

333 பொல்லாவடிவுடைப்பேய்ச்சிதுஞ்சப் புணர்முலைவாய்மடுக்க
வல்லானை * மாமணிவண்ணனை மருவுமிடம்நாடுதிரேல் *
பல்லாயிரம்பெருந்தேவிமாரொடு பௌவமெறிதுவரை *
எல்லாருஞ்சூழச்சிங்காசனத்தே யிருந்தானைக்கண்டாருளர். (௬)

மஹா கோரமான வடிவையுடைய பூதனையானவள் மாளும்படியாக அவளது முலையிலே தனது வாயைவைத்து உண்ட எம்பெருமான் பொருந்தி எழுந்தருளியிருக்குமிடத்தைத் தேடுகிறீர்களாகில், இதைக் கேளுங்கள்; கடலலைகள் வீசப்பெற்றுள்ள ஸ்ரீத்வாரகையிலே தேவிமார் எல்லாரும் சுற்றுஞ்சூழ்ந்து கொண்டிருக்க, அந்தப் பதினாறுயிரம் தேவிமாரோடுகூட ஸிம்ஹாஸநத்தில் எழுந்தருளியிருக்கும்போது கண்டார் உளர். (6)

334 வெள்ளைவிளிசங்குவெஞ்சுடர்த்திருச்சக்கரம் ஏந்துகையன் *
உள்ளவிடம்வினவில் உமக்கிறைவம்மின்சுவடுரைக்கேன் *
வெள்ளைப்புரவிக்குரக்குவெல்கொடித் தேர்மிசைமுன்புநின்று *
கள்ளப்படைத்துணையாகிப் பாரதங்கைசெய்யக்கண்டாருளர். (௭)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சங்குசக்கரங்களைத் தரியாநின்றுள்ள திருக்கைகளையுடைய எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடத்தைக் கேட்கிறீர்களாகில், கேட்கிற உங்களுக்குச் சிறிது அடையாளம் சொல்லுகிறேன் வாருங்கள்; வெள்ளைக் குதிரைகள் பூண்டிருப்பதும் குரங்காகிற வெற்றிக் கொடியையுடையதுமான அர்ஜுனனுடைய தேரின்மேலே ஸாரதியாய் நின்று ஸைந்யத்துக்கு க்ருத்ரிமத் துணையாயிருந்து பாரத யுத்தத்தை அணிவகுத்து நடத்தக் கண்டாருண்டு. (7)

335 நாழிகைகூறிட்டுக்காத்துநின்ற அரசர்கள்தம்முகப்பே *
நாழிகைபோகப்படைபொருதவன் தேவகிதன்சிறுவன் *
ஆழிகொண்டன்றிரவிமறைப்பச் சயத்திரதன்தலையை *
பாழிலுருளப்படைபொருதவன் பக்கமேகண்டாருளர். (அ)

பகல் முப்பது நாழிகைகளைப் பங்கிட்டுக்கொண்டு ஜயத்ரதனைக் காத்துக் கொண்டிருந்த அரசர்களின் முன்னிலையில் பகல் முப்பது நாழிகையும் போயிற்றென்று தோற்றும்படியாகத் தன் ஆயுதமாகிய திருவாழியாழ்வானைக் கொண்டு ஸூர்யனை மறைத்த கண்ணபிரான் எழுந்தருளியிருக்குமிடத்தைக் கேட்கிறீர்களாகில் சொல்லுகின்றேன்; அப்படி அவ்வரசர்கள் காத்துக்கொண்டு நின்ற அன்றைக்குத் திருவாழியினால் ஸூர்யனைத் தான் மறைக்க, அதனால் பகல் கழிந்ததாகத் தோற்றி வெளிப்பட்ட ஜயத்ரதனுடைய தலையானது பாழியிலே கிடந்து உருளும்படி அம்பைச் செலுத்தின அர்ஜுனனருகில் அவ்வெம்பெருமானைக் கண்டாருண்டு. (8)

336 மண்ணும்மலையும்மறிகடல்களும் மற்றும்யாவுமெல்லாம் *
திண்ணம்விழுங்கியுமிழ்ந்ததேவனைச் சிக்கெனநாடுதிரேல் *
எண்ணற்கரியதோரேனமாகி யிருநிலம்புக்கிடந்து *
வண்ணக்கருங்குழல்மாதரோடு மணந்தானைக்கண்டாருளர். (க)

பூமியையும் மலைகளையும் அலையெறியா நின்றுள்ள கடல்களையும் மற்றுமுண்டான எல்லாப் பொருள்களையும் ப்ரளயங் கொள்ளாதபடி திருவயிற்றிலே வைத்து ரக்ஷித்துப் பின்பு உமிழ்ந்த எம்பெருமானை ஊற்றத்துடனே தேடுகிறீர்களாகில், இதனைக் கேளுங்கள்; நினைக்கமுடியாத பெருமையையுடைய ஒப்பற்ற வராஹமாய் அவதரித்து ப்ரளய வெள்ளத்திற் புகுந்து பெரிய பூமியை அண்டபித்தியில் நின்று ஒட்டு விடுவித்தெடுத்து அவ்வளவிலே பூமிப்பிராட்டி தன்னைவந்து அணைக்க, அழகியதும் கறுத்ததுமான கூந்தலையுடைய அந்த பூமிப்பிராட்டியோடு ஸம்ச்லேஷித்தவனைக் கண்டாருண்டு. (9)

337 கரியமுகிற்புரைமேனிமாயனைக் கண்டசுவடுரைத்து *
புரவிமுகஞ்செய்துசெந்நெலோங்கி விளைகழனிப்புதுவை *
திருவிற்பொலிமறைவாணன் பட்டர்பிரான்சொன்னமாலைபத்தும் *
பரவுமனமுடைப்பத்தருள்ளார் பரமனடிசேர்வர்களே. (கo)

செந்நெற் பயிர்களானவை (ஆகாசமளவும்) உயர்ந்து குதிரை முகம்போலத் தலைவணங்கி விளையா நிற்கப்பெற்ற வயல்களையுடைய ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரும் விஷ்ணுபக்தியாகிற செல்வத்தினால் விளங்கா நின்றுள்ளவரும் வேதத்துக்கு நிர்வாஹகருமான பெரியாழ்வார் நீலமேகம் போன்ற திருமேனியையுடைய பிரானை ஸேவித்த அடையாளங்களையுட்கொண்டு அருளிச் செய்த சொல்மாலையாகிற இப்பத்துப் பாட்டையும் அநுஸந்திக்கும் பக்திமான்கள் பரமபுருஷனுடைய திருவடிகளைக் கிட்டப்பெறுவர்கள். (10)

அடிவரவு :—கதிர் காந்தகம் கொலை தோயம் நீரேறு பொல்லா வெள்ளை நாழிகை மண் கரிய அலம்பா.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்தில் முதல் திருமொழி முற்றிற்று.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

(திருமாலிருஞ்சோலைப் பதிகம்.)

338 அலம்பாவெருட்டாக் கொன்றுதிரியுமரக்கரை * குலம்பாழ்படுத்துக் குலவிளக்காய்நின்றகோன்மலை *
சிலம்பார்க்கவந்து தெய்வமகளிர்களாடுஞ்சீர் * சிலம்பாறுபாயுந் தென்திருமாலிருஞ்சோலையே. (௧)

தேவஸ்த்ரீகள் தமது பாதச்சிலம்புகள் ஒலிக்கும்படி பூலோகத்தில் வந்து நீராடும்படியான பெருமையையுடைய நூபுரகங்கை பெருகப் பெற்றுள்ள அழகிய திருமாலிருஞ் சோலையானது, ப்ராணிகளை அலையச் செய்தும் பயப்படுத்தியும் உயிர்க்கொலை செய்தும் திரிந்துகொண்டிருந்த ராக்ஷஸர்களை ஸகுடும்பமாகப் பாழாக்கி இக்ஷ்வாகு வம்சத்துக்கு விளக்காய் நின்ற பெருமான் எழுந்தருளியிருக்குமிடமான திருமலையாம்.

339 வல்லாளன்தோளும் வாளரக்கன்முடியும் * தங்கை பொல்லாதமூக்கும் போக்குவித்தான்பொருந்துமலை*
எல்லாவிடத்திலுமெங்கும்பரந்து பல்லாண்டொலி * செல்லாநிற்குஞ்சீர்த் தென்திருமாலிருஞ்சோலையே.

மங்களாசாஸந கோஷமானது எல்லாவிடங்களிலும் திருமலையின் பரப்பெங்கும் பரவிச் செல்லும்படியான பெருமையையுடைய தென் திருமாலிருஞ்சோலை: வலிய ஆண்மையை யுடையவனும் சிவனிடத்துப்பெற்ற வாளையுடையவனுமான ராவணனுடைய தோள்களும் தலைகளும் அவனது தங்கையாகிய சூர்ப்பணகையினது கொடிய மூக்கும் அறுப்புண்டு போம்படி பண்ணின எம்பெருமான் பொருந்தி எழுந்தருளி யிருக்குமிடமான திருமலையாம். (௨)

340 தக்கார்மிக்கார்களைச் சஞ்சலஞ்செய்யுஞ்சலவரை*தெக்காநெறியேபோக்குவிக்குஞ் செல்வன்பொன்மலை*
எக்காலமுஞ்சென்று சேவித்திருக்குமடியரை * அக்கானெறியைமாற்றும் தண்மாலிருஞ்சோலையே. (௩)

எப்போதும் போய்த் திருவடி தொழாநின்றுள்ள பாகவதர்களை அப்படிப்பட்ட கொடுமையான பாவக் காட்டுவழியில் நின்றும் விலக்கக்கடவதும் தாபஹாரமுமான திருமாலிருஞ்சோலை;—க்ருபா விஷயத்தில் எம்பெருமானை ஒத்தவர்களும் அவனிலும் மேற்பட்டவர்களுமாயுள்ள மஹாத்மாக்களை அலைத்து வருத்தாநின்றுள்ள க்ருத்ரிமப் பயல்களைத் தென்திசையிலுள்ள நரகமார்க்கத்திலே போகும்படி பண்ணுகின்ற எம்பெருமான் எழுந்தருளியிருக்குமிடமான அழகிய திருமலையாம். (௩)

341 ஆனாயர்கூடி அமைத்தவிழவை * அமரர்தங் கோனார்க்கொழியக் கோவர்த்தனத்துச்செய்தான்மலை *
வானாட்டில்நின்று மாமலர்க்கற்பகத்தொத்திழி * தேனாறுபாயுந் தென்திருமாலிருஞ்சோலையே. (௪)

ஸ்வர்க்கலோகத்திலுள்ள பெரிய பூக்களையுடைய கல்ப வ்ருக்ஷத்தினுடைய பூங்கொத்தில் நின்றும் பெருகாநின்ற தேனானது ஆறாய்க்கொண்டு ஓடாநிற்கிற அழகையுடைய திருமாலிருஞ்சோலை, பசுக்களுக்குத் தலைவரான இடையர்கள் ஒன்றுசேர்ந்து இந்திரனுக்காக ஏற்படுத்தின ஸமாராதனையை அந்த தேவேந்திரனுக்குச் சேரவொட்டாமல் தடுத்துக் கோவர்த்தன மலைக்குச் சேரும்படி செய்தருளின கண்ணபிரானுடைய திருமலையாம். (௪)

342 ஒருவாரணம்பணிகொண்டவன் பொய்கையில் * கஞ்சன்றன்
ஒருவாரணமுயிருண்டவன் சென்றுறையுமலை *
கருவாரணம் தன்பிடிதுறந்தோட * கடல்வண்ணன்
திருவாணைகூறத்திரியுந் தண்மாலிருஞ்சோலையே. (௫)

பொய்கைக்கரையில் ஸ்ரீகஜேந்திராழ்வானுடைய ஒரு யானையினிடத்துக் கைங்கரியத்தை ஸ்வீகரித்தருளினவனும், கம்ஸனுடைய குவலயாபீடமென்ற ஒரு யானையினுடைய உயிரை முடித்தவனு

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மான கண்ணபிரான் எழுந்தருளி நித்யவாஸம் பண்ணப்பெற்ற மலையாவது; கறுத்ததொரு யானை, தன்னுடைய பேடையானது ப்ரணய ரோஷத்தினால் தன்னை விட்டிட்டு ஓடப்புக, அதுகண்ட அவ்யானையானது "அழகர்மேலாணை" என்றுசொல்ல அப்பேடையானது அவ்வாணைக்குக் கட்டுப்பட்டு அப்புறம் போகமாட்டாமல் மீளாநின்றுள்ள விடமான திருமாலிருஞ்சோலை மலையாம். (5)

343 ஏவிற்றுச்செய்வான் ஏன்றெதிர்ந்துவந்தமல்லரை * சாவத்தகர்த்த சாந்தணிதோட்சதுரன்மலை *
ஆவத்தனமென்று அமரர்களும்நன்முனிவரும் * சேவித்திருக்குந் தென்திருமாலிருஞ்சோலையே. (6)

கம்ஸன் ஏவின காரியங்களைச் செய்து முடிப்பதாகத் துணிந்து எதிரிட்டு வந்த மல்லர்களை முடித்தவனும், கூனியிட்ட சாந்தை அணிந்துகொண்டுள்ள தோள்களையுடையவனும் ஸமர்த்தனுமான கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது; தேவர்களும் மஹர்ஷிகளும் ஆபத்துக்காலத்துக்குத் துணையாயிருக்குமிடமென்று நினைத்து ஸேவித்துக்கொண்டு இருக்குமிடமான திருமாலிருஞ்சோலையாம். (6)

344 மன்னர்மறுக மைத்துனன்மார்க்கொருதேரின்மேல் *
முன்னங்குநின்று மோழையெழுவித்தவன்மலை *
கொன்னவில்கூர்வேற்கோன் நெடுமாறன்தென்கூடற்கோன் *
தென்னன்கொண்டாடுந் தென்திருமாலிருஞ்சோலையே. (7)

குரு தேசத்து அரசர்கள் குடல் குழம்பும்படி மைத்துனன்மாரான பாண்டவர்களுக்குத் துணையாகி ஒரு தேரிலே முற்புறத்திலே நின்றுகொண்டு நீர் நரம்பில் விட்ட வாருணாஸ்த்ரத்தின் வழியே கிழுண்டான நீரானது குமிழியெறிந்து கிளரும்படி பண்ணின கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது—கொலையையே தொழிலாகவுடைய கூர்மை பொருந்திய வேலையுடையவனும் 'மாறன்' என்னும் பெயருடையவனும் தென் மதுரைக்குத் தலைவனும் பாண்டிநாட்டுத் தலைவனுமான மலயத்வஜ ராஜனாலே கொண்டாடப் பெற்ற திருமாலிருஞ்சோலையாம். (7)

345 குறுகாதமன்னரைக்கூடுகலக்கி வெங்கானிடை * சிறுகால்நெறியேபோக்குவிக்குஞ் செல்வன்பொன்மலை *
அறுகால்வரிவண்டுகள் ஆயிரநாமஞ்சொல்லி * சிறுகாலைப்பாடுந் தென்திருமாலிருஞ்சோலையே. (8)

திருமலையை அணுகாத அரசர்களுடைய இருப்பிடத்தை யழித்துத் தீய காட்டிலே சிற்றடி வழியாக அவ்வரசர்களை ஓட்டுகின்ற திருமால் எழுந்தருளியிருக்கிற சிறந்த மலையாவது; ஆறு கால்களையுடைய அழகிய வண்டுகளானவை விடியற்காலத்திலே ஸஹஸ்ர நாமங்களை ஆளத்திவைத்துப் பாடுமிடமான திருமாலிருஞ்சோலையாம். (8)

346 சிந்தப்புடைத்துச்செங்குருதிகொண்டு பூதங்கள் * அந்திப்பலிகொடுத்து ஆவத்தனஞ்செய்யப்பன்மலை *
இந்திரகோபங்கள் எம்பெருமான்கனிவாயொப்பான் * சிந்தும்புறவில் தென்திருமாலிருஞ்சோலையே. (9)

ஸ்ரீ வைஷ்ணவ பூதங்களானவை தேஹ போஷணமே பண்ணிக்கொண்டு திரியும்நாஸ்திகர்களைக் கண்டால், அவர்களைச் சிதற அடித்துக் கொன்று அதனால் அவர்களுடலினின்று புறப்படுகிற சிவந்த ரத்தத்தைக் கொண்டு அந்திப்பொழுதிலே எம்பெருமானுக்கு ஆராதந ரூபமாக ஸமர்ப்பித்து ஆபத் காலத்துக்குத் துணையாமிடமென்று ஸேவிக்குமிடமான மலையாவது; பட்டுப் பூச்சிகளானவை அழகருடைய திருவதரத்திற்குப் போலியாகக் கண்ட விடமெங்கும் சிதறிப் பறக்கப் பெற்ற தாழ்வரையையுடைய திருமாலிருஞ்சோலையாம். (9)

12

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

347 எட்டுத்திசையும் எண்ணிறந்தபெருந்தேவிமார் * விட்டுவிளங்க வீற்றிருந்தவிமலன்மலை *
பட்டிப்பிடிகள் பகடுரிஞ்சிச்சென்றுமாலைவாய் * தெட்டித்திளைக்குந் தென்திருமாலிருஞ்சோலையே. (10)

எண்ணிறந்த தேவிமார்கள் எட்டுத்திக்குக்களிலும் மிகவும் பிரகாசிக்க அவர்கள் நடுவே பெருமை தோற்ற எழுந்தருளியிருந்த கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது: வேண்டினபடி திரிகின்ற யானைப்பேடைகளானவை இரவிலே ஆண் யானையோடு கலந்து களியா நிற்குமிடமான திருமாலிருஞ்சோலையாம். (10)

348 மருதப்பொழிலணி மாலிருஞ்சோலைமலைதன்னை *
கருதியுறைகின்ற கார்க்கடல்வண்ணனம்மான்றன்னை *
விரதங்கொண்டேத்தும் வில்லிபுத்தூர்விட்டுசித்தன்சொல் *
கருதியுரைப்பவர் கண்ணன்கழலிணைகாண்பர்களே. (11)

மருதஞ் சோலைகளை அலங்காரமாகவுடைய திருமாலிருஞ்சோலை மலையை விரும்பி அதில் எழுந்தருளியிருக்கின்ற அழகப்பிரானுரை நியதமாகத் துதிக்குமவரான பெரியாழ்வார் அருளிச் செய்த இவற்றை விரும்பி ஓதுமவர்கள் கண்ணபிரானுடைய திருவடிகளை ஸேவிக்கப் பெறுவர்கள். (11)

அடிவரவு:—அலம் வல்லாளன் தக்கார் ஆனுயர் ஒரு ஏவிற்று மன்னர் குறுகாத சிந்த எட்டு மருதம் உருப்பிணி.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து—மூன்றாந்திருமொழி—உருப்பிணிநங்கை

(இதுவும் திருமாலிருஞ்சோலைப் பதிகம்)

349 உருப்பிணிநங்கைதன்னைமீட்பான் தொடர்ந்தோடிச்சென்ற *
உருப்பனையோட்டிக்கொண்டிட் டுறைத்திட்டவுறைப்பன்மலை *
பொருப்பிடைக்கொன்றைநின்று முறியாழியுங்காசுங்கொண்டு *
விருப்பொடுபொன்வழங்கும் வியன்மாலிருஞ்சோலையதே. (1)

ருக்மிணிப்பிராட்டியைக் கண்ணனுடைய தேரில் நின்றும் திருப்பிக்கொண்டு போவதற்காக அத்தேரைப் பின் தொடர்ந்து கொண்டு ஓடிவந்த 'ருக்மன்' என்றவனைப் பிடித்துக்கொண்டு தேர்த்தட்டிலே இருத்தி அவனைப் பரிபவப்படுத்தின மிடுக்கையுடைய கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது; கொன்றை மரங்களானவை மலையிலே நின்று, முறிந்த பொன்மயமான மோதிரங்கள் போன்ற பூ நரம்புகளையும் இதழ்களையும் வாரிக்கொண்டு ஆதரத்துடனே பிறர்க்குக் கொடுப்பவை போன்றிருக்கப் பெற்ற ஆச்சரியமான திருமாலிருஞ்சோலையேயாம். (1)

350 கஞ்சனுங்காளியனுங் களிறுமருதுமெருதும் * வஞ்சனையின்மடிய வளர்ந்தமணிவண்ணன்மலை *
நஞ்சுமிழ்நாகமெழுந்தணவி நளிர்மாமதியை * செஞ்சுடர்நாவளைக்குந் திருமாலிருஞ்சோலையதே. (2)

கம்ஸனும் காளிய நாகமும் குவலயாபீட யானையும் இரட்டை மருதமரங்களும் அரிஷ்டாஸுரனாகிற ரிஷபமும் தந்தம்முடைய வஞ்சனைகளாலே தாம்தாம் முடியும்படி திருவாய்ப்பாடியில் வளர்ந்தருளின கண்ணபிரான் எழுந்தருளியிருக்கும் மலையா

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வது; விஷத்தை உமிழாநின்றுள்ள மலைப் பாம்பானவை, மலைச் சிகரத்தின்மேல் தவழுகின்ற குளிர்ந்த பூர்ண சந்திரனைத் தமக்கு உணவாக நினைத்துப் படமெடுத்துக் கிளர்ந்து கிட்டி, சிவந்த தேஜஸ்ஸையுடைய தனது நாக்கினால் அந்தச்சந்திரனை அணையா நிற்குமிடமான திருமாலிருஞ்சோலையாம். ... ... (2)

351 மன்னுநரகன்றன்னைச் சூழ்போகிவளைந்தெறிந்து *
கன்னிமகளிர்தம்மைக் கவர்ந்தகடல்வண்ணன்மலை *
புன்னைசெருந்தியொடு புனவேங்கையுங்கோங்கும்நின்று *
பொன்னரிமாலைகள்சூழ் பொழில்மாலிருஞ்சோலையதே. (3)

நரகாஸுரனைக் கொல்லும் வகைகளை ஆராய்ந்து அவனைத் தப்பிப்போக முடியாதபடி வளைத்துக்கொண்டு திருவாழியாலே நிரஸித்து, அவனால் சிறையிலடைத்து வைக்கப்பட்டிருந்த பதினாறாயிரத்தொருநூறு கன்னிகைகளையும் தான் கொள்ளை கொண்ட கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது : புன்னை மரங்களும் சுர புன்னை மரங்களும் வேங்கை மரங்களும் கோங்கு மரங்களும் புஷ்பங்களால் நிறைந்து ஒழுங்குபட நின்று திருமலைக்குப் பொன்னரி மாலைகள் சுற்றினாற்போலே யிருக்கப்பெற்ற சோலைகளையுடைய திருமாலிருஞ்சோலையாம். ... ... (3)

352 மாவலிதன்னுடைய மகன்வாணன்மகளிருந்த *காவலைக்கட்டழித்த தனிக்காளைகருதும்மலை *
கோவலர்கோவிந்தனைக் குறமாதர்கள்பண்குறிஞ்சி * பாவொலிபாடிநடம்பயில் மாலிருஞ்சோலையதே. (4)

மஹாபலியினுடைய புத்திரனாகிய பாணாஸுரனுடைய மகளான உஷை இருந்தசிறைக் கூடத்தை அரணோடே அழித்தருளின ஒப்பற்ற யுவாவான கண்ணபிரான் விரும்புகிற மலையாவது; இடையர்களுக்குள் கோவிந்தாபிஷேகம் பண்ணப்பெற்ற கண்ணபிரான் விஷயமாகக் குறத்திகளானவர்கள் குறிஞ்சிராகத்தோடு கூடினபாட்டுக்களை இசைபெறப் பாடிக்கொண்டு அப்பாட்டுக்குத் தகுதியாகக் கூத்தாடுமிடமான திருமாலிருஞ்சோலையாம். (4)

353 பல்பல்நாமஞ்சொல்லிப் பழித்தசிசுபாலன்றன்னை * அலவலைமைதவிர்த்த அழகனலங்காரன்மலை *
குலமலைகோலமலை குளிர்மாமலைகொற்றமலை * நிலமலைநீண்டமலை திருமாலிருஞ்சோலையதே. (5)

பலபல குற்றங்களைச் சொல்லி தூஷித்த சிசுபாலனுடைய அற்பத்தனத்தை சரமதசையில் போக்கியருளின அழகையுடையவனும் அலங்காரத்தையுடையவனுமான கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது: தொண்டக் குலத்துக்குத் தலையான மலையும் அழகையுடைய மலையும் நல்லமரங்கள் முளைக்கைக்குப் பாங்கான நிலத்தையுடைய மலையும் நிட்சியையுடைய மலையுமான திருமாலிருஞ்சோலைமலையாம். (5)

354 பாண்டவர்தம்முடைய பாஞ்சாலிமறுக்கமெல்லாம் *
ஆண்டங்குநூற்றுவர்தம் பெண்டிர்மேல்வைத்தவப்பன்மலை *
பாண்டகுவண்டினங்கள் பண்கள்பாடிமதுப்பருக *
தோண்டலுடையமலை தொல்லைமாலிருஞ்சோலையதே. (6)

பஞ்சபாண்டவர்களுடைய மனைவியாகிய த்ரௌபதியினுடைய மனக்குழப்பத்தையெல்லாம் தன் திருவுள்ளத்திற் கொண்டு. அவள் பரிபவப்பட்ட அப்போது அத்துன்பங்களை யெல்லாம் துரியோதநாதிகளான நூற்றுவருடைய மனைவியர்களின்மேல் சுமத்தின கண்ணபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது; பாட்டுக்குத் தகுதியான ஜன்மத்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தையுடைய வண்டுத் திரளானவை ராகங்களைப் பாடிக்கொண்டு தேனைக் குடிப்பதற்குப் பாங்காக ஊற்றுக்களையுடைய மலையாகிய அநாதியான அந்த மாலிருஞ்சோலையேயாம். (6)

355 கனங்குழையாள்பொருட்டாக் கணைபாரித்து * அரக்கர்தங்கள்
இனங்கழுவேற்றுவித்த எழில்தோளெம்மிராமன்மலை *
கனங்கொழிதெள்ளருவி வந்துசூழ்ந்தகன்ஞாலமெல்லாம் *
இனங்குழுவாடும்மலை யெழில்மாலிருஞ்சோலையதே. (7)

பொன்மயமான காதணியை யுடையவளான பிராட்டிக்காக அம்புகளைப் பிரயோகித்து ராக்ஷஸ குலத்தைச் சூலத்தின்மேல் ஏற்றினவனும் அழகியதோள்களையுடையவனும் எமக்குத்தலைவனுமான இராமபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது; பொன்களைக் கொழித்துக்கொண்டு வாராநின்ற தெளிந்த அருவிகளிலே, விசாலமான பூமியிலுள்ளாரெல்லாரும் திரள்திரளாக வந்து சூழ்ந்துகொண்டு நீராடப்பெற்ற அழகிய மாலிருஞ்சோலையாம், (7)

356 எரிசிதறுஞ்சரத்தால் இலங்கையனை * தன்னுடைய வரிசிலைவாயிற்பெய்து வாய்க்கோட்டந்தவிர்த்துகந்த *
அரையனமரும்மலை அமரரொடுகோனுஞ்சென்று * திரிசுடர்சூழும்மலை திருமாலிருஞ்சோலையதே. (8)

நெருப்பைச் சொரிகின்ற அம்புகளினால் லங்கைக்கரசனை ராவணனைத் தன்னுடைய நீண்ட வில்லின் வாயிலே புகுரச்செய்து அவனுடைய வாக்கின் அநீதியைக் குலைத்துத் தான் வெற்றிபெற்றமையாலே மகிழ்ந்தருளின ஸ்வாமியான இராமபிரான் எழுந்தருளியிருக்கிற மலையாவது; தேவர்களோடுகூட அவர்களுக்குத் தலைவனான இந்திரனும் இரவும் பகலும் திரியாநின்ற சந்த்ரஸூர்யர்களும் வந்து பிரதக்ஷிணம் பண்ணப்பெற்ற திருமாலிருஞ்சோலையாம். (8)

357 கோட்டுமண்கொண்டிடந்து குடங்கையில்மண்கொண்டளந்து *
மீட்டுமதுண்டுமிழ்ந்து விளையாடும்விமலன்மலை *
ஈட்டியபல்பொருள்கள் எம்பிரானுக்கடியுறையென்று *
ஓட்டருந்தண்சிலம்பாறுடை மாலிருஞ்சோலையதே. (9)

ஹிரண்யாக்ஷனாலே பாயாகச் சுருட்டிக்கொண்டு போகப்பட்ட பூமியை வராஹரூபியாய் அவதரித்து அண்டபித்தியில் நின்றும் ஒட்டுவிடுவித்தெடுத்துத் தனது திருவயிற்றிலே ஏன்று கொண்டும் மஹாபலியினால் தன்வசமாக்கிக் கொள்ளப்பட்ட பூமியை வாமநரூபியாய் அவதரித்து அங்கையில் நீரேற்று வாங்கிக்கொண்டு அளந்தருளியும், மறுபடியும் அவாந்தர ப்ரளயத்திலே அந்தப் பூமி அழியப்புக, அப் பூமியைத் திருவயிற்றில் வைத்து நோக்கிப் பின்பு வெளிப்படுத்தியும் இப்படிப்பட்ட ஆச்சரியச் செயல்களாலே விளையாடாநின்றுள்ள எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற மலையாவது ; பெருகிவரும்போது வாரிக்கொண்டு வரப்பெற்ற பலவகைப்பட்ட பொன் முத்து அகில் முதலிய பொருள்கள் எம்பெருமானுக்கு ஸ்ரீபாதகாணிக்கையென்று பெருகி ஓடிவாராநின்றுள்ள குளிர்ந்த நூபுர கங்கையையுடைய திருமாலிருஞ்சோலையாம். (9)

358 ஆயிரந்தோள்பரப்பி முடியாயிரமின்னிலக * ஆயிரம்பைந்தலைய அனந்தசயனனாளும்மலை *
ஆயிரமாறுகளுஞ் சுனைகள்பலவாயிரமும் * ஆயிரம்பூம்பொழிலுமுடை மாலிருஞ்சோலையதே. (10)

பலபல திருத்தோள்களைப் பரப்பிக் கொண்டும் ஆயிரந் திருமுடிகளும் மிகவும் விளங்கும்படியாகவும் பரந்த ஆயிரந் தலைகளையுடைய திருவனந்தாழ்வான்மீது பள்ளிகொண்டருளுமவனான எம்பெருமான் ஆளுகின்றமலையாவது; பலநதிகளையும் அனேகமாயிரந் தடாகங்களையும் பல பூஞ்சோலைகளையுமுடைய திருமாலிருஞ்சோலையாம். (10)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

359 மாலிருஞ்சோலையென்னும் மலையையுடையமலையை * நாலிரு மூர்த்திதன்னை நால்வேதக்கடலமுதை*
மேலிருங்கற்பகத்தை வேதாந்தவிழுப்பொருளில் * மேலிருந்தவிளக்கை விட்டுசித்தன்விரித்தனவே. (11)

திருமாலிருஞ்சோலை யென்கிற திருமலையைத் தனக்கு இருப்பிடமாக உடையவனும் ஒரு மலை சாய்ந்தாற்போன்றுள்ளவனும் திருவஷ்டாக்ஷர ஸ்வரூபியானவனும் நான்கு வேதங்களாகிற கடலின் ஸாரமான அம்ருதம் போன்றவனும் ஸ்வர்க்க லோகத்திலுள்ள கல்ப வ்ருக்ஷத்திலும் மேற்பட்டதும் பெரிதுமான கல்ப வ்ருக்ஷமாயிருப்பவனும் வேதாந்தங்களிற் கூறப்படுகின்ற சிறந்த அர்த்தங்களுள் மேற்பட்ட அர்த்தமாயிருப்பவனும் தனக்குத்தானே விளங்குபவனுமான எம்பெருமானைக் குறித்துப் பெரியாழ்வார் அருளிச் செய்தவை இப்பாசுரங்கள். (*11*)

அடிவரவு ;—உருப்பிணி கஞ்சன் மன்னு மாவலி பல பாண்டவர் கனம் எரி கோட்டு ஆயிரம் மாலிரு நா.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து—நான்காந்திருமொழி—நவகாரியம்

(திருக்கோட்டியூர்ப் பதிகம்)

360 நாவகாரியஞ்சொல்லிலாதவர் நாடொறும்விருந்தோம்புவார் *
தேவகாரியஞ்செய்து வேதம்பயின்றுவாழ்திருக்கோட்டியூர் *
மூவர்காரியமுந்திருத்தும் முதல்வனைச்சிந்தியாத * அப்
பாவகாரிகளைப்படைத்தவன் எங்ஙனம்படைத்தான்கொலோ. (1)

நாவினால் சொல்லவொண்ணாதவற்றை ஒருநாளும் சொல்லியறியாத ஸ்ரீ வைஷ்ணவர்கள் நாடோறும் ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு விருந்தளித்துக் கொண்டும் பகவதாராதனம் பண்ணிக்கொண்டும் வேதங்களை ஓதிக்கொண்டும் வாழுமிடமான திருக்கோட்டியூரில் எழுந்தருளி யிருப்பவனும், பிரமன் ருத்ரன் இந்திரன் என்ற மூவருடைய காரியங்களையும் செய்து தலைக்கட்டுபவனும், எல்லார்க்கும் தலைவனுமான எம்பெருமானை நெஞ்சாலும் நினையாத அப்படிப்பட்ட [மிகவுங் கொடிய] பாவஞ் செய்த பிராணிகளை ஸ்ருஷ்டித்தவன் ஏதுக்காக ஸ்ருஷ்டித்தானோ! (அறியோம்.) (*1*)

361 குற்றமின்றிக்குணம்பெருக்கிக் குருக்களுக்கனுகூலராய் *
செற்றமொன்றுமிலாத வண்கையினர்கள்வாழ்திருக்கோட்டியூர *
துற்றியேழுலகுண்ட தூமணிவண்ணன்றன்னைத் தொழாதவர் *
பெற்றதாயர்வயிற்றினைப் பெருநோய்செய்வான்பிறந்தார்களே. (2)

ஒருவகையான குற்றமுமில்லாமல் நற்குணங்களை வளரச்செய்து கொண்டு தம்தம் ஆசாரியர்களுக்குக் கைங்கரியம் பண்ணுவதற்குப்பாங்காயிருப்பவர்களும் பொறுமையென்பதுசிறிதுமில்லாதவர்களும் உதாரமான கையையுடையவர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழுமிடமான திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருப்பவனும் ஸப்த லோகங்களையும் ஒரு கபளமாகத் திரட்டி அமுதுசெய்தருளினவனும் பழிப்பற்ற நீல மணிபோன்ற நிறத்தையுடையவனுமான எம்பெருமானை வணங்காதவர், தங்களைப் பெற்ற தாய்மாருடையவயிற்றை மிகவும்நோவுபடுத்துகைக்காகப் பிறந்தார்களத்தனை. (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

362 வண்ணநன்மணியும் மரகதமுமழுத்தி * நிழலெழும்
திண்ணைசூழ்திருக்கோட்டியூர்த் திருமாலவன்திருநாமங்கள் *
எண்ணக்கண்டவிரல்களால் இறைப்பொழுதுமெண்ணகிலாதுபோய் *
உண்ணக்கண்டதம்மூத்தைவாய்க்குக் கவளமுந்துகின்றார்களே. (3)

நல்ல நிறத்தையுடைய ரத்நங்களையும் மரகதங்களையும் ஒழுங்குபட இழைத்ததனால் ஒளிவிடாநின்றுள்ள திண்ணைகளாலே சூழப்பெற்ற திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கின்ற திருமாமகள் கொழுநனுடைய திருநாமங்களை ஒன்று இரண்டு என்று எண்ணுகைக்காகப் படைக்கப்பட்ட விரல்களாலே அந்தத்திருநாமங்களை க்ஷணகாலமும்எண்ணமாட்டாமல் புறம்பேசென்று சரீர போஷணார்த்தமாக உண்ணுகின்றதங்களுடைய அசுத்தமான வாயிலே சோற்றுத் திரளைகளை அவ்விரல்களினால் தள்ளாநின்றார்களே! (இதென்ன கொடுமை!) (3)

363 உரகமெல்லணையான்கையில் உறைசங்கம்போல்மடவன்னங்கள் *
நிரைகணம்பரந்தேறுஞ் செங்கமலவயல்திருக்கோட்டியூர் *
நரகநாசனை நாவிற்கொண்டழையாத மானிடசாதியர் *
பருகுநீருமுடுக்குங்கூறையும் பாவஞ்செய்தனதான்கொலோ. (4)

திருவனந்தாழ்வானை ஸுகுமாரமான படுக்கையாகவுடைய எம்பெருமானது திருக்கையில் உள்ள ஸ்ரீ பாஞ்சஜந்யம்போல் வெளுத்த ஹம்ஸங்களானவை திரள்திரளாகப்பரவி ஏறியிருக்கப்பெற்ற செந்தாமரை மலர்களையுடைய வயல்களாலே சூழப்பட்ட திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருப்பவனும், தன்னடியார்க்கு நரகப்ரவேசத்தை ஒழித்தருளுமவனுமான எம்பெருமானை நாவினால் அழைக்கமாட்டாத மநுஷ்யஜாதியிற் பிறந்தவர்கள் குடிக்கின்ற தண்ணீரும் உடுத்துக்கொள்ளுகிற வஸ்திரமும் பாவஞ்செய்தனவோ தான்! (4)

364 ஆமையின்முதுகத்திடைக்குதிகொண்டு தூமலர்சாடிப்போய் *
தீமைசெய்திளவாளைகள் விளையாடுநீர்த்திருக்கோட்டியூர் *
நேமிசேர்தடங்கையினானை நினைப்பிலாவலிநெஞ்சுடை *
பூமிபாரங்களுண்ணுஞ்சோற்றினை வாங்கிப் புல்லைத்திணிமினே. (5)

'வாளை' என்னும் மீன்கள் ஆமைகளினுடைய முதுகின்மேல் குதித்துக்கொண்டும் நல்ல புஷ்பங்களை உழக்கிக்கொண்டும் தீம்புகளைச்செய்து கொண்டும் விளையாடுமிடமான நீரையுடைய திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருப்பவனும், திருவாழியாழ்வானோடு சேர்ந்திருக்கிற பெரிய திருக்கையையுடையவனுமான எம்பெருமானை ஒருகாலும் நினையாத கடினமான நெஞ்சை உடையவர்களும் பூமிக்குச் சுமையாயிருப்பவர்களுமான பாவிகள் உண்கிற சோற்றைப் பிடுங்கிவிட்டு எறிந்து அறிவற்ற பசுக்களுக்கு உணவான புல்லைக்கொண்டு அவர்கள் வயிற்றைத் துற்றுவிடுங்கள். (5)

365 பூதமைந்தொடுவேள்வியைந்து புலன்களைந்துபொறிகளால் *
ஏதமொன்றுமிலாத வண்கையினார்கள்வாழ்திருக்கோட்டியூர் *
நாதனை நரசிங்கனை நவின்றேத்துவார்களுழக்கிய *
பாததூளிபடுதலால் இவ்வுலகம்பாக்கியஞ்செய்ததே. (6)

பஞ்சபூதமயமாகிய சரீரத்தினாலும் பஞ்சமஹா யஜ்ஞங்களினாலும் சப்தம் முதலிய ஐந்து விஷயங்களினாலும் பஞ்சேந்திரியங்களினாலும் ஸம்பவிக்கக்கூடிய குற்றமொன்றுமில்லாத

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வர்களும் உதாரமான கைகளையுடையவர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழுமிடமான திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருப்பவனும், எமக்கு ஸ்வாமியும் நரஸிம்ஹ ஸ்வரூபியுமான எம்பெருமானைத் துதிக்குமவரான பாகவதர்கள் திருவடிகளினால் மிதித்தருளின தூளியினுடைய ஸம்பந்தத்தினால் இந்த லோகமானது பாக்யம் பண்ணினதாகும். (6)

366 குருந்தமொன்றொசித்தானொடுஞ்சென்று கூடியாடிவிழாச்செய்து *
திருந்துநான்மறையோரிராப்பகல் ஏத்திவாழ்திருக்கோட்டியூர் *
கருந்தடமுகில்வண்ணனைக் கடைக்கொண்டுகைதொழும்பத்தர்கள் *
இருந்தவூரிலிருக்கும்மானிடர் எத்தவங்கள்செய்தார்கொலோ. (7)

நான்கு வேதங்களையு மோதின ஸ்ரீவைஷ்ணவர்கள் குருந்த மரத்தை முறித்தருளின கண்ணபிரானைச் சென்றுசேர்ந்து அவனுடைய குணங்களிலே அவகாஹித்து உத்ஸவத்தை அநுபவித்துக்கொண்டு இரவும்பகலும் மங்களாசாஸநம் பண்ணிக்கொண்டும் வாழுமிடமான திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருப்பவனும், கறுத்துப் பெருத்த மேகம் போன்ற நிறத்தையுடையவனுமான எம்பெருமானைக் குறித்து நைச்சியாநுஸந்தானத்துடன் அஞ்ஜலி பண்ணாநின்றுள்ள பக்தியையுடைய ஸ்ரீ வைஷ்ணவர்கள் எழுந்தருளியிருக்குமிடமான ஊரிலே நித்யவாஸம் பண்ணுகிற மனுஷ்யர்கள் எப்படிப்பட்ட தபஸ்ஸுகளை அநுஷ்டித்தார்களோ! அறியேன். (7)

367 நவிர்ந்தசீலன்நயாசலன் அபிமானதுங்கனைநாடொறும் *
தெளிந்தசெல்வனைச்சேவகங்கொண்ட செங்கண்மால்திருக்கோட்டியூர் *
குளிர்ந்துறைகின்றகோவிந்தன் குணம்பாடுவாருள்ளநாட்டினுள் *
விளைந்ததானியமுமிராக்கதர் மீதுகொள்ளகிலார்களே. (8)

குளிர்ந்த ஸ்வபாவத்தையுடையவரும் நீதிநெறி தவறாதவரும் இடைவிடாது எம்பெருமானை அநுபவிக்கையாலுண்டான ஸாத்விகாஹங்காரத்தாலுயர்ந்தவரும் நித்ய கைங்கர்ய ஸம்பத்தை யுடையவருமான செல்வநம்பியை அடிமைகொண்டவனும் செந்தாமரைபோன்ற கண்களை யுடையவனும் அடியார் பக்கல் மோஹமுடையனும் திருக்கோட்டியூரில் திருவுள்ளமுகந்து எழுந்தருளியிருப்பவனுமான எம்பெருமானுடைய திருக்குணங்களைப் பாடும் ஸ்ரீவைஷ்ணவர்கள் எழுந்தருளியிருக்கிற நாட்டிலே விளைந்த தான்யத்தையும் ராக்ஷஸர்கள் அபஹரிக்கமாட்டார்கள். (8)

368 கொம்பினார்பொழில்வாய்க் குயிலினங்கோவிந்தன்குணம்பாடுசீர் *
செம்பொனார்மதிள்சூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர் *
நம்பனைநரசிங்கனை நவின்றேத்துவார்களைக்கண்டக்கால் *
எம்பிரான்றனசின்னங்கள் இவரிவரென்றாசைகள்தீர்வனே. (9)

கிளைகளாலே நெருங்கின சோலைகளிலே குயில்களின் திரள் கண்ணபிரானுடைய சீர்மை
களைப் பாடாநிற்கப்பெற்றதும், சிறந்த செம்பொன்னாலே சமைந்த மதில்களாலே சூழப்
பட்டதும், செழுமை தங்கிய கழனிகளையுடையதுமான திருக்கோட்டியூரில் எழுந்தருளி
யிருப்பவனும், ரக்ஷகன் என்று விச்வஸிக்கக்கூடியவனும் நரஸிம்ஹ ரூபியுமான ஸர்வேச்
வரனை அநுஸந்தித்துத் துதிக்கும் பாகவதர்களை யான் ஸேவிக்கப்பெறுவேனாகில் "இந்த
இந்த ஸ்ரீவைஷ்ணவர்கள் எம்பெருமானுடைய அடையாளமாயிருப்பவர்கள்" என்று அநு
ஸந்தித்து நெடுநாளாய்ப் பிறந்துள்ள ஆசைகளைத் தலைக்கட்டிக் கொள்வேன். (9)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

369 காசின்வாய்க்கரம்விற்கிலும் கரவாதுமாற்றிலிசோறிட்டு *
தேசவார்த்தைபடைக்கும் வண்கையினர்கள்வாழ்திருக்கோட்டியூர் *
கேசவாபுருடோத்தமா கிளர்சோதியாய்குறளாவென்று *
பேசுவாரடியார்கள் எந்தம்மைவிற்கவும்பெறுவார்களே. (10)

ஒரு காசுக்கு ஒருபிடி நெல் விற்கும்படியான துர்ப்பிக்ஷ காலத்திலும் தமக்குள்ள பொருள்களை மறைத்திடாது பதில்உபகாரத்தை எதிர்பாராமல் அதிதிகளுக்கு அன்னமளித்துப் புகழ்ச்சியான வார்த்தைகளை ஸம்பாதித்துக் கொள்ளுமவரும் உதாரமான கையையுடையவர்களுமான ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழுமிடமான திருக்கோட்டியூரில் எழுந்தருளியிருக்கிற கேசவனே! புருஷோத்தமனே! மிகுந்த தேஜஸ்ஸையுடையவனே! வாமனனே; என்றிப்படிப் பேசுமவரான பாகவதர்கள் அடியோங்களைத் தம் இஷ்டப்படி விற்றுக்கொள்ளவும் அதிகாரிகள். (10)

370 சீதநீர்புடைசூழ் செழுங்கழனியுடைத்திருக்கோட்டியூர் *
ஆதியானடியாரையும் அடிமையின்றித்திரிவாரையும் *
கோதில்பட்டர்பிரான் குளிர்புதுவைமன்விட்டுசித்தன்சொல் *
ஏதமின்றியுரைப்பவர் இருடிகேசனுக்காளரே. (11)

குளிர்ந்த நீராலே சுற்றும் சூழப்பெற்ற செழுமை தங்கிய கழனிகளையுடைய திருக்கோட்டியூரிலுள்ள எம்பெருமானுக்கு அடிமை செய்யும் பாகவதர்களையும், அடிமை செய்யாமல் திரிகின்ற பாவிகளையுங்குறித்துப் பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பாசுரங்களைப் பழுதில்லாதபடி ஓதுமவர்கள் எம்பெருமானுக்கு ஆட்செய்யப் பெறுவர். (11)

அடிவரவு:—நா குற்றம் வண்ணம் உரகம் ஆமை பூதம் சுருந்தம் நளிர்ந்த கொம்பின் காசின் சீதநீர் ஆசை.

ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து—ஐந்தாந்திருமொழி—ஆசைவாய்

(பக்திமான்கள் பெறும்பேறு உரைத்தல்.)

371 ஆசைவாய்ச்சென்றசிந்தையராகி அன்னையத்தனென்புத்திரர்பூமி *
வாசவார்குழலாளென்றுமயங்கி மாளுமெல்லைக்கண்வாய்திறவாதே *
கேசவாபுருடோத்தமாவென்றுங் கேழலாகியகேடிலீயென்றும் *
பேசுவாரவரெய்தும்பெருமை பேசுவான்புகில்நம்பரமன்றே. (1)

தமக்கு ஆசையுள்ள விடத்திலே போய்ப்பதிந்த நெஞ்சை யுடையராய்க் கொண்டு 'என்னுடைய தாய் என்னுடைய தகப்பன் என்னுடைய பிள்ளைகள் என்னுடைய நிலம், பரிமளம் வீசாநின்றுள்ள கூந்தலையுடையவளான என் மனைவி' என்றுசொல்லிக்கொண்டு அவர்கள் பக்கல் மோஹமடைந்து பழுதே பல பகலும் போக்கினாலும் சரமஸமயத்தில் வாயைத்திறந்துஅவர்கள் பேரைச்சொல்லியழையாமல், கேசவனே! புருடோத்தமனே வராஹரூபியே! அச்யுதனே!' என்றுசொல்லுமவர்கள் அடையக்கூடிய பெருமைகளைப் பேசப்புக்கால் நம்மால் பேசித்தலைக்கட்டப் போகாது. (1)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

372 ஈயினாற்செறிந்தேறியபுண்மேல் செற்றலேறிக்குழம்பிருந்தெங்கும் *
ஈயினாலரிப்புண்டுமயங்கி யெல்லைவாய்ச்சென்றுசேர்வதன்முன்னம் *
வாயினால்நமோநாரணாவென்று மத்தகத்திடைக்கைகளைக்கூப்பி *
போயினாற்பின்னையித்திசைக்கென்றும் பிணைக்கொடுக்கிலும்போகவொட்டாரே. (2)

ஈயாலே மிகவும் நிறைந்த புண்ணின்மேல் ஈ இருந்து முட்டையிட்டு அவை புழுத்து நீராய்ப் பாயுமளவில் உடல் முழுவதும் ஈயாலே அரிக்கப்பட்டு வேதனை பொறுக்கமாட்டாமல் மூர்ச்சையடைந்து சரமகாலத்தைக் கிட்டுவதற்குமுன்னே, வாயாலே 'நமோநாராயணாய' என்று சொல்லிக்கொண்டு தலைமீது அஞ்ஜலிபண்ணி சரீரவிச்லேஷமானபின்பு பரமபதம் போய்ச் சேர்ந்தால் பிறகு நித்யமுக்தர்கள்: 'நாங்கள் உத்தரவாதம்பண்ணுகிறோம்' என்றாலும் பூலோகமாகிற இந்தத்திக்கைக்குறித்து ஒருநாளும் முக்தர்களைப்போகவொட்டார்கள். (2)

373 சோர்வினாற்பொருள்வைத்ததுண்டாகில் சொல்லுசொல்லென்றுசுற்றுமிருந்து *
ஆர்வினவிலும்வாய்திறவாதே அந்தகாலமடைவதன்முன்னம் *
மார்வமென்பதோர்கோயிலமைத்து மாதவனென்னுந்தெய்வத்தைநாட்டி *
ஆர்வமென்பதோர்பூவிடவல்லார்க்கு அரவதண்டத்திலுய்யலுமாமே. (3)

மறந்து எங்கேனும் ஏதாவதொரு பொருள் வைக்கப்பட்டிருக்குமாகில் அதைச் சொல்லு சொல்லு என்று சூழ்ந்துகொண்டு எப்படிப்பட்ட அன்பர்கள் கேட்டாலும் அவர்களுக்கு மறுமாற்றஞ் சொல்லுகைக்கும் வாயைத் திறக்கமாட்டாதபடி மரண காலமானது வந்து கிட்டுதற்குமுன்னே; 'ஹ்ருதயம்' என்கிற ஸந்நிதியை ஏற்படுத்தி அந்த ஸந்நிதியில் 'திருமால்' என்கிற தேவதையை எழுந்தருளப்பண்ணி அத்தெய்வத்தைக்குறித்து 'பக்தி' என்கிற ஒரு புஷ்பத்தை ஸமர்ப்பிக்க வல்லவர்களுக்கு யமபடர்களால் வரும் துன்பத்தினின்றும் தப்பிப் பிழைக்கலாகும். ... ... (3)

374 மேலெழுந்ததோர்வாயுக்கிளர்ந்து மேல்மிடற்றினையுள்ளெழவாங்கி *
காலுங்கையும்விதிர்விதிர்த்தேறிக் கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
மூலமாகியவொற்றையெழுத்தை மூன்றுமாத்திரையுள்ளெழவாங்கி *
வேலைவண்ணனைமேவுதிராகில் விண்ணகத்தினில்மேவலுமாமே. (4)

மேல்மூச்சு எழுந்ததனால் நெஞ்சு சிதிலமாகிக் கால்களும் கைகளும் பதை பதைக்கப்பெற்று மரணம் ஸம்பவிப்பதற்குமுன்னே, ஸகல வேதங்களுக்கும் காரணமாகிய 'ஓம்' என்ற பிரணவத்தை உச்சரிக்கவேண்டிய முறைப்படி உச்சரித்து, கடல்போன்ற நிறத்தை யுடையனான எம்பெருமானை ஆச்ரயித்தீர்களாகில் ஸ்ரீவைகுண்டத்தில் அடியார்கள் குழாங்களை உடன்கூடவும் பெறலாம். ... ... (4)

375 மடிவழிவந்துநீர்ப்புலன்சோர வாயிலட்டியகஞ்சியும்மீண்டே *
கடைவழிவாரக்கண்டமடைப்பக் கண்ணுறக்கமதாவதன்முன்னம் *
தொடைவழியும்மைநாய்கள்கவரா சூலத்தாலும்மைப்பாய்வதுஞ்செய்யார் *
இடைவழியில்நீர்கூறையுமிழவீர் இருடீகேசனென்றேத்தவல்லீரே. (5)

மூத்திரநீர் பெருகவும், யமகிங்கரர்களைக் கண்ட பயத்தினால் லிங்கத்தின் வழியாக வந்து கடைவாய்வழி வாயிலே பெய்த பொரிக்கஞ்சியானது கழுத்தை அடைக்கவும், மறுபடியும் 'ஹ்ருஷீகேசன்' என்று மரணமடைவதற்குமுன்னே அந்தப் பொரிக்கஞ்சிவழியவும் யமலோகத்திலுள்ள செந்நாய்களானவை யாலே சொல்லி ஸ்தோத்திரம் பண்ணவல்லவர்களே!

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உங்களைத் துடையிலே கவ்வமாட்டா: யமகிங்கரர்கள், உங்களை சூலாயுதத்தினுல் குத்தவும் மாட்டார்கள். நீங்கள் நடுவழியில் வஸ்திரத்தையும் இழக்கமாட்டீர்கள். ... ... (5)

376 அங்கம்விட்டவையைந்துமகற்றி ஆவிமூக்கினிற்சோதித்தபின்னை *
சங்கம்விட்டவர்கையைமறித்துப் பையவேதலைசாய்ப்பதன்முன்னம் *
வங்கம்விட்டுலவுங்கடற்பள்ளிமாயனை மதுசூதனைமார்பில்
தங்கவிட்டுவைத்து *ஆவதோர்கருமஞ்சாதிப்பார்க்கு என்றுஞ்சாதிக்கலாமே. (6)

பஞ்ச பிராணன்களும் உடலைவிட்டு அகன்றுபோக, பின்பு. அருகு உள்ளவர்கள் மூக்கில் கையை வைத்து 'பிராணன் இருக்கிறதா இல்லையா' என்று சோதித்துப் பார்த்து, இல்லை யென்றறிந்த பின்பு அவருடைய உயிரில் ஆசையை விட்டு. இனிப்பிழைப்பில்லையென்று கையை விரித்துக்காட்டி மெள்ள மெள்ளத் தங்கள் தலையைத் தொங்கவிட்டுக் கொள்வதற்கு முன்னே, கப்பல்களுலாவும் கடலில் பள்ளிகொள்பவனும் ஆச்சரிய சக்தியுக்தனும் மதுவைக் கொன்றவனுமான எம்பெருமானை ஹிருதயத்தில் அமைத்து, ஸ்வரூபத்துக்குச்சேர்ந்ததொரு உபாயவரணமாகிற காரியத்தை ஸாதிக்குமவர்களுக்கு எந்நாளும் பலாநுபவம் பண்ணப் பெறலாம். ... ... (6)

377 தென்னவன்றமர்செப்பமிலாதார் சேவதக்குவார்போலப்புகுந்து *
பின்னும்வன்கயிற்றுற்பிணித்தெற்றிப் பின்முன்னுகவிழுப்பதன்முன்னம் *
இன்னவனின்னயானென்றுசொல்லி யென்னியுள்ளத்திருளறநோக்கி *
மன்னவன்மதுசூதனனென்பார் வானகத்துமன்றுடிகள்தாமே. (7)

ருஜுவான செய்கை யில்லாதவர்களான யமகிங்கரர்கள் எருதுகளை அதக்கி ஓட்டுமவர்கள்போல வந்து, அதற்குமேல் வலிவுள்ள பாசங்களினுல் கட்டி அடித்துத் தலைகிழாக யமலோகத்துக்கு இழுத்துக்கொண்டு போவதற்கு முன்னே, அந்தத் தென்னவனுக்கும் மன்னவனன எம்பெருமானுடைய ஸ்வரூப ஸ்பாவங்களைச் சொல்லி அவற்றை நெஞ்சாலும் மநநம்பண்ணி ஹ்ருதயத்திலுள்ள அஜ்ஞாநமாகிற அந்தகாரம் நீங்கும்படி அவ்வெம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து, தேஹமுள்ளதனையும் 'மதுஸூதநனே' என்று அவன் திருநாமங்களையே சொல்லிக்கொண்டிருக்குமவர்கள் ஸ்ரீ வைகுண்டத்திலே எம்பெருமானேடே நித்யஸூரிகளின் கைங்கரியத்துக்காக மன்றுடப் பெறுவர்கள். ... ... (7)

378 கூடிக்கூடியுற்றுர்களிருந்து குற்றம்நிற்கநற்றங்கள்பறைந்து *
பாடிப்பாடியோர்பாடையிலிட்டு நரிப்படைக்கொருபாகுடம்போலே *
கோடிமூடியெடுப்பதன்முன்னங் கௌத்துவமுடைக்கோவிந்தனேடு *
கூடியாடியவுள்ளத்தரானுல் குறிப்பிடங்கடந்துய்யலுமாமே. (8)

மரணமான பின்பு, பந்துக்கள் திரள்திரளாகக் கூடியிருந்துகொண்டு செத்தவன்செய்த குற்றங்கள் பலகிடக்க அவற்றையெல்லாம் விட்டுவிட்டு நன்மையாகத் தோற்றும்படியானவற்றைச் சொல்லி அழுகைப்பாட்டுக்களைப் பலகால் பாடி ஒரு பாடையிலே படுக்க வைத்து வஸ்திரத்தையிட்டு மூடி நரிக்கூட்டத்துக்கு ஒரு பாகுக்குடத்தைப் பச்சையாகக் கொடுப்பதுபோல இப்பிணத்தைக் கொடுக்கைக்காகச் சுடுகாட்டுக்குக் கொண்டு போவதாக எடுப்பதற்கு முன்னே, கௌஸ்துபத்தைத் திருமார்பிலே உடைய எம்பெருமான் பக்கலில் சேர்ந்து அவகாஹித்த நெஞ்சை யுடையவர்களாக ஆனுல், யமலோகத்தை அதிக்ரமித்து, பரமபதம் போய்ச்சேர்ந்து உஜ்ஜீவிக்கப் பெறலாம். ... ... (8)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

379 வாயொருபக்கம்வாங்கிவலிப்ப வார்ந்தநீர்க்குழிக்கண்கள்மிழற்ற *
தாயொருபக்கந்தந்தையொருபக்கம் தாரமுமொருபக்கமலற்ற *
தீயொருபக்கஞ்சேர்வதன்முன்னஞ் செங்கண்மாலொடுஞ்சிக்கனச்சுற்ற
மாய் * ஒருபக்கம்நிற்கவல்லாருக்கு அரவதண்டத்திலுய்யலுமாமே. (9)

வாயானது வாயுவினாலே ஒருக்கடுத்து வலிக்கவும், பெருகாநின்றநீரையுடையதும் உள்ளே இடிய இழிந்ததுமான கண்ணானது அலமந்து நிற்கவும், ஒருபக்கத்தில் தாயாரும் மற்றொரு பக்கத்தில் தகப்பனாரும் இன்னொரு பக்கத்தில் மனைவியும் இருந்துகொண்டு கதறி அழவும், மற்றொரு பக்கத்திலே நெருப்பானது மார்வில்வந்து சேருவதற்குமுன்னே எம்பெருமானை நிருபாதிக பந்துவாகக்கொண்டு அவனொருவனிடத்திலேயே பக்ஷபாதமாய் நிலைத்துநிற்க வல்லவர்களுக்கு யமதண்டனையில் நின்றும் தப்பிப் பிழைக்கப் பெறலாம். (9)

380 செத்துப்போவதோர்போதுநினைந்து செய்யுஞ்செய்கைகள்தேவபிரான்மேல் *
பத்தராயிறந்தார்பெறும்பேற்றைப் பாழித்தோள்விட்டுசித்தன்புத்தூர்க்கோன் *
சித்தம்நன்கொருங்கித்திருமாலைச் செய்தமாலையிவைபத்தும்வல்லார் *
சித்தம்நன்கொருங்கித்திருமால்மேல் சென்றசிந்தைபெறுவர்தாமே. (10)

இறந்துபோகும் காலத்திலே யமபடர்களால் செய்யப்படுகிற கடுஞ் செயல்களை நினைத்துத் தேவபிரான் பக்கலில் அன்பு பூண்டவர்களாய் இருந்து பின்பு இறந்தவர்கள் அடையக்கூடிய பலன்களைக் குறித்துப் பெரியாழ்வார் தம்முடைய நெஞ்சைத்திருமால் திறத்தில்நன்றாக ஒருப்படுத்தி அருளிச்செய்த சொல்மாலையாகிய இப்பத்துப் பாட்டுக்களையும் ஓதவல்லவர்கள், நெஞ்சு ஒருபடிப்படப்பெற்றுத்திருமால்பக்கலிலே குடிகொண்ட மநஸ்ஸையுடையவராவர்.(10)

அடிவரவு:—ஆசை சீ சோர்வு மேல் மடி அங்கம் தென்னவன் கூடிவாய் செத்து காசு.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து—ஆறாந்திருமொழி—காசுங்கறை

(பகவந்நாமங்களையே ப்ரஜைகளுக்கு இடும்படி நியமித்தல்.)

381 காசுங்கறையுடைக்கூறைக்கும் அங்கோர் கற்றைக்கு
மாசையினால் * அங்கவத்தப் பேரிடும்ஆதர்காள் *
கேசவன்பேரிட்டு நீங்கள்தேனித்திருமினோ *
நாயகன்நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (1)

ஒரு காசுக்காகவும் நல்ல கறைகளையுடைய வஸ்திரத்துக்காகவும் ஒருகட்டுக் கற்றைக்காகவும் உண்டான ஆசையாலே மிகவும் தீயதான க்ஷுத்ர தேவதைகளின் பெயர்களை உங்கள் பிள்ளைகளுக்கு இடுகிற அறிவு கெட்டவர்களே! நீங்கள் கேசவனென்னும் திருநாமத்தையுடைய ஸர்வ சேஷியான நாராயணனுடைய திருநாமங்களை உங்கள் பிள்ளைகளுக்கு இட்டு மகிழ்ச்சி கொண்டிருங்கள்; அப்படி நாமகரணஞ் செய்தால் அப்பிள்ளைகளுடைய தாய்மார் துர்க்கதியை அடையமாட்டார்கள். ... ... (1)

382 அங்கோருகூறை அரைக்குடுப்பதனாசையால் *
மங்கியமானிடசாதிப் பேரிடுமாதர்காள் *
செங்கணெடுமால் சிரீதராவென்றழைத்தக்கால் *
நங்கைகாள்நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அந்த நீசரிடத்தில் ஒரு வஸ்த்ரத்தைப் பெற்று அரையில் உடுக்கவேணுமென்னுமாசையினால், கெட்ட மநுஷ்ய ஜாதியிற் பிறந்தவர்களுடைய பெயரை இடுகிற குருடர்களே! நீங்கள் உங்கள் பிள்ளையைப் 'புண்டரீகாக்ஷனே! ஸர்வேச்வரனே! ஸ்ரீதரனே!' என்று அழைத்தீர்களாகில் நாராயண நாமத்தைப்பூண்ட அப்பிள்ளையினுடைய தாயானவள் நரகம் புகாள்.(2)

383 உச்சியிலெண்ணெயுஞ் சுட்டியும்வளையுமுகந்து *
எச்சம்பொலிந்தீர்காள் என்செய்வான்பிறர்பேரிட்டீர் *
பிச்சைபுக்காகிலும் எம்பிரான்திருநாமமே
நச்சுமின் * நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (3)

ஸந்தானத்தினால் விளங்குமவர்களே! உச்சியில் தடவத்தக்க எண்ணெயையும் நெற்றிச் சுட்டியையும் கை வளையையும் விரும்பி ஏதுக்காக நீசப்பெயர்களை உங்கள் பிள்ளைகளுக்கு இட்டீர்கள்? பிச்சையெடுத்து ஜீவித்தாகிலும் எம்பெருமானுடைய திருநாமத்தையே இடுங்கள்.(3)

384 மானிடசாதியில்தோன்றிற்றோர் மானிடசாதியை *
மானிடசாதியின்பேரிட்டால் மறுமைக்கில்லை *
வானுடைமாதவா கோவிந்தாவென்றழைத்தக்கால் *
நானுடைநாரணன் தம்மன்னைநரகம்புகாள். (4)

மநுஷ்ய ஜாதியில் உண்டான ஒரு மநுஷ்ய ஜந்துவை, கர்மபலன்களை அநுபவிக்கப் பிறந்த மநுஷ்ய சாதியர்க்குஉரிய பெயரை இட்டழைத்தால் அத்ருஷ்ட பலம் பெறுகைக்கு யாதொரு வழியுமில்லையாம்; பரமபதத்தையுடைய திருமாலே!கோவிந்தனே! என்று எம்பெருமான் திருநாமத்தையிட்டு அழைத்தால், எனக்கு நாதனான நாராயணனுடைய திருநாமத்தைப் பூண்ட அப்பிள்ளையினுடைய தாய் நரகம் புகாள். ... ... (4)

385 மலமுடையூத்தையில்தோன்றிற்றோர் மலவூத்தையை *
மலமுடையூத்தையின்பேரிட்டால் மறுமைக்கில்லை *
குலமுடைக்கோவிந்தா கோவிந்தாவென்றழைத்தக்கால் *
நலமுடைநாரணன் தம்மன்னைநரகம்புகாள். (5)

மலத்தையுடையதும் ஹேயமுமான சரீரத்தில் நின்றும் தோன்றினதொரு நீச ஜந்துவை நீச ஜந்துவினுடைய பெயரை யிட்டு அழைத்தால், (அதனால் இம்மையிலே சில அல்பபலன் கிடைத்தாலும்,) அத்ருஷ்ட பலத்துக்கு ஒரு வழியுமில்லையாம்! நற்குலத்திற் பிறந்த கோவிந்தனே! கோவிந்தனே! என்று பகவந்நாமத்தையிட்டு அழைத்தால், எம்பெருமானுடைய திருநாமம்பூண்ட அப்பிள்ளையினுடைய தாய் நரகம் புகாள். ... ... (5)

386 நாடுநகருமறிய மானிடப்பேரிட்டு *
கூடியழுங்கிக் குழியில்வீழ்ந்துவழுக்காதே *
சாடிறப்பாய்ந்ததலைவா தாமோதராவென்று
நாடுமின் * நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (6)

க்ராமங்களிலுள்ள ஸாமாந்யஜ்ஞானிகளும் நகரவாஸிகளான விசேஷஜ்ஞானிகளும் 'இவன் உயர்ந்தவன்' என்று அறியும்படி, க்ஷுத்ர மநுஷ்யர்கள் பெயரையிட்டு அவர்களோடு

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கூடி ஒளி மழுங்கி அவர்கள் விழுந்த குழியிலே விழுந்து தவறிப்போகாமல், 'சகடாஸுரன் முறியும்படி உதைத்தருளின பெரியோனே!' என்றும் 'தாமோதரனே!' என்றும் வாழ்த்திக் கொண்டு திரியுங்கள். ... ... (6)

387 மண்ணிற்பிறந்துமண்ணாகும் மானிடப்பேரிட்டு * அங்
கெண்ணமொன்றின்றியிருக்கும் ஏழைமனிசர்காள் *
கண்ணுக்கினிய கருமுகில்வண்ணன்நாமமே
நண்ணுமின் * நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (7)

மண்ணில் நின்றுமுண்டாய்ப் பின்பு மண்ணாய்விடுகிற அல்ப மநுஷ்யர்களுடைய பெயரைத் தங்கள் பிள்ளைகளுக்கு இட்டு ஆமுஷ்மிக பலத்தில் ஒரு விசாரமுமற்றிருக்கிற அறிவற்ற மநுஷ்யர்களே! கண்ணால் காண்கைக்கு போக்யனாயும் காளமேகம்போன்ற நிறத்தையுடையவனாயுமுள்ள எம்பெருமானுடைய திருநாமத்தையே விரும்பியிடுங்கள். ... ... (7)

388 நம்பிபிம்பியென்று நாட்டுமானிடப்பேரிட்டால் *
நம்பும்பிம்புமெல்லாம் நாலுநாளிலழுங்கிப்போம் *
செம்பெருந்தாமரைக்கண்ணன் பேரிட்டழைத்தக்கால் *
நம்பிகாள்நாரணன் தம்மன்னைநரகம்புகாள். (8)

நம்பி என்றும் பிம்பி என்றும் க்ஷுத்ர மநுஷ்யர்களுடையபெயரை உங்கள் பிள்ளைகளுக்கு நீங்கள் இட்டால் 'நம்பி' 'பிம்பி' என்னும் பெயர்களுக்கு அடியான முதன்மையெல்லாம் நாலு நாளைக்குள் அழிந்துபோம்; எம்பெருமானுடைய திருநாமத்தை இட்டு அழைத்தால், அறிவினால் குறைவற்றவர்களே! நாராயண நாமம்பெற்ற அந்தப்பிள்ளையின் தாய் நரகம்புகாள். (8)

389 ஊத்தைக்குழியில் அமுதம்பாய்வதுபோல் * உங்கள்
மூத்திரப்பிள்ளையை யென்முகில்வண்ணன்பேரிட்டு *
கோத்துக்குழைத்துக் குணலையாடித்திரிமினோ *
நாத்தகுநாரணன் தம்மன்னைநரகம்புகாள். (9)

அசுத்தமானதொரு குழியிலே அம்ருதம் பாய்ந்தாற்போலே உங்களுடைய அசுத்தனான பிள்ளைக்கு எம்பெருமானுடைய திருநாமத்தை நாமகரணம் பண்ணி அதனால் அப்போதே நீங்கள் எம்பெருமானுடைய பரிக்ரஹமாகப்பெற்று அவ்வெம்பெருமானோடு கூடிக்கலந்து குணலைக் கூத்தாடிக்கொண்டு திரியுங்கள். (தலைகீழாகத் துள்ளிக்குதியுங் கோள் என்றபடி.) ... (9)

390 சீரணிமால் திருநாமமேயிடத்தேற்றிய *
வீரணிதொல்புகழ் விட்டுசித்தன்விரித்த *
ஓரணியொண்டமிழ் ஒன்பதோடொன்றும்வல்லவர் *
பேரணிவைகுந்தத்து என்றும்பேணியிருப்பரே. (10)

எம்பெருமானுடைய திருநாமத்தையே தம் தம் பிள்ளைகளுக்கு இடும்படி உபதேசித்தருளின பெரியாழ்வார் விரிவாக அருளிச்செய்தவையும் கற்பார்க்கு ஒப்பற்ற ஆபரணம் போன்றவையும் அழகிய தமிழ்ப்பாஷையுமாயிருந்துள்ள இப்பத்துப் பாட்டுக்களையும் ஓதவல்லவர்கள் பெரியதும் அழகியதுமான ஸ்ரீவைகுண்டத்தில் எந்நாளும் எம்பெருமானுக்கு மங்களாசாஸனம் பண்ணிக்கொண்டு வாழப்பெறுவர். ... ... (10)

அடிவரவு :—காசும் அங்கொரு உச்சி மானிட மல நாடு மண்நம்பி ஊத்தை சீரணி தங்கை.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நான்காம்பத்து—ஏழாந்திருமொழி—தங்கையை

(கண்டமென்னுங்கடிநகர் மங்களாசாஸனம் பதிகம்.)

391 தங்கையைமூக்குந்தமையனைத்தலையுந் தடிந்தவெந்தாசரதிபோய் *
எங்குந்தன்புகழாவிருந்தரசாண்ட எம்புருடோத்தமனிருக்கை *
கங்கைகங்கையென்றவாசகத்தாலே கடுவினைகளைந்திடகிற்கும் *
கங்கையின்கரைமேற்கைதொழநின்ற கண்டமென்னுங்கடிநகரே. (1)

'கங்கை, கங்கை' என்ற சப்தத்தைச் சொல்லுவதனால் கடினமான பாபங்களையும் ஒழிக்கவல்ல கங்காநதியினுடைய கரையிலே பக்தர்கள் கைகூப்பித் தொழும்படியாக நின்ற 'கண்டம்' என்னும் பெயரையுடைய சிறந்த நகரமானது எதுவென்னில்; இராவணனுடைய தங்கையாகிய சூர்ப்பணகையினுடைய மூக்கையும் அவளுடைய தமையனான ராவணனுடைய தலையையும் அறுத்தொழித்தவனும் அயோத்திமாநகர்க்கு எழுந்தருளி நாடடங்கலும் தன்னுடைய கீர்த்தியேயாம்படி பதினோராயிரம் ஸம்வத்ஸரம் எழுந்தருளியிருந்து ராஜ்ய பரிபாலனஞ் செய்தருளினவனும் எமக்குத் தலைவனுமான இராமபிரானாகிய எமது புருஷோத்தமப் பெருமானுடைய வாஸஸ்தானமாம். ... ... (1)

392 சலம்பொதியுடம்பிற்றழலுமிழ்பேழ்வாய்ச் சந்திரன்வெங்கதிரஞ்ச *
மலர்ந்தெழுந்தணவுமணிவண்ணவுருவின் மால்புருடோத்தமன்வாழ்வு *
நலந்திகழ்சடையான்முடிக்கொன்றைமலரும் நாரணன்பாதத்துழாயும் *
கலந்திழிபுனலாற்புகர்படுகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (2)

எம்பெருமானுடைய ஸ்ரீபாததீர்த்தத்தை வஹிக்கின்றமையாலுண்டான நன்மை விளங்காநிற்கிற ஜடையையுடையனான சிவபெருமானுடைய தலையில் அணியப்பெற்றுள்ள செந்நிறமுடைய கொன்றைப்பூவோடும் அச்சிவபிரானுக்குந் தலைவனான நாராயணனுடைய திருவடிகளிற் புனைந்த பசுமை நிறமுடைய திருத்துழாயோடும்சேர்ந்து ஆகாசத்தில்நின்றும் பூமியில் இழிந்து வெள்ளமிடாநின்ற ஜலத்தினால் விளங்காநின்றுள்ள கங்கைக்கரையிலுள்ள கண்டமென்னுங் கடிநகர்; ஜலத்தைப் பொதிந்துகொண்டிருக்கிற வடிவையுடைய சந்திரனும் நெருப்பை உமிழாநின்றுள்ள பெரிய கிரணங்களையுடையனாய் வெம்மையையே இயல்வாகவுடையனான ஸூர்யனும் அஞ்சும்படியாக மிகவும் பரம்பின சரீரத்தை யெடுத்துக்கொண்டு கிளர்ந்து அந்த சந்த்ர ஸூர்யர்களுடைய இருப்பிடத்தைச் சென்று கிட்டின நீலமணி போன்ற நிறம் பொருந்திய வடிவையுடையவனும் அடியார் பக்கல் வ்யாமோஹமுடையவனுமான புருஷோத்தமன் வாழுமிடம். ... ... (2)

393 அதிர்முகமுடையவலம்புரிகுமிழ்த்தி அழலுமிழாழிகொண்டெறிந்து * அங்
கெதிர்முகவசுரர்தலைகளையிடறும் எம்புருடோத்தமனிருக்கை *
சதுமுகன்கையிற்சதுப்புயன்றாளில் சங்கரன்சடையினில்தங்கி *
கதிர்முகமணிகொண்டிழிபுனற்கங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (3)

எம்பெருமானுடைய திருவடியை விளக்குகிறபோது, சதுர்முக ப்ரஹ்மாவினுடைய கையிலும் சதுர்ப்புஜனான எம்பெருமானுடைய திருவடியிலும் பின்பு, சிவபெருமானுடைய ஜடையிலும் தங்கி, ஒளியை யுடையனவும் சிறந்தவையுமான ரத்னங்களைக் கொழித்துக்கொண்டு இழிகிற தீர்த்தத்தையுடைய கங்கைக்கரையிலுள்ள கண்டமென்னும் கடிநகர்; உலகமளந்த அப்போது, முழங்காநின்ற முகத்தையுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருப்பவளத்தில் வைத்து ஊதியும் நெருப்பை வீசாநின்றுள்ள திருவாழியை யெடுத்து விட்டெறிந்தும், போர் செய்வ

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தாக எதிர்த்த முகத்தையுடைய அஸுரர்களுடைய தலைகளை உருட்டியருளின எமது புருடோத்தமனுடைய வாஸஸ்தானமாகும். ... ... (3)

394 இமையவரிறுமாந்திருந்தரசாள ஏற்றுவந்தெதிர்பொருசேனை *
நமபுரம்நணுகநாந்தகம்விசிறு நம்புருடோத்தமன்நகர்தான் *
இமவந்தந்தொடங்கியிருங்கடலளவும் இருகரையுலகிரைத்தாட *
கமையுடைப்பெருமைக்கங்கையின்கரைமேல் கண்டமென்னுங்கடிநகரே. (4)

இமயமலையின் உச்சி முதற்கொண்டு பெரிய கடல்வரைக்கும் இரண்டு கரைகளிலுமுள்ள உலகத்தவர்கள் ஆரவாரித்துக்கொண்டு நீராட, அவர்களது பாபங்களைப் பொறுக்கையால் வந்த பெருமையையுடைய கங்கைக்கரையில் கண்டம் என்னும் கடிநகர்; இந்திரன் முதலிய தேவர்கள் அஹங்காரப்பட்டுக்கொண்டிருந்து ராஜ்யம் நிர்வஹிப்பதற்காகவும், துணிந்து வந்து தன்மேலும் அத்தேவர்கள் மேலும் எதிர்ந்து போர் செய்கிற அஸுர ராக்ஷஸ ஸேனை யானது யமலோகத்தைக் கிட்டுகைக்காகவும் நந்தகமென்னும் வாளை வீசாநிற்குமவனும் நமக்குத் தலைவனுமான புருஷோத்தமப் பெருமாளுடைய நகரமாகும். ... ... (4)

395 உழுவதோர்படையுமுலக்கையும்வில்லும் ஒண்சுடராழியுஞ்சங்கும் *
மழுவொடுவாளும்படைக்கலமுடைய் மால்புருடோத்தமன்வாழ்வு *
எழுமையுங்கூடியீண்டியபாவம் இறைப்பொழுதளவினிலெல்லாம் *
கழுவிடும்பெருமைக்கங்கையின்கரைமேல் கண்டமென்னுங்கடிநகரே. (5)

ஏழு ஜந்மங்களில் சேர்ந்து திரண்ட பாவங்களை யெல்லாம் க்ஷண காலத்துக்குள்ளே போக்கி விடும்படியான பெருமையையுடைய கங்கையின் கரைமேல் கண்டம் என்னும் கடி நகர்; உழு வதற்கு உரிய கருவியாகிய கலப்பையையும் உலக்கையையும் ஸ்ரீசார்ங்கத்தையும் அழகிய தேஜஸ்ஸையுடைய திருவாழியையும் ஸ்ரீபாஞ்சஜந்யத்தையும் கோடாலியையும் நந்தக வாளை யும் ஆயுதமாக வுடையவனும் ஸர்வேச்வரனுமான புருஷோத்தமப் பெருமாள் எழுந்தருளி யிருக்குமிடம். ... ... (5)

396 தலைப்பெய்துகுமுறிச்சலம்பொதிமேகஞ் சலசலபொழிந்திடக்கண்டு *
மலைப்பெருங்குடையால்மறுந்தவன்மதுரை மால்புருடோத்தமன்வாழ்வு *
அலைப்புடைத்திரைவாயருந்தவமுனிவர் அவபிரதங்குடைந்தாட *
கலப்பைகள்கொழிக்குங்கங்கையின்கரைமேல் கண்டமென்னுங்கடிநகரே. (6)

அரிய தவங்களைப்புரிந்த மஹர்ஷிகள் அலைத்தலையுடைய கரையெறியா நின்றுள்ள அலை யிலே அவப்ருதஸ்நாநம் பண்ண, பிறகு பெருக்காறுய் யாக பூமியிலுண்டான கலப்பை முதலிய உபகரணங்களெல்லாவற்றையும் எடுத்துத் தள்ளிக்கொண்டு போகாநிற்கிற கங்கை யின் கரைமேல் கண்டம் என்னும் கடி நகர்; கடலிலுள்ள ஜலத்தைப் பொதிந்து கொண்டிரா நின்ற மேகங்களானவை திருவாய்ப்பாடியில் வந்துகிட்டி கர்ஜனை பண்ணி சளசள வென்று மழைபொழிய அதைக்கண்டு கோவர்த்தந மலையாகிற பெரிய குடையாலே அம்மழையைத் தடுத்தருளினவனும் திரு வடமதுரையில் விருப்பமுடையனுமான ஸ்ரீபுருஷோத்தமப்பெரு மான் எழுந்தருளியிருக்குமிடம். ... ... (6)

397 விற்பிடித்திறுத்துவேழத்தைமுறுக்கி மேலிருந்தவன்தலைசாடி *
மற்பொருதெழப்பாய்ந்தரையனையுதைத்த மால்புருடோத்தமன்வாழ்வு *
அற்புதமுடையவைராவதமதமும் அவரிளம்படியரொண்சாந்தும் *
கற்பகமலருங்கலந்திழிகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆச்சர்யகரமான 'ஐராவதம்' என்னும் தேவேந்திரனது யானையினுடைய மதநீரும், அத் தேவர்கள் விரும்பத்தக்க இளம்பருவத்தை யுடையவர்களான தேவமாதர்கள் அணிந்த சிறந்த சந்தநமும் அவர்களது குழலில் சொருகியிருந்த கற்பகப்பூக்களும் ஒன்றுசேர்ந்து இழியாநின்றுள்ள கங்கையின் கரையில் கண்டம் என்னும் கடி நகர்; கம்ஸனுடைய ஆயுதச் சாலையிலிருந்த வில்லைப்பிடித்து முறித்தும், குவலயாபீடம் என்ற யானையைப் பங்கப்படுத்தியும், அந்த யானையின் மேலிருந்த யானைப்பாகனுடைய தலையைச் சிதறப்புடைத்தும், சாணூர முஷ்டிகாதி மல்லர்களோடு போர் செய்தும் உயர்ந்த கட்டிலின் மேலிருந்த அரசனாகிய கம்ஸனை அவன்மேற் பாய்ந்து கீழேதள்ளித் திருவடிகளால் உதைத்தருளின மால் புருடோத்தமன் வாழுமிடமாம். ... ... (7)

398 திரைபொருகடல்சூழ்திண்மதிள்துவரை வேந்துதன்மைத்துனன்மார்க்காய் *
அரசனையவியவரசினையருளும் அரிபுருடோத்தமனமர்வு *
நிரைநிரையாகநெடியனயூபம் நிரந்தரமொழுக்குவிட்டு * இரண்டு
கரைபுரைவேள்விப்புகைகமழ்கங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (8)

நீண்டவையா யிராநின்றுள்ள, பசுக்கள் கட்டுகிற யூபஸ்தம்பங்களானவை திரள்திரளாக இடைவிடாமல் நெடுக ஓடாநிற்பதும் இருபக்கத்துக் கரைகளும் தம்மிலே ஒத்து யாகத்திலுண்டாகும் புகைகளால் பரிமளியாநிற்பதுமான கங்கைக்கரையில் கண்டம் என்னும் கடிநகர்; அலையெறியாநின்றுள்ள கடலால் சூழப்பெற்ற திண்மையான மதிள்களையுடைய த்வாரகைக்குத் தலைவனும் தன்னுடைய மைத்துனர்மார்களான பாண்டவர்களுக்குப் பக்ஷபாதியாய் நின்று துரியோதநாதி ராஜாக்களை அழியச்செய்து ராஜ்யத்தை அப்பாண்டவர்கட்குக் கொடுத்தருளினவனும் ஸகல பாபங்களையும் போக்குமவனுமான புருஷோத்தமப் பெருமாள் பொருந்தி யெழுந்தருளியிருக்குமிடம். ... ... (8)

399 வடதிசைமதுரைசாளக்கிராமம் வைகுந்தந்துவரையயோத்தி *
இடமுடைவதரியிடவகையுடைய எம்புருடோத்தமனிருக்கை *
தடவரையதிரத்தரணிவிண்டிடியத் தலைப்பற்றிக்கரைமரஞ்சாடி *
கடலினைக்கலங்கக்கடுத்திழிகங்கைக் கண்டமென்னுங்கடிநகரே. (9)

மந்தரம் முதலிய பெரிய மலைகளானவை சலிக்கும்படியாகவும் பூமியானது பிளவுபட்டு இடிந்து விழும்படியாகவும் மரங்களினுடைய தலையளவுஞ் செல்லக்கிளம்பிக் கரையிலுள்ள மரங்களை மோதிமுறித்தும் ஒன்றாலுங்கலங்காத கடலுங்கூடக் கலங்கும்படி வேகங்கொண்டு இழியாநின்றுள்ள கங்கா தீரத்திலுள்ள கண்டம் என்னும் கடி நகர்; வடதிக்கிலுள்ள ஸ்ரீமதுரையும் ஸ்ரீஸாளக்ராமமும் ஸ்ரீவைகுண்டமும் ஸ்ரீத்வாரகையும் திருவயோத்யையும் இடமுடைத்தான விசாலமான ஸ்ரீபதரிகாச்ரமமுமாகிற இவற்றை வாஸஸ்தானமாக வுடையனான எம் புருடோத்தமன் இருக்குமிடமாம். ... ... (9)

400 மூன்றெழுத்ததனைமூன்றெழுத்ததனால் மூன்றெழுத்தாக்கி * மூன்றெழுத்தை
ஏன்றுகொண்டிருப்பார்க்கிரக்கநன்குடைய எம்புருடோத்தமனிருக்கை *
மூன்றடிநிமிர்த்துமூன்றினில்தோன்றி மூன்றினில்மூன்றுருவானான் *
கான்தடம்பொழில்சூழ்கங்கையின்கரைமேல் கண்டமென்னுங்கடிநகரே. (10)

நறுநாற்றம் கமழாநின்றுள்ள பெரிய சோலைகளினால் சூழப்பெற்ற கங்கையின் கரைமேல் கண்டம் என்னும் கடி நகர்; அகார, உகார, மகார ஸ்வரூபமான 'ஓம்' என்னும் பிரணவத்தை நிருக்தம்' என்று மூன்றக்ஷரமான பெயரையுடைத்தான நிர்வசந ப்ரக்ரியையாலே மூன்று

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பதமாய் மூன்று அர்த்தத்துக்கு வாசகமாயிருக்கும் மூன்றெழுத்தாகப் பிரித்து அந்த மூன்றெழுத்தை [பிரணவத்தை]த் தஞ்சமாக நினைத்து அநுஸந்திக்குமவர்கள் பக்கலில் சிறந்த கருணையையுடையவனும் அந்தப்பிரணவத்தை நம:பதத்தோடும்நாராயணபதத்தோடுங்கூட்டி மூன்று பதமாக்கி [திருவஷ்டாக்ஷரமாக்கி] அந்த மூன்று பதங்களிலும் ஆத்மாவினுடைய அநந்யார்ஹ சேஷத்துவம், அநந்ய சரணத்துவம், அநந்ய போக்யத்வமாகிற மூன்று ஆகாரங்களையும் தோன்றுவித்து அந்த ஆகாரத்ரயத்துக்கும் பிரதி ஸம்பந்தியாகத் தானும் சேஷித்வம், சரண்யத்வம், ப்ராப்யத்வம் என்கிற மூன்று ஆகாரங்களையுடையனுமான எம் புருடோத்தமன் இருக்குமிடமாம். ... ... (10)

401 பொங்கொலிகங்கைக்கரைமலிகண்டத்து உறைபுருடோத்தமனடிமேல் *
வெங்கலிநலியாவில்லிபுத்தூர்க்கோன் விட்டுசித்தன்விருப்புற்று *
தங்கியவன்பால்செய்தமிழ்மாலை தங்கியநாவுடையார்க்கு *
கங்கையில்திருமால்கழலிணைக்கீழே குளித்திருந்தகணக்காமே. (11)

நீர்க்கொழிப்பால் வந்த கிளர்த்தியை யுடையதும் கோஷத்தையுடையதுமான கங்கையின் கரையிலுள்ளதும் எல்லாவகை ஏற்றங்களை யுடையதுமான திருக்கண்டங் கடிநகரில் நித்ய வாஸம்பண்ணுகின்ற புருஷோத்தமப் பெருமானுடைய திருவடிகளில், கொடிய கலியினால் நலியப்பெறாத ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான பெரியாழ்வார் ஆசைப்பட்டு நிலைநின்ற பக்தியினால் அருளிச்செய்த தமிழ் மாலையாகிய இப்பாசுரங்கள் நிலை நின்றிருக்கப்பெற்ற நாக்கையுடையவர்களுக்கு, கங்காநதியில் நீராடி ச்ரிய:பதியினுடைய ஒன்றோடொன்றொத்த திருவடிகளின் கீழே நிரந்தர ஸேவை பண்ணுகையாகிற பயன்பெற்றதாகும். ... (11)

அடிவரவு :—தங்கையை சலம் அதிர் இமையவர் உழு தலை வில் திரை வட மூன்று பொங்கு மாதவ.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து—எட்டாந்திருமொழி—மாதவத்தோன்

---

402 மாதவத்தோன்புத்திரன்போய் மறிகடல்வாய்மாண்டானை *
ஓதுவித்ததக்கணையா உருவுருவேகொடுத்தானூர் *
தோதவத்தித்தூய்மறையோர் துறைபடியத்துளும்பியெங்கும் *
போதில்வைத்ததேன்சொரியும் புனலரங்கமென்பதுவே. (1)

அலையெறியா நின்றுள்ள கடலிற் புகுந்து உயிரொழிந்த, மஹாதபஸ்வியான ஸாந்தீபினியினுடைய பிள்ளையை (அந்த ஸாந்தீபினி, தன்னை) அத்யயநம் பண்ணுவித்ததற்கு தக்ஷிணையாக (அப்புத்திரன் மரணமடையும்போதுள்ள ரூபம் மாறாதபடி) யதாரூபமாகக் கொணர்ந்து கொடுத்தருளின எம்பெருமானுடைய திருப்பதியாவது:—பரிசுத்தமாகத் தோய்த்து உலர்த்தின வஸ்திரங்களை அணியா நிற்பவரும் நிர்த்தோஷ ப்ரமாணமானவேதத்தைத் தமக்கு நிரூபகமாக வுடையவருமான ஸ்ரீவைஷ்ணவர்கள் காவேரித் துறைகளில் அவகாஹிக்க, (அதனால்) அக்காவேரி முழுதும் அலைமோதப் பெற்று (அதனால் தாமரை மலர்களின் நாளங்கள் அலைய) அந்தப் பூக்களில் இராநின்றுள்ள தேனானது பெருகப் பெற்ற நீரையுடைய திருவரங்கமென்னும் திருப்பதியாம். ... ... (1)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

403 பிறப்பகத்தேமாண்டொழிந்த பிள்ளைகளைநால்வரையும் *
இறைப்பொழுதிற்கொணர்ந்துகொடுத்து ஒருப்படுத்தவுறைப்பனூர் *
மறைப்பெருந்தீவளர்த்திருப்பார் வருவிருந்தையளித்திருப்பார் *
சிறப்புடையமறையவர்வாழ் திருவரங்கமென்பதுவே. (2)

ஸூதிகாக்ருஹத்திலேயே இறந்தொழிந்த வைதிக புத்திரர்கள் நால்வரையும் ஒரு நொடிப் பொழுதில் (ஸ்ரீவைகுண்டத்தினின்றும்) கொண்டுவந்து (மாதாபிதாக்கள் கையில்)கொடுத்து (இப்பிள்ளைகள் எம்பிள்ளைகள் தான் என்று) ஸம்மதி பண்ணுவித்த சக்தியுக்தன் (எழுந்தருளியிருக்கிற) திருப்பதியாவது:—வேதங்களிற் கூறப்பட்டுள்ள வைதிகமான சிறந்த மூன்று அக்நிகளையும் அவிச்சின்னமாக வளர்த்துக் கொண்டிருப்பவர்களும் தம்தம் திருமாளிகைக்கு எழுந்தருளுகிற அதிதிகளான ஸ்ரீவைஷ்ணவர்களை ஆதரித்துப் போருமவர்களும் இப்படிப்பட்ட உத்கர்ஷங்களை யுடையவர்களுமான வைதிகர்கள் வாழப்பெற்றதிருவரங்கமென்பதுவே.

404 மருமகன்றன்சந்ததியை உயிர்மீட்டுமைத்துனன்மார் *
உருமகத்தேவீழாமே குருமுகமாய்க்காத்தானூர் *
திருமுகமாய்ச்செங்கமலம் திருநிறமாய்க்கருங்குவளை *
பொருமுகமாய்நின்றலரும் புனலரங்கமென்பதுவே. (3)

மருமகனான அபிமந்யுவினுடைய புத்திரனான பரிக்ஷித்தை மறுபடியும் பிழைப்பித்து, மைத்துனன்மாரான பாண்டவர்களுடைய சரீரமானது பாரதயுத்தமாகிற நரமேதத்திலே விழுந்து அழிந்து போகாதபடி ஆசார்ய ரூபியாய் ஹிதோபதேசங்களைப்பண்ணி ரக்ஷித்தருளின கண்ணபிரானுடைய திருப்பதியாவது;— செந்தாமரை மலர்களானவை பெரியபெருமாளுடைய திருமுகத்துக்குப் போலியாகவும், நீலோத்பல புஷ்பங்கள் திருமேனி நிறத்துக்குப் போலியாகவும் (ஒன்றுக் கொன்று) எதிர் பொருகிற முகத்தை யுடைத்தாய்க் கொண்டு விகஸிக்கப்பெற்ற நீர்வளத்தையுடைய அரங்கம் என்பது. ... ... (3)

405 கூன்தொழுத்தைசிதகுரைப்பக் கொடியவள்வாய்க்கடியசொற்கேட்டு *
ஈன்றெடுத்ததாயரையும் இராச்சியமுமாங்கொழிய *
கான்தொடுத்தநெறிபோகிக் கண்டகரைக்களைந்தானூர் *
தேன்தொடுத்தமலர்ச்சோலைத் திருவரங்கமென்பதுவே. (4)

கூனையுடைய வேலைக்காரியாகிய மந்தரையானவள் ஸ்ரீராம பட்டாபிஷேக , மஹோத்ஸவத்துக்கு விநாசகமான தீயசொற்களைச் சொல்ல, அச்சொற்களை அங்கீகரித்துக் காட்டுக்கு எழுந்தருளச் சொன்ன மஹா க்ரூரையான கைகேயியினுடைய வாயிலுண்டான கடினமான சொல்லைக்கேட்டு, தன்னைப் பெற்றுவளர்த்த தாயான ஸ்ரீகௌஸலையாரையும் ராஜ்யத்தையும் கைவிட்டு, காடுகள் அடர்ந்திரா நின்றுள்ள வழியே (ஸ்ரீதண்டகாரணியத்திற்கு) எழுந்தருளி (முனிவர்களுக்கு) முன் போலப் பாதகராயிருந்த (ஜநஸ்தாநவாஸிகளான) ராக்ஷஸரை நிரஸித்தருளின எம்பெருமான் (எழுந்தருளியிருக்கிற) திருப்பதியாவது:—தேன்மாறுத மலர்களையுடைய சோலைகளையுடைத்தான திருவரங்கமாம். ... ... (4)

406 பெருவரங்களவைபற்றிப் பிழக்குடையவிராவணனை *
உருவரங்கப்பொருதழித்து இவ்வுலகினைக்கண்பெறுத்தானூர் *
குரவரும்பக்கோங்கலரக் குயில்கூவுங்குளிர்பொழில்சூழ் *
திருவரங்கமென்பதுவே யென்திருமால்சேர்விடமே. (5)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

குரவ மரங்களானவை அரும்புவிடா நிற்க, கோங்கு மரங்களானவை அலராநிற்க, குயில்களானவை களித்துக் கூவும்படியான குளிர்ந்த சோலைகளாலே சூழப்பெற்ற திருவரங்கமென்னும் திருப்பதியானது:—பெருமை பொருந்திய வரங்களை பலமாகக் கொண்டு (தேவர் முனிவர் முதலாயினோரிடத்துப்) பிழை செய்கையையே இயல்வாகவுடைய இராவணனுடைய உடலானது சின்னபின்னமாம்படி போர்செய்து அவனைத்தொலைத்து இந்த லோகத்தைக் காத்தருளினவனும் எனக்குத் தலைவனும் ச்ரிய:பதியுமான எம்பெருமான் சேருமிடமாகிய திருப்பதியாம். ... (5)

407 கீழுலகிலசுரர்களைக் கிழங்கிருந்துகிளராமே *
ஆழிவிடுத்தவருடைய கருவழித்தவழிப்பனூர் *
தாழைமடலூடுரிஞ்சித் தவளவண்ணப்பொடியணிந்து *
யாழினிசைவண்டினங்கள் ஆளம்வைக்குமரங்கமே. (6)

பாதாளலோகத்திலுள்ள அஸுரர்களை வேரோடே தொலைக்கத் திருவாழியாழ்வானை ஏவி அவ்வசுரர்களுடைய கர்ப்பமளவாக அழித்தருளின எம்பெருமான் எழுந்தருளியிருக்கிறதிருப்பதியாவது:—வீணையினுடைய ஓசைபோன்ற இனிய இசையையுடைய வண்டுகளின் திரள்களானவை மலரத் தொடங்குகிற தாழைமடலினுள்ளே உடம்பை உரோசிக்கொண்டு புகுந்து அம்மடலிலுள்ள வெளுத்த நிறத்தையுடைய சுண்ணத்தை உடம்படங்கலும் அணிந்துகொண்டு அந்தக் களிப்பாலே தென தென என்று ஆளத்திவைத்துப் பாடுமிடமான திருவரங்கமாம். ... ... (6)

408 கொழுப்புடையசெழுங்குருதி கொழித்திழிந்துகுமிழ்த்தெறிய *
பிழக்குடையவசுரர்களைப் பிணம்படுத்தபெருமானூர் *
தழுப்பரியசந்தனங்கள் தடவரைவாயீர்த்துக்கொண்டு *
தெழிப்புடையகாவிரிவந்து அடிதொழுஞ்சீரரங்கமே. (7)

கொழுப்பையுடையதும் செழுமை தங்கியதுமான ரக்தமானது ஊற்றுமாறுமல் கிளர்ந்துநிலத்தில் பரவிக் குமிழி கிளம்பி அலை யெறியும்படி (பரஹிம்சையாகிய) தீமைகளைச்செய்கின்ற அஸுரர்களைப் பிணமாக்கி யருளின எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருப்பதியாவது:—ஒருவரிருவரால் தழுவமுடியாதபடி மிகப்பருத்த சந்தனமரங்களைப் பெரியமலைகளினின்று வேரோடே பிடுங்கி இழுத்துக்கொண்டுவந்து (இவற்றைத் திருவுள்ளம் பற்றவேணும் என்று எம்பெருமானைப் பிரார்த்திக்கின்றதோ என்னலாம்படி) இரைச்சலையுடைய திருக்காவேரி நதியானது . எம்பெருமானது திருவடிகளைத் தொழுகையாகிற சீர்மையைப்பெற்ற திருவரங்க நகராம். ... ... (7)

409 வல்லெயிற்றுக்கேழலுமாய் வாளெயிற்றுச்சீயமுமாய் *
எல்லையில்லாத்தரணியையும் அவுணனையுமிடந்தானூர் *
எல்லியம்போதிருஞ்சிறைவண்டு எம்பெருமான்குணம்பாடி *
மல்லிகைவெண்சங்கூதும் மதிளரங்கமென்பதுவே. (8)

வலிவுள்ள பற்களையுடைய வராஹமாய்த் திருவவதரித்தும், ஒளியையுடைய பற்களையுடைய நரஸிம்ஹமாய்த் திருவவதரித்தும், எல்லையில்லாத பூமியையும் ஹிரண்யாஸுரனையும் கீண்டருளின எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருப்பதியாவது;—பெரிய சிறகுகளையுடைய வண்டுகள் அந்திப்பொழுதிலே பெரியபெருமாளுடைய திருக்குணங்களைப் பாடிக்கொண்டு மல்லிகைப் பூவாகிற வெளுத்த சங்கை ஊதாநிற்கப்பெற்றதும் திருமதிள்களையுடையதுமான அரங்கம் என்பது. ... ... (8)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

410 குன்றுடுகொழுமுகில்போல் குவளைகள்போல்குரைகடல்போல் *
நின்றுடுகணமயில்போல் நிறமுடையநெடுமாலூர் *
குன்றுடுபொழில்நுழைந்து கொடியிடையார்முலையணவி *
மன்றூடுதென்றலுலாம் மதிளரங்கமென்பதுவே. (9)

மலையினுச்சியிற்சார்ந்த நீர் நிறைந்த மேகம்போலவும் கருநெய்தல் பூப்போலவும் ஒலிசெய்யா நின்ற கடல்போலவும் களிப்பாலே நின்று ஆடாநின்றுள்ள மயில்களின் திரள்போலவும் இரா நின்ற வடிவழகையுடையனான எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருப்பதியாவது, தென்றல் காற்றானது மலய பர்வதத்திலுள்ள சோலைகளினிடையிலே நுழைந்து அங்குள்ள பூக்களின் தாதுகளை அளைந்து பரிமளத்தைக் கொய்துகொண்டு கொடிபோன்ற இடையையுடையரான பெண்களினுடைய (கலவைச்சாந்தணிந்த) முலைகளை வியாபித்து (அந்தப்பரிமளத்துடனே) நாற்சந்திகளினூடே உலாவப்பெற்ற மதிளரங்கமென்பது. ... ... (9)

411 பருவரங்களவைபற்றிப் படையாலித்தெழுந்தானை *
செருவரங்கப்பொருதழித்த திருவாளன்திருப்பதிமேல் *
திருவரங்கத்தமிழ்மாலை விட்டுசித்தன்விரித்தனகொண்டு *
இருவரங்கமெரித்தானை யேத்தவல்லாரடியோமே. (10)

பிரமன் முதலியோரிடத்துப்பெற்ற பெரியவரங்களைப் பலமாகக்கொண்டு யுத்தவிஷயமாகக் கோலாஹலஞ் செய்து வெளிப்புறப்பட்ட இராவணனை யுத்தத்திலே ஒழியும்படி போர்செய்து ஒழித்தருளின (வீர்யமாகிற) லக்ஷ்மியைத் தனக்கு நிரூபகமாக உடையனான எம்பெருமானுடைய திருவரங்கமென்னும் திருப்பதி விஷயமாகப் பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களையுங் கொண்டு, மதுகைடபர்களாகிற இருவருடைய உடலைத் (திருவனந்தாழ்வானுடைய மூச்சு வெப்பத்தினால்) கொளுத்திப் போகட்ட எம்பெருமானைத் துதிக்க வல்லவர்களுக்கு அடிமை செய்யக்கடவோம். ... ... (10)

அடிவரவு:—மாதவ பிறப்பு மருமகன் கூன் பெரு கிழ் கொழுப்பு வல்லெயிறு குன்று பரு மரவடி.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து—ஒன்பதாந்திருமொழி—மரவடியை

(இதுவும் திருவரங்கப்பதிகம்)

412 மரவடியைத்தம்பிக்கு வான்பணயம்வைத்துப்போய்வானோர்வாழ *
செருவுடையதிசைக்கருமம் திருத்திவந்துலகாண்டதிருமால்கோயில் *
திருவடிதன்திருவுருவும் திருமங்கைமலர்கண்ணுங்காட்டிநின்ற *
உருவுடையமலர்நீலங் காற்றாட்டவோசலிக்குமொளியரங்கமே. (1)

சித்திரகூடத்தில் வந்து ப்ரபத்தி பண்ணின பரதாழ்வானுக்கு ஸ்ரீபாதுகைகளை நன்றாக நம்புகைக்கு உரிய அடகாக அளித்து, தேவர்கள் வாழும்படி (சித்திரகூடத்தைவிட்டு அவ்வருகே) எழுந்தருளி யுத்தத்துக்கு உரிய தெற்குத் திக்கில் செய்யவேண்டிய காரியங்களைக் குறையறச்செய்து முடித்துவிட்டுப் பிராட்டியுடன் அயோத்திக்கு எழுந்தருளி ராஜ்யபரிபால

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நம் செய்தருளின திருமால் எழுந்தருளியிருக்கிற கோயிலாவது; ஸர்வஸ்வாமியான பெரிய பெருமாளுடைய திருமேனி நிறத்தையும் பெரிய பிராட்டியாருடைய மலர்ந்த திருக்கண்களின் நிறத்தையும் பிரகாசிப்பியா நின்ற அழகு பொருந்திய கருநெய்தற் பூக்களானவை காற்று அசைக்க அசைந்து கொண்டிருக்கப்பெற்ற ஒளியை யுடைய திருவரங்கமாம். ... (1)

413 தன்னடியார்திறத்தகத்துத் தாமரையாளாகிலுஞ்சிதகுரைக்குமேல் *
என்னடியாரதுசெப்யார் செய்தாரேல்நன்றுசெய்தாரென்பர்போலும் *
மன்னுடையவிபீடணற்கா மதிளிலங்கைத்திசைநோக்கிமலர்கண்வைத்த *
என்னுடையதிருவரங்கற்கன்றியும் மற்றொருவர்க்காளாவரே. (2)

தன்னுடைய [எம்பெருமானுடைய] அடியவர்கள் விஷயத்தில் புருஷகாரம் பண்ணக்கடவளான பெரிய பிராட்டியார்தாமே குற்றங்களைக் கணக்கிட்டுச் சொல்லத் தொடங்கினாலும் "எனக்கு அடிமைப்பட்டவர்கள் அக்குற்றங்களைச் செய்யமாட்டார்கள்; செய்த குற்றத்தைப் பொறுப்பதற்கு எம்பெருமானுண்டு என்று சிலவற்றைச் செய்தார்களாயினும் அவர்கள் நன்மையையே செய்தார்களத்தனை" என்று சொல்லா நிற்பவரும், ஐச்வரியம் பொருந்திய விபீஷணாழ்வானுக்காக மதிளையுடைய லங்கையின் முகமாக மலர்ந்த திருக்கண்களை வைத்தருளினவனும் எனக்கு ஸ்வாமியுமான பெரிய பெருமாளையொழிய வேறொருவர்க்கு ஆட்படுவார் ஆரேனுமுண்டோ. ... ... (2)

414 கருளுடையபொழில்மருதுங் கதக்களிறும்பிலம்பனையுங்கடியமாவும் *
உருளுடையசகடினையும் மல்லரையுமுடையவிட்டோசைகேட்டான் *
இருளகற்றுமெறிகதிரோன் மண்டலத்தூடேற்றிவைத்தேணிவாங்கி *
அருள்கொடுத்திட்டடியவரை ஆட்கொள்வானமருமூரணியரங்கமே. (3)

கிருஷ்ணனை நலிய வேணும் என்கிற சிற்றத்தையுடையதும் மன மிழுப்புண்ணும்படி புறம்பே சோலை செய்து நிற்பதுமான இரட்டை மருதமரங்களையும் மிக்க கோபத்தையுடைய குவலயாபீடத்தையும் ப்ரலம்பாஸுரனையும் மிகவும் க்ரூரனான குதிரை வடிவாய்வந்த கேசியையும் உருண்டுவந்த சகடாஸுரனையும் மல்லர்களையும் நிரஸித்தருளிக் கீர்த்திபெற்றவனும் இருளைப் போக்காநின்ற வீசுகின்ற கிரணங்களை யுடையனான ஸூர்யனுடைய மண்டலத்தினுள்ளே அடியார்களை ஏறச்செய்து (அங்கு நின்றும் அர்ச்சிராதி மார்க்கமாய்ப் ப்ரமபதத்திற்குக் கொண்டுபோய்) அங்கு அவர்களை நிறுத்தித் தன்னுடையதான உபாயத்வாகாரத்தைத் தவிர்த்து அவர்கள் அவ்விடத்தில் நின்றும் மீளாமைக்கும் கைங்கரியலாபத்திற்கு முறுப்பாக அவர்கள் பக்கல் க்ருபைபண்ணி அடிமை கொள்ளுமவனுமான எம்பெருமான் பொருந்தி எழுந்தருளி யிருக்கிற திருப்பதியாவது அழகிய திருவரங்கமாம். ... ... (3)

415 பதினாறுமாயிரவர் தேவிமார்பணிசெய்யத்துவரையென்னு
மதில் * நாயகராகிவீற்றிருந்த மணவாளர்மன்னுகோயில் *
புதுநாண்மலர்க்கமலம் எம்பெருமான்பொன்வயிற்றிற்பூவேபோல்வான் *
பொதுநாயகம்பாவித்திறுமாந்து பொற்சாய்க்கும்புனலரங்கமே. (4)

ஸ்ரீத்வாரகையென்கிற பட்டணத்தில் பதினாறாயிரம் தேவிமார் கைங்கரியம் பண்ண, அவர்களுக்கு நாயகராய்க் கொண்டு அவர்களின் நடுவே எழுந்தருளியிருந்த மணவாளப்பிள்ளை அழகிய மணவாளப் பெருமாளாய் நித்தியவாஸம் பண்ணுகிற கோயிலாவது, அப்போதலர்ந்த செவ்வித் தாமரைப் பூவானது எம்பெருமானுடைய அழகிய திருநாபியிலுள்ள

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தாமரைப்பூவோடு ஸாம்யம் பெறுவதற்காக ஸர்வநிர்வாஹகத்வத்தைப் பாவித்து அப்பாவனையாலே கர்வங்கொண்டு மற்ற தாமரைகளின் அழகைத்தள்ளிவிடா நின்றுள்ள நீர்வளத்தையுடைய திருவரங்கமாம். ... ... (4)

416 ஆமையாய்க்கங்கையாய் ஆழ்கடலாய்அவனியாய்அருவரைகளாய் *
நான்முகனாய்நான்மறையாய் வேள்வியாய்த்தக்கணையாய்த்தானுமானான் *
சேமமுடைநாரதனார் சென்றுசென்றுதுதித்திறைஞ்சக்கிடந்தான்கோயில் *
பூமருவிப்புள்ளினங்கள்புள்ளரையன் புகழ்குழறும்புனலரங்கமே. (5)

ஸ்ரீநாரத மஹர்ஷிக்குத் தன்னுடைய ஸர்வாதிகத்துவத்தை விளங்கச் செய்வதற்காக முதலில் கங்காஜலத்துக்குள் ஆமையாயும் பின்பு அந்த ஆமை முதலிய ஜந்துக்களுக்கு இருப்பிடமான கங்கையாயும் பின்பு அக்கங்கை முதலிய நதிகளுக்குப் புகலிடமான ஆழ்ந்த கடலாயும் பின்பு அக்கடலுக்கு இருப்பிடமான பூமியாயும் பின்பு அப்பூமிக்கு ஆதாரமான பெரிய மலைகளாயும் பின்பு அம்மலைகளுக்கு ஸ்ருஷ்டிகர்த்தாவான சதுர்முகனுயும்பின்பு அச்சதுர்முகனுக்குத் தாரகமான நான்கு வேதங்களாயும் பின்பு வேதங்களுக்குப் பராயணமான யாகங்களாயும் பின்பு அந்த யாகங்களுக்கு வீர்யத்தைக் கொடுக்க வல்ல தக்ஷிணையாகவும் அந்தத் தக்ஷிணைமுகமாக அனைவர்க்கும் அவரவர்கள் விரும்பின பலத்தைக் கொடுக்கவல்ல அஸாதாரணவிக்ரஹ விசிஷ்டனான தானுகவுமாகி, ஸ்ரீநாரதபகவான் பலகாலும் எழுந்தருளி ஸ்தோத்திரம்பண்ணி வணங்கும்படி பள்ளி கொண்டருளுமெம்பெருமானுடையகோயிலாவது, அன்னம் முதலிய பறவைக்கூட்டங்கள் நீர்ப்பூ முதலிய பூக்களில் பொருந்தியிருந்து தங்கள் சாதிக்குத் தலைவனான பெரிய திருவடியினுடைய கீர்த்தியை அநக்ஷரஸமாகப் பேசாநிற்கப் பெற்றதும் நீர்வளத்தை யுடையதுமான திருவரங்க நகராம். ... ... (5)

417 மைத்துனன்மார்காதலியை மயிர்முடிப்பித்தவர்களையேமன்னராக்கி *
உத்தரைதன்சிறுவனையும் உய்யக்கொண்டவுயிராளனுறையுங்கோயில் *
பத்தர்களும் பகவர்களும் பழமொழிவாய்முனிவர்களும்பரந்தநாடும் *
சித்தர்களுந்தொழுதிறைஞ்சத் திசைவிளக்காய்நிற்கின்றதிருவரங்கமே. (6)

தனது மைத்துனன்மாரான பாண்டவர்களுடைய பத்நியாகிய த்ரௌபதியை விரித்த கூந்தலை முடியும்படி செய்தருளி அப்பாண்டவர்களையே அரசாள்வித்தருளியவனும் அபிமந்யுவின் மனைவியான உத்தரை என்பவளுடைய மகனை (கருவிற் கரிக்கட்டையா யொழிந்த) பரிக்ஷித்தை உயிர் பெற்றெழுந்திருக்கும்படி செய்தருளியவனும் எல்லா உயிர்கட்கும் தலைவனுமான எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற கோயிலாவது, பக்தர்களும் ஸந்நியாசிகளும் வேதம்வல்ல ரிஷிகளும் நாட்டிலுள்ள மற்றும் பலரும் நித்திய முக்தர்களும் அஞ்சலி பண்ணி வணங்கும்படி எல்லாத் திக்குகளுக்கும் விளக்காயிருக்கிற திருவரங்க நகராம். ... (6)

418 குறட்பிரமசாரியாய் மாவலியைக்குறும்பதக்கியரசுவாங்கி *
இறைப்பொழுதிற்பாதாளங் கலவிருக்கைகொடுத்துகந்தவெம்மான்கோயில் *
எறிப்புடையமணிவரைமேல் இளஞாயிறெழுந்தாற்போலரவணையின்வாய் *
சிறப்புடையபணங்கள்மிசைச் செழுமணிகள்விட்டெறிக்குந்திருவரங்கமே. (7)

வாமன ப்ரஹ்மசாரியா யெழுந்தருளி மஹாபலியினுடைய செருக்கை அடக்கி அவனுடைய ராஜ்யமாயிருந்த பூமியைத் தன்னுடையதாம்படி நீரேற்றுப் பெற்று க்ஷணகாலத்துக்குள் பாதாளலோகத்தை அவனுக்குஇருப்பிடமாகக் கற்பித்து மகிழ்ந்த எம்பெருமான் எழுந்தருளி

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யிருக்கிற கோயிலாவது, மிக்கவொளியையுடைய நீலரத்ன பர்வதத்தின்மேல் பாலஸூரியர்கள் உதித்தாற்போலத் திருவனந்தாழ்வானிடத்து அழகு பொருந்திய படங்களின்மேல் செழுமை தங்கிய ரத்னங்கள் மிகவும் ஜ்வலியா நிற்கப்பெற்ற திருவரங்கமாம். ... ... (7)

419 உரம்பற்றியிரணியனை உகிர்நுதியாலொள்ளியமார்புறைக்கவூன்றி *
சிரம்பற்றிமுடியிடியக்கண்பிதுங்க வாயலறத்தெழித்தான்கோயில் *
உரம்பெற்றமலர்க்கமலம் உலகளந்தசேவடிபோலுயர்ந்துகாட்ட *
வரம்புற்றகதிர்ச்செந்நெல் தாள்சாய்த்துத்தலைவணக்குந்தண்ணரங்கமே. (8)

தன்னுடைய வலிவை நினைத்துச் செருக்குற்ற இரணியனுடைய அழகிய மார்பை நகங்களின் நுனிகள் உள்ளே பொத்தும்படி திருக்கைகளால் பற்றிக்கொண்டு அவனது தலையிலுள்ள கிரீடம் பொடி படும்படியாகவும் கண்கள் பிதுங்கும்படியாகவும் வேதனை பொறுக்கமாட்டாமல் வாய் விரியும்படியாகவும் தலையைப் பிடித்து நெரித்து (பிரஹ்லாதனுடைய விரோதியை முடித்தோமென்னும் மகிழ்ச்சியினால்) ஆரவாரம் செய்தருளின எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற கோயிலாவது, செழிப்புப் பொருந்திய தாமரை மலர்கள் மேலுலகை அளப்பதாக உயர்ந்த திருவடியைப்போல் உயர வளர்ந்து விளங்க, வரம்பு சேர்ந்து விளைந்து நிற்பதும் கதிரையுடையதுமான செந்நெலானது தாள்களை நீட்டித் தலைவணங்கி நிற்கப்பெற்றதுமான குளிர்ந்த திருவரங்க நகராம். (உரம் - வலிவு.) ... ... (8)

420 தேவுடையமீனமாயாமையாயேனமாய் அரியாய்க்குறளாய் *
மூவுருவிலிராமனாய்க் கண்ணனாய்க்கற்கியாய்முடிப்பான்கோயில் *
சேவலொடுபெடையன்னஞ் செங்கமலமலரேறியூசலாடி *
பூவணைமேல்துதைந்தெழு செம்பொடியாடிவிளையாடும்புனலரங்கமே. (9)

தெய்வத்தன்மை வாய்ந்த மத்ஸ்யமாயும் கூர்மமாயும் வராஹமாயும் நரஸிம்ஹமாயும் வாமனனும் பரசுராமனும் தசரதராமனும் பலராமனும் ஸ்ரீ க்ருஷ்ணனும் கல்கியாயும் திருவவதாரங்களெடுத்து விரோதிகளை ஒழிக்கவல்ல எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற கோயிலாவது; அன்னப்பேடை தனது புருஷ ஹம்ஸத்தோடுகூடச் செந்தாமரைப் பூவின்மேலேறி அம்மலரை அசைத்து ஊசலாடிப் புஷ்ப சயநத்தின்மேல் நெருக்கத்தைச் செய்து அதனால் கிளர்ந்த சுண்ணமாகிற சிவந்த பொடியில் மூழ்கி விளையாடா நிற்கப்பெற்ற நீர்வளத்தையுடைய திருவரங்க நகராம். ... ... (9)

421 செருவாளும்புள்ளாளன்மண்ணாளன் செருச்செய்யுநாந்தகமென்னு
மொருவாளன் * மறையாளனோடாதபடையாளன் விழுக்கையாளன் *
இரவாளன்பகலாளனென்னையாளன் ஏழுலகப்பெரும்புரவாளன் *
திருவாளனினிதாகத் திருக்கண்கள்வளர்கின்றதிருவரங்கமே. (10)

தானே போர் செய்யவல்ல பெரிய திருவடிக்குத் தலைவனும், லீலாவிபூதியை ஆளுமவனும், ஆச்ரித விரோதிகளை எதிர்த்துப் பூசல் செய்யவல்ல நந்தகம் என்கிற ஒப்பற்றதொரு கொற்றவாளை யுடையனும், நான்கு வேதங்களையும் ஆளுமவனும், போர்க்களத்தில் முதுகுகாட்டியோடாத ஸேனைகளை யுடையவனும், சிறந்த ஔதார்ய முடையனும், இரவு பகற்போதுகளுக்கு நியாமகனும். அடியேனுக்குத் தலைவனும் ஸப்தலோகங்களாகிற பெரிய க்ஷேத்திரங்களை ஆளுமவனும், பெரிய பிராட்டியாரைத் தேவியாக ஆளுமவனுமான எம்பெருமான் திருவுள்ளமுவந்து திருக்கண் வளர்ந்தருளுகிற கோயிலாவது; திருவரங்க நகராம். ... (10)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

422 கைந்நாகத்திடர்கடிந்த கனலாழிப்படையுடையான்கருதுங்கோயில் *
தென்னாடும்வடநாடுந்தொழநின்ற திருவரங்கந்திருப்பதியின்மேல் *
மெய்ந்நாவன்மெய்யடியான்விட்டுசித்தன் விரித்ததமிழுரைக்கவல்லார் *
எஞ்ஞான்றுமெம்பெருமானிணையடிக்கீழ் இணைபிரியாதிருப்பர்தாமே. (11)

கஜேந்திராழ்வானுடைய துன்பத்தைப் போக்கின சக்கரபாணி யெம்பெருமான் விரும்பி யெழுந்தருளியிருக்கப் பெற்ற கோயிலாய், தென்னாட்டிலுள்ளாரும் வடநாட்டிலுள்ளாரும் ஸேவிக்கும்படி அமைந்த திருவரங்கமென்னும் திருப்பதி விஷயமாக, மெய்யே சொல்லாநின்ற நாவை யுடையரும் பிரயோஜனத்தை விரும்பாது அடிமை செய்பவருமான பெரியாழ்வார் அருளிச்செய்த இத்தமிழ்ப் பாசுரங்களை ஓதவல்லவர்கள் எம்பெருமானது திருவடிகளின் கீழ் எந்நாளும் நித்ய முக்தர்களின் திரளாகிற துணையைப் பிரியாமல் கூடி வாழ்ந்திருக்கப் பெறுவர். ... ... (11)

அடிவரவு :—மரவடி தன் கருள் பதினாறு ஆமை மைத்துனன் குறள் உரம் தேவு செரு கைந்நாகத் துப்பு.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

நான்காம்பத்து—பத்தாந்திருமொழி—துப்புடையாரை

(சரமகாலத்தில் வருத்தமொன்றும் நேராமைக்காக இப்போதே. துதிக்கின்றேனென்றல்)

423 துப்புடையாரையடைவதெல்லாம் சோர்விடத்துத்துணையாவரென்றே *
ஒப்பிலேனாகிலும்நின்னடைந்தேன் ஆனைக்குநீயருள்செய்தமையால் *
எய்ப்பென்னைவந்துநலியும்போது அங்கேதுநானுன்னை நினைக்கமாட்டேன் *
அப்போதைக்கிப்போதேசொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (1)

திருவரங்கம் பெரிய கோயிலில் திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேல் பள்ளிகொள்ளாநின்றுள்ள எம்பெருமானே! அடியாரைக் காப்பதில் ஸாமர்த்தியமுடைய தேவரீரை ஆச்ரயிப்பது 'ஸர்வ இந்திரியங்களும் சிதிலமாய் விடுங்காலத்தில் தேவரீர் துணையாயிருக்கும், என்கிற எண்ணத்தினாலன்றோ? இவ்வாறு துணை செய்வதற்கு உரிய அதிகாரிகள் இன்னாரென்று தேவர் திருவுள்ளத்திற் கொண்டிருக்குமவர்களோடு அடியேன் ஒப்பற்றவனாயினும் தேவர் கஜேந்திராழ்வானைக் காத்தருளியவராதலால் அவரைப்போல் அடியேனையுங் காத்தருள்விரென்று தேவரைச் சரணம் புகுந்தேன்; வாதபித்த ச்லேஷ்மங்களினால் நெருக்குண்கையாலுண்டாகக் கடவதான இளைப்பானது அடியேனைக் கிட்டி வருத்துங்காலமாகிற அந்த சரமதசையில் அடியேன் தேவரீரை க்ஷணகாலமாயினும் நினைக்க முடியாதவனாவேன். அக்காலத்துக்காக, கரணகளேபரங்கள் தெளிவு பெற்றிருக்கிற இப்போதே என்னுடைய ப்ரார்த்தனையை விண்ணப்பஞ் செய்து கொண்டேன். ... ... (1)

424 சாமிடத்தென்னைக்குறிக்கொள்கண்டாய் சங்கொடுசக்கரமேந்தினனே *
நாமடித்தென்னையனேகதண்டஞ் செய்வதாநிற்பர்நமன்றமர்கள் *
போமிடத்துன்திறத்தெத்தனையும் புகாவண்ணம்நிற்பதோர்மாயைவல்லை *
ஆமிடத்தேயுன்னைச்சொல்லிவைத்தேன் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சங்கசக்ரபாணியான ஸ்ரீரங்கநாதனே!, யம்படர்கள் மிக்க கோபத்தோடு நாக்கை மடித்துக் கொண்டு மஹா பாபியான அடியேனைப் பல வகைகளால் தண்டிக்க நினையாநின்றவர்களாய் இழுத்துக்கொண்டு போம்போது என்னுடைய நெஞ்சானது உன் விஷயத்தில் சிறிதாயினும் அவகாஹிக்கமாட்டாமல் நிற்கையாகிற ஒப்பற்றதொரு மாயையைச் செய்வதில் நீ வல்லவனாயிராநின்றாய்; ஆதலால், ஸர்வேந்திரியங்களும் தெளிவு பெற்றிருக்கையாகிற இக்காலத்திலேயே சரீரவியோக ஸமயத்தில் உன்னை நினைக்கமாட்டாத அடியேனைத் திருவுள்ளம்பற்றியருளவேணும் என்று உன்னைக் குறித்து விண்ணப்பஞ் செய்து கொண்டேன். ... (2)

425 எல்லையில்வாசல்குறுகச்சென்றால் எற்றிநமன்றமர்பற்றும்போது *
நில்லுமினென்னுமுபாயமில்லை நேமியுஞ்சங்கமுமேந்தினனே *
சொல்லலாம்போதேயுன்நாமமெல்லாம் சொல்லினேனென்னைக்குறிக்கொண்டென்றும் *
அல்லற்படாவண்ணங்காக்கவேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (3)

சங்கசக்ரபாணியான ஸ்ரீரங்கநாதனே!, அடியேனுடைய வாழ்நாளின் எல்லையாகிய சரமதசையில் யமபுரத்துக்குப் போம்வழியைக் கிட்டப்புகுந்தால் யமகிங்கரர்கள் அடித்துப் பிடிக்குங் காலத்தில் கடக்க நில்லுங்கள் என்று அவர்களைக் கிட்ட வரவொட்டாமல் தடுக்கும்படியான ஒருபாயமும் என் கையில் இல்லை; ஆதலால், வாய்விட்டுச் சொல்லுகைக்கு உரிய இப்போதே உன்னுடைய திருநாமங்களை யெல்லாம் சொன்னேன்; அடியேனைத் திருவுள்ளத்திற் கொண்டு எப்போதும் அநர்த்தப்படாதபடி ரக்ஷித்தருளவேணும். ... ... (3)

426 ஒற்றைவிடையனும்நான்முகனும் உன்னையறியாப்பெருமையோனே *
முற்றவுலகெல்லாம்நீயேயாகி மூன்றெழுத்தாயமுதல்வனேயோ *
அற்றதுவாணாளிவற்கென்றெண்ணி அஞ்சநமன்றமர்பற்றலுற்ற *
அற்றைக்குநீயென்னைக்காக்கவேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (4)

ஒப்பற்ற ரிஷபவாஹனனான ருத்ரனும் பிரமனும் உன்னை உள்ளபடி அறியவொண்ணாத பெருமை பொருந்தியவனே! ஒன்றொழியாதபடி எல்லா உலகங்களும் நீயேயாய் மூன்று அக்ஷரமான பிரணவ ஸ்வரூபியானவனும் ஸர்வ காரணபூதனுமான ஸ்ரீரங்கநாதனே!, யமகிங்கரர்கள் 'இவனுக்கு ஆயுஸ்ஸு முடிந்தது' என்று நினைத்து, பிடிக்கிற பிடியில் அஞ்சும்படி பிடிக்கப் புகுகிற அன்றைக்கு நீ என்னைக் காக்கவேண்டும். ... ... (4)

427 பையரவினணைப்பாற்கடலுள் பள்ளிகொள்கின்றபரமமூர்த்தி *
உய்யவுலகுபடைக்கவேண்டி உந்தியில்தோற்றினாய்நான்முகனை *
வையமனிசரைப்பொய்யென்றெண்ணிக் காலனையுமுடனேபடைத்தாய் *
ஐயவினியென்னைக்காக்கவேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (5)

திருப்பாற்கடலில் சேஷசாயியான ஸ்வாமி!, எல்லா வுயிர்களும் தன்னையடைந்து உஜ்ஜீவிக்கும்படி லோகங்களை ஸ்ருஷ்டிக்க விரும்பித் திருநாபிக் கமலத்தில் பிரமனைத் தோற்றுவித்தவனே! பூமியிலுள்ள மநுஷ்யர்கள் நமது கட்டளையாகிய சாஸ்த்ர மரியாதையில் நிற்கமாட்டாது க்ருத்ரிமராய் நடப்பவர்களென்று நினைத்து அந்த விபரீதாசரணத்துக்குத் தக்க தண்டம் நடத்துதற்காக யமனையும் கூடவே ஸ்ருஷ்டித்தருளினவனே! பரம பந்துவானவனே! ஸ்ரீரங்கநாதனே! இனி என்னைக் காக்கவேண்டும். ... ... (5)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

428 தண்ணளவில்லைநமன்றமர்கள் சாலக்கொடுமைகள்செய்யாநிற்பர் *
மண்ணொடுநீருமெரியுங்காலும் மற்றுமாகாசமுமாகிநின்றாய் *
எண்ணலாம்போதேயுன்நாமமெல்லாம் எண்ணினேனென்னைக்குறிக்கொண்டென்றும் *
அண்ணலேநீயென்னைக்காக்கவேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (6)

பஞ்ச பூதங்களும் மற்றுமுள்ள பதார்த்தங்களுமாய் நின்றவனே! ஸர்வ ஸ்வாமியானவனே! யமகிங்கரர்கள் இரக்கமற்றவர்களாய்க் கொண்டு மிகவும் கொடிய சிக்ஷைகளைப் பண்ணுவர்கள்; அப்படிப்பட்ட சிக்ஷைகளுக்கு ஆளாகாதொழியும்படி, அநுஸந்திக்கைக்கு உரிய காலத்திலேயே உன்னுடைய திருநாமங்களை யெல்லாம் அநுஸந்தித்தேன்; அடியேனை நீ திருவுள்ளத்திற் கொண்டு எப்போதும் ரக்ஷித்தருளவேணும். ... ... (6)

429 செஞ்சொல்மறைப்பொருளாகிநின்ற தேவர்கள்நாயகனேயெம்மானே *
எஞ்சலிலென்னுடையின்னமுதே யேழுலகுமுடையாயென்னப்பா *
வஞ்சவுருவின்நமன்றமர்கள் வலிந்துநலிந்தென்னைப்பற்றும்போது *
அஞ்சலமென்றென்னைக்காக்கவேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (7)

ருஜுவான சொற்களையுடைய வேதத்துக்கு அர்த்தமாயிருப்பவனும் நித்ய ஸூரிகளுக்குத் தலைவனுமான பெருமானே! எனக்குக் குறைவற்ற பரமபோக்யமான அம்ருதம் போன்றவனே! உலகங்களுக்கெல்லாம் ஸ்வாமியானவனே! எனக்கு உபகாரகனானவனே! வஞ்சனை பொருந்திய ரூபத்தையுடையரான யமகிங்கரர்கள் அடியேனைப் பலாத்கரித்து ஹிம்ஸித்துக் கொண்டு பிடிக்கும்போது 'அஞ்சவேண்டா' என்று என்னைக் காத்தருள்க. ... (7)

430 நானேதுமுன்மாயமொன்றறியேன் நமன்றமர்பற்றிநலிந்திட்டு * இந்த
ஊனேபுகேயென்றுமோதும்போது அங்குன்னைநானொன்றுநினைக்கமாட்டேன் *
வானேய்வானவர்தங்களீசா மதுரைப்பிறந்தமாமாயனே * என்
ஆனாய்நீயென்னைக்காக்கவேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (8)

பரமபதத்திலுள்ள நித்ய முக்தர்களுக்குத் தலைவனே! திருவடமதுரையில் அவதரித்த மிக்க ஆச்சரிய சக்தியை யுடையவனே! பாகனுக்கு வசப்பட்டொழுகுகின்ற யானைபோல் எனக்கு வசப்பட்டிருப்பவனே! அடியேன் உன் மாயைகளில் யாதொன்றையும் அறியமாட்டேன்; யமகிங்கரர்கள் என்னைப் பிடித்து இந்தச் சரீரத்தோடே பண்ணவேண்டிய ஹிம்ஸைகளை யெல்லாம் பண்ணிவிட்டுப் பின்பு, 'இந்த யாதநாசரீரத்தினுள்ளே ப்ரவேசி' என்று அடிக்கும்போது அவ்விடத்தில் உன்னை நான் ஒன்றும் நினைக்கமாட்டேன்; நீ என்னைக் காக்கவேண்டும்.

431 குன்றெடுத்தாநிரைகாத்தவாயா கோநிரைமேய்த்தவனேயெம்மானே *
அன்றுமுதலின்றறுதியா ஆதியஞ்சோதிமறந்தறியேன் *
நன்றுங்கொடியநமன்றமர்கள் நலிந்துவலிந்தென்னைப்பற்றும்போது *
அன்றங்குநீயென்னைக்காக்கவேண்டும் அரங்கத்தரவணைப்பள்ளியானே. (9)

கோவர்த்தந மலையைக் குடையாக எடுத்துப் பிடித்துப் பசுக்களின் திரளை ரக்ஷித்தருளின கோபாலனே! மாடுகளின் கூட்டத்தை மேய்த்தருளினவனே! எனக்கு ஸ்வாமியானவனே! உனக்குப் பல்லாண்டு பாடுமவனுக்கிக் கொண்ட அந்நாள் தொடங்கி இன்றளவாக ஸர்வ காரண பூதனான உன்னுடைய விலக்ஷண தேஜோரூபமான திவ்யமங்கள விக்ரஹத்தை அடியேன் மறந்ததில்லை; மிக்க கொடுமை பொருந்திய யமகிங்கரர்கள் என்னை ஹிம்ஸித்து பலாத்கரித்துப் பிடிக்குங்காலமாகிய அத்தருணத்தில் அவ்விடத்தில் நீ என்னைக் காக்கவேண்டும்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

432 மாயவனைமதுசூதனனை மாதவனைமறையோர்களேத்தும் *
ஆயர்களேற்றினையச்சுதனை அரங்கத்தரவணைப்பள்ளியானை *
வேயர்புகழ்வில்லிபுத்தூர்மன் விட்டுசித்தன்சொன்னமாலைபத்தும் *
தூயமனத்தனராகிவல்லார் தூமணிவண்ணனுக்காளர்தாமே. (10)

ஆச்சரிய சக்தியை யுடையனும் மது என்ற அசுரனை ஒழித்தருளினவனும் பெரிய பிராட்டியார்க்கு வல்லபனும் வைதிகர்களினால் துதிக்கப்படுமவனும் இடையர்களுக்குத் தலைவனும் அடியாரை ஒருநாளும் நழுவவிடாதவனும் கோயிலில் சேஷசயநனுமான எம்பெருமானை நோக்கிப் பெரியாழ்வார் அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களையும் நிர்மலமான நெஞ்சையுடையராய்க் கொண்டு ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு எப்போதும் அடிமை செய்யப் பெறுவர்.

அடிவரவு ;—துப்பு சாமிடம் எல்லை ஒற்றை பை தண்ணனவு செஞ்சொல் நானேது குன்று மாய வாக்கு.

ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து—முதல்திருமொழி—வாக்குத்தூய்மை

(பெரிய பெருமாளுடைய போக்யதையில் தமது மனமொழி மெய்கள் மேல்விழுகிறபடியைப் பேசுதல்)

433 வாக்குத்தூய்மையிலாமையினாலே மாதவாவுன்னை வாய்க்கொள்ளமாட்டேன் *
நாக்குநின்னையல்லாலறியாது நானதஞ்சுவனென்வசமன்று *
மூர்க்குப்பேசுகின்றானிவனென்று முனிவாயேலுமென்நாவினுக்காற்றேன் *
காக்கைவாயிலுங்கட்டுரைகொள்வர் காரணகருளக்கொடியானே. (1)

திருமாலே! ஆதிகாரணமானவனே! பெரிய திருவடியை த்வஜமாக வுடையவனே! என்னுடைய வாய்மொழிக்குப் பரிசுத்தி இல்லாமையால் உன்னை வாய் கொண்டு துதிக்க யோக்யதை யற்றவனாயிரா நின்றேன்; வெறுமனே கிடப்போமென்று பார்த்தாலும் ரஸமறிந்த எனது நாக்கானது உன்னையொழிய மற்றொருவரை வாய்க்கொள்ள அறியாது; அசுத்தமான நாக்கு இங்ஙனே உன் பக்கல் ஈடுபடா நின்றதைக் குறித்து நான் அஞ்சுகின்றேன்; அந்த நாக்கானது எனக்கு வசப்பட்டு நிற்பதன்று; "இவன் மூடர் பேசும் பேச்சைப் பேசாநின்றான்", என்று திருவுள்ளம்பற்றி நீ சீறியருளினாலும் என்னுடைய நாக்கின் பதற்றத்தை நான் ஸஹிக்கவல்லேனல்லேன்; காக்கையினுடைய வாயிலுண்டான சொல்லையும் நற்சொல்லாக அறிவுடையார் கொள்ளுவர்கள். (அதுபோலே கொள்ளவேணுமென்றவாறு.) ... (1)

434 சழக்குநாக்கொடுபுன்கவிசொன்னேன் சங்குசக்கரமேந்துகையானே *
பிழைப்பராகிலும்தம்மடியார்சொல்பொறுப்பது பெரியோர்கடனன்றே *
விழிக்குங்கண்ணிலேன்நின்கண்மற்றல்லால் வேறொருவரோடென்மனம்பற்றாது *
உழைக்கோர்புள்ளிமிகையன்றுகண்டாய் ஊழியேழுலகுண்டுமிழ்ந்தானே. (2)

சங்கசக்ரபாணியே! பிரளய காலத்தில் எல்லா வுலகங்களையும் திருவயிற்றில் வைத்து நோக்கிப் பின்பு வெளிப்படுத்தினவனே! பொல்லாத நாக்கினால் அற்பமான பாசுரங்களை நான் சொன்னேன்; தாஸபூதர்கள் பிழை செய்தார்களே யாகிலும் தமக்கு அடிமைப்பட்ட அவர்களுடைய

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சொல்லைப் பொறுத்தருளுகை பெருந்தன்மை யுடையவர்களுக்குக் கடமையன்றோ? உன்னு டைய கடாக்ஷமொழிய வேறொருவருடைய கடாக்ஷத்தை ரக்ஷகமாக உடையேனல்லேன்; அன்றியும், மற்ற ஒருவர் பக்கலிலும் எனது நெஞ்சானது பொருந்தமாட்டாது; புள்ளி மானுக்கு ஒரு புள்ளி ஏறுவது குற்றமன்றன்றோ? (குற்றமே வடிவெடுத்த என் பக்கலில் குற்றம் பார்க்கலாமோ என்றபடி.) ... ... (2)

435 நன்மைதீமைகளொன்றுமறியேன் நாரணனென்னுமித்தனையல்லால் *
புன்மையாலுன்னைப்புள்ளுவம்பேசிப் புகழ்வானன்றுகண்டாய்திருமாலே *
உன்னுமாறுன்னையொன்றுமறியேன் ஓவாதேநமோநாரணவென்பன் *
வன்மையாவதுன்கோயிலில்வாழும் வைட்டணவனென்னும்வன்மைகண்டாயே. (3)

திருமாலே! நாராயணா!' என்று கூப்பிடுகையாகிற இவ்வளவொழிய வேறு நன்மை தீமை யொன்றையும் அறிகிறேனில்லை; எனக்கு இயற்கையாக உள்ள அற்பத்தனத்தினால் உன்னைக் குறித்து வஞ்சகமான சொற்களைச் சொல்லிப் புகழுமவனல்லன் அடியேன்; உன்னை இடை விடாது ஸ்மரித்துக் கொண்டிருக்கத்தக்க வழிகளில் ஒரு வழியையும் அறிகிறேனில்லை; இடை விடாமல் 'நமோ நாராயணாய' என்னா நின்றேன்; அடியேனுடைய அத்யவஸாயமாவது 'உன் னுடைய கோயிலில் வாழாநின்றுள்ள வைஷ்ணவன்' என்கிற இதுவேயாம். ... (3)

436 நெடுமையாலுலகேழுமளந்தாய் நின்மலாநெடியாயடியேனை *
குடிமைகொள்வதற்கையுறவேண்டா கூறைசோறிவைவேண்டுவதில்லை *
அடிமையென்னுமக்கோயின்மையாலே அங்கங்கேயவைபோதருங்கண்டாய் *
கொடுமைக்கஞ்சனைக்கொன்றுநின்தாதை கோத்தவன்தளைகோள்விடுத்தானே. (4)

நெடுக வளர்ந்து எல்லா வுலகங்களையும் அளந்தருளினவனே! பரிசுத்தனானவனே! அனை வர்க்கும் தலைவனானவனே! கொடிய கம்ஸனை உயிர்க்கொலை செய்து, உனது தந்தையாகிய வஸுதேவருடைய காலில் பூட்டப்பட்டிருந்த வலிய விலங்கின் பூட்டைத் தறித்துப் போகட்ட வனே! உனக்கு அடிமைப் பட்டுள்ள என்னைக் கிங்கரனாகக் கொள்வதற்கு ஸந்தேஹிக்க வேண்டியதில்லை; இக்கூறையையுஞ் சோற்றையும் நான் உன்னிடத்து விரும்புகிறேனில்லை; அடிமையென்கிற அந்த ராஜகுல மாஹாத்மியத்தினால் அக்கூறை சோறுகள் அவ்வவ்விடங் களில் எளிதில் கிடைக்கும்; அடிமையே வேண்டும். ... ... (4)

437 தோட்டமில்லவளாத்தொழுவோடை துடவையுங்கிணறுமிவையெல்லாம் *
வாட்டமின்றியுன்பொன்னடிக்கீழே வளைப்பகம்வகுத்துக்கொண்டிருந்தேன் *
நாட்டுமானிடத்தோடெனக்கரிது நச்சுவார்பலர்கேழலொன்றாகி *
கோட்டுமண்கொண்டகொள்கையினானே குஞ்சரம்விழக்கொம்பொசித்தானே. (5)

ஒப்பற்ற வராஹரூபியாய்க் கொண்டு தனது கோரப்பல் நுனியில் பூமியைத் தாங்குகையாகிற ஸ்வபாவத்தை யுடையவனே! குவலயாபீடமென்ற யானையானது முடியும்படி அதன் தந்தத்தை முறித்தெறிந்தவனே; தோட்டமும் மனைவியும் பசுக்களும் மாட்டுத் தொழுவமும் குளமும் விளை நிலமும் கிணறுமாகிற இவையெல்லாவற்றையும் குறைவில்லாமல் அடியேன் உனது அழகிய திருவடியிலே திரள வகுத்துக்கொண்டிரா நின்றேன்; எல்லாம் உன் திருவடியே என்றிருக்கிற எனக்கு நாட்டிலுள்ள மநுஷ்யரோடு ஸஹவாஸம் செய்வது அஸஹ்யம்; பல பேர் இந்த ஸஹவாஸத்தை விரும்புவார்கள். (அவர்கள் விரும்பட்டும்; எனக்கு வேண்டா.) (5)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

438 கண்ணாநான்முகனைப்படைத்தானே காரணாகரியாயடியேன்நான் *
உண்ணாநாள்பசியாவதொன்றில்லை ஓவாதேநமோநாரணாவென்று *
எண்ணாநாளுமிருக்கெசுச்சாமவேத நாண்மலர்கொண்டுனபாதம்
நண்ணாநாள் * அவைதத்துறுமாகில் அன்றெனக்கவைபட்டினிநாளே. (6)

பிரமனைப் படைத்தருளின காரணபூதனே! கண்ணபிரானே! காளமேகம்போல் கறுத்த நிறத்தையுடையவனே! உனக்கு சேஷபூதனான நான் உண்ணாதொழிந்தபோது பசியென்பது ஈஷத்து முண்டாவதில்லை; இடைவிடாமல் 'நமோ நாராயணாய' என்று அநுஸந்திக்கப் பெறாத நாளும், ருக், யஜுஸ், ஸாமம் என்கிற வேதங்களைச் சொல்லிக்கொண்டு அப்போதலர்ந்த பூக்களை எடுத்துக்கொண்டு வந்து உன் திருவடிகளைக் கிட்டப்பெறாத நாள்களும் எனக்கு உபவாஸ நாள்களாம்; அந்த வேதாநுஸந்தாநமும்; புஷ்பஸமர்ப்பணமும் தட்டுப்படுமாகில் அந்த நாளானது எனக்கு உண்ணாதொழிந்த நாளாகும். ... ... (6)

439 வெள்ளைவெள்ளத்தின்மேலொருபாம்பை மெத்தையாகவிரித்ததன்மேலே *
கள்ளநித்திரைகொள்கின்றமார்க்கங் காணலாங்கொலென்றாசையினாலே *
உள்ளஞ்சோரவுகந்தெதிர்விம்மி உரோமகூபங்களாய்க்கண்ணநீர்கள் *
துள்ளஞ்சோரத்துயிலணைகொள்ளேன் சொல்லாயானுன்னைத்தத்துறுமாறே. (7)

பால்மயமான பெருக்கிலே திருவனந்தாழ்வானைப் படுக்கையாக விரித்து அப்படுக்கையின்மீது நீ யோகநித்ரை செய்தருளும்படியைக் காணக்கூடுமோ என்கிற விருப்பத்தினால், நெஞ்சு அழிய, மகிழ்ச்சியின் மிகுதியால் வார்த்தை சொல்லவொண்ணாதபடி கலங்கி உடம்பு முழுவதும் மயிர்க்குழி யெறியப் பெற்றுக் கண்ணீர் துளி துளியாகச் சோரப்பெற்றுப் படுக்கையில் உறங்கப் பெறுகிறேனில்லை; இப்படிப்பட்ட அடியேன் உன்னைக் கிட்டும்வழியை அருளிச்செய்ய வேணும். ... ... (7)

440 வண்ணமால்வரையேகுடையாக மாரிகாத்தவனேமதுசூதா *
கண்ணனேகரிகோள்விடுத்தானே காரணாகளிறட்டபிரானே *
எண்ணுவாரிடரைக்களைவானே யேத்தரும்பெருங்கீர்த்தியினானே *
நண்ணிநானுன்னைநாடொறுமேத்தும் நன்மையேயருள்செய்யெம்பிரானே. (8)

உலகங்கட்குக் காரணமானவனே! எப்போதும் உன்னையே தியானிப்பவர்களுடைய துன்பங்களைப் போக்குமவனே! மதுவைக் கொன்றவனே! கஜேந்திராழ்வானுடைய துக்கத்தை நீக்கினவனே! கண்ணனே! அழகிய பெரிய கோவர்த்தன மலை குடையாக அமைய மழையினின்றும் பசுக்களையும் இடையரையும் காத்தருளினவனே! குவலயாபீடமென்னும் யானையை முடித்தவனே! துதிக்கமுடியாத அளவற்ற கீர்த்தியையுடையவனே! எமக்குத் தலைவனே! அடியேன் உன்னைத் தினந்தோறும் ஆச்ரயித்துத் துதிக்கையாகிற நன்மையை அருள்செய்யவேணும். (8)

441 நம்பனேநவின்றேத்தவல்லார்கள் நாதனேநரசிங்கமதானாய் *
உம்பர்கோனுலகேழுமளந்தாய் ஊழியாயினாயாழிமுனேந்தி *
கம்பமாகரிகோள்விடுத்தானே காரணாகடலைக்கடைந்தானே *
எம்பிரானென்னையாளுடைத்தேனே யேழையேனிடரைக்களையாயே. (9)

ரக்ஷகன் என்று நம்பத்தகுந்தவனே! ஸ்தோத்ரங்களை வாயாரச்சொல்லிப் புகழவல்லவர்களுக்கு ரக்ஷகனே! நரஸிம்ஹாவதாரஞ் செய்தருளினவனே! நித்யஸூரிகளுக்குத் தலைவனே!

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

எல்லா வுலகங்களையும் அளந்துகொண்டவனே! காலம் முதலிய பதார்த்தங்களுக்கெல்லாம் நிர்வாஹகனானவனே! முன்னே திருவாழியாழ்வானை ஏந்திக்கொண்டு எழுந்தருளி, மிக்க நடுக்கத்தை அடைந்த கஜேந்திராழ்வானுடைய துயரை விடுத்தருளினவனே! ஜகத்காரண பூதனே! திருப்பாற்கடலைத் தேவர்கட்காகக் கடைந்தருளினவனே! எம்பிரானே! அடியேனை ஆட்படுத்திக்கொண்டவனும் தேன்போல் இனியனுமானவனே! உன் திருநாமங்களில் சாபல்யமுடைய என்னுடைய துன்பத்தைக் களைந்தருளவேணும். ... ... (9)

442 காமர்தாதைகருதலர்சிங்கம் காணவினியகருங்குழற்குட்டன் *
வாமனனென்மரதகவண்ணன் மாதவன்மதுசூதனன்றன்னை *
சேமநன்கமரும்புதுவையர்கோன் விட்டுசித்தன்வியன்தமிழ்பத்தும் *
நாமமென்றுநவின்றுரைப்பார்கள் நண்ணுவாரொல்லைநாரணனுலகே. (10)

மன்மதனுக்குத் தந்தையும், தன்னை விரோதிப்பவராகிற யானைகட்குச் சிங்கம் போன்றவனும் ஸேவிப்பதற்கு அழகாயிருக்கிற கறுத்த குழலையுடைய சிறுக்கனானவனும் மரதகவண்ணனுமான வாமன மாதவ மதுசூதனனைக் குறித்தருளிச்செய்த, பெரியாழ்வாரது பெருமையுள்ள இத்தமிழ்ப்பாசுரங்கள் பத்தையும் திருநாமங்களாகப் பிரதிபத்திபண்ணி அன்புகொண்டு ஓதுமவர்கள் விரைவாக ஸ்ரீவைகுண்டத்தைக் கிட்டப்பெறுவர்கள். ... ... (10)

அடிவரவு:—வாக்கு சழக்கு நன்மை நெடுமை தோட்டம் கண்ணா வெள்ளை வண்ணம் நம்பன் காமர் நெய்.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து—இரண்டாந்திருமொழி—நெய்க்குடத்தை

(ஆழ்வார் தம்மிடத்தே எம்பெருமான் குடிகொண்டவீறு கூறுதல்)

443 நெய்க்குடத்தைப்பற்றி யேறுமெறும்புகள்போல்நிரந்து * எங்குங்
கைக்கொண்டுநிற்கின்றநோய்காள் காலம்பெறவுய்யப்போமின் *
மெய்க்கொண்டுவந்துபுகுந்து வேதப்பிரானார்கிடந்தார் *
பைக்கொண்டபாம்பணையோடும் பண்டன்றுபட்டினங்காப்பே. (1)

நெய் வைத்திருக்கும் குடத்தைப் பற்றிக்கொண்டு அக்குடத்தின்மேல் ஏறுகின்ற எறும்புகளைப்போல் என்னுடைய உடம்பு முழுவதும் பரவி என்னை வசப்படுத்தி என்னையே இருப்பிடமாகக்கொண்டு நிலைத்து நிற்கிற வியாதிகளே! விரைவாக நீங்கள் பிழைக்கவேண்டில் என்னை விட்டு வேறிடத்தைத் தேடிப்போய்விடுங்கள்! பிரமனுக்கு வேதத்தை உபகரித்தருளின எம்பெருமான் சேஷசயனத்தோடுங்கூட எழுந்தருளி எனது சரீரத்தைத் தனக்கு இனிதாகத் திருவுள்ளம் பற்றி என் சரீரத்தினுள்ளே பள்ளிகொண்டிரா நின்றார்; ஆதலால், அவ்வெம்பெருமானுடைய பட்டணமாகிய இவ்வாத்துமா பழைய நிலைமையை உடையதன்று; அவனால் காக்கப்பெற்றதாயிற்று இப்போது. ... ... (1)

444 சித்திரகுத்தனெழுத்தால் தென்புலக்கோன்பொறியொற்றி *
வைத்தவிலச்சினைமாற்றித் தூதுவரோடியொளித்தார் *
முத்துத்திரைக்கடற்சேர்ப்பன் மூதறிவாளர்முதல்வன் *
பத்தர்க்கமுதனடியேன் பண்டன்றுபட்டினங்காப்பே. (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சித்ரகுப்தனென்கிற யமலோகத்துக் கணக்குபிள்ளையானவன் தெற்குத்திசைக்குத்தலைவனான யமனுடைய மேலெழுத்தை இடுவித்துத் தான் எழுதி வைத்த குறிப்புச் சீட்டை யமகிங்கரர்கள் கிழித்துப் போட்டுவிட்டுக் கண்ணுக்குத் தெரியாத இடந்தேடி ஓடி ஒளிந்து கொண்டார்கள்; முத்துக்களைக்கொண்டு வீசுகிற அலைகளையுடைய கடலில் கண்வளர்ந்தருளுமவனும், முதிர்ந்த அறிவையுடைய நித்யஸூரிகளுக்குத் தலைவனும், அடியார்களுக்கு அம்ருதம்போல் இனியனுமான எம்பெருமானுக்கு யான் தாஸனாயினேன்; பண்டன்று பட்டினம் காப்பு. ... (2)

445 வயிற்றில்தொழுவைப்பிரித்து வன்புலச்சேவைபதக்கி *
கயிற்றுமக்காணிகழித்துக் காலிடைப்பாசங்கழற்றி *
எயிற்றிடைமண்கொண்டவெந்தை யிராப்பகலோதுவித்து * என்னைப்
பயிற்றிப்பணிசெய்யக்கொண்டான் பண்டன்றுபட்டினங்காப்பே. (3)

வராஹரூபியாய்த் திருவவதரித்தபோது, தனது கோரப்பல்மேல் பூமியைத் தாங்கியருளின எம்பெருமான், அடியேனுக்குக் கர்ப்பவாஸத்தைக் கழித்தருளியும், இந்திரியங்களாகிற கடுமையான ரிஷபங்களைப் பட்டிமேய்ந்து திரியவொட்டாமல் அடக்கியும் நரம்புகளும் எலும்புகளுமேயாயிராநின்ற சரீரத்தில் ஆசையை ஒழித்தருளியும் யமதூதர்களுடைய பாசங்களைக் காலிலேகட்டி இழுக்கவொண்ணாதபடி பண்ணியும், இரவும் பகலும் நல்லறிவைப் போதித்தும், கற்பித்தவற்றை அநுஷ்டாந பர்யந்தமாக்கியும் நித்தியகைங்கரியம் பண்ணும்படி அடியேனைக் கைக்கொண்டருளினன்; பண்டன்று பட்டினம் காப்பு. ... ... (3)

446 மங்கியவல்வினைநோய்காள் உமக்குமோர்வல்வினைகண்டீர் *
இங்குப்புகேன்மின்புகேன்மின் எளிதன்றுகண்டீர்புகேன்மின் *
சிங்கப்பிரானவனெம்மான் சேருந்திருக்கோயில்கண்டீர் *
பங்கப்படாதுய்யப்போமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (4)

ஆத்துமா உருத்தெரியாதபடி மழுங்கிக் கிடப்பதற்குக்காரணமான வலியபாவங்களின் மூலமாக வளர்ந்த வியாதிகளே! உங்களுக்குங்கூட ஒரு கடினமான தீமை நேர்ந்தபடியை இன்று பாருங்கள்; இவ்விடத்தில் இனி வரவேண்டா, வரவேண்டா; இனி நீங்கள் என்னைக் கிட்டுகை சுலபமான காரியமன்று; ஆதலால் இனி இங்கு வரவேண்டா; எனது ஆத்துமா, நரஸிம்ஹமூர்த்தி எழுந்தருளி யிருப்பதற்கிடமான திருக்கோயிலாக அமைந்தபடியைப் பாருங்கள்; பரிபவப்படாமல் பிழைத்துப்போங்கள். பண்டன்று பட்டினங்காப்பு. ... ... (4)

447 மாணிக்குறளுருவாய மாயனையென்மனத்துள்ளே *
பேணிக்கொணர்ந்துபுகுதவைத்துக்கொண்டேன் பிறிதின்றி *
மாணிக்கப்பண்டாரங்கண்டீர் வலிவன்குறும்பர்களுள்ளீர் *
பாணிக்கவேண்டாநடமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (5)

பிரமசாரி வாமனனாய் அவதரித்தவனும் மாணிக்கநிதிபோல் இனியனும் ஆச்சரிய பூதனுமான எம்பெருமானை ஆசைப்பட்டு எழுந்தருளப் பண்ணிக்கொண்டுவந்து என் நெஞ்சினுள்ளே புகுந்திருக்கும்படி வேற்றுமையில்லாமல் அமைத்துக்கொண்டேன்; மிகவுங்கொடிய குறும்புகளைச் செய்கிற இந்திரியங்களே! வேறிடந்தேடி ஓடுங்கள்; தாமசிக்க வேண்டியதில்லை, பண்டன்று பட்டினம் காப்பு. ... ... (5)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

448 உற்றவுறுபிணிநோய்காள் உமக்கொன்றுசொல்லுகேன்கேண்மின் *
பெற்றங்கள்மேய்க்கும்பிரானுர் பேணுந்திருக்கோயில்கண்டீர் *
அற்றமுரைக்கின்றேன் இன்னமாழ்வினைகாள் * உமக்கிங்கோர்
பற்றில்லைகண்டீர்நடமின் பண்டன்றுபட்டினங்காப்பே. (6)

மிக்க வருத்தத்தைச்செய்கிற நோய்களே! உங்களுக்கு ஒரு வார்த்தை சொல்லுகிறேன்; கேளுங்கள்; நீங்கள் இப்போது குடியிருக்கிற எனது இவ்வுடலானது பசுக்களை மேய்த்தருளிய கண்ணபிரான் விரும்பி எழுந்தருளியிருக்கைக்கு இடமான திருக்கோயிலாயிற்று; ஸம்ஸார ஸமுத்ரத்தில் என்னை ஆழங்காற்படுத்தின ஓ கொடுமைகளே! மறுபடியும் அறுதியாகச் சொல்லுகிறேன்; உங்களுக்கு இவ்விடத்தில் ஒருவகை அவலம்பமும் கிடையாது; ஆதலால் இனி இவ்விடத்தைவிட்டு நடவுங்கள், பண்டன்று பட்டினம் காப்பு. ... (6)

449 கொங்கைச்சிறுவரையென்னும் பொதும்பினில்விழ்ந்துவழுக்கி *
அங்கோர்முழையினிற்புக்கிட்டு அழுந்திக்கிடந்துழல்வேனை *
வங்கக்கடல்வண்ணனம்மான் வல்வினையாயினமாற்றி *
பங்கப்படாவண்ணஞ்செய்தான் பண்டன்றுபட்டினங்காப்பே. (7)

சிறிய மலைபோன்ற முலைகளாகிற பொந்தில் வழுக்கி விழுந்து நரகமென்கிற பரலோகமாகிய ஒரு குஹையினுள் புகுந்து அங்கு நின்றும் கால் பேர்க்கவொட்டாமல் அங்கேயே அழுந்தியிருந்து திரியப்போகிற என்னுடைய தீவினைகளாயிருப்பவைகளை எம்பெருமான் போக்கியருளி, நான் பரிபவப்படாதபடி செய்தருளினுன்; பண்டன்று பட்டினங்காப்பு. ... (7)

450 ஏதங்களாயினவெல்லாம் இறங்கலிடுவித்து * என்னுள்ளே
பீதகவாடைப்பிரானுர் பிரமகுருவாகிவந்து *
போதிற்கமலவன்னெஞ்சம் புகுந்துமென்சென்னித்திடரில் *
பாதவிலச்சினைவைத்தார் பண்டன்றுபட்டினங்காப்பே. (8)

பீதாம்பரதரனுன எம்பெருமான் ப்ரஹ்மோபதேசம் பண்ணக்கடவனுன ஆசாரியனுய் எழுந்தருளி அறிவுக்கு இருப்பிடமான ஹ்ருதய கமலத்தினுள் பிரவேசித்து எனது அந்த ஹிருதயத்தில் தோஷங்களாக இருப்பவற்றை யெல்லாம் நீக்கி என்னுடைய தலையின்மீது ஸ்ரீபாத முத்திரையை ஏறியருளப் பண்ணினுன்! (போது—அறிவுக்கு, இல்—இடமான.) ... (8)

451 உறகலுறகலுறகல் ஒண்சுடராழியேசங்கே *
அறவெறிநாந்தகவாளே அழகியசார்ங்கமேதண்டே *
இறவுபடாமலிருந்த எண்மருலோகபாலீர்காள் *
பறவையரையாவுறகல் பள்ளியறைகுறிக்கொண்மின். (9)

அழகிய தேஜஸ்ஸையுடைய திருவாழியாழ்வானே! ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானே! ஆச்ரிதவிரோதிகளின் உடல் அறும்படி எம்பெருமானுல் வீசப்படுகிற நந்தகவாளே! சார்ங்கமென்கிற தநுஸ்ஸே! கௌமோதகி என்கிற கதையே! அஷ்டதிக்குப் பாலகர்களே! தப்பிப் போகாமல் உறங்காதிருங்கள், உறங்காதிருங்கள், உறங்காதிருங்கள்; பறவைகளுக்குத் தலைவனுன பெரிய திருவடியே! உறங்காதிரு; நீங்கள் எல்லாரும் விழித்துக்கொண்டிருந்து, எம்பெருமானுக்குத் திருப்பள்ளி யறையாகிய என் சரீரத்தை நோக்கிக் காத்திடுங்கள்: (9)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

452 அரவத்தமளியினேடும் அழகியபாற்கடலோடும் *
அரவிந்தப்பாவையுந்தானும் அகம்படிவந்துபுகுந்து *
பரவைத்திரைபலமோதப் பள்ளிகொள்கின்றபிரானை *
பரவுகின்றன்விட்டுசித்தன் பட்டினங்காவற்பொருட்டே. (10)

திருவனந்தாழ்வானகிற படுக்கையோடும் அழகிய திருப்பாற்கடலோடுங்கூடப் பெரியபிராட்டியாரும் தானுமாக எழுந்தருளி எனது உடம்பாகிற ஸ்தானத்தில் பிரவேசித்து, அந்தத் திருப்பாற்கடலினுடைய பல அலைகள் தளும்பத் திருக்கண் வளர்ந்தருளா நின்ற எம்பெருமானைப் பெரியாழ்வார் ஆத்மரக்ஷண நிமித்தமாகப் போற்றுகின்றார். ... ... (10)

அடிவரவு :—நெய் சித்திர வயிற்றில் மங்கிய மாணி உற்ற கொங்கை ஏதம் உறகல் அரவத் துக்க.

ஆழ்வாரெம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து—மூன்றுந்திருமொழி—துக்கச்சுழலை

(திருமாலிருஞ்சோலை மங்களாசாஸனப் பதிகம்)

453 துக்கச்சுழலையைச்சூழ்ந்துகிடந்த வலையையறப்பறித்து *
புக்கினிற்புக்குன்னைக்கண்டுகொண்டேன் இனிப்போகவிடுவதுண்டே *
மக்களறுவரைக்கல்லிடைமோத இழந்தவள்தன்வயிற்றில் *
சிக்கனவந்துபிறந்துநின்றாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (1)

முன்பிறந்த ஆறு பிள்ளைகளையும் கம்ஸன் மோதிமுடிக்க, அதனல் அம்மக்களறுவரையும் இழந்தவளான தேவகியினுடைய திருவயிற்றில் சடக்கென வந்துபிறந்தவனே! திருமாலிருஞ்சோலைப் பெருமானே! நீ புகுந்த விடங்களிலெல்லாம் நானும் புகுந்து உன்னை ஸேவித்து, துக்கங்களாகிற சுழலாற்றைச் சுற்றுமதிளாகக் கொண்டிருக்கிற வலைபோன்ற சரீரத்தில் நசையைப் போக்கிக்கொண்ட அடியேன் உன்னைப் பிரயாஸப்பட்டுப் பெற்றபின்பும் வேறிடத்திற்குப் போகும்படி இனி விடுவதுமுண்டோ? ... ... (1)

454 வளைத்துவைத்தேனினிப்போகலொட்டேன் உன்றனிந்திரஜாலங்களால் *
ஒளித்திடில்நின்திருவாணைகண்டாய் நீயொருவர்க்கும்மெய்யனல்லை *
அளித்தெங்கும்நாடுநகரமும் தம்முடைத்தீவினைதீர்க்கலுற்று *
தெளித்துவலஞ்செய்யுந்தீர்த்தமுடைத் திருமாலிருஞ்சோலையெந்தாய். (2)

காட்டிலுள்ளாரும் நகரத்திலுள்ளாரும் மற்றெங்குமுள்ளவர்களும் நெருங்கித் தங்கள் தங்களுடைய துஷ்டகர்மங்களை ஒழிப்பதில் விருப்புற்று ஆரவாரித்துக்கொண்டு பிரதக்ஷிணம் செய்யப்பெற்ற தீர்த்தவிசேஷங்களையுடைய திருமாலிருஞ்சோலையில் எழுந்தருளியிருக்கிற எம்பெருமானே! உன்னைச் சூழ்த்துக்கொண்டேன்; இனிமேல் நீ வேறிடந் தேடிப்போவதை நான் ஸம்மதிக்கமாட்டேன்; உனக்கு உள்ள மாயச் செய்கையில் வல்லமையினல் உன்னை நீ ஒளித்துக்கொண்டால் உனது பிராட்டியின்மேலாணை; அப்படி ஒளிக்கலாகாது; நீ ஒருவரிடத்திலும் உண்மையான உக்தியனுஷ்டானங்களையுடையவனல்லை. (அங்ஙனம் என்னிடத்திலுமிருக்கலாகாது.) ... ... (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

455 உனக்குப்பணிசெய்திருக்குந்தவமுடையேன் இனிப்போயொருவன்
தனக்குப்பணிந்து * கடைத்தலைநிற்கை நின்சாயையழிவுகண்டாய் *
புனத்தினைகிள்ளிப்புதுவவிக்காட்டி உன்பொன்னடிவாழ்கவென்று *
இனக்குறவர்புதியதுண்ணும் எழில்மாலிருஞ்சோலையெந்தாய். (3)

திரள் திரளாய்ச் சேர்ந்துள்ள குறவர்கள் புனத்திலுண்டான தினைகளைப் பறித்து அதை எம் பெருமானுக்குப் புதிய ஹவிஸ்ஸாக அமுதுசெய்யப் பண்ணி அதற்காகப் பிரயோஜநாந்தரத்தை விரும்பாமல் "உன் செவ்வடி செவ்வி திருக்காப்பு" என்று மங்களாசாஸநம் பண்ணிக் கொண்டு புதியதாகிய அத்தினையை உண்ணுதற்கு இடமான திருமாலிருஞ்சோலைமலையிற் பெருமானே! உனக்குக் கைங்கரியம் பண்ணிக்கொண்டிருக்கையாகிற உனது அநுக்ரஹத்தைப் பெற்றுள்ள அடியேன் இனிமேல் புறம்பே போய் ஒரு க்ஷுத்ரபுருஷனைப்பற்றி அவனுடைய விட்டுவாசலில் கதிதேடி நிற்பதானது உன்னுடைய மேன்மைக்குக் குறையன்றோ? (3)

456 காதம்பலவுந்திரிந்துழன்றேற்கு அங்கோர்நிழலில்லைநீரில்லை * உன்
பாதநிழலல்லால்மற்றோருயிர்ப்பிடம் நானெங்குங்காண்கின்றிலேன் *
தூதுசென்றாய்குருபாண்டவர்க்காய் அங்கோர்பொய்ச்சுற்றம்பேசிச்சென்று *
பேதஞ்செய்தெங்கும்பிணம்படுத்தாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (4)

குருவம்சத்திற் பிறந்த பாண்டவர்களுக்காக ஒரு பொய்யுறவைப் பாராட்டிக்கொண்டு துரியோதனாதியரிடத்துத் தூதுபோய் இரண்டு வகுப்பினர்க்கும் கலஹத்தை மூட்டி (பின்புபாரத யுத்தம் கோடித்து, அந்த யுத்தத்தில்) துரியோதனாதியரில் ஒருவர் தப்பாமல் பிணமாக்கி யொழித்தருளினவனே! திருமாலிருஞ்சோலை யெந்தாய்! பலகாத தூரமளவும் திரிந்து அலைந்த எனக்கு அவ்விடங்களில் ஒதுங்குகைக்கு ஒரு நிழலுங் கண்டதில்லை; அன்றியும் (தாபமாற்றக் கடவதான) தண்ணீரும் கண்டதில்லை; ஆராய்ந்து பார்த்தவிடத்தில் உனது திருவடி நிழலொழிய மற்றொரு ஆச்வாஸ ஹேதுவான இடத்தை நான் ஓரிடத்தும் காண கிறேனில்லை. (பா. நீருமிலே.) ... ... (4)

457 காலுமெழாகண்ணநீரும்நில்லா உடல்சோர்ந்துநடுங்கி * குரல்
மேலுமெழாமயிர்க்கூச்சுமறா எனதோள்களும்வீழ்வொழியா *
மாலுகளாநிற்குமென்மனமே உன்னைவாழத்தலைப்பெய்திட்டேன் *
சேலுகளாநிற்கும்நீள்சுனைசூழ் திருமாலிருஞ்சோலையெந்தாய். (5

மீன்கள் துள்ளி விளையாடும் பெரிய தடாகங்களாலே சூழப்பெற்ற திருமாலிருஞ்சோலைமிற் பெருமானே! எனக்கு உன்னிடத்துள்ள அன்பு மிகுதியினால் என்னுடைய கால்களும் வைத்த விடத்தைவிட்டுப் பேர்கின்றனவில்லை; கண்ணீரும் உள்ளே தங்குகின்றனவில்லை; சரீரமானது கட்டுக்குலைந்து நடுங்கியதனால் குரலும் கிளம்புகின்றதில்லை; மயிர்க்கூச்செறிதலும் ஒழிகின்றதில்லை; தோள்களும் விழுந்துபோவதில் நின்றும் ஒழிந்தனவில்லை [ஒரு வியாபாரமும் செய்யமுடியாமல் விழுந்தொழிந்தன]; எனது நெஞ்சானது வியாமோஹத்தை அடைந்திரா நின்றது; இப்படிகளால் வாழ்வுறும்படி உன்னைச் சேர்ந்துவிட்டேன். ... ... (5)

458 எருத்துக்கொடியுடையானும் பிரமனுமிந்திரனும் * மற்று
மொருத்தருமிப்பிறவியென்னும்நோய்க்கு மருந்தறிவாருமில்லை *
மருத்துவனாய்நின்றமாமணிவண்ணா மறுபிறவிதவிரத்
திருத்தி * உன்கோயில்கடைப்புகப்பெய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (6)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருமாலிருஞ்சோலை யெந்தாய்! வ்ருஷபத்வஜனான ருத்திரனும் ப்ரஹ்மாவும் தேவேந்திரனும் மற்றுள்ள எந்தத் தேவரும் இந்த ஸம்ஸாரமாகிற வியாதிக்கு மருந்து அறிய வல்லவரல்லர்; இப்பிறவி நோய்க்கு மருந்தை அறியுமவனான நீலமணி வண்ணனே! எனக்கு ஜந்மாந்தரம் நேராதபடி அடியேனை சிக்ஷித்து உன் கோயில் வாசலில் வாழும்படி அருள்புரிய வேணும். (6)

459 அக்கரையென்னுமனத்தக்கடலுளழுந்தி உன்பேரருளால் *
இக்கரையேறியிளைத்திருந்தேனை அஞ்சேலென்றுகைகவியாய் *
சக்கரமுந்தடக்கைகளும் கண்களும்பீதகவாடையொடும் *
செக்கர்நிறத்துச்சிவப்புடையாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (7)

திருவாழியாழ்வானும் பெரிய திருக்கைகளும் திருக்கண்களும் திருப்பீதாம்பரமும்செவ்வானத்தின் நிறம்போன்ற நிறத்தையுடையவைகளாயிருக்கப் பெற்றவனே! ஸம்ஸாரமென்கிற அநர்த்த ஸமுத்ரத்திலுள்ளே நெடுநாள் அழுந்திக்கிடந்து அதில் வருத்தப்பட்டுக் கொண்டிருந்து பின்பு உனது பரம கிருபையினால் இக்கரையேறின அடியேனைக்குறித்து அபயப்ரதான முத்திரையைக் காட்டியருளவேணும். ... ... (7)

460 எத்தனைகாலமுமெத்தனையூழியும் இன்றொடுநாளையென்றே *
இத்தனைகாலமும்போய்க்கிறிப்பட்டேன் இனியுன்னைப்போகலொட்டேன் *
மைத்துனன்மார்களைவாழ்வித்து மாற்றலர்நூற்றுவரைக்கெடுத்தாய் *
சித்தம்நின்பாலதறிதியன்றே திருமாலிருஞ்சோலையெந்தாய். (8)

உனது அத்தை பிள்ளைகளான பாண்டவர்களை வாழச்செய்து துரியோதநாதியர் நூறுபேரையும் ஒழித்தருளினவனே! இன்றைக்கு, நாளைக்கு என்று சொல்லிக்கொண்டே கழித்தகாலம் எத்தனை காலமும் எத்தனை கல்பங்களுமுண்டோ, இத்தனை காலமுழுவதும் ஸம்ஸாரமாகிற யந்திரத்தில் அகப்பட்டுக்கொண்டிருந்தேன்; அதில் நின்றும் விடுபட்டு ஞானம்பெற்ற இன்றுமுதலாக உன்னை வேறிடத்திற்குப் போக ஸம்மதிக்க என்னால் முடியுமோ? எனது நெஞ்சானது உன்திறத்தில் ஈடுபட்டுள்ளமையை அறிகின்றாயன்றோ? ... ... (8)

461 அன்றுவயிற்றிற்கிடந்திருந்தே அடிமைசெய்யலுற்றிருப்பன் *
இன்றுவந்திங்குன்னைக்கண்டுகொண்டேன் இனிப்போகவிடுவதுண்டே *
சென்றங்குவாணனையாயிரந்தோளுந் திருச்சக்கரமதனால்
தென்றி * திசைதிசைவீழச்செற்றாய் திருமாலிருஞ்சோலையெந்தாய். (9)

சோணிதபுரத்திற்கு எழுந்தருளி பாணாஸுரனுடைய ஆயிரந்தோள்களும் திக்குக்கள்தோறும் சிதறிவிழும்படி சக்ராயுதத்தினால் நெருக்கியருளினவனே! கர்ப்பவாஸம் பண்ணுகையாகிற அன்று முதற்கொண்டே உனக்குக் கைங்கரியம் பண்ணுவதில் அபிநிவேசங் கொண்டிருந்த நான் இப்போது இத்திருமாலிருஞ்சோலை மலையில் வந்து உன்னை ஸேவித்துக் கொண்டேன்; இனிப்போக விடுவது உண்டோ? இல்லை. ... ... (9)

462 சென்றுலகங்குடைந்தாடுஞ்சுனைத் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் * அடிமேலடிமைத்திறம் நேர்படவிண்ணப்பஞ்செய் *
பொன்திகழ்மாடம்பொலிந்துதோன்றும் புதுவைக்கோன்விட்டுசித்தன் *
ஒன்றினோடொன்பதும்பாடவல்லார் உலகமளந்தான்தமரே. (10)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

உலகத்தாரெல்லாரும் தங்கள் தங்களிருப்பிடத்தில் நின்றும் போய் அவகாஹித்து ஸ்நாடப் பெற்ற தீர்த்தங்களையுடைய திருமாலிருஞ் சோலைமலையிற் பெருமானுடைய திருவடிகளில் கைங்கரிய விஷயமாகப் பெரியாழ்வார் பொருத்தமாக அருளிச்செய்த இப்பத்துப் பாசுரங்களையும் பாடவல்லவர்கள் திரிவிக்கிரமனான எம்பெருமானுக்கு சேஷபூதர்களாகப் பெறுவர். (10)

அடிவரவு :—துக்க வளைத்து உனக்கு காதம் காலும் எருத்து அக்கரை எத்தனை அன்று சென்று சென்னி.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஐந்தாம்பத்து—நான்காந்திருமொழி—சென்னியோங்கு

(ஆழ்வார் தம்முடைய க்ருதக்ருத்யத்வத்தைச் சொல்லித் தலைக்கட்டுதல்.)

463 சென்னியோங்கு தண்திருவேங்கடமுடையாய் * உலகு
தன்னைவாழநின்றநம்பி தாமோதராசதிரா *
என்னையுமென்னுடைமையையும் உன்சக்கரப்பொறியொற்றிக்கொண்டு *
நின்னருளேபுரிந்திருந்தேன் இனியென்திருக்குறிப்பே. (1)

கொடுமுடியானது ஆகாசத்தளவும் உயர்ந்திருக்கப்பெற்ற குளிர்ந்த திருவேங்கட மலைக்கு ஸ்வாமியே! உலகத்தவர்களை வாழ்விப்பதற்காக நின்ற பெருமானே! தாமோதரனே! சதுரனே! எனது ஆத்துமாவுக்கும் என் உடைமையான சரீரத்திற்கும் உன்னுடைய திருவாழித் திருவிலச்சினையை இடுவித்து உன்னுடைய கருணையையே விரும்பியிரா நின்றேன்; இப்படியான பின்பு என்மீது உன் திருவுள்ளக்கருத்து எதுவாயிருக்கின்றது? ... (1)

464 பறவையேறுபரம்புருடா நீயென்னைக்கைக்கொண்டபின் *
பிறவியென்னுங்கடலும்வற்றிப் பெரும்பதமாகின்றதால் *
இறவுசெய்யும்பாவக்காடு தீக்கொளீஇவேகின்றதால் *
அறிவையென்னுமமுதவாறு தலைப்பற்றிவாய்க்கொண்டதே. (2)

பெரிய திருவடிமேல் ஏறுமவனான புருஷோத்தமனே! நீ என்னை ஆட்படுத்திக்கொண்ட பிறகு ஸம்ஸாரமாகிற ஸமுத்ரமும் வறண்டுபோய் அதனால் பெரிய பதவியைப் பெற்றேனாகிறேன்; இவ்வாத்துமாவை முடிக்கிற பாப ஸமூஹமானது நெருப்புப்பட்டு வெந்திட்டது; ஞானமாகிற அம்ருதநதியானது மேன்மேலும் பெருகிச் செல்லா நின்றது. ... (2)

465 எம்மனாவென்குலதெய்வமே யென்னுடைநாயகனே *
நின்னுளேனாய்ப்பெற்றநன்மை யிவ்வுலகினிலார்பெறுவார் *
நம்மன்போலேவீழ்த்தமுக்கும் நாட்டிலுள்ளபாவமெல்லாம் *
சும்மெனாதேகைவிட்டோடித் தூறுகள்பாய்ந்தனவே. (3)

எமக்குத் தலைவனே! என் குடிக்குப் பரதேவதையானவனே! எனக்கு நாதனானவனே! அடியேன் உன் அபிமானத்தில் ஒதுங்கினவனாய்ப் பெற்ற நன்மையை இந்த உலகத்தினுள் மற்று யார் தாம் பெறுவர்? பூதப்ரேத பிசாசங்களைப்போல் உருத்தெரியாமல் ஒளிந்து வந்து ஓடித் தள்ளி மேலே அமுக்கா நின்றுள்ள உலகத்திலுள்ள எல்லாருடைய பாவங்களும் மூச்சுவிடவும் மாட்டாமல் ஸ்வாஸமாக விட்டிட்டு ஓடிப்போய்ப் புதர்களில் ஒளிந்துகொண்டன. (3)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

466 கடல்கடைந்தமுதங்கொண்டு கலசத்தைநிறைத்தாப்போல் *
உடலுருகிவாய்திறந்து மடுத்துன்னைநிறைத்துக்கொண்டேன் *
கொடுமைசெய்யுங்கூற்றமும் என்கோலாடிகுறுகப்பெறா *
தடவரைத்தோட்சக்கரபாணீ சார்ங்கவிற்சேவகனே. (4)

பெரிய மலைபோன்ற தோள்களையுடைய சக்கரபாணியே! சார்ங்கத்தை வில்லாகக்கொண்ட வீரனே! திருப்பாற்கடலைக் கடைந்து அம்ருதத்தை யெடுத்துக் கலசத்தில் நீ நிறைத்தது போல அடியேன் உடல் உருகப்பெற்று வாயைத் திறந்துகொண்டு ஆராவமுதாகிய உன்னை உட்கொண்டு தேக்கிக்கொண்டேன்; இனி, கொடிய தண்டங்களை நடத்துமவனான யமனும் எனது செங்கோல் செல்லுமிடங்களில் அணுகவல்லவனல்லன். ... ... (4)

467 பொன்னைக்கொண்டுரைகல்மீதே நிறமெழவுரைத்தாற்போல் *
உன்னைக்கொண்டென்னாவகம்பால் மாற்றின்றியுரைத்துக்கொண்டேன் *
உன்னைக்கொண்டென்னுள்வைத்தேன் என்னையுமுன்னிலிட்டேன் *
என்னப்பாவென்னிருடீகேசா என்னுயிர்காவலனே. (5)

எனக்குத் தந்தையானவனே! எனது இந்திரியங்களை உன் வசப்பட்டொழுகும்படி நியமிக்க வல்லவனே! என் ஆத்மாவை அந்யசேஷமாகாதபடி காக்கவல்லவனே! பொன்னை நிறமறிய [நிறத்தைப் பரீக்ஷிப்பதற்காக] உரைகல்லில் இட்டு உரைப்பதுபோல உன்னை என் நாவி னுட்கொண்டு மாற்று அழியும்படி உரைத்துக்கொண்டேன். (யோகிகட்கும் அரியனான) உன்னை என் நெஞ்சினுள் அமைத்தேன்; (நீசனான) அடியேனையும் உனக்குச் சேஷப்படுத் தினேன். ... ... (5)

468 உன்னுடையவிக்கிரமம் ஒன்றொழியாமலெல்லாம் *
என்னுடையநெஞ்சகம்பால் சுவர்வழியெழுதிக்கொண்டேன் *
மன்னடங்கமழுவலங்கைக்கொண்ட இராமநம்பீ *
என்னிடைவந்தெம்பெருமான் இனியெங்குப்போகின்றதே. (6)

துஷ்ட க்ஷத்திரியர்கள் அழியும்படி மழுப்படையை வலக்கையில் கொண்ட பரசுராமனாய்த் திரு வவதரித்த பிரானே! உன்னுடைய வீரச்செயல்களில் ஒன்று தப்பாமல் எல்லாவற்றையும் என்னுடைய நெஞ்சினுள்ளே சுவரில் சித்திரமெழுதுவதுபோல எழுதிக்கொண்டேன்; எம் பெருமானே! என் பக்கலில் எழுந்தருளி இனிமேல் போவது வேறெங்கு? ... (6)

469 பருப்பதத்துக்கயல்பொறித்த பாண்டியர்குலபதிபோல் *
திருப்பொலிந்தசேவடி யென்சென்னியின்மேற்பொறித்தாய் *
மருப்பொசித்தாய்மல்லடர்த்தாய் என்றென்றுன்வாசகமே *
உருப்பொலிந்தநாவினேனை உனக்குரித்தாக்கினையே. (7)

மஹாமேரு பர்வதத்தில் (தனது) மகரகேதுவை நாட்டின பாண்டியவம்சத்து அரசனைப் போல், அழகிய திருவடிகளை என் தலையின்மீது அடையாளமாக நாட்டியருளினவனே! என் றும், குவலயாபீட யானையின் கொம்பை முறித்தவனே! என்றும், மல்லரை நிரஸித்தவனே! என்றும் இவ்வாறான உனது செயல்களுக்கு வாசகமான திருநாமங்களின் அநுஸந்தாநத்தி னாலேயே தழும்பேறின நாக்கையுடைய அடியேனை உனக்கு அநந்யார்ஹசேஷனாக ஆக்கிக் கொண்டாயே! ... ... (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

470 அனந்தன்பாலுங்கருடன்பாலும் ஐதுநொய்தாகவைத்து * என்
மனந்தனுள்ளேவந்துவைகி வாழச்செய்தாயெம்பிரான் *
நினைந்தெனுள்ளேநின்றுநெக்குக் கண்களசும்பொழுக *
நினைந்திருந்தேசிரமந்தீர்ந்தேன் நேமிநெடியவனே. (8)

திருவாழியாழ்வானையுடைய ஸர்வாதிகளே! திருவனந்தாழ்வானிடத்திலும் பெரிய திருவடியிடத்திலும் அன்பை மிகவும் அற்பமாக வைத்து எனது ஹ்ருதயத்தினுள்ளே வந்து பொருந்தி என்னை வாழ்வித்தருளினாய்; இப்படி வாழ்வித்த உன்னை என் நெஞ்சில் அநுஸந்தித்துக்கொண்டு அதனால் நெஞ்சு சிதிலமாகப்பெற்றுக் கண்களினின்றும் நீர் பெருகும்படி நீ செய்த நன்றிகளை அநுஸந்தித்துக்கொண்டே இளைப்பாறப் பெற்றேன். ... (8)

471 பனிக்கடலிற்பள்ளிகோளைப் பழகவிட்டோடிவந்து * என்
மனக்கடலில்வாழவல்ல மாயமணாளநம்பி *
தனிக்கடலேதனிச்சுடரே தனியுலகேயென்றென்று *
உனக்கிடமாயிருக்க என்னையுனக்குரித்தாக்கினையே. (9)

குளிர்ந்த திருப்பாற்கடலில் பள்ளிகொள்ளுதலை மறந்துவிட்டு அங்கு நின்றும் ஓடிவந்து என்னுடைய ஹ்ருதயமாகிற கடலில் வாழ வல்லவனும் ஆச்சரிய சக்தியை யுடையவனும் பெரிய பிராட்டியார்க்குக் கணவனுமான பெருமானே! ஒப்பற்ற திருப்பாற்கடலென்றும் ஒப்பற்ற ஆதித்ய மண்டலமென்றும் ஒப்பற்ற பரமபதமென்றும் சொல்லப்படுகிற இவை உனக்கு ஏற்ற வாஸஸ்தாநமாயிருக்கச் செய்தேயும் அவற்றை உபேக்ஷித்துவிட்டு மிகவும் நீசனான அடியேனை உனக்கு உரிய வாஸஸ்தாநமாக அமைத்துக்கொண்டருளினையே இஃது என்ன ஸௌசீல்யம்! ... ... (9)

472 தடவரைவாய்மிளிர்ந்துமின்னுந் தவளநெடுங்கொடிப்போல் *
சுடரொளியாய்நெஞ்சினுள்ளே தோன்றுமென்சோதிநம்பி *
வடதடமும்வைகுந்தமும் மதிள்துவராவதியும் *
இடவகைகளிகழ்ந்திட்டு என்பாலிடவகைகொண்டனையே. (10)

பெரிய மலையில் மிகவும் விளங்கா நின்றுள்ள பரிசுத்தமான பெரியதொரு கொடிபோல, மிக்க தேஜஸ் ஸ்வரூபியாய் எனது ஹ்ருதயத்தினுள் விளங்கா நின்றுள்ள ஒளியினால் நிரம்பியவனே! வடதிசையிலுள்ள திருப்பாற்கடலும் ஸ்ரீ வைகுண்டமும் மதில்களையுடைய த்வாரகையுமாகிற இடங்களையெல்லாம் உபேக்ஷித்துவிட்டு, என்னிடத்தில் வாஸஸ்தாந புத்தியைப் பண்ணியருளினையே! இஃது என்ன வாத்ஸல்யம்'! ... ... (10)

473 வேயர்தங்கள்குலத்துதித்த விட்டுசித்தன்மனத்தே *
கோயில்கொண்டகோவலனைக் கொழுங்குளிர்முகில்வண்ணனை *
ஆயரேற்றையமரர்கோவை அந்தணர்தமமுதத்தினை *
சாயைபோலப்பாடவல்லார்தாமும் அணுக்கர்களே. (11)

வேயர்களுடைய வம்சத்திலே அவதரித்த பெரியாழ்வாருடைய ஹ்ருதயத்தில் திருக்கோயில் கொண்டெழுந்தருளி யிருக்கிற கோபாலனும், காளமேகம் போன்ற நிறத்தையுடையவனும், இடையர்களுக்குத் தலைவனும், நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனும், ஸநகர் முதலிய மஹர்ஷிகளுக்கு அம்ருதம்போல் இனியனுமான எம்பெருமானை இத்திருமொழியினால் பாடவல்லவர்கள் நிழல்போல எம்பெருமானை எப்போதும் அணுகியிருக்கப் பெறுவர்கள். ... (11)

அடிவரவு :—சென்னி பறவை எம்மனு கடல் பொன் உன் பருப்பதம் அனந்தன் பனி தடவரை வேயர் மார்கழி.

முதலாயிரத்தில் பெரியாழ்வார் திருமொழி முற்றிற்று

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

முதலாயிரத்தில் மூன்றாவது பிரபந்தம்

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

திருப்பாவை

(தனியன்கள்)

நீளாதுங்கஸ்தநகிரிதடீஸுப்தமுத்போத்ய க்ருஷ்ணம்
பாரார்த்யம் ஸ்வம் ச்ருதிசத சிரஸ்ஸித்தமத்யாபயந்தீ,
ஸ்வோச்சிஷ்டாயாம் ஸ்ரஜி நிகளிதம் யா பலாத்க்ருத்ய புங்க்தே
கோதா தஸ்யை நம இதமிதம் பூயஏவாஸ்து பூய:

நப்பின்னைப் பிராட்டியினது உயர்ந்த திருமுலைத்தடங்களாகிற மலைச் சாரலில் கண்வளர்ந் தருளுமவனும், தன்னால் சூடிக்களையப்பட்ட மாலையிலே விலங்கிடப்பட்டவனுமான கண்ண பிரானைத் திருப்பள்ளி யுணர்த்தி, பற்பல வேதங்களின் தலையான பாகங்களாலே தேறின [வேதாந்தஸித்தமான] தன்னுடையதான பாரதந்திரியத்தை அறிவியாநின்றவளாய் பலாத் காரம் செய்து யாவளொரு ஆண்டாள் அக்கண்ணபிரானை அநுபவிக்கிறாளோ அப்படிப்பட்ட பெருமையையுடையவளான ஆண்டாளின் பொருட்டுக் காலதத்துவமுள்ளதனையும் இந்த இந்த நமஸ்காரமானது ஆயிடுக. ... ... *

அன்ன வயற்புதுவை யாண்டா ளரங்கற்குப் பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையாற்
பாடிக்கொடுத்தாள் நற்பாமாலை பூமாலை சூடிக்கொடுத்தாளைச் சொல்லு.

ஹம்ஸங்கள் உலாவுகின்ற வயல்களையுடைய ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்த 'ஆண்டாள்' என்னும் திருநாமத்தை யுடையவளும், ஆராய்ந்து அருளிச் செய்யப்பட்ட திருப்பாவை யென்னும் பல பாசுரங்களை இனிய இசையுடன் பாடி அவற்றை ஸ்ரீ ரங்கநாத னுக்கு விலக்ஷணமான பாமாலையாக ஸமர்ப்பித்தவளும், செண்பகம் முதலிய பூக்களினாலாகிய மாலையைத் தான் முந்துறக் குழலிற் சூடிப் பிறகு ரங்கநாதனுக்கு ஸமர்ப்பித்தவளுமான கோதையை அநுஸந்திக்கக் கடவை. ... ... *

சூடிக்கொடுத்த சுடர்க்கொடியே தொல்பாவை பாடி யருளவல்ல பல்வளையாய்—நாடிநீ
வேங்கடவற் கென்னை விதியென்ற விம்மாற்றம் நாங்கடவா வண்ணமே நல்கு.

பூமாலையைத் திருக்குழலிற் சூடி, அதனை எம்பெருமானுக்கு ஸமர்ப்பித்த தேஜோமய மான கொடி போன்றவளே! அநாதி ஆசாரஸித்தமான நோன்பைத் திருப்பாவை முகமாக்க் கூறி அடியார் திறத்துக் கருணைபுரிய வல்லவளும் பல வளைகளை அணிந்துள்ளவளுமான கோதாய்! நீ மன்மதனை நாடி "காமதேவா! நீ என்னைத் திருவேங்கடமுடையானுக்கு வாழ்க் கைப்படுத்தவேணும்" என்று காமனைக் குறித்துக் கூறிய கூற்றை யாம் மீறுதொழியுமாறு அருள்புரிவாயாக. ... ... *

தனியன் உரை முற்றுப்பெற்றது

ஆண்டாள் திருவடிகளே சரணம்

---

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

திருப்பாவையின் உரை அவதாரிகை

ஆழ்வார்கள் தாங்கள் ஸம்ஸாரத்திற் கிடந்துறங்கா நிற்க, எம்பெருமான் தானுகவந்து அவர்களை உணர்த்த,பிறகு உணர்ந்தனர் அவர்கள். ஆண்டாள் அங்ஙனன்றி மணத்து டன் முளைக்கும் திருத்துழாய் போன்று எம்பெருமான் திறத்து ஆராதகாதலுடன் அவ தரித்து இவள்தானே அவ்வெம்பெருமான் ஸந்நிதியிற் சென்று "உம்பர் கோமானே! உறங் காதெழுந்திராய்" என்று அவனை உணர்த்தினளாதலால் ஆழ்வார்களினும் ஆண்டாளுக் குள்ள வைலக்ஷண்யம் சொல்லாற்கூறும்பரமன்று. அன்றியும், ஆடவரை ஆடவர்கண்டு காமுறுவதிற் காட்டிலும் பெண்டிர்கண்டு காமுறுதல் பள்ளமடையா யிருக்குமென்பது உல கத்து எளிதிலுணர்ந்த விஷயமாதலால், பகவத் விஷயத்தில் ஆழ்வார்களின் காமம்போல் மேட்டு மடையா யிருக்கையன்றியே இவ்வாண்டாளுடைய காமம் பள்ளமடையா யிருக்கையா கிற மற்றொரு வைலக்ஷண்யமும் உற்று நோக்கத்தக்கது. ஆழ்வார்கள், காமத்தின் மெய்ப் பாட்டுக்காகப் பெண்ணுடை உடுத்துப் பேசினர்கள்; இவட்கு அங்ஙன் ஆரோபித்துக் கொள்ளவேண்டிய ஆகாரமொன்றுமில்லையே.

இங்ஙன் அமைந்த அதிசய விசேஷங்களுடன் வளர்ந்தருளாநின்ற சூடிக்கொடுத்த சுடர்க்கொடி ஒரு கொள் கொம்புடன் கூடவேண்டும் பருவமாய், அதற்குரிய ஞானபக்திகள் மீதூர்ந்து செல்லப்பெற்று "மானிடவர்க்கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்று மாநுஷ நாற்றத்தைப் பொறுக்கமாட்டாதே * அங்கைத்தலத்திடையாழிகொண்டானவன் முகத்தன்றி விழியாதாளாய், ஸ்ரீவில்லிபுத்தூரில் எழுந்தருளியிராநின்ற வடபெருங் கோயி லுடையானுடனே தழுவி முழுசிப் பரிமாறப் பெறவேணுமென்று விரும்பிச்செல்ல, அவ்விருப் பத்திற்கிடாக வடதளசாயி முகங்காட்டாமையாலே மிகவும் மனம் நொந்து "இவ்வெம்பெரு மானோடு கலவிபெற்றுக் களித்தார் ஆரேனுமுண்டோ?" என்று ஆராய்ந்தவிடத்து, "திரு வாய்ப்பாடியிலுள்ள அஞ்சுலக்ஷங்குடி ஆயர்மங்கைகள் இவனுடன் கலந்து களிக்கப்பெற் ரூர்கள்" என்றுணர்ந்து, "அக்கலவி, காலாந்தரத்தில் நடந்ததொன்றுகையாலே அதில் நமக்கு அந்வயமின்றியொழிந்தது. இனி, அவன் உலாவிப்போன அடிச்சுவடும், அவனும் பெண்களுமாகத் திளைத்த யமுநா நதியும், அவன் கோநிரைகாக்க எடுத்த கோவர்த்தனகிரி யும் கிடந்தனவாகில், அவற்றைக் கொண்டாகிலும் தரிப்போம்" என்று அங்குச் செல்ல நினைக்க, பகவத் விரஹத்தாலே உடல் மெலிவுற்ற இவ்வாண்டாள் அவ்வளவு செல்லமாட் டாதாளாய், "ஜனகராஜன் தன் மகளான ஸீதைக்கு வில்முறி என்று ஒரு அவதி வைத்தாப் போலவும், கும்பர் தம் மகளான நப்பின்னைப்பிராட்டிக்கு ஏறு தழுவுதல் என்று ஒரு அவதி வைத்தாப்போலவும் நம் தந்தை நமக்கு ஓர் அவதியும் கற்பிக்கவில்லையே! இனி நாம் வாழ் வது எங்ஙனேயோ?" என்று சிந்தித்துத் தளர்ந்திருக்க; அவ்வளவில் சிலதார்மிகர்கள்— "திருவாய்ப்பாடியிற் கண்ணபிரான் ஆயர்மங்கைகளுடன் *குரவைகோத்து விளையாடும் போது ஆநந்தரஸம் தலைப்பற்றி வாய்க்கொண்டு செல்ல, 'இனி நற்கேடு கெடலாகாது' என்று அந்த ரஸம் மாறுகைக்காகக் கண்ணபிரான் பெண்களைப் பிரிந்து மறைந்திருக்க, அப் போது அப்பெண்பிள்ளைகள் தங்கள் ஆற்றாமையாலே, 'இனி எவ்வகையாலாயினும் நாம் தரிக்கவேணும்' என்று, ஓர் ஆய்ச்சி 'நான் காளியநாகத்தின் வலியை அடக்குகிறேன்காண்' என்பது. மற்றொருத்தி 'நான் தேநுகாஸுரனைத் தொலைத்தொழிக்கிறேன்காண்' என் பது, வேறொருத்தி நான் பூதனை முலையைச் சுவைத்துண்ணுகிறேன் காண் என்பதாய் இப் படி அனைவரும் தாங்கள் கண்ணபிரான்போல அநுகாரஞ்செய்து ஒருவாறு துயர் தீர்ந்து தரித்தார்கள்" என்று சொல்லக்கேட்ட ஆண்டாள் தானும் அவ்வாய்ச்சிகளைப்போல் அநு கரித்துத் தரிக்கும்படியைக் கூறுவது திருப்பாவை என்கிற இத்திவ்யப் பிரபந்தம். *

அவதாரிகை முற்றுப்பெற்றது

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆண்டாள் திருவடிகளே சரணம்

திருப்பாவை

474 மார்கழித்திங்கள் மதிநிறைந்தநன்னாளால் * நீராடப்போதுவீர் போதுமினோநேரிழையீர் *
சீர்மல்குமாய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள் * கூர்வேற்கொடுந்தொழிலன் நந்தகோபன்குமரன் *
ஏரார்ந்தகண்ணி யசோதை யிளஞ்சிங்கம் * கார்மேனிச்செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான் *
நாராயணனே நமக்கேபறைதருவான் * பாரோர்புகழப் படிந்தேலோரெம்பாவாய். (1)

செல்வம் நிறைந்துள்ள திருவாய்ப்பாடியில் கைங்கர்ய ஸம்பத்தையும் இளம் பருவத்தையுமுடைய பெண்காள்! விலக்ஷணமான பூஷணங்களை அணிந்துள்ளவர்களே! மாதங்களிற் சிறந்த மார்கழி மாஸமும் பூர்ண சந்திரோதயத்தையுடைய சுக்லபக்ஷத்திய நல்லநாளும் நமக்கு வாய்த்திராநின்றன. கூர்மைபொருந்திய வேலாயுதத்தை யுடையவனாய், கண்ணபிரானுக்குத் தீங்கு செய்ய வரும் அற்ப ஜந்துக்கள் பக்கலிலுஞ் சீறிக் கொடுமைத் தொழிலைப் புரியுமவனான நந்தகோபனுக்குப்பிள்ளையாய்ப் பிறந்தவனும், அழகு நிறைந்த கண்களையுடையளான யசோதைப் பிராட்டிக்குச் சிங்கக்குட்டி போலிருப்பவனும், காளமேகத்தையொத்த திருமேனியையும் செந்தாமரைப் பூப்போன்ற திருக்கண்களையும் ஸூர்யனையும் சந்திரனையும் போன்ற திருமுகத்தையுமுடையனுமான ஸ்ரீமந்நாராயணன் தானே அவனால் பேறு என்றிருக்கிற நமக்கே பறையைக் கொடுக்குமவனாயிராநின்றான். ஆதலால், இவ்வுலகத்தவர்கள் கொண்டாடும்படி இந்நோன்பிலே ஊன்றி நீராடவர விருப்பமுடையீர்களே! வாருங்கள்; ஏல் ஓர் எம்பாவாய்!—. இவை நோன்புக்கு அறிகுறியான சொற்கள்.

ஆயர் சிறுமிகள் "நாம் நோன்பு நோற்பதற்கீடாக நமக்கு இங்ஙனே விலக்ஷணமானதொரு காலம் நேர்பட்டபடி என்!" என்று காலத்தைக் கொண்டாடி, மார்கழி நீராட்டத்தில் விருப்பமுடைய பெண்களை விளிக்குமாறு கூறுவது இப்பாட்டு. ஏலோரெம்பாவாய் = நோன்பு நோற்பதில் அவகாஹித்தமையைக் காட்டுகின்ற ஓர் சொற்றொடர். ... ... (1)

475 வையத்துவாழ்வீர்காள் நாமும்நம்பாவைக்கு * செய்யுங்கிரிசைகள் கேளீரோ * பாற்கடலுள்
பையத்துயின்ற பரமனடிபாடி * நெய்யுண்ணோம் பாலுண்ணோம் நாட்காலேநீராடி *
மையிட்டெழுதோம் மலரிட்டுநாமுடியோம் * செய்யாதனசெய்யோந் தீக்குறளைசென்றோதோம் *
ஐயமும்பிச்சையு மாந்தனையுங்கைகாட்டி * உய்யுமாறெண்ணி யுகந்தேலோரெம்பாவாய். (2)

இப்பூமண்டலத்தில் வாழ்ந்திராநின்றுள்ளவர்களே! எம்பெருமானாலேயேபேறு என்ற அத்யவஸாயமுடைய நாமும் உஜ்ஜீவிக்கும் வழியை ஆராய்ந்து, திருப்பாற்கடலில் அவதானத்துடன் கண்வளர்ந்தருளாநின்ற பரம புருஷனுடைய திருவடிகட்கு மங்களாசாஸனம் பண்ணி ஆசார்யாதிகளுக்கு இடுகையாகிற ஐயத்தையும், ஆர்த்தர்கட்கு இடுகையாகிற பிக்ஷையையும் சக்தியுள்ள வளவும் இட்டு மகிழ்ந்து நமது நோன்புக்கு அங்கமாகச் செய்ய வேண்டிய க்ரியைகளைச் சொல்லுகிறோம், காதுகொடுத்துக் கேளுங்கள். நோன்பு நோற்கத் தொடங்கின நாம் நெய் உண்ணக் கடவோமல்லோம்; பால் உண்ணக் கடவோமல்லோம்; விடியற் காலத்திலேயே ஸ்நானஞ் செய்துவிட்டு கண்ணில் மையிட்டு அலங்காரம் பண்ணக்கடவோமல்லோம்; குழலிற் பூ வைத்துமுடிக்கக் கடவோமல்லோம்; மேலைத் தலைவர்கள் செய்யாதவற்றைச் செய்யக்கடவோமல்லோம்; கொடியகோட்சொற்களை எம்பெருமானிடத்துச் சென்று கூறக்கடவோமல்லோம்; ஏல் ஓர் எம்பாவாய்,

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஒரு விசேஷ காரியத்தில் ஈடுபட்டவர்கள். அக்காரியம் தலைக்கட்டுமளவும் சிலவற்றைப் பரிஹரிக்க வேண்டுமென்றும் சிலவற்றைப் பற்றவேண்டுமென்றும் விடுபற்றுக்களை முதலில் ஸங்கல்பித்துக்கொள்ள வேண்டுமென்றும் சாஸ்திரங்களிற் கூறியுள்ளதனால், அதற்கேற்ப நோன்பு ஆகிற விசேஷ காரியத்தில் ஈடுபட்ட இவ்வாயர் மங்கைகள் தாங்கள் விடுமவற்றையும் பற்றுமவற்றையும் ஸங்கல்பிக்கிறார்கள் இப்பாட்டில். ... ... (2)

476 ஓங்கியுலகளந்த வுத்தமன்பேர்பாடி * நாங்கள் நம்பாவைக்குச் சாற்றிநீராடினல் *
தீங்கின்றி நாடெல்லாந் திங்கள்மும்மாரிபெய்து * ஓங்குபெருஞ்செந்நெ லூடுகயலுகள *
பூங்குவளைப்போதில் பொறிவண்டுகண்படுப்ப * தேங்காதேபுக்கிருந்து சீர்த்தமுலைபற்றி
வாங்க * குடம்நிறைக்கும் வள்ளற்பெரும்பசுக்கள் * நீங்காதசெல்வம் நிறைந்தேலோ ரெம்பாவாய். (3)

மஹாபலி வார்த்த நீர் கையில் விழுந்தவாறே ஆகாசத்தளவும் வளர்ந்து மூன்று லோகங்களையும் திருவடிகளாலே தாவி அளந்து கொண்ட புருஷோத்தமனுடைய திருநாமங்களைப் ப்ரயோஜநாந்தரத்தை விரும்பாத நாங்கள் ப்ரீதிக்குப் போக்கு வீடாகப் பாடி நம் நோன்புக்கென்று சங்கற்பித்துக்கொண்டு நீராடினல் தேசமெங்கும் அதிவ்ருஷ்டி, அநாவ்ருஷ்டி ஆகிற தீங்கு ஒன்றுமில்லாமல் மாதந்தோறும் மூன்று தரம் மழை பெய்ய அதனுல், ஆகாசத்தளவும் வளர்ந்து பெருத்துள்ள செந்நெற் பயிர்களின் நடுவே மீன்கள் துள்ள அழகிய நெய்தல் மலரில் மிக்க புகரையுடைய வண்டுகளானவை உறங்க, மாட்டுத் தொழுவிற் புகுந்து சலியாமல் பொருந்தி யிருந்து பசுக்களின் பருத்த முலைகளை இரு கையாலும் பிடித்து வலிக்க எல்லார்க்கும் கட்டி யடிக்கலாம்படி விதேயமாயிருக்கையாகிற உதாரஸ்வபாவமுடைய பெரிய பசுக்களானவை நீங்காதஸம்பத்து நிறையும்படி பால் வெள்ளத்தாலே குடங்களை நிறைக்கும்.

உலகத்தில் சுவர்க்கத்தை முக்கியமான பேருகக்கொண்டு ஜ்யோதிஷ்டோம யாகஞ்செய்வதற்கு, ஆயுஸ்ஸு, ஸந்தாநம் என்று சில அவாந்தர பலன்களும் உடன்கூடும்; இவ்வாய்ச்சியர் எம்பெருமானையே எல்லாவகைப் பயனுகவும் உள்ளத்துக்கொண்டவர்களாதலால் அவ்வெம்பெருமானெழிய வேறொரு பயனையும் விரும்பமாட்டார்கள்; ஆயினும் இவர்கள் விரும்ப வேண்டுவதொன்றுண்டு; அதாவது தாங்கள் நோன்பு நோற்குமாறு அநுமதி அளித்தவர்கட்குச் சில ஸம்ருத்திகளை ஆசாஸிக்கை. அஃது இப்பாட்டிற் சொல்லும். [யத்ராஷ்டாக்ஷரஸம் ஸித்தோ மஹாபாகோ மஹீயதே—நதத்ர ஸஞ்சரிஷ்யந்தி வ்யாதி துர்ப்பிக்ஷ தஸ்கரா:] என்று திருவெட்டெழுத்து வல்லானொருவனிருந்தநாடு ஸம்ருத்தமாயிருக்குமென்னா நின்றால் இத்தனை மஹாநுபாவைகள் இருக்கும் நாடு ஸம்ருத்தமாகச் சொல்ல வேண்டாவே. ... ... (3)

477 ஆழி மழைக்கண்ணு ஒன்றுநீ கைகரவேல் * ஆழியுள் புக்கு முகந்துகொ டார்த்தேறி *
ஊழிமுதல்வ னுருவம்போல் மெய்கறுத்து * பாழியந் தோளுடைப் பற்பநாபன் கையில் *
ஆழிபோல் மின்னி வலம்புரிபோல் நின்றதிர்ந்து * தாழாதே சார்ங்க முதைத்த சரமழைபோல் *
வாழ வுலகினிற் பெய்திடாய் * நாங்களும் மார்கழிநீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (4)

மண்டல வர்ஷத்துக்குத் தலைவனான பர்ஜந்யனே! நீ உன்னுடைய கொடையில் ஒன்றையும் ஒளியா தொழிய வேணும்; நீ செய்ய வேண்டிய பணி என்னவென்றால் கடலினுட் புகுந்து அங்குள்ள நீரை மொண்டு கொண்டு கர்ஜனை பண்ணி-பேரொலி செய்து ஆகாயத்தே ஏறி, காலம் முதலிய ஸகல பதார்த்தங்களுக்குங் காரணபூதனான, எம்பெருமானுடைய திரு

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மேனிபோல் உனது உடம்பிற் கருமைபெற்று, பெருமையும் அழகும் பொருந்திய தோள்களை யுடையவனும், நாபிக்கமல முடையனுமான எம்பெருமானுடைய கையில் வலப்பக்கத்திலுள்ள திருவாழி யாழ்வானைப்போல் ஒளி மல்கி, இடப்பக்கத்திலுள்ள பாஞ்சஜந்யாழ்வானைப்போல் நிலைநின்று முழங்கி, ஸ்ரீசார்ங்கத்தாலே தள்ளப்பட்ட பாணவர்ஷம்போல், உலகத்தாரனைவரும் வாழும் படியாகவும் கண்ணபிரானோட்டைக் கலவிக்கு நோன்பு நோற்கிற நாங்களும் ஸந்தோஷித்து மார்கழி நீராட்டம் செய்யும்படியாகவும் இவ்வுலகத்தில் தாமதம் செய்யாமல் சடக்கென மழைபொழியக் கடவை. ஏல் ஓர் எம் பாவாய். ... ... (4)

478 மாயனை மன்னு வடமதுரை மைந்தனை * தூய பெருநீர் யமுனைத் துறைவனை *
ஆயர் குலத்தினில் தோன்று மணிவிளக்கை * தாயைக் குடல்விளக்கஞ் செய்த தாமோதரனை *
தூயோமாய் வந்துநாம் தூமலர்கள் தூய்த்தொழுது * வாயினுற் பாடி மனத்தினுற் சிந்திக்க *
போய பிழையும் புகுதருவா னின்றனவும் * தீயினில் தூசாகும் செப்பேலோ ரெம்பாவாய். (5)

மாயச் செயல்களை யுடையவனும், பகவத் ஸம்பந்தம் நித்யமாகப் பெற்றுள்ள வடமதுரைக்குத் தலைவனும், பரிசுத்தமாய் ஆழம்மிக்கிருக்கிற நீர்த்தத்தையுடைய யமுனை யாற்றங்கரையை நிருபகமாகவுடையவனும், இடைக்குலத்தில் விளங்காநின்றுள்ள மங்கள தீபம்போன்றவனும், தாயாகிய தேவகிப் பிராட்டியின் வயிற்றை விளங்கச் செய்தவனுமான கண்ணபிரானை அடிச்சியோமாகிய நாம் பரிசுத்தியுள்ளவர்களாய்க்கிட்டி நல்ல மலர்களைத் தூவி வணங்கி வாயாரப் பாடி நெஞ்சாரத் தியானம்பண்ண அதன் பிறகு சேஷ சேஷிபாவ ஜ்ஞான முண்டாவதற்கு முன்பு கழிந்த பாவங்களும், பின்பு தன்னை யறியாமல் வரக்கூடிய பாவங்களும் நெருப்பிலிட்ட பஞ்சுபோலே உருமாய்ந்துபோம்: ஆனபின்பு அவ்வெம்பெருமான் திருநாமங்களைச் சொல்லுவது; ஏல் ஓர் எம் பாவாய். ... ... (5)

479 புள்ளுஞ் சிலம்பினகாண் புள்ளரையன் கோயில் * வெள்ளை விளி சங்கின் பேரரவங்கேட்டிலையோ *
பிள்ளா யெழுந்திராய் பேய்முலை நஞ்சுண்டு * கள்ளச் சகடங் கலக்கழியக் காலோச்சி *
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை * உள்ளத்துக்கொண்டு முனிவர்களும் யோகிகளும் *
மெள்ள வெழுந்து அரியென்ற பேரரவம் * உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (6)

பறவைகளும் இரை தேடுகைக்காக எழுந்து ஆரவாரங்கள் செய்யாநின்றனகாண்; பறவைத்தலைவனை பெரியதிருவடிக்கு ஸ்வாமியான ஸர்வேச்வரனுடைய ஸந்நிதியிலே வெண்மை நிறமுடையதும் அனைவரையும் அழையாநிற்பதுமான சங்கினுடைய பேரொலியையும் செவிப்படுத்துகின்றிலையோ? பகவத் விஷயரஸ மறியப் பெறாத பெண்ணே! சடக்கென எழுந்திரு; பூதனையின் முலையில் தடவிக்கிடந்த விஷத்தை அவளது ஆவியுடன் அமுது செய்து, வஞ்சனை பொருந்திய அஸுராவிஷ்டமான சகடமானது கட்டுக் குலையும்படி திருவடியை ஓங்கச் செய்தவனும் திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான் மீது திருக்கண்வளர்ந்தருளின ஜகத்காரண பூதனுமான எம்பெருமானை மநநசீலரான ரிஷிகளும் யோகப்பயிற்சியில் ஊன்றினவர்களும் தமது ஹ்ருதயத்தில் அமர்த்திக்கொண்டு ஹ்ருதயஸ்தனான அவ்வெம்பெருமான் அசையாதபடி ஸாவதாநமாக எழுந்து ஹரிர் ஹரி: என்று சொன்னதனாலுண்டான பேரொலியானது எமது நெஞ்சிற் புகுந்து குளிர்ந்தது; ஏல் ஓர் எம் பாவாய்.

இனியாகிலும் எழுந்திரு என்று ஒருத்தியை உணர்த்துகிறபடி, இப்பாட்டு முதல், மேல் "எல்லேயிளங்கிளியே" என்ற பாட்டளவாகப் பத்துப் பாசுரங்களிலே அநுபோக்தாக்களைக் குறித்துத் திருப்பள்ளியெழுச்சி பாடப்படுகின்றது. ... ... (6)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

480 கீசுகீசென்றெங்குமானைச்சாத்தன் * கலந்து பேசினபேச்சரவங்கேட்டிலையோ பேய்ப்பெண்ணே *
காசும்பிறப்புங்கலகலப்பக்கைபேர்த்து * வாசநறுங்குழலாய்ச்சியர் * மத்தினால்
ஓசைபடுத்ததயிரரவங்கேட்டிலையோ * நாயகப்பெண்பிள்ளாய் நாராயணன்மூர்த்தி *
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ * தேசமுடையாய் திறவேலோ ரெம்பாவாய். (7)

மதிகெட்ட பெண்ணே! எல்லாவிடங்களிலும் பரத்வாஜபக்ஷிகளானவை ஒன்றோடொன்று ஸம்ச்லேஷித்து கீச்கீச்சென்று பேசிய பேச்சினுடைய ஆரவாரத்தை இன்னும் நீ கேட்கவில்லையோ? பரிமள வஸ்துக்களினால் மணம் கமழா நின்றுள்ள கூந்தலையுடைய இடைப் பெண்கள் கழுத்தில் அணிந்துள்ள அச்சுத்தாலியும் ஆமைத்தாலியும் கலகலவென்று சப்திக்கும்படியாக கைகளை அசைத்து மத்தாலே ஓசைபடுத்தின தயிரின் ஒலியையும் கேட்கவில்லையோ? பெண்களுக்கெல்லாம் தலைமையாயிருப்பவளே! ஸ்ரீமந் நாராயணாவதாரமான கண்ணபிரானை நாங்கள் பாடா நிற்கச்செய்தேயும் நீ அப்பாட்டைக்கேட்டு வைத்தும் இங்ஙனே உறங்குவாயோ? மிக்க தேஜஸ்ஸையுடையவளே நீயே எழுந்துவந்து கதவைத்திற; ஏல் ஓர் எம் பாவாய். ... ... (7)

481 கீழ்வானம் வெள்ளென் றெருமை சிறுவீடு * மேய்வான் பரந்தனகாண் மிக்குள்ள பிள்ளைகளும்*
போவான் போகின்றாரைப் போகாமற் காத்து * உன்னைக் கூவுவான் வந்துநின்றோம்* கோதுகலமுடைய
பாவா யெழுந்திராய் பாடிப் பறைகொண்டு * மாவாய் பிளந்தானை மல்லரை மாட்டிய *
தேவாதி தேவனைச் சென்றுநாஞ் சேவித்தால் * ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (8)

கிருஷ்ணனாலே மிகவும் விரும்பத்தக்க பதுமை போன்றவளே! கிழ்த்திசைப் பக்கத்து ஆகாசமானது வெளுத்தது; அன்றியும், எருமைகளானவை பனிப்புல் மேய்கைக்காகச் சிறு தோட்டங்களில் சென்று புக்கன; திருவேங்கட யாத்திரை போலே போகையையே ப்ரயோஜனமாகக் கொண்டு போகின்ற மற்றுள்ள எல்லாப் பெண் பிள்ளைகளையும் போக ஒட்டாமல் தடுத்து உன்னை அழைத்தற்பொருட்டு உன் மாளிகைவாசலில் வந்திரா நின்றோம்; எங்களுடன் கூடுவதற்காக எழுந்திரு; கண்ணபிரானுடைய குணங்களைப் பாடி அவனிடத்துப் பறையைப் பெற்று, குதிரையுருவமெடுத்து வந்த கேசி யென்னுமசுரனுடைய வாயைக் கிண்டெறிந்தவனும் மல்லர்களை மாளச் செய்தவனுமான அத்தேவ தேவனை நாம் அணுகி அடி பணிந்தால் அவன் நமது குறைகளை ஆராய்ந்து ஐயோ! என்று இரங்கியருள்வன். ஏல் ஓர் எம் பாவாய். ... ... (8)

482 தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய * தூபங்கமழத் துயிலணைமேற் கண்வளரும் *
மாமான் மகளே மணிக்கதவந் தாள் திறவாய் * மாமீ ரவளை யெழுப்பீரோ * உன்மகள்தான்
ஊமையோ அன்றிச் செவிடோ வனந்தலோ * ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ *
மாமாயன் மாதவன் வைகுந்தனென்றென்று * நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். (9)

பரிசுத்தமான மாணிக்கங்களழுத்திச் சமைந்த மாளிகையில் நாற்புறமும் விளக்குகள் எரியவும்அகில் முதலியவற்றின் வாசனைப்புகைகள் மணம் வீசவும்,மென்மையான படுக்கையின் மீது நித்திரை செய்யா நின்ற, அம்மான் பெண்ணே; மாணிக்கக் கதவினுடைய தாழ்ப்பாளைத் திறந்திடுவாயாக; அம்மாமீ! உள்ளே உறங்குகிற உன் மகளை எழுப்ப மாட்டீரோ? உன் மகளானவள் வாய்ப்புலன் இல்லாதவளோ? அல்லாமற்போனால் செவிப்புலன் இல்லாதவளோ? அன்றி, பேருறக்கமுடையவளாயிருக்கின்றாளோ? அன்றி பெரிய படுக்கையில் காவலிடப்பட்டாளோ? அன்றி மந்திர வாதத்தினால் கட்டுப் படுத்தப்பட்டாளோ? அளவிறந்த ஆச்சரியச் செய்கைகளை யுடையவனே! 'திருமகள் கேள்வனே!' 'ஸ்ரீ வைகுண்ட நாதனே! என்று பல

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கால் சொல்லி எம்பெருமானுடைய திருநாமங்கள் பலவற்றையும் வாயாரக் கற்றோம்; இனியா கிலும் உன் மகள் உணரலாகாதா? ஏல் ஓர் எம் பாவாய். ... ... (9)

483 நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற வம்மனாய்! * மாற்றமுந் தாராரோ வாசல் திறவாதார் *
நாற்றத் துழாய்முடி நாராயணன் * நம்மால் போற்றப் பறைதரும் புண்ணியனால் * பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்பகரணனும் * தோற்றுமுனக்கே பெருந்துயில்தான் தந்தானோ*
ஆற்றவனந்தலுடையா யருங்கலமே * தேற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். (10)

நோன்பு நோற்று ஸுகாநுபவம் பண்ணுகின்ற அம்மே! வாசற் கதவைத் திறவாதவர்கள் ஒரு வாய்ச் சொல்லுங்கொடுக்க மாட்டாரோ? நறு நாற்றம் வீசாநின்றுள்ள திருத்துழாய் மாலையை அணிந்துள்ள திருமுடியையுடைய நாராயணனும், நம்மால் மங்களாசாஸனம் பண்ணப் பெற்றுப் புருஷார்த்தங்களைத் தந்தருள்பவனும் தர்மமே வடிவுகொண்டு வந்தாற் போன்றவனுமான இராமபிரானால் முன்னொரு காலத்திலே யமன் வாயில் இரையாக விழுந்தொழிந்த கும்பகர்ணனும் தோல்வியடைந்து தனது பேருறக்கத்தை உனக்கேதான் கொடுத்துவிட்டானோ? மிகவும் உறக்கமுடையவளே! பெறுதற்கரிய ஆபரணம் போன்றவளே! தெளிந்துவந்து கதவைத் திறந்திடு; ஏல் ஓர் எம் பாவாய். ... ... (10)

484 கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து * செற்றார் திறலழியச் சென்று செருச் செய்யும் *
குற்றமொன்றில்லாத கோவலர்தம் பொற்கொடியே * புற்றர வல்குற் புனமயிலே போதராய் *
சுற்றத்துத் தோழிமாரெல்லாரும் வந்து * நின் முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட *
சிற்றாதே பேசாதே செல்வப்பெண்டாட்டி * நீ எற்றுக்குறங்கும் பொருளேலோ ரெம்பாவாய். (11)

கன்றுகிய பசுக்களினுடைய பல திரள்களைக் கறப்பவர்களும் சத்துருக்களினுடைய வலி அழியும்படி தாமே படையெடுத்துச் சென்று போர் செய்யுமவர்களும் ஒருவகைக் குற்றமும் அற்றவர்களுமான கோபாலர்களுடைய குடியிற் பிறந்த பொன்கொடி போன்றவளே! புற்றிலிருக்கிற பாம்பின் படம்போன்ற அல்குலையும், காட்டில் இஷ்டப்படி திரிகிற மயில் போன்ற சாயலையுமுடையவளே! செல்வமுள்ள பெண் பிள்ளாய்! எழுந்து வருவாயாக, நாங்கள் திரண்டு வந்து உனது திருமாளிகையின் முற்றத் தேறப் புகுந்து கார்மேக வண்ணனான கண்ணபிரானுடைய திருநாமங்களைப் பாடச் செய்தேயும் பேருறக்கமுடைய நீ சலியாமலும் ஒன்று பேசாமலும் உறங்குவது என்ன பிரயோஜனத்திற்காகவோ; அறியோம் ஏல் ஓர் எம்பாவாய். (11)

485 கனைத்திளங் கற்றெருமை கன்றுக்கிரங்கி * நினைத்து முலைவழியே நின்று பால்சோர *
நனைத்தில்லஞ் சேறாக்கும் நற்செல்வன் தங்காய் * பனித்தலை வீழ நின் வாசற்கடை பற்றி *
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற * மனத்துக்கினியானைப் பாடவும் நீ வாய்திறவாய் *
இனித்தா னெழுந்திரா யீதென்ன பேருறக்கம் * அனைத்தில்லத்தாரு மறிந்தேலோ ரெம்பாவாய். (12)

இளங்கன்றுகளையுடைய எருமைகளானவை பால் கறப்பார் இல்லாமையாலே கதறிக்கொண்டு தன் கன்றின்மீது இரக்கமுற்று கன்று ஊட்டுவதாக நினைத்து அந்நினைவினால் முலை வழியால் இடைவிடாமல் பால்பெருக, அப்பெருக்கினால் வீட்டை முழுவதும் ஈரமாக்கி சேறாகப் பண்ணுகையாகிற சிறந்த செல்வத்தை யுடையவனுடைய தங்கையானவளே! பனியானது எங்கள் தலையிலே விழும்படி உனது மாளிகையின் வாசற்கடையை அவலம்பித்துக்கொண்டு, பிராட்டியைப் பிரித்தான் என்னுஞ் சீற்றத்தினால் தென்திசையிலுள்ள லங்காபுரிக்கு அரசனான இராவணனைக் கொன்றொழித்தவனும் சிந்தனைக்கு இனியனுமான இராமபிரானை நாங்கள் பாடா நிற்கச் செய்தேயும் நீ வாய் திறந்து பேசுகிறாயில்லை. எங்களாற்றாமையை நீ அறிந்து

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொண்ட பின்பாகிலும் எழுந்திரு; இஃது என்ன ஓயாத தூக்கம்? இச்சேரியிலுள்ள எல்லா விட்டுக்காரர்களாலும் நாங்கள் உன் மாளிகை வாசலில் திரண்டு நிற்கிறவிது அறியப்பட்டதாயிற்று. ஏல் ஓர் எம்பாவாய். ... ... (12)

486 புள்ளின்வாய் கீண்டானைப் பொல்லாவரக்கனை * கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய் *
பிள்ளைகளெல்லாரும் பாவைக்களம் புக்கார் * வெள்ளி யெழுந்து வியாழ முறங்கிற்று *
புள்ளுஞ் சிலம்பினகாண் போதரிக்கண்ணினாய்! * குள்ளக் குளிரக் குடைந்து நீராடாதே *
பள்ளிக் கிடத்தியோ பாவாய்நீ நன்னாளால் * கள்ளந் தவிர்ந்து கலந்தேலோ ரெம்பாவாய். (13)

பறவையுருவம் பூண்டுவந்த பகாசுரனுடைய வாயைக் கிண்டெறிந்தவனும், கொடியனான இராவணனை முடித்து அரக்கர் குலத்தை வேரோடு களைந்தொழித்தவனுமான எம்பெருமானுடைய வீர சரிதங்களைப் பாடிக்கொண்டு சென்று எல்லாப் பெண்பிள்ளைகளும் நோன்பு நோற்பதற்காகக் குறிக்கப்பட்ட இடத்திற்புகுந்தனர்! சுக்ரோதயமாகி ப்ருஹஸ்பதி அஸ்தமித்தான். அன்றியும் பறவைகளும் இரைதேடப்போன இடங்களில் ஆரவாரஞ் செய்தன; புஷ்பத்தின் அழகைக் கொள்ளை கொள்ளாநின்ற கண்ணை யுடையவளே! பதுமைபோன்றவளே! நீ கிருஷ்ணனும் நாமும் கூடுகைக்கு வாய்த்தகாலமாகிய இந்த நல்லநாளில் கிருஷ்ணனுடைய குண சேஷ்டிதங்களைத் தனியே நினைந்துக் கிடக்கையாகிற கபடத்தை விட்டு எங்களுடன் கூடி உடம்பு வவ்வலிடும்படி குளத்திற்படிந்து ஸ்நாநம் பண்ணாமல் படுக்கையிற் கிடந்துறங்காநின்றாயோ! ஆச்சரியம்! ஏல் ஓர் எம் பாவாய். ... ... (13)

487 உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள் * செங்கழுநீர்வாய்நெகிழ்ந்தாம்பல் வாய்கூம்பினகாண் *
செங்கற் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர் * தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார் *
எங்களை முன்ன மெழுப்புவான் வாய்பேசும் * நங்கா யெழுந்திராய் நாணாதாய் நாவுடையாய் *
சங்கொடு சக்கரமேந்துந் தடக்கையன் * பங்கயக்கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். (14)

உங்கள் விட்டுப் புழைக்கடைத் தோட்டத்திலிருக்கிற தடாகத்திலுள்ள செங்கழுநீர்ப் பூக்களானவை விகஸிக்க, ஆம்பல் மலர்களின் வாய் மூடிப்போயின; அன்றியும், காவிப்பொடியில் தோய்த்த வஸ்திரங்களையும் வெளுத்த பற்களையுமுடையராய் தபஸ்விகளாயிருந்துள்ள ஸந்நியாஸிகள், தமது திருக்கோயில்களைத் திறவுகோலிட்டுத் திறக்கைக்காகப் போகாநின்றனர், முந்திவந்து எழுப்புவதாகச் சொல்லிப்போன நங்கையே! 'சொன்னபடி எழுப்பவில்லையே!' என்னும் வெட்கமுமில்லாதவளே! இனியபேச்சுப் பேசவல்ல நாவைப் படைத்தவளே! சங்கையும் சக்கரத்தையும் தரியாநின்றுள்ள விசாலமான திருக்கைகளை யுடையவனும் தாமரைபோற் கண்ணனுமான கண்ணபிரானைப் பாடுகைக்கு எழுந்திரு; ஏல் ஓர் எம்பாவாய்.

488 எல்லே யிளங்கிளியே யின்ன முறங்குதியோ * சில்லென் றழையேன்மின் நங்கைமீர் போதர்கின்றேன் *
வல்லையுன் கட்டுரைகள் பண்டேயுன் வாயறிதும் * வல்லீர்கள் நீங்களே நானேதா னாயிடுக *
ஒல்லைநீ போதா யுனக்கென்ன வேறுடையை * எல்லாரும்போந்தாரோ போந்தார் போந்தெண்ணிக்கொள் *
வல்லானை கொன்றானை மாற்றாரை மாற்றழிக்க வல்லானை * மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். (15)

இளமைதங்கிய கிளி போன்றுள்ளவளே! இஃது என்னே! இத்தனை பெண் பிள்ளைகள் திரண்டுவந்த பின்பும் தூங்குகின்றாயோ? என்று உணர்த்த வந்தவர்கள் கேட்க; பெண்காள்! இதோ புறப்பட்டு வருகிறேன்! சிலுகு சிலுகென்று அழையாதேயுங்கள் என்று உறங்குகிறவள் விடைசொல்ல, இளங்கிளியே! நீ வார்த்தை சொல்லுவதில் வல்லமையுடையவள்; உனது கடுமையான சொற்களையும் உன் வாயையும் நெடுநாளாகவே நாங்கள் அறி

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வோம் என்று உணர்த்த வந்தவர்கள் சொல்ல, இப்படிச் சொல்லுகிற நீங்கள்தான் பேச்சில் வல்லமையுடையீர்; அன்றேல் நீங்கள் சொல்லுகிறபடி நான்தான் வல்லவளாய் ஆகக்கடவேன்; உங்களுக்கு நான் செய்ய வேண்டுவதென்? என்று உள்ளுறங்குமவள் கேட்க; நீ சீக்கிரமாக எழுந்துவா; தனியே உனக்குமட்டும் நீ வேறு என்ன அதிசயத்தை உடையையாயிராநின்றாய்? என்று உணர்த்தவந்தவர்கள் கேட்க; வரவேண்டியவர்கள் எல்லாரும் வந்தனரோ? என்று உறங்குமவள் கேட்க; எல்லோரும் வந்தனர்; நீ எழுந்துவந்து எண்ணிப் பார்த்துக் கொள்; என்று உணர்த்தவந்தவர்கள் கூற, என்னை எதுக்காக வரச் சொல்லுகிறீர்களென்று உறங்குமவள் கேட்க; குவலயாபீடமென்னும் வலிய யானையைக் கொன்றொழித்தவனும் சத்துருக்களான கம்ஸாதிகளை மிடுக்கு அழிந்தவர்களாகச் செய்தருள வல்லவனும் அற்புதனுமான கண்ணபிரானைப் பாடுகைக்காக ஒல்லை நீ போதாய், என்றழைக்கிறார்கள், ஏல் ஓர் எம் பாவாய்.

எல்லாப் பெண்களுடைய திரட்சியையுங் காணக்கருதிக் கிடப்பாளொருத்தியை உணர்த்தின பாசுரம், இது.

கீழ்ப்பத்துப்பாட்டிலும் நிகழ்ந்த வினாவிடைகள் இப்பாட்டில் வெளிப்படையாகக் காணப்படும். "புள்ளுஞ் சிலம்பினகாண்" என்ற பாட்டுத் தொடங்கிக் கீழ்ப்பாட்டளவுமுள்ள ஒன்பது பாட்டுக்களிலும் உணர்த்துமவர்களுடைய பாசுரமொன்றேயன்றி உறங்குமவளுடைய ஆக்ஷேபாதிரூபமான பாசுரமொன்றும் வ்யக்தமாகக் காணப்படவில்லை; அது, சொற்றொடை நோக்கி அவதாரிகையாக எடுத்துரைக்கத் தக்கது; இப்பாட்டிலோ வென்னில்;

முதலடி-உணர்த்துமவர்களின் பாசுரம்; இரண்டாமடி-உறங்குமவளின் பாசுரம்; மூன்றாமடி-உணர்த்துமவர் பாசுரம்; நான்காமடி-உறங்குமவள் பாசுரம்; ஐந்தாமடி-உணர்த்துமவர் பாசுரம்; ஆறாமடியில் முற்கூறு-உறங்குமவள் பாசுரம்; மேல் முழுதும்-உணர்த்துமவர் பாசுரம். ... ... (15)

489 நாயகனாய் நின்ற நந்தகோபனுடைய கோயில் காப்பானே * கொடித்தோன்றுந் தோரண
வாசல் காப்பானே * மணிக்கதவந் தாள் திறவாய் * ஆயர் சிறுமியரோமுக்கு * அறை பறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான் * தூயோமாய் வந்தோந் துயிலெழப் பாடுவான் *
வாயால் முன்ன முன்னம் மாற்றாதே யம்மா * நீ நேச நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். (16)

எமக்கு ஸ்வாமியாயிருக்கிற நந்தகோபருடைய திருமாளிகையைக் காக்குமவனே! த்வஜபடங்கள் விளங்காநிற்கப் பெற்ற தோரணவாசலைக் காக்குமவனே! அழகிய கதவினுடைய தாழ்ப்பாளைத் திறக்கவேணும்; இளமை தங்கிய இடைப்பெண்களாகிய எமக்கு ஆச்சரியச் செயல்களை யுடையவனும் நீலமணி போன்ற திருநிறத்தையுடையவனுமான கண்ணபிரான் நேற்றே ஒலி செய்யும் பறையைத் தருவதாக வாக்கு அளித்தான்: அவ்வெம்பெருமான் துயிலினின்றும் எழுந்திருக்கும்படி பாடுகைக்காகப் பரிசுத்தைகளாய் அடியோம் வந்திருக்கின்றோம்; ஸ்வாமி! முதல் முதலிலே உமது வாயினால் மறுக்காதொழிய வேணும்; அன்றியும் கண்ணபிரான் பக்கலில் பரிவுற்றிருக்கும் நிலைமையையுடைய கதவை நீயே நீக்கவேணும், ஏல் ஓர் எம் பாவாய்.

"துயிலெழப் பாடுவான்" "துயிலெடைப் பாடுவான்" என்பன பாட பேதங்கள். (16)

490 அம்பரமே தண்ணீரே சோறே யறஞ்செய்யும் * எம்பெருமான் நந்தகோபாலா வெழுந்திராய் *
கொம்பனார்க் கெல்லாங் கொழுந்தே குலவிளக்கே * எம்பெருமாட்டி யசோதா யறிவுறாய் *
அம்பர முடறுத் தோங்கி யுலகளந்த * உம்பர்கோமானே யுறங்கா தெழுந்திராய் *
செம்பொற் கழலடிச் செல்வா பலதேவா * உம்பியும் நீயு முறங்கேலோ ரெம்பாவாய். (17)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வஸ்த்ரங்களையே தீர்த்தத்தையே சோற்றையே தருமமாக அளிக்கின்ற எமக்கு ஸ்வாமியான நந்தகோபரே! எழுந்திருக்கவேணும்; வஞ்சிக்கொம்பு போன்ற மாதர்க்கெல்லாம் முதன்மையானவளே! இக்குலத்திற்கு மங்கள தீபமாயிருப்பவளே! எமக்குத் தலைவியானவளே! யசோதைப் பிராட்டியே! உணர்ந்தெழு, ஆகாசத்தை இடைவெளியாக்கிக் கொண்டு உயர வளர்ந்து எல்லா உலகங்களையும் அளந்தருளின தேவாதி தேவனே! இனிக் கண்வளர்ந்தருளாமல் எழுந்திருக்கவேணும்! சிவந்த பொன்னாற் செய்த வீரக்கழலை அணிந்துள்ள திருவடியையுடைய சீமானே! பலதேவனே! உன் தம்பியாகிய கண்ணனும் நீயும் உறங்காதொழியவேணும், ஏல் ஓர் எம் பாவாய். ... ... (17)

491 உந்து மதகளிற்ற னோடாத தோள்வலியன் * நந்தகோபாலன் மருமகளே நப்பின்னாய் *
கந்தங் கமழுங் குழலீ கடைதிறவாய் * வந்தெங்குங் கோழி யழைத்தனகாண் * மாதவிப்
பந்தல் மேற் பல்காற் குயிலினங்கள் கூவினகாண் * பந்தார்விரலி யுன் மைத்துனன் பேர்பாட *
செந்தாமரைக்கையாற் சீரார் வளையொலிப்ப * வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (18)

தன்னால் வென்று தள்ளப்படுகிற மதயானைகளை யுடையவனும், போர்க்களத்தில் முதுகு காட்டி ஓடாத புஜபலத்தை யுடையவனுமான நந்தகோபனுக்கு மருமகளானவளே! ஓ! நப்பின்னைப் பிராட்டியே! பரிமளம் வீசாநின்றுள்ள கூந்தலையுடையவளே! தாழ்ப்பாளைத் திறந்திடு; கோழிகளானவை எல்லா விடங்களிலும் பரவிக் கூவாநின்றனகாண்; அன்றியும், குருக்கத்திக் கொடிகளாலாகிய பந்தலின்மேல் உறங்குகிற குயிற் கூட்டங்கள் பல தடவை கூவுகின்றனகாண்; க்ருஷ்ணனோடு விளையாடுகைக்கு உபகரணமான பந்து பொருந்திய விரலையுடையவளே! உனது கணவனான கண்ணபிரானுடைய திருநாமங்களை நாங்கள் பாடும்படியாக, சீர்மை பொருந்திய உன் கை வளைகள் ஒலிக்கும்படி நடந்து வந்து செந்தாமரைப் பூப்போன்ற உன் கையினால் எங்கள் மீது மகிழ்ச்சி கொண்டு தாழ்ப்பாளைத் திறந்திடு. (18)

492 குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல் * மெத்தென்ற பஞ்ச சயனத்தின்மேலேறி *
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல் * வைத்துக் கிடந்த மலர்மார்பா வாய்திறவாய் *
மைத்தடங் கண்ணினாய் நீயுன் மணாளனை * எத்தனைபோதுந் துயிலெழ வொட்டாய்காண் *
எத்தனையேலும் பிரிவாற்ற கில்லாயால் * தத்துவமன்று தகவேலோ ரெம்பாவாய். (19)

நிலைவிளக்குகளானவை நாற்புறமும் எரியா நிற்க, யானைத் தந்தங்களினாற் செய்த கால்களையுடைய கட்டிலிலே மெத்தென்றிருக்குமதாயும் அழகு, குளிர்த்தி, மென்மை, பரிமளம், வெண்மை என்னும் ஐந்து குணங்களையுடையதுமான படுக்கையின் மீதேறி, கொத்துக் கொத்தாக அலர்கின்ற பூக்களை யணிந்த கூந்தலை யுடையளான நப்பின்னைப் பிராட்டியினுடைய திருமுலைத் தடங்களைத் தன்மேல் வைத்துக்கொண்டு பள்ளிகொள்கின்ற அகன்ற திருமார்புடைய பிரானே! வாய்திறந்து ஒரு வார்த்தை அருளிச் செய்யவேணும், மையிட்டு அலங்கரிக்கப்பெற்றதும் விசாலமுமான கண்ணையுடைய நப்பின்னாய்! நீ உனது கணவனான கண்ணபிரானை ஒரு நொடிப்பொழுதும் படுக்கையைவிட்டு எழுந்திருக்க வொட்டுகிறாயில்லை; க்ஷணகாலமும் அவனைப் பிரிந்து தரித்திருக்க மாட்டுகிறாயில்லை; ஆ! ஆ!! நீ இப்படி இருப்பது உனக்குத் தகுதியன்று; இஃது உண்மை; ஏல் ஓர் எம் பாவாய். ... • ... (19)

493 முப்பத்து மூவ ரமரர்க்கு முன்சென்று * கப்பந் தவிர்க்குங் கலியே துயிலெழாய் *
செப்பமுடையாய் திறலுடையாய் * செற்றார்க்கு வெப்பங்கொடுக்கும் விமலா துயிலெழாய் *
செப்பன்ன மென்முலைச் செவ்வாய்ச் சிறுமருங்குல் * நப்பின்னை நங்காய் திருவே துயிலெழாய் *
உக்கமுந் தட்டொளியுந் தந்துன் மணாளனை * இப்போதே யெம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். (20)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

முப்பத்து முக்கோடி தேவர்கட்குத் துன்பம் வருவதற்கு முன்னமே எழுந்தருளி அவர்களுடைய நடுக்கத்தை நீக்கியருளவல்ல மிடுக்கையுடைய கண்ணபிரானே! படுக்கையினின்றும் எழுந்தருள்; ஆச்ரித ரக்ஷணத்தில் ருஜுவாயிருக்கும் தன்மையை யடையவனே! பகைவர் மண்ணுண்ணும்படியான வலிமையுடையவனே! சத்துருக்களுக்கு பயமாகிற ஜ்வரத்தைக் கொடுக்கவல்ல பரிசுத்த ஸ்வபாவனே! துயில் எழாய்; பொற்கலசம் போன்று விரஹம் பொருத முலைகளையும் சிவந்த வாயையும் நுண்ணிதான இடையையுமுடைய நப்பின்னைப் பிராட்டியே! ஸ்ரீ மஹாலக்ஷ்மியே! துயில் எழாய்; துயிலெழுந்த பின்பு, நோன்புக்கு உபகரணமான ஆலவட்டத்தையும் [விசிறியையும்] கண்ணாடியையும் உனக்கு வல்லபனான கண்ணபிரானையும் கொடுத்து விரஹத்தால் மெலிந்த எங்களை இந்த க்ஷணத்திலேயே நீராட்டக் கடவாய்.

294 ஏற்ற கலங்க ளெதிர்பொங்கி மீதளிப்ப * மாற்றாதே பால் சொரியும் வள்ளற் பெரும்பசுக்கள் *
ஆற்றப் படைத்தான் மகனே யறிவுறாய் * ஊற்றமுடையாய் பெரியாய் * உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே துயிலெழாய் * மாற்றாருனக்கு வலிதொலைந்துன் வாசற்கண் *
ஆற்றாது வந்துன் னடிபணியு மாபோலே * போற்றியாம்வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். (21)

சுரந்தபாலை ஏற்றுக்கொண்ட கலங்களானவை எதிரே பொங்கி மேலே வழியும்படியாக இடைவிடாமல் பாலைச் சுரக்கின்ற பெண்களும் பேதைகளும் அணைத்துக்கொள்ளும்படி நற்சீலத்தை யுடைய பெரிய பசுக்களை விசேஷமாகப் படைத்துள்ள நந்தகோபர்க்குப் பிள்ளையானவனே! திருப்பள்ளி யுணரவேணும்; அடியாரைக் காப்பதில் ஆஸ்தையுடையவனே; பெருமை பொருந்தியவனே! இவ்வுலகத்திலே ஆவிர்ப்பவித்த தேஜோ ரூபியானவனே! துயில் எழாய். சத்துருக்கள் உன் விஷயத்தில் தங்களுடைய வலிமாண்டு உபயோக மற்ற வலிவை யுடையராய், உன் மாளிகை வாசலில் கதியற்று வந்து உன் திருவடிகளில் சரணாகதி பண்ணிக் கிடப்பதுபோல் நாங்கள் உன்னைத் துதித்து உனக்கு மங்களா சாஸநம் பண்ணிக்கொண்டு உன் திருமாளிகை வாசலில் வந்து சேர்ந்தோம்! ஏல் ஓர் எம் பாவாய். ... (21)

495 அங்கண்மா ஞாலத் தரசர்* அபிமான பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட்டிற்கீழே *
சங்க மிருப்பார்போல் வந்து தலைப்பெய்தோம் * கிங்கிணி வாய்ச் செய்த தாமரைப் பூப்போலே *
செங்கண் சிறுச்சிறிதே யெம்மேல் விழியாவோ * திங்களு மாதித்தியனு மெழுந்தாற்போல் *
அங்க ணிரண்டுங்கொண் டெங்கள்மேல் நோக்குதியேல் * எங்கள்மேற் சாப மிழிந்தேலோ ரெம்பாவாய்.

அழகியதாய் விசாலமாய்ப் பெரிதாயுள்ள பூமியில் அரசாட்சி செய்த ராஜாக்கள் தங்களுடைய அஹங்கார மடங்கி வந்து உன் சிங்காசனத்தின் கீழ் திரள்திரளாக இருப்பதுபோலே நாங்களும் உன் இருப்பிடத் தேற விடைகொண்டு கிட்டினோம்; கிண்கிணியின் வாய்போலிரா நின்ற பாதி விகஸிதமான செந்தாமரைப் பூப்போன்ற சிவந்த திருக்கண்கள் கொஞ்சங் கொஞ்சமாக எங்கள் மேலே விழிக்கமாட்டாவோ? சந்திரனும் ஸூர்யனும் உதித்தாற்போல அழகிய திருக்கண்களிரண்டினாலும் எங்களைக் கடாக்ஷித்தருள்வாயாகில் எங்கள் பக்கலிலுள்ள பாபம் கழிந்து விடும்! ஏல் ஓர் எம் பாவாய். ... ... (22)

496 **மாரி மலைமுழஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும் * சீரிய சிங்க மறிவுற்றுத் தீவிழித்து *
வேரி மயிர்பொங்க வெப்பாடும் பேர்ந்துதறி * மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு *
போதருமா போலேநீ பூவைப்பூ வண்ணா * உன் கோயில்நின் றிங்ஙனே போந்தருளி * கோப்புடைய
சீரிய சிங்கா சனத்திருந்து * யாம் வந்த காரிய மாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். (23)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மழை காலத்தில் மலையிலுள்ள குகைகளில் பேடையும் தானும் ஒருவஸ்து என்னலாம்படி ஒட்டிக்கொண்டு கிடந்து உறங்காநின்ற, வீர்யமாகிற சீர்மையுடைய சிங்கமானது உணர்ந்தெழுந்து நெருப்புப்பொறி பறக்கும்படி கண்களை விழித்து ஜாதிக்கு உரிய பரிமளமுள்ள உளை மயிர்களானவை சிலும்பும்படி நாற்புறங்களிலும் புடை பெயர்ந்து அசைந்து சரீரத்தை உதறிச் சோம்பல் முறித்து கர்ஜனை பண்ணி வெளிப் புறப்பட்டு வருவது போல, காயாம் பூப்போன்ற நிறத்தை யுடைய பிரானே! நீ உன்னுடைய திருக்கோயிலினின்றும் இவ்விடத்தேற ஆஸ்தாநத்தில் எழுந்தருளி அழகிய ஸந்நிவேசத்தை யுடைய லோகோத்தரமான ஸிம்ஹாஸநத்தின் மீது எழுந்தருளியிருந்து நாங்கள் மநோரதித்துக்கொண்டு வந்த காரியத்தை விசாரித்துக் கிருபை செய்யவேணும். ஏல் ஓர் எம் பாவாய். ... ... (23)

497 அன்றிவ் வுலக மளந்தா யடிபோற்றி * சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய் திறல்போற்றி *
பொன்றச் சகட முதைத்தாய் புகழ் போற்றி * கன்று குணிலா வெறிந்தாய் கழல்போற்றி*
குன்று குடையா வெடுத்தாய் குணம் போற்றி * வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி *
என்றென்றுன் சேவகமே யேத்திப் பறைகொள்வான் * இன்றியாம் வந்தோ மிரங்கேலோ ரெம்பாவாய்.

இந்திரன் முதலானவர்கள் மஹாபலியால் நலிவுபட்ட அக்காலத்தில் இந்த லோகங்களை இரண்டடியால் அளந்தருளினவனே! உன்னுடைய அத் திருவடிகள் பல்லாண்டு பல்லாண்டு வாழ்க; பிராட்டியைக் களவு கண்ட இராவணனிருக்கு மிடத்தில் எழுந்தருளி அவனுடைய பட்டணமாகிய அழகிய லங்காபுரியை அழித்தருளினவனே! உன்னுடைய மிடுக்கு பல்லாண்டு வாழ்க; சகடாசுரன் முடியும்படி அச்சகடத்தை உதைத்தருளினவனே! உன்னுடைய கீர்த்தியானது போற்றி!; கன்றாய் நின்ற அஸுரனை [வத்ஸாஸுரனை] எறிதடியாகக் கொண்டு கபித்தாஸுரன் மீது எறிந்தருளினவனே! உன்னுடைய திருவடிகள் போற்றி!; கோவர்த்தன கிரியைக் குடையாகத் தூக்கினவனே! உன்னுடைய ஸௌசீல்ய ஸௌலப்யாதி குணங்கள் போற்றி!; பகைவரை ஜயித்து த்வேஷித்தை அழிக்கின்ற உனது திருக்கையிலுள்ள வேல் வாழ்க; என்றிப்படிப் பலவாறாக மங்களா சாஸநம் பண்ணிக்கொண்டு உன்னுடைய வீர்யங்களையே புகழ்ந்து கொண்டு அடியோம் இப்போது பறை கொள்வதற்காக உன்னிடம் விடை கொண்டோம்; கிருபை பண்ணி யருள்; ஏல் ஓர் எம் பாவாய்.

இன்று+யாம், இன்றியாம்; "யவ்வரினிய்யாம்" என்பது நன்னூல். ... (24)

498 ஒருத்தி மகனாய்ப் பிறந்து * ஓரிரவில் ஒருத்தி மகனா யொளித்து வளர *
தரிக்கிலா னாகித்தான் தீங்கு நினைந்த * கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில் *
நெருப்பென்ன நின்ற நெடுமாலே * உன்னை அருத்தித்து வந்தோம் பறைதருதி யாகில் *
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி * வருத்தமுந் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். (25)

தேவகிப் பிராட்டியாகிற ஒருத்திக்குப் பிள்ளையாய் அவதரித்து அவதார காலமாகிய அந்த ஒரு ராத்திரியில் திருவாய்ப்பாடியில் நந்தகோபர் திருமாளிகையில் வந்து சேர்ந்து யசோதைப் பிராட்டியாகிற ஒருத்தியினுடைய பிள்ளையாக ஏகாந்தமாக வளருங் காலத்தில் தான் [கம்ஸன்] அங்ஙனம் வளர்வதைப் பொறுதவனாய் இவனை எப்படியாகிலும் கொல்லவேணும் என்று தீங்கை நினைத்த கம்ஸனுடைய எண்ணத்தை வீணாக்கி அக்கஞ்சனுடைய வயிற்றில் 'நெருப்பு' என்னும்படி நின்ற ஸர்வாதிகனான எம்பெருமானே! உன்னையே பெற வேண்டி வந்தோம்; எங்களுடைய மநோரதத்தை நிறைவேற்றித் தருவாயாகில் பிராட்டி விரும்பத்தக்க ஸம்பத்தையும் வீர்யத்தையும் நாங்கள் பாடி உன்னைப் பிரிந்து படுகிற துயரம் நீங்கி மகிழ்ந்திடுவோம்; ஏல் ஓர் எம் பாவாய், ... (25)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

499 மாலே மணிவண்ணா மார்கழி நீராடுவான் * மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல் *
ஞாலத்தை யெல்லாம் நடுங்க முரல்வன * பாலன்ன வண்ணத்துன் பாஞ்சசன்னியமே *
போல்வன சங்கங்கள் போய்ப்பா டுடையனவே * சாலப் பெரும்பறையே பல்லாண்டிசைப்பாரே *
கோல விளக்கே கொடியே விதானமே * ஆலி னிலையா யருளேலோ ரெம்பாவாய். (26)

அடியார் பக்கலில் வ்யாமோஹமுடையவனே! நீலமணிபோன்ற வடிவை உடையவனே! ப்ரளய காலத்தில் ஆலந்தளிரில் பள்ளிகொள்பவனே! மார்கழி நீராட்டத்திற்காக உத்தம புருஷர்கள் அனுட்டிக்கும் முறைமைகளில் வேண்டியவற்றைக் கேட்கிறாயாகில்; அவற்றைச் சொல்லுகிறோம்; பூமியடங்கலும் நடுங்கும்படி ஒலிசெய்யக் கடவனவும் பால் போன்ற நிறமுடையதான உன்னுடைய ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஒத்திருப்பனவுமான சங்கங்களையும், மிகவும் இடமுடையனவும் மிகவும் பெரியனவுமான பறைகளையும் திருப்பல்லாண்டு பாடுபவர்களையும் மங்கள தீபங்களையும் த்வஜங்களையும் மேற்கட்டிகளையும் ப்ரஸாதித்தருள வேணும்; ஏல் ஓர் எம் பாவாய். ... ... (26)

500 கூடாரை வெல்லுஞ்சீர்க் கோவிந்தா * உன்றன்னைப் பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம் *
நாடு புகழும் பரிசினால் நன்றாக * சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே *
பாடகமே யென்றனைய பல்கலனும் யாமணிவோம் * ஆடையுடுப்போ மதன்பின்னே பாற்சோறு *
மூடநெய் பெய்து முழங்கை வழிவார * கூடியிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். (27)

தன் திருவடி பணியாதவர்களையும் வசப்படுத்தவல்ல குணங்களையுடைய கண்ணபிரானே! உன்னை வாயாரப் பாடி உன்னிடத்து யாம் வேண்டுகின்ற பறையைப் பெற்று, பின்னும் நாங்கள் பெறும்படியான ஸம்மானமாவது:—நாட்டார் புகழும்படியாக, கையிலணியும் ஆபரணமான சூடகங்களும் தோள்வளைகளும் காதுக்கிடும் ஆபரணமானதோடும் கர்ணப்பூவும் பாதகடகமும் என்று சொல்லப்படும் இவ்வாபரணங்கள் போன்ற மற்றும் பல ஆபரணங்களும் உன்னாலும் நப்பின்னைப் பிராட்டியினாலும் பூட்டப்பட யாம் நன்றாக அணிவோம்: சேலைகளை நீ உடுத்த உடுத்துக்கொள்வோம்; அதற்குப் பின்பு, பாற் சோறானது [க்ஷீரான்னம்] மறையும்படியாக நெய் பரிமாறி முழங்கையால் வழியும்படியாக உண்டு நீயும் நாங்களுமாகக் கூடியிருந்து குளிரவேணும்; ஏல் ஓர் எம் பாவாய். ... ... (27)

501 கறவைகள் பின்சென்று கானஞ்சேர்ந் துண்போம்*அறிவொன்று மில்லாத வாய்க்குலத்து*உன்றன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம் * குறைவொன்று மில்லாத கோவிந்தா * உன்றன்னோ
டுறவேல் நமக்கிங் கொழிக்க வொழியாது * அறியாத பிள்ளைகளோ மன்பினால் * உன்றன்னைச்
சிறுபே ரழைத்தனவுஞ் சீறியருளாதே * இறைவாநீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். (28)

ஒன்றிலும் குறைவு இல்லாத பரிபூர்ண கோவிந்தனே! நாங்கள், பசுக்களின் பின்னே போய்க் காடு சேர்ந்து சரீரபோஷணமே பண்ணித் திரியு மவர்களாயும், சிறிதளவும் அறிவில்லாத இடைக்குலத்தில் உன்னை ஸஜாதீயனாகப் பெறுவதற்குத் தக்க புண்ணியமுடையவர்களாயு மிரா நின்றோம்; ஸ்வாமியான கண்ணபிரானே! உன்னோடு எங்களுக்குண்டான உறவானது இங்கு உன்னாலும் எம்மாலும் ஒழிக்க ஒழியமாட்டாதது; லோகமரியாதை ஒன்றும் அறியாத சிறு பெண்களான நாங்கள் உன்னை ப்ரீதியினாலே சிறிய பெயரான நாராயண நாமத்தையிட்டு அழைத்ததைக் குறித்தும் ஆச்ரிதவத்ஸலனான நீ கோபித்தருளாமல் பறை தந்தருள வேணும்; ஏல் ஓர் எம் பாவாய். ... ... (28)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

502 சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து * உன்பொற்றாமரையடியே போற்றும்பொருள்கேளாய் *
பெற்றம்மேய்த்துண்ணுங் குலத்திற் பிறந்து நீ * குற்றேவலெங்களைக் கொள்ளாமற் போகாது *
இற்றைப்பறைகொள்வா னன்றுகாண் கோவிந்தா * எற்றைக்குமேழேழ் பிறவிக்கும் * உன்றன்னோடு
உற்றோமேயாவோ முனக்கே நாமாட்செய்வோம் * மற்றைநங்காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். (29)

கண்ணபிரானே! நாங்கள் விடியற்காலத்திலே இவ்விடத்தேற வந்து உன்னைத்தெண்டனிட்டு உனது அழகிய திருவடித் தாமரைகளை மங்களாசாஸநம் பண்ணுவதற்குப் பிரயோஜனத்தைக் கேட்டருளவேணும்; பசுக்களை மேய்த்து உண்ணும் இடைக் குலத்தில் பிறந்து வைத்து, நீ எங்களிடத்தில் அந்தரங்க கைங்கரியத்தைத் திருவுள்ளம் பற்றுதொழிய வொண்ணாது; இன்று கொடுக்கப்படுகிற இப்பறையைப் பெற்றுக் கொள்வதற்காக நாங்கள் வந்தோமல்லோம்; காலமுள்ளவளவும் உன்னுடைய எவ்வவதாரங்களிலும் உன்னோடு உறவு உடையவர்களாகக் கடவோம்; உனக்கு மாத்திரமே நாங்கள் அடிமை செய்யக் கடவோம்; எங்களுடைய இதர விஷய விருப்பங்களைத் தவிர்த்தருள வேணும்; ஏல் ஓர் எம் பாவாய். (29)

203 வங்கக்கடல்கடைந்த மாதவனைக்கேசவனை * திங்கள் திருமுகத்துச் சேயிழையார்சென்றிறைஞ்சி *
அங்கப்பறைகொண்டவாற்றை * அணிபுதுவைப் பைங்கமலத் தண்டெரியற் பட்டர்பிரான்கோதை
சங்கத்தமிழ்மாலை முப்பதுந்தப்பாமே * இங்கிப்பரிசுரைப்பா ரீரிரண்டுமால்வரைத்தோள் * [சொன்ன *
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் * எங்குந் திருவருள்பெற் றின்புறுவ ரெம்பாவாய். (30)

கப்பல்களையுடைய திருப்பாற்கடலைத் தேவர்களுக்காகக் கடைந்தருளின ச்ரிய: பதியான கண்ணபிரானை, சந்திரன் போன்று அழகிய முகத்தையும் செவ்விய ஆபரணங்களையுமுடைய ஆய்ச்சிகள் அடைந்து வணங்கி அத்திருவாய்ப்பாடியில் தங்கள் புருஷார்த்தத்தைப் பெற்ற அந்த வ்ருத்தாந்தத்தை, அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்த பசுமை பொருந்திய தாமரை விதைகளினாலான குளிர்ந்த மாலையையணிந்த பெரியாழ்வாருடைய திருமகளான ஆண்டாள் அருளிச்செய்த, திரள் திரளாக அநுபவிக்க வேண்டிய தமிழ்மாலையாகிய இம் முப்பது பாசுரங்களையும் தப்பாமல் இந்நிலத்தில் இவ்வண்ணமாக ஓதுமவர்கள் பெரிய மலை போன்ற நான்கு திருத்தோள்களை யுடையவனும் சிவந்த திருக்கண்களையுடைய திருமுகத்தை யுடையவனும், ஐச்வர்யத்தையுடையவனும் ச்ரிய: பதியுமான எம்பெருமானாலே எவ்விடத்தும் அவனுடைய க்ருபையைப் பெற்று ப்ரஹ்மாநந்தசாலிகளாவர். ... ... (30)

அடிவரவு:—மார்கழி, வையம், ஓங்கி, ஆழி, மாயன், புள்ளும், கீசு, கீழ்வானம், தூமணி, நோற்று, கற்று, கனைத்து, புள், உங்கள், எல்லே, நாயகன், அம்பரம், உந்து, குத்து, முப்பது, ஏற்ற, அங்கண், மாரி, அன்றி, ஒருத்தி, மாலே, கூடாரை, கறவை, சிற்றம், வங்கம், தை.

திருப்பாவை யுரை முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஸ்ரீ:

ஆண்டாள் திருவடிகளே சரணம்

நாலாயிர திவ்வியப்பிரபந்தத்தில்

நான்காவது பிரபந்தம்

சூடிக்கொடுத்த நாச்சியார் அருளிச்செய்த

நாச்சியார் திருமொழி

தனியன் உரை

அல்லிநாட்டாமரைமேலாரணங்கினின்றுணைவி
மல்லிநாடாண்டமடமயில்—மெல்லியலாள்
ஆயர்குலவேந்தனகத்தாள் தென்புதுவை
வேயர்பயந்தவிளக்கு.

இதழ்களையுடைய அப்போதலர்ந்த தாமரைப் பூவில் பொருந்தியிராநின்ற தெய்வப் பெண்ணான பெரிய பிராட்டியார்க்கு இஷ்டஸகியாயும் திருமல்லி நாட்டைத் தனது திருக்குணத்தாலே ஈடுபடுத்தி ஆளாநின்றவளாயும் அழகிய மயில்போன்றவளாயும் மென்மைத் தன்மை யுடையளாயுமிருக்கின்ற ஆண்டாள், இடைக் குலத்திற்குத் தலைவனான கண்ணபிரானுடைய திருமேனியிற் பொருத்தமுடையளாயும் அழகிய ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவராய் வேயர்குலத் துதித்தவரான பெரியாழ்வாராலே பெறப்பட்ட விளக்காயு மிராநின்றாள். ... *

தனியன் உரை முற்றிற்று.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீ:

நாச்சியார் திருமொழியில்—முதல்திருமொழி—தையொருதிங்கள்

கண்ணபிரானைப் பெறுகைக்காக் மார்கழித்திங்கள் முழுவதும் நோன்பு நோற்ற ஆண்டாள் அவன் கலவியை எதிர்பார்த்தும் அவன் வந்து கலக்கக்காணாமையாலே தரித்திருக்க மாட்டாமல், பிரிந்திருப்பவர்களைக் கூட்டிவிடவல்ல காமனை நோக்கி 'உன்னையும் உன் தம்பியையுந் தொழுகிறேன். நீ என்னைக் கண்ணபிரானோடு கூட்டிவிட வேணும்' என்று அவன் காலில் விழுந்து இரக்கும்படியைக் கூறும், இத்திருமொழி. ... ... *

504 தையொருதிங்களுந்தரைவிளக்கித் தண்மண்டலமிட்டுமாசிமுன்னாள் *
ஐயநுண்மணற்கொண்டுதெருவணிந்து அழகினுக்கலங்கரித்தனங்கதேவா *
உய்யவுமாங்கொலோவென்றுசொல்லி உன்னையுமும்பியையுந்தொழுதேன் *
வெய்யதோர்தழலுமிழ்சக்கரக்கை வேங்கடவற்கென்னைவிதிக்கிற்றியே. (1)

காமதேவனே! தைமாதம் முழுதும் உத்ஸவத்திற்காக நீ எழுந்தருளவேண்டிய இடத்தைச் சோதித்து மண்டல பூஜைக்காக அழகிய மண்டலாகாரத்தை இட்டு [மேடை கட்டி], மாசி

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மாதத்தின் முதற்பக்ஷத்தில் அழகிய சிறிய மணல்களினால் நீ எழுந்தருளும் வீதிகளை அழகுண்டாவதற்காக நன்றாய் அலங்கரித்து, காமனைத் தொழுதாகிலும் நாம் உஜ்ஜீவிக்கலாகுமோ? எனக்கருதி காமனாகிய உன்னையும் உன் தம்பியான சாமனையும் வணங்காநின்றேன்; ப்ரதிகூலர் பக்கலில் உக்கிரமானதும் நெருப்புப் பொறிகளை உமிழாநிற்பதுமான ஒப்பற்ற திருவாழியாழ்வானைத் திருக்கையில் அணிந்துள்ள திருவேங்கடமுடையானுக்கு என்னைக் கைங்கரியம் பண்ணும்படி கல்பிக்கவேணும்.

பிரிந்தாரைச் சேர்ப்பிக்கவல்லவன் மன்மதனென்று கேள்விப்பட்டு 'அவன் காலில் விழுந்தாவது கண்ணபிரானோடு கூடப்பெறுவோம்' எனக் கருதி, அங்ஙனமே அந்த மன்மதனைத் தன் காரியஞ்செய்யும்படிக்கு ஈடாக ஆராதிக்க நினைத்து, அவன் வரவேண்டிய இடங்களையும் தெருக்களையும் பரிஷ்கரித்து அழகிய சிறு மணல்களால் அலங்கரித்து அழகு பெறுவித்து மண்டல பூஜைக்காக மண்டலாகாரமான மேடையிட்டு அவனையும் அவன் தம்பியையும் வணங்குவதாகக் கூறும் பாசுரம், இது. "உய்யவுமாங்கொலோ!" என்று ஐயப்படுவதற்குக் காரணம் யாதெனில், ஸ்வரூபநாசத்தை விளைவிக்கவல்ல தேவதையைப் பற்றினமையால், இப்பற்று உஜ்ஜீவந ஹேதுவாமோ? அன்றி, கீழ்விழுகைக்கு ஹேதுவாமோ? என்று நெஞ்சு தளும்புகிறபடி.

உம்பி='உன் தம்பி' என்பதன் மரூஉ. "காமன்தம்பி சாமன்" என்று பெரியவாச்சான்பிள்ளை உரைத்தருளினர்; அதன்விவரணம்; கண்ணபிரானுக்குத் தேவிமார் பலர் உளரென்றும், அவர்களுள் ருக்மிணிப்பிராட்டியிடத்தில் மன்மதாம்சமாக ப்ரத்யும்நன் பிறந்தனன் என்றும், ஜாம்பவதி தேவியினிடத்தில் 'ஸாம்பன்' என்பவன் பிறந்தனன் என்றும் ஸ்ரீபாகவதத்திற் கூறியுள்ளதனாலும், இங்குச் சாமன் என்றது ஸாம்பனையேயாகையாலும் காமனுக்குச் சாமன் தம்பியாயினனென்க. (வேற்று வயிற்றுத்தம்பி.) மன்மதனைத் தொழுகைக்கு ப்ரயோஜநஞ் சொல்லுகிறது – நான்காமடி. ஸ்ரீ வைகுண்டத்தில் அயர்வறு மமரர்கட்குக் காட்சி கொடுத்துத் தன் செருக்குத் தோற்ற வீற்றிருக்குமவன் 'ஸம்ஸாரிகளும் இப்பேற்றைப் பெற்று வாழவேணும்' என்று அங்குநின்றும்போந்து முதற்பயணமெடுத்துவிட்டு, அடியாருடைய விரோதிகளை ஒழிக்குமியல்வினனான திருவாழியாழ்வானைக் கையிலுடையனாய்க் கொண்டு திருமலையில்வந்து நிற்கிறவனோடே என்னைக் கூட்டவேணுமென்கிறாள். ... ... (1)

505 வெள்ளைநுண்மணற்கொண்டுதெருவணிந்து வெள்வரைப்பதன்முன்னந்துறைபடிந்து *
முள்ளுமில்லாச்சுள்ளியெரிமடுத்து முயன்றுன்னைநோற்கின்றேன்காமதேவா *
கள்ளவிழ்பூங்கணைதொடுத்துக்கொண்டு கடல்வண்ணனென்பதோர்பேரெழுதி *
புள்ளினைவாய்பிளந்தானென்பதோர் இலக்கினிற்புகவென்னையெய்கிற்றியே. (2)

மன்மதத்தேவே! உன் விழவுக்காக் வெளுத்த சிறுமணல்களைக் கொண்டு வீதிகளை அலங்கரித்து, கிழக்கு வெளுப்பதற்கு முன்னமே நீர்த்துறைகளில் முழுகி, எறும்பு முதலியவை இல்லாதவளவேயன்றியே முள்ளுமில்லாத சுள்ளிகளை நெருப்பிலிட்டு இவ்வாறான ப்ரயத்நங்களைச் செய்து உன்னைக்குறித்து நோன்பு நோற்காநின்றேன்; ஆனபின்பு, தேன் பெருகாநின்றுள்ள புஷ்பங்களாகிற அம்புகளை வில்லில் தொடுத்துக் கொண்டு கண்ணபிரானுடைய கடல்வண்ணனென்கிற ஒரு திருநாமத்தை அம்பிலே எழுதிக்கொண்டு, 'பகாஸுரனுடைய வாயைக் கீண்டெறிந்தவன்' என்னும் ஓர் குறியாகிற அக்கடல் வண்ணன் பக்கலில் நான் சென்று சேரும்படி என்னை நீ சேர்ப்பிக்கவேணும்,

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சிறிய வெண்மணல்களைக் கொண்டு வீதிகளை அலங்கரித்தலும், நாட்காலே நீராடுதலும், ஸமித்துக்களை நெருப்பிலிட்டுத் தீவளர்த்தலும் இங்குக் காமநோன்புக்கு உறுப்பாகச் செய்யு மவையென்க. சுள்ளி—இளவிறகு. முயன்று=‘எம்பெருமான்றானே வந்து நம்மை ஸ்வீகரிக்க நிற்றல் ஸ்வரூபாநுரூபம்’ என்று அறுதியிட்டு நிற்கக் கடவளான நான், இப்போது அவனைப் பெறுகைக்குச் செய்யும் முயற்சி இது காணாய் என்கை. இம்முயற்சிக்கு ப்ரயோஜநங் கூறுவன, பின்னடிகள். கள்ளவிழ் பூங்கணை=அரவிந்தம், அசோகம், மா, நவமல்லிகை, கருநெய்தல் ஆகிய இவ்வைந்து மலர்களும் மன்மதனுக்கு அம்புகளாம். கடல் வண்ணன் இத்யாதி. ‘எழுதி’ என்றது—அம்பிலே எழுதி என்றவாறுமாம், நெஞ்சிலே எழுதிக்கொண்டு என்றவாறுமாம்; ‘அம்பிலே எழுதிக்கொண்டு’ என்ற பக்ஷத்தில் ‘ச்ரமஹரமான வடிவையுடைய உன்னை ஆண்டாள் ஆசைப்பட்டாள்’ என்று அம்பிலே எழுதிக்கொண்டு அவ்வழியாலே அவனுக்கு என்மீது ஆசையை உண்டாக்கிப் பின்னை அவனோடு என்னைச் சேர்க்கவேணுமென வேண்டுவதாகக் கருத்து உணரத்தக்கது; இனி, ‘நெஞ்சிலே எழுதிக் கொண்டு’ என்ற பக்ஷத்தில், இன்னானோடு இவளைச் சேர்ப்பிக்க வேணுமென்று ஸங்கல்பித்துக்கொண்டு என்றபடி. “வெள்வரைப்பதன்முன்னம்” என்றது—‘வரைவெளுப்பதன் முன்னம்’ என்றபடியாய், உதயகிரி வெளுப்பதற்குமுன்னே எனப்பொருள்படுமென்று சிலர் கூறுவர். இலக்கு—ஆண்டாள் தன்னுடைய ஆசை சென்று சேரும்படியான குறிப்பிடம். எய்கிற்றியே?—சேர்ப்பிக்கவல்லையே? என்றுமாம். என்னை என்பதை உருபுமயக்கமாகக் கொண்டு, ‘எனக்காக’ எனப் பொருள்கொண்டு, எய்கிற்றி—புஷ்பபாணங்களைக் கண்ணபிரான் மீது பிரயோகிக்கவேணும் என்றவாறாகவு முரைக்க இடமுண்டு. ... ... (2)

506 மத்தநன்னறுமலர்முருக்கமலர்கொண்டு முப்போதுமுன்னடிவணங்கி *
தத்துவமிலியென்றுநெஞ்செரிந்து வாசகத்தழித்துன்னைவைதிடாமே *
கொத்தலர்பூங்கணைதொடுத்துக்கொண்டு கோவிந்தனென்பதோர்பேரெழுதி *
வித்தகன்வேங்கடவாணனென்னும் விளக்கினிற்புகவென்னைவிதிக்கிற்றியே. (3)

காமதேவனே!—; நல்ல மணமிக்க ஊமத்த மலர்களையும் முருக்கமலர்களையுங் கொண்டு மூன்று காலங்களிலும் உன் அடியை வணங்கி ‘இவன் பொய்யான தெய்வம்’ என்று சொல்லி மனங்கொதித்து உன் கவுரவத்தை அழித்து வாய்கொண்டு உன்னை நிந்திக்கவேண்டாதபடி கொத்துக் கொத்தாக விகஸியாநின்ற புஷ்பங்களாகிற அம்புகளை வில்லில் தொடுத்துக்கொண்டு கோவிந்தநாமத்தை நெஞ்சில் தரித்துக்கொண்டு அற்புதனான திருவேங்கடமுடையான் என்கிற விளக்கிலே நான் சேரும்படி என்னை நீ செய்யவேணும்.

மன்மதன் ரஜோகுணப்ரசுரனாதலால் மதகரமான மலர்கள் அவனுக்கு இடத்தக்கவையென்று கொண்டு ஊமத்தை மலர்களையும் முருக்க மலர்களையு மிடுகிறபடி. முப்போது—இரண்டுசந்தியும் ஒரு உச்சிப்போதும். இரண்டாமடியின் கருத்து;—நான் உன் அடிபணிவதற்குப் பலனாக என் மநோரதத்தை நீ நிறைவேற்றாதொழியில், எனது நெஞ்சானது மிகவுங் கொதிப்படைந்து, ‘மன்மதன் மெய்யே பலன்தருந் தெய்வமல்லன்; இவன் பொய் சொல்லுமவன்’ என்று நாடெங்குமறியும்படி நான் உன் மஹிமையை அழித்து நிந்திக்க நேரிடும்; அப்படிப்பட்ட பரிபவத்தை நீ அடையாமல் தப்பாமல் பேறுபெறுவிக்கப் பாராய் என்கை. தத்துவம்—உண்மை; இலி—இல்லாதவன். வாசகத்து என்றது—நெஞ்சில் நினைக்குமளவே யன்றியே வெளிப்படையாகக் கூறுதலைக் கூறியவாறு. ... ... (3)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

507 சுவரிற்புராணநின்பேரெழுதிச் சுறவநற்கொடிக்களுந்துரங்கங்களும் *
கவரிப்பிணாக்களுங்கருப்புவில்லுங் காட்டித்தந்தேன்கண்டாய்காமதேவா *
அவரைப்பிராயந்தொடங்கி யென்றுமாதரித்தெழுந்தவென்தடமுலைகள் *
துவரைப்பிரானுக்கேசங்கற்பித்துத் தொழுதுவைத்தேனொல்லைவிதிக்கிற்றியே. (4)

நெடுகாளாக எனக்கு உபகரிக்குமவனே! மன்மதனே! சுவரிலே உனது பெயர்களை எழுதி, மீன்களாகிற நல்ல த்வஜங்களையும் குதிரைகளையும் சாமரம் வீசுகின்ற பெண்களையும் கரும்பாகிற தநுஸ்ஸையும் உனக்கு உரியனவாகக் காட்டிக்கொடுத்தேன்; இளம்பருவமே தொடங்கி அக்கண்ணபிரானையே எப்போதும் விரும்பிக் கிளர்ந்த எனது பருத்த முலைகளை த்வாரகைக்குத் தலைவனான அக்கண்ணபிரானுக்கே அநுபவிக்கத்தக்கவை என்று ஸங்கல்பித்து உன்னைத் தெண்டனிடா நின்றேன்; இந்த மநோரதத்தை நீ சீக்கிரம் தலைக்கட்டுக.

கண்ணபிரானைக் காணவேணுமென்ற ஆவலுடைய ஆண்டாள் அவனைக்கண்டால் பின்பு காமதேவனை மறக்கக்கூடுமாதலால் அங்ஙனம் மறதி நேரிடாமைக்காக, அந்த மன்மதனைப் பரிஜந பரிவாரங்களுடன் சுவரில் எழுதிவைக்கும்படியைக் கூறுவன, முன்னடிகள். புராண—பிரிந்தவர்களைக் கூட்டவல்லவனாகப் புராணங்களில் கூறப்பட்டுள்ளவனே! என்றுங்கூறுவர். சுறவம்—மத்ஸ்யவிசேஷம். காமன் மீனைக் கொடியாக வுடையனாதல் அறிக. துரங்கம்—வடசொல். கவரி—சமரீ என்ற வடசொல்விகாரம். பிணா—பெண் பொதுப் பெயர். கரும்பு + வில், கருப்புவில்; காமனுக்கு 'இக்ஷுதந்வா' என்று வடமொழியிற் பெயர் வழங்குமாறறிக. பின்னடிகளில், கண்ணபிரானை யன்றி மற்றொரு தேவதையை அநுபவிக்கத் தனக்கு ருசியில்லாமையையும், அந்த ருசியைப் பயன் பெறுவிக்க வேண்டுமென்பதையும் கூறுகின்றனள். அவரப்பிராயமென்பதில் அவரமென்றது வடசொல். ஒல்லை—இம்முலைகளின் செவ்வி அழிவதற்கு முன்னமே என்று கருத்து. ... ... (4)

508 வானிடைவாழுமவ்வானவர்க்கு மறையவர்வேள்வியில்வகுத்தவவி *
கானிடைத்திரிவதோர்நரிபுகுந்து கடப்பதும்மோப்பதும்செய்வதொப்ப *
ஊனிடையாழிசங்குத்தமர்க்கென்று உன்னித்தெழுந்தவென்தடமுலைகள் *
மானிடவர்க்கென்றுபேச்சுப்படில் வாழகில்லேன்கண்டாய்மன்மதனே. (5)

மன்மதனே! ஸ்வர்க்க லோகத்தில் வாழ்கின்ற விலக்ஷணரான இந்திராதி தேவர்களுக்கென்று ப்ராஹ்மணர் யாகத்தில் கொடுத்த ஹவிஸ்ஸை, காட்டிலே திரிகின்ற ஒருநரியானது வந்து கடந்தும் மோந்து பார்த்தும் கெடுப்பதுபோல, தனது திருமேனியில் திருவாழியையும் திருச்சங்கையும் அணிந்துள்ள புருஷோத்தமனுக்காக ஆதரவுடன் கிளர்ந்த எனது பருத்த முலைகளானவை அப்புருஷோத்தமனை யொழியச் சில மநுஷ்யர்களுக்கு உரியவை என்கிற பேச்சு நாட்டில் உண்டாகுமேயானால் நான் உயிர் வாழ்ந்திருக்க மாட்டேன். கண்டாய்—முன்னிலையசை.

இந்நிலவுலகில் அந்தணர்கள் அனுட்டிக்கும் யாகங்களில், 'இந்த்ராய ஸ்வாஹா' 'ஸூர்யாய ஸ்வாஹா' என்று இந்திரன் முதலிய தேவர்கட்கு வகுக்கும் புரோடாசத்தை, மிகவும் அற்பஜந்துவாகிய ஒரு காட்டு நரி கிட்டி, அந்த ஹவிஸ்ஸைக் காலால் கடந்தும் மூக்கால் மோந்தும் நஷ்டமாக்குவதுபோல், கண்ணபிரானுக்காகக் கிளர்ந்தெழுந்த என் கொங்கைகளை மானிடர்க்கு உரியனவாகப் பேசும்பேச்சொன்று இப்பூமண்டலத்தில் கிளம்புமே யாகில் எனது உயிர் உடனே மாய்ந்துவிடும், அப்பேச்சுத்தானே எனக்கு விஷமாகு மென்று காமனை நோக்கிக் கூறுகின்றாள். இதனால், மநுஷ்யனுய்ப் பிறந்த ஒரு பிள்ளைக்கு ஆண்டாளைத் தாரை

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வார்த்துத் தரலாமென்ற ஒரு பேச்சு ஒரு காபுருஷன் வாயில்வந்தாலும் அது தனக்கு அஸஹ்யமெனக் கூறும் முகத்தால் கண்ணபிரானொருவனையே தான் பதியாகப் பெற விரும்புமாற்றைக் கூறியவாறு. அவி—ஹவிஸ் என்ற வடசொல் விகாரம். ... (5)

509 உருவுடையாரிளையார்களல்லார் ஒத்துவல்லார்களைக்கொண்டு * வைகல்
தெருவிடையெதிர்கொண்டு பங்குனிநாள்திருந்தவேநோற்கின்றேன்காமதேவா *
கருவுடைமுகில்வண்ணன்காயாவண்ணன் கருவிளைபோல்வண்ணன் * கமலவண்ணத்
திருவுடைமுகத்தினில்திருக்கண்களால் திருந்தவேநோக்கெனக்கருள்கண்டாய். (6)

மன்மதனே! அழகிய வடிவையுடையராயும் யௌவந பருவமுடையராயும் காமதந்திரத்திற் சொன்ன ஆசாரங்களையுடையராயும் காமஸூத்ரத்தில் வல்லமை யுடையராயுமுள்ளவர்களை முன்னிட்டுக்கொண்டு நாள்தோறும் நீ வரும் வழியில் எதிரே சென்று பங்குனிமாதத்துப் பெரிய திருநாளில் நல்ல தெளிவுடனே உன்னைக் குறித்து நோன்பு நோற்கா நின்றேன், நீரைக் கருவிலேயுடைய மேகம்போன்ற திருநிறமுடையனும் காயாம்பூப்போன்ற திருநிறத்தை யுடையனும் காக்கணம் பூப்போல் பளபளப்பை யுடையனுமான கண்ணபிரான் செந்தாமரை மலரின் நிறம் போன்ற காந்தியையுடைய திருமுக மண்டலத்திலுண்டான திருக்கண்களினால் என் விஷயத்தில் விசேஷகடாக்ஷம் செய்தருளும்படி நீ கிருபை பண்ணவேணும்.

எம்பெருமானை அடிபணியவேண்டுவார் "வேதம் வல்லார்களைக்கொண்டு விண்ணோர் பெருமான் திருப்பாதம்பணிந்து" என்றபடி வேதவித்துக்களான வைதிகரை முன்னிட்டுப் பணிவதுபோல், ராஜஸதேவதையான காமனைக்குறித்து நோன்பு நோற்கைக்கு ஆண்டாள் சில அதிகாரிகளை முன்னிட்டுக்கொண்டு இழியுமாறுகூறுவன, முன்னடிகள். ஒத்து—ஓதப்படுவது; ப்ரகரணபலத்தினால் காமஸூத்ரமாகிற வேதத்தை இங்குக்கூறும்; அதாவது—வாத்ஸ்யாயந சாஸ்த்ரம். தெருவிடை எதிர்கொள்ளுகை—ஆதராதிசயத்தின் காரியம். திருந்தவே நோற்கின்றேன் என்றது - காமனைத் தொழுகை ஸ்வரூபநாசக மன்றோவென்று இருய்க்காமல் நோற்கின்றேன் என்றவாறு. கருவுடமுகில்—நீர் கொண்டெழுந்த காளமேகம். நோக்க + எனக்கு, நோக்கெனக்கு; தொகுத்தல் விகாரம். ... ... (6)

510 காயுடைநெல்லொடுகரும்பமைத்துக் கட்டியரிசியவலமைத்து *
வாயுடைமறையவர்மந்திரத்தால் மன்மதனேயுன்னைவணங்குகின்றேன் *
தேசமுன்னளந்தவன்திரிவிக்கிரமன் திருக்கைகளாலென்னைத்தீண்டும்வண்ணம் *
சாயுடைவயிறுமென்தடமுலையும் தரணியில்தலைப்புகழ்நரக்கிற்றியே. (7)

மன்மதனே! பசுங்காய் நெல்லும் கரும்பும் சமைத்து, அதனோடுகூட கருப்புக்கட்டியும் பச்சரிசியும் அவலும் ஆகிய இவற்றையும் சமைத்து, நல்ல ஸ்வரத்தையுடையராயும் காமசாஸ்திரத்தில் வல்லவர்களாயுமிருப்பவர்களுடைய மந்திரத்தினால் உன்னை வணங்குகின்றேன்; மூவுலகும் மாவலியால் அபஹரிக்கப்பட்ட காலத்தில் ஸகலலோகங்களையும் திருவடிகளால் அளந்தருளினவனும் த்ரிவிக்கிரமனென்னும் திருநாமமுடையனுமான கண்ணபிரான் என்னுடைய ஒளியையுடைய வயிற்றையும் மென்மையும் பருமையும் பொருந்திய முலைகளையும் தனது திருக்கைகளினால் ஸ்பர்சிக்கும்படி பண்ணி இப்பூமண்டலத்தில் நிலைநின்ற கீர்த்தியை நான் பெறும்படி தந்தருளவேணும்.

19

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பால்மாறாத பசுங்காய் நெல்லும், கரும்பும், கருப்புக்கட்டியும், பச்சரிசியும், அவலுமாகிற இவை ரஜோகுண ப்ரசுரனான காமதேவனுக்கு ஆமவையென்க. "வாயுடை மறையவர் மந்திரத்தால்" என்றது—காம சாஸ்த்ரமாகிய வாத்ஸ்யாயநத்திற் கூறியமுறை வழுவாதபடி என்றவாறு. ... ... (7)

511 மாசுடையுடம்பொடுதலையுலறி வாய்ப்புறம்வெளுத்தொருபோதுமுண்டு *
தேசுடைத்திறலுடைக்காமதேவா நோற்கின்றநோன்பினைக்குறிக்கொள்கண்டாய் *
பேசுவதொன்றுண்டிங்கெம்பெருமான் பெண்மையைத்தலையுடைத்தாக்கும்வண்ணம் *
கேசவநம்பியைக்கால்பிடிப்பாளென்னும் இப்பேறெனக்கருள்கண்டாய். (8)

பிரிந்தாரைக் கூட்டுகையால் வந்த புகரையுடையனும் மிடுக்கையுடையனும் எமக்கு ஸ்வாமியுமான மன்மதனே! அழுக்குப்படிந்த உடம்போடேகூட தலைமயிரை விரித்துக் கொண்டு தாம்பூல சர்வணமில்லாமையால் உதடுகள் வெளுக்கப்பெற்று ஒருபோது உண்டு [ஒருவேளை புஜித்து] இப்படிப்பட்ட வருத்தத்துடன் நான் நோற்கிற நோன்பை நீ எப்போதும் ஞாபகத்தில் வைக்கவேணும்; இப்போது சொல்லவேண்டுவது ஒன்று உளது; அதைச் சொல்லுகிறேன் கேள்; என்னுடைய ஸத்தையை ஜீவித்திருக்கும்படி செய்வதற் குறுப்பாக கண்ணபிரானுக்குக் கால் பிடிப்பவள் இவள்' என்கிற இப்புருஷார்த்தத்தை எனக்கு அருள வேணும்.

மாசுடை உடம்பொடு=உடம்பில் அழுக்கேறும்படி முழுகாமலிருந்து என்றபடி. கண்ணபிரானோடு கலக்கப்பெறாத சோகத்தினால் உடம்பழுக்குப் போகக் குளிக்கமாட்டிற்றிலளென்க. தலைஉலறி=குழலில் பூக்களை அணிந்து கொள்ளாமலிருக்கையைக் கூறியவாறு. வாய்ப்புறம்வெளுத்து—வெற்றிலை தின்கைக்கு ப்ரஸக்தியு மில்லாமையால் அதரம் வெளுக்கவேணுமத்தனையிறே. 'ஒருபோதும்' என்றவிடத்து உம்மை—இசைநிறையென்னலாம். 'என்றைக்காவது ஒருநாள் கண்ணபிரான் வந்து கூடுவன்கொல்!' என்னும் நசையினால் ஒருவேளை உண்டு உயிரைக் காக்கும்படி. குறிக்கொள்='ஆண்டாள் இவ்வளவு வருத்தப்பட்டு ஒரு நோன்பை நோற்றாளே!' என்று உன் நெஞ்சில் எப்போதும் பட்டிருக்கவேண்டு மென்றபடி. கண்ணபிரானுக்குத் திருவடி வருடும்படியான பாக்கியம் எனக்கு வாய்த்தாலன்றி என் ஸத்தை ஜீவியாதென்கை பின்னடிகளின் கருத்து. அவனை முலையாலணைக்க வேண்டுகின்றவிவள் கால்பிடிக்கப்பெறவேண்டுவானேன்? எனில்; காலைப் பிடித்துக்கொண்டால் ஆகாத காரியமொன்று மில்லையே யென்று நினைவுபோலும். "அநதிக்ரமணீயம் ஹி சரணக்ரஹணம்." (8)

512 தொழுதுமுப்போதுமுன்னடிவணங்கித் தூமலர்தூய்த்தொழுதேத்துகின்றேன் *
பழுதின்றிப்பார்க்கடல்வண்ணனுக்கே பணிசெய்துவாழப்பெறாவிடில்நான் *
அழுதழுதலமந்தம்மாவழங்க ஆற்றவுமதுவுனக்குறைக்குங்கண்டாய் *
உழுவதோரெருத்தினைநுகங்கொடுபாய்ந்து ஊட்டமின்றித்துரந்தாலொக்குமே. (9)

இரண்டு சந்தி, உச்சிப்போது ஒன்று ஆகிய மூன்று காலங்களிலும் ப்ரணாமபூர்வகமாக உன்னை ஆச்ரயித்து உன் பாதங்களில் பரிசுத்தமான புஷ்பங்களைப் பணிமாறி ஸேவித்து ஸ்தோத்ரம் பண்ணுகிற நான் பூமியைச்சூழ்ந்த கடல்போன்ற திருநிறத்தையுடைய கண்ணபிரானுக்கே குற்றமொன்றுமில்லாமல் கைங்கரியம் பண்ணி உஜ்ஜீவியா தொழிவேனாகில், பின்பு நான் பலகாலும் அழுது தடுமாறி 'அம்மா!' என்று கதறிக்கொண்டு திரிய, அப்படி என்னைத்துடிக்க விடுகையாகிற பாவமானது மிகவும் உன் தலைமேல் ஏறும்; அன்றியும், என்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

மனோரதத்தை நீ நிறைவேற்று தொழிவதானது ஏருழுகின்ற ஒரு எருதை நுகத்தடியால் தள்ளித் தீனியில்லாமல் ஓட்டிவிடுவதைப் போலாம்.

ஸாத்விகராயிருப்பார் பகவதாராதநம் பண்ணித் தலைக்கட்டினபிறகு திருவடிகளிலே விழுந்து 'நான் தொடங்கின திருவாராதநத்தைத் தலைக்கட்டினேன், திருவுள்ளத்திற்குப் பாங்கானபடியே போது போக்கியருளவேணும்' என்று ஸ்தோத்ர ரூபமானவற்றை விண்ணப்பஞ் செய்வதுபோல், இவள் மன்மதனிடத்திற் சில விண்ணப்பம் செய்கிறாள். கடையடியின் கருத்து :—நான் உனக்கு இன்றளவுஞ் செய்த பணிவிடைகளை நீ ஏற்றுக்கொண்டு என் காரியத்தைச் செய்து முடிக்காமற் போவது—உழவன் தன் ஜீவநத்துக்காக எருதினிடத்தில் பூர்ணமாக வேலையை வாங்கிக் கொண்டு, பின்பு அதற்குத் தீனி இடாமல் நுகத்தடியால் அடித்துத் தள்ளி ஓட்டுவது போலாம். கோடு—கொண்டு என்பதன் சிதைவு. ... (9)

513 கருப்புவில்மலர்க்கணைக்காமவேளைக் கழலிணைபணிந்தங்கோர்கரியலற *
மருப்பினையொசித்துப்புள்வாய்பிளந்த மணிவண்ணற்கென்னைவகுத்திடென்று *
பொருப்பன்னமாடம்பொலிந்துதோன்றும் புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை *
விருப்புடையின்றமிழ்மாலைவல்லார் விண்ணவர்கோனடிநண்ணுவரே. (10)

கரும்பாகிற வில்லையும் புஷ்பங்களாகிற அம்புகளையுமுடைய மன்மதனுடைய இரண்டு பாதங்களையும் வணங்கி; 'கம்ஸன் மாளிகை வாசலில் குவலயாபீடமென்ற ஒரு யானையானது வீரிடும்படியாக அதன் கொம்புகளை முறித்து, பகாஸுரனுடைய வாயைக் கீண்டெறிந்தவனும், நீலமணிபோன்ற நிறத்தனுமான கண்ணபிரானுக்கு என்னை அடிமைப்படுத்தவேணும்' என்று, மலைபோன்ற மாடங்கள் மிகவும் விளங்காநிற்கப்பெற்ற ஸ்ரீவில்லிபுத்தூரில் உள்ளவர்கட்கு ஸ்வாமியான பெரியாழ்வாருடைய மகளாகிய ஆண்டாள் அருளிச்செய்த விருப்பமடியாகப் பிறந்த இனிய தமிழ்மாலையாகிய இப்பாசுரங்களை ஓதவல்லவர்கள் நித்யஸூரிகளுக்குத் தலைவனான எம்பெருமானுடைய திருவடிகளைக் கிட்டப் பெறுவர். ... ... (10)

அடிவரவு :—தை வெள்ளை மத்தம் சுவர் வான் உரு காய் மாசு தொழுது கருப்பு நாமம்.

ஆண்டாளெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

இரண்டாந்திருமொழி—நாமமாயிரம்

திருவாய்ப்பாடியில் ஆய்ச்சிகள் சிற்றிலிழைப்பதாகிற விளையாட்டில் ஊன்றி அந்ய பரத்வம் பாவித்திருக்கையில், கண்ணபிரான் வந்து அந்தச் சிற்றிலையழிக்க முயல, அதைத் தடுத்துப் பேசின ஆய்ச்சிகளின் பாவனையால் இப்பதிகம் அருளிச் செய்யப்படுகிறது.

514 நாமமாயிரமேத்தநின்ற நாராயணாநரனே * உன்னை
மாமிதன்மகனாகப்பெற்றால் எமக்குவாதைதவிருமே *
காமன்போதருகாலமென்று பங்குனிநாள்கடைபாரித்தோம் *
தீமைசெய்யும்சிரீதரா எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (1)

ஸஹஸ்ரநாமத்தினால் நித்யஸூரிகள் துதிக்கும்படி நின்ற நாராயணனே! சக்ரவர்த்தித்திருமகனாய்ப்பிறந்து மானிடவுடல் கொண்டவனே! ஏற்கெனவே தீம்பனான உன்னை பர்த்தாவாகவும் பெற்றால் நாங்கள் நலிவுபடாதிருக்க முடியுமோ? மன்மதன் வருங்காலமென்று பங்குனி மாதத்தில் அவன்வரும் வழியைக்கோடித்தோம்; தீம்புகளைச்செய்கின்ற ச்ரிய:பதியான

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கண்ணபிரானே! நாங்களிழைக்கின்ற மணற் கொட்டகங்களை நாங்கள் விளையாடுமிடத்தில் வந்து நீ அழிக்கவேண்டா.

மாமிதன் மகன்=கணவன்; மாமியாருடைய பிள்ளை தனக்குக் கணவனிறே. வடமொழியில், கணவனை "ஆர்யபுத்ர:" என்ற சொல்லால் வழங்குமாறறிக; ஆர்யனென்று மாமனாரைச் சொல்லிற்றாய், அவருடைய மகனென்று கணவனைச் சொல்லுகிறது. வாதை—'பாதா' என்ற வடசொல் விகாரம். உலகில் எல்லார்க்குந் தீம்பு செய்கின்ற புருடன் தனது மனைவியிடத்து வந்தால் பொறுக்கவொண்ணாத தீம்பு செய்வனென்பது ப்ரஸித்தமாதலால், அதனை உணர்ந்த இவர்கள், 'ஏற்கெனவே தீம்பனான நீ எமக்குக் கணவனாகவும் வாய்த்தால் எங்களால் துன்பம் அநுபவித்து முடியுமோ' என்கிறார்கள். இதுகேட்ட கண்ணபிரான், 'பெண்காள்! நானோ தீம்பு செய்பவன்? உங்களை நான் நெஞ்சிலும் நினையாதிருக்க, என் வரவை எதிர்பார்த்துச் சிற்றிலிழைக்கிறீர்கள் நீங்களன்றோ?' என்ன; அதுகேட்ட ஆய்ச்சிகள், 'அப்பனே! நீ அங்ஙனம் நினைக்கவேண்டா, நாங்கள் உனக்காகச் சிற்றிலிழைக்கின்றோமல்லோம்; நிகழ்வது பங்குனிமாதமாதலால் காமதேவன் வீதிவலம்வரக் கூடுமென்று அவன் வரும் வீதியிற் சிற்றிலிழைத்து அலங்கரிக்கிறோமித்தனையொழிய உன்னைக் குறித்து ஒன்றுஞ் செய்கின்றிலோம்' என்ன, அதுகேட்ட கண்ணபிரான் 'நீங்கள் சிற்றிலிழைப்பது அந்யார்த்தமாகில், அதனை நான் அழிப்பதும் அந்யார்த்தந்தான்' என்று சொல்லிச் சிற்றிலை அழிக்கப்புக, ஆய்ச்சிகள் 'அழிக்க வேண்டா' என்று விலக்குகின்றனர். ... (1)

515 இன்றுமுற்றுமுதுகுநோவ இருந்திழைத்தவிச்சிற்றிலை *
நன்றுங்கண்ணுறநோக்கி நாங்கொளுமார்வந்தன்னைத்தணிகிடாய் *
அன்றுபாலகனாகி ஆலிலைமேற்றுயின்றவெம்மாதியாய் *
என்றுமுன்றனக்கெங்கள்மேல் இரக்கமெழாததெம்பாவமே. (2)

இன்றையதினம் முழுவதும் முதுகு நோம்படி உட்கார்ந்துகொண்டு ஸ்ருஷ்டித்த இந்தச் சிற்றிலை நன்றாக நீ கண் பொருந்தும்படி பார்த்து, நாங்கள் கொண்டிருக்கிற அபிநிவேசத்தைத் தணியச் செய்கிடாய்; மஹாப்ரளயம் வந்தகாலத்தில் சிசுவடிவு கொண்டு ஆலந்தளிரின்மேல் கண்வளர்ந்தருளினவனும் எமக்குத் தலைவனுமான கண்ணபிரானே! எக்காலத்திலும் உனக்கு எம்மிடத்தில் தயவு பிறவாமலிருப்பது நாங்கள் பண்ணின பாவத்தின் பயனேயாம். [* நாங்களுமார்வந்தன்னை * என்கிற பாடமும் ஒருவாறு பொருந்தும்.]

கண்ணபிரானே! நீ ஸர்வசக்தியுக்தனாதலால் எப்படிப்பட்ட அரிய காரியங்களையும் ஒரு ஸங்கல்பமாத்திரத்தினால் வருத்தமறப் படைக்கவல்லை; நாங்கள் *அறிவொன்றுமில்லாத ஆய்க்குலத்திற் பிறந்த அபலைகளாகையாலே இச்சிற்றிலை இழைக்கப் பட்டபாடு * பன்னியுரைக்குங்காற் பாரதமாம்; இப்படி வருத்தப்பட்டுச் செய்த இச்சிற்றிலை நீ நன்றாகக் கண்ணை ஊன்றவைத்துக் கண்டாயாகில் எங்களுடைய ஆசை ஒருவாறு தணியும் என்று ஆய்ச்சிகள் சொல்லச் செய்தேயும், கண்ணபிரான் அதனைக் கேளாமல் சிற்றிலை அழிப்பதாக முயல, அது கண்ட ஆய்ச்சிகள், 'நாயனே! பண்டு இப்பாரெல்லாம் நெடுங்கடலேயான காலத்தில் உலகத்தை யெல்லாம் வயிற்றிலே வைத்து நோக்கிப் பாலகனாய் ஆலிலையில் பள்ளிகொண்ட பரமகாருணிகனான நீ மிகவும் எளியரான எங்கள் திறத்தில் ஒரு நாளும் அருள் புரியாதொழிவது நாங்கள் பண்ணின பாபத்தின் பலனேகாணென்று உள் வெதும்புகின்றனர்.

"இன்றுமுற்று முதுகு நோவ" என்பதற்குக் கருத்து-எங்கள் முதுகை நோவு தீரச் சற்றுப் பிடிக்கலாகாதோ? என்பதாம். [நாம் கொளும் ஆர்வந்தன்னைத் தணி.] விஷயம் ஸித்தித்தால் ஆசை நிவர்த்திக்குமாதலால், 'நாம் இழைக்குஞ் சிற்றிலைக் கண்ணபிரான் கடாக்ஷிக்க

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வேணும்' என்று ஆசைப்பட்டு இவர்களிழைக்குஞ் சிற்றிலில் அவனுடைய கடாக்ஷம் விழுந்தால் இவர்களுடைய ஆசை தீருமென்க. கோலும்—'கொள்ளும்' என்பதன் விகாரம். "நாங்களு மார்வந்தன்னை" என்ற பாடமும் வியாக்கியானத்திற்கு ஒக்கும்; அப்பாடத்தில், நாங்களும் நோக்கி என்று இயையும். அதன் கருத்து; நாங்கள் இச்சிற்றிலை இழைக்கும்போது இதனைத் தனித்தனி அவயவமாகக் கண்டோமத்தனை யொழிய, ஒரு அவயவியாகக் காணப் பெற்றிலோம்; ஆதலால் எங்களுடைய ஆசை தீரவில்லை; அப்படியிருக்க இதனை நீ அழித்தாயாகில் எங்களுக்குப் பெருத்த குறையாம்; இது ஒரு அவயவியான பின்னர் இத்தை நாங்கள் நன்றாகக் கண்டு மகிழ்ந்து ஆசை தீரும்படி நீ செய்யவேணு மென்பதாம். ... ... (2)

516 குன்றுநீருறைகோளரீ மதயானைகோள்விடுத்தாய் * உன்னைக்
கண்டுமாலுறுவோங்களைக் கடைக்கண்களாலிட்டுவாதியேல் *
வண்டல்நுண்மணல்தெள்ளி யாம்வளைக்கைகளாற்சிரமப்பட்டோம் *
தெண்டிரைக்கடற்பள்ளியாய் எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (3)

மிக்க ஆழத்தையுடைத்தான கடலிலே சாய்ந்தருள்பவனும், மிடுக்கையுடைய சிங்கம் போன்றவனும், மதம் மிக்க கஜேந்திராழ்வானுக்கு முதலையால் நேர்ந்த துன்பத்தைத் தொலைத்தருளினவனுமான கண்ணபிரானே! அடியார் துயரைத் தீர்க்கவல்ல உன்னைப் பார்த்து ஆசைப்படுகின்ற எங்களைக் கடைக்கண்களால் பார்த்து ஹிம்ஸிக்கவேண்டா! நாங்கள் வண்டலிலுள்ள சிறிய மணல்களை வளையல்கள் அணிந்த கைகளினால் புடைத்து மிகவும் கஷ்டப்பட்டோம்; தெளிந்த அலைகளையுடைய திருப்பாற்கடலைப் படுக்கையாகவுடையவனே! நாங்களிழைக்குஞ் சிற்றிலைச் சிதையாதே கொள். ... ... (3)

517 பெய்யுமாமுகில்போல்வண்ணா உன்றன்பேச்சுஞ்செய்கையும் * எங்களை
மையலேற்றிமயக்க உன்முகம்மாயமந்திரந்தான்கொலோ *
நொய்யர்பிள்ளைகளென்பதற்கு உன்னைநோவநாங்களுரைக்கிலோம் *
செய்யதாமரைக்கண்ணினாய் எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (4)

வர்ஷியா நின்றுள்ள காளமேகம் போன்ற திருநிறத்தை யுடையவனே! உன்னுடைய தாழ்ந்த வார்த்தைகளும், தாழ்ந்த வியாபாரங்களும் எங்களைப்பிச்சேறப்பண்ணி அறிவுகெடுக்கைக்கு உன்னுடைய முகமானது சுக்குப்பொடியோ? 'அற்பத்தனமுடைய சிறுமியர் இவர்கள்' என்று நீ சொல்லுவாய் என்று பயப்பட்டு நாங்கள் உன்னைக்குறித்து நெஞ்சுபுண்படும்படி ஒன்றும் சொல்லுகிறோமில்லை; புண்டரிகாக்ஷனே! எங்கள் சிற்றில் வந்து சிதையேல்.

பிரானே! நீ எங்கள் திறத்தில் 'அடியேன், குடியேன்' என்றாற்போலே சொல்லும் அதிவிநய வார்த்தைகளும் கள்ளக்குழைச்சல்களும் எங்களை மிகவும் மயக்குகின்றனவே; இதற்கெல்லாம் அடி உன் திருமுகமண்டலமிறே; இப்படிப்பட்ட மயக்கத்தை உண்டுபண்ணுகைக்கு உன் முகம் அம்மான் பொடியோ? என்கிறார்கள் முன்னடிகளால். மாயமந்திரம்—மாயா மந்த்ரம். மந்த்ர முறை உணர்ந்தவர்கள் ஒரு பொடியை மந்திரித்து ஒருவன்மேல் தூவினால் அப்பொடி அவனை மயக்கிவிடுதல்போல, கண்ணபிரானது திருமுகம் இவர்களை மயக்கிவிட்டதென்க. ... ... (4)

518 வெள்ளைநுண்மணற்கொண்டு சிற்றில்விசித்திரப்பட * வீதிவாய்த்
தெள்ளிநாங்களிழைத்தகோலம் அழித்தியாகிலுமுன்றன்மேல் *
உள்ளமோடியுருகல்லால் உரோடமொன்றுமிலோங்கண்டாய் *
கள்ளமாதவாகேசவா உன்முகத்தனகண்களல்லவே. (5)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கபடச் செய்கைகளையுடைய கண்ணபிரானே! கேசவனே! தெருவிலே அனைவரும் காண நாங்கள் வெளுத்துச் சிறுத்த மணல்களைக்கொண்டு ஆச்சரியப்படும்படி தெளிந்து கட்டின சிற்றிலாகிற கோலத்தை நீ அழித்தாயாகிலும், அதற்காக எங்களுடைய நெஞ்சானது உடைந்து உருகுமத்தனை யொழிய உன்மேலே துளியும் கோபமுடையோ மல்லோம்; உன் முகத்திலுள்ளவை கண்களன்றோ!

மன்மதன் துச்சிலதேவதை யாகையாலே அவனுக்கு இறையும் நெஞ்சுகோணவொண்ணாதென்று அவன் வரும் வீதியைப் பாங்காக அலங்கரித்தற்பொருட்டு நிலாப்போல் வெளுத்த மணல்களைக் கொணர்ந்து, அவற்றைப் பருக்கைக் கற்களின் கலப்பில்லாமல் புடைத்து நாங்களிழைத்த இக்கோலத்தை நீ அழித்தபோதிலும், 'ஸர்வஸ்மாத்பரனானவன் இப்படியெல்லாம் செய்யப் பெறுவதே! ஈதென்ன ஸௌசீல்யம்!' என்று நெஞ்சு உருகி நீராய்ப்போமித்தனையொழிய, ரோஷமென்று பேர்படும்படி ஒரு விகாரமும் பெற்றோமாகோம்; ஆகிலும் உன்முகத்திலுள்ளவை மெய்யே கண்களாகில் நீ இச்சிற்றிலைச் சிதைக்க ஒருப்பட மாட்டாய்; இச்சிற்றிலை அன்புடன் நோக்குகையன்றோ கண்படைத்ததற்குப் பிரயோஜனம் என்கிறார்கள். "வீதிவாய்" = வாய்—ஏழனுருபு. அழித்தி—முன்னிலை யொருமை வினைமுற்று. உரோடம்—ரோஷம். ... ... (5)

519 முற்றிலாதபிள்ளைகளோம் முலைபோந்திலாதோமை * நாடோறும்
சிற்றில்மேலிட்டுக்கொண்டு நீசிறிதுண்டுதிண்ணெனநாமது
கற்றிலோம் * கடலையடைத்தரக்கர்குலங்களை முற்றவுஞ்
செற்று * இலங்கையைப்பூசலாக்கியசேவகா எம்மைவாதியேல். (6)

ஸேதுபந்தம் பண்ணி ராக்ஷஸருடைய குலங்களை முழுதும் களைந்தொழித்து லங்கையை அமர்க்களப்படுத்தின வீரப்பாடு உடையவனே! முற்றாத இளம் பிள்ளைகளாய் முலையும் கிளரப்பெறாத எங்களை நாள்தோறும் சிற்றில் விஷயமாக ஒரு வியாஜத்தை வைத்துக்கொண்டு நீ செய்யுஞ் செய்திகள் சில உள; அவற்றை நாங்கள் அழகிதாக அப்யஸித்தோமல்லோம்; எங்களை நீ துன்பப்படுத்த வேண்டா.

கண்ணபிரான் இன்னது செய்தான்' என்று பிறர்க்குச் சொல்லமுடியாதபடி அவன் சில குறும்புகளைச் செய்ய, அது கண்ட ஆய்ச்சிகள், 'அப்பா! நெஞ்சில் நினைத்தபடி சில செய்யுமவ்வளவேயோ வேண்டுவது? எங்கள் பருவத்தைச் சிறிது ஆராயவேண்டாவோ? "முலையோ முழுமுற்றும் போந்தில" என்றபடி * கொங்கை இன்னுங் குவிந்தெழுந்திலாத எங்கள் திறத்து நீ செய்யும் குறும்புகளுக்கு நாங்கள் கருத்து அறியும்படி குருகுலவாஸம் பண்ணி ஒன்றுங் கற்றிலோம்; நீயோ ஒரு பெண்பெண்டாட்டிக்காக வானரப்படை திரட்டிக் கடலில் அணைகட்டி அரக்கர் குலங்களை வேரற வொழித்த மஹாவீரனுயிராநின்றாய்; அபலைகளான நாங்கள் உன்னுடைய பலத்திற்கு ஈடுகொடுக்கவல்லோமல்லோம்; ஆகையால், பிரானே! எம்மை நீ நலியாதே கடக்கப்போகவேணு மென்கிறார்கள். வாதியேல்—பாதியேல்.

520 பேதநன்கறிவார்களோடு இவைபேசினால்பெரிதின்சுவை *
யாதுமொன்றறியாதபிள்ளைகளோமை நீநலிந்தென்பயன் *
ஓதமாகடல்வண்ண உன்மணவாட்டிமாரொடுசூழறும் *
சேதுபந்தந்திருத்தினாய் எங்கள்சிற்றில்வந்துசிதையேலே. (7)

உன் பேச்சின் வாசியை நன்றாக அறிய வல்லவரோடு இப்பேச்சுக்களை நீ பேசினால் மிகவும் போக்கியமாயிருக்கும்; எவ்வகையான பாவத்தையு மறியமாட்டாத சிறுப் பெண்களான

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

எங்களை நீ வருத்த முறுத்துவதனால் என்ன பயன்? திரைக்கிளப்பத்தையுடைய பெரிய கடலை யொத்த திருநிறத்தையுடைய கண்ணபிரானே! திருவணை கட்டினவனே! உன்னுடைய பத்தினிகளின் மேல் ஆணை, எங்கள் சிற்றில் வந்து சிதையேல்.

கண்ணபிரான் ஆய்ச்சிகளை நோக்கிக் குறும்பாகச் சில வார்த்தைகள் சொல்லிச் சிற்றிலழித்து நலிய, அதுகண்ட அவர்கள், 'அப்பனே! வார்த்தைகளின் வாசியை அறிய வல்லவர்களிடத்தில் இக்குறும்பு வார்த்தைகளைச் சொன்னால், நீ ஒன்று சொல்ல, அவர்கள் ஒன்பது சொல்ல, மேன்மேல் வார்த்தைகள் பெருகிப் பரமரஸமாய்ச் செல்லும்; கபடமற்ற வார்த்தைகளின் கருத்தையுமறியமாட்டாத எங்கள் திறத்தில் அப்பேச்சுக்களைப் பேசி நலிவதனால் உனக்கு என்ன பயனுண்டு? என்று சொல்லச் செய்தேயும் அவன் தவிராமல் மேன்மேலுஞ் சிற்றிலைச் சிதைக்கப் புக, 'உன் பெண்டாட்டிகளின் மேலாணை, எம்மை நீ நலியலாகாது' என்கிறார்கள். ... ... (7)

521 வட்டவாய்ச்சிறுதூதையோடு சிறுசுளகும்மணலுங்கொண்டு *
இட்டமாவிளையாடுவோங்களைச் சிற்றிலீடழித்தென்பயன்? *
தொட்டுதைத்துநலியேல்கண்டாய் சுடர்ச்சக்கரங்கையிலேந்தினாய் *
கட்டியுங்கைத்தாலின்னாமை அறிதியேகடல்வண்ணனே. (8)

ஒளி பொருந்திய ஸுதர்சனாழ்வானைத் திருக்கையில் தரித்திரா நின்றுள்ள கண்ணபிரானே! கடல் வண்ணனே! வட்டவடிவான வாயையுடைய சிறிய பானையோடு சிறிய முச்சிலையும் மணலையுங்கொண்டு வந்து இஷ்டப்படி விளையாடுகிற எங்களுடைய சிற்றிலை மறுபடியும் உபயோகப்படாதபடி அழிப்பதனால் என்ன பயன்? கையால் தொட்டும் காலால் உதைத்தும் ஹிம்ஸியா தொழிகிடாய்; நெஞ்சு கசத்துப்போனால் கருப்புக்கட்டியும் ருசியாது என்பதை அறிவாயன்றோ?

சிற்றிலிழைப்பதற்கான உபகரணங்களைக் கொண்டு விளையாடுகிற வெங்களுடைய சிற்றிலைச் சிதைப்பதனால் உனக்கு என்ன பயன்? என்றதைக் கேட்ட கண்ணபிரான், ஆய்ச்சிகாள்! இச்சிற்றிலை நான் காலாலும் கையாலும் உதைத்துச் சிதைப்பதனால் எனக்கு ஒரு பயனுமில்லை யென்பது மெய்யே; உங்களைத் தீண்டுவதன்றோ எனக்குப் பிரயோஜனம் என்று அவர்களைத் தீண்ட; அது கண்ட ஆய்ச்சிகள், 'ஹரி ஹரி! நீ எத்தனை ஸ்த்ரீகளைத் தீண்டி வந்தாயோ தெரியாது, எங்கள்மேல் தீண்டாதே கடக்க நில்' என்ன; அதுகேட்ட கண்ணன் 'நான் ஸர்வேச்வரனல்லேனோ? என்னுடைய ஸ்பர்சம் உங்களுக்கு நலிவாய் விட்டதோ? நான் ஈச்வரனென்பதில் உங்களுக்கு ஸம்சயமுண்டாகில் என் திவ்யாயுதத்தைப்பாருங்கள்" என்று திருக்கையிற் சக்கரந் தோற்ற நின்றான்; அது கண்ட ஆய்ச்சிகள் 'நீ மெய்யே ஈச்வரனுங்கிடாய்; இப்போது எங்கள் நெஞ்சு உன்மேல் வெறுப்புண்டிருப்பதால் உன்மீது எமக்கு போக்யதை தோற்றவில்லை; நாக்கு கசத்துப்போனால் கருப்பஞ்சாறும் இனிதாகாதென்னுமிடம் உனக்குத் தெரியுமன்றோ? என்கிறார்கள். "கடல்வண்ணனே" என விளித்தற்குக் கருத்து :—கண்டுவிடு மதுக்கு மேற்படச் செய்யலாவதில்லை, ஒருகை யள்ளி முகத்தைக் கழுவுதல் குடித்தல் செய்யவொண்ணாதே கடலில் நீர்; அப்படியே யன்றோ நீயும் என்கை. (8)

522 முற்றத்தூடுபுகுந்து நின்முகங்காட்டிப்புன்முறுவல்செய்து *
சிற்றிலோடெங்கள்சிந்தையுஞ் சிதைக்கக்கடவையோகோவிந்தா *
முற்றமண்ணிடந்தாவி விண்ணுறநீண்டளந்துகொண்டாய் * எம்மைப்
பற்றிமெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப்பக்கம்நின்றவரென்சொல்லார், (9)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கண்ணபிரானே! ஒரு திருவடியினால் பூமண்டலம் முழுவதையும் தாவியளந்து பரம பதத்தளவும் ஓங்கி மற்றொரு திருவடியினால் மேலுலகங்களை அளந்து கொண்டவனே! நாங்கள் ஏகாந்தமாக விளையாடுகிற முற்றத்திலே நுழைந்து உனது திருமுகத்தை எங்களுக்குக் காண்பித்துப் புன்சிரிப்புச் சிரித்து எங்கள் சிற்றிலையும் நெஞ்சையும் அழிக்கக் கடவாயோ? அவ்வளவோடும் நில்லாமல், எங்களோடே கலவியும் ப்ரவ்ருத்தமானால் அருகில் நிற்பவர்கள் என்ன சொல்லமாட்டார்கள். ... ... (9)

523 சீதைவாயமுதமுண்டாய் எங்கள்சிற்றில்நீசிதையேலென்று *
வீதிவாய்விளையாடும் ஆயர்சிறுமியர்மழலைச்சொல்லை *
வேதவாய்த்தொழிலார்கள்வாழ் வில்லிபுத்தூர்மன்விட்டுசித்தன்றன் *
கோதைவாய்த்தமிழ்வல்லவர் குறைவின்றிவைகுந்தஞ்சேர்வரே. (10)

பிராட்டியினுடைய அதராம்ருதத்தைப் பருகினவனே! நாங்கள் இழைக்குஞ் சிற்றிலை நீ அழிக்காதொழிய வேணும் என்று வீதியிலே விளையாடாநின்ற இடைப்பெண்களுடைய இளம் பருவத்திற்குரிய மெல்லிய சொல்லை, உட்கொண்டு வேதத்தை உச்சரிக்கின்ற வாயை யுடையவர்களும் வைதிகத்தொழில்களைச் செய்பவருமான பரமைகாந்திகள் வாழுமிடமான ஸ்ரீவில்லிபுத்தூருக்குத் தலைவரான பெரியாழ்வாருடைய திருமகளான ஆண்டாளுடைய திருவாக்கில் நின்று மவதரித்த தமிழ்ப்பாசுரங்களை ஓதவல்லவர்கள் குறைவில்லாமல் பரமபதஞ் சேரப்பெறுவர். ... ... (10)

அடிவரவு :—நாமம் இன்று குண்டு பெய் வெள்ளை முற்றில் பேதம் வட்ட முற்றச் சிதை கோழி.

ஆழ்வாரெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

மூன்றாந்திருமொழி—கோழியழைப்பதன்முன்னம்

கோபீவஸ்த்ரா பஹாரசரிதையின் அநுபவம்

524 கோழியழைப்பதன்முன்னங் குடைந்துநீராடுவான்போந்தோம் *
ஆழியஞ்செல்வனெழுந்தான் அரவணைமேற்பள்ளிகொண்டாய் *
ஏழைமையாற்றவும்பட்டோம் இனியென்றும்பொய்கைக்குவாரோம் *
தோழியும்நானுந்தொழுதோந் துகிலைப்பணித்தருளாயே. (1)

திருவனந்தாழ்வானாகிற படுக்கையின்மேலே திருக்கண் வளர்ந்தருளுமவனே! குளத்தில் அவகாஹித்து நீராடுவதற்காகக் கோழி கூவுதற்கு முன்னம் இவ்விடம் வந்தோம்; இப்போதோ வென்றால், ஸ்ரீமந்நாராயணன் தன்னிடத்து நித்யவாஸம் பண்ணப் பெறுகையாகிற செல்வத்தையுடையனான ஸூர்யன் உதித்தான்; நாங்கள் உன்னாலே மிகவும் இளிம்புபட்டோம்; இனிமேல் என்றைக்கும் குளத்திற்கு நாங்கள் வருவதில்லை; தோழியும் நானுமாக உன்னை ஸேவியாநின்றோம்; எங்களுடைய சேலைகளைத் தந்தருளவேணும்.

கண்ணபிரான் இரவின் முற்கூறெல்லாம் பெண்களோடே புணர்ந்துகிடந்து பிற்கூற்றில் உறங்குமவனாதலால், ஸூர்யோதயமளவும் அவன் கண்விழியான் என்று நினைத்து இவ்வாய்ச்சிகள் கோழிகூவுவதற்கு முன்னமே குளத்தில் நீராடிமீள்வதாக வந்தார்கள்; இவர்கள் நினைத்தது ஒன்றாய், முடிந்தது வேறாய்த் தலைக்கட்டிற்று. இவர்கட்குந் தெரியாமல் கண்ணன் அங்கு வந்து சேர்ந்தனனாதலால் அவனாலே தாங்கள் மிகவும் ஏழைமைப்பட்டு ஸூர்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

யோதயமாகியும் தாங்கள் வந்தகாரியம் தலைக்கட்டப்பெறுமையைக்கண்டு வருந்திக்கூறுகின்றனர், அப்பா! இன்று நாங்கள் குளத்திற்குவந்து பட்டபாடு போதும்; இனி ஏழேழ்பிறவிக்கும் இக்குளத்தின்முகத்திலும் நாங்கள் விழிப்பதில்லை' என்கிறார்கள். இவர்கள் குடைந்து நீராடுவான் போந்தோம்' என்றவாறே, தமிழர் கலவியைச் சுனையாடலாகச் சொல்லும் முறைமையை உணர்ந்த கண்ணபிரான் தானும் நெஞ்சில் ஒன்றை நினைத்து 'அங்ஙனே நீராடுகைக்குத் தடையென்?' என்ன; அவனதுகருத்தை அறிந்த ஆய்ச்சிகள், 'பிரானே! அந்த ஆசைக்கு இடமறும்படி பாழுஞ்சூரியன்வந்து தோன்றிவிட்டனனே!' என்றனரென்க. செல்வன் என்றதை விபரீதலக்ஷணையாகக் கொள்வது பொருந்தும். எனவே, "செல்வனுழியன்" என்றது—பாழுஞ்சூரியன் என்றபடி. சுனையாடலுக்கு விரோதியாகவந்து தோன்றினபடியால் வசவுக்கு உடலாயிற்று. [ஏழைமை ஆற்றவும் பட்டோம்] நீ நெடுநாள் எங்கள் கையில்பட்டதெல்லாம் ஒருக்ஷணத்தில் நாங்கள் உன்கையிலே பட்டோமென்கிறார்கள். இங்ஙனே இவர்கள் பரிதாபந்தோற்றச் சொல்லச்செய்தேயும், அவன் 'இன்று நீங்கள் என்னை வஞ்சித்துவந்த குற்றந்திர ஒரு அஞ்ஜலிபண்ணுங்கள்' என்றான்; ஒருகையாலே தொழுதார்கள். 'ஏகஹஸ்தப்ரணாமம் மஹாபசாரகோடியில் கணக்கிடப்பட்டுள்ளது; இரண்டுகையாலும் தொழுமின்' என்றான். இவர்கள் தாம் துகிலிழந்திருப்பதனால் அங்ஙன் செய்யமாட்டதே இருவரிருவராய்ச் சேர்ந்து தொழுகிறார்கள்.—"தோழியும்நானும் தொழுதோம்" என்கிறார்கள். ... (1)

525 இதுவென்புகுந்ததிங்கந்தோ இப்பொய்கைக்கெவ்வாறுவந்தாய் *
மதுவின்துழாய்முடிமாலே மாயனேயெங்களமுதே *
விதியின்மையாலதுமாட்டோம் வித்தகப்பிள்ளாய்விரையேல் *
குதிகொண்டரவினடித்தாய் குருந்திடைக்கூறைபணியாய். (2)

இங்கே நீ வந்து சேர்ந்த விதற்குக் காரணமென்ன? இக்குளத்திற்கு எவ்வழியாலே வந்தாய்? தேன்மாறாத இனிய திருத்துழாய் மாலை சூடிய திருவபிஷேகத்தையுடைய பெரியோனே! ஆச்சரிய சக்தியுடையவனே! எங்களுக்கு அம்ருதம்போல் இனியவனே! விதியில்லாமையாலே ஸம்ச்லேஷத்திற்கு இசையமாட்டோம்; ஆச்சரிய சேஷ்டைகளையுடைய பிள்ளாய்! அவசரப்படவேண்டா; காளிய நாகத்தின் மேல் குதித்துக் கொண்டு நர்த்தனஞ் செய்தவனே! அக்குருந்த மரத்தின்மேல் வைத்திருக்கிற சேலைகளைக் கொடுத்தருள். (2)

526 எல்லேயீதென்னவிளமை யெம்மனைமார்காணிலொட்டார் *
பொல்லாங்கீதென்றுகருதாய் பூங்குருந்தேறியிருத்தி *
வில்லாலிலங்கையழித்தாய் நீவேண்டியதெல்லாந்தருவோம் *
பல்லாருங்காணாமேபோவோம் பட்டைப்பணித்தருளாயே. (3)

வில்லாலே லங்கையை நாசஞ் செய்தருளினவனே! என்னே! இது என்ன பிள்ளைத்தனம்! எங்களுடைய தாய்மார்கள் கண்டால் மறுபடியும் எங்களை வீட்டின் வழிவர வொட்டார்கள்; நீயோ வென்றால் கண்டாரடங்கலும் ஏசும்படி எங்களை அம்மணமாக்கி நிறுத்தியிருக்கிற இது பொல்லாத காரியமென்று நினைக்கிறாயில்லை; புஷ்பித்திராநின்ற குருந்த மரத்தின்மேல் ஏறியிரா நின்றாய்; நீ அபேக்ஷிக்குமவற்றை யடங்கலும் கொடுக்கிறோம்; ஊரிலுள்ள பலரும் காணாதபடி போகிறோம்; எங்களுடைய பட்டுச்சேலைகளைத் தந்தருளவேணும். ... (3)

527 பரக்கவிழித்தெங்கும்நோக்கிப் பலர்குடைந்தாடுஞ்சுனையில் *
அரக்கநில்லாக்கண்ணநீர்கள் அலமருகின்றவாபாராய் *
இரக்கமேலொன்றுமிலாதாய் இலங்கையழித்தபிரானே *
குரக்கரசாவதறிந்தோம் குருந்திடைக்கூறைபணியாய். (4)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இலங்கை அழித்த பிரானே! பல பெண்கள் படிந்து நீராடும் இப்பொய்கையின் கரையில் கண்ணீர்த்தாரைகள் அடக்கினாலும் நிற்கமாட்டாதவையாய்த் ததும்புகிறபடியை நாற்புறத்திலும் நன்றாக விழித்து உற்றுநோக்கு; கொஞ்சங்கூட தயவு இல்லாதவனே! நீ மரமேறவல்லார்க்குள் தலைவன் என்பதை அறிந்து கொண்டோம்; ஆனபின்பு குருந்தின் மேலுள்ள எங்கள் சேலைகளைக் கொடுத்தருளவேணும். ... ... (4)

528 காலைக்கதுவிடுகின்ற கயலொடுவாளைவிரவி *
வேலைப்பிடித்தென்னைமார்கள் ஓட்டிலென்னவிளையாட்டோ *
கோலச்சிற்றாடைபலவுங்கொண்டு நீயேறியிராதே *
கோலங்கரியபிரானே குருந்திடைக்கூறைபணியாய். (5)

கறுத்த திருமேனியையுடைய கண்ணபிரானே! கயல் மீன்களும் வாளை மீன்களும் ஒன்றாய்க் கூடி எமது கால்களைக் கடியாநின்றன; இப்படி நீ எங்களை வருத்தப் படுத்துவதைக் கேள்விப்பட்டு எங்கள் தமையன்மார்கள் வேலைப்பிடித்துக் கொண்டு உன்னைத் துரத்திவிட்டால் அது பின்னை என்ன விளையாட்டாய் முடியும்? நீ அழகிய சிற்றாடைகளை யெல்லாம் வாரிக் கொண்டு மரத்தின் மேல் ஏறியிராமல் குருந்தமரத்தின் மேலுள்ள எங்கள் சேலைகளைத் தந்தருள். ... ... (5)

529 நடந்தவிழ்தாமரைப்பொய்கைத் தாள்களெங்காலைக்கதுவ *
விடத்தேளெறிந்தாலேபோல வேதனையாற்றவும்பட்டோம் *
குடத்தையெடுத்தேறவிட்டுக் கூத்தாடவல்லவெங்கோவே *
படிற்றையெல்லாந்தவிர்ந்து எங்கள்பட்டைப்பணித்தருளாயே. (6)

விசாலமாயும் மலர்ந்த தாமரைகளையுடையதுமான தடாகத்திலே தாமரைத் தண்டுகளானவை எங்கள் கால்களைக் கடிக்க, விஷத்தை யுடைய தேள் கொட்டினாற்போலே மிகவும் வருத்தப் படாநின்றோம்; குடங்களைத் தூக்கி உயரவெறிந்து இப்படி குடக்கூத்தை ஆடுவதற்கு ஸாமர்த்தியமுள்ள எம்முடைய தலைவனே! நீ செய்கிற தீம்புகளை யெல்லாம் விட்டு எங்கள் பட்டைப் பணித்தருளாய். ... ... (6)

530 நீரிலேநின்றயர்க்கின்றோம் நீதியல்லாதனசெய்தாய் *
ஊரகஞ்சாலவுஞ்சேய்த்தால் ஊழியெல்லாமுணர்வானே *
ஆர்வமுனக்கேயுடையோம் அம்மனைமார்காணிலொட்டார் *
போரவிடாயெங்கள்பட்டைப் பூங்குருந்தேறியிராதே. (7)

கற்பாந்தகாலத்திலெல்லாம் ஜகத்ரக்ஷணசிந்தையுடன் உணர்ந்திருப்பவனே! ஜலத்தில் நின்றுகொண்டு வருத்தப்படாநின்றோம்; அநீதியான செயல்களைச் செய்யாநின்றாய்; உன் விஷமங்களுக்குத் தப்பி ஓடிப்பிழைக்கப் பார்ப்போமென்றால் எங்கள் ஊராகிய ஆய்ப்பாடியும் மாளிகைகளும் மிகவும் தூரத்திலிரா நின்றன; ஐயோ!; இப்படி நீ எங்களை வருத்தச் செய்தேயும் உன் விஷயத்திலேயே நாங்கள் அன்புள்ளவர்களாயிரா நின்றோம்; எங்கள் தாய்மார் நீ பண்ணும் லீலைகளுக்கு நாங்கள் இணங்கிநிற்பதைக் கண்டால் இசையமாட்டார்கள்; எங்களுடைய சேலைகளைத் தந்தருளாய்; பூத்திராநின்ற குருந்த மரத்தின் மேல் ஏறிக்கொண்டு தீமைகளைச் செய்யாதே.

[போர விடாய்] சேலையை எங்கள் கைக்கு எட்டிற்று எட்டாதாக விடவொண்ணாது; முழுச்சேலையும் எங்கள் கையில் வந்து விழும்படி விட்டருளாய் என்கை. ... ... (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

531 மாமிமார்மக்களேயல்லோம் மற்றுமிங்கெல்லாரும்போந்தார் *
தூமலர்க்கண்கள்வளரத் தொல்லையிராத்துயில்வானே *
சேமமேலன்றிதுசாலச் சிக்கெனநாமிதுசொன்னோம் *
கோமளவாயர்கொழுந்தே குருந்திடைக்கூறைபணியாய். (8)

பழையராத்ரிகளில் பரிசுத்தமான மலர்போன்ற கண்கள் நித்ரா பரவசமாம்படி பள்ளி கொள்பவனே! இப்பொய்கைக் கரையிலே நிற்குமவர்கள் உனக்குத் தேவிமாராகும் முறையிலுள்ளார் மாத்திரமல்லோம்; மற்றுள்ளமாமிமார், அவர்கள் தாய்மார் முதலியவர்களும் இவ்விடத்தில் வந்திருக்கின்றார்கள்; நீ செய்கிற இத்தீம்பானது மிகவும் தகுதியானதன்று; இவ்வார்த்தையை நாங்கள் திண்ணிதாகச் சொல்லுகின்றோம்; இடையர்களுக்கு இளங்கொழுந்து போன்றவனே! குருந்திடைக் கூறை பணியாய். ... ... (8)

532 கஞ்சன்வலைவைத்தவன்று காரிருளெல்லிற்பிழைத்து *
நெஞ்சுதுக்கஞ்செய்யப்போந்தாய் நின்றவிக்கன்னியரோமை *
அஞ்சவுரப்பாளசோதை ஆணாடவிட்டிட்டிருக்கும் *
வஞ்சகப்பேய்ச்சிபாலுண்ட மசுமையிலீகூறைதாராய். (9)

கம்ஸனானவன் உன்னை அழிப்பதாக நினைத்த காலத்தில் மிக்க இருளையுடைத்தான இரவில் பிழைத்து, அம்மணமாக நிற்கின்ற இளம் பெண்களான எங்களுக்கு மனத்துன்பத்தை உண்டாக்குவதற்காக வந்துபிறந்தாய்; யசோதைப் பிராட்டியோவென்றால் நீ பயப்படும்படி உன்னை அதட்டமாட்டாள்; தீம்பிலே கைவளரும்படி உன்னை விட்டிராநின்றாள்; வஞ்சனையையுடைய பூதனையினுடைய முலைப்பாலை அவளுயிரோடே கூட உறிஞ்சியுண்ட லஜ்ஜையில்லாதவனே! சேலைகளைத் தந்தருள். ... ... (9)

533 கன்னியரோடெங்கள்நம்பி கரியபிரான்விளையாட்டை *
பொன்னியல்மாடங்கள்சூழ்ந்த புதுவையர்கோன்பட்டன்கோதை *
இன்னிசையாற்சொன்னமாலை யீரைந்தும்வல்லவர்தாம்போய் *
மன்னியமாதவனோடு வைகுந்தம்புக்கிருப்பாரே. (10)

எமக்குஸ்வாமியாய் கார்கலந்த மேனியனான கண்ணபிரான் ஆயர்சிறுமியரோடே செய்த திவ்யலீலைகளைக் குறித்து, ஸ்வர்ணமயமான மாடங்களால் சூழப்பட்ட ஸ்ரீவில்லிபுத்தூரிலுள்ளார்க்குத் தலைவரான பெரியாழ்வார்க்குத் திருமகளான ஆண்டாள் இனிய இசையாலே அருளிச்செய்த சொல்மாலையாகிய இப்பத்துப்பாட்டுக்களையும் கற்கவல்லவர்கள் அர்ச்சிராதிமார்க்கமாகப் போய்ப் பரமபதத்தை யடைந்து அவ்விடத்திலே நித்யவாஸம் செய்தருளுகிற திருமாலோடுகூடி நித்யாநுபவம் பண்ணிக்கொண்டு வாழ்ந்திருக்கப் பெறுவர். ... *

அடிவரவு:—கோழி இது எல்லே பரக்க காலை தடத்து நீர் மாமி கஞ்சன் கன்னி தெள்ளியார். ... ... (10)

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நாச்சியார் திருமொழி — தெள்ளியார்

(ஆய்ச்சியர் கூடலிழைத்ததைக் கூறும் பதிகம்)

கூடலிழைத்தலாவது :—வட்டமாகக் கோடுகீறி அதற்குள்ளே சுழிசுழியாகச் சுற்றும் சுழித்து இரண்டிரண்டுசுழியாகக் கூட்டிப்பார்க்கும்போது இரட்டைக்கணக்காக முடிவு பெற்ருல் கூடுகை, ஒற்றைக்கணக்காக முடிவுபெற்ருல் கூடாமை என்று ஒருஸங்கேதம் ஏற்படுத்திக்கொண்டு குறிபார்க்கையாம். இந்தசகுநாவலோகநம்-கூடல், கூடலிழைத்தல், கூடல் வளைத்தல், கூடற்குறி இத்யாதிநாமங்களால் வழங்கப்பெறுமென்ப. திருமழிசைப்பிரான் நான்முகன்திருவந்தாதியில் "அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண இழைப்பன் திருக்கூடல் கூட" என்றருளிச்செய்துள்ளதுங்காண்க. பகவத்ஸம்ச்லேஷத்திலே ஆவலுள்ளபடியைக் கூறும் முறைகளிலே இதுவொருமுறை என்னுமிவ்வளவே இங்கு உணரத்தக்கது. ... *

534 தெள்ளியார்பலர் கைதொழுந்தேவனர் * வள்ளல் மாலிருஞ்சோலைமணாளனர் *
பள்ளிகொள்ளுமிடத்து அடிகொட்டிட * கொள்ளுமாகில் நீகூடிடுகூடலே. (1)

கூடல் தெய்வமே! தெளிவுடைய பக்தர்கள் பலர் கைகளாரவணங்கப்பெற்ற ஸ்வாமியாய் பரமோதாரனாய் திருமாலிருஞ் சோலையிலே எழுந்தருளியிருக்கிற மணவாளப்பிள்ளையாகிற பரம புருஷன், பள்ளி கொண்டருளுமிடத்திலே திருவரங்கத்திலே அவனுடைய திருவடிகளை நான் பிடிக்கும் படியாக அவன் திருவுள்ளம் பற்றுவனாகில் நீ கூடவேணும்.

திருவரங்கம் பெரியகோயிலிலே சென்று புக்கு அப்பெருமானுக்குத் திருவடி வருடும் படியான பாக்கியம் இன்று நமக்கு வாய்க்குமாகில், கூடல்தெய்வமே! நீ கூடக்கடவை என்கிருள். எம்பெருமானுடைய ஸந்நிதியிலே போய் அத்தாணிச்சேவகம் பண்ணும்படியாக விதிவாய்க்கவேணுமென்கிற ப்ரார்த்தனையைக் கூடிடுகூடலே! என்னும் வாய்பாட்டினுல் அருளிச் செய்வதாகக் கொள்க. ... ... (1)

535 காட்டில்வேங்கடம் கண்ணபுரநகர் * வாட்டமின்றி மகிழ்ந்துறை வாமனன் *
ஓட்டராவந்து என்கைபற்றி * தன்னொடும் கூட்டுமாகில் நீகூடிடுகூடலே. (2)

காட்டிலுள்ள திருவேங்கடமலையிலும் நகரமாகிய திருக்கண்ணபுரத்திலும் மனக்குறையில்லாமல் திருவுள்ளமுகந்து நித்யவாஸம் செய்தருளுகிற வாமநாவதாரம் செய்தருளிய எம்பெருமான் ஓடிவந்து என்னுடைய கையைப்பிடித்துத் தன்னோடு அணைத்துக்கொள்வனாகில் கூடல் தெய்வமே! நீ கூடவேணும். ... ... (2)

536 பூமகன்புகழ்வானவர் போற்றுதற் காமகன் * அணிவாணுதல் தேவகி
மாமகன் * மிகுசீர்வசுதேவர்தம் * கோமகன்வரில் கூடிடுகூடலே. (3)

பூவிற்பிறந்த பிரமனும் நித்யஸூரிகளும் கீர்த்தியைப்பாடித் துதிப்பதற்குத் தகுந்த புருஷோத்தமனாய், மிகவும் அழகிய நெற்றியையுடையளான தேவகியினுடைய சிறந்த புத்திரனாய், மிகுந்த நற்குணங்களையுடையரான வஸுதேவருடைய மாட்சிமை தங்கிய புத்திரனான கண்ண பிரான் என்னை அணைக்க வருவானாகில் கூடலே! கூடிடு.

நான்முகனும் நித்யஸூரிகளும் போற்றும்படியாக அங்கே எழுந்தருளி யிருந்து, பின்புதேவர்களின் வேண்டுகோளுக்கிணங்கி * மண்ணின் பாரம் நீக்குதற்கே வடமதுரையிலே வந்து தேவகிக்கும் வஸுதேவர்க்கும் புதல்வனாய்த் திருவவதரித்தருளின எம்பெருமான் இன்று என்துயர்தீர இங்கே எழுந்தருளக் கூடுமா என்று மநோரதிக்கிருள். ... (3)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

537 ஆய்ச்சிமார்களும் ஆயருமஞ்சிட * பூத்தநீள் கடம்பேறிப்புகப்பாய்ந்து *
வாய்த்தகாளியன்மேல் நடமாடிய * கூத்தனார்வரில் கூடிடுகூடலே. (4)

இடைச்சிகளும் இடையரும் பயப்படும்படியாக, புஷ்பித்ததாய் உயர்ந்திருந்த கடப்ப மரத்தின் மேல் ஏறி அங்குநின்றும் எழும்பிக்குதித்து பாக்யசாலியான காளியநாகத்தின் மேல் நர்த்தனஞ் செய்த நாட்ய சாஸ்த்ர நிபுணனான கண்ணபிரான் வரக்கூடுமாகில் கூடலே! கூடிடு.

கூத்தனார் வரில் = அக்காளியன் தலையிலே நடமாடிய ச்ரமத்தோடே தன் பக்கல் வந்தணைய வேணுமென்று விருப்பம்போலும். ... ... (4)

538 மாடமாளிகைசூழ் மதுரைப்பதிநாடி * நந்தெருவின்நடுவே வந்திட்டு *
ஓடைமாமதயானை யுதைத்தவன் * கூடுமாகில் நீகூடிடுகூடலே. (5)

நெற்றிப்பட்டத்தை யுடைத்தாய் மிக்க மதத்தையுடைத்தான குவலயாபீடமென்னும் யானையை உதைத்து முடித்த கண்ணபிரான், மாடங்களையுடைய மாளிகைகளாலே சூழப்பட்ட மதுரை மாநகரிலே நம்வீட்டைத் தேடிக்கொண்டு நம்முடைய வீதியின் நடுவிலே வந்து நம்மோடு கூடுவானாகில் கூடலே! நீ கூடிடு. ... ... (5)

539 அற்றவன் மருதமுறியநடை கற்றவன் * கஞ்சனைவஞ்சனையிற்
செற்றவன் * திகழும்மதுரைப்பதி * கொற்றவன்வரில் கூடிடுகூடலே. (6)

ஏற்கெனவே எனக்கு அற்றுத் தீர்ந்தவனாய் யமளார்ஜுநமென்னும் மருத மரங்களானவை முறிந்து விழும்படியாகத் தவழ்நடை நடக்கக்கற்றவனாய் கம்ஸனை வஞ்சனையினாலே கொன்று முடித்தவனாய் விளங்குகின்ற மதுரை மா நகர்க்கு அரசனான கண்ணபிரான் வந்திடுவானாயின் கூடலே! கூடிடு.

அற்றவன்—ஏற்கெனவே "ஆண்டாளுக்கானவன் இவன்" என்னும்படி அற்றுத் தீர்ந்தவன். "அற்ற வல் மருதம் முறிய"—தன்னைக் கொல்வதாக நிச்சயித்துவந்த வலிய மருத மரங்கள் முறியும்படியாக என்று பொருள் கொள்ளக்கூடுமாயினும் அது ஸ்வரஸமன்று; வியாக்கியானத்திலு மில்லை. ... ... (6)

540 அன்றின்னாதனசெய் சிசுபாலனும் * நின்றநீள்மருதும் எருதும்புள்ளும் *
வென்றிவேல்விறல் கஞ்சனும்வீழ * முன் கொன்றவன்வரில் கூடிடுகூடலே. (7)

முற்காலத்தில் வெறுக்கக்கூடிய கெட்ட காரியங்களையே செய்துவந்த சிசுபாலனும் வழியிடையே நின்ற பெரிய இரட்டை மருதமரங்களும் ஏழுரிஷபங்களும் பகாஸுரனும், வெற்றியை விளைக்கவல்ல வேலாயுதமென்ன அதைப்பிடிக்கத்தக்க மிடுக்கென்ன இவற்றை யுடையவனான கம்ஸனும் முடிந்துவிழும்படியாக எல்லார் கண்ணெதிரிலும் கொன்றொழித்த கண்ணபிரான் வரக்கூடுமாகில் கூடலே! கூடிடு.

இன்னாதன—இனியவையல்லாதவை; அனைவராலும் இகழத்தக்கவை என்றபடி. "பல பலநாளுஞ் சொல்லிப் பழித்த சிசுபாலன்" என்றும், "கேட்பார் செவிசுடு கீழ்மை வசவுகளே வையும், சேட்பால் பழம்பகைவன் சிசுபாலன்" என்றும் அருளிச் செய்துள்ளமை காண்க. (7)

541 ஆவலன்புடையார்தம் மனத்தன்றி மேவலன் * விரைசூழ்துவராபதிக்
காவலன் * கன்றுமேய்த்துவிளையாடும் * கோவலன்வரில் கூடிடுகூடலே. (8)

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.
acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஆவலையும் அன்பையும் உடையவர்களுடைய நெஞ்சுதவிர மற்றோரிடத்திலும் பொருந்தாதவனும் நல்ல வாஸனை சூழ்ந்த த்வாரகாபுரிக்கு நிர்வாஹகனும் கன்றுகளை மேய்த்து விளையாடும் கோபாலனுமாகிய கண்ணபிரான் வரக்கூடுமாகில் கூடலே! கூடிடு.

[காவலன் கோவலன்] பரத்வம் ஒருபக்கத்திலே, ஸௌலப்யம் ஒரு பக்கத்திலே. "ஸர்வஸ்ய ஜகத : பாலௌ வத்ஸபாலௌ பபூவது:" என்ற ரிஷியைப்போலே அதிசயப்படுகிறாளாய்த்து. ... ... (8)

542 கோண்டகோலக் குறளுருவாய்ச்சென்று * பண்டுமாவலிதன் பெருவேள்வியில் *
அண்டமும்நிலனும் அடியொன்றிறல் * கோண்டவன்வரில் கூடிடுகூடலே. (9)

முற்காலத்திலே முப்புரி நூலும் க்ருஷ்ணாஜினமும் முஞ்ஜியும் பவித்ரமும் தண்டுமான கோலம் பூண்ட வாமந ரூபியாய் மஹாபலியினுடைய சிறந்த யாக பூமியிலே எழுந்தருளி மேலுலகங்களையும் கீழுலகங்களையும் ஒவ்வோரடியாலே அளந்து கொண்ட த்ரிவிக்ரமன் வருவானாகில் கூடலே! கூடிடு.

"அடி யொன்றினால்" என்றது "அடி ஒவ் வொன்றினால்" என்றபடி. ... (9)

543 பழகுநான்மறையின்பொருளாய் * மதமொழுகுவாரணம் உய்யவளித்த * எம்
அழகனூர் அணியாய்ச்சியர்சிந்தையுள் * குழகனூர்வரில் கூடிடுகூடலே. (10)

அநாதியான சதுர்வேதங்களின் உட்பொருளாயிருக்குமவனும் மத ஜலம் பெருகாநின்ற கஜேந்த்ராழ்வான் துயர் நீங்கி வாழும்படி க்ருபை செய்தருளினவனும் எம்மை ஈடுபடுத்தவல்ல அழகையுடையனும் அழகிய கோபிமார்களின் நெஞ்சினுள்ளே குழைந்திருக்குமவனுமான கண்ணபிரான் வரக்கூடுமாகில் கூடலே! கூடிடு.

அணியாய்ச்சியர் சிந்தையுள் குழகனூர்—"கொங்கைமேற் குங்குமத்தின் குழம்பழியப் புகுந்து ஒரு நாள் தங்குமேல் என்னாவி தங்கும்" என்னும்படியான காதல் கிளர்ந்துள்ளவர்களுக்கு இவன் அப்போதே சென்று முகங்காட்டாவிடில் அவர்கள் மிகவும் மனம் நொந்து ப்ரணய ரோஷம் தலையெடுக்கப் பெற்று "அந்த க்ருஷ்ணன் இனி என்றைக்கும் நம்மருகே வாராமலேயா போகப் போகிறான்!; என்றைக்காவது ஒருநாள் அநந்யகதியாய்வந்து நிற்பனன்றோ; அப்போது நாம் அவனுக்கு முகங்கொடுக்கக் கடவோமல்லோம்" என்று திண்ணிதாக ஸங்கல்பம் செய்து கொண்டவர்களுங்கூட மறந்தீர்ந்து மேல்விழுந்தணையும்படி அவர்களைப் பிச்சேற்றவல்ல நல்விரகுகள் அறியுமவன் கண்ணபிரான் என்க. ... ... (10)

544 ஊடல்கூடல் உணர்தல்புணர்தலை * நீடுநின்ற நிறைபுகழாய்ச்சியர் *
கூடலைக் குழற்கோதைமுன்கூறிய * பாடல்பத்தும்வல்லார்க்கு இல்லைபாவமே. (11)

ஊடலோடே கூடியிருக்கை யென்ன, அதாவது-ப்ரணய ரோஷஸஹிதைகளாயிருக்கையென்ன, குறைகளை உணர்த்துகை யென்ன, பிறகு ஸம்ச்லேஷிக்கையென்ன இப்படிப்பட்ட காரியங்களிலே அநாதிகாலமாக நீடித்துப் பொருந்தி நின்ற நிறைந்த புகழையுடைய ஆய்ப்பெண்கள் இழைத்த கூடலைப்பற்றி அழகிய மயிர்முடியையுடையளான ஆண்டாள் அருளிச்செய்த பத்துப் பாட்டுக்களையும் ஓதவல்லவர்களுக்கு எம்பெருமானைப் பிரிந்து துக்கிக்கும்படியான பாவம் இல்லையாம்.

"ஊடல்கூடல்" என்றது—ஊடலென்ன கூடலென்ன என்று இரண்டாகச் சொல்வதல்ல; ஊடலோடு கூடுகை யென்றாய் ஊடுகையை மாத்திரம் சொல்லிற்றாகக் கொள்க' ஊடலாவது ப்ரணய கலஹம்; ஊடல்கூடலாவது அதை உடைத்தாயிருக்கை; ப்ரணயரோஷ

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விசிஷ்டத்வம். "போதுமறித்துப் புறமே வந்து நின்றீர், ஏதுக்கிதுவென் இதுவென் இதுவென்னோ?" என்றும் "என்னுக்கு அவனைவிட்டிங்குவந்தாய் இன்ன மங்கே நட நம்பி! நீயே" என்றும், என்னுடைய பந்துங்கழலும் தந்து போகு நம்பீ!" என்றும் இப்படிகளிலே சொல்லி எம்பெருமானைக் கிட்டவர வொட்டாமல் கதவடைத்துத் தள்ளுகை ஊடல் எனப்படும்.

அடிவரவு :—தெள்ளி காட்டில் பூமகன் ஆய்ச்சி மாடம் அற்றவன் அன்று ஆவல் கொண்ட பழகு ஊடல் மன்னு.

ஆழ்வார் எம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்

ஐந்தாந்திருமொழி—மன்னுபெரும்புகழ்

(எம்பெருமானது வரவுக்காகக் குயிலை வேண்டும் பதிகம்.)

545 மன்னுபெரும்புகழ்மாதவன் மாமணிவண்ணன்மணிமுடிமைந்தன்
தன்னை * உகந்ததுகாரணமாக என்சங்கிழக்கும்வழக்குண்டே *
புன்னைகுருக்கத்திநாழல்செருந்திப் பொதும்பினில்வாழுங்குயிலே *
பன்னியெப்போதுமிருந்துவிரைந்து என்பவளவாயன்வரக்கூவாய். (1)

புன்னைமரங்களும் குருக்கத்தி மரங்களும் கோங்கு மரங்களும் செருந்தி மரங்களும் இவை முதலிய பல மரங்கள் நிறைந்த சோலையிலே வாழுகின்ற கோகிலமே!, நித்யமாய் அளவில்லாத புகழையுடையனாய் ச்ரிய: பதியாய் நீலமணி போன்ற நிறத்தை யுடையனாய் நவமணிகள் அழுத்திச் சமைத்த திருவபிஷேகத்தை யுடையனாய் மிடுக்கையுடையனான எம்பெருமானை ஆசைப்பட்டதுவே ஹேதுவாக என்னுடைய கைவளைகள் கழன்றொழியும் படியான நியாயம் உலகத்தில் உண்டோ?; இது வெகு அநியாயமா யிருக்கிறது. இதற்கு நான் என் செய்வேன் என்கிறாயோ, பவளம் போற் பழுத்த திருவதரத்தை யுடையனான எனது துணைவன் என்னிடம் வந்து சேரும்படி இரவும் பகலும் அவனது திருநாமங்களைக் கத்திக்கொண்டிருந்து சீக்கிரமாகக் கூவவேணும்.

என் சங்கிழக்கும் வழக்குண்டேயென்றது எனது உடல் மெலிந்துபோவது தகுதியோ? என்றபடி. ... ... (1)

546 வெள்ளைவிளிசங்கிடங்கையிற்கொண்ட விமலனெனக்குருக்காட்டான் *
உள்ளம்புகுந்தென்னைநைவித்து நாளுமுயிர்ப்பெய்துகூத்தாட்டுக்காணும் *
கள்ளவிழ்செண்பகப்பூமலர்கோதிக் களித்திசைபாடுங்குயிலே *
மெள்ளவிருந்துமிழற்றிமிழற்றாது என்வேங்கடவன்வரக்கூவாய். (2)

தேன் பெருகாநின்றுள்ள செண்பகப்பூவிலே அஸாரமான அம்சத்தைத்தள்ளி ஸாரமான அம்சத்தை அநுபவித்து அதனால் ஆநந்தமடைந்து அந்த ஆநந்தத்திற்குப் போக்குவிடாக இசைகளைப்பாடா நின்றுள்ள கோகிலமே! சுத்தஸ்வபாவமாய் கைங்கர்ய ருசியுடையாரை அழைக்குமதான ஸ்ரீபாஞ்ச ஜந்யத்தை இடக்கையிலே ஏந்திக்கொண்டிருக்கிற பவித்திரனான பரமபுருஷன் தனது திவ்யமங்கள விக்ரஹத்தைத் எனக்கு ஸேவை ஸாதிப்பிக்க மாட்டேனென்கிறான்; அதுவுமல்லாமல் என்னுடைய ஹ்ருதயத்தினுள்ளே வந்து புகுந்து என்னை நைந்து போம்படி பண்ணி அவ்வளவிலே நான் முடிந்து போவதாயிருந்தால் இன்னமும் என்னை ஹிம்ஸிப்பதற்காக முடியவொட்டாமல் நாள்தோறும் ப்ராணனைப் பெருக்கடித்து என்னைத் தத்தளிக்கச் செய்து வேடிக்கை பாரா நின்றான்; நீ செய்ய வேண்டியதென்னவென்றால் என் அரு

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இல் இருந்துகொண்டு உன் மழலைச் சொற்களைச் சொல்லி விலாஸ சேஷ்டிதங்களைப் பண்ணாமல் எனக்காகத் திருவேங்கடமலையிலே வந்து நிற்கிற எம்பெருமான் இங்கே வரும்படியாகக் கூப்பிடவேணும். ... ... (2)

547 மாதலிதேர்முன்புகோல்கொள்ள மாயனிராவணன்மேல் * சரமாரி
தாய்தலையற்றற்றுவீழத் தொடுத்ததலைவன்வரவெங்குங்காணேன் *
போதலர்காவில்புதுமணம்நாறப் பொறிவண்டின்காமரங்கேட்டு * உன்
காதலியோடுடன்வாழ்குயிலே யென்கருமாணிக்கம்வரக்கூவாய். (3)

சிறந்த பூக்கள் அலர்கின்ற சோலையிலே புதிதான பரிமளமானது வீச அழகிய வண்டினுடைய காமரம் என்கிற பண்ணைக் கேட்டுக்கொண்டு உன் பேடையோடு கூட வாழ்கின்ற குயிலே! மாதலியானவன் இராவணனுடைய தேரின் முன்னே கோலைக் கொண்டு தன் தேரை நடத்த, மாயாவியான ராவணன் மேலே பாண வர்ஷத்தை அவ்விராவணனுடைய ப்ரதானமான தலை பலகால் அற்று அற்றுவிழும்படி ப்ரயோகித்த எம்பெருமானுடைய வரவை ஒரு திக்கிலும் காண்கிறேனில்லை; ஆதலால் என்னுடைய அநுபவத்துக்கு யோக்யனாய் நீலரத்நம் போன்ற திருமேனியையுடையனான அவ்வெம்பெருமான் இங்கே வரும்படியாக நீ கூவவேணும்.

"தாய் தலை" என்பதற்கு "ப்ரதாநமான தலை" என்று பெரியவாச்சான்பிள்ளை பொருள் கூறியிருத்தலால், "தாய்த்தலை" என்று தகரம் மிகாதொழிந்தது எதுகையின்பம் நோக்கியாமென்று கொள்க. அற்றற்றுவீழ="திருச்சரங்கள் பண்ணின பாக்யத்தாலே தலை அறுக்கவறுக்க முளைத்ததாய்த்து; பின்னை அதுதானே போதுபோக்காக நின்று கொன்றானாய்த்து. அப்படி முளைத்ததில்லையாகில், திருச்சரங்களின் வர்வு இவனால் அடக்கப் போகாதே." என்பது வியாக்கியான ஸூக்தி. "வரவெங்கும்" என்றவிடத்து வர என்றும் பதம்பிரிக்கலாம்—எங்கும் வரக்காணேன். ... ... (3)

548 என்புருகியினவேல்நெடுங்கண்கள் இமைபொருந்தாபலநாளும் *
துன்பக்கடற்புக்குவைகுந்தனென்பதோர் தோணிபெறாதுழல்கின்றேன் *
அன்புடையாரைப்பிரிவுறுநோயது நீயுமறிதிகுயிலே *
பொன்புரைமேனிக்கருளக்கொடியுடைப் புண்ணியனைவரக்கூவாய். (4)

ஓ குயிலே!, எலும்புகள் உருகிப் போனது மல்லாமல் சிறந்த வேல் போன்ற விசாலமான கண்களும் மூடிக்கிடக்கின்றனவில்லை; நெடுங்காலமாக விச்லேஷவ்யஸநமாகிற கடலிலே அழுந்தி ஸ்ரீவைகுண்டநாதன் என்கிற ஒரு தோணியை அடையப்பெறாமல் அக்கடலுக்குள்ளேயே தட்டித் தடுமாறிக்கொண்டிரா நின்றேன்; அன்பர்களைப் பிரிவதாலுண்டாகும் துக்கத்தை நீயும் அறிவாயன்றோ? பொன் போன்ற மேனியையுடையனாய்க் கருடனைக் கொடியாக வுடையவனான "தர்மமே வடிவெடுத்தவன்" என்னப்படுகிற கண்ணபிரானை இங்கே வரும்படி கூவு. ... ... (4)

549 மென்னடையன்னம்பரந்துவிளையாடும் வில்லிபுத்தூருறைவான்றன் *
பொன்னடிகாண்பதோராசையினால் என்பொருகயற்கண்ணிணைதுஞ்சா *
இன்னடிசிலொடுபாலமுதூட்டி யெடுத்தவென்கோலக்கிளியை *
உன்னொடுதோழமைக்கொள்ளுவன்குயிலே உலகளந்தான்வரக்கூவாய். (5)

மந்தகதியையுடைய அன்னப்பறவைகள் எங்கும் பரவி விளையாடுவதற்கு இருப்பிடமான ஸ்ரீவில்லிபுத்தூரிலே எழுந்தருளியிருக்கிற எம்பெருமானுடைய அழகிய திருவடிகளைக் காண

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வேணு மென்றுண்டான ஆசையினாலே சண்டையிடும் இரண்டு கெண்டைகள் போன்ற எனது கண்கள் உறங்குகின்றனவில்லை; ஓ குயிலே! த்ரிவிக்ரமனாய் உலகங்களை அளந்த பெருமான் இங்கே வரும்படி கூவு; அப்படி கூவுவாயாகில் கன்னலமுதையும் பாலமுதையும் ஊட்டி வளர்க்கப்பெற்ற எனது அழகிய கிளியை உன்னோடே ஸ்நேஹப்படுத்தி வைப்பேன்.

550 எத்திசையுமமரர்பணிந்தேத்தும் இருடீகேசன்வலிசெய்ய *
முத்தன்னவெண்முறுவல்செய்யவாயும் முலையுமழகழிந்தேன்நான் *
கொத்தலர்காவில்மணித்தடங் கண்படைகொள்ளுமிளங்குயிலே * என்
தத்துவனைவரக்கூகிற்றியாகில் தலையல்லால்கைம்மாறிலேனே. (6)

பூங்கொத்துகளானவை மலருமிடமான சோலையிலே அழகானவொரு இடத்திலே உறங்குகின்ற சிறுகுயிலே!; எல்லாத்திக்குகளிலும் தேவர்கள்வணங்கித் துதிக்கும்படியான பெருமை வாய்ந்து, கண்டாருடைய இந்திரியங்களையெல்லாம் கொள்ளை கொள்ளுமவனான எம்பெருமான் தன்னை எனக்குக் காட்டாமல் மிறுக்குக்களைப் பண்ண, அதனாலே நான் முத்துப்போல் வெளுத்த முறுவலும் சிவந்த அதரமும் முலையும் ஆகிய இவை அழகு அழிந்ததாம்படி விகாரப்பட்டேன்; நான் உயிர்தரித்திருப்பதற்கு மூலகாரணமான அவ்வெம்பெருமானை இங்கே வரும்படி கூவவல்லையேயானால் என் வாழ்நாள் உள்ளவளவும் என் தலையை உன் காலிலே வைத்திருப்பது தவிர வேறொரு ப்ரத்யுபகாரம் செய்ய அறியேன். ... ... (6)

551 பொங்கியபாற்கடற்பள்ளிகொள்வானைப் புணர்வதோராசையினால் * என்
கொங்கைகிளர்ந்துகுமைத்துக்குதுகலித்து ஆவியையாகுலஞ்செய்யும்
அங்குயிலே * உனக்கென்னமறைந்துறைவு ஆழியுஞ்சங்குமொண்தண்டும் *
தங்கியகையவனைவரக்கூவில்நீ சாலத்தருமம்பெறுதி. (7)

அழகிய குயிலே! அலையெறிவையுடைய திருப்பாற்கடலில் பள்ளிகொண்டருளும் எம்பெருமானோடே ஸம்ச்லேஷிக்க வேணுமென்று உண்டான ஆசையினால் எனது முலைகள் பருத்து மிக்க உத்ஸாஹங் கொண்டு எனது உயிரை உருக்கி வியாகுலப்படுத்தாநின்றன; ஓ குயிலே! என் கண்ணுக்குப் புலப்படாமல் நீ மறைந்திருப்பதனால் உனக்கு என்ன புருஷார்த்தம்? திருவாழி திருச்சங்கும் ஸ்ரீ கதையும் பொருந்திய திருக்கைகளையுடைய பெருமான் இங்கே வரும்படி நீ கூவுவாயாகில் மிகவும் தர்மம் செய்தாயாவாய். ... ... (7)

552 சார்ங்கம்வளையவலிக்கும் தடக்கைச்சதுரன்பொருத்தமுடையன் *
நாங்களெம்மிலிருந்தொட்டியகச்சங்கம் நானுமவனுமறிதும் *
தேங்கனிமாம்பொழிற்செந்தளிர்கோதுஞ் சிறுகுயிலே * திருமாலை
ஆங்குவிரைந்தொல்லைக்கூகிற்றியாகில் அவனைநான்செய்வனகாணே. (8)

இனிமையான பழங்களையுடைய மாந்தோப்பிலே சிவந்த துளிர்களை வாயலகால் கொந்துகிற இளங்குயிலே! தனது வில்லை வளைத்து வலிக்கும் சக்தியையுடைய பெரிய திருக்கைகளையுடையனாய் ஸகலவித ஸாமர்த்தியமுமுடையனான எம்பெருமான் ப்ரணயரீதியிலும் வல்லமை பெற்றவன்; அவனும் நானும் ஆக இருவரும் சேர்ந்திருந்து எங்களுக்குள் ரஹஸ்யமாகச் செய்துகொண்ட ஸங்கேதத்தை நாங்களிருவருமே அறிவோமேயன்றி வேறொருவரும் அறியார்; தூரஸ்தனாயிருக்கிற ச்ரிய: பதியை மிகவும் சீக்கிரமாக நீ கூவவல்லையாகில் பிறகு அவன் இங்கு வந்த பிற்பாடு அவன் விஷயத்தில் நான் செய்யப் போகிற மிறுக்குக்களைக் காணக்கடவை. ... ... (8)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

553 பைங்கிளிவண்ணன்சிரீதரனென்பதோர் பாசத்தகப்பட்டிருந்தேன் *
பொங்கோளிவண்டிரைக்கும்பொழில்வாழ்குயிலே குறிக்கொண்டிதுநீகேள் *
சங்கொடுசக்கரத்தான்வரக்கூவுதல் பொன்வளைகொண்டுதருதல் *
இங்குள்ளகாவினில்வாழக்கருதில் இரண்டத்தொன்றேல்திண்ணம்வேண்டும். (9)

மிக்க வொளியையுடைய வண்டுகளானவை மதுபாந மயக்கத்தாலே இசைபாடா நின்ற சோலையிலே களித்துவிளையாடுகிற கோகிலமே! நான் சொல்லுகிற இதனை நீ பராக்கில்லாமல் ஸாவதாநமாய்க் கேள்; நான் பசுங்கிளி போன்ற நிறத்தையுடையனான ச்ரிய: பதியென்கிற ஒரு வலையிலே சிக்கிக்கொண்டு கிடக்கிறேன்; இந்தச் சோலையிலே நீ வாழ நினைக்கிறாயாகில் திருவாழி திருச்சங்குடையனான எம்பெருமான் இங்கே வரும்படி கூவுவதென்ன நான் இழந்த பொன் வளைகளைக்கொண்டு வந்து கொடுப்பதென்ன இவையிரண்டுள் ஏதாவதொரு காரியம் நீ கட்டாயம் செய்து தீர வேண்டும்.

மூன்றமடியிலுள்ள விகல்பத்தின் கருத்து என்னென்று ஆராய்வோம்; கைவளைகளைக் கொணர்ந்து கொடுப்பதென்பது எப்படி? எம்பெருமானுடைய பிரிவினாலே கைகழிந்து போனவளைகள் மீண்டுவரவேணுமென்றால் கழன்றுபோனவளைகள் கையில் தங்கும்படி செய்யவேணுமென்கை. இது எம்பெருமானுடைய ஸம்ச்லேஷத்தாலன்றி மற்றொரு வழியாலும் நேருவதன்று. அந்த ஸம்ச்லேஷந்தானும் அவ்வெம்பெருமான் வந்தாலன்றி நேரிடாது: இப்படியிருக்க, சங்கொடுசக்கரத்தான் வரக்கூவுதல் என்பது ஒரு பக்ஷமாகவும் பொன்வளைகொண்டுதருதல் என்பது மற்றொரு பக்ஷமாகவும் வேறுபாடுதோற்ற அருளிச்செய் திருக்கிறபடி என்? வ்யாஹதமாயிருந்ததே என்று நினைக்கும்படியாயிரா நின்றது. ஆயினும் இஃதொரு சமத்காரவார்த்தை யென்று கொள்ளவேணும்; பதிவ்ரதாசிரோமணியான ஸாவித்ரியானவள் தன்காதலனாகிய ஸத்யவானுடைய உயிரைக் கவர்ந்துசென்ற யமனைவணங்கி அவ்வுயிரை மீட்டுக் கொடுக்கும்படி பலவாறு வேண்டியும் அவன் அதற்கு இசையாமற்போக, உபாயமறிந்த அவள் பலபல தர்மஸம்பந்தமான வார்த்தைகளை இனிமையாகச் சொல்லிக்கொண்டுபோய் அந்தயமனை மதிமயக்கி "ஸத்யவானிடத்தில் எனக்குப் பலபிள்ளைகள் பிறக்கும்படி அருள்புரியவேணும்" எனவேண்ட, அவனும் அப்படியே அருளினான் என்றொரு இதிஹாஸமுண்டு; அதில், நாயகனுடைய பிராணனைப் பிரார்த்தித்து அதனைப்பெறுதவள் ஸந்ததியின் அபிவிருத்தியை வேண்டினது வ்யாஹதமாயிருக்கச்செய்தேயும், எப்படியாவது தன் மநோரதத்தை நிறைவேற்றிக்கொள்ள நினைத்த ஸாவித்ரியின் சதுரமான உக்தியாகையாலே ஒழுங்குபெற்றதுபோல இங்கும் * சங்கொடு சக்கரத்தான் வரக்கூவுதலும் பொன்வளை கொண்டு தருதலும் பர்யாயமாயிருந்தாலும் இதொருசமத்காரமான உக்தியாகையாலே ஒழுங்கு பெறுமென்க. "ஒரு கார்யத்தாலே இரண்டும் தலைக்கட்டுமிறே" என்று ஒரு சொல்லாலே முடித்தருளினார் பெரியவாச்சான்பிள்ளை. ... ... (9)

554 அன்றுலகமளந்தானையுகந்து அடிமைக்கணவன்வலிசெய்ய *
தென்றலுந்திங்களுமூடறுத்து என்னைநலியுமுறைமையறியேன் *
என்றுமிக்காவிலிருந்திருந்து என்னைத்ததைத்தாதேநீயும்குயிலே *
இன்றுநாராயணனைவரக்கூவாயேல் இங்குத்தைநின்றும்துரப்பன். (10)

மஹாபலி கொழுத்திருந்த அக்காலத்தில் மூவுலகங்களையும் அளந்து கொண்டவனான எம்பெருமான் விஷயத்திலே நான் கைங்கர்யத்தை ஆசைப்பட, அவ்வெம்பெருமான் அந்த கைங்கரியத்திலே வஞ்சனைபண்ண அதற்கு நான் நோவுபட்டிருக்கிற ஸமயத்திலே தென்றல் காற்றும் பூர்ணசந்திரனும் என்னை உள்ளே பிளந்து கொண்டு புகுந்து ஹிம்ஸிக்கும் நியாயத்தைத்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அறிகின்றிலேன் ; ஓ குயிலே ! என்னுடைய க்ஷேமத்தை விரும்புமவனான நீயும் எந்நாளும் இந்தச் சோலையிலே இடைவிடாமலிருந்து கொண்டு ஏற்கெனவே மெலிந்திருக்கிற என்னை ஹிம்ஸியாமலிரு ; இன்றைக்கு ஸ்ரீமந்நாராயணன் இங்கே வரும்படி அவனை நீ கூவாமற்போனாயாகில் இந்தச் சோலையிலிருந்து உன்னைத் துரத்திவிடுவேன்.

அடிமைக்கண் = கண்-ஏழாம்வேற்றுமையுருபு : அடிமையிலே என்றபடி. வலி செய்தலாவது—இளைத்தவர்கள் விஷயத்தில் பலிஷ்டர் செய்யும் செயலைச் செய்தல் ; அலக்ஷியஞ் செய்தல், மாட்டேனென்னுதல்.

"இங்குத்தைநின்றும் துரப்பன்" என்பதற்கு 'இச்சோலையிலிருந்து உன்னைத் துரத்திவிடுவேன்' என்பது பொருளாயினும், 'நான் உயிர்துறந்துவிடுவேன்' என்பது கருத்தாம். நீ நாராயணனை வரக்கூவாவிடில் நான் முடிந்து போவேன் ; பிறகு இந்தச்சோலையை உனக்கு நோக்கித்தருவார் இல்லாமையினாலே நீ இருப்பிடமிழந்து வேறிடந்தேடி ஓட வேண்டியது தான் என்றபடி. ஆகவே, துரப்பன் என்றது—நீ இவ்விடத்தைவிட்டு ஓடிப்போவதற் கேற்ற காரியத்தைச் செய்வேன் என்றபடியாம் : அக்காரியமாவது—தான் முடிந்து போகை. (10)

555 விண்ணுறநீண்டடிதாவியமைந்தனை வேற்கண்மடந்தைவிரும்பி *
கண்ணுறவென்கடல்வண்ணனைக் கூவுகருங்குயிலேயென்றமாற்றம் *
பண்ணுறுநான்மறையோர்புதுவைமன்னன் பட்டர்பிரான்கோதைசொன்ன *
நண்ணுறுவாசகமாலைவல்லார் நமோநாராயணாயவென்பாரே. (11)

வேல் போன்ற கண்களையுடையளாய் பெண்மைக்கு உரிய குணங்கள் நிறைந்தவளாய் ஸ்வரப்ரதானமான நான்கு வேதங்களையும் ஓதின ஸ்ரீவைஷ்ணவர்கள் வாழ்கிற ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருடைய மகளான ஆண்டாள், திருவடியானது பரமாகாசத்தளவும் போய்ப் பொருந்தும்படியாக நெடுகவளர்ந்து உலகங்களை வியாபித்த மிடுக்கையுடையனான எம்பெருமானை ஆசைப்பட்டு 'ஓகரியகுயிலே ! கடல்போன்ற திருநிறத்தையுடையனான என் காதலனை நான் ஸேவிக்கும்படி நீ கூவு' என்று நியமித்த பாசுரமாக அருளிச்செய்த போக்யமான இந்த ஸ்ரீ ஸூக்தி மாலையை ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு அந்தரங்க கிங்கரராகப் பெறுவர்கள்.

நமோநாராயணாய வென்பாரே = திருவஷ்டாக்ஷர மஹாமந்திரத்தை யநுஸந்திப்பார்க்கு எதுபயனோ அது இத்திருமொழிகற்றார்க்குப் பயனாமென்பது உள்ளுறை. ... (11)

அடிவரவு :—மன்னு வெள்ளை மாதலி யென்பு மென்னடை யெத்திசை பொங்கிய சார்ங்கம் பைங்கிளி யன்று விண் வாரணம்.

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஆறுந்திருமொழி — வாரணமாயிரம்

(ஆண்டாள் கனாக்கண்டமை கூறும்பதிகம்)

556 வாரணமாயிரம் சூழவலஞ்செய்து * நாரணநம்பி நடக்கின்றானென்றெதிர் *
பூரணபொற்குடம் வைத்துப்புரமெங்கும் * தோரணம்நாட்டக் கனாக்கண்டேன்தோழீநான். (1)

என் உயிர்த்தோழியே ! ஸகலகுணபரிபூர்ணனான ஸ்ரீமந்நாராயணன் ஆயிரம் யானைகள் சூழ்ந்து வரப் ப்ரதக்ஷிணமாக எழுந்தருளுகிறானென்று வாத்யகோஷாதிகளால் நிச்சயித்து

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

எதிரே பொன்மயமான பூர்ணகும்பங்களை வைத்துப் பட்டணம்*முழுதும் தோரண ஸ்தம்பங்கள் நாட்ட இந்த நிலைமையை நான் ஸ்வப்நத்தில் அநுபவித்தேன். ... ... (1)

557 நாளைவதுவை மணமென்றுநாளிட்டு * பாளைகமுகு பரிசுடைப்பந்தற்கீழ் *
கோளரியாதவன் கோவிந்தனென்பானோர் * காளைபுகுதக் கனாக்கண்டேன்தோழீநான். (2)

தோழி! நாளைக்கு விவாஹமஹோத்ஸவமென்று முஹூர்த்தம் நிர்ணயித்து, பாளைகளோடு கூடிய பாக்கு மரங்களாகிற அலங்காரங்களை யுடைத்தான மணப்பந்தலின் கீழே நரஸிம்ஹனென்றும் மாதவனென்றும் கோவிந்தனென்றும் திருநாமங்கள் பூண்ட ஒரு யுவாவானவன் பிரவேசிக்க நான் கனாக் கண்டேன்.

"நாளையதினம் கண்ணபிரானுக்கும் ஆண்டாளுக்கும் திருக்கல்யாண மஹோத்ஸவம்" என்பதாக முஹூர்த்த நிர்ணயம்பண்ணின பின்பு, விவாஹத்தின் முன்னுளிற் செய்ய வேண்டுஞ் சடங்குகள் செய்தற்காகக் கண்ணபிரான் அலங்காரப்பந்தலின் கீழ் எழுந்தருளக் கனாக் கண்டேனென்கிறாள். ... ... (2)

558 இந்திரனுள்ளிட்ட தேவர்குழாமெல்லாம் * வந்திருந்தென்னை மகட்பேசிமந்திரித்து *
மந்திரக்கோடியுடுத்தி மணமாலை * அந்தரிசூட்டக் கனாக்கண்டேன்தோழீநான். (3)

இந்திரன் முதலான தேவஸமூஹங்களெல்லாம் இந்நிலத்திலே வந்திருந்து என்னைக் கல்யாணப் பெண்ணாக வார்த்தை சொல்லி அதற்குமேல் ஸம்பந்திகள் ஒருவர்க்கொருவர் செய்து கொள்ள வேண்டிய ஏற்பாடுகள் விஷயமாக யோசித்து முடிவுசெய்து கொண்டு, பிறகு 'துர்க்கை' என்கிற நாத்தனார் கல்யாணப் புடவையை எனக்கு உடுத்தி, பரிமளம் மிக்க புஷ்பங்களையும் சூட்ட தோழி! நான் கனாக் கண்டேன்.

இந்திரன் முதலிய வானவர்களெல்லாரும் 'நம்முடைய பெருமானுக்கு நடக்கப்போகிற கல்யாண மஹோத்ஸவத்தை நாமெல்லாருமாய்க் கூடியிருந்து காரியங்கள் செய்து நிறைவேற்றிவரவேணும்' என்று குதூஹலித்துத் தரையிலேகால்பாவிவந்து 'இக்காரியம் முடிந்தாலன்றி நாங்கள் எழுந்திருப்பதில்லை' என்று பிடிவாதமாயிருந்து 'எங்கள் பெருமானுக்கு உங்கள் பெண்ணை மணவாட்டியாக்கித் தரவேணும்' என்று பெரிய திரளிலே ப்ரார்த்தித்து, பிறகு உபயவர்க்கத்தாரும் ரஹஸ்யமாகவிருந்து பூஷண பீதாம்பரங்கள் விஷயமாகவும் மற்றுமுள்ள ஸம்விதாநங்கள் விஷயமாகவும் ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ள வேண்டியவற்றைக் காதோடு காதாகப் பேசிமுடித்து, இனிக்காலவிளம்பம் செய்தால் ஏதாவது இடையூறு நேரிடக் கூடுமென்றெண்ணி அப்போதே மணமகளுக்கு நாத்தனாரைக்கொண்டு புடைவையுடுத்துகிற க்ரமத்திலே எனக்கு நாத்தனாரான துர்க்கையைக்கொண்டு புடைவையுடுத்தி நல்ல மாலைகளையும் சூட்டுவித்து இப்படிப்பட்ட சில பாணிக்ரஹணபூர்வாங்கங்கள் நடைபெறக் கனாக் கண்டேனென்கிறாள்,

மகள்பேசுதல்='இவளைமணமகளாகத் தாரைவார்த்துக் கொடுக்கவேணும்' என வேண்டிப் பேசுதல். மந்திரித்து=மந்த்ர: என்றவடசொல்லடியாப்பிறந்த அவ்யயம். மந்த்ரமாவது ஆலோசனை; ஆலோசித்து என்றபடி. மகள்பேசினபிறகு ஆலோசிப்பது பூஷணபீதாம்பராதி விஷயமென்க. மந்திரக்கோடி=மந்த்ரவாஸஸ் என்பர் வடநூலார். "கோடியுடுத்து" என்று சிலர் ஓதுவர். "உடுத்தி" என்றபாடமே ஏற்கும்: 'உடுத்து' என்றால், தான் அணிந்துகொண்டு என்று பொருள்; உடுத்தி என்றால் பிறர்க்குச் சாத்தி என்றுபொருள்; இங்குப்பிறவினைப்பொருள் படவேண்டியிருத்தலால் 'உடுத்தி' என்ற பாடமே ஏற்குமென்ப. துர்க்கையானவள் கண்ணபிரானுக்கு உடன்பிறந்தாளாதலால் ஆண்டாளுக்கு நாத்தனா

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

ர்ளுள். அந்தரத்திலே [ஆகாயத்திலே] அந்தர்த்தாகமாய்ப் போனமையால் அவளுக்கு அந்தரி என்று பேராயிற்றென்க. ... ... (3)

559 நாற்றிசைத்தீர்த்தங்கொணர்ந்து நனிநல்கி * பார்ப்பனச்சிட்டர்கள் பல்லரேடுத்தேத்தி *
பூப்புனைகண்ணிப் புனிதனோடென்றன்னை * காப்புநாண்கட்டக் கனாக்கண்டேன்தோழீநான். (4)

தோழி! சிஷ்டர்களான பல ப்ராஹ்மணர்கள் நான்கு திசைகளிலுமிருந்து தீர்த்தங்களைக் கொண்டுவந்து நன்றாகத் தெளித்து உச்சஸ்வரமாக வெடுத்து மங்களாசாஸநம்பண்ணி, பல வகைப் புஷ்பங்கள் புனைந்த மாலையையுடையவனாய்ப் பரமபாவநனான கண்ணபிரானோடு என்னை இணைத்துக் கங்கணங்கட்ட நான் கனாக் கண்டேன்.

சக்ரவர்த்தித் திருமகனுருடைய திருவபிஷேகமஹோத்ஸவத்திற்காக ஸ்ரீவாநரவீரர்கள் நாலுஸமுத்ரத்திலுமுள்ள தீர்த்தங்களையுங் கொணர்ந்தாப் போலே என்னுடைய கல்யாணமஹோத்ஸவத்திற்காக வைதிகஸார்வபௌமர்களான பல அந்தணர்கள் நாற்றிசைகளினின்றும் நாநாவகைப் புண்யதீர்த்தங்களைக் கொண்டுவந்து, ஆயுஸ்ஸு முதலான நன்மைகளெல்லாமுண்டாவதற்காக அந்தத் தீர்த்தங்களாலே தம்பதிகளாகிய எங்களைப் பல காலும் ப்ரோக்ஷித்து, வேதவாக்கியங்களை உச்சைஸ்ஸ்வரமாக எடுத்து ஓதி ஆசீர்வாதங்கள் பண்ணிக் கண்ணபிரானோடு என்னை இணைத்துக் கங்கணநூல்கட்டும் நிலைமையைக் கனவில் கண்டேனென்கிறாள். ... ... (4)

560 கதிரொளிதீபம் கலசமுடனேந்தி * சதிரிளமங்கையர்தாம் வந்தெதிர்கொள்ள *
மதுரையார்மன்னன் அடிநிலைதொட்டெங்கும் * அதிரப்புகுதக் கனாக்கண்டேன்தோழீநான். (5)

தோழீ! அழகிய இளம் பெண்கள் ஸூர்யனுடைய ஒளிபோன்ற ஒளியையுடைய மங்கள தீபத்தையும் பொற்கலசங்களையும் கையில் ஏந்திக்கொண்டு எதிர்கொண்டுவர, மதுரையிலுள்ளார்க்கு அரசனான கண்ணபிரான் பாதுகைகளைச் சாத்திக்கொண்டு பூமியெங்கும் அதிரும்படியாக எழுந்தருள நான் கனாக் கண்டேன்.

பருவத்தாலும் வடிவழகாலும் தங்களையே எல்லாரும் நோக்கிக்கொண்டிருக்கும்படி மிக்க அழகுவாய்ந்த மாதர்கள் மங்களஸம்ருத்திக்காகத் தீபங்களையும் பூர்ணகும்பங்களையும் ஏந்திக்கொண்டு எதிர்கொண்டு வர, கண்ணபிரான் பாதுகைசாத்திக்கொண்டு பூமி அதிரும்படி ஸந்தோஷமாக நடந்துவரும்படியைக் கனவில் கண்டேனென்கிறாள். ... ... (5)

561 மத்தளங்கொட்ட வரிசங்கம்நின்றூத * முத்துடைத்தாமம் நிரைதாழ்ந்தபந்தற்கீழ் *
மைத்துனன்நம்பி மதுசூதன்வந்தென்னை * கைத்தலம்பற்றக் கனாக்கண்டேன்தோழீநான். (6)

தோழீ! மத்தளங்கள் அடிக்கவும் ரேகைகளையுடைய சங்குகளை ஊதவும் மைத்துனமை முறையையுடையனாய்ப் பூர்ணனான கண்ணபிரான் முத்துக்களையுடைய மாலைத்திரள்கள் தொங்கவிடப்பெற்ற பந்தலின் கீழேவந்து என்னைப் பாணிக்ரஹணம் செய்தருள நான் கனாக் கண்டேன்.

"நின்றூத" என்றவிடத்து நின்று என்றது வார்த்தைப்பாடு. மைத்துனன் = அத்தை மைந்தன்: மாமன்மகளை மணக்கும்முறைமைபற்றி நப்பின்னைப் பிராட்டிக்குக் கண்ணபிரான் மைத்துனனாதலால் ஆண்டாளும் அந்தஸம்பந்தத்தை ஆசைப்பட்டு "மைத்துனன்நம்பி" என்கிறாளென்ப. ... ... (6)

562 வாய்நல்லார் நல்லமறையோதிமந்திரத்தால் * பாசிலைநாணல்படுத்துப் பரிதிவைத்து *
காய்சினமாகளிறன்னான் என்கைபற்றி * தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன் தோழீநான். (7)
...

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

தோழி! நன்றாக ஓதின வைதிகர்கள் சிறந்த வேதவாக்கியங்களை உச்சரிக்க, அந்தந்த க்ரியைகளுக்கு இசைந்த மந்த்ரங்களைக்கொண்டு பசுமைதங்கிய இலைகளையுடைத்தான நாணற்புல்லைப் பரிஸ்தரணமாக அமைத்து ஸமித்துக்களை இட்டு, மிக்க சினத்தையுடைய மத்தகஜம் போற்செருக்கனான கண்ணபிரான் என்கையைப்பிடித்துக்கொண்டு அக்நியைச் சுற்றிவர நான் கனாக் கண்டேன்.

முதலடியில், ஓதிஎன்றது எச்சத்திரிபு; ஓதஎன்றபடி. வாய்நல்லார்நல்ல மறையோத, காய்சினமாகளிறன்னான் மந்திரத்தால் பாசிலைநாணற்படுத்துப் பரிதிவைத்து, என்கைபற்றித் தீவலஞ்செய்யக் கனாக்கண்டேன். ஆண்டாளைக் கைப்பிடிக்கப் பெற்றமையாலுண்டான செருக்குக்குக் காய்சினமாகளிற்றின் செருக்கு ஒக்கும். என்கைபற்றித் தீவலஞ்செய்ய = திருமங்கலியதாரணத்திற்குப்பிறகு தீவலஞ்செய்தல் முறைமையென்ப. தம்பதிகள் தங்களுடைய அன்பை அக்நிஸாக்ஷிகமாக்குகிறபடி. இந்தத் தீவலஞ்செய்தல் ஸப்தபதீ எனவும்படும். ... ... (7)

563 இம்மைக்கும் ஏழேழ்பிறவிக்கும்பற்றாவான் * நம்மையுடையவன் நாராயணன்நம்பி *
செம்மையுடைய திருக்கையால்தாள்பற்றி * அம்மிமிதிக்கக் கனாக்கண்டேன்தோழீநான். (8)

தோழி! இப்பிறவிக்கும் மேலுள்ள பிறவிகள் எல்லாவற்றிற்கும் சரண்யனாயிருப்பவனாய் ஸகலகல்யாணகுணபரிபூர்ணனாய் நாராயணனான கண்ணபிரான் செவ்விய தனது திருக்கையினால் எனது காலைப்பிடித்து அம்மியின்மேல் எடுத்துவைக்க நான் கனாக் கண்டேன்.

காலதத்வமுள்ளதனையும் நம்முடைய பணிவிடைகளை ஏற்றுக்கொண்டு நம்மை நோக்குமவனான கண்ணபிரான் தனது செந்தாமரை மலர்போன்ற திருக்கையாலே என்காலைப் பிடித்து அம்மிமிதிப்பிக்கக் கனாக்கண்டேனென்கிறாள். இது அச்மாரோஹணம் எனப்படும். மணவாளப்பிள்ளை மணவாட்டியின் காலைப்பிடித்துக் கொண்டுபோய் அம்மியை மிதிக்கச் செய்வது முறைமையோ? பெண்பிள்ளையின்காலை ஆண்பிள்ளை வந்து பிடிப்பது பொருந்துமோ? இது சாஸ்த்ரமரியாதைக்குச் சேருமோ? அப்படி ப்ரமாணந்தானுண்டோவென்று பலபேர்க்கு இதிலே விசிகித்ஸை பிறக்கும்; திருக்கையால் தாள்பற்றுகையென்பது அசாஸ்த்ரீயமான காரியமென்று சிலர் க்ரந்தமும் எழுதியிருக்கிறார்கள். ஆனால் அவர்கள், பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானவைகரியின் ஸ்வாரஸ்யத்தை ஆராயப்பெற்றிலர் போலும்; வியாக்யானஸூக்தி வருமாறு:—["செம்மையுடைய திருக்கையால் தாள்பற்றி.] பிள்ளையுறவு முறையார் வேண்டாவென்பர்கள்: பெண்பிள்ளையுறவு முறையார் வேணுமென்னா நிற்பர்கள்; இப்படி இரண்டு தலையிலுள்ளாரும் வார்த்தை சொல்லாநிற்கச்செய்தே தானே வந்து காலைப்பிடிக்கக் கணிசியாநிற்குமாய்த்து. அதாவது—ஆச்ரிதர்கால் பிடிக்கவென்றால் இறாயாத கையாய்த்து. உபதேசகாலத்திற் போலன்றிறே பரிமாற்றத்திலிருப்பது; உபதேசிப்பது அவன் காலைப்பிடிக்கக்கடவதாக; பரிமாற்றத்தில் வந்தால் அவன்றான் கால் பிடிக்கும்படியாக வாய்த்திருப்பது.........[தோழீ! நான்]......அவன் ஸ்வபாவம் நீ சொல்லக் கேட்டபடியே அநுபவிக்கப்பெற்றேன்." எம்பெருமான் அன்பு மிகுதியால் பரிமாறப்புகுந்தால் சாஸ்த்ரம் குறுக்கே நிற்கமாட்டாதென்க. "அம்மி மிதிக்க" என்றது—"அம்மிமிதிப்பிக்க" என்றபடி. பாதிவ்ரத்யத்தில் பங்கமடைந்து கல்லுருவமடைந்த அஹல்யையைத் திரஸ்காரஞ்செய்தல் அம்மிமிதிப்பதற்குக்கருத்து என்றார் ஒருவர். அஹல்யையைப் போலல்லாமல் வழுவாத பாதிவ்ரத்ய முடையேனாயிருக்கக் கடவேனென்று இதனால் காட்டிக்கொண்டபடியாம். ... ... (8)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

564 வரிசிலைவாள்முகத்து என்னைமார்தாம்வந்திட்டு * எரிமுகம்பாரித்து என்னைமுன்னேநிறுத்தி *
அரிமுகனச்சுதன் கைம்மேலென்கைவைத்து * பொரிமுகந்தட்டக் கனாக்கண்டேன்தோழீநான். (9)

தோழீ! அழகிய வில்போன்த புருவத்தையும் ஒளிபொருந்திய முகத்தையுமுடையவர்களான எனது தமையன்மார்கள் வந்து அக்நியை நன்ருக ஜ்வலிக்கச்செய்து அந்தஅக்நியின் முன்னே என்னை நிறுத்தி, ஹிரண்யவதத்திற்காக ஸிம்ஹமுகத்தையுடையனாய் அவதரித்த கண்ண பிரானுடைய திருக்கையின்மேலே என்னுடைய கையை வைத்துப் பொரிகளை அள்ளிப்பரிமாற நான் கனாக் கண்டேன்.

அம்மிமிதித்த பிறகு 'லாஜஹோமம்' செய்வது முறைமை; அதாவது பொரியை யிட்டு ஆஹுதிசெய்தல்: அது நடந்தபடியைச் சொல்லுகிருள் இப்பாட்டில். ப்ரயோகசந்த்ரிகை என்னும் க்ரந்தத்தில் விவாஹப்ரகரணத்தில் லாஜஹோமமுறைவரையுமிடத்து [பத்ந்யாஸ் ஸோதர்யோ லாஜாநாவபதீத்யேகே] அதாவது—மணவாட்டியின் கூடப்பிறந்தவன் பொரி களை எடுத்திடுவதாகச் சிலர்கொள்கை என்று சொல்லப்பட்டிருத்தலாலும் அநுஷ்டானமும் அப்படியேயிருப்பதாலும் "என்னைமார் தாம்வந்திட்டுப் பொரிமுகந்தட்ட" என்கிருள். என்னைமார்=என் ஐமார்—தமையன்மார்; இப்பதம் திருவாய்மொழியிலும் [ஆறும்பத்தில் இரண்டாந்திருவாய்மொழியில் ஏழாம்பாட்டில்] பிரயோகிக்கப்பட்டுள்ளமை காண்க: "என்னை மார் தன்மபாவமென்னுர் ஒருநான்று தடிபிணக்கே." சிலைபோன்ற புருவமென்ன வேண்டு மிடத்துச் சிலை என்றது—முற்றுவமை: "தாவி வையங்கொண்ட தடந்தாமரைகட்கே" என்றது போல; "கஞ்சைக் காய்ந்த கருவில்லி" என்று மேலும் வரும், முகந்து அட்டுதல்—எடுத்து ப்ரக்ஷேபித்தல். ... ... (9)

565 குங்குமமப்பிக் குளிர்சாந்தம்மட்டித்து * மங்கலவீதி வலஞ்செய்துமணநீர் *
அங்கவனேடும் உடன்சென்றங்கானைமேல் * மஞ்சனமாட்டக் கனாக்கண்டேன்தோழீநான். (10)

தோழீ! குங்குமக்குழம்பை உடம்பெல்லாம் பூசிக் குளிர்ந்த சந்தனத்தைக் கனக்கத்தடவி மத்தகஜத்தின்மேலே அக்கண்ணபிரானேடு கூடியிருந்து விவாஹநிமித்தமான அலங்காரங் கள் விளங்குகின்ற வீதிகளிலே ஊர்வலம் வந்து வஸந்த ஜலத்தினுல் எங்களிருவரையும் திருமஞ்சனம் பண்ணுவதாக நான் கனாக் கண்டேன்.

கண்ணபிரானும் தானுமாக அக்நி ஸமீபத்திலே சில நாழிகை இருக்க நேர்ந்தமையால் அப்போதுண்டான வெப்பம் பொறுக்கமுடியாததாக, அதற்குப் பரிஹாரமாகக் குளிர்ந்த குங்குமக்குழம்பையும் சந்தனச்சேற்றையும் திருமேனியெங்கும் அப்பி இந்தத் திருக்கோலத் தோடே இருவருமானசேர்த்தியாய் ஆனையின்மீதேறித் திருவீதி வலம்வந்து, பிறகு வஸந்த ஜலத்தாலே மஞ்சனமாட்டப்பெற்றதாகக் கனாக்கண்டேனென்கிருள். பச்சைக்கல்யாணத் தன்றிரவு நடைபெறும் வஸந்தஸ்நாநம் இப்பாட்டிற் கூறப்பட்டதென்க. ... (10)

566 ஆயனுக்காகத் தான்கண்டகனவினை * வேயர்புகழ் வில்லிபுத்தூர்க்கோன்கோதைசொல் *
தூயதமிழ்மாலை யீரைந்தும்வல்லவர் * வாயுநன்மக்களைப்பெற்று மகிழ்வரே. (11)

வேயர் குலத்தவரால் புகழப்பட்டவராய் ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருடைய திருமகளான ஆண்டாள் தான் கோபாலக்ருஷ்ணனுக்கு வாழ்க்கைப்பட்டதாகக் கனாக்கண்டபடியைக் குறித்து அருளிச்செய்த பரிசுத்தமான தமிழ்த்தொடையான இப்பத்துப் பாட்டுக்களையும் ஓதவல்லவர்கள் நற்குணங்களமைந்த விலக்ஷணரான புத்திரர்களைப்பெற்று ஆநந்திக்கப்பெறுவர்கள். ... ... (11)

அடிவரவு :—வாரணம் நாளை இந்திரன் நாற்றிசை கதிர் மத்தளம் வாய் இம்மை வரிசிலை குங்குமம் ஆயன் கருப்பூரம்.

ஆண்டாளெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ஏழாந்திருமொழி — கருப்பூரம்

எம்பெருமானது திருப்பவளத்தில் நித்யாநுபவரஸிகமான பாஞ்சஜன்யத்தோடு உசாவும் பதிகம்.

567 கருப்பூரம்நாறுமோ கமலப்பூநாறுமோ *
திருப்பவளச்செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ *
மருப்பொசித்தமாதவன்றன் வாய்ச்சுவையும்நாற்றமும் *
விருப்புற்றுக்கேட்கின்றேன் சொல்லாழிவெண்சங்கே. (1)

கம்பீரமாய் வெளுத்திராகின்ற ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானே! குவலயாபீடயானையின் கொம்பை முறித்த கண்ணபிரானுடைய திருஅதரத்தினுடைய ரஸத்தையும் பரிமளத்தையும் பற்றி ஆசையோடே உன்னைக் கேட்கின்றேன்—அப்பெருமானுடைய அழகிய பவளம் போன்ற சிவந்த திருவதரமானது பச்சைக்கற்பூரம்போல் பரிமளிக்குமோ? அல்லது தாமரைப்பூப் போலே பரிமளிக்குமோ? மதுரமான ரஸத்தை உடைத்தாயிருக்குமோ? இன்னபடியிருக்குமென்று எனக்குச் சொல். ... ... (1)

568 கடலில்பிறந்து கருதாது * பஞ்சசன னுடலில்வளர்ந்துபோய்ஊழியான்கைத்தலத்
திடரில் * குடியேறித் தீயவசுரர் * நடலைப்படமுழங்குந் தோற்றத்தாய் நற்சங்கே. (2)

அழகிய சங்கே!, நீ ஸமுத்ரத்திலே பிறந்து அங்குநின்றும் பஞ்சஜனனென்ற அஸுரனுடைய சரீரத்திற்போய் வளர்ந்து, இப்படி பிறந்தவிடத்தையும் வளர்ந்தவிடத்தையும் நினையாமல் எம்பெருமானுடைய கைத்தலமாகிற உந்நத ஸ்தானத்திலே குடிபுகுந்து கொடியவர்களான அசுரர்கள் துன்பப்படும்படி ஒலி செய்யும்படியான மேன்மையுடையையாயிரா நின்றாய், உன்பெருமையே பெருமை.

சங்கே! நீ பிறந்ததெங்கே? போய்வளர்ந்ததெங்கே?; உப்புக்கடலிலேபிறந்து அசுரனுடைய உடலுக்குள்ளே போய்வளர்ந்தாய்; இப்படி மட்டமானகுலத்திலே பிறந்து வளர்ந்தவுனக்கு எம்பெருமானுடைய திருக்கைத்தலத்திலே நித்யவாஸம்பண்ணப்பெறுதலும், அவனுடைய திருவாயிலே யிருந்துகொண்டு அஸுரராக்ஷஸாதிகள் குடல்குழம்பும்படி கோஷம் செய்யப்பெறுதலும் வாய்த்தது என்னபாக்கியம்!; உன்வைலக்ஷண்யத்தை என்சொல்வேன்? என்கிறாள். ஓரிடத்திற் பிறந்து ஓரிடத்தில் வளர்ந்து ஓரிடத்திற் குடியேறினதாகச் சொல்லப்பட்டுள்ள இவ்விடத்தில் கண்ணபிரானுடைய நிலைமை நினைவுக்கு வரும்: சங்கு கடலிற் பிறந்ததுபோல அவன் யதுகுலத்துப்பிறந்தான்; சங்கு அசுரனுடைய உடலில் வளர்ந்தது போல அவன் அசுரத்தன்மை பூண்டவனான கம்ஸனுக்குள்ளாய் இறையிறுத்திருக்கிற திருவாய்ப்பாடியிலே வளர்ந்தான்; சங்கு கைத்தலத்திடரிற் குடியேறியதுபோல அவன் காலயவநஜராஸந்தாதிகளுக்காகப்போய் ஸ்ரீத்வாரகையைப் படைவீடாகச்செய்து அங்கே குடியேறினான்: சங்கு தீயவசுரரை நடலைப்படுத்துவதுபோல அவன் துர்யோதநாதிகளை மண்ணுண்ணும்படி செய்தான். இப்படிகளாலே திருச்சங்கானது எம்பெருமானோடு பரமஸாம்யம் பெற்றிருக்கின்றதென்பதும் ஆண்டாளது கொண்டாட்டத்தில் உள்ளுறை. அஸூயையுமாம். ... ... (2)

569 தடவரையின்மீதே சரற்காலசந்திரன் * இடையுவாவில்வந்து எழுந்தாலேபோல *. நீயும்
வடமதுரையார்மன்னன் வாசுதேவன்கையில் * குடியேறிவீற்றிருந்தாய் கோலப்பெருஞ்சங்கே.

அழகிய பெரிய சங்கே!, சரத்காலத்துச்சந்திரன் பௌர்ணமியினன்று ,பெரிய உதயகிரியிலே வந்து உதித்தாற்போல நீயும் வடமதுரையிலுள்ளார்க்கு அரசனான கண்ணபிரானுடைய திருக்கையில் குடிபுகுந்து உன் மேன்மையெல்லாம் தோற்ற இராநின்றாய். ... (3)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

570 சந்திரமண்டலம்போல் தாமோதரன்கையில் * அந்தரமொன்றின்றி யேறியவன்செவியில் *
மந்திரங்கொள்வாயேபோலும் வலம்புரியே * இந்திரனுமுன்னோடு செல்வத்துக்கேலானே. (4)

கண்ணபிரானுடைய திருக்கையிலே சந்திரமண்டலம் போலே விளங்காநின்றுகொண்டு ஒருநொடிப்பொழுதும் அத்திருக்கையை விட்டுப்பிரியாமல் அங்கே யிருந்துகொண்டு அவனுடைய திருச்செவியோடே அணைந்தாற்போலிருப்பதனால் அவனது திருக்காதில் ஏதோ ரஹஸ்யம் ஓதுகிறாப்போலேயிராநின்றாய்; சிறந்த செல்வம்பெற்றவனாகப் புகழப்படுகின்ற இந்திரனுக்கும் உன்னளவுசெல்வமில்லாமையாலே நீ ஒப்பற்ற ஐச்வர்யம் படைத்தவனாயிராநின்றாய் என்று கொண்டாடுகிறாள். ... ... (4)

571 உன்னோடுடனே ஒருகடலில்வாழ்வாரை * இன்னாரினையாரென்று எண்ணுவாரில்லைகாண் *
மன்னாகிநின்ற மதுசூதன்வாயமுதம் * பன்னாளுமுண்கின்றாய் பாஞ்சசன்னியமே. (5)

சங்கே! ஒரேகடலில் உன்னோடுகூடவே வாழப்பிறந்தவர்களான மற்றும் பலரை ஒருபதார்த்தமாகவும் மதிப்பாரில்லை காண்; நீ ஒருவன் மாத்திரம் ஸர்வஸ்வாமியாயிராநின்ற கண்ணபிரானுடைய திருவாயினமுதத்தைப் பலகாலமாகப் பருகாநின்றாய். ஆகையால் நீயே பாக்யசாலி.

ஓ பாஞ்சசன்னியமே! நீ பிறந்தவிடத்தில் உன்னைப் போலே பிறந்தவர்கள் எத்தனையோ பேர்களிருக்கிறார்களன்றோ? அவர்களை யாராவது நெஞ்சிலும் நினைப்பாருண்டா? அவர்களுடைய ஸ்வரூபம் இப்படிப்பட்டது, ஸ்வபாவம் இப்படிப்பட்டதென்று யாராவது அறிய விரும்பினாருண்டா? இல்லை; அப்படியிருக்க, உனக்கொருத்தனுக்கு மாத்திரம் வந்த வாழ்ச்சி என்னே! கண்ணபிரானுடைய திருவாயிலமுதத்தை அல்லும் பகலும் அருந்துகின்றாயே! உன்னுடைய பாக்கியமே பாக்கியம் என்று கொண்டாடுகின்றாள். ... (5)

572 போய்த்தீர்த்தமாடாதே நின்றபுணர்மருதம் *
சாய்த்தீர்த்தான்கைத்தலத்தே யேறிக்குடிகொண்டு *
சேய்த்தீர்த்தமாய்நின்ற செங்கண்மால்தன்னுடைய *
வாய்த்தீர்த்தம்பாய்ந்தாடவல்லாய் வலம்புரியே. (6)

வலம்புரிச்சங்கே! வெகுதூரம் வழிநடந்துபோய்க் கங்கை முதலிய தீர்த்தங்களிலே நீராடுகையாகிற கஷ்டங்கள் படவேண்டாமல், நாரதசாபத்தாலே மரமாய்நின்ற இரட்டை மருதமரத்தை முறித்துத் தள்ளின கண்ணபிரானுடைய திருக்கைத்தலத்தின் மீதேறி அங்கே நித்யவாஸம் பண்ணிக்கொண்டு லோகோத்தரமான தீர்த்தமாகிய புண்டரீகாக்ஷனான கண்ணபிரானுடைய வாயிலுள்ள தீர்த்தத்திலே படிந்து நீராடும் பாக்கியம் பெற்றிருக்கிறாய்.

இந்நிலவுலகத்தில் புண்யதீர்த்தங்களிற் படிந்து குடைந்தாடவேணுமென்னும் விருப்பமில்லாதாரில்லை; அங்ஙன் விருப்புற்றாரெல்லாரும் ஆயிரக்காதம் ஐந்நூறுகாதம் வழி நடந்துபோய் ஒருகுளத்திலும் குட்டையிலும் முழுக்கிட்டுவருவர்கள்; ஒருதடவை புண்ய தீர்த்தத்திற்பாய்ந்தாடுவதற்கு எல்லாரும் படாப்பாடுகள்படாநிற்க, பாஞ்சசன்னியமே! நீ அப்படிப் பட்டவருத்தமொன்றும் படாமல் எம்பெருமானுடைய திருக்கைத்தலத்திலேயே எளிதாகக் குடியிருந்துகொண்டு அவனுடைய வாயமுதமாகிற லோகோத்தரமான புண்யதீர்த்தத்திலே ஸர்வகாலமும் அவகாஹித்திருக்கின்றாயே! உனது அத்ருஷ்டமே அத்ருஷ்டம்—என்று கொண்டாடுகின்றாள். ... ... (6)

573 செங்கமலநாண்மலர்மேல் தேனுகருமன்னம்போல் *
செங்கண்கருமேனி வாசுதேவனுடைய *
அங்கைத்தலமேறி அன்னவசஞ்செய்யும் *
சங்கரையாவுன்செல்வம் சாலவழகியதே. (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அப்போதலர்ந்த செந்தாமரைப்பூவில் படிந்து தேனைப் பருகுகின்ற அன்னப்பறவைபோன்று, சிவந்த திருக்கண்களையும் கறுத்த திருமேனியையுமுடைய கண்ணபிரானது அழகிய கைத் தலத்தின் மீதேறிக் கண்வளர்கின்ற சங்குகளிற் சிறந்த பாஞ்சஜந்யமே! உன்னுடைய செல்வ மானது மிகவும் சிறந்ததுகாண்.

ஆழ்வானருளிச்செய்த ஸௌந்தரபாஹுஸ்தவத்தில் *ஸ்ரீமத்வநாத்ரிபதி பாணிதலாப் ஜயுக்மமாரூடயோர் விமலசங்கரதாங்கயோஸ்து—ஏகோப்ஜமாச்ரித இவோத்தமராஜஹம்ஸ: பத்மப்ரியோர்க்க இவ தத்ஸமிதோ த்விதிய:* என்ற ச்லோகத்தில் திருச்சங்கைப்பற்றி வர் ணித்திருப்பதில் இப்பாட்டின் கருத்து அமைக்கப்பட்டிருக்கின்றமை அறியத்தக்கது. ... (7)

574 உண்பதுசொல்லில் உலகளந்தான் வாயமுதம் *
கண்படைகொள்ளல் கடல்வண்ணன்கைத்தலத்தே *
பெண்படையாருன்மேல் பெரும்பூசல்சாற்றுகின்றார் *
பண்பலசெய்கின்றாய் பாஞ்சசன்னியமே. (8)

சங்கே! நீ உண்பது என்னவென்றால் உலகங்களை அளந்தவனான எம்பெருமானுடைய திருவாயிலுள்ள அம்ருதம்; நீ படுத்துக்கொள்வது கடல்போன்ற நிறத்தை யுடைய னான அப்பெருமானுடைய திருக்கையிலே; இப்படி உனக்கு ஊணுமுறக்கமும் அங்கே யாயிருப்பதனால் பெண்குலத்தவர்கள் அனைவரும் உன் விஷயமாகப் பெரிய கோஷம் போடுகிறார்கள்; [எங்கள் ஜீவனத்தை இவனே கொள்ளை கொள்ளுகிறானென்று கூச்சலிடு கிறார்கள்;] இப்படி அவர்கள் வருந்தும்படி அநியாயமான காரியத்தைச் செய்கிறாய்; இஃது உனக்குத்தகாது.

ஓ பாஞ்சசன்னியமே! நீசெய்வது சிறிதும்நியாயமாயில்லை; பெண்ணாய்ப் பிறந்தவர்க ளெல்லாரும் உன்மேல் வசைகூறும்படியானகாரியம் நீ செய்கிறாய்; அது என்னவென்றால்; நீ கண்ணபிரானுடைய வாயமுதத்தை உண்பதும் அவனுடைய கைத்தலத்தில் உறங்கு வதுமாயிருக்கிறாய்; கோவில் சோற்றைத்தின்று குளத்தில்நீரைக் குடித்துக் கோபுர வாச லிற் கிடந்துறங்குவார்க்குப்போலே உனக்கும் பகவத்ஸம்பந்தம் ஒருநொடிப்பொழுதும் இடை யறாதிருக்கின்றது; இப்படி எம்பெருமானோடேயே ஸதா போது போக்கவேணுமென்று ஆசைப்பட்டிருக்கிற பல்லாயிரம்பெண்களை வயிறெரிந்துநிற்கவிட்டு நீயொருவனே இப்படி போதுபோக்குவதானது நியாயமேயல்ல; 'இப்பாவி இப்படி அநியாயம்செய்கிறானே' என்று முறையிடாதாரில்லைகாண் என்கிறாள். கண்படை = உறக்கம்; பெண்படையார் = திரள்திரளா யுள்ள பெண்கள் என்றபடி; திருவாய்ப்பாடியிலுள்ளாரும் ஸ்ரீமதுரையிலுள்ளாரும். பூசல் = பேரொலிசெய்தல். பண்பல = பண்பு அல—, பண்பு—நியாயம், அல—அல்ல = அல்லாதது, நியாயமல்லாதது அநியாயம். பகவத்விஷயத்தில் அவகாஹித்தவர்கள் *ஏக:ஸ்வாதுநபுஞ்ஜீத* *இன்கனிதனியருந்தான்* என்றபடி மற்றும்ருசியுடையாரையுங் கூட்டிக்கொண்டு திரளாக விருந்து அநுபவிக்கவேண்டியிருக்க, நீ ஏகாகியாய் அநுபவிப்பது அநீதியென்கை. ... (8)

575 பதினாறாமாயிரவர் தேவிமார்பார்த்திருப்ப *
மதுவாயிற்கொண்டாற்போல் மாதவன்றன்வாயமுதம் *
பொதுவாகவுண்பதனைப் புக்குநீயுண்டக்கால் *
சிதையாரோவுன்னோடு செல்வப்பெருஞ்சங்கே. (9)

பெரியசெல்வம்படைத்த சங்கமே!, பதினாறாயிரம் தேவிமார்கள் கண்ணபிரானுடைய வாயமு தத்தை நாம் பருகவேணுமென விரும்பி எதிர்பார்த்திருக்கையில் பகவத்ஸம்பந்திக ளெல்லா

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

ரும் பொதுவாக உண்ணவேண்டியதான அவ்வெம்பெருமானது வாயமுதத்தை நீயொருவனே ஆக்ரமித்து, தேனுண்பதுபோல் உண்டால் மற்றபேர்கள் உன்னேடு விவாதப்படாரோ?

பெருஞ்செல்வம் படைத்தசங்கே! நீ அல்லும்பகலும் உண்கிற கண்ணபிரான் தன் வாயமுதமானது உனக்கொருவனுக்கே உரிமைப்பட்டதன்று; அக் கண்ணபிரானுக்கு வாழ்க்கைப்பட்ட பதினறுமியிரம்பெண்கள் இவ்வமுதத்தைப் பருகுவதற்குப் பங்குடையவர்கள்; அன்னவர் இதனை அநுபவிக்க அவஸரம்பார்த்திருக்க நீஒருவனேமேல்விழுந்து புஜித்தால் அவர்கள் உன்னேடு பிணங்காதிருக்கமுடியுமோ? அவர்களுடைய மனவருத்தத்திற்கு நீ ஆளானுயாகில் உன்னை ஸாதுகோஷ்டியில் மதிப்பாருண்டோ? என்கிருள். ... ... (9)

576 பாஞ்சசன்னியத்தைப் பற்பநாபனேடும் * வாய்ந்தபெருஞ்சுற்றம் ஆக்கியவண்புதுவை *
ஏய்ந்தபுகழ்ப்பட்டர்பிரான் கோதைதமிழீரைந்தும் * ஆய்ந்தேத்தவல்லாரவருமணுக்கரே. (10)

சங்கை எம்பெருமானேடே கிட்டினபெருறவையுடையதாக வார்த்தை சொன்ன அழகிய ஸ்ரீவில்லிபுத்தூரில் திருவவதரித்தவளும் நிறைந்த புகழையுடையவளும் பெரியாழ்வாருடைய திருமகளுமான ஆண்டாள் அருளிச் செய்த இத்தமிழ்ப் பாசுரங்கள் பத்தையும் அநுஸந்தித்து இது கொண்டு எம்பெருமானைத் துதிக்கவல்லவர்களும் பாஞ்சஜந்யம் போல் அந்தரங்கராகப் பெறுவர்கள். ... ... (10)

அடிவரவு:—கருப்பூரம் கடல் தடவரை சந்திரன் உன்னேடு போய் செங்கமலம் உண்பது பதினறு பாஞ்ச விண்.

ஆண்டாள் எம்பெருமானர் ஜீயர் திருவடிகளே சரணம்.

எட்டாந்திருமொழி — விண்ணீலமேலாப்பு

மேகவிடுதூது.

577 விண்ணீலமேலாப்பு விரித்தாற்போல்மேகங்காள் *
தெண்ணீர்பாய்வேங்கடத்து என்திருமாலும்போந்தானே *
கண்ணீர்கள்முலைக்குவட்டில் துளிசோரச்சோர்வேனை *
பெண்ணீர்மையீடழிக்குமிது தமக்கோர்பெருமையே. (1)

ஆகாசப்பரப்பு முழுவதும் இடமடையும்படி நீலநிறமாயிருப்பதொரு மேற்கட்டிகட்டினாற்போன்ற மேகங்களே! என் திருவேங்கடமுடையானும் உங்களோடு கூட இவ்விடமெழுந்தருளினனே? என்று ஆண்டாள் மேகங்களைநோக்கிக்கேட்க, அதற்கு அவை மறுமொழியொன்றுஞ் சொல்லாதொழியவே, 'அவன் வாராமையாலன்றே இவை பேசாதிருக்கின்றன' என்று கண்ணீர் வெள்ளமிடத்தொடங்க, 'மேகங்களே! இப்படிநான் கண்ணீர்விட்டு அழும்படி அவன் என்னைப் பரிதாபப்படுத்துவது அவனுடைய பெருமைக்கு ஏற்குமோ? நீங்களே சொல்லுங்கள்' என்கிருள். ... ... (1)

578 மாமுத்தநிதிசொரியும் மாமுகில்காள் * வேங்கடத்துச்
சாமத்தின்நிறங்கொண்ட தாளாளன்வார்த்தையென்னே *
காமத்தீயுள்புகுந்து கதுவப்பட்டிடைக்கங்குல் *
ஏமத்தோர்தென்றலுக்கு இங்கிலக்காய்நானிருப்பேனே. (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சிறந்த முத்துக்களையும் பொன்களையும் கொண்டு பொழிகிற காளமேகங்களே! திருமலையிலெழுந்தருளியிரா நின்ற நீல நிறமுடையனான எம்பெருமானுடைய ஸமாசாரம் ஏதாகிலுமுண்டோ?, காமாக்நியானது உள்ளேபுகுந்து கவ்வ, அதனால் பாதைப்பட்டு இரவில் நடுயாமத்திலே ஒருதென்றற்காற்றுக்கு நான் இலக்காகி இங்கு இருப்பேனோ?

ஓ காளமேகங்களே! நீங்கள் எனக்காக ஔதாரியத்தில் இன்று புதிதாகப் பரிசயம் பண்ணவேணுமோ? வள்ளல்தனமே இயல்பாக இருப்பவர்களன்றோ நீங்கள்; விலையுயர்ந்த முத்துக்களையும் பொன்களையும் ஒருவரும் வேண்டாமலிருக்கத்தானே நீங்களே பொழிகின்றீர்களன்றோ. அப்படிப்பட்ட நீங்கள், அடிவிழ்ந்து வேண்டுகின்ற எனக்காக ஒருவாய்ச்சொல் நல்கலாகாதோ? திருவேங்கடமுடையானுடைய ஸமாசாரம் உங்களுக்குத் தெரியாமலிராதே; ஏதாவது சொல்லலாகாதா? பிறர்க்குப் பொன்னையும் முத்தையும் பொழிகின்ற நீங்கள் எனக்கு ஒருவாய்ச்சொல் பொழிய அருமையோ? என்கிறாள் முன்னடிகளில்.

இவள் அப்படி கேட்டவளவிலும் அம்முகில்கள் இன்னஸமாசாரமுண்டென்று மறுமாற்றம் சொல்லப்பெருமையாலே தனது ஆற்றாமையின் கனத்தைச் சொல்லி வருந்துகின்றாள் பின்னடிகளில்;—அவ்வெம்பெருமானிடத்து வைத்த காமமாகிற தீயானது வெளியிலுள்ள அவயவங்களை நிச்சேஷமாக தஹித்துவிட்டு இரைகாணாமல் உள்ளேபுகுந்து தஹிக்க, தென்றற்காற்றானது அதற்குத் துணையாயிருந்துகொண்டு நோயை அதிகப்படுத்த இப்படி இரண்டின் கையிலுமகப்பட்டுக்கொண்டு எத்தனைநாள் தடுமாறிக்கிடப்பேனென்கிறாள்.

579 ஒளிவண்ணம்வளைசிந்தை உறக்கத்தோடிவையெல்லாம் *
எளிமையாலிட்டென்னை யீடழியப்போயினவால் *
குளிரருவிவேங்கடத்து என்கோவிந்தன்குணம்பாடி *
அளியத்தமேகங்காள் ஆவிகாத்திருப்பேனே. (3)

அருள்புரியக்கடவ மேகங்களே? தேஹத்தின் காந்தியும் நிறமும் வளைகளும் நெஞ்சும் உறக்கமும் ஆகிய இவையெல்லாம் என்னுடைய தைந்யமே காரணமாக என்னை உபேக்ஷித்துவிட்டு என் சீர் குலையும்படி நீங்கிப் போய்விட்டன; அந்தோ!; 'குளிர்ந்த அருவிகளையுடைய திருமலையிலெழுந்தருளியிருக்கிற எனது கண்ணபிரானுடைய திருக்கல்யாண குணங்களை வாயாரப் பாடிக்கொண்டு அந்தப்பாட்டேதாரகமாகப் பிராணனை ரக்ஷித்திருக்க என்றால் முடியுமோ?

எம்பெருமானைப்பிரிந்துபட்ட துக்கத்தினால் சரீரசோபைமாறி நிறமழிந்து வளைகழன்று நெஞ்சுதளர்ந்து உறக்கமொழிந்து இப்படியெல்லாம் நான் சீர்குலைந்து தடுமாறியிருக்குமிருப்பை என்சொல்லவல்லேனென்றாளாயிற்று. ... ... (3)

580 மின்னாகத்தெழுகின்ற மேகங்காள் * வேங்கடத்துத்
தன்னாகத்திருமங்கை தங்கியசீர்மார்வற்கு *
என்னாகத்திளங்கொங்கை விரும்பித்தாம் நாடோறும் *
பொன்னாகம்புல்குதற்கு என்புரிவுடைமைசெப்புமினே. (4)

எம்பெருமானுடைய கரியதிருமேனியில் மின்னற்கொடிபோன்ற பிராட்டி விளங்கும்படியை நினைப்பூட்டிக்கொண்டு மின்னியெழுகின்ற மேகங்களே! நீங்கள் திருவேங்கடமுடையான் பக்கலிலே சென்று ஒருவார்த்தை சொல்லவேணும்; அதாவது, என்மார்பிலுள்ள இளமுலைகளை அவ்வெம்பெருமான் விரும்பி அணைந்துகொண்டே இடைவிடாது கிடக்கவேணுமென்று நான் ஆசைப்பட்டிராநின்றேனென்பதை நீங்கள்போய்ச் சொல்லவேணுமென்கிறாள். (4)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

581 வான்கொண்டுகிளர்ந்தெழுந்த மாமுகில்காள் * வேங்கடத்துத்
தேன்கொண்டமலர்சிதறத் திரண்டேறிப்பொழிவீர்காள் *
ஊன்கொண்டவள்ளுகிரால் இரணியனையுடலிடந்தான் *
தான்கொண்டசரிவளைகள் தருமாகில்சாற்றுமினே. (5)

திருமலையிலே தேன்நிறைந்துள்ள புஷ்பங்கள் சிதறும்படி திரள்திரளாக ஆகாயத்திலேறி மழையைப் பொழிகின்றவையாயும், ஆகாயத்தைக் கபளீகரித்துக்கொண்டு ஓங்கிக் கிளம்புகின்றவையாயுமுள்ள காளமேகங்களே! வலியுள்ளவையாய்க் கூர்மையுடையவையான நகங்களாலே ஹிரண்யாஸுரனுடைய உடலைப்பிளந்தெறிந்த பெருமான் என்னிடத்துக்கொள்ளை கொண்டுபோன கைவளைகளைத் திருப்பிக் கொடுப்பதாகவிருந்தால் எனது அவஸ்த்தையை அவர்க்குத் தெரிவியுங்கள்.

விச்லேஷகாலத்திலே எனக்கு உத்திபகங்களாய்க்கொண்டு தோற்றுகின்ற மலர்களை நீங்கள் சிதறவடிப்பது எனக்குச் சந்தோஷந்தான்; ஆகிலும் அவ்வளவு செய்தமாத்திரத்தால் பயனில்லை: திருவேங்கடமுடையானோடே நான் ஸம்ச்லேஷம்பெற்று இம்மலர்களைப் போகோபகரணமாகக்கொண்டு களிக்கும்படியாகச் செய்துவைக்கவேணும் என்பதாகவுங் கருத்துக்கொள்வர். தான்கொண்டசரிவளைகள் தருமாகில்சாற்றுமின் = எம்பெருமான் ஆண்டாளிடமிருந்து சரிவளைகள்கொண்டானோவென்னில்; அவன் இவளை விட்டுபிரிந்ததனால் இவள் மேனிமெலிந்து வளைகள்கழன்று போகப்பெற்றுளாதலால் இவ்வளை நீங்குதலுக்கு அவனே காரணமாகின்றமைபற்றித் தான்கொண்டசரிவளைகள் எனப்பட்டதென்க. தருமாகில் என்று - வளையைத் தருகையாவதென்னென்னில்; மறுபடியும் ஸம்ச்லேஷித்து வளைகள் தங்கும்படி செய்தல். ஆகவே, சரிவளைகள்தருமாகில் என்றது—அவ்வெம்பெருமான் என்னோடு வந்து புணரத் திருவுள்ளம்பற்றியிருக்கிறானாகில் என்றபடி. சாற்றுமின் = அவனுடைய ஆபிமுக்யத்தை அறிந்துகொண்டு என்நிலைமையை அவனுக்குச் சொல்லுங்கள் என்கை. ... (5)

582 சலங்கொண்டுகிளர்ந்தெழுந்த தண்முகில்காள் * மாவலியை
நிலங்கொண்டான்வேங்கடத்தே நிரந்தேறிப்பொழிவீர்காள் *
உலங்குண்டவிளங்கனிபோல் உள்மெலியப்புகுந்து * என்னை
நலங்கொண்டநாரணற்கு என்நடலைநோய்செப்புமினே. (6)

ஸமுத்ரஜலத்தை முகந்துகொண்டு மேற்கிளம்பி விளங்குகின்ற குளிர்ந்த மேகங்களே! மஹாபலியிடமிருந்து பூமியை ஸ்வாதீனப்படுத்திக் கொண்டவனான எம்பெருமான் எழுந்தருளியிருக்கிற திருமலையிலே பரவி உயரவிருந்து பொழிகின்ற மேகங்களே! பெருங்கொசுக்கள் புஜித்த விளாம்பழம்போல (நான்) உள் மெலியும்படி என்னுள்ளே பிரவேசித்து என்னுடைய நிறைவுகளை அபஹரித்த நாராயணனுக்கு எனது கஷ்டவ்யாதியைத் தெரிவியுங்கள்.

உலங்கு என்பது பெருநுளம்பு; (விளாம்பழத்தை மொய்க்கிற கொசுக்கள்;) அவை விளாம்பழத்திலே மொய்த்தவாறே அதின்ரஸமெல்லாம் சுவறிப்போம்; அதுபோல் என்னுடம்போடே அணைந்து என்ஸர்வஸ்வத்தையும் அபஹரித்த பெருமானுக்கு நான் இப்படி நோவுபட்டுக் கிடக்கிறேனென்பதைத் தெரிவியுங்கள் என்றுளாயிற்று. ... ... (6)

583 சங்கமாகடல்கடைந்தான் தண்முகில்காள் * வேங்கடத்துச்
செங்கண்மால்சேவடிக்கீழ் அடிவீழ்ச்சிவிண்ணப்பம் *
கொங்கைமேல்குங்குமத்தின் குழம்பழியப்புகுந்து * ஒருநாள்
தங்குமேல் என்னாவிதங்குமென்றுரையீரே. (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

சங்குகளை யுடைத்தாயும் பெருமைவாய்ந்ததுமான கடலைக் கடைந்தருளின பெருமான் எழுந்தருளியிருக்கிற திருமலையில்திரிகிற குளிர்ந்த மேகங்களே! புண்டரீகாக்ஷனை அவ்வெம்பெருமானுடைய செவ்விய திருவடிகளின்கீழ் அடியேனுடைய விஜ்ஞாபநம் (யாதெனில்) எனதுமுலைகளின் மேல் பூசப்பட்டுள்ள குங்குமக் குழம்பானது நன்றாக அவிந்துபோம்படி ஒருநாளாகிலும் அவன் வந்து ஸம்ச்லேஷிப்பனாகில் (அப்போதுதான்) என் பிராணன் நிலை நிற்கும்—என்பதாம்; (இவ்விண்ணப்பத்தை அப்பெருமானிடத்துச்) சொல்லுங்கள்.

இவளுடைய பாரிப்புக்கெல்லாம் ஒருநாள் 'அணைத்தால்போதுமோ? ஊழி யெல்லா மணைத்துக்கிடந்தாலும் த்ருப்திபெறமாட்டாத அபிநிவேசமன்றோ இவளது; அப்படிப்பட்ட அபிநிவேசம் ஒருநாள் வந்து தங்கினவளவாலே திருமோவென்னில்; என்னாவிநங்கும் என்ற சொல்நலத்தை நோக்குமின்; ஒருநாள் அணைந்தவளவால் போகத்துக்குப்போராது, ப்ராண ரக்ஷணத்துக்குப்போரும் - என்கிறுளாய்த்து. ... ... (7)

584 கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள் * வேங்கடத்துப்
போர்காலத்தெழுந்தருளிப் பொருதவனார்பேர்சொல்லி *
நீர்காலத்தெருக்கில் அம்பழவிலைபோல்வீழ்வேனை *
வார்காலத்தொருநாள் தம்வாசகம்தந்தருளாரே. (8)

வர்ஷாகாலத்திலே திருமலையிலே வந்து தோற்றுகின்ற காளமேகங்களே! யுத்தஸமயத்திலே (போர்க்களத்தில்) எழுந்தருளிப் போர்செய்து வெற்றிபெற்ற இராமபிரானுடைய திருநாமங்களை ஸங்கீர்த்தனம் பண்ணி, மழைகாலத்தில் எருக்கம் பழுப்புகள் அற்றுவிழுவதுபோல் ஒசிந்து விழுகின்ற எனக்கு நெடுகிச் செல்லுகிற காலத்திலே ஒருநாளாகிலும் தம்முடைய ஒருவார்த்தையை அருளாதொழிவரோ?

வர்ஷாகாலத்திலே தவறுமல்வந்து சேருகிறேன் என்று சொல்லிப்போன பெருமான் வாராதொழிந்தாலும் அவனுடைய வடிவுக்குப் போலியான நீங்களாவது வந்து தோன்றுகின்றீர்களே! என்ற உகவைதோன்றக் கார்காலத்தெழுகின்ற கார்முகில்காள்! என விளித்தவாறு. (8)

585 மதயானைபோலெழுந்த மாமுகில்காள் * வேங்கடத்தைப்
பதியாகவாழ்வீர்காள் பாம்பணையான்வார்த்தையென்னே *
கதியென்றுந்தானவான் கருதாது * ஓர்பெண்கொடியை *
வதைசெய்தானென்னும்சொல் வையகத்தார்மதியாரே. (9)

திருமலையை இருப்பிடமாகக் கொண்டு வாழ்கின்றவையாயும் மத்தகஜம்போலே செருக்கிக் கிளர்ந்தவையாயுமுள்ள காளமேகங்களே! சேஷசாயியான எம்பெருமானுடைய வார்த்தையானது இப்படி பொய்யாய் விட்டதே!; "அவ்வெம்பெருமான்றான் எப்போதைக்கும் (ஆச்ரிதர்கட்கு) ரக்ஷகனுயிருந்து வைத்து அத்தன்மையை நினையாமல் ஒரு பெண்பிள்ளையைக் கொலை பண்ணினான்" என்கிற சொல்லை இப்பூமியிலுள்ளவர்கள் மதிக்கமாட்டார்களே!.

பாம்பணையான் வார்த்தையென்னே = திருவநந்தாழ்வானிடத்து ஸகலவித கைங்கரியங்களையுங் கொள்வதுபோல என்னிடத்தும் கொள்வன் என்றிருந்தேன்; [*நாகபர்யங்கமுத்ஸ்ருஜ்ய ஹ்யாகதோ மதுராம் புரீம்] என்றபடி சேஷசயநத்தைவிட்டுத் திருமதுரையிலே வந்து பிறந்த கண்ணபிரான் தேர்த்தட்டில் நின்றுசொன்ன வார்த்தையை [-சரமச்லோகத்தை] மெய்யென்று நம்பியிருந்தேன்; பாம்போடே அணைந்து பாம்பின்தன்மையே தனக்குமுண்டா

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

கப்பெற்றான்; அதற்கு நாக்கு இரண்டாயிருப்பதுபோல இவனும் இரண்டு நாக்குப்பெற்றான்,—அதாவது பொய்யனாய் விட்டான்—என்ற கருத்துக் காண்க. ... ... (9)

586 நாகத்தினணையானை நன்னுதலாள்நயந்துரைசெய் *
மேகத்தைவேங்கடக்கோன் விடுதூதில்விண்ணப்பம் *
போகத்தில்வழுவாத புதுவையர்கோன்கோதைதமிழ் *
ஆகத்துவைத்துரைப்பா ரவரடியாராகுவரே. (10)

விலக்ஷணமான ரூகத்தையுடையளாய், பகவதநுபவத்தில் குறையாதவரான பெரியாழ்வாருடைய மகளான ஆண்டாள் திருவனந்தாழ்வானைப் படுக்கையாகவுடையனான திருவேங்கடமுடையானை ஆசைப்பட்டு அருளிச்செய்ததாய், மேகத்தைத் தூது விடுவதாக அமைந்த விண்ணப்பமாகிய இத்தமிழ்ப்பாசுரங்களை ஹ்ருதயத்திலே வைத்துக்கொண்டு ஓதவல்லவர்கள் எம்பெருமானுக்கு நித்யகைங்கர்யம் பண்ணப்பெறுவர்கள். ... ... (10)

அடிவரவு :—விண் மா ஒளி மின் வான் சலம் சங்கம் கார் மத நாகச் சிந்துரம்,

ஆண்டான் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

ஒன்பதாந்திருமொழி — சிந்துரச்செம்பொடி

கண்ணெதிரே வந்துதோன்றின கார்முகில்கள் நன்றாக மழைபொழிந்தன. உடனே வர்ஷா காலத்தில் புஷ்பிக்கக்கூடிய புஷ்பங்களெல்லாம் புஷ்பிக்கத்தொடங்கின. மழை காலத்தில் களித்துத்திரியுமவையான மயில்முதலிய சிலபிராணிகளும் ஸம்ப்ரமத்தோடு வந்துலாவப் புக்கன. ஆக இப்படிப்பட்ட பதார்த்தங்களெல்லாம் இவளுடைய இந்த விரஹதசையிலே வந்துதோற்றவே இவளுடைய ஆற்றாமை மீதூர்ந்து உயிர்கொண்டு தப்பிப் பிழைக்க முடியாத அவஸ்தையாயிற்று. அதனால் மிகவும் துவண்டு பேசுகிற பாசுரமாயிருக்கிறது இத்திருமொழியும் மேல்திருமொழியும். ... ... *

587 சிந்துரச்செம்பொடிப்போல் திருமாலிருஞ்சோலையெங்கும் *
இந்திரகோபங்களே யெழுந்தும்பரந்திட்டனவால் *
மந்தரம்நாட்டியன்று மதுரக்கொழுஞ்சாறுகொண்ட *
சுந்தரத்தோளுடையான் சுழலையில்நின்றுய்துங்கொலோ. (1)

திருமாலிருஞ் சோலையில் பார்த்தபார்த்த விடமெங்கும் பட்டுப்பூச்சிகளானவை சிவந்த ஸிந்தூரப் பொடிபோல மேலெழுந்து பரவிக்கிடக்கின்றன அந்தோ!; (கடலைக்கடைந்து அமுதமளிக்கவேணுமென்று தேவர்கள் சரணம் புகுந்து வேண்டின) அக்காலத்திலே மந்தாமலையை (ப்பாற்கடலில் மத்தாக) நாட்டிக் கடல்கடைந்து மிகவும் மதுரமான பெரிய பிராட்டியாராகிற அம்ருதரஸத்தை எடுத்துக்கொண்ட ஸ்ரீ ஸௌந்தர பாஹு நாதனுடைய சூழ்வலையில் நின்றும் தப்பிப் பிழைப்போமோ?

மழைக்காலத்திலே பட்டுப்பூச்சிகள் விசேஷமாகப் பறக்கும்; அவை காதலனுடைய அதரத்தின் பழுப்புக்கு ஸ்மாரகங்களாயிருக்குமாதலால் தலைவிக்கு உத்தீபகமாயிருக்கும், ஐயோ! திருமாலிருஞ்சோலைப் புறமெங்கும் பட்டுப்பூச்சிமயமாய்விட்டதே!; விச்லேஷகாலத்திலே இவை வந்துதோற்றினால் இனி உயிர்தரிக்க வழியுண்டோவென்று வருந்துகின்றாள். "இந்திரகோபங்கள் எம்பெருமான் கனிவாயொப்பான், சிந்தும்புறவில் தென்திருமாலிருஞ்சோலையே" என்ற பெரியாழ்வார் திருமொழி இங்கே நினைக்கத்தக்கது. ... ... (1)

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

588 போர்க்களிறுபொரும் மாலிருஞ்சோலையம்பூம்புறவில் *
தார்க்கொடிமுல்லைகளும் தவளநகைகாட்டுகின்ற *
கார்க்கொள்படாக்கள்நின்று கழறிச்சிரிக்கத்தரியேன் *
ஆர்க்கிடுகோதோழீ அவன்தார்செய்தபூசலையே. (2)

யானைகள் கரைபொருது விளையாடா நிற்கப்பெற்ற திருமாலிருஞ்சோலைமலைச் சாரல்களில் அரும்புகொண்டு விளங்குகின்ற கொடிமுல்லைகளானவை, அவ்வெம்பெருமான் ஸம்போக ஆரம்பஸமயத்தில் பண்ணும் புன்முறுவலை நினைப்பூட்டிக்கொண்டு என்னைத் துன்பப்படுத்தா நின்றன; அதற்குமேலே, படாக்களானவை புஷ்பித்து, ஸம்ச்லேஷம் நடந்தேறின பின்பு ஒருதலையில்வெற்றிக்கு சூசகமாகப்பண்ணும் பெருஞ்சிரிப்பை நினைப்பூட்டா நின்றுகொண்டு என்னை உருவழிக்கின்றன. தோழீ! அவ்வெம்பெருமான் திருத்தோளில் சாத்திக்கொண்டிராநின்ற மாலையை ஆசைப்பட்டமையாலன்றோ நான் இப்படி பரிபவப்பட நேர்ந்தது; இந்தப் பரிபவத்தை நான் யாரிடத்திற்சென்று முறையிட்டு ஆறுவேன். ... ... (2)

589 கருவிளையொண்மலர்காள் காயாமலர்காள் * திருமா
லுருவொளிகாட்டுகின்றீர் எனக்குய்வழக்கொன்றுரையீர் *
திருவிளையாடுதிண்டோள் திருமாலிருஞ்சோலைநம்பி *
வரிவளையில்புகுந்து வந்திபற்றும்வழக்குளதே. (3)

எம்பெருமானுடைய திருநிறத்தை நினைப்பூட்டாநின்றுள்ள கருவிளைப்பூக்களே! காயாம்பூக்களே! நீங்கள் என்னை முடிக்கும்வகை ஒன்றுமோதான் கற்றது? நான்பிழைக்கும் வகையை அறிவீர்களாகிற் சொல்லுங்கள்; திருமாலிருஞ்சோலையில் அவாப்தஸமஸ்தகாமரா யெழுந்தருளியிருக்கிற பெரியவர், நானொருத்தி இருப்பதாகவும் நினையாமல் தமது திருத்தோளைப் பெரியபிராட்டியார்க்கு நித்யாநுபவயோக்யமாகக் கொடுத்து அவளும் தாமும் பரமரஸபுஞ்ஜமாய் அநுபவம் நடத்தாநிற்பதைப்பற்றி நான் ஒன்றும் விசாரப்படாமல், 'அவர் முன்பு விரும்பிப்போந்த வளைகள் நம்கையில் இருக்கின்றனவே, அவற்றைக் கண்டுகொண்டாவது தரித்திருப்போம்' என்றெண்ணி நான்என்வீட்டுக்குள்ளே கதவடைத்துக்கொண்டு கிடந்தால், அப்பெரியவர் அதனையும்பொறாமல் சடக்கென ஓடிவந்து என்வீட்டினுள் புகுந்து பலாத்காரமாக அவ்வளைகளைப் பறித்துக்கொண்டு ஓடினரே, இஃது எந்தநீதியிற் சேரும்?

வந்தி பற்றுகை = பிறர் இசையாதிருக்க நிர்ப்பந்தப்படுத்திப் பிடுங்கிக் கொள்ளுதல். (3)

590 பைம்பொழில்வாழ்குயில்காள்மயில்காள் ஒண்கருவிளைகாள் *
வம்பக்களங்கனிகாள் வண்ணப்பூவைநறுமலர்காள் *
ஐம்பெரும்பாதகர்காள் அணிமாலிருஞ்சோலைநின்ற *
எம்பெருமானுடையநிறம் உங்களுக்கென்செய்வதே. (4)

குயில், மயில், கருவிளை, களங்கனி, காயாம்பூ என்னும் இவ்வைந்து வஸ்துக்களையும் பஞ்சமஹாபாதகிகள் என்கிறாள். பொற்களவு, கள்குடித்தல் முதலிய மஹத்தான ஐந்துபாதகஞ் செய்தவர்களைப் பஞ்சமஹாபாதகிகளென்று சாஸ்த்ரம் கூறும்: அப்பாதகங்களினும் மேற்பட்ட பாதகங்களை இக்குயில் முதலியவை செய்கின்றனவாகக் கொண்டு ஆண்டாள் இவற்றைப் பஞ்சமஹாபாதகிகளென்கிறாளாய்த்து. இவை தனக்குப் பொறுக்கவொண்ணாத ஹிம்ஸையைப் பண்ணுவதுபற்றி இங்ஙனங் கூறினளென்க. பரமசேதநனான எம்பெருமானோடு அற்பசேதநங்களான குயில்மயில்களோடு, அசேதநங்களான கருவிளை முதலியவற்றோடு வாசியற எல்லா வஸ்துக்களும் எனக்குத் தீங்குவிளைக்க ஒருப்பட்டால் நான் எங்ஙனேபிழைக்கும்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

படி? அவன் பிரிந்துபோன ஸமயத்தில் முகங்காட்டி என்னைத் தேற்றவேண்டியவைகளும் பாதகங்களானால் நான் எங்ஙனம் பிழைக்கவல்லேன்? பிரிந்தவன் ஒருவனாய், பாதகங்கள் பலவானால் பிழைக்கமுடியுமோ? என்கிறாள்போலும். எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என் செய்வதே?=என்னை உயிர்க்கொலைசெய்கின்ற அவனுடைய நிறத்தை நீங்கள் எதுக்காக ஏறிட்டுக் கொண்டீர்கள்? என்னை ஹிம்ஸிக்கவேணுமென்றே நீங்கள் அவனது நிறத்தை ஏறிட்டுக்கொண்டீர்கள்போலும் என்கை. ... ... (4)

591 துங்கமலர்ப்பொழில்சூழ் திருமாலிருஞ்சோலைநின்ற *
செங்கட்கருமுகிலின் திருவுருப்போல் * மலர்மேல்
தொங்கியவண்டினங்காள் தொகுபூஞ்சுனைகாள் * சுனையில்
தங்குசெந்தாமரைகாள் எனக்கோர்சரண்சாற்றுமினே. (5)

ஓங்கின மலர்களையுடைய சோலைகள் சூழ்ந்த திருமாலிருஞ்சோலையில் நின்றதிருக்கோலமாய் எழுந்தருளியிருக்கிற செந்தாமரைபோன்ற திருக்கண்களையும் காளமேகம்போன்ற வடிவையுமுடைய எம்பெருமானுடைய அழகிய வடிவம்போலே மலர்மேல் தங்கியிருக்கிற வண்டுக் கூட்டங்களே! நெருங்கியிருக்கின்ற அழகிய சுனைகளே! அச்சுனைகளில் உள்ள செந்தாமரைமலர்களே! (உங்களை யமதூதர்களாக நினைக்கிற) எனக்கு அடைக்கலம் புகுமிடம் சொல்லுங்கள்.

திருமாலிருஞ்சோலைமலைப் பொழில்களில் மலர்ந்துள்ள பூக்களில் தங்குகின்ற வண்டுகளும் சுனைகளும் அழகருடைய திருவுருவை நினைப்பூட்டிநலிவதனாலும், சுனைகளில் அலர்ந்த செந்தாமரைமலர்கள் அவருடைய திவ்யாவயவங்களுக்கு ஸ்மாரகங்களாய்க்கொண்டு ஹிம்ஸிப்பதனாலும் அந்த ஹிம்ஸையைப்பொறுக்கமாட்டாத ஆண்டாள் அவற்றைநோக்கி 'அந்தோ! நான் உங்களுக்குத் தப்பிப்பிழைப்பதொரு உபாயம்சொல்லவல்லீர்களோ?' என்கிறாள். (5)

592 நாறுநறும்பொழில் மாலிருஞ்சோலைநம்பிக்கு * நான்
நூறுதடாவில்வெண்ணெய் வாய்நேர்ந்துபராவிவைத்தேன் *
நூறுதடாநிறைந்த அக்காரவடிசில்சொன்னேன் *
ஏறுதிருவுடையான் இன்றுவந்திவைகொள்ளுங்கொலோ. (6)

பரிமளம் மிகுந்தபொழில்கள் மணங்கமழா நிற்கப்பெற்ற திருமாலிருஞ்சோலையில்(எழுந்தருளியிருக்கிற) எம்பெருமானுக்கு அடியேன் நூறுதடாக்களில் நிறைந்தவெண்ணெயை வாயாலே சொல்லி ஸமர்ப்பித்தேன்; (இன்னமும்) நூறு தடாக்களில் (நிறைந்த) அக்காரவடிசிலும் வாசிகமாக ஸமர்ப்பித்தேன்; இந்த வெண்ணெயையும் அக்காரவடிசிலையும்; (நாட்செல்ல நாட்செல்ல) ஏறி வருகிற ஸம்பத்தையுடையரான அழகர் இன்று எழுந்தருளித் திருவுள்ளம் பற்றுவரோ?

இப்பாட்டும் மேற்பாட்டும் இத்திருமொழியில் விலக்ஷணமாக அமைந்த பாசுரங்கள், கீழ்ச்சென்ற பாசுரங்களின் சைலியும் மேல்வரும் பாசுரங்களின் சைலியும் வேறாயிருக்க, இப்பாட்டின் சைலியும் மேற்பாட்டின் சைலியும் விஜாதீயமாக அமைந்திருக்கிறபடியைக் காண்மின். கீழ்ப்பாட்டில் "எனக்கோர்சரண் சாற்றுமினே" என்றவாறே தளர்ந்து த்வயாநுஸந்தானம் பண்ணினாள்; உத்தரகண்டத்தை நன்றாக அநுஸந்தித்தாள்; அதற்கு அர்த்தமாகிய கைங்கரிய ப்ரார்த்தனையிலே ஊன்றினாள்; காயிகமான கைங்கரியமொன்றும் செய்யமுடியாதபடி தளர்ந்திருக்கும் தசையாகையாலே வாசிகமான கைங்கரியம்செய்ய விரும்பினாள்; அதுசெய்தபடியைச் சொல்லுகிறாள் இப்பாட்டில்; இப்பாட்டுக்கு சேஷபூதம் மேற்பாட்டு. (6)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

593 இன்றுவந்தித்தனையும் அமுதுசெய்திடப்பெறில் * நான்
ஒன்றுநூறாயிரமாக்கொடுத்துப் பின்னுமாளும்செய்வன் *
தென்றல்மணங்கமழும் திருமாலிருஞ்சோலைதன்னுள்
நின்றபிரான் * அடியேன்மனத்தேவந்துநேர்படிலே. (7)

தென்றல்காற்ருனது மணத்தைக்கொண்டு வீசுகின்ற திருமாலிருஞ்சோலையென்னும் மலையிலே எழுந்தருளியிருக்கிற ஸ்வாமியான அழகர் இன்றைக்கு இவ்விடமெழுந்தருளி நூறுதடா நிறைந்த வெண்ணெயையும் அக்காரவடிசிலையும் அமுதுசெய்தருளப்பெற்ருல் (அவ்வளவுமன்றி) அடியேனுடைய ஹ்ருதயத்திலேயே நித்யவாஸம் பண்ணப்பெற்ருல் அடியேன் ஒரு தடாவுக்கு நூருயிரம் தடாக்களாக ஸமர்ப்பித்து அதற்குமேலும் ஸகலவித கைங்கரியங்களும் பண்ணுவேன். ... ... (7)

594 காலையெழுந்திருந்து கரியகுருவிக்கணங்கள் *
மாலின்வரவுசொல்லி மருள்பாடுதல்மெய்ம்மைகொலோ *
சோலைமலைப்பெருமான் துவராபதியெம்பெருமான் *
ஆலினிலைப்பெருமான் அவன்வார்த்தையுரைக்கின்றவே. (8)

கரிய குருவிக்கூட்டங்கள் விடியற்காலத்திலே எழுந்து திருமாலிருஞ்சோலைமலைக்குத் தலைவனுயும் த்வாரகாபுரிக்குத்தலைவனுயும் ஆலிலையில் வளர்ந்த பெருமானுயுமுள்ள அந்த ஸர்வேச்வரனுடைய வார்த்தைகளைச் சொல்லா நின்றன. (இப்படி) எம்பெருமானுடைய வருகையைச் சொல்லிக்கொண்டு மருளென்கிற பண்ணைப்பாடுவதானது மெய்யாகத் தலைக்கட்டுமா ?

ஆண்டாள்பிறந்த வூரில் திர்யக்குக்களுங்கூட எம்பெருமானைப்பற்றின சிந்தனையே மிக்கிருக்குமாதலால் சில கருங்குருவிகள் காலையெழுந்திருந்து கூட்டங் கூட்டமாக இருந்து எம்பெருமானுடைய வரவை ஸூசிப்பித்துக்கொண்டு பண்களைப்பாடுவதும் அவ்வெம்பெருமான் விஷயமான வார்த்தைகளைச் சொல்லுவதுமாயிருக்கவே, அதுகண்ட ஆண்டாள் இது மெய்யாய்த்தலைக்கட்டுமோ பொய்யாய்விடுமோவென்று சிந்திக்கிருளாய்த்து. மெய்ம்மைகொலோ ? என்றதற்கு இரண்டுவகையாகக் கருத்தாகலாம்; நம்முடைய சித்தவிப்ரமத்தால் இவைபாடுகின்றனவாகத் தோற்றுகின்றதா ? அல்லது மெய்யாகவே பாடுகின்றனவா ? என்பது ஒருகருத்து; இக்கரியகுருவிக்கணங்கள் இதற்குமுந்தியும் பலகால் மாலின்வரவு சொல்லி மருள்பாடியும் அவ்வெம்பெருமான் வரக்காணுமையாலே இதுவரையில் இவற்றின் பாட்டு பொய்யாயொழிந்தது; இப்போதாவது அங்ஙனன்றி மெய்யாகத் தலைக்கட்டுமா ? என்பது மற்றெருரு கருத்து. ... ... (8)

595 கோங்கலரும்பொழில் மாலிருஞ்சோலையில்கொன்றைகள்மேல் *
தூங்குபொன்மாலைகளோடு உடனாய்நின்று தூங்குகின்றேன் *
பூங்கொள்திருமுகத்து மடுத்தூதியசங்கொலியும் *
சார்ங்கவில்நாணொலியும் தலைப்பெய்வதெஞ்ஞான்றுகொலோ. (9)

கோங்கு மரங்கள் மலரப்பெற்ற சோலைகளையுடைய திருமாலிருஞ் சோலைமலையில் கொன்றை மரங்களின்மேலே தொங்குகின்ற பொன் னிறமான பூமாலைகளோடுஸமமாக வாளா கிடக்கிறேன்; அழகுபொருந்திய திருப்பவளத்திலே வைத்து ஊதப்படுகிற ஸ்ரீபாஞ்சஜந்யத்தினுடைய த்வநியும் சார்ங்கமென்னும் வில்லின் நாணோசையும் ஸமீபிப்பது என்றைக்கோ ?

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இப்பாசுரத்தின் கருத்து மிகவும் ஆழ்ந்தது. திருமாலிருஞ்சோலைமலையிற் கொன்றை மரங்களின்மீது தொங்குகின்ற கொன்றைப்பூ மாலைகளோடொப்ப நானும் தூங்குகின்றேன் என்று கூறுகின்ற ஆண்டாளுடைய கருத்து யாதெனில் :—கேண்மின் ; திருமாலிருஞ் சோலைமலையில் ஸாத்விக புருஷர்கள் ஏறிப்போவர்களேயன்றி ராஜஸதாமஸபுருஷர்கள் ஏறிப் போகமாட்டார்கள். கொன்றைமலர்கள் சிவன் முதலிய தேவதாந்தரங்களின் ஆராதனைக்கு உபயோகப்படக்கூடியவையாதலால் அம்மலர்கள் ராஜஸதாமஸ புருஷர்கட்கு உபயுக்தமாகு மேயன்றி ஸாத்விகபுருஷர்கட்கு அவை கொண்டு பயனில்லை. இனி ஸாத்விக மாத்ரப்ராப்ய மான திருமாலிருஞ்சோலைமலையில் மலர்கின்ற கொன்றைமலர்கட்கு ஏதாவது உபயோக முண்டோவென்று சிந்தித்தால், அவை அங்கே மலர்ந்து அங்கே வீழ்வதொழிய வேறொரு உபயோகமும் அவற்றுக்கு இல்லையென்றே சொல்லவேண்டும். ஆகவே, அம்மலர்களின் ஜன் மம் எப்படி வீணோ, அப்படியே என் ஜன்மமும் வீணாயிற்றே ! என்கிறாள். ... (9)

596 சந்தொடுகாரகிலும்சுமந்து தடங்கள்பொருது *
வந்திழியும்சிலம்பாறுடை மாலிருஞ்சோலைநின்ற
சுந்தரனை * சுரும்பார்குழல் கோதைதொகுத்துரைத்த *
செந்தமிழ்ப்பத்தும்வல்லார் திருமாலடிசேர்வர்களே. (10)

சந்தனக்கட்டைகளையும் காரகிற் கட்டைகளையும் அடித்துக்கொண்டு பலபல குளங்களையும் அழித்துக்கொண்டு ஓடிவந்து பெருகுகின்ற நூபுர கங்கையையுடைத்தான திருமாலிருஞ் சோலைமலையில் எழுந்தருளியிருக்கிற அழகரைக் குறித்து வண்டுகள் படிந்த கூந்தல் முடியை யுடைய ஆண்டாள் அழகாக அருளிச்செய்த செந்தமிழினாலாகிய இப்பத்துப் பாசுரங்களையும் ஓதவல்லவர்கள் ஸ்ரீமந் நாராயணனுடைய திருவடிகளை அடையப் பெறுவர்கள். (10)

அடிவரவு :—சிந்துரப் போர் கருவிளை பைம்பொழில் துங்க நாறு இன்று காலை கோங்கு சந்து-கார்க்கோடல்.

ஆண்டாளெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

பத்தாந்திருமொழி—கார்க்கோடல்

(முந்தின பதிகத்தின் அவதாரிகையே இதற்கும்)

597 கார்க்கோடல்பூக்காள் கார்க்கடல்வண்ணனெம்மேல் * உம்மைப்
போர்க்கோலஞ்செய்து போரவிடுத்தவனெங்குற்றான் *
ஆர்க்கோவினிநாம் பூசலிடுவது * அணிதுழாய்த்
தார்க்கோடும்நெஞ்சந்தன்னைப் படைக்கவல்லேனந்தோ. (1)

கறுத்த காந்தள் பூக்களே ! உங்களை யுத்தத்திற்கு உசிதமாக அலங்கரித்து என்மேலே [பாயும்படி] அனுப்பினவனும் கறுத்த கடல்போன்ற வடிவையுடையவனுமான கண்ணபிரான் எங்கேயிருக்கிறான்? (உங்களால் மிகவும் நலிவுபட்ட) நான் இனிமேல் யாரிடத்தில்போய் முறையிட்டுக்கொள்வதோ (அறியேன்); அழகிய திருத்துழாய் மாலையை ஆசைப்பட்டு ஓடு கின்ற நெஞ்சையுடையவளாயிராநின்றேனே ! ஐயோ !!

எம்பெருமானுடைய விபூதியடங்கலும் நம்மைநலிவதற்கு அவனுக்குத் துணையாயிருப் பதுபோல, நம்மைச்சேர்ந்த வஸ்துக்களாவது நமக்குத் துணை நிற்குமோவென்று பார்த் தாலோ அதுவுமில்லை ; நமக்கு விதேயமாயிருக்கக்கடவதான நெஞ்சும் நம்மை உதறித்தள்ளி

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விட்டு அவனுடைய திருத்துழாய் மாலையைநாடி ஓடாநின்றது! இப்படி எல்லாம் பகையாகப் பெற்றேமே! இஃது என்ன கஷ்டகாலம்! என்கிறாள் ஈற்றடியில். இதனால், எம்பெருமானுடைய விச்லேஷம் தனக்கு அஸஹ்யமாயிருக்கிறபடியையும், அவ்வளவிலும் தனது திருவுள்ளம் பகவத்விஷயத்திலேயே ஈடுபட்டுச் செல்லுகிறபடியையும் அருளிச்செய்தாளாய்த்து. **பூசலிடுவது** :—பேரொலிசெய்து முறையிடுவது. ... ... (1)

598 மேற்றோன்றிப்பூக்காள் மேலுலகங்களின் மீதுபோய் *
மேற்றோன்றும்சோதி வேதமுதல்வர்வலங்கையில் *
மேற்றோன்றுமாழியின் வெஞ்சுடர்போலச்சுடாது * எம்மை
மாற்றோலைப்பட்டவர்கூட்டத்து வைத்துக்கொள்கிற்றிரே. (2)

உயரப் பூத்திருக்கிற காந்தள் பூக்காள்! மேலுள்ள உலகங்களெல்லாவற்றையுங் கடந்து அவற்றுக்கு மேற்பட்டு விளங்குகின்ற 'தன்னுடைச் சோதி' என்கிற பரமபதத்தில் எழுந்தருளி இருக்கிற வேதப்ரதிபாத்யனான பரமபுருஷனுடைய வலத் திருக்கையிலே விளங்காநின்ற திருவாழியாழ்வானுடைய வெவ்விய தேஜஸ்ஸுபோல தஹியாமல் என்னை இந்த பிரக்ருதி மண்டலத்தைவிட்டு நீங்கினவர்களுடைய திரளில் கொண்டு சேர்க்க வல்லீர்களோ?

599 கோவைமணாட்டி நீயுன்கொழுங்கனிகொண்டு * எம்மை
ஆவிதொலைவியேல் வாயழகர்தம்மையஞ்சுதும் *
பாவியேன்தோன்றிப் பாம்பணையார்க்குந்தம்பாம்புபோல் *
நாவுமிரண்டுளவாய்த்து நாணிலியேனுக்கே. (3)

அம்மா! கோவைக் கொடியே! நீ உன்னுடைய அழகிய பழங்களாலே என்னுடைய உயிரைப் போக்கலாகாது; அழகிய வாய்படைத்த பெருமான் விஷயத்திலே பயப்படாநின்றேன்; பாவியான நான் பிறந்தபின்பு லஜ்ஜையற்றவளான என் விஷயத்திலே சேஷசாயியான பெருமானுக்கும் தமது [படுக்கையான] திருவனந்தாழ்வானுக்குப் போல இரண்டு நாக்குகள் உண்டாயின.

நாணிலியேனுக்கே=நான் தவிர மற்றபேர்கள் விஷயத்தில் அவன் ஸத்யவாக்காகவே இருக்கக்கூடும். வெட்கங்கெட்ட என் விஷயத்தில் மாத்திரமே அவன் த்விஜிஹ்வனாய் விட்டானென்கிறாள். இப்படி அவன் பொய்யனாயிருக்கச்செய்தேயும் தான் அவனையே வாய்வெருவாநின்றமைபற்றித் தன்னை வெட்கமற்றவளாகச் சொல்லிக்கொள்ளுகிறாள். (3)

600 முல்லைப்பிராட்டி நீயுன்முறுவல்கள்கொண்டு * எம்மை
அல்லல்விளைவியேல் ஆழிநங்காயுன்னடைக்கலம் *
கொல்லையரக்கியைமூக்கரிந்திட்ட குமரனார்
சொல்லும்பொய்யானால் * நானும் பிறந்தமைபொய்யன்றே. (4)

அம்மா! முல்லைக்கொடியே! கம்பீரமான இயல்வையுடையாய்! நீ (எம்பெருமானது முறுவல் போன்ற) உனது விகாஸத்தாலே என் விஷயத்திலே வருத்தத்தை உண்டாக்க வேண்டா; (இதற்காக) உன்னைச் சரணமடைகிறேன்; வரம்புகடந்தவளான சூர்ப்பணகையை மூக்கறுத்துத் துரத்தின சக்ரவர்த்தி திருமகனாருடைய வார்த்தையே பொய்யாய்விட்டால் நான் பெரியாழ்வார் வயிற்றில் பிறந்ததும் பொய்யாகக் கடவதன்றோ.

கோவைக்கொடியில் நின்றும் கண்ணைத் திருப்பி வேறோரிடத்தே வைத்தாள்; அங்கே முல்லையானது நன்றாகப் பூத்துக் கிடந்தது; அதைக்கண்டவாறே எம்பெருமானுடைய முறுவல் நினைவுக்கு வரவே ஆற்றமாட்டாதாளாய் அதின்காலிலே விழுகிறாள்.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

கொல்லையரக்கியை மூக்கரிந்திட்ட குமரனார்-இராமபிரான்; அவருடைய சொல்லாவது—[மித்ரபாவேந ஸம்ப்ராப்தம் நத்யஜேயம் கதஞ்சந] அதாவது - ஒருவன் மெய்யான அன்போடு என்னைவந்து பற்றுவிட்டாலும் அன்பன்போல் பாவனைசெய்துகொண்டு வந்து சேர்ந்தானேலும் அவனையும் நான் ஒருவிதத்திலும் கைவிடமாட்டேன்—என்ற வார்த்தை, இரவுபகல்மாறுடினாலும் என்னுடைய வார்த்தையானது எந்தக்ஷணத்திலும் எள்ளளவும் மாறுடமாட்டாது என்ற அவருடைய வார்த்தையே என்னளவில் பொய்யாய்விட்டபோது, பெரியாழ்வார்வயிற்றிற்பிறப்பா எனக்குக் கார்யகரமாகப்போகிறது? என்கிறாள். கொல்லையரக்கி என்றது—வரம்பு அழிந்த செயலையுடையவள், அதாவது-மரியாதையைத்தப்பி நடந்தவள் என்றபடி. பிராட்டியைப் புருஷகாரமாகக்கொண்டு பெருமானைப்பற்றி உய்ந்துபோகலாமாயிருக்க அங்ஙன்செய்யாதே பிராட்டிபின்மீது விபரீதமான எண்ணங்கொண்டு அவனை விழுங்கப்போனாளன்றோ. ... ... (4)

601 பாடும்குயில்காள் ஈதென்னபாடல் * நல்வேங்கட
நாடர்நமக்கொருவாழ்வுதந்தால் வந்துபாடுமின் *
ஆடும்கருளக்கொடியுடையார் வந்தருள்செய்து *
கூடுவராயிடில் கூவிதும்பாட்டுக்கள்கேட்டுமே. (5)

பாடுகின்ற குயில்களே! (கர்ண க்டோரமான) இக்கூசல் என்ன பாட்டு; விலக்ஷணமான திருவேங்கடமலையை இருப்பிடமாகவுடைய பெருமான் என் விஷயத்தில் ஒரு வாழ்ச்சியைப் பண்ணிக் கொடுப்பனாகில் (அப்போது) (நீங்கள் இங்கே) வந்து பாடுங்கள் (ஆநந்தத்தாலே) ஆடுகின்ற பெரிய திருவடியை த்வஜமாகக் கொண்டிருக்கிற அப்பெருமான் க்ருபைபண்ணி (இங்கே) வந்து சேர்வனாகில் (அப்போது உங்களை) வரவழைத்து உங்களது பாட்டுக்களைக் கேட்போம். ... ... (5)

602 கணமாமயில்காள் கண்ணபிரான்திருக்கோலம்போன்று *
அணிமாநடம்பயின்றாடுகின்றீர்க்கு அடிவீழ்கின்றேன் *
பணமாடரவணைப் பற்பலகாலமும்பள்ளிகொள்
மணவாளர் * நம்மைவைத்தபரிசிதுகாண்மினே. (6)

கூட்டமாயிருக்கிற சிறந்த மயில்களே! கண்ணபிரானுடைய அழகிய வடிவு போன்ற வடிவையுடையீராய்க்கொண்டு அழகிய சிறந்த நாட்டியத்திலே பழகி ஆடுகின்ற உங்களுடைய திருவடிகளிலே ஸேவிக்கின்றேன்; இந்த ஆட்டத்தை நிறுத்துங்கள்; படமெடுத்து ஆடுகின்ற திருவனந்தாழ்வானாகிற சயநத்திலே காலமுள்ளதனையும் பள்ளிகொண்டருளா நின்ற அழகியமணவாளப் பெருமாள் எனக்கு உண்டாக்கித்தந்த லக்ஷணம் இப்படி உங்கள் காலிலே விழும்படியானதாயிற்று. ... ... (6)

603 நடமாடித்தோகைவிரிக்கின்ற மாமயில்காள் * உம்மை
நடமாட்டங்காணப் பாவியேன்நானோர்முதலிலேன் *
குடமாடுகூத்தன் கோவிந்தன்கோமிறைசெய்து * எம்மை
யுடைமாடுகொண்டான் உங்களுக்கினியொன்றுபோதுமே. (7)

உங்களுடைய கூத்தைப் கூத்தாடிக்கொண்டு தோகைகளை விரிக்கின்ற சிறந்த மயில்களே! உங்களுடைய கூத்தைப் பார்ப்பதற்குப் பாவியான நான் ஒரு கைம்முதலுடையேனல்லேன். குடக்கூத்தாடினவனான கோபாலக்ருஷ்ணன் கேட்பாரற்ற மிறுக்குக்களைப்பண்ணி என்னை ஸர்வஸ்வாபஹாரம்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பண்ணினான். இப்படியிருக்க (என்முன்னே கூத்தாடி என்னை ஹிம்ஸிக்கையாகிற) ஒரு காரியம் உங்களுக்குத் தகுமோ? ... ... (7)

604 மழையேமழையேமண்புறம்பூசி உள்ளாய்நின்ற
மெழுகூற்றினாற்போல் * ஊற்றுநல்வேங்கடத்துள்நின்ற *
அழகப்பிரானார்தம்மை யென்னெஞ்சத்தகப்படத்
தழுவநின்று * என்னைத்ததைத்துக்கொண்டு ஊற்றவும்வல்லையே. (8)

விண்ணீலமேலாப்பிலே கண்ட மேகங்கள் வர்ஷித்த பிறகு விகாஸத்தோடும் விலாஸத்தோடும் கூடிக்கிளர்ந்த பதார்த்தங்களை நோக்கி வார்த்தை சொல்லிக்கொண்டு வந்த ஆண்டாள் இப்போது பழையபடியே மேகங்களை விளித்துக் கூறுகின்றாள்—; மேகங்களானவை சில பதார்த்தங்களை உத்தீபகங்களாகக்கிளப்பி அவற்றின் வழியாலே நலிந்ததுபோதாமல் பின்னையும் விடாதே நின்று வர்ஷித்து ஸாக்ஷாத்தாகவும் நலியத்தொடங்கினபடியாலே அவற்றை நோக்கிக் கூறுகின்றனளென்க. மழைபொழிதலும் விரஹிகளுக்கு உத்தீபகமிறே. வெண்கலப்பாத்திரம் முதலியன நிரும்பிப்பவர்கள், முதலில், பாத்திரத்தின் வடிவத்துக்கு ஒப்ப மண்ணைக்கட்டி அதன்மேல் சுற்றிலும் மெழுகைவைத்து, பின்னையும் அம்மெழுகின் மேலே மண்ணைப்பூசி, மர்மமாக ஓரிடத்திலே த்வாரமாக்கி, உள்ளிருக்கும்மெழுகை வெதுப்பி அவ்வழியாலே வெளியே ஊற்றுவர்கள். அவ்வாறாக ஊற்றுகின்றார் வேங்கடத்துள் நின்ற அழகப்பிரானார்—என்கிறவிதனால் தேறுங்கருத்து யாதெனில்;—மேலே மண்ணை இணைத்து உள்ளிருக்கும்மெழுகைத் தள்ளிவிடுவதுபோல, அப்பெருமானும் உடம்பின் மேலே அணைந்து உள்ளிருக்கும் ஸத்து உருகிக்கழிந்துபோம்படி செய்யவல்லவன்—என்றதாகிறது. ... (8)

605 கடலேகடலேயுன்னைக்கடைந்து கலக்குறுத்து *
உடலுள்புகுந்துநின்று ஊறலறுத்தவற்கு * என்னையு
முடலுள்புகுந்துநின்று ஊறலறுக்கின்றமாயற்கு * என்
நடலைகளெல்லாம் நாகணைக்கேசென்றுரைத்தியே. (9)

ஓ கடலே! (தனக்குப் படுக்கையிடமாக வாய்ந்த) உன்னை (மலையை யிட்டுக்) கடைந்து கலக்கி (உனது) சரீரத்திலே புகுந்திருந்து ஸாரமான அமுதத்தை அபஹரித்தவராய் (அவ்வாறாகவே) என் உடலிலும் புகுந்திருந்து என் உயிரை அறுக்குமவரான எம்பெருமானுக்கு (விண்ணப்பம் பண்ணும்படி) என் துக்கங்களையெல்லாம் அவர்படுக்கையான திருவனந்தாழ்வானிடத்தில் நீ போய்ச் சொல்லுவாயா? (சொல்லவேணும்). ... ... (9)

606 நல்லவென்தோழி நாகணைமிசைநம்பரர் *
செல்வர்பெரியர் சிறுமானிடவர்நாஞ்செய்வதென் *
வில்லிபுதுவை விட்டுசித்தர்தங்கள்தேவரை *
வல்லபரிசுவருவிப்பரேல் அதுகாண்டுமே. (10)

ஆண்டாள் இப்படி பகவத்விரஹத்தாலே ஆற்றமாட்டாதாளாய்ப்படுகிற அலமாப்பைக் கண்ட உயிர்த்தோழியானவள் 'ஐயோ! இவள் இப்பாடுபடுகின்றாளே! இவளை நாம் எப்படி தேற்றுவிப்பது! ஒரு வழியும் தெரியவில்லையே!' என்று சிந்தித்து வ்யஸநித்திருக்கையில், ஆண்டாள் அவ்வுயிர்த்தோழியை நோக்கி 'நீ அஞ்சவேண்டா; ஜீவிப்பதற்கு ஒரு வழிகண்டேன் காண்' என்கிறாள். திருவனந்தாழ்வான்மேல் சயனித்தருளுமவராய் ச்ரிய: பதியாய்ப் பரமபுருஷராயிருக்கிறவரை அதிக்ஷுத்ரராயிருக்கிற நாம் எங்ஙனே அணுக

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

முடியும்? "அம்மானுழிப்பிரானவன் எவ்விடத்தான்யானுர்?" என்னும்போலே அவருடைய பெருமைக்கும் நம்முடைய சிறுமைக்கும் எவ்வளவோ வாசியுண்டாயிருக்க அவரை நாம் வளைப்பிடமுடியுமோ? முடியாது. ஆகில் நாம் இழந்தேபோகவேண்டியதோ வென்னில்; இழவாமைக்கு ஒருவழியுண்டு; அப்பெரியவர் நமக்கு வசப்படமாட்டாராயினும் நம் அண்ணலான பெரியாழ்வார்க்கு வசப்படாதிருக்க அவரால் முடியாது. அந்த நாகணைமிசை நம்பரர் தாமே பெரியாழ்வாரிடத்தில் கோற்கிழ்க்கன்றாயிருப்பர். "பூச்சூட்டவாராய்" என்றும் "நீராடவாராய்" என்றும் "காப்பிடவாராய்" என்றும் அவர் அழைத்தவாறே அப்பெரியவர் பதறி ஓடிவருவர்; அப்போது நாம் எளிதாக அவரை ஸேவிக்கப்பெறுவோமென்கிருள்.

இத்திருமொழிக்குப் பலச்ருதி அருளிச்செய்யாமல் இப்பாட்டே அதன் ஸ்தாநத்தில் நின்றது. பாகவதஸம்பந்தத்தைக்கொண்டு உஜ்ஜீவிக்கப்பெறுவர்கள் என்பதே இத்திருமொழிக்குப் பலச்ருதியாகக் கொள்ளத்தக்கது. ... ... (10)

அடிவரவு:—கார் மேல் கோவை முல்லை பாடுங் கண நடமாடி மழை கடலே நல்ல தாம்.

ஆண்டாளெம்பெருமானுர் ஜீயர் திருவடிகளே சரணம்.

பதினோராந்திருமொழி—தாமுகக்கும்

(ஆண்டாள் தன்னுடைய அபரிமிதமான நிர்வேதத்தை வெளியிடும் பதிகம்)

607 தாமுகக்கும்தங்கையில் சங்கமேபோலாவோ *
யாமுகக்குமென்கையில் சங்கமுமேந்திழையீர் *
தீமுகத்துநாகணைமேல் சேரும்திருவரங்கர் *
ஆமுகத்தைநோக்காரால் அம்மனேயம்மனே. (1)

எம்பெருமானுடைய விச்லேஷம் நெடுகிச்செல்லவே, அதனால் உடல் ஈர்க்குப்போல் மெலிந்து கைவளைகளெல்லாம் கழன்றொழிந்தமையையும், இவ்வளவிலும் வந்து முகங்காட்டாத எம்பெருமானுடைய கொடுமையையுங் கூறி வருந்துகின்ருள். ஏந்திழையீர்! என்று அருகே வந்து நிற்கும் பெண்களை விளிக்கிறபடி. 'பெண்காள்!—தோழிகாள்!' என்னுதே ஏந்திழையீர் என்றது—என்னைப்போலே வளையிழந்துவருந்தாதே, ப்ரளயத்துக்குத் தப்பிப் பிழைப்பாரைப்போலே நீங்கள் மாத்திரம் அவனுடைய விரஹத்துக்கு எப்படி தப்பிப்பிழைத்தீர்கள்? என வியந்து கேட்கிறபடிபோலும். "ஏந்திழையீர்! யாமுகக்குமென்கையிற் சங்கமும் தாமுகக்கும் தம்கையிற்சங்கமேபோலாவோ?—என்று அப்பெருமானைக் கேளுங்கள்" என்று வாக்யசேஷம் பூரித்துக்கொள்ளவேணும். 'நம் கையிலுள்ள சங்கு எப்போதும் நம்கையிலேயே இருக்கவேணும்' என்று அவர் ஆசைப்படுவதுபோல், நானும் 'நம்கையிலுள்ள சங்கு நம் கையிலேயே இருக்கவேணும் என்று ஆசைப்பட ப்ராப்தி இல்லையோ? அவருடைய ஆசைமாத்திரம் வழுவாமல் பலித்துவிடவேணும், என்னுடைய ஆசைமாத்திரம் பாழ்த்துப் போகவேணுமென்று இஃது என்ன விபரீதஸங்கல்பம்? என்று அவரையேபோய்க் கேளுங்கள் என்கிருள். இரண்டடியிலும் சங்கம் என்றது சப்தச்லேஷம். பாஞ்சஜந்யத்துக்கும் கைவளைக்கும் பெயர்.

முகத்தைநோக்கார் = உடம்போடே அணைய வாராவிடினும் கண்வட்டத்திலே ஸேவை ஸாதிப்பதும் தவிரவேணுமோ? என்முகத்தை நோக்குவதற்கும் அவர் கூசும்படி நான் என்ன பாவம் செய்தேனே அறியேன். ஆ, ஆல் = ஐயோ! ஐயோ!! என்றவாறு. அம்மனே! அம்மனே!! = இப்படிப்பட்ட அவரை இப்போது நினைப்பதும்—புலி, சிங்கம் முதலியவற்றை நினைப்பது போல் பயங்கரமாயிற்றே! என்ருள் போலும். ... ... (1)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

608 எழிலுடைய அம்மனைமீர் என்னரங்கத்து இன்னமுதர் *
குழலழகர் வாயழகர் கண்ணழகர் * கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் * என்னுடைய
கழல்வளையைத் தாமும் கழல்வளையே ஆக்கினரே. (2)

திருவரங்கத்திலே எனக்கு போக்யமான அமுதம்போன்று எழுந்தருளியிருப்பவராய், திருக்குழலழகும் திருவதரத்தினழகும் திருக்கண்ணழகும் திருநாபிக்கமலத்தழகும் பொலியநின்று இவ்வழகையெல்லாங்காட்டி என்னை ஆட்படுத்திக்கொண்டவரான பெரியபெருமாள் தப்பாக ஒன்றுஞ்செய்யவில்லை; யுக்தமாகவே செய்தார்; நான் கழலாதவளையை இட்டுக்கொண்டிருந்தேனாகில் அவரும் அதனைக் கழலாதவளையாகவே அமைத்துவைப்பர்; நான் கழல் வளையிட்டுக் கொண்டேனாகையாலே அவர் அதை அன்வர்த்தமாக்கினார்; என்மேல் குற்றமேயன்றி அவர்மேல் என்ன குற்றமிருக்கிறது? உள்ளதை உள்ளபடி செய்பவரன்றோ அவர். நான் கழலாதவளையை இட்டுக்கொண்டிருந்து அவர் அதைக் கழல்வளையாக ஆக்கினாராகில் அப்போது ஒருவாறு அவர்மேல் குற்றஞ்சாட்டலாம்; நானே கழல்வளையிட்டுக்கொண்டேனான பின்பு அதை அவர் அன்யதாகரிக்க எப்படிகடவர்? என்று ரஸோக்தியாக அருளிச்செய்கிறாள். இது நர்மோக்தி எனவும்படும். கைவளைக்குக் கழல்வளையென்று இடுகுறிப்பெயர். அதனைக் காரணப்பெயர்போலக்கொண்டு "தாமுங்கழல்வளையேயாக்கினரே" என்றாள். கழன்றொழியும்வளை யாதலால் கழல்வளை எனப் பெயர் வந்ததென்கிறாளாய்த்து. ... (2)

609 பொங்கோதம் சூழ்ந்த புவனியும் விண்ணுலகும் *
அங்காதும் சோராமே ஆள்கின்ற எம்பெருமான் *
செங்கோலுடைய திருவரங்கச் செல்வனார் *
எங்கோல் வளையால் இடர்தீர்வர் ஆகாதே. (3)

கடல் சூழ்ந்த மண்ணுலகும் விண்ணுலகுமாகிய உபயவிபூதியையும் அபாயலேசமுமின்றி ரக்ஷித்தருளுமவனாய், என்னை ஒரு மூன்றும்விபூதியாக ஆளுமவனாய், திருவரங்கத்திலே பள்ளிகொண்டருளினபடியே செங்கோல்செலுத்துமவனான எம்பெருமான் இப்படி அவாப்த ஸமஸ்தகாமனாயிருந்து வைத்தும் குறைவாளன்போன்று என்னுடைய கைவளையைக்கொள்ளை கொண்டுபோனான்; போயிடுக; இவ்வளையினால் அவனுடைய தாரித்ரியமெல்லாம் ஹதமாகட்டும் என்கிறாள். ... ... (3)

610 மச்சணி மாட மதிளரங்கர் வாமனனார் *
பச்சைப் பசுந்தேவர் தாம்பண்டு நீரேற்ற *
பிச்சைக் குறையாகி என்னுடைய பெய்வளைமேல் *
இச்சையுடையரேல் இத்தெருவே போதாரே. (4)

பெரிய பெருமாள் முன்பு தாம் மஹாபலியிடத்திலே யாசகராக எழுந்தருளி அவனிடத்தில் உதகதாராபூர்வகமாக பிக்ஷைவாங்கிக்கொண்ட பிச்சையில் குறையுண்டாகி அக்குறையை என்கையாலே தீர்த்துக்கொள்ள வேணுமென்ற ஆவலுடையவராய் என்கைவளையிலே ஆசையுடையவராகில் அஸுரனுடைய யஜ்ஞபூமியிலே நடந்தநடையை இத்தெருவே என் கண்வட்டத்திலே நடந்து காட்டலாகாதோ? என்கிறாள். ... ... (4)

611 பொல்லாக் குறளுருவாய்ப் பொற்கையில் நீரேற்று *
எல்லா உலகும் அளந்துகொண்ட எம்பெருமான்
நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணையான் *
இல்லாதோம் கைப்பொருளும் எய்துவானொத்துளனே. (5)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

விலக்ஷணமான வாமநரூபத்தைப் பரிக்ரஹித்து அழகிய கையிலே நீரேற்றுப் பிச்சைவாங்கி, பிச்சையிட்டவன் குடிவாழ்வதற்கும் ஓரடிமண்மிகாதபடி ஸகலலோகங்களையும் அளந்து ஸ்வாதீநப்படுத்திக்கொண்ட மஹாநுபாவர், தரித்ரரான நம்முடைய கைப்பொருளையும் [அதாவது—இந்த வுடம்பையும்] கொள்ளை கொள்வார்போலே இராநின்றார் என்கிறாள். (5)

612 கைப்பொருள்கள்முன்னமே கைக்கொண்டார் * காவிரிநீர்
செய்ப்புரளவோடும் திருவரங்கச்செல்வனார் *
எப்பொருட்கும்நின்றார்க்கும் எய்தாது * நான்மறையின்
சொற்பொருளாய்நின்றார் என்மெய்ப்பொருளும்கொண்டாரே. (6)

எல்லாப்பொருள்களிலும் அந்தர்யாமியாயிருந்து கொண்டு ஒருவர்க்கும் கைப்படாமல் வேத வேத்யராயிருக்கும் பெரியபெருமாள் என்கையிலுள்ள பொருள்களை முன்னமே கைக்கொண்டார்; கடைசியாக சரீரமென்கிற ஒரு வஸ்து மிகுந்திருந்தது; அதையும் கொள்ளை கொண்டாரென்கிறாள். மெய்ப்பொருளும் கொண்டார்=மெய் என்று ஆத்மாவையும் சொல்லக் கடவதாகையாலே, ஆத்மீயங்களை ஏற்கெனவே கொள்ளை கொண்டவர் இப்போது ஆத்மாவையும் கொள்ளை கொண்டார் என்பதாகவும் உரைக்கலாம். ... ... (6)

613 உன்னுதுறங்காது ஒலிகடலையூடறுத்து *
பெண்ணாக்கையாப்புண்டு தாமுற்றபேதெல்லாம் *
திண்ணார்மதில்சூழ் திருவரங்கச்செல்வனார் *
எண்ணாதேதம்முடைய நன்மைகளேயெண்ணுவரே. (7)

‘தமக்கு மேற்பட்டாரொருவருமில்லாதபடி பரமபுருஷராயிருக்குமவரை ஒரு மானிடப்பெண்ணாகிய நீ இப்படியெல்லாஞ் சொல்லுவது தகுதியோ? அவருடைய மேன்மை எங்கே? உன்னுடைய கீழ்மை எங்கே? இதை ஆராயாமல் நீ அப்பெரியவரைப் பழிப்பது சிறிதும் பொருந்தாது’ என்று சில மாதர்கள் ஆண்டாளைநோக்கிக் கூற, அதற்கு மறுமாற்றமுரைக்கின்றாள். அப்பெரியவர் ராமாவதாரத்தில் பட்டபாடுகள் தெரியாதா? ஒரு பெண்பெண்டாட்டியின் உடம்பிலே ஆசைகொண்டு அந்த ஆசாபாசபாரவச்யத்தாலே ஊணுமின்றி உறக்கமுமின்றி அவளுடைய பிரிவுக்கு ஆற்றாமல் நோவுபட்டு வானரப்படைகளைத் துணைகொண்டு கடலிலே அணைகட்டுகையாகிற அருந்தொழிலைச்செய்து இப்படிகளாலே தாம் வெளிப்படுத்திய பைத்தியத்தை ஸ்ரீராமாயணம் நடையாடுந்தேசத்திலே அறியாதாருண்டோ? [அநித்ரஸ்ஸததம்ராம:] என்றும், [நமாம்ஸம் ராகவோபுங்க்தே நசாபி மதுஸேவதே] என்றும் ஸ்ரீராமாயணத்தில் சொல்லப்பட்டிருக்கவில்லையா? பரமபுருஷராயிருப்பவர் ஒரு பெண்ணுக்காக அப்பாடுபடலாமோ? அது அவருடைய மேன்மைக்குத் தகுமோ? அது தகுமாகில், எனக்காகவும் அவர் அப்பாடுபட்டிருக்க வேண்டாவோ? என்னிடத்தில் மாத்திரமேயோ அவர் மேன்மை பாராட்டியிருக்கவேணும்? என்கிறாள். ... ... (7)

614 பாசிதூர்த்துக்கிடந்த பார்மகட்குப்பண்டொருநாள் *
மாசுடம்பில்நீர்வாரா மானமிலாப்பன்றியாம் *
தேசுடையதேவர் திருவரங்கச்செல்வனார் *
பேசியிருப்பனகள் பேர்க்கவும்பேராவே. (8)

ஸ்ரீதேவிக்காகப் பட்டபாட்டைச் சொன்னாள் கீழ்ப்பாட்டில்; பூமிப்பிராட்டிக்காகப் பட்ட பாட்டைச் சொல்லுகிறாள் இப்பாட்டில். பூமிப்பிராட்டியானவள் வெகுகாலம் ஜலத்துக்குள்ளே முழுகிக்கிடந்தபடியால் பாசிபடர்ந்து கிடந்தமைபற்றிப் “பாசிதூர்த்துக்கிடந்த”

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

என்று அடைமொழி கொடுக்கப்பட்டது. மாசுடம்பில் நீர் வாரா மானமிலாப்பன்றி = ஒரு பூமிப் பிராட்டி பக்கலிலே அமர்ந்த ஆசையினால் ஒரு சரீரத்தைப் பரிக்ரஹித்தவன், அழுக்குடம்பினரான நாமெல்லாருங்கூட அருவருக்கும்படியாய் அத்யந்தஹேயமான பன்றிவடிவத்தையோ பரிக்ரஹிக்கவேணும்? 'உடம்பு அழுக்கேறிற்று' என்று லஜ்ஜிக்கவுமறியாத ஜன்மத்தையன்றோ ஏறிட்டுக்கொண்டது. (நீர்வாருதல்—நீர்பெருகுதல்.) மானமிலா என்றவிடத்து வியாக்கியானம்:—"மாயாம்ருகத்தைக்கண்டு அல்லாத ம்ருகங்கள் மோந்துபார்த்து வெருவி ஓடினவிறே; அப்படியன்றிக்கே ஸஜாதியங்கள் மோந்துபார்த்தாலும் 'நம்இனம்' என்று மருவும்படியாயாய்த்து; ஈச்வராபிமாநம் வாஸனையோடே போனபடி." ... (8)

615 கண்ணாலங்கோடித்துக் கன்னிதன்னைக்கைப்பிடிப்பான் *
திண்ணார்ந்திருந்த சிசுபாலன்தேசழிந்து *
அண்ணாந்திருக்கவே ஆங்கவளைக்கைப்பிடித்த *
பெண்ணாளன்பேணுமூர் பேருமரங்கமே. (9)

கல்யாண ஸம்நாஹங்களையெல்லாம் பரிஷ்காரமாகச் செய்து முடித்துக் கல்யாணப் பெண்ணான ருக்மிணிப்பிராட்டியைப் பாணிக்ரஹணம் செய்து கொள்ளப்போவதாக ஸம்சயமில்லாமல் நிச்சயமாக நினைத்திருந்த சிசுபாலனானவன் அவமானப்பட்டு ஆகாசத்தை நோக்கிக் கிடக்கும்படியாக நேர்ந்த அச்சமயத்திலே அந்த ருக்மிணிப்பிராட்டியைப் பாணிக்ரஹணம் செய்தருளினவனாய், பெண்பிறந்தார்க்கெல்லாம் துணைவன் என்று ப்ரஸித்தனான பெருமான் விரும்பி எழுந்தருளியிருக்கிற திவ்யதேசத்தினுடைய திருநாமமும் திருவரங்கமாம். ... (9)

616 செம்மையுடைய திருவரங்கர்தாம்பணித்த *
மெய்ம்மைப்பெருவார்த்தை விட்டுசித்தர்கேட்டிருப்பர் *
தம்மையுகப்பாரைத் தாமுகப்பரென்னுஞ்சொல் *
தம்மிடையேபொய்யானால் சாதிப்பாராரினியே. (10)

(மனமொழிமெய்கள் மூன்றும் ஒருபடிப்பட்டிருக்கையாகிற) செம்மைக்குணமுடைய ஸ்ரீரங்கநாதர் (முன்பு) தம்வாயாலே அருளிச்செய்த ஸத்யமானதும் பெருமைபொருந்தியதுமான சரமச்லோகரூபமான வார்த்தையை (என் திருத்தகப்பனாரான) பெரியாழ்வார் (குருமுகமாகக்) கேட்டு (அதில் சொல்லியிருக்கிறபடி) நிர்ப்பரராயிருப்பர்; "தம்மை விரும்பினவர்களைத் தாமும் விரும்புவர்" என்ற பழமொழியானது தம்மிடத்திலேயே பொய்யாய்ப்போய்விட்டால் அதற்குமேல் (அவர் தம்மை) நியமிப்பார் ஆர்? (யாருமில்லை.)

நெஞ்சில்நினைப்பது ஒன்றாய் வாயாற்சொல்வது வேறொன்றாய், பின்பு அநுஷ்டிப்பது மற்றொன்றாயிருக்கும் செவ்வைக்கேடர்களை ஒருங்கவிடுகைக்கு மநோவாக்காயங்கள் மூன்றும் ஒருபடிப்பட்டிருக்குமவராய் அக்குணம்விளங்குமாறு கோயிலிலே கண்வளர்ந்தருளுமவரான பெருமாள், முன்பு அர்ஜுநனை வ்யாஜிகரித்து அவனுடைய தேர்த்தட்டிலே நின்றுகொண்டு, யதார்த்தமுமாய் ச்லாக்யமுமான ஒருவார்த்தையை அருளிச்செய்தார்; அதாவது—"உன் காரியங்களையெல்லாம் குறையறத் தலைக்கட்டி வைக்க நானிருக்கிறேன்; நீ ஒன்றுக்கும் கவலைப்பட வேண்டியதில்லை; உனது ஸகலபாரங்களையும் என்பக்கல் ஸமர்ப்பித்து நிர்ப்பரனாய் இரு" என்று உரைத்த சரமச்லோகம். அவ்வார்த்தையைக்கேட்டு அதன்படியே நிஷ்டையுடையராயிருப்பர் பெரியாழ்வார் என்கிறாள் முன்னடிகளில்: அவருடைய மகளான தனக்கும் அந்த அத்யவஸாயமே புகல் என்று காட்டியவாறு. ... ... (10)

அடிவரவு:—தாம் எழில் பொங்கு மச்சு பொல்லாக் கை உண்ணாப் பாசி கண்ணாலம் செம்மை மற்று.

ஆண்டாளெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்,

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பன்னிரண்டாந்திருமொழி — மற்றிருந்தீர்கட்கு

(கண்ணபிரானுறையுமிடங்களிலே தன்னைக்கொண்டு சேர்க்குமாறுவேண்டுதல்)

617 மற்றிருந்தீர்கட்கறியலாகா மாதவனென்பதோரன்புதன்னை *
உற்றிருந்தேனுக்குரைப்பதெல்லாம் ஊமையரோடுசெவிடர்வார்த்தை *
பெற்றிருந்தாளையொழியவேபோய்ப் பேர்த்தொருதாயில்வளர்ந்தநம்பி *
மற்பொருந்தாமற்களமடைந்த மதுரைப்புறத்தென்னையுய்த்திடுமின். (1)

'எனக்கு இப்போது நிகழ்கிற அவஸ்தை இப்படிப்பட்டதென்று சிறிதும் அறியகில்லாத நீங்கள், பகவத்விஷயகாமத்தின் மேலெல்லையிலே நிற்கிற எனக்குச்சொல்லுகிற வார்த்தைகள் வீண்; உங்கள்பேச்சு என்காதில் புகவும்மாட்டா; புகுந்தாலும் அவற்றுக்கு மறுமொழி கூறுமளவிலே நான் நிற்கின்றிலேன்; ஆகையாலே நீங்கள் எனக்கு ஹிதஞ்சொல்லப் பார்ப்பதை நிறுத்திவிட்டு *ஒருத்திமகனாய்ப்பிறந்து ஓரிரவிலொருத்திமகனாய் ஒளித்து வளர்ந்து சாணூர முஷ்டிகாதிமல்லர்களோடே போர்புரிந்து, வெற்றிபெற்ற கண்ணபிரானெழுந்தருளியிருக்கிற மதுராபுரியின் ப்ராந்தத்திலே என்னைக்கொண்டுபோய்ப் போடுங்கள்' என்கிறாள். ... ... (1)

618 நாணியினியோர்கருமமில்லை நாலயலாருமறிந்தொழிந்தார் *
பாணியாதென்னைமருந்துசெய்து பண்டுபண்டாக்கவுறுதிராகில் *
மாணியுருவாயுலகளந்த மாயனைக்காணில்தலைமறியும் *
ஆணையால்நீரென்னைக்காக்கவேண்டில் ஆய்ப்பாடிக்கேயென்னையுய்த்திடுமின். (2)

இனிமேல் வெட்கப்பட்டு ஒரு பயனுமில்லை; ஊரிலுள்ளாரெல்லாரும் (எனது செய்தியை) அறிந்து கொண்டார்கள். (ஆதலால் இனி வெட்கப்பட்டுப்பயனில்லை) காலதாமதமின்றி வேண்டும் பரிஹாரங்களைச்செய்து என்னை இப்போதைய விரஹாவஸ்தைக்கு முற்பட்டதான ஸம்ச்லேஷ தசைக்கும் முற்பட்டதான பகவத் விஷய வாஸனையையே அறியாததசையிலிருந்த நிறத்தைப்பெற்றவளாகச் செய்ய நினைப்பீர்களாகில், நீங்கள் என்னை ஸத்யமாகக் காப்பாற்ற விரும்புகிறீர்களாகில் என்னைத் திருவாய்ப்பாடியிலே கொண்டு சேர்த்துவிடுங்கள் (அவ்விடத்தில்) (மாவலியினிடத்தில் வாமநரூபியாய்ச்சென்று (த்ரிவிக்ரமனாகி) உலகங்களையெல்லாம் அளந்து கொண்ட பெருமானை ஸேவிக்கப்பெற்றால் (இந்த நோயானது) தலைமடங்கும்.

தலைமறியும் என்றவினைமுற்றுக்கு எழுவாய் வருவித்துக்கொள்ளவேணும்; உலகளந்த மாயனை ஸேவிக்கப்பெற்றால் என்னுடைய ஆற்றாமை தலைமடங்குமென்கை. ... (2)

619 தந்தையுந்தாயுமுற்றாரும்நிற்கத் தனிவழிபோயினாளென்னும்சொல்லு *
வந்தபின்னைப்பழிகாப்பரிது மாயவன்வந்துருக்காட்டுகின்றான் *
கொந்தளமாக்கிப்பரக்கழித்துக் குறும்புசெய்வானோர்மகனைப்பெற்ற *
நந்தகோபாலன்கடைத்தலைக்கே நள்ளிருட்கணென்னையுய்த்திடுமின். (3)

தாய்தகப்பன்மார் சுற்றத்தார் முதலானோர் இருக்கும்போது, அவர்களைக் கொண்டு தனக்குற்ற நன்மைகளைத் தேடிக்கொள்ளவேண்டியது தகுதியாயிருக்க, ஒருபெண்பிள்ளை அவர்களையெல்லாம் திரஸ்கரித்துவிட்டுத் தான்றோன்றியாகத் தானே புறப்பட்டாள் என்று சிலர் பழிக்கத் தலைப்படுவர்கள்; அப்பழியானது என்னளவிலே நில்லாமல் இக்குடிக்கே பெருத்த பழிப்பாய்த் தலைக்கட்டும். அப்போது இப்பழிப்பைப் பரிஹரிக்க நீங்கள் முயலாதிருக்கப் போகிறதில்லை; ஆனால் அப்போது உங்களுடைய முயற்சி பயன்படமாட்டாது; பழி விளைவதற்கு முன்னே அதனைப்பரிஹரிக்கப்பார்க்க வேணுமேயல்லது பழிவிளைந்து பரவின பின்பு

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

அது பரிஹரிக்கப்போமோ? பழிவிளைவதற்கு ப்ரஸக்தியில்லாமல் அடங்கியிருக்க என்னால் முடியவில்லை; இப்படிப்பட்ட நிலைமையில் நீங்கள் செய்யத்தக்கது யாதெனில், தான்தோன்றியாய் நாணுகப்படிகடந்து புறப்பட்டுப்போனனென்கிற வார்த்தைக்கு அவகாசமில்லாதபடி என்னை நீங்களாகவே விரும்பி அழைத்துக்கொண்டுபோய்க் கண்ணபிரானருகில் சேர்த்து விடுங்கள்; அப்படிச்செய்யுமளவில் என் மநோரதமும் நிறைவேறி நானும் வாழ்ந்தேனுகிறேன்; நீங்களும்புகழ்பெற்றுப் போகிறீர்கள். பழிக்கநினைப்பார்க்கும் அவகாசமில்லாமேபோகிறது. இந்த ஔசித்யத்தை நீங்கள் நன்குகண்டறிந்து இப்படிச்செய்து முடிப்பீர்களென்று நம்பியே நான் விரைந்துபுறப்படாதே நிற்கின்றேன் என்கிருள். ... ... (3)

620 அங்கைத்தலத்திடையாழிகொண்டானவன் முகத்தன்றிவிழியேனென்று *
செங்கச்சுக்கொண்டுகண்ணுடையார்த்துச் சிறுமானிடவரைக்காணில்நாணும் *
கொங்கைத்தலமிவைநோக்கிக்காணீர் கோவிந்தனுக்கல்லால்வாயில்போகா *
இங்குத்தைவாழ்வையொழியவேபோய் எமுனைக்கரைக்கென்னையுய்த்திடுமின். (4)

அழகிய திருக்கைத்தலத்திலே திருவாழியை ஏந்தியிருப்பவனான கண்ணபிரானுடைய முகத்தில் தவிர மற்ற பேருடைய முகத்தில் விழிக்கமாட்டேனென்று நல்ல கஞ்சுகமாகிற ஆடையினாலே கண்களை மூடிக்கொண்டு, க்ஷுத்ர மநுஷ்யர்களைக் கண்டால் வெட்கப்படா நின்ற இக்கொங்கைகளைத் தாய்மார்களே! நீங்கள் உற்று நோக்குங்கள்; இக்கொங்கைகளானவை கண்ணபிரானைத் தவிர்த்து மற்றொருவருடைய வீட்டு வாசலை நோக்கமாட்டா; ஆகையாலே நான் இவ்விடத்திலே வாழ்வதை யொழித்து என்னை யமுநாநதிக்கரையிலே கொண்டுபோட்டு விடுங்கள். ... ... (4)

621 ஆர்க்குமென்னேயறிதறியலாகாது அம்மனைமீர்துழதிப்படாதே *
கார்க்கடல்வண்ணனென்பானொருவன் கைகண்டயோகம்தடவத்தீரும் *
நீர்க்கரைநின்றகடம்பையேறிக் காளியனுச்சியில்நட்டம்பாய்ந்து *
போர்க்களமாகநிருத்தஞ்செய்த பொய்கைக்கரைக்கென்னையுய்த்திடுமின். (5)

தாய்மார்களே! என்னுடைய இந்த வியாதியானது எப்படிப்பட்ட ஞானிகளுக்கும் அறிய முடியாதது; இது அப்படிப்பட்ட நோயா! என்று நீங்கள் துக்கப்படாமல், காளிங்க மடுவின் கரையிலிருந்த கடம்ப மரத்தின் மேல் ஏறி அங்கிருந்து காளியநாகத்தின் படத்தின்மேலே ஒரு நர்த்தனவகையாகப் பாய்ந்து அப்பொய்கை தானே யுத்தக்களமாம்படியாக நர்த்தனம் செய்யப்பெற்ற மடுவின் கரையிலே என்னைக் கொண்டுபோய்ப் போடுங்கள். நீலக்கடல் போன்ற திருநிறத்தனான கண்ணபிரான் தனது திருக்கைகளால் என்னைத் தடவுவானாகில் இந்நோய் தீர்ந்துவிடும்; இதுதான் கைமேலே பலிக்கக்கூடிய உபாயம்.

துழதிப்படுதல—துக்கப்படுதல். "கார்க்கடல் வண்ணனென்பானொருவன் தடவத் தீரும்; இது கைகண்டயோகம்" என்று அந்வயம்: யோகமாவது உபாயம். நட்டம்='நாட்யம்' என்றவடசொல் நட்டமெனத்திரிந்தது; 'ந்ருத்தம்' என்ற வடசொல்லின் திரிபாகவுமாம். ந்ருத்தமென்பது நிருத்தமென்றும் நட்டமென்றும் திரியக்கூடும். பொய்கை—யமுனையாற்றில் ஓர்பகுதி. ... ... (5)

622 கார்த்தண்முகிலும்கருவிளையும் காயாமலரும்கமலப்பூவும் *
ஈர்த்திடுகின்றனவென்னைவந்திட்டு இருடீகேசன்பக்கல்போகேயென்று *
வேர்த்துப்பசித்துவயிறசைந்து வேண்டடிசிலுண்ணும்போது * ஈதென்று
பார்த்திருந்துநெடுநோக்குக்கொள்ளும் பத்தவிலோசனத்துய்த்திடுமின். (6)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

வர்ஷா காலத்திலுண்டான குளிர்ந்த மேகமும் கருவிளைப்பூவும் காயாம்பூவும் தாமரைப்பூவுமாகிற இவைகள் எதிரே வந்துநின்று "கண்ணபிரான் பக்கலில் நீயும் போ" என்று என்னை வலிக்கின்றன; ஆகையாலே, 'பசுமேய்க்கிற ச்ரமத்தாலே வேர்வையடைந்து பசியினால் வருந்தி வயிறு தளர்ந்து வேண்டிய ப்ரஸாதம் உண்ணவேண்டிய காலம் இது என்று ரிஷி பத்னிகளின் வரவை எதிர்பார்த்திருந்து நெடுங்காலம் கடாக்ஷித்துக் கொண்டிருக்குமிடமான பக்தவிலோசநமென்கிற ஸ்தானத்திலே என்னைக்கொண்டு சேர்த்துவிடுங்கள். (6)

623 வல்வனந்திரிவும்மனங்குழைவும் மானமிலாமையும்வாய்வெளுப்பும் *
உள்வழுருமையுமுள்மெலிவும் ஓதநீர்வண்ணனென்பானொருவன் *
தண்ணந்துழாயென்னும்மாலைகொண்டு சூட்டத்தணியும்பிலம்பன்றன்னை *
பண்ணழியப்பலதேவன்வென்ற பாண்டிவடத்தென்னையுய்த்திடுமின். (7)

என்னுடைய மேனிநிறத்தின் மாறுபாடும் மனத்தளர்ச்சியும் மானங்கெட்டுப் போனபடியும் வாய் வெளுத்துப் போனபடியும் ஆஹாரம் வேண்டியிராமையும் அறிவுசுருங்கிப் போனதுமாகிய இவையெல்லாம் எப்போது தணியுமென்றால் கடல் வண்ணனென்று ப்ரஸித்தனாய் விலக்ஷணனான கண்ணபிரானுடைய குளிர்ந்து அழகிய திருத்துழாய் மாலையைக்கொண்டு வந்து சூட்டுமளவில் நீங்கும்; அத்திருத்துழாய் மாலை உங்களால் இங்கே கொண்டு வந்து கொடுக்க முடியாதாகில் பலராமன் ப்ரலம்பாஸுரனை ஸந்தி பந்தங்கள் உருக்குலையும்படி கொன்று முடித்த இடமாகிய பாண்டீரமென்னும் ஆலமரத்தினருகில் என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள்.

பலராமனால் செய்யப்பட்ட ப்ரலம்பாஸுரவதத்தைக் கண்ணபிரான்றானே செய்தருளியதாகக் கூறுதலுமுண்டு; "தேனுகன் பிலம்பன் காளியனென்னும்" "கருளுடைய பொழில் மருதுங் கதக்களிறும் பிலம்பனையுங் கடியமாவும்" என்ற பெரியாழ்வார் திருமொழி காண்க. உண்மையில் பலராமன் செய்த இச்செய்தியைக் கண்ணபிரான் செய்ததாகக்கூறுதல் ஒற்றுமைநயம்பற்றியாம். ஸ்ரீராமாவதாரத்தில் இளையபெருமாள் செய்த சூர்ப்பணகாபங்கத்தை ஸ்ரீராமபிரான் தானே செய்ததாக ஆழ்வார்கள் அநுஸந்திப்பதும் இங்ஙனமேயாம். (7)

624 கற்றினம்மேய்க்கலும்மேய்க்கப்பெற்றான் காடுவாழ்சாதியுமாகப்பெற்றான் *
பற்றியுரலிடையாப்புமுண்டான் பாவிகாளுங்களுக்கேச்சுக்கொலோ *
கற்றனபேசிவசவுணாதே காலிகளுய்யமழைதடுத்து *
கொற்றக்குடையாகவேந்திநின்ற கோவர்த்தனத்தென்னையுய்த்திடுமின். (8)

கண்ணபிரான் கன்றுகளின் திரள்களை மேய்ப்பதையே தொழிலாகப் பெற்றவனுமானான்; வீட்டைவிட்டுக் கழிந்து காட்டிலேயே தங்கிவாழும்படியான சாதியிலும் பிறக்கப்பெற்றான்; வெண்ணெய்களவில் பிடிபட்டு உரலிலே கட்டுப்படவும் பெற்றான்; ஸௌலப்யகாஷ்டையான இச்செயல்களானவை, குணத்தையும் குற்றமாகக் கொள்ளும் பாவிகளே! உங்களுக்கு தூஷணத்துக்கோ உடலாயிற்று? நீங்கள் கற்றகல்விகளைப் பேசி என்னிடத்தில் வசவு கேட்டுக்கொள்ளாமல், பசுக்கள் பிழைக்கும்படி பெரு மழையைத் தடைசெய்து வெற்றிக்குடையாகக் கண்ணபிரானால் தரிக்கப்பட்ட கோவர்த்தன மலையினருகே என்னைக் கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள். ... ... (8)

625 கூட்டிலிருந்துகிளியெப்போதும் கோவிந்தாகோவிந்தாவென்றழைக்கும் *
ஊட்டுக்கொடாதுசெறுப்பனாகில் உலகளந்தானென்றுயரக்கூவும் *
நாட்டிற்றலைப்பழியெய்தியுங்கள் நன்மையிழந்துதலையிடாதே *
சூட்டுயர்மாடங்கள்சூழ்ந்துதோன்றும் துவராபதிக்கென்னையுய்த்திடுமின். (9)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

நான் வளர்த்த கிளியானது கூட்டில் இருந்துகொண்டு ஸதாகாலமும் கோவிந்தா கோவிந்தா வென்று கூவாநின்றது; உணவு கொடாமல் பட்டினி கிடக்கும்படி துன்பப்படுத்தினேனாகில் உலகளந்த பெருமானே! என்று உரக்கக்கூவா நின்றது! இந்தத் திருநாமங்கள் என்காதில் விழும்போதே என் சரீரம் புறப்படக் கிளம்புகின்றது; ஆகையால், இவ்வுலகில் பெருத்த அபவாதத்தைச் சம்பாதித்து உங்களுடைய நல்லபேரைக் கெடுத்துக்கொண்டு பிறகு ஒருவரையும் முகம் நோக்கமாட்டாமல் தலை கவிழ்ந்து நிற்கவேண்டாதபடி தலையுயர்ந்த மாடங்களால் சூழப்பட்டு விளங்குகின்ற த்வாரகையிலே என்னைக்கொண்டு போய்ச் சேர்த்துவிடுங்கள். (9)

626 மன்னுமதுரைதொடக்கமாக வண்துவராபதிதன்னளவும் *
தன்னைத்தமருய்த்துப்பெய்யவேண்டித் தாழ்குழலாள் துணிந்ததுணிவை *
பொன்னியல்மாடம்பொலிந்துதோன்றும் புதுவையர்கோன்விட்டுசித்தன்கோதை *
இன்னிசையாற்சொன்னசெஞ்சொல்மாலை யேத்தவல்லார்க்கிடம்வைகுந்தமே. (10)

வடமதுரைதொடங்கி த்வாரகாபுரியளவாகப்பத்தெட்டுஸ்தானங்களைச் சொல்லி அவ்விடங்களிலே தன்னைக்கொண்டுபோய்ச் சேர்க்கவேணுமென்பதாகத் தனது பந்துவர்க்கத்திலுள்ளாரைநோக்கி ஆண்டாளருளிச்செய்த இத்திருமொழியை ஓதவல்லவர்கள் ஸ்ரீவைகுண்டத்திலேபோய் நித்தியாநுபவம் பண்ணப்பெறுவர்கள் என்றதாயிற்று. ... ... (10)

அடிவரவு:—மற்று நாணி தந்தை அங்கை ஆர்க்கும் கார்த்தண் வண்ணம் கற்றினம் கூட்டில் மன்னு கண்ணன்.

ஆண்டாள் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பதின்மூன்றாந்திருமொழி—கண்ணனென்னும்

ஆண்டாள் கண்ணபிரானுடைய திவ்யப்ரஸாதங்களிலே ஏதேனுமொன்றுபெறவிரும்புகிறாள்.

627 கண்ணனென்னுங்கருந்தெய்வம் காட்சிப்பழகிக்கிடப்பேனை *
புண்ணிற்புளிப்பெய்தாற்போலப் புறநின்றழகுபேசாதே*
பெண்ணின்வருத்தமறியாத பெருமானரையிற்பீதக
வண்ணவாடைகொண்டு * என்னைவாட்டம்தணியவீசீரே. (1)

ஸ்ரீ க்ருஷ்ணனென்கிற கரியதொரு பரதேவதையினுடைய காட்சியிலே பழகிக்கிடக்கிற என்னைக் குறித்து ஓ! தாய்மார்களே! நீங்கள் அசலாக இருந்துகொண்டு புண்ணிலே புளி ரஸத்தைச் சொரிந்தாற் போல் பணிக்கை சொல்வதைத் தவிர்ந்து, பெண் பிறந்தாருடைய வருத்தத்தை அறியாதவனான கண்ணபெருமானுடைய திருவரையில் சாத்திய பீதாம்பரத்தைக் கொண்டு வந்து என்னுடைய விரஹதாபம் தீரும்படி என்மேல் வீசுங்கள்.

"பெண்ணின் வருத்தமறியாத பெருமான்" என்றவிடத்திலே வியாக்யான ஸ்ரீஸூக்தி:—"முலையெழுந்தார்படி மோவாயெழுந்தார்க்குத் தெரியாதிறே என்று பட்டருளிச்செய்தாராக ப்ரஸித்தமிறே"—[மோவாயெழுகையாவது—மீசை முளைக்கை.] ... (1)

628 பாலாலிலையில்துயில்கொண்ட பரமன்வலைப்பட்டிருந்தேனை *
வேலால்துன்னம்பெய்தாற்போல் வேண்டிற்றெல்லாம்பேசாதே *
கோலால்நிரைமேய்த்தாயனுக் குடந்தைக்கிடந்தகுடமாடி *
நீலார்தண்ணந்துழாய்கொண்டு என்னெறிமென்குழல்மேல்சூட்டீரே. (2)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

பால் பாயும் பருவத்தையுடைய ஆலந்தளிரிலே கண்வளர்ந்தருளின பெருமானுடைய வலையிலே அகப்பட்டுக்கொண்டிருக்கிற என்னைக்குறித்து, வேலாயுதத்தை யிட்டுத்துளைத்தாற்போல் கொடுமையாக உங்களுக்குத்தோன்றினபடியெல்லாம் சொல்வதைத்தவிர்த்து, இடைப்பிள்ளையாய் இடைச்சாதிக்கு உரிய கோலைக்கொண்டு பசுக்கூட்டங்களை மேய்த்தவனாய், திருக்குடந்தையில் திருக்கண் வளர்தருளுமவனாய், குடக்கூத்தாடினவனுமான கண்ணபிரானுடைய பசுமைபொருந்திக் குளிர்ந்து அழகிய திருத்துழாயைக் கொண்டுவந்து நெறிப்புக் கொண்டதாயும் மிருதுவாயுமிருந்துள்ள என் கூந்தலிலே சூட்டுங்கள். ... ... (2)

629 கஞ்சைக்காய்ந்தகருவில்லி கடைக்கணென்னும்சிறைக்கோலால் *
நெஞ்சூடுருவவேவுண்டு நிலையும் தளர்ந்துநைவேனை *
அஞ்சேலென்னானவனொருவன் அவன்மார்வணிந்தவனமாலை *
வஞ்சியாதேதருமாகில் மார்வில்கொணர்ந்துபுரட்டீரே. (3)

கம்ஸனைத்தொலைத்தவனும் பெரிய வில்போன்ற புருவத்தையுடையனாயு மிருக்கிற தன்னுடைய கடைக்கண்ணாகிற தீக்ஷ்ணமான அம்பாலே நெஞ்சுமுழுவதும் வெந்துபோகும்படியாகப் பெற்று நிலைமை குலைந்து வருந்துகின்ற என்னை நோக்கி 'பயப்படாதே' என்றொரு வார்த்தையும் சொல்லாதவனாய் விஜாதீயனான அப்பெருமான் தனது திருமார்பில் சாத்தியருளிய வனமாலையை மோசம் பண்ணாமல் கொடுத்தருள்வனாகில் அம்மாலையைக்கொண்டு வந்து என்னுடைய மார்பிலே நெஞ்சினுள் வெப்பம் தீருமாறு புரட்டுங்கள். ... (3)

630 ஆரேயுலகத்தாற்றுவார் ஆயர்பாடிகவர்ந்துண்ணும் *
காரேறுழக்கவுழக்குண்டு தளர்ந்தும்முறிந்தும்கிடப்பேனை *
ஆராவமுதமனையான்றன் அமுதவாயிலூறிய *
நீர்தான்கொணர்ந்துபுலராமே பருக்கியிளைப்பைநீக்கீரே. (4)

திருவாய்ப்பாடி முழுவதையும் கொள்ளை கொண்டு அநுபவிக்கிற ஒரு கறுத்த காளைபோன்ற கண்ணன் ஹிம்ஸிக்க அதனால் துன்பப்பட்டுப் பலவகையான சைதில்யங்களை யடைந்து நொந்துகிடக்கிற என்னை இவ்வுலகத்திலே தேறுதல் சொல்லி ஆறச் செய்பவர் ஆருண்டு? யாருமில்லை 'நாங்களிருக்கிறோமே; அம்மா! உனக்கு என்ன செய்யவேணும்?' என்று தாய்மார் கேட்க; எவ்வளவநுபவித்தாலும் த்ருப்தி பிறவாத அம்ருதம் போன்ற கண்ணபிரானுடைய அம்ருதம் சுரக்கிற திருவாயில் ஊறிக்கிடக்கிற ரஸத்தையாவது உலராமல் பசையோடே கொண்டுவந்து அதை நான் பருகும்படி பண்ணி எனது ஆயாஸத்தைப் பரிஹரிக்கப்பாருங்கள் என்கிறாள்.

அமுதத்திலேயுண்டான ஓரமுதத்தைக்கொணர்ந்து, நான் சருகாய் உலர்ந்து போவதற்கு முன்னே என்னைப்பானம் பண்ணுவித்து என்னுடைய இளைப்பை நீக்கப்பாருங்களென்றாளாயிற்று. ... ... (4)

631 அழிலும்தொழிலுமுருக்காட்டான் அஞ்சேலென்னானவனொருவன் *
தழுவிமுழுசிப்புகுந்தென்னைச் சுற்றிச்சுழன்றுபோகானல் *
தழையின்பொழில்வாய்நிரைப்பின்னே நெடுமாலூதிவருகின்ற *
குழலின்துளைவாய்நீர்கொண்டு குளிரமுகத்துத்தடவீரே. (5)

அழுதாலும் தொழுதாலும் தன் வடிவைக் காட்டாதவனாயும் உருவைக்காட்டாமலாவது 'அஞ்சேல்' என்ற சொல்லும் சொல்லாதவனாயுமுள்ள ஒரு மஹாநுபாவன் கண்ணன்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

இங்கே வந்து என்னை நெருக்கியணைத்து முன்னும் பின்னும் சூழ்ந்து கொண்டிருந்து போகாமலிருக்கிறான்; இது உண்மையான அநுபவமல்லாமல் மாநஸாநுபவமாத்ரமான உருவெளிப்பாடாகையாலே துக்கம்; பீலிக் குடைகளாகிற சோலையின்கீழே பசுக்கூட்டங்களின் பின்புறத்திலே வ்யாமுக்தனை கண்ணபிரான் ஊதிக்கொண்டு வரப்பெற்ற புல்லாங்குழலின் த்வாரங்களிலுண்டாகிற நீரைக்கொணர்ந்து என்னுடைய முகத்திலே குளிர்த்தியாகத் தடவுங்கள்.

அவனொருவன் என்கிறாள்—பேரையிட்டுச்சொல்லவும் வெறுப்புமிக்கதுபோலும்: ஹிம்ஸையின் கொடுமை தோற்றும் இதனால். ... ... (5)

632 நடையொன்றில்லாவுலகத்து நந்தகோபன்மகனென்னும் *
கொடியகடியதிருமாலால் குளப்புக்கூறுகொளப்பட்டு *
புடையும்பெயரகில்லேன்நான் போட்கன்மிதித்தவடிப்பாட்டில் *
பொடித்தான்கொணர்ந்துபூசீர்கள் போகாவுயிரென்னுடம்பையே. (6)

ஏற்கெனவே உலகத்தில் மரியாதையெல்லாம் சீர்குலைந்து கிடக்கின்றன; அதுக்குமேலே ஒன்றுபத்தாய்ச் சீர்குலையும்படி நந்தகோபன் மகனென்கிற ஒரு மஹாநுபாவன் வந்து தோன்றினான்; பரமஸாதுவான நந்தகோபனுக்கு இந்தகொடியவன் எங்ஙனே பிள்ளையாகப் பிறந்தானோ அறியேன்; அவனால் மிகவும் துன்பப்படுத்தப்பட்ட நான் புடைபெயரவும் ஒண்ணாதபடி துவண்டுபோனேன்; இந்தத்துவட்சி நீருவதற்கு மருந்தியாதெனில்; அந்தச் சுணைகேடன் நடந்துசென்றநிலத்திலுள்ள பொடியைக்கொணர்ந்து என்னுடம்பிலே பூசப்பாருங்கள்; அதுவே உற்றமருந்தாகும் என்கிறாள்.

குளப்புக்கூறுகொளப்பட்டு = அடிபட்ட இடத்திலேயே மேன்மேலும் அடிபடுதல் குளப்புக்கூறுகொள்ளுதலாம்; குளம்பு × கூறு, குளப்புக்கூறு. கால் நடைகளின் குளம்புகள் எப்போதும் அடிபட்டுக் கொண்டேயிருத்தலால் அதுபோல மேன்மேலும் அடிபட்டுக்கொண்டேயிருத்தலைக் குளப்புக்கூறு கொள்ளுதலாகக் கூறுவர்: கூறு என்னுஞ்சொல்லுக்குள்ள பல பொருள்களில் 'தன்மை' என்ற பொருள் இங்கே கொள்ளத்தக்கது; 'குளம்பின் தன்மையை உடையேனாகி' என்று சப்தார்த்தமாய், 'துகையுண்டவிடத்திலேயே மேன்மேலும் துகையுண்டு' என்று தாத்பர்யார்த்தமாகக்கடவது. புடைபெயர்தல்—பக்கங்களில் அசைதல்; நோவின்கனத்தினால் அசையவும் மாட்டாதிருக்கின்றேனென்கிறாள் "புடையும் பெயரகில்லேன் நான்" என்று. ... ... (6)

633 வெற்றிக்கருளக்கொடியான்தன் மீமீதாடாவுலகத்து *
வெற்றவெறிதேபெற்றதாய் வேம்பேயாகவளர்த்தாளே *
குற்றமற்றமுலைதன்னைக் குமரன்கோலப்பணைத்தோளோடு *
அற்றகுற்றமவைதீர அணையவமுக்கிக்கட்டீரே. (7)

பெரிய திருவடியை வெற்றிக் கொடியாகவுடைய எம்பெருமானுடைய ஆணையை மீறிச் செல்லக்கடவதல்லாத இவ்வுலகத்தில்[எம்பெருமானுடைய ஆணைக்கு உட்பட்டதான இவ்வுலகில்] அவனைப்பெற்ற தாயாகிய யசோதையானவள் தனது புத்திரனை ஒருவர்க்கும் பயனின்றியே, பயனில்லையென்கிற மாத்திரமேயோ! வேப்பங்காய்போல் கைக்கும்படியாகவே வளர்த்துவாராநின்றாள்; அவனைத் தவிர்த்து வேறொருவனை விரும்புகையாகிற குற்றம் இல்லாத என்னுடைய ஸ்தநங்களை யௌவனத்தோடு தோள் தீண்டியான அப்பெருமானுடைய அழகியதாயும் கற்பகக்கிளை போன்றதாயும் உள்ள திருத்தோள்களோடே, என்னைக்கைவிட்டு அவனுக்கே அற்றுத்தீர்ந்த குற்றம் தீரும்படி அமுக்கி யணைத்துக்கட்டி விடுங்கள். ... (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

634 உள்ளேயுருகிநைவேனை உளளோவிலளோவென்னாத *
கொள்ளைகொள்ளிக்குறும்பனைக் கோவர்த்தனனைக்கண்டக்கால் *
கொள்ளும்பயனொன்றில்லாத கொங்கைதன்னைக்கிழங்கோடும் *
அள்ளிப்பறித்திட்டவன்மார்விலெறிந்து என்னழலைத்தீர்வேனே. (8)

உள்ளுக்குள்ளேயே உருகி நைந்துகொண்டிராநின்ற என் விஷயத்திலே சிறிது ஆராய்ச்சியுமில்லாதவனும், என்னை வெறுந்தரையாக்கினவனும், குறும்புசெய்வதற்கென்றே பிறந்தவனுமான கோபாலக்ருஷ்ணனை ஒருகால் நான்காணப்பெற்றேனாகில், ஆட்டின் கழுத்தில் முலைபோலே என் மார்பில் வ்யர்த்தமாக முளைத்துக்கிடக்கிற இப்பாழும் முலைகளை வேர்பறியாகப் பறித்து அவனுடைய மார்விலே விட்டெறிந்து என் துக்கம் தீரப்பெறுவேனென்கிறாள்.

'கொங்கைதன்னைக்கிழங்கோடும் அள்ளிப்பறித்திட்டு எறிந்து என்னழலைத்தீர்வேனே' என்றால் போராதோ? 'அவன்மார்வில் எறிந்து' என்பானேன்? என்னில், இம்முலைகளால் தான் படும்பாட்டை, * பெண்ணின் வருத்தமறியாத பெருமானான அவனும் படவேணுமென்ற கருத்தினாலென்க. இம்முலைகள் அவன்மார்வில் ஏறி அவனைக் கும்மிக்குமைக்கவேணுமென்று நினைக்கிறாளாய்த்து. இக்கஷ்டத்தை அவனும் பட்டானாகில் அதுவே இவள் அழல்தீர்ந்தபடிபோலே. அழல்—தாபம். ... ... (8)

635 கொம்மைமுலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர்குற்றேவல் *
இம்மைப்பிறவிசெய்யாதே யினிப்போய்ச்செய்யும்தவந்தானென் *
செம்மையுடையதிருமார்வில் சேர்த்தானேலுமொருநான்று *
மெய்ம்மைசொல்லிமுகம்நோக்கி விடைதான்தருமேல்மிகநன்றே. (9)

எனது கிளர்ந்த பருத்த முலைகளினுடைய குமைச்சல் தீரும்படி கண்ணபிரானுக்கு அந்தரங்கமான கைங்கரியத்தை இந்த ஜன்மத்திலே செய்யப்பெறாமல் இந்தப்பிறவி கழிந்த பின்பு வேறொரு தேசவிசேஷத்திலே போய்ச் செய்யக்கூடியதான தபஸ்ஸு ஏதுக்கு? அன்பர்கள் அணைவதற்கென்றே ஏற்பட்டிருக்கையாகிற செவ்வையை யுடைத்தான தனது திருமார்பிலே என்னை அவன் சேர்த்துக்கொண்டானாகில் நல்லது; ஒருநாள் என் முகத்தைப் பார்த்து மெய்யே சொல்லி "நீ எனக்கு வேண்டாம், போ" என்று தள்ளிவிட்டமை தோன்ற விடைகொடுப்பானாகில் அது உத்தமோத்தமம். ... ... (9)

636 அல்லல்விளைத்தபெருமானை ஆயர்பாடிக்கணிவிளக்கை *
வில்லிபுதுவைநகர்நம்பி விட்டுசித்தன்வியன்கோதை *
வில்லைத்துலைத்தபுருவத்தாள் வேட்கையுற்றுமிகவிரும்பும் *
சொல்லைத்துதிக்கவல்லார்கள் துன்பக்கடலுள்துவளாரே. (10)

வில்லைத்தோற்கடித்த புருவங்களை யுடையளாய் ஸ்ரீவில்லிபுத்தூர்க்குத் தலைவரான பெரியாழ்வாருடைய மகளாய் ஆச்சர்ய குணசாலினியான ஆண்டாள், திருவாய்ப்பாடி முழுதும் தீங்கு விளைத்து அதனால் பெருமைபெற்றவனும் திருவாய்ப்பாடிக்கு மங்கள தீபம் போன்று ப்ரகாசகனுமான கண்ணபிரானை ஆசைப்பட்டு மிக்க அபிநிவேசம் தோற்ற அருளிச்செய்த இப்பாசுரங்களைப் புகழ்ந்து ஓதவல்லவர்கள் ஸம்ஸார ஸமுத்ரத்தில் துவண்டு நோவுபடமாட்டார்கள்.

அடிவரவு :—கண்ணன் பால் கஞ்சை ஆரே அழில் நடை வெற்றி உள்ளே கொம்மை அல்லல் பட்டி.

ஆண்டாளெம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

(அவ.) "தை யொரு திங்களும்" என்று தொடங்கிக் கீழ்த்திருமொழியளவும் ஆண்டாள் பட்டக்லேசமெல்லாம் தீரும்படி கண்ணபிரான் வந்து ஸேவை தந்தருளினபடியைக் கூறுவதாய்த்து—இத்திருமொழி. திருவாய்மொழியில் நம்மாழ்வார் "என் அவாவறச்சூழ்ந்தாயே" என்னும்படியாகப் பெற்ற பேற்றை ஆண்டாளும்பெற்றாளாய் அப்பேற்றை நேராகப்பேசாதே "கண்ணபிரானைக் கண்டதுண்டோ" என்றுகேட்பாரும், "ஓம்! நன்றாகக்கண்டதுண்டு" என்று விடையளிப்பாருமாக இத்தகைய அந்யாபதேச ப்ரக்ரியையிலே அமைத்து அருளிச் செய்கிறாள். ... ... *

637 பட்டிமேய்ந்தோர்காரேறு பலதேவற்கோர்கீழ்க்கன்றாய் *
இட்டீறிட்டுவிளையாடி இங்கேபோதக்கண்டீரே *
இட்டமானபசுக்களை யினிதுமறித்துநீரூட்டி *
விட்டுக்கொண்டுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (1)

சிறைக்கூடத்தில் கட்டுண்டு கிடப்பாரைப்போல பரமபதத்தில் திருவனந்தாழ்வான்மடியிலும் ஸேனைமுதலியார் பிரம்பின்கீழிலும் பெரியதிருவடிசிறகின்கீழிலும் ஒடுங்கி வர்த்தித்தபெருமான் இங்கிலத்தேபோந்து யதேச்சமாகத்திரிந்து விளையாடாநிற்கக் கண்டதுண்டோ? என்று கேட்பவர்களின் பாசுரம் முன்னடிகள். தனக்கு மிகவும் ப்ரீதிபாத்ரமான பசுக்களைப் புல்லும் தண்ணீருமுள்ள விடங்களிலே கொண்டுபோய் மேய்த்துப் பரமாநந்தத்துடனே விளையாடா நிற்குங்கால் ஸ்ரீ ப்ருந்தாவனத்திலே காணப்பெற்றோம் என்று விடையளிப்பார் பாசுரம் பின்னடிகள். ... ... (1)

638 அனுங்கவென்னைப்பிரிவுசெய்து ஆயர்பாடிகவர்ந்துண்ணும் *
குணுங்குநாறிக்குட்டேற்றைக் கோவர்த்தனனைக்கண்டீரே *
கணங்களோடுமின்மேகம் கலந்தாற்போல்வனமாலை *
மினுங்கநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (2)

நான் வருந்தும்படியாக என்னைப் பிரியவிட்டுப்போய்த் திருவாய்ப்பாடியை ஆக்ரமித்து அநுபவிக்கின்றவனாய் வெண்ணெய்மொச்ச நாற்றம் நாறுமவனாய் இளைய ரிஷபம் போன்றவனுமான கண்ணபிரானைக் கண்டீரே?—; மின்னலும் மேகமும் ஒன்றோடொன்று சேர்ந்தாற்போலே கறுத்த திருமேனியிலே மின்னல் போன்ற வனமாலை திகழப்பெற்றுத் தோழன்மாருடைய கூட்டங்களோடு கூட விளையாடா நிற்க விருந்தாவனத்தே கண்டோம்.

"கணங்களோடு" = (கண :) என்னும் வடசொல்—கூட்டமென்று பொருள்படும். இங்கே தோழன்மார் கூட்டமெனக்கொள்க. * தன்னேராயிரம் பிள்ளைகளோடு தளர் நடையிட்டு வருவானிறே கண்ணபிரான். ... ... (2)

639 மாலாய்ப்பிறந்தநம்பியை மாலேசெய்யும்மணாளனை *
ஏலாப்பொய்களுரைப்பானை யிங்கேபோதக்கண்டீரே *
மேலால்பரந்தவெயில்காப்பான் வினதைசிறுவன்சிறகென்னும் *
மேலாப்பின்கீழ்வருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (3)

பெண்கள் பக்கலுண்டான வ்யாமோஹமே ஒருவடிவாய்க்கொண்டு பிறந்ததென்னலாம் படியான பெருமானாய் வ்யாமோஹத்தையே செய்கின்ற மணவாளப் பிள்ளையாய், பொருந்தாத பொய்களைச் சொல்லுமவனான கண்ணபிரானை இங்கே போதக் கண்டீரே?—; மேலே பரவின வெய்யிலைத் திருமேனியில் படாமல் தடுப்பதற்காகக் கருடனுடைய சிறகாகிற விதானத்தின் கீழ் எழுந்தருளா நின்ற அப்பெருமானை விருந்தாவனத்தே கண்டோம். ... ... (3)

640 கார்த்தண்கமலக்கண்ணென்னும் நெடுங்கயிறுபடுத்து * என்னை
ஈர்த்துக்கொண்டுவிளையாடும் ஈசன்றன்னைக்கண்டீரே *
போர்த்தமுத்தின்குப்பாயப் புகர்மால்யானைக்கன்றேபோல் *
வேர்த்துநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (4)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

'மேகத்திலே அழகிய இரண்டு தாமரைப்பூக்கள் பூத்தனவோ?' என்னும்படியமைந்த திருக்கண்களாகிறவலையிலே என்னை அகப்படுத்தித் தான்போமிடமெங்கும் என்னையும் அதாவது - என் நெஞ்சையும் இழுத்துக்கொண்டுதிரியுமவனான பெருமானைக்கண்டதுண்டோ? என்றுகேட்பார் பாசுரம் — முன்னடிகள். முத்துச்சட்டையிட்டாற்போலே குருவெயர்ப்பு அரும்பிப் புகரையுடைத்தான யானைக்கன்றுபோலே வேர்த்துநின்று விளையாடும்போது விருந்தாவனத்திலே கண்டோமென்பார்பாசுரம்—பின்னடிகள். ... ... (4)

641 மாதவனென்மணியினை வலையில்பிழைத்தபன்றிபோல் *
ஏதுமொன்றும்கொளத்தாரா ஈசன்றன்னைக்கண்டீரே *
பீதகவாடையுடைதாழப் பெருங்கார்மேகக்கன்றேபோல் *
வீதியாரவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (5)

ஸ்ரிய : பதியாய் எனக்கு நிலாத்தம்போலே பரமபோக்யனாய் வலையில் நின்றும் தப்பிப்பிழைத்ததொரு பன்றிபோலே செருக்குற்று, தன் பக்கலுள்ள யாதொன்றையும் பிறர் கொள்ளும்படி தாராதவனான ஒருவர்கைக்கும் எட்டாதவனான ஈசன்தன்னைக் கண்டீரே?—; திருப்பீதாம்பரமாகிற திருப்பரிவட்டமானது தொங்கத்தொங்க விளங்க, பருத்துக் கறுத்ததொரு மேகக்குட்டிபோலே திருவீதிநிறைய எழுந்தருளும் பெருமானை விருந்தாவனத்தே கண்டோம். (5)

642 தருமமறியாக்குறும்பனைத் தன்கைச்சார்ங்கமதுவேபோல் *
புருவவட்டமழகிய பொருத்தமிலியைக்கண்டீரே *
உருவுகரிதாய்முகம்செய்தாய் உதயபருப்பதத்தின்மேல் *
விரியும்கதிரேபோல்வானை விருந்தாவனத்தேகண்டோமே. (6)

தயையென்கிற தர்மத்தை ஈஷத்தும் அறியாதவனாய்க் குறும்புசெய்வதையே தொழிலாகக்கொண்டவனாய், தன்கையிலுள்ள சார்ங்கவில்போன்று வட்டமாய் அழகியதான திருப்புருவங்களையுடையவனாய், உகந்தாரோடே பொருந்திவாழப்பெறாதவனான பெருமானைக் கண்டதுண்டோ? உண்டு;—கண்டாருடைய கண்களெல்லாம் குளிரும்படி இருண்டவடிவையுடையனாய், செந்தாமரைபோற் சிவந்த திருமுகமண்டலத்தை யுடையனாய், உதயபர்வதத்தின் மேலே ஆதித்யன் உதிக்கும்போதுள்ள ப்ரபாவிசேஷத்தை யுடையனான கண்ணபிரானை விருந்தாவனத்திலே கண்டோம். (திருவுருவம்-உதயபர்வதம், முகம்-ஸூர்யமண்டலம்.) (6)

643 பொருத்தமுடையநம்பியைப் புறம்போலுள்ளும்கரியானை *
கருத்தைப்பிழைத்துநின்ற அக்கருமாமுகிலைக்கண்டீரே *
அருத்தித்தாராகணங்களால் ஆரப்பெருகுவானம்போல் *
விருத்தம்பெரிதாய்வருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (7)

கீழ்ப்பாட்டில் பொருத்தமிலியைக் கண்டீரே என்று வைத்து இப்பாட்டில் "பொருத்தமுடைய நம்பியை" என்றது ஏன்? என்னில்; பத்துடையடியவர்க்கு எளியனான பெருமானையோ நாம் பொருத்தமிலி என்பது; அப்படி சொல்வது தகுதியல்ல; அவன் பொருத்த முடையவனேயாவன்—என்று திருவுள்ளம்பற்றிச் சொல்லுகிறாள் என்பர்சிலர், அங்ஙனன்றியே 'இந்தப்பிள்ளை பரமஸாது' என்றால் அஃது எதிர்மறை யிலக்கணையாய் துஷ்டன் என்று காட்டுமாபோலே இங்கும் பொருத்தமுடைய நம்பியென்றது பொருத்த மில்லாமையையே சொல்லிற்றாகக்கொள்க. இதுவே பெரியவாச்சான்பிள்ளை திருவுள்ளம்பற்றின கருத்தாம்.

புறம்போலுள்ளுங்கரியான் = திருமேனிகறுத்திருந்தாலும் திருவுள்ளம் சுத்தமாயிருக்கலாமே; அதுவும் அசுத்தமாகவேயிருக்கிறதென்று நர்மோக்தி. கருத்தைப்பிழைத்துநின்ற = ஸம்ச்லேஷித்திருக்குங்காலத்திலே "மாதே உன்னை நான்விட்டுப்பிரியேன்; பிரிந்தால்தரியேன்" என்று அவன் சொல்ல அதை மெய்தானென்று நம்பியிருக்கிற நம்பிக்கையைப் போக்கடித்தவனென்றவாறு. இப்படிசொல்லுகிறவன் நம்மைவிட்டு ஒருகாலும் பிரியமாட்டான் என்று கொண்ட கருத்தைத்தப்பி, பிரிந்திருப்பவனென்றபடி. விருத்தம் = ப்ருந்தம். ... (7)

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.

644 வெளியசங்கொன்றுடையானைப் பீதகவாடையுடையானை *
அளிநன்குடையதிருமாலை ஆழியானைக்கண்டீரே *
களிவண்டெங்கும்கலந்தாற்போல் கமழ்பூங்குழல்கள்தடந்தோள்மேல் *
மிளிரநின்றுவிளையாட விருந்தாவனத்தேகண்டோமே. (8)

வெளுத்த ஸ்ரீபாஞ்ச ஜந்யமொன்றை யுடையனாய் பீதாம்பரத்தை உடையாகக் கொண்டவனாய் நன்னுகக்ருபையையுடையனாய் திருவாழியாழ்வானையுடையனாய் ச்ரிய: பதியான கண்ணனைக் கண்டீரே?—; மதுபானத்தாலே களித்துள்ள வண்டுகளானவை எப்புறத்திலும் பரம்பினாற்போலே, பரிமளிக்கின்ற அழகிய திருக் குழல்களானவை பெரிய திருத்தோள்களின் மேலே தாழ்ந்து விளங்கநின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோம்.

கடல்போலே கறுத்த திருமேனிக்குப் பரபாகமான வெண்மையையுடைய விலக்ஷணமான ஸ்ரீபாஞ்சஜந்யத்தைத் திருக்கையிலேயுடையனும், பீதாம்பரதானும், பிராட்டியோட்டைச் சேர்த்தியடியாகக் கருணையுடையனும் திருவாழி யாழ்வானை யுடையனுமான பெருமானைக்கண்டதுண்டோ?;—மதுபானத்தாலே களித்த வண்டுகள் பரம்பினாற்போலே, பரிமள ப்ரசுரமாய் அழகான திருக்குழல்களானவை திருத்தோளிலே நின்றலைய விளையாடா நிற்க விருந்தாவனத்திலே கண்டோம். ... ... (8)

645 நாட்டைப்படையென்றயன்முதலாத்தந்த நளிர்மாமலருந்தி *
வீட்டைப்பண்ணிவிளையாடும் விமலன்றன்னைக்கண்டீரே *
காட்டைநாடித்தேனுகனும் களிறும்புள்ளுமுடன்மடிய *
வேட்டையாடிவருவானை விருந்தாவனத்தேகண்டோமே. (9)

சிலவற்றைத்தானே ஸ்ருஷ்டித்து மேலுள்ளதையெல்லாம் நீங்கள் ஸ்ருஷ்டியுங்களென்று சதுர்முகன்முதலான ப்ரஜாபதிகளை யுண்டாக்கினவனும், அந்த நான்முகனுக்கு இருப்பிடமாகத் திருநாபிக்கமலத்தையுண்டாக்கித் தந்து இதுவே லீலையாக இருப்பவனுமான பரமபுருஷனைக் கண்டதுண்டோ?;—கம்ஸன் ஏவின அஸுராவேசம் பெற்ற ஜந்துக்களையெல்லாம் முடித்துக்கொண்டு வேட்டையாடி வந்த அப்பெருமானை விருந்தாவனத்திலே கண்டோம். (9)

646 பருந்தாள்களிற்றுக்கருள்செய்த பரமன்றன்னைப்பாரின்மேல் *
விருந்தாவனத்தேகண்டமை விட்டுசித்தன்கோதைசொல் *
மருந்தாமென்றுதம்மனத்தே வைத்துக்கொண்டுவாழ்வார்கள் *
பெருந்தாளுடையபிரானடிக்கீழ்ப் பிரியாதென்றுமிருப்பாரே. (10)

ஸ்ரீகஜேந்திராழ்வான் முதலையின்வாயிலகப்பட்டு நெடுநாள் துடித்து, பிறகு பெருமானுடைய ஸேவையைப்பெற்றுத் துயர்தீர்ந்து பரமானந்தமடைந்ததுபோல ஆண்டாளும் நெடுநாள் பட்ட விச்லேஷவ்யஸநம் தீர்ந்து மகிழப்பெற்றுளென்னுமிடம் முதலடியில் விளங்குமாறு காண்க. பாரின்மேல் "கொம்மைமுலைகளிடர்தீரக் கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப் பிறவிசெய்யாதே இனிப்போய்ச்செய்யும் தவந்தானென்"? என்றுபரமபதாநுபவத்தை வெறுத்திருந்த இவளுக்கு இந்நிலத்திலேயே பேறு கைபுகுந்ததென்க: இப்படி பேறுபெற்ற ஆண்டாள் திருவாய்மலர்ந்தருளிய இப்பாசுரங்களை ஸம்ஸார பேஷஜமாகக்கொண்டு சிந்திக்குமவர்கள் * என்றும் எம்பெருமானிணையடிக்கீழிணைபிரியாதிருப்பர்கள் என்று தலைக்கட்டிற்றாயிற்று. ... ... (10)

அடிவரவு:—பட்டி அனுங்க மால் கார்த்தண் மாதவன் தருமம் பொருத்தம் வெளிய நாட்டைப் பருந்தாள் இருள்.

ஆண்டாள் திருவடிகளே சரணம்.

ஸ்ரீகாஞ்சி பிரதிவாதி பயங்கரம்
அண்ணங்கராசாரியார் இயற்றிய
நாச்சியார்திருமொழி உரை முற்றுப்பெற்றது.

Funding: Tattva Heritage Foundation,Kolkata. Digitization: eGangotri.

acharya.org
CC-0. Bhagavad Ramanuja National Research Institute, Melukote Collection.